# ராஜ ராஜன் சபதம்



விக்கிரமன்

# முன்னுரை

ராஜராஜன் காலத்துக் குறுநில மன்னர்களும் படைத் தலைவர்களும் வரலாற்றில் புகழெய்தியவர்கள். சேனாபதி கிருஷ்ணன் இராமன், ராஜராஜ மாவீரன் மதுராந்தகன் கண்டராதித்தன், மலையமான் - என்று வரலாற்றில் புகழ் வாய்ந்தவர்கள் பலர் ராஜராஜன் காலத்தில் வாழ்ந்தவர்கள். படைத்தலைவர் வல்லவரையர் வந்தியத்தேவன் ராஜராஜரின் தமக்கையார் குந்தவை தேவியை மணந்து, மகத நாட்டை அரசு புரிந்து வந்தார். பிற்காலத்தே ராஜேந்திர சோழரின் சேனாபதியாக விளங்கினார்.

பாண்டியர்களுக்கும் சோழர்களுக்கும் தலைமுறை தலைமுறையாகக் கடும் போர் நடந்திருக்கிறது. வீரபாண்டியன் தலையைப் போர்க் களத்தில் கொய்ததால் பாண்டியர்கள் சோழர்களைப் பகைவராகக் கொண்டனர். அதே போல ராஜராஜ சோழனின் மூத்த சகோதரர் ஆதித்த கரிகாலனைப் பாண்டியரின் ஆதரவுடன் இரவிதாசக் கிரமவித்தனும் அவன் நண்பர்களும் படுகொலை செய்ததால் சோழர்கள் தீராத பகைமைப் பாராட்டினர். பாண்டியரை வென்று பாண்டிய நாட்டுத் தலைநகரிலும் பிரதிநிதியை நிறுத்தி அந்த நாட்டை ஆண்டார் ராஜராஜன். மீண்டும் பாண்டிய பேரரசர்ப் பரம்பரையில் வந்த அமரபுஜங்கன், சோழர்ப் படைகளுடன் மோதியதாக வரலாறு கூறுகிறது.

பாண்டியவர்களுக்கு உதவ சேர அரசர் பாஸ்கர ரவிவர்மன் முன் வந்தார். சோழநாட்டு வணிகர் கலங்களைக் கடற்கொள்ளையர் கடலில் வழிமறித்துக் கொள்ளையடித்திருக்கிறார்கள். அதற்குச் சேர மன்னரின் உதவியும் இருந்தது.

ராஜராஜன் சேர மன்னருக்கு அனுப்பிய தூதரைச் சேர மன்னர் அவமதித்து உதயகிரிக் கோட்டையில் சிறை வைத்தார். ராஜராஜ சோழன் படையெடுத்துச் சென்று, வழியில் தடுத்த பாண்டியர்களை வென்று காந்தளூர் சாலை என்ற இடத்தில் குழுமியிருந்த சேரர்களின் கடற்படைகளை முறியடித்தார்.

மேலே குறிப்பிட்ட வரலாற்றுச் சான்றுகளைக் கருவாகக் கொண்டு இந்த வரலாற்றுப் புதினத்தை எழுதினேன். மலேசிய நாட்டிலுள்ள 'தமிழ் நேசன்' நாளிதழில் ஓராண்டுக் காலம் தொடராக வெளிவந்தது இந்த வரலாற்றுப் புதினம். தொடர்கதையாக வெளியிட்ட தமிழ்நேசன் ஆசிரியருக்கும் பொறுப்பாளர் டத்தின் இந்திராணி சாமிவேலு அவர்களுக்கும், எப்போதும் என்பால் அன்பும் மதிப்பும் கொண்ட மலேசியத் தமிழர் தலைவர் டத்தோ சாமிவேலு அவர்களுக்கும் கோலாலம்பூர் உயர் நண்பர் ஏ.எஸ்.அசோகன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வரலாற்றுப் புதினத்தை அச்சும் அமைப்பும் சிறக்க வெளியிடும் மதன் பதிப்பகம் திருமதி. அழ.மீனாள் அவர்களுக்கு என்றும் நன்றி உடையவனாவேன்.

**விக்கிரன்**

சென்னை - 33

# ராஜ ராஜன் சபதம்

## 1

முருகபிரானின் வாகனமான மயிலை நினைவூட்டும் நீலக்கடலில் வரிசையாக மரக்கலங்கள் சென்று கொண்டிருந்தன. மரக்கலங்கள் யாவும் நாகைப்பட்டினத் துறையிலிருந்து புறப்பட்டு புஷ்பகத் தீவுக்குச் சென்று கொண்டிருந்தன. அவற்றில் கூறை நாட்டில் நெய்த ஆடைகள், பொன்னாபரணங்கள் ஏற்றப்பட்டிருந்தன. கலத்தின் மேல் தளத்தில் வணிகர்கள் மிகக் குதூகலமாக மறையும் கதிரவனைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இனி அலை ததும்பாத ஆழமான கருநீல வண்ணக் கடலைத் தவிர வேறு எந்தக் காட்சியையும் சில நாள்களுக்குப் பார்க்க முடியாது. அவர்களுடைய பெண்டு பிள்ளைகள் நாகைப்பட்டினத்திலும் அதைச் சுற்றிப் பல ஊர்களிலும் இருந்தார்கள். அவர்களையும் பல நாள்களுக்குப் பார்க்க முடியாது. அந்த நினைவு அவர்கள் நெஞ்சைச் சிறிது வருத்தினாலும், பண்டங்களை விற்றுப் பொருள்களைக் கொண்டு வந்து நிலபுலன்களையும், மாளிகைகளையும் கட்டப்போகும் இன்ப எண்ணம் அவர்கள் கவலையைச் சற்று மாற்றியது.

கலத்தின் அடித்தளத்தில் மிக விசாலமாக இருந்த இடத்தில் பொதிகளாகக் கட்டப்பட்ட பருத்தி ஆடைகளும் காஞ்சியினின்று நெய்து கொண்டு வரப்பட்டிருந்த பட்டாடைகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒரு பக்கம் அரிசியும் பருப்பு வகைகளும், அவர்களுடைய உணவுக்காக சேமித்து வைக்கப்பட்டிருந்தன. குடிநீர் பெரும் பாத்திரங்களில் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது. கடல் பயணத்தின் போது தேவைக்கு என்று அவர்கள் முன்னெச்சரிக்கையாக குடிநீரைச் சேமித்துக் கொண்டு வந்திருந்தனர். அந்த குடிநீர் கெட்டுப் போகாமல் இருப்பதற்கான மூலிகைக் கொடிகளை அவற்றுள் போட்டு வைத்திருந்தனர்.

அலையில்லாதிருந்தாலும் அந்த ஆழ்கடலின் ஏற்ற இறக்கத்தில் அந்தப் படகுகள் ஏறி இறங்கி விரைந்து வந்து கொண்டிருந்தன. துடுப்பைப் போட்டு ஒவ்வொரு படகையும் படகோட்டிகள் தள்ளி வருவதையும் கவனித்தார்கள். ஒவ்வொரு படகிலும் எண்ணிக்கையில் அதிகமான பேர்கள் இருந்தார்கள். சிறிது சிறிதாகத் தெளிவற்றிருந்த உருவங்கள் இப்போது தெளிவாகத் தெரியத் தொடங்கின.

தளபதி வணிகர்களின் தலைவனை நோக்கிச் சொன்னான்: "தொலைவில் நின்று கொண்டிருக்கும் கலத்திற்கு ஏதாவது தொல்லை ஏற்பட்டிருக்கும் அல்லது பழுது பட்டிருக்கலாம். அதனால் தான் கலத்திலிருந்து இவ்வாறு படகுகளில் உதவி கேட்டு நம் கலங்களை நோக்கி வருகிறார்கள் எனத் தோன்றுகிறது."

"உதவி கேட்பதற்கு இவ்வளவு படகுகளா? இவ்வளவு பேர்களா?" என்று தன்னுள் எழுந்த சந்தேகத்தை வெளிப்படையாகக் கூறினார் ஓர் வணிகர்.

"பொறுத்துப் பார்ப்போம்" என்றான் வணிகத் தலைவன். "ஒருவேளை உணவுப் பண்டம் குறைந்து போய் அவர்கள் பட்டினியால் வாடும் நிலை ஏற்பட்டிருக்கலாம் அல்லவா?" என்று வணிகத் தலைவர் சொன்னார்.

"அப்படியும் இருக்கலாம். இருந்தால் நாம் கொடுத்து உதவுவோம்" என்றான் கலபதி.

"நாம் எப்படிக் கொடுக்க முடியும். நாம் இப்போது தான் கரையிலிருந்து புறப்பட்டு இரண்டு நாள்கள் ஆகின்றன. இன்னும் வள்ளித் தீவு சேர எவ்வளவு நாள்கள் ஆகுமோ? அதுவரையில் நம் தேவையைப் பார்த்துக் கொள்ள வேண்டாமா?" என்று அருகிலிருந்த வணிகர் ஒருவர் சொன்னார்.

"நாம் சற்றுத் தியாகம் செய்து சிறிது உணவைக் குறைத்துக் கொண்டு அதை அவர்களுக்குக் கொடுப்போம். அவர்கள் இரண்டு நாள்களில் நாகைத் துறைமுகத்திற்குப் போய்ச் சேர்ந்து விடுவார்கள். அரை வயிற்றுக் கஞ்சிக்காவது அவர்களுக்கு நாம் கொடுத்து உதவுவோம். அது தானே பண்பு" என்றான் கலபதி.

சிலர் கலபதி சொன்னதை ஒப்புக் கொண்டார்கள். சிலர் முணுமுணுத்தார்கள். அவர்களுக்குக் கலபதியின் சொற்களுக்கு மாற்றாகப் பேசப் பிடிக்கவில்லை. அதனால் அவர்கள் மேலும் அங்கே நின்று விவாதிக்க விரும்பாமல் கீழ்த்தளத்திற்குத் திரும்பிவிட்டார்கள்.

கலபதியின் மனத்தில் ஒருவிதமான மகிழ்ச்சி குடிகொண்டிருந்தது. பழுதுபட்ட கப்பலில் உணவின்றித் தவிப்பவர்களுக்குத் தாம் உதவி புரிந்து



நற்பெயரை நாட்டிக் கொள்ளப் போகிறோம் என்ற பெருமிதம் அவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது.

ஒரு சமயம் தீவினின்று புறப்பட்ட அவர் கப்பலுக்கு இத்தகைய ஆபத்து ஏற்பட்டதும் சீனத்துக் கலமொன்று உதவியதும் அவர் நினைவிற்கு வந்தன.

படகுகள் நெருங்கி வந்து கொண்டிருந்தன. படகுகளில் எந்தவிதக் கொடியும் இல்லை. படகுகளில் இருப்பவர்களும் தமிழ்நாட்டு மனிதர்கள் போல் காணப்படாததைக் கண்ட கலபதி சற்றுத் துணுக்குற்றான். அவர்கள் கட்டுடல் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். மேலே எந்தவித ஆடையையும் அணிந்திருக்க வில்லை. தலையில் மட்டும் நெருக்கமாக ஒரு வர்ணத் துணியைச் சுற்றிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் இடையிலே உடைவாள் போல் ஒன்று காட்சியளித்தது. அவர்களுடைய தோள்கள் வலுப்பெற்று உறுதி வாய்ந்தவையாகத் தோன்றின. வலது புஜத்தில் ஓர் கங்கணம் போன்ற ஒன்றைக் கட்டியிருந்தார்கள். அவர்கள் படகை மிக வேகமாக செலுத்தி வந்தது அவர்கள் போடும் துடுப்பிலிருந்து தெரிந்தது.

வந்து கொண்டிருந்த படகுகள் ஒரு நொடியில் ஒரே பக்கமாக வராமல் திடீரென நான்கு பக்கங்களிலுமாகப் பிரிந்தன. பிரிந்து சோழநாட்டுக் கலங்களை நான்கு பக்கங்களிலும் சுற்றிச் சூழ்ந்து கொண்டன.

கலபதிக்கு ஒன்றும் புரியவில்லை. மற்ற கலங்களிலும் அதுபோல் தான் இருக்குமென்று மற்ற கலங்களையும் நோக்கினான். மற்ற கலங்களும் சென்று கொண்டிருந்தன. கண்மூடித் திறப்பதற்குள் படகுகளிலிருந்தவர்கள் தங்கள் கையிலிருந்த நூலேணியைக் கலத்தின் மேலே வீசவும் கொக்கி போன்ற கருவி மேல் தளத்தைப் பிடித்துக் கௌவிக்கொள்ள, நூலேணியைப் பிடித்துக் கொண்டு மளமளவென்று ஏறத் தொடங்கினார்கள். கலபதிக்கு அப்போதும் புரியவில்லை.

"நீங்கள் யார்?" என்று அவன் குரல் கொடுத்துப் பார்த்தான். அபயம் கேட்டு, உதவிகேட்டு வருபவர்களாய் இருந்தால் அவர்கள் அப்பொழுதே மறுகுரல் கொடுத்திருப்பார்கள். ஆனால் அவர்களிடமிருந்து எந்தவிதமான மறுமொழியும் வரவில்லை. அவர்களுடைய கண்கள் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தன. அவை சிவந்திருந்தன. தாடியும் மீசையுமாக அவர்களின் முகங்கள் காட்சியளித்ததால் ஒருவர் முகம் மற்றவருடைய முகத்தைப்போல் ஒன்று போலே தோற்றமளித்தன. இடையில் சிறு ஆடை ஒன்று மட்டும் தான் அணிந்து இருந்தார்கள். அவர்கள் மேனி பளபளத்துக் கொண்டிருந்தது. ஒரு நொடியில் நூலேணி வழியாக அவர்கள் தாவி ஏறிக்

கலத்தின் மேல்தளத்திற்கு வந்துவிட்டார்கள். அதேபோலவே கலபதி பார்த்தபொழுது மற்ற சோழநாட்டுக் கலங்களையும் படகுகள் சூழ்ந்து கொண்டு அந்தப் படகுகளிலும் அதேபோல் எதிர்க் கலத்திலிருந்து வந்த படகு ஓட்டிகளும் படகிலிருந்தவர்களும் ஏறிச் சூழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். "நீங்கள் யார்?" என்று கலபதி கத்தினான்.

வந்திருந்தவர்களுள் தலைவன் போல் காட்சியளித்தவன் கலபதியின் எதிரே பாய்ந்து சென்று தன்னுடைய இடையிலிருந்த குறுவாளை உருவிக் கலபதியின் முன்னால் நீட்டி, "நாங்கள் யார் என்பதைப் பிறகு சொல்கிறோம். இப்போது இந்த இடத்தை விட்டு நீ நகரக்கூடாது. கீழே உள்ள வணிகர்களையும் உங்களுடைய பணியாட்களையும், பாதுகாவலுக்காக நீங்கள் வீரர்களை அழைத்து வந்திருந்தால் அவர்களையும் குரல் கொடுத்து மேல்தளத்திற்கு வரவழையுங்கள். நீங்கள் வரவழைத்துப் பிறகு எங்களை எதிர்க்கும் படியாக அவர்களைத் தூண்டினால் உங்கள் வயிற்றிலே இந்தக் கத்தி பாய்ந்து விடும். அதையும் மீறினால் என் பின்னால் இருக்கும் எனது ஆட்கள் அவர்களை எல்லாம் வெட்டிக் கடலில் தூக்கி எறிந்து விடுவார்கள்" என்று கொச்சையான தமிழில் எச்சரித்தான்.

கலபதி புரிந்து கொண்டான். இவர்கள் பயணிகளோ வேற்றுநாட்டு வணிகர்களோ அல்லர்; இவர்கள் கொள்ளைக்காரர்கள். பல ஆண்டுகளாகக் கலபதியாகப் பணியாற்றி அனுபவப்பட்ட அவனுக்கும் நடுக்கம் ஏற்பட்டது.

## 2

தளபதிக்கு எந்த யோசனையும் தோன்றவில்லை. அவன் பெரும் வீரன். ஒரே சமயத்தில் பத்துபேரைத் தாக்கக் கூடிய சக்தி அவனிடமிருந்தது. வாள் எடுத்துச் சுழற்றினால் சூழ்ந்து நிற்பவர்களையெல்லாம் ஒரு நொடியில் வெல்லக்கூடிய ஆற்றல் அவனிடமிருந்தது.

மிக ஆபத்தான சமயத்தில் எதிரிகளை எப்படி வீழ்த்துவது என்பது அவனுக்குத் தெரியும். பளபளக்கும் கூர்மையான உடைவாளைத் தன்னுடைய மார்புக்கு நேராக அழுத்தி நீட்டி எச்சரிக்கும் அந்தக் கொள்ளையனைத் தந்திரத்தால் தான் வெல்ல வேண்டுமே தவிர இப்பொழுது பயங்கரமான தாக்குதலால் வெல்ல முடியாது என்பதைக் கண்டு கொண்டான். தன்முகத்தில் இருந்த கடுமையைக் குறைத்துக் கொண்டு, "ஓகோ! நீங்கள் எதற்காக மேல்தளம் நோக்கி வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.



"எங்களுக்கு என்ன வேண்டும் என்பதைப் பிறகு சொல்கிறேன். முதலில் நான் சொல்லியபடி நீங்கள் குரல் கொடுத்துக் கலத்தில் இருக்கும் அனைவரையும் மேல் தளத்திற்கு வரவழையுங்கள். பேசி நேரத்தைப் போக்கித் தப்பிக்க நினைக்காதீர்கள்" என்று மீண்டும் கடுமையான குரலில் எச்சரித்தான் கொள்ளையர் தலைவன். எச்சரித்ததோடு அல்லாமல் சைகை காட்டித் தன்னுடைய ஆட்களைக் கீழ்த்தளத்திற்கு விரையுமாறும் செய்தான். கீழ்த்தளத்திலே கூக்குரல் கேட்டன. ஐயோ என்ற பயங்கர அலறலும் கேட்டது. தளபதி புரிந்து கொண்டான், கீழே எதிர்க்க முயன்றவர்களைக் கொள்ளையர்கள் கொன்று விட்டார்கள் என்பதை. மேலே விவாதிக்க விரும்பாமல், "எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் எல்லோரும் மேலே வந்து சேருங்கள். ஆபத்து நம்மை நெருங்கிவிட்டது" என்று குரல் கொடுத்தான்.

அவன் குரல் கொடுத்த மறுகணம் கலபதியே எதிர்பாராவண்ணம் அவன் இருகைகளும் பின்பக்கமாகக் கட்டப்பட்டன. வாயைத் திறக்க முடியாமல் அழுத்தமான துணி கட்டப்பட்டது. அவன் கால்களும் கட்டப்பட்டன. அப்படியே அவனைத் தூக்கிக் கம்பின் அருகே கொண்டு சென்று மற்றொரு கயிற்றால் பிணைத்து விட்ட பிறகு கொள்ளையர்கள் தங்கள் செயலில் இறங்கலானார்கள்.

கலங்களிலிருந்த துணி மூட்டைகளையெல்லாம் கொள்ளையர்கள் முதுகிலே சுமந்து நூலேணி வழியாக இறங்கிப் படகிலே ஏற்றினர். சிறிதுநேரத்தில் கலத்திலிருந்த பண்டங்கள் யாவும் சூழ்ந்திருந்த படகுகளில் ஏற்றப்பட்டு அந்தப் படகுகள் மெல்ல மெல்லக் கலத்திலிருந்து விலகித் தொலைவிலே நின்று கொண்டிருந்த கொள்ளையர்கள் கலங்களை நோக்கிச் சென்றன.

கொள்ளையர் கலங்கள் மகிழ்ச்சியுடன் இருந்தன. ஏராளமான பண்டங்களைச் சோழநாட்டுக் கலங்களிலிருந்து பறித்துக் கொண்ட கொள்ளையர்கள் தங்களுடைய முதல் வெற்றியைக் குறித்துக் கலத்திலேயே கொண்டாடத் தொடங்கினார்கள். ஆனால் கொள்ளையர் கலத்துக் கலபதி எச்சரித்து அடக்கி, "நாம் இங்கிருந்து எவ்வளவு விரைவில் சென்று விடுகிறோமோ அவ்வளவுக்கு நல்லது. ஏனெனில் சோழநாட்டுக் கலத்திலிருந்து நாகைப்பட்டினத்திற்கு யாராவது விரைந்து சென்று தாங்கள் கொள்ளையடிக்கப்பட்ட விபரத்தைச் சொன்னால் சோழப்படை வீரர்கள் ஒருவேளை நம்மைப் பலத்துடன் துரத்திக் கொண்டு வரலாம்; அதிகப் படைவீரர்கள் நம்மை எதிர்த்துப் போரிட்டால் நம்மால் திருப்பித் தாக்குவதற்கு சக்தி இல்லாமல் போகலாம். அதனால் நாம் எவ்வளவு விரைவில் கலத்தைச் செலுத்திக் கொண்டு செல்கிறோமோ அவ்வளவுக்கு நல்லது" என்று

கூறினான். அவன் சொல்வதில் நியாயம் இருந்ததைக் கண்ட கலத்திலுள்ள கொள்ளைக்காரர்கள் கலத்தின் பாயை விரித்து மிக வேகமாகக் கலம் செல்வதற்கான வழிவகைகளைக் காணலானார்கள்.

முதலில் வந்த வேகம் இப்பொழுது அந்தக் கலங்களில் இல்லை. ஏனெனில் கலம் முழுவதும் பண்டங்களால் நிறைந்திருந்தது. ஓர் இரவு ஓர் பகல் என்று கழிந்து கொண்டே வந்து பிறகு கலம் வழியில் உள்ள ஒரு தீவில் நின்றது. அந்தத் தீவிலாவது நாம் இறங்கிச் சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளலாமா என்று கொள்ளையர்களின் கலத்தில் இருந்த வீரர்கள் கேட்டார்கள். கலபதி தலையசைத்தான். எல்லாக் கலங்களிலும் பண்டங்கள் ஏற்றப்பட்டு இருந்தாலும் ஓர் கலம் மட்டும் தனியே அதிகமாகப் பண்டங்களை ஏற்றாமல் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. அந்தக் கலத்தில் கலபதியைத் தவிர வேறு சிலரும் இருந்தார்கள். அவர்கள் சேரநாட்டைச் சேர்ந்த படைவீரர்கள். கொள்ளையர்களுக்குத் தக்க சமயத்தில் உதவுவதற்காக சிறந்த வீரர்கள் பத்துபேரை சேர மன்னன் அனுப்பியிருந்தான். அந்தத் தீவிலே எல்லோரும் இறங்கிய போது தான் புதிய நபர் ஒருவர் அந்தக் கலத்திலிருப்பதை அவர்கள் கண்டார்கள். "யார் நீ" என்ற அதிகாரமான குரலில் அவன் கேட்டவுடன் திருதிருவென்று அந்த இளைஞன் விழித்தான். அவன் மறுமொழி ஏதும் கூறவில்லை. அவர்களுக்கு ஒரு பக்கம் வியப்பும் மறுபக்கம் அச்சமும் கலந்திருந்தன.

"இந்தக் கலம் கிளம்பும் பொழுது இவன் ஏறியதை நீங்கள் பார்த்தீர்களா?" என்று கலபதி கேட்டான்.

'இல்லை' என்று மற்றவர்கள் தலை அசைத்தனர். அவனை நோக்கி, "நீ யார்?" எங்கிருந்து வருகிறாய்? என்று உரத்த குரலில் கேட்டான். தொண்டை கரகரக்கப் பல தடவைகள் உரத்த குரலில் கேட்ட பிறகு தான் அவன் ஊமையும், செவிடும் என்பதை அறிந்துகொண்ட கலபதி சைகை மூலமாக, "எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டான். அப்பொழுதும் அவன் மௌனமாக இருந்தான்.

இதைக் கண்டு பொறுக்காத மற்றொரு கொள்ளையன் அவன் மீது பாய்ந்து அவனை ஓங்கிக் கன்னத்தில் ஓர் அறை விட்டான். ஆனால் அதற்கும் அந்த ஊமையன் பயப்படவில்லை.

எதிர்பாராத அந்தத் தாக்குதலால் சற்றுத் தடுமாறிக் கீழே விழுந்த ஊமையன் மெல்லச் சிரித்தான். அவ்வாறு அவன் சிரித்ததைக் கண்ட மற்றவர்கள், வியப்புடன் நின்றனர். கீழே விழுந்தவன் யாரும் எதிர்பாரா விதத்தில் தன்னை அடித்தவனை நோக்கிப் பாய்ந்து ஒரே கணத்தில் அவனைத்



தூக்கித் தலைமீது கரகரவென்று சுழற்றிக் கலத்திலிருந்து கீழே தூக்கி வீசினான். அவனுடைய இந்தச் செய்கை ஒரு கணநேரத்தில் நிகழ்ந்து விட்டதால், அதைத் தடுக்க ஒருவராலும் முடியவில்லை. இவ்வளவு பலம் பொருந்தியவனாக இந்த ஊமையன் இருப்பான் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அவனுடைய பயங்கரமான செயலைக் கண்ட மற்றவர்களுக்கு ஒரு கணம் அச்சம் ஏற்பட்டது. அதனால் அவர்கள் 'எல்லோரும் சேர்ந்து அவனைத் தாக்குவோமா? அல்லது அவனுடைய முடிவைக் கலபதியிடம் விட்டுவிடுவோமா?' என்று யோசித்து அவனை சூழ்ந்து நின்று கொண்டார்கள்.

**ஊ**மையன் கண்களில் சினம் பொங்க இரண்டு கைகளையும் முஷ்டிகளையும் உயரப்பிடித்து ஒரு விதமாகக் குரல் எழுப்பினான். இப்பொழுது கலபதிக்குப் புரிந்து விட்டது. அவன் சாதாரணமான ஊமை, செவிடு மட்டும் அல்லன், மிகப் பலம் பொருந்தியவன் என்று. அவனுடைய பலத்தை, அவனுடைய திறமையை அறியக் கலபதி விரும்பினான். அதனால் தன் அருகே இருந்தவனுக்குக் கண் ஜாடை காட்டினான். அவன் உடனே தன் வாளை உருவி அந்த ஊமையனை நோக்கிப் பாய்ந்தவுடன் ஊமையன் வாள் வீச்சு சிறிது கூடத் தன்மீது படாமல் மிக லாவகமாக அவற்றிலிருந்து தப்பி, கணநேரத்தில் அருகே இருந்த மற்றொரு வீரனின் இடையிலிருந்த வாளை உருவி வாளுக்கு வாள் மோதுமாறு செய்தான்.

அந்தக் கலத்தின் மேல்தளத்தில், 'கிணிங்! கிணிங்!' என்ற ஓசை பயங்கரமாக எழுந்தது. வாளோடு வாள் மோதும் போது தீப்பொறி பறக்குமோ என்ற அளவிற்கு வாட்கள் மோதின. தன்மீது பாய்ந்து வரும் வாளை மிக லாவகமாக அந்த ஊமையன் தடுத்து நிறுத்தினான். இடதும் வலதுமாகச் சுழற்றினான். ஒரு கணம் அந்த வாள் கொள்ளையன் மார்பை நோக்கிப் பாய முனைந்தது. நல்ல வேளையாக அவன் அதைத் தடுத்து நிறுத்திடாவிடில் அந்த வாள் அவன் மார்பைக் கிழித்துச் சென்றிருக்கும். மற்றொரு சமயம் மிக அலட்சியமாக அந்த வாளால் கொள்ளையனுடைய தலைப்பாகையைத் தட்டி விட்டான். மற்றொரு கணம் அந்த வாள் அந்த வீரனின் தோளின் ஓரத்திலே கீறிப் பாய்ந்து குருதியைக் கொட்டுமாறு செய்தது. அவன் பயங்கரமாகக் கூவிக் கொண்டு வாளைப் போட்டுவிட்டு ஓடிவிட்டான்.

இப்பொழுது அவன் இருவாட்களையும் கையில் எடுத்துக் கொண்டு இடம் வலமாகச் சுழற்ற தொடங்கினான். அந்த வாள் சுழற்றலினால் அருகிலிருந்தவர்கள் சிதறி ஓடினார்கள். தங்கள் மீது வாள் பாய்ந்துவிடுமோ என்று அஞ்சினர். கலபதி பார்த்துக் கொண்டு தான் இருந்தான். அடுத்த கணம்

அவனுடைய கண் சைகை மற்றொரு பக்கம் சென்றது. இப்பொழுது எங்கிருந்தோ துள்ளி ஓடிவந்த கொள்ளையன் ஒருவனிடம் பலமான இரும்புத் தடி இருந்தது. கொள்ளையன் இரும்புத் தடியை எடுத்துக் கொண்டு சுழற்றத் தொடங்கினான். ஊமையன் கையில் இருந்த வாள் முறிந்து விழுந்தது. ஊமையன் ஒரு கணம் திகைத்தான். நிராயுத பாணியாக நின்ற ஊமையனைக் கட்டிப்பிடிக்கக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் பாய்ந்து வந்தனர்.

## 3

**ஊ**மையன் நிலைமையை நொடியில் புரிந்து கொண்டான். எப்படி தாக்குவது என்று யோசித்த அந்த ஊமையன் நிலைமையை நொடியில் புரிந்து கொண்டான். ஒரு கணத்தில் அருகே நின்று கொண்டிருந்த கலபதியின் அருகே சென்று நின்று கொண்டான். இரும்புத் தடியால் தாக்க முற்பட்டவன் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நிற்கவும் கலபதியின் பின்புறம் மறைந்து கொண்டு இருந்த ஊமையனைப் பிடிப்பதற்கும் பலர் ஓடி வரவும், இமைக்கும் நேரத்தில் ஊமையன் தடியை வைத்துக் கொண்டு சுழற்றாமல் நின்று கொண்டிருந்தவனை நோக்கிப் பாய்ந்து அவன் கையில் இருந்த ஆயுதத்தைப் பறித்துக் கொண்டான். அப்பொழுது அனைவரும் நடுங்கி ஓடத் தொடங்கினார்கள். கலபதிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இனி இந்த ஊமையனை இப்படியே தாக்கவிட்டால் அவன் பலருக்கு ஊறுவிளைவித்து விடுவான் என்பதைக் கலபதி புரிந்து கொண்டான். கை தட்டி அழைத்து அவன் தோளில் தன் கையைப் போட்டுக் கொண்டு ஏதோ சைகை காட்டினான். அவன் ஊமையன் என்பதை முதலிலேயே புரிந்து கொண்ட கலபதி அவனுக்குப் புரியக்கூடிய சைகையை உதடுகளின் மூலம் மெல்லச் சொல்லவும் ஊமையனும் புரிந்து கொண்டான்.

அவன் செய்த சைகையிலிருந்து ஒன்றும் புரிந்து கொள்ள முடியவில்லை. ஊமையனை மெல்லக் கலத்திற்குள்ளே அழைத்துச் சென்றான். ஊமையன் சுற்றும் முற்றும் பார்த்து விழித்தபடியே தன்னை எங்கு அழைத்துச் செல்கிறார்கள் என்ற கவலை உள்ளத்தில் இருந்தாலும் எந்த நொடியிலும் தற்காத்துக் கொள்வதற்காக, திருப்பித் தாக்குவதற்கான ஆயுதங்களுடன் கீழ்த்தளத்திற்கு இறங்கிச் சென்று கொண்டிருந்தான்.

கலத்திற்குள்ளேயே ஒரு சிறு வீடு போலக் கீழ்த்தளம் அமைந்திருந்தது. சிறுசிறு அறைகளாகத் தடுக்கப்பட்டிருந்தன. அறை ஒன்றினுள் கலபதி நுழைந்து அங்கே ஊமையனை உட்காருமாறு சொன்னான். சிறுகட்டில்



போடப்பட்டிருந்தது. அதில் மெத்தை விரிக்கப்பட்டிருந்தது. அருகே பல கிண்ணங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு தட்டில் சில பழவகைகள் வைக்கப்பட்டிருந்தன. உடைகள் எல்லாம் அங்கே தாறுமாறாகக் கிடந்தன. அது கலபதி உறங்குவதற்குச் சொந்தமாகப் பயன்படுத்தும் இடம் என்று ஊமையன் தெரிந்து கொண்டான். சாடை காட்டி ஊமையனை உட்காருமாறு சொல்லவும் ஊமையன் கையைக் கட்டிக் கொண்டு தலையசைத்து மறுத்து விட்டான்.

''நீ இங்கே உட்காரலாம்; சந்தேகப்பட வேண்டாம்; அந்நியன் என்று என்னை நீ நினைக்க வேண்டாம். உன்னுடைய பலத்தைப் பார்த்தவுடனே உனக்குத் தக்கபடி போர் முறைகளைக் கற்றுக் கொடுத்தால் நீ சிறந்த போர் வீரனாக மாறுவாய் என்பதை நான் தெரிந்து கொண்டேன். இங்கே உட்கார்'' என்று சொல்லிக் கையைத் தட்டினான்.

ஊமையன் மஞ்சத்தின் ஓரத்தில் உட்கார்ந்து இருந்தான். அவனுடைய விழிகள் அந்த அறையை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தன. வெளியே கடல் அலைகள் கலத்தின் மீது வந்து மோதும் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. சிலசமயம் பெரும் அலை கலத்தை மோதும் போது கலம் சற்றே ஆடியதும் தெரிந்தது. ஓரிரண்டு நீர்த்துளிகள் சாளரம் வழியாக உள்ளே வீசின. சிறிது நேரத்திற்குள் ஒரு பெண் கையிலே உணவு வகையுடன் அங்கே நுழைந்தாள்.

ஊமையனுக்கு ஆச்சரியமாயிருந்தது, அந்தக் கலத்தில் பெண்கள் கூட இருக்கிறார்களா என்று! கலபதி ஊமையனைப் பார்த்துத் தட்டிலுள்ளவற்றை எடுத்துக் கொள்ளுமாறு சைகை செய்தான். ஊமையன் தலையை அசைத்தான், வேண்டாம் என்பது போல.

''இல்லை எடுத்துக்கொள், மிகவும் பசியோடிருக்கிறாய். சிறிது நேரத்திற்கு முன்பு ஏற்பட்ட சச்சரவினால் களைத்துப் போயிருப்பாய்'' என்று மெல்லிய குரலில் கலபதி கூறினான்.

அவனுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்காக அந்தத் தட்டிலிருந்து தானும் சிறிது கவளம் உணவை எடுத்து உண்டான். பிறகே ஊமையன் உண்ணத் தொடங்கினான்.

அவன் மிக வேகமாக ஆவலுடன் உண்பதைப் பார்த்த கலபதி அவன் இரண்டு நாள்களாக சோற்றைக் காணவில்லை என்பதை அறிந்தான். உணவு உண்டு கையைக் கழுவிக் கொண்டு மீண்டும் வந்து அமர்ந்த ஊமையனைப் பார்த்துக் கலபதி கேட்டான்: ''நீ எங்கு செல்கிறாய், எப்படி இந்தக் கலத்திற்குள் வந்தாய்?'' என்று.

ஊமையன் சிரித்தான். திரும்பவும் என்ன சாடை காட்டினால் கலபதியால் புரிந்து கொள்ள முடியும்? ஊமையன் ஒருவிதமான சைகையைச் செய்தான். கலபதியால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. கலபதிக்கு அப்போது தான் நினைவு வந்தது.

கலத்தில் ஊமையனுடன் பேசக்கூடிய திறமை வாய்ந்த ஒருவன் இருப்பதையும் அவனை அழைத்து வந்தால் ஊமையனுடன் பேசுவான் என்பதையும் உணர்ந்த கலபதி ஊமையனை அங்கேயே இருக்க வைத்து விட்டுக் கலத்தின் மேல்தளத்திற்குச் சென்றான். மேல்தளத்திலே ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் ஊமையனைப் பற்றியும் அவனது பலத்தைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். எப்படியாவது ஊமையனைக் கட்டிக் கடலில் வீசிவிடவேண்டும் என்று ஒருவன் யோசனை சொல்லிக் கொண்டிருந்தான். கலபதி அங்கே வரவும் அவர்கள் கடைசியாகச் சொன்ன யோசனை அவன் காதில் விழவும் சரியாக இருந்தது.

கலபதி தலையை அசைத்து, ''அத்தகைய எண்ணம் மட்டும் கொள்ளாதீர்கள். நாம் தாக்க முற்பட்டோம், அவன் தன்னைத் தற்காத்துக் கொண்டான். அதற்காக அவனை நீங்கள் ஏன் கடலில் வீசி எறியவேண்டும்?'' என்று கேட்டான்.

அங்கிருந்தவர்களில் ஒருவன் சொன்னான்: ''ஊமையனை நீங்கள் ஏன் கலத்திற்குள்ளே அழைத்துச் சென்றிருக்கிறீர்கள்? அவன் மேல் அவ்வளவு நம்பிக்கை உடனே வந்துவிட்டதா? எனக்கென்னவோ அவனைக் கண்டால் சந்தேகமாக இருக்கிறது. அவன் சோழநாட்டு ஒற்றனாக இருக்கலாம்.''

கலபதி சிரித்தான். ''ஒற்றனாகவே இருக்கட்டும். சோழநாட்டு இளவரசனாகவே இருக்கட்டும். அதனால் நமக்கென்ன? இப்பொழுது நம் கலத்தில் இருக்கிறான். நம்மை மீறி அவன் தப்பிச் சென்றுவிட முடியாது. அதே சமயத்தில் ஊமையனுடைய திறமையைப் பார்த்தீர்களா? பலத்தைப் பார்த்தீர்களா? 'ஓர் அங்கம் இல்லாதவனுக்கு ஆண்டவன் பெரிய சக்தியைக் கொடுப்பா' னென்று பெரியவர்கள் சொல்வார்கள். ஊமையன் வாய்பேச முடியாததனால் பத்துபேரை ஒரே சமயத்தில் எதிர்த்து நின்று போரிடக்கூடிய வலிமை அவனிடம் இருக்கிறது. அதனால் அவனை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் போகும் தீவுகளில் எல்லாம், நாம் வழியை மறித்து நடத்தும் கொள்ளைகளிலெல்லாம் ஊமையனின் உதவி நமக்குத் தேவையாய் இருக்கும்'' என்று சொல்லி அனைவரையும் ஒருமுறை திரும்பிப் பார்த்து, ''நீங்கள் எல்லாரும் அவனை உங்களுடைய சகோதரன் போல் நேசிக்கவேண்டும். ஒருவராவது தவறான எண்ணம் கொண்டு அவனுக்கு



ஏதாவது இடையூறு செய்ய முற்பட்டால் அது எனக்குத் தெரியவந்தால் நான் உங்களைச் சும்மா விடமாட்டேன்'' என்று எச்சரித்தான். ''எங்கே மணிக்கண்ணனைக் காணவில்லை?'' என்றான்.

மணிக்கண்ணன் என்பவன் தான் ஊமையனுடன் பேசக்கூடிய சக்தி உடையவன். ''மணிக்கண்ணன் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறான், எழுந்திருக்கவில்லை'' என்று கலபதி அறிந்து மணிக்கண்ணனைத் தேடி அவனைத் தட்டி எழுப்பி அழைத்து வந்தான்.

மணிக்கண்ணனும் ஊமையனும் பேசத் தொடங்கினார்கள். முதலில் ஊமையனிடம் நேரடியாகப் பேச முற்படாமல் மணிக்கண்ணன் அவனுடைய விழிகளை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். ஏதோ விழிகளிலிருந்து அவன் அறிய முற்படுபவன் போல் பார்த்தான். ஊமையன் அதற்குச் சளைக்கவில்லை. தன் பார்வையைச் சிறிது கூடக் குறைக்காமல் மணிக்கண்ணனைப் பார்த்துக் கொண்டே இருந்தான். மணிக்கண்ணன் ஊமையனைப் பற்றி ஓரளவு அறிந்து கொண்டான்.

ஊமையன் சோழநாட்டில் ஒரு சிறு கிராமத்தைச் சேர்ந்தவன். ஊரிலுள்ள வணிகர்களுக்கு உதவிசெய்து அதனால் கிடைக்கக்கூடிய ஊதியத்தைக் கொண்டு வாழ்நாளை ஓட்டிக் கொண்டிருந்தான். அவன் ஓர் அனாதை. ஊமையன் ஓர் அனாதை என்பதைக் கலபதி அறிந்து கொண்டான். ஆனால், கொள்ளையர்கள் கலத்திற்கு அவன் எவ்வாறு வந்து சேர்ந்தான் என்பதை அறியுமாறு மணிக்கண்ணனிடம் கேட்டுக் கொண்டான். ஆனால் என்ன முயன்றும் அந்தச் சைகையை ஊமையன் உணர முடியவில்லை.

கலபதி கேட்கச் சொன்னான்; ''சரி அது போகட்டும், இந்தக் கலத்திலேயே தங்கியிருந்து விடுவாயா?'' என்று.

மணிக்கண்ணன் கேட்டான். ஊமையன் தலையை அசைத்துத் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்தான். தனக்குச் சகோதரி ஒருத்தி இருப்பதாகவும், அவள் உறையூர் அருகில் ஒரு சிறு கிராமத்தில் இருப்பதாகவும், அந்தக் கிராமத்தை அடைந்து அவளுக்கு ஏதாவது பண்டங்கள், பொருட்கள், பரிசுகள் கொடுக்கவேண்டும் என்று நினைப்பதாகவும், ஓர் ஆண்டு கழித்துத் தன்னை இந்தக் கலத்துப் பணியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்றும் ஊமையன் சைகை காட்டினான். ஊமையன் சொல்லும் இவ்வளவு செய்திகளையும் சைகை மூலம் மணிக்கண்ணன் அறிந்து உணர்ந்து சொல்கிறானே என்று கலபதி மிகவும் வியப்புற்றான். ஊமை பாஷை ஒரு மகத்தான பாஷை தான் என்பதையும் தெரிந்து கொண்டான்.

கலபதியும் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்தான். ஓர் ஆண்டிற்குப் பிறகு பெரும் பரிசுகளுடன் அனுப்பி வைப்பதாக உறுதி கூறினான்.

கலம் நகர்ந்து கொண்டிருந்தது. ஊமையன் தன்னந் தனியாகப் பாய்மரத்தை ஏற்றுவதும் இறக்குவதுமான கடினமான வேலைகளை மிக எளிதில் செய்தான்.

அவனுடைய திறமையையும் பலத்தையும் வியப்பதற்குப் பதிலாகப் பலருக்கு அவன் மீது பொறாமை ஏற்பட்டது.

## 4

ராஜராஜ சோழ தேவரும், அவரது தமக்கையார் இளைய பிராட்டியார் என்று அழைக்கப்படும் குந்தவை தேவியாரும், தஞ்சைத் தளிக்குளத்தார் கோயிலுக்கு அருகே நின்று கொண்டு, அந்த இடத்தில் பெரிய கோயில் ஒன்று கட்டுவதற்காகத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். அரசர் திருக்கரத்தில் பட்டுத் துகிலில் செவ்வண்ணக் கோடுகளால் வரையப்பட்ட வரைபடம் ஒன்று இருந்தது.

அந்தப் படத்தில் கம்பீரமான திருக்கோயில் ஒன்று காட்சியளித்தது. சோழநாட்டில் இதுவரை கட்டப்படாத அளவுக்கு மிகப் பிரம்மாண்டமான கோயில் ஒன்று வரையப்பட்டிருந்தது.

ராஜராஜன், இளைய பிராட்டியாரிடம் தான் எழுப்ப விருக்கும் கோயிலைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார்.

அக்கையார் என்று குந்தவையை இளம்பிராயம் தொட்டு அன்புடன் அழைப்பது அவர் வழக்கம். கடல் கடந்து கிழக்கு நாடுகளுக்கு தான் சென்றபோது, அங்கே புத்தபிரானுக்கு எழுப்பப்பட்டிருக்கும் திருக்கோயிலைப் பற்றி எடுத்துக் கூறி அதுபோன்ற பெரிய கோயிலை சிவபெருமானுக்குக் கட்ட இருக்கும் தன் திட்டத்தை விவரித்தார்.

பெரிய கோயிலில் இறையகத்துக்கு மேல் மிகப்பெரிய விமானம் கட்டப்போவதாக ராஜராஜன் விவரித்தார்.

"விமானத்தின் மீது பெரிய கல்லால் ஆன பீடத்தில் கலசம் ஒன்று அமைக்கப் போகிறேன்'' என்றார் சோழ அரசர்.

''தம்பி! உன் மனம் போல் கோயில் மிகப்பெரியதாகவும், அதன் விமானம் உயர்ந்துமிருக்கப் போவதை இப்போதே கற்பனைக் கண்ணால் உருவகப் படுத்தி மகிழ்கிறேன்'' என்றார் இளைய பிராட்டியார்.

''இளைய பிராட்டியார் அவர்களே! அந்த விமானக் கலசத்தின் பீடத்தில் தங்கள் பெயரையும் தங்கள் கணவர் வல்லவரையர் பெயரையும் பொறிக்கப்



போகிறேன்'' என்று ராஜராஜன் கூறிய போது இளையபிராட்டி மிக மகிழ்ந்து, தன் சகோதரனின் அன்பையும், பண்பையும் மரியாதையையும் பாராட்டி, "இந்தக் கோயிலும், விமானமும் உள்ளவரையில் எங்கள் பெயரும் நிலைத்து நிற்க வழிசெய்து விட்ட உன் நல்ல உள்ளத்தை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை'' என்றாள்.

ராஜராஜனும் இளையபிராட்டியை நோக்கி, "நீங்கள் இல்லாவிட்டால் நான் ஏது? நீங்கள் என்னை அறிவுடன் வளர்த்தீர்கள், ஆற்றலுடன் வளர்த்தீர்கள். உங்கள் மதிநுட்பத்தால் தான் இந்த மகத்தான சோழ சாம்ராஜ்யத்தின் எல்லை விரிந்து கொண்டே போகிறது. என்றென்றும் நீங்கள் என்னுடனேயே இருந்து அவ்வப்போது தக்க கருத்துரை வழங்கவேண்டும்'' என்று நெஞ்சு நெகிழக் கூறினார்.

குந்தவைப் பிராட்டி கலகல வென்று நகைத்து, "தம்பி அது எப்படி முடியும்? நான் என்னுடைய நாட்டிற்குச் செல்லவேண்டாமா? வல்லவரையர் நாட்டிற்குச் சென்று அந்த நாட்டின் பெருமையை உயர்த்த வேண்டாமா? எவ்வளவு நாட்கள் பிறந்த வீட்டிலேயே இருப்பது?'' என்று சொன்னாள்.

''பிறந்த வீடா? புகுந்த வீடா? ஏன் தனித்தனியே பிரித்துப் பேசுகிறீர்கள் அக்கா. நீங்கள் செல்லும் நாடெல்லாம் உங்கள் நாடு. புகுந்த நாடு. வல்லவரையர் வந்தியத் தேவருக்கும் தங்களுக்கும் இது தான் பிறந்த வீடு. புகுந்த வீடு. இப்பொழுதே சொல்லுங்கள். வல்லவரையரை இந்த நாட்டின் பேரரசராக ஆக்கிவிட்டு நான் மீண்டும் கடல் கடந்துபோய் விடட்டுமா?'' என்று ராஜராஜன் சொன்னவுடன் குந்தவைப் பிராட்டியின் முகம் சற்று மாறியது.

''தம்பி என்ன வார்த்தை சொல்லிவிட்டாய்? கடல் கடந்து நாடுகளுக்கு மீண்டும் செல்கிறாயா? நாம் நினைத்துக் கொண்டிருந்த திட்டங்கள் என்ன ஆவது? நாடெங்கும் பரந்து விரிந்திருக்கும் நிலங்களையெல்லாம் அளந்தாகி விட்டது. பிறகு ஒழுங்கு செய்து தக்கவர்களுக்கு வழங்க வேண்டாமா? நாட்டைப் பல பிரிவுகளாகப் பிரித்து அதை அளந்து வரி வசூலிக்கச் செய்யுமாறு அதிகாரிகளுக்குக் கட்டளையிட வேண்டாமா? நம்பியாண்டார் நம்பி வகுத்துக் கொடுத்துள்ள தேவாரத் திருப்பதிகங்களை அந்தந்த ஊர்க்கோயில்களில் ஓதச் செய்ய வேண்டாமா? அந்தத் திருத்தலங்களைச் சீர்படுத்த வேண்டாமா? அதிலெல்லாம் நீ கவனம் செலுத்தவேண்டாமா? நாட்டை என் கணவர் வல்லவரையரிடம் கொடுக்கப் போகிறாயா? ரொம்பவும் ஒழுங்கு தான்!'' என்று பிராட்டி சற்றுக் குரலில் கடுமையை வரவழைத்துக்

கூறினாள். அவர்கள் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போது அங்கே வந்தியத்தேவன் வந்தார்.

"வாருங்கள் வாருங்கள் வந்தியத் தேவரே! தங்களைப் பற்றித்தான் இப்பொழுது பேசிக் கொண்டிருந்தோம்" என்று ராஜராஜன் சொன்னார்.

"என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள் என்னைப் பற்றி" என்று இளைய பிராட்டியைப் பார்த்துக் கண்சிமிட்டிக் கேட்டார். இந்த வயதிலும் அவருக்குள்ள துடிதுடிப்பும், சுறுசுறுப்பும், குழந்தை போன்ற குறும்புத்தனமும் ராஜராஜனைச் சிலிர்க்க வைத்தது. "தங்களைப் பற்றிக் குறை சொல்வதற்கு என்ன இருக்கிறது?" என்று ராஜராஜன் வல்லவரையரைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமாம், என்னைப் பற்றிக் குறை சொல்வதற்கு ஒன்றும் கிடையாது. ஆனால் இளைய பிராட்டியைப் பற்றிக் குறை சொல்வதற்கு நிறைய இருக்கிறது!" என்று கூறியவாறு இளைய பிராட்டியைப் பார்த்தார் வல்லவரையர்.

"ஆ! என்னைப் பற்றிக் குறை சொல்வதற்கு என்ன இருக்கிறது?" இளையபிராட்டியும் சற்று திடுக்கிட்டாள்.

இளைய பிராட்டியும் ராஜராஜனும் வல்லவரையர் முகத்தையே நோக்கினார்கள். "என்ன குறை என்று கேட்கிறீர்களா? சிறிது நாள்களாகப் பிரம்மதேசத்திற்குச் செல்ல வேண்டுமென்று உங்கள் தமக்கையார் வற்புறுத்துகிறார். எனக்கு என்னவோ தஞ்சைத் தரணியை விட்டுப் பிரியவே மனமில்லை. வெண்ணாற்றங்கரையிலே அமர்ந்து பல கற்பனைகளை மனத்திலே கொண்டு புதுத் திட்டங்களை எல்லாம் வகுக்க வேண்டும் என்ற எண்ணம் தான் தோன்றுகிறது. உறையூருக்குச் சென்று அங்கே அகண்ட காவிரியில் ஓடத்திலே அமர்ந்து அக்கரைக்குச் செல்லும் போது அந்த நீர்ச்சுழிகளையெல்லாம் பார்த்துக் குதூகலிக்க வேண்டும் போல் தோன்றுகிறது. அதைவிட்டு விட்டுத் தண்ணீர் இல்லாத பாலாற்றங்கரைக்குப் போகவேண்டுமென்று உங்கள் தமக்கையார் கூறுகிறார் என்றால் நான் எப்படி அதை ஒப்புக்கொள்ள முடியும். அதுதான் எங்களுக்குள் உள்ள கருத்து வேற்றுமை. அதனால் தான் அதைப்பற்றித் தான் தங்களிடம் சொன்னார்களா என்று நான் கேட்கிறேன்" என்று வந்தியத்தேவன் கூறவும், இளைய பிராட்டியார் பொய்க்கோபம் கொண்டு, "நீங்கள் வேண்டுமானால் இங்கேயே இருங்கள், நான் பிரம்மதேசம் செல்கிறேன், மகதநாட்டு மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டாமா? சோழநாடு மட்டும் உயர்ந்து கொண்டேபோனால் மற்ற நாடுகள் எப்பொழுது தான் முன்னேறுவதாம்?" என்று கூறினாள்.



ராஜராஜன் தனது தமக்கையாரைப் பார்த்து, "தேவி ஏன் இப்படி சோழநாடு என்றும் மகதநாடு என்றும் பிரித்துப் பேசுகிறீர்கள். சோழநாடு என்று தனியே ஒரு நாடு இருக்கிறதா? மகதர், மலையமான், பழுவேட்டரையர், கொடும்பாளூரார், சம்புவரையர், காடவரையர் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்து நடத்தும் நாடு தானே இந்தச் சோழநாடு. அதைப்போல மகத நாடும். நீங்கள் அந்த நாட்டின் முழுஉரிமையுள்ள அரசா, உங்களை நம்பியுள்ள மற்றொரு நாடும் இருக்கலாம். உங்கள் நாடு வளர வேண்டுமானால் அத்துணைப் பொறுப்பும் கடமையும் எல்லோருக்கும் இருக்கிறது அல்லவா? நாளை குறிப்பிடுங்கள். இங்கிருந்து யானை, குதிரைப் படைகளுடன் உங்களுக்கு வேண்டிய பரிசுப் பொருள்களுடன் நானே உங்களைச் சொந்த நாட்டுக்கு அழைத்துச் சென்று சேர்க்கிறேன்" என்று சொல்லவும் வந்தியத்தேவன் கலகல வென்று நகைத்து, "ஆகா! சகோதரர் என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும், சகோதரியினுடைய பேச்சைக் கேட்டவுடனேயே சகோதரர் உடனே ஒப்புக் கொள்கிறார். நான் சொல்வதை யாருமே கேட்க மாட்டேன் என்கிறார்கள்" என்று கவலைப்படுவது போல் தனது முகத்தைத் தாழ்த்திக் கொண்டார்.

"வல்லவரையரே, மகதநாட்டில் பாயும் காவிரி தானே சோழநாட்டிற்கு வருகிறது; தலைநகராம் பிரம்மதேசம் இருக்குமிடத்தில் பாலாறு பாய்கிறது. அதில் மணல்தான் நிறைந்திருக்கிறது. காவிரியையும் பாலாற்றையும் இணைப்போம். பிறகு தங்கள் திருநாட்டில் காவிரிக்குக் கிளைகள் வெட்டி நாடு முழுவதும் பாயுமாறு செய்துவிடலாம்" என்றார் ராஜராஜன். ஆகா, பொன்னியையும் பாயச் செய்வோம், பிறகு கடலையும் கொண்டு வந்து மரக்கலங்களையும் வரச் செய்வோம்" என்று கூறியது கேட்டு வல்லவரையர் பெரிதாக நகைத்தார்.

இளைய பிராட்டியாரும் மனம் விட்டுச் சிரித்தார்.

அந்தச் சமயத்தில் ஒற்றன் ஒருவன் சற்று தொலைவில் நின்று வணக்கம் தெரிவித்ததை ராஜராஜன் கண்டார்.

சோழநாட்டு ஒற்றர்கள் நாலா திக்குகளிலும் சென்று அங்கு நடக்கும் செய்திகளை அவ்வப்போது சோழநாட்டுக்கு அனுப்பி வந்தார்கள். சோழநாட்டின் மீது படையெடுப்பதற்கு அண்டை நாட்டார், படைபலத்தை ஆயத்தம் செய்து கொண்டிருந்தால் அதைப் பற்றிய செய்தி முன்பாகவே தஞ்சைக்குக் கிடைத்து விடும்.

நாட்டு விவகாரத்தில் சோழநாட்டு ஒற்றர்கள் மிகக் கவனமாக இருந்தார்கள். மதுரையை இழந்த பாண்டிய அமரபுஜங்கள் மீண்டும் பாண்டிய

அரியணையை அடைய சேர நாட்டுப் பாஸ்கர ரவிவர்மனுடன் சேர்ந்து திட்டம் தீட்டி வந்தார். அவர்களது சதித் திட்டத்தைக் கண்டறிந்து அவ்வப்போது செய்திகளைச் சோழநாட்டுக்கு ஒற்றர்கள் தெரிவித்துக் கொண்டு இருந்தனர்.

இப்பொழுது வந்திருக்கும் ஒற்றன் பல நாட்களுக்கு முன்பு சேர நாடு சென்றிருந்தவன் என்பதை உணர்ந்த ராஜராஜன் அவனைச் சைகை காட்டி அருகே வருமாறு அழைத்தார். மன்னர் ஒற்றருடன் பேசும் சமயத்தில் நாம் அங்கு இருப்பது சரியன்று என அங்கிருந்து வந்தியத்தேவனும், குந்தவையும் செல்ல முற்படவும், ராஜராஜன் அவர்களைக் கையமர்த்திக் குந்தவை தேவியாரையும், வந்தியத் தேவரையும் அங்கிருந்து செல்ல வேண்டாம் என்று சைகை செய்தார். ஒற்றன் விவரித்த செய்தி கேட்ட மூவரும் திடுக்கிட்டனர்.

சேரமான் பெருமாள் நாயனார் காலத்திலிருந்து சேரநாட்டாருடன் சோழநாட்டிற்கு நெருங்கிய நட்பும் தொடர்பும் இருந்து வந்தது. பிறகு பாண்டியன் அமரபுஜங்கன் காலத்திலிருந்து தான் சேர நாட்டு மன்னர்கள் சோழர்களைப் பகைவர்களாகக் கருதத் தொடங்கினர். சோழநாட்டின் மீது அமரபுஜங்கன் படையெடுக்க உதவி செய்வதாகப் பாஸ்கர ரவிவர்மன் வாக்களித்திருந்தார்.

சேரமன்னர் ஏராளமான மரக்கலங்கள் கட்டி வருவதாகவும் மரக்கலங்களைக் கொண்டு சோழநாட்டின் மீது கடல் மூலம் படையெடுக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் கூறியதைக் கேட்ட ராஜராஜன் மெல்ல நகைத்தார்.

"வந்தியத்தேவரே! இது ஆகும் காரியம் என்று நினைக்கிறீர்களா? காடுமலை கடந்து வந்து சோழநாட்டுடன் போர்புரிவதே இயலாது இருக்கும்போது சேர மன்னர் கடல் மூலம் படையெடுத்துச் சோழநாட்டைத் தாக்குவது என்பது எளிதா?" என்று கேட்டார்.

வந்தியத்தேவன் சிறிது மௌனமாயிருந்தார். பிறகு, "கடல் மூலம் தாக்குவது மட்டும் அவர்களுடைய நோக்கமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. இன்னும் அந்தச் செய்தியை ஊன்றிக் கவனிக்க வேண்டும். அமரபுஜங்கனுக்கும், பாஸ்கர ரவிவர்மனுக்கும் ஏதாவது நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருக்கிறதா? இப்பொழுது ஏதாவது புதிய திட்டங்களைத் தீட்டுகிறார்களா? என்பதை முதலில் கண்டறிய வேண்டும்" என்று கூறினார்.

இளையபிராட்டியும் அந்தப் பேச்சிலே கலந்து கொண்டார். "அமரபுஜங்கன் ஆனைமலைக் காட்டில் ஏராளமான போர்வீரர்களைச் சேர்த்து வைத்திருப்பதாக நான் கேள்விப் பட்டேன். சோழநாட்டின் மீது படையெடுத்து வருவதற்குத் தக்க பலத்துடன் இருப்பதாகவும் நான் அறிந்தேன். மேலும்,



அமரபுஜங்கனுக்கு உதவுவதில் சேர மன்னருக்குச் சொந்தக் காரணங்களும உண்டு" என்றாள் பிராட்டி. "அதனால் நாம் இப்பொழுது முதலில் செய்யவேண்டியது அமரபுஜங்கன் படைப்பலத்தை ஒடுக்க வேண்டும். மதுரையிலிருக்கும் நமது பிரதிநிதி இளவரசருக்கு மேலும் உறுதுணையாகப் போர்வீரர்களை அனுப்பவேண்டும். படையெடுப்பை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும்" என்று யோசனை கூறினாள்.

இளையபிராட்டியின் அரசியல் ஆற்றலை வியந்து, ராஜராஜன் அவளுடைய யோசனையை மனத்தில் கொண்டு சிறிதுநேரம் சிந்தித்த வண்ணம் இருந்தார். பிறகு ஒற்றனுக்குச் சைகை காட்டி, "நீங்கள் போகலாம். நாளை காலையில் மீண்டும் வந்து என்னைச் சந்தியுங்கள். நீங்கள் போகும் போது தளபதியைச் சந்தித்து நான் அழைத்ததாகச் சொல்லுங்கள்" என்றார்.

புறப்பட முயன்ற ஒற்றரை மறுபடியும் அழைத்து, "நமது ஒற்றர்கள் இன்னும் அதிகக் கவனத்துடன் பணியாற்ற வேண்டும். நாள்தோறும் சேரநாட்டிலிருந்தும், பாண்டிய நாட்டிலிருந்தும் நமக்குச் செய்திகள் வந்த வண்ணமாக இருக்க வழிவகைகளைச் செய்யவேண்டும். மறக்காமல் செய்யுங்கள். மிகவும் கவனத்துடன் செய்யுங்கள். அத்துடன் நமது திட்டங்கள் மற்றவர் அறியாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கட்டளை யிட்டார்.

அவர் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் ராஜராஜன் தனது மாளிகையை அடைய முற்பட்டார். வல்லவரையர் வந்தியத்தேவனும், குந்தவையும் தங்களுடைய மாளிகைக்குச் சென்று விட்டார்கள்.

ராஜராஜன் தனது இருப்பிட ம் சென்று அமர்வதற்குள் மற்றொரு ஒற்றர் மிக விரைவாக வந்து அவரிடம் ஒரு செய்தியைச் சொன்னார். அதைக்கேட்ட ராஜராஜன் முகம் மாறியது.

எதிர்பாராத அந்தச் செய்தியைக் கேட்டதனால் முகத்திலே ஏற்பட்ட திகைப்பு, அவரைத் துள்ளி எழச் செய்தது.

"என்ன சொன்னீர்கள்? நமது வணிகர்களுடைய கலங்கள் நடுவழியிலேயே மறிக்கப்பட்டு அதிலுள்ள பண்டங்கள் கொள்ளையிடப் பட்டனவா?" என்று சீற்றத்துடன் கேட்டார்.

ஒற்றர் மிகவும் பணிவான குரலில் "ஆம், அரசே பாதிக்கப்பட்ட வணிகர்கள் எல்லாம் நாகைப்பட்டினம் துறைமுகத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள்" என்றான்.

"நடுக்கடலில் கொள்ளையா? இதுவரை இதுபோல் நடந்ததில்லை. அவ்வாறு யார் செய்திருப்பார்கள்? நடுக்கடலில் நமது பண்டங்களைக் கொள்ளையடிக்கும் துணிவு யாருக்கு ஏற்பட்டது? இதை உடனே கண்டறிந்துத்

தடுக்க முற்படவேண்டும்'' என்று அழுத்தமாகக் கூறிய அரசர் அந்த ஒற்றனிடமே, ''ஒற்றனே, நான் சிறிது நேரத்திற்கு முன்பு தளபதியாருக்குச் செய்தி சொல்லியனுப்பி இருந்தேன். உடனே வந்து சந்திக்குமாறு சொல்லியிருந்தேன். இப்பொழுதே சென்று எந்த நேரமாயினும் உடனே வந்து என்னைச் சந்திக்கச் சொல்லுங்கள்'' என்றார்.

## 5

அமரபுஜங்க பாண்டியனும், சேர மன்னர் பாஸ்கர ரவிவர்மனும் துறைமுகத்திற்குச் சென்று அங்கே கட்டப்படும் மரக்கலங்களைப் பார்த்தவாறு இருந்தனர்.

கடற்கரையை ஒட்டியிருந்த விழிஞம் நகரம் சுறுசுறுப்பு மிகுந்திருந்தது. அண்மைக் காலத்தில் அங்கே மரக்கலங்கள் கட்டும் வேலை மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. மரக்கலங்கள் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் வசிக்கப் புதிய குடில்கள் ஏற்பட்டன. சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து தொழிலாளர்கள் அங்கே குடியேறினர்.

இரண்டு நாள்களுக்கு ஒரு முறையாவது அவர்கள் சந்தித்துப் பேசுவர். பாஸ்கர ரவிவர்மனுக்குத் தன் மகளைக் காணாமல் ஒருநாள் கூட இருக்க முடியாது. அமரபுஜங்கனும் தன் மகளும் வசிக்கத் தனி மாளிகையை அவர் கட்டிக் கொடுத்திருந்தார். அமரபுஜங்கன் அங்கே தங்கும் நேரம் மிகக்குறைவு. சிதறிக் கிடக்கும் பாண்டியர்களை ஒன்று திரட்டி அவர்களுக்குத் தக்க பயிற்சி அளிப்பதில் அவன் கவனமும் நேரமும் கழிந்தன. சோழநாட்டின் மீது படையெடுக்கும் தருணத்தை எதிர்பார்த்து அவன் இரகசியமாக இயங்கி வந்தான். அவன் சிந்தையெல்லாம் மிக விரைவில் சோழநாட்டின் மீது தாக்குதலைத் தொடங்க வேண்டும் என்பதே. ஆனால் படைபலத்தால் சோழர்களை வெல்ல முடியாது என்பது சேர மன்னரின் முடிவு. அமரபுஜங்கனோ அதை ஒப்புக் கொள்ளவில்லை. எண்ணிக்கையில் அதிக வீரர்கள் படையில் இருந்தால் மட்டும் போதாது; துடிப்புடனும், வீரத்துடனும் தாய்நாட்டைக் காப்பாற்றும் ஆர்வத்துடனும் உள்ள வீரர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் எத்தகைய பெரும் படைகளையும் வெல்ல முடியும் என்று சேரமன்னரிடம் அவன் அவ்வப்போது கூறுவது வழக்கம்.

அமரபுஜங்கனின் துடிப்பும், சுறுசுறுப்பும் விரைவில் சோழர்களைத் தாக்கவேண்டும் என்னும் ஆர்வமும் கொண்ட இளைஞனான அமரபுஜங்கனை பார்க்கும் போதும், அவனது துணிவு நிறைந்த பேச்சைக் கேட்கும்போதும் பாஸ்கர ரவிவர்மனுக்குத் தனது கனவு பலிக்கும் என்ற நம்பிக்கை ஏற்படும்.



தனது முன்னோர்கள் போன்று தானும் பெரும் புகழுடனும் விளங்க வேண்டுமென்ற எண்ணத்தை அமரபுஜங்கன் நெடுங்காலமாகக் கொண்டிருந்தான். இப்பொழுது சேரமன்னன் ரவிவர்மன் மகளை மணந்து அவரது உதவியைப் பெற்றவுடன் தனது கனவு நனவாகும் நாள் நெருங்கி வந்து விட்டது என்று மகிழ்ச்சியுடன் இருந்தான்.

பாண்டியப் படைவீரர்களைச் சோழர்கள் கொன்று தன் தந்தையின் தலையைக் கொய்து பந்தாடிய சம்பவத்தை அவனால் மறக்க முடியவில்லை. அதை நினைத்து, மனத்தில் வெஞ்சினம் கொண்டு சோழர்களின் பரம்பரையையே தீர்த்துக்கட்ட வேண்டுமென்ற நெஞ்சுறுதி கொண்டிருந்தான். அமரபுஜங்கன் பாண்டிய நாட்டுக்காகத் தியாகம் செய்ய நம்பிக்கையான வீரர்களாகச் சிறிது சிறிதாக ஆங்காங்கே சேர்த்து அவர்களுக்குத் தக்க போர்ப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு உறுதுணையாக அவனது வளர்ப்புத் தாய் - தலைவி தமது வயது முதிர்ந்த நிலையிலும் அவனுக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் ஊட்டி அவ்வப்போது நம்பிக்கையை நிலைநாட்டிக் கொண்டிருந்தாள்.

போரின்றிச் சோழர்குலத்தை சதியின் மூலம் பூண்டோடு அழித்து விடவேண்டும் என்ற எண்ணம் நெஞ்சினுள் எழும்போதெல்லாம் அவள் சொல்லுவாள், ''அது நியாயமில்லை. சுத்த வீரர்களுக்கு அழகன்று. வீரத்தோடு நின்று போராடி வெல்வது தான் ஒரே வழி'' என்று.

அந்த வழியில் தலைவியின் கருத்தை ஏற்று பாண்டிய நாட்டின் நாலா திசைகளிலிருந்தும் தேர்ந்தெடுத்த வீரர்களைத் திரட்டி ஆங்காங்கே அவர்களுக்குத் தக்க பயிற்சியும் அளித்துக் கொண்டிருந்தான் அமரபுஜங்கன். சேர மன்னனுடைய உதவியும் தனக்கு இருந்துவிட்டால் மிக விரைவில் தனது திட்டத்தை நிறைவேற்றி விடலாம் என்ற நம்பிக்கையால் தான் சேர மன்னரின் மகளை மணம் புரிந்து கொண்டான் அமரபுஜங்கன்.

பல மலைகளைக் கடந்தே சேரநாட்டுக்குச் செல்ல வேண்டும். பல இடங்களில் உட்புகுந்திருந்த கடலின் பகுதிகளைக் கடக்கச் சிறு தோணிகளைப் பயன்படுத்த வேண்டும். சில இடங்களில் சிறு குன்றுகளைக் கடந்து செல்ல வேண்டி இருக்கும். அந்த வழிகள் பயங்கரமானதாக இருந்தாலும் மிக விரைவில் அடையக்கூடிய சுறுக்கு வழியாகவும் இருக்கும்.

அந்த வழியில் செல்லாமல் நேர்பாதையில் வரவேண்டுமானால் ஒருமுறை அங்கு வந்து செல்லப்பல மாதங்கள் பிடிக்கும். அவ்வாறு குறுக்குவழியே வராமல் பல மாதங்கள் கழித்து வீரபாண்டியன் மகன் அமரபுஜங்கன் சேரமன்னனைக் காண வந்தான்.

காட்டுப்பகுதியில் கடுமையான பயணத்தாலும் வெயிலில் பல ஊர்களுக்கு சென்று அலைந்ததாலும் அமரபுஜங்கன் மெலிந்து கருத்துப் போயிருந்தான். சேரமகளான, தன் மனைவியையும் சந்திக்காமல் நேரே பாஸ்கர ரவிவர்மன் இருக்குமிடம் அடைந்தான்.

பாஸ்கர ரவிவர்மனுக்கு, தன் மருமகனான பாண்டிய குமாரனைப் பார்த்தவுடன் வியப்பும் திகைப்பும் ஏற்பட்டன. ''தங்கள் மாளிகைக்குச் சென்று சற்று ஓய்வு எடுத்து வந்திருக்கக் கூடாதா? மிகவும் களைத்துப் போயிருக்கிறீர்களே'' என்று சேரமன்னன் கேட்டான்: பாண்டிய குமாரனின் உடல்நிலையைப் பற்றிய கவலையுடன், தன் மகள் பாண்டியகுமாரனைச் சந்திக்காததால் பிரிவாற்றாமையால் மெலிந்திருப்பதனால் தன் மகளுக்கு ஏற்பட்ட வேதனையும் அவரிடம் சேர்ந்தன.

''ஓய்வா? மீண்டும் மதுரை அரியணையில் அமரும் வரை ஓய்வேது? அதிருக்கட்டும். தங்கள் திட்டப்படிக் கலங்கள் கட்டி முடிக்கப்பட்டனவா? தங்களால் தான் தாமதம். படையெடுப்புக்கு நாள் குறிப்பிட்டால் துடித்துக் கொண்டிருக்கும் வீர மறவர்களின் தினவெடுக்கும் தோள்களுக்கு உடனே விருந்தளிப்பேன்'' என்று பாண்டிய குமாரன் கூறியபோது அவன் விழிகள் வீரக்கனலை வீசின.

''இன்று போகலாம் விழிஞத்திற்கு. நூறு கலங்கள் ஆயத்தமாக இருக்கின்றன என அறிந்தேன்'' என்றார் சேரமன்னர்.

''இன்று என்ன - இப்போதே புறப்படுவோம்'' என்று அமரபுஜங்கன் துள்ளினான்.

விழிஞம் துறைமுகத்தை வந்தடைந்தவுடன் அமரபுஜங்கன் முகத்தில் தனி ஒளி வீசியது.

கொற்கையும், காயலும் மற்றும் பாண்டியநாட்டுத் துறைமுகங்கள் எல்லாம் பழம்பெருமை இழந்து, மணல் மேடிட்டுக் கலங்கள் என்றால் என்ன என்று தெரியாத நிலையில் இப்பொழுது திகழ்ந்தன.

விழிஞம் துறைமுகத்தைப் பார்த்தவுடன் வீரபாண்டியன் அமரபுஜங்கன் வியப்புற்றான். பெரும் அகழி போன்ற இடங்களில் உள்ள நீர் நிலைகளில் சுறுசுறுப்பாக மக்கள் சிறு தோணி முதல் பெரிய கலங்கள் வரை அமைத்துக் கொண்டிருந்தார்கள். நாவாய்களும், தோணிகளும், படகுகளும், கலங்களுமாக வெவ்வேறு இடங்களில் செப்பனிடுவதும் புதிய கலங்கள் கட்டுவதுமாக சுறுசுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் பொழுது அமரபுஜங்கனின் உள்ளத்தில் புத்துணர்ச்சி எழுந்தது.



அமரபுஜங்களை நோக்கி, ''பார்த்தாயா, இந்தக் கலங்களை எல்லாம்? இவை எதற்கு என்று தெரியுமா?'' என்று பாஸ்கர ரவிவர்மன் கேட்டார்.

''வெளிநாட்டிற்குப் பண்டங்களை ஏற்றிச் சென்று அங்கிருந்து பண்டங்களைக் கொண்டு நம் நாட்டிற்குச் சேர்ப்பதற்குக் கலங்கள் பயன்படும் என்பது தெரியும். இப்பொழுதோ அவற்றின் நோக்கம் வேறாகத்தான் இருக்கும்.'' என்று கூறிய அமரபுஜங்கன் இதழ்களில் மெல்லிய குறுநகை நெளிந்தது.

''சரியாகச் சொல்லிவிட்டாய். பண்டங்களை ஏற்றிச் செல்ல நமக்கு இப்பொழுது அவசியம் இல்லை. பண்டங்களைக் கொண்டு வருவது தான இப்பொழுது முக்கியம்'' என்றார் சேரமன்னர்.

''அப்படியென்றால் பண்டங்கள் கொண்டு வருவது மட்டுமா? பண்டங்களை ஏற்றிச் சென்றால் தானே அங்கிருந்து திரும்பக் கொண்டு வரமுடியும்'' என்றான் அமரபுஜங்கன்.

கலகலவென்று நகைத்தார் சேரமன்னர்.

''மகனே! பாண்டிய குலத்துப் பெரும் வீரராகத் திகழும் உன்னை மகனே என்று அழைப்பதைத் தவறாக நினைக்கவேண்டாம். நீ என் மருமகன் என்றாலும் உன்னை நான் என் மகனாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு மகனில்லாததால் ஒருவேளை சேரநாட்டையும் சேர்த்து ஆளக்கூடிய நிலைமை உனக்கு ஏற்படலாம். என் மகளுடைய உரிமை உனக்கும் தானே! அதற்குப் பலவகைகளிலும் பாதுகாப்பும், பக்கபலமும் கொண்டிருக்கவேண்டும். முதலில் நம் பொது விரோதியான சோழர்களை முறியடிக்க வேண்டும் என்பது தான் என்னுடைய நோக்கம். சோழர்களை முறியடிக்க வேண்டுமென்றால் தரைமார்க்கமாகப் படைவீரர்களை அழைத்துச் செல்வது என்பது இயலாத செயல் என்று எனது ஒற்றர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். சோழநாட்டின் படைபலம் நீ நினைப்பது போல் இல்லை. ஆங்காங்கேயுள்ள சோழநாட்டின் சிற்றரசர்களின் உதவி சோழர்களுக்கு எப்போதும் உண்டு.

''ஆயிரக்கணக்கான வீரர்களைத் திரட்டி எதிரிகளைத் தாக்கித் தடுத்து நிறுத்தவும் கொன்று குவிக்கவும் அவர்களால் முடியும். அதனால் ஆயிரக்கணக்கான அரண்களைக் கட்டி இருக்கிறார்கள்'' என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான் அமரபுஜங்கன்.

''சோழர்கள் எதிர்பாராத விதமாகத் திடீரென்று கடல்மூலம் அவர்களைத் தாக்குவதால் மட்டுமே அவர்களை வெல்ல முடியும். அதோ அங்கே நடக்கும் வேலைகளைப் பார்! அடுத்த பௌர்ணமிக்குள் இந்தக் கலங்கள் எல்லாம் ஆயத்தமாகிவிடும்.''

"உம்; கலங்கள் ஆயத்தமானவுடன் கலங்களிலே ஏறிச் செல்ல வீரர்களைத் திரட்டி விட்டீர்களா?" அமரபுஜங்கன் சுவாரசியமின்றிக் கேட்டான்.

"அதைப் பற்றிச் சொல்வதற்காகத் தான் உன்னை நான் இங்கே அழைத்து வந்திருக்கிறேன். இந்தக் கலங்கள் இங்கிருந்து புறப்படப் போகின்றன...."

"புறப்பட்டு..."

"புறப்பட்டுக் கடலிலே சஞ்சாரம் செய்யும். அங்கிருந்து பண்டங்களைக் கொண்டு வரும்."

அதைக்கேட்டவுடன் அமரபுஜங்கன் நகைத்தான். "நடுக்கடலிலே என்ன பொருள்கள் விளைகின்றன?" என்று கேட்டான்.

"ஆமாம். நடுக்கடலில் பண்டங்கள் விளையத்தான் போகின்றன! அமரபுஜங்கா? இதோ பார் நான் சொல்ல வேண்டியதை இந்தச் சோனக நாட்டவன் சொல்லப் போகிறான்" என்று சொல்லிக் கையைத் தட்டிக் காவலன் ஒருவனை அழைத்துச் சோனக நாட்டைச் சேர்ந்த ஒருவனை அழைத்து வருமாறு கட்டளையிட்டார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஆறு அடி உயரமும், திரண்ட புஜமும், மாமிசக் குன்று போன்ற தோற்றத்துடன் நீண்ட அங்கியை அணிந்த வழுக்கைத் தலைவன் ஒருவன் அங்கே வந்து எதிரே கால்களை அகட்டிக் கொண்டு கம்பீரமாக நின்றான். இயற்கையாகவே சிவந்த விழிகளை விட அளவுக்கும் அதிகமாகச் சிவந்த விழிகளுடன் சோனக நாட்டு வீரன் சேரமன்னன் பாஸ்கர ரவிவர்மனைப் பார்த்து வணங்கி அருகே நின்றிருந்த அமரபுஜங்கனை சந்தேகக் கண்களுடன் நோக்கினான்.

"ஓ! உனக்கு இவரைத் தெரியாதா? பாண்டிய நாட்டரசர். என் மருமகன்!" என்று அமரபுஜங்கனை அறிமுகப்படுத்தினார். அந்த வீரன் அமரபுஜங்கனுக்கு வணக்கம் தெரிவித்தான்.

"கலங்கள் கட்டும் பணி எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது?" என்று சேரமன்னர் அவனை நோக்கிக் கேட்டார்.

அவன் கொச்சையான தமிழில் மளமளவென்று பேசினான். அவன் பேச்சு எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. ஆனாலும் சேர மன்னனுக்கு அவனுடன் பேசிப் பழக்கம் ஏற்பட்டிருந்ததால் அவன் கூறியவற்றை அமரபுஜங்கனுக்குத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

வரும் பௌர்ணமியிலிருந்து தொடங்கி இந்தக் கலங்கள் நடுக்கடலை அடையும். ஒவ்வொரு கலத்திலும் நூறுபேர் இருப்பார்கள். ஒவ்வொரு



கலத்திற்கும் ஒரு தலைவன் இருப்பான். ஒவ்வொரு கலதத்திலும் தேவையான ஆயுதங்கள் நிறைந்திருக்கும். நான்கு நான்கு கலங்களாக அவை புறப்பட்டுச் செல்லும். எதிரிகளால் தாக்குதல் ஏற்பட்டால் திருப்பித் தாக்குவதற்கும் அப்படித் தாக்குவதற்கு இயலாதநிலை ஏற்படுமானால் தப்பிச் செல்வதற்கும் கூடிய வகையில் கலங்கள் சிறியதாகவும் விரைந்து செல்லக் கூடியவையாகவும், பாய் மரத்தின் உதவியில்லா விட்டாலும் துடுப்புப் போட்டுக் கடலிலே செலுத்தக் கூடியனவாயும் அவை அமைக்கப்பட்டு இருக்கின்றன" என்று அந்தச் சோனக நாட்டு வீரன் சொன்னதைச் சேர நாட்டு அரசர் பாஸ்கர ரவிவர்மன் அமரபுஜங்கனிடம் தெரிவித்தார்.

அமரபுஜங்கன் சோனக நாட்டு வீரனையே உற்று நோக்கியவாறு சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். எதற்காக சேர நாட்டு அரசர் இவனிடம் கலம்கட்டும் பணியையும் கலங்களில் வீரர்களை அமர்த்திச் செல்லும் பணியையும், வீரர்களைச் சேகரிக்கும் பணியையும் ஒப்படைத்திருக்கிறார் என்று அவனுக்குப் புரியவில்லை. இருந்தாலும் ஒருவித அச்சஉணர்வு அவன் மனத்தில் எழுந்தது. கடற்படையை மன்னர் உருவாக்குகிறார் என்று மட்டுமே அவன் அறிந்திருந்தான். அதை அரசரிடம் உறுதிப்படுத்தும் வகையில் அவரை நோக்கி, "வரும் பௌர்ணமி அன்று சேர நாட்டுக் கடற்படை நடுக்கடலிலே சென்று சோழநாட்டைத் தாக்கப் போகிறது; அதுதானே தங்கள் திட்டம்?" என்று கேட்டான் அமரபுஜங்கன்.

இல்லை என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தார் பாஸ்கர ரவிவர்மன். "இப்பொழுது கடற்படையை அனுப்பப்போகும் எண்ணமில்லை."

"கடலில் போர் புரிந்து கடல்போரைத் திறமையுடன் நடத்தும் அளவுக்கு நம்மிடம் வீரர்கள் இல்லை. வீரர்களை நாம் பழக்கவேண்டும். பாண்டிய நாட்டு வீரர்கள் சிலரை நீ அனுப்பிவை. பரம்பரை பரம்பரையாகக் கடலிலே சென்று கடற்போர் புரியும் சேர நாட்டு வீரர்கள் உள்கிராமங்களில் இப்பொழுது பணி ஏதுமில்லாமல் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் திரட்டுவோம். அதற்குச் சிறிது காலமாகும். நாம் இப்பொழுது செய்யப்போவது போர்த் தந்திரம். இப்பொழுது நாம் கடல் போருக்குத் திட்டமிடவில்லை. பொருளாதார முற்றுகையே நமது குறிக்கோள்" என்று கூறி அமரபுஜங்கனை கூர்ந்து நோக்கினார் சேர மன்னர்.

அமரபுஜங்கன் ஏதும் மறுமொழி கூறவில்லை. சேரமன்னருடன் மரக்கலங்களுக்குள் சென்று பார்க்கப் புறப்பட்டான். கலங்களுக்குள் செல்வதற்கு நூல் ஏணி ஒன்று இணைக்கப்பட்டிருந்தது. அதில் தடுமாறாமல் மேலே ஏறுவது என்பது தனிக்கலை. பாஸ்கர ரவிவர்ம அந்த முதிய

பருவத்திலும் மிக எளிதாக அந்நூல் ஏணியின் மீது ஏறி மேல்தளததை அடைந்தார்.

அமரபுஜங்கன் மிகவும் எச்சரிக்கையாக அடிமேல் அடிவைத்து ஏறிக் கொண்டிருந்தான். மேலே இருந்து சேரமன்னர் அவனைப் பார்த்து நகைத்தார். "எவ்வளவு கவனத்துடன் மேலே ஏற வேண்டியிருக்கிறது பார்த்தாயா?" என்றார்.

"ஆம்; நமக்குத் தெரியாத ஓர் இடத்தில் மிகவும் எச்சரிக்கையாகத் தான் செல்லவேண்டும். தெரியாத எந்தக் கலையையும் மிக எச்சரிக்கையாகத் தான் கற்றுப் பழகவேண்டும். தெரியாத எவரிடமும் எச்சரிக்கையாகத்தான் பேசவேண்டும் என என் தலைவி சொல்லியிருக்கிறாள். அந்த முறைப்படி நான் கவனமாக ஏறாவிட்டால் கடலில் அல்லவா விழுந்து விடுவேன்" என்று கூறி மெல்ல நகைத்தான் அமரபுஜங்கன். சிரிப்பு அப்போது தான் அவனிடம் பிறந்தது.

"நீந்தத் தெரியும் அல்லவா?" என்று ரவிவர்மன் கேட்டார்.

"தெரியாது" என்பதாகத் தலையசைத்தான் அமரபுஜங்கன். "மலைகள் நிறைந்த எங்கள் நாட்டில் நீர்நிலைகளை நாடி நான் எங்கே செல்வது, அதற்கு நேரமும் இல்லை" என்றான் அமரபுஜங்கன்.

"பாண்டிய நாட்டு மக்கள் முத்துக் குளிப்பதிலும், கடலில் வெகுதூரம் சென்று வலைவீசி மீன் பிடிப்பதிலும் வல்லவர்கள். நீந்தத் தெரியாத பாண்டிய நாட்டு மக்களே கிடையாது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் நீ சொல்வது வியப்பாய் இருக்கிறது" என்றார் சேரமன்னர்.

"இழந்த பழம்பெருமைகளுள் அதுவும் ஒன்று. பாண்டியநாட்டு முத்துக்களை சோழர் கவர்ந்து செல்கின்றனர். அதை முதலில் தடுத்து நிறுத்த வேண்டும்" என்றான்.

"வீரனுக்கு எல்லாக் கலைகளும் தெரிந்திருக்க வேண்டும். மலையேற வேண்டும். மரம் ஏறவேண்டும். நீச்சல் அறியவேண்டும்" என்றார் சேரமன்னர்.

அவனுடைய மௌனத்தைக் 'களுக்' கென்ற சிரிப்பொலி கலைத்தது. திடீரென நறுமணம் அங்கு சூழ்ந்தது. கடலிலிருந்து எழும் ஒருவித முடைநாற்றத்தை அந்த மணம் மாற்றியது.

"தந்தையே! நான் அவருக்கு இன்னும் சில நாட்களில் நீந்தக் கற்றுக் கொடுத்து விடுவேன்" என்ற இனிய சொற்கள் எங்கிருந்து வருகின்றன என்று திரும்பிப் பார்த்தான் அமரபுஜங்கன்.

சேர இளவரசி அவர்கள் அருகே நின்று கொண்டிருந்தாள்.



## 6

விழிஞத்தில் பாஸ்கர ரவிவர்மன் தங்குவதற்கு மாளிகை ஒன்று புதிதாகக் கட்டப்பட்டிருந்தது. ஒருநாள் காலைநேரத்தில் சேர நாட்டு ஒற்றர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் தெரிவித்த செய்தி கேட்ட சேரமன்னன் மிக மகிழ்ச்சியுற்றான்; அமரபுஜங்கனை அழைத்துக் கொண்டு விழிஞம் துறைமுகத்தை அடைந்தான். ஓர் இரவு ஓர் பகல் கழிந்தவுடன் தொலைவிலே மரக்கலங்கள் வருவது தெரிந்தன. மரக்கலங்களின் மேல் எந்தவிதக் கொடியும் பறக்கவில்லை. அமரபுஜங்கன் கேட்டான், "வில்லவர்கள் கொடியையாவது நீங்கள் பறக்க விட்டிருக்கலாம் அல்லவா?" என்று.

சேரமன்னன் மெல்ல நகைத்து, "இது எந்த நாட்டுக் கொடியும், எந்த நாட்டுக் கலமும் அன்று என்பதைத் தெரிவிக்கவே கொடியேதும் நாங்கள் பறக்கவிடவில்லை" என்று தெரிவித்து, "கலம் அருகே வரட்டும், நாம் கலத்திலே சென்று கலம் சுமந்து கொண்டு வந்திருக்கும் செல்வத்தைப் பார்ப்போம்" என்றான். அமரபுஜங்கனும் வியப்புடன் காத்திருந்தான்.

மெல்ல மெல்ல மரக்கலங்கள், கூடுதுறை அருகே வந்து நின்றன. கலத்தின் மேல்தளத்தில் இருந்து தளபதியும் மற்றவர்களும் கையை அசைத்து சேரமன்னரையும் அமரபுஜங்கனையும் ஆரவாரத்துடன் வரவேற்றனர். மெல்லக் கலத்தின் மேல்தளத்திற்கு ஏறிச் சென்று கலபதியுடன் பாஸ்கர ரவிவர்மன் சிறிதுநேரம் பேசிய பிறகு கலபதி சேரமன்னரையும் பாண்டிய மன்னரையும் கீழ்த்தளத்திலுள்ள தமது அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு அமர்ந்தவுடன் ஒரு பெரும் வெள்ளித்தட்டில் தங்க நாணயங்கள் குவிக்கப்பட்டு அவர் முன்னால் வைக்கப்பட்டன. மன்னரின் முகம் மலர்ந்தது. அவர் பரபரப்புடன், "இந்த நாணயங்கள் எங்கு கிடைத்தன?" என்று கேட்டார்.

"நாணயங்கள் மட்டுமல்ல, இன்னும் நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். மற்றப் பண்டங்களும் நடுக்கடலில் கிடைத்தன" என்றான் கலபதி.

பாஸ்கர ரவிவர்மனின் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. அமரபுஜங்க பாண்டியனும் இந்தப் பண்டங்களும் பொன்னும் பொருள்களும் எப்படி கிடைத்தன என்று ஆவலுடன் உற்று நோக்கியவாறு, கீழ்த்தளத்திற்கு இறங்கிச் சென்றான். அங்கே அவன் கண்ட காட்சி மேலும் ஆச்சரியத்தை அளித்தது. பட்டுத் துகிலும், பருத்தி ஆடைகளும் மற்றும் விதவிதமான பண்டங்களும் கலம் பூராவும் நிறைந்திருந்தன. ஒரு பெரும் பேழையில் ஆபரணங்கள் இருந்தன. மற்றொரு பெட்டியில் தங்க நாணயங்கள் இருந்தன. மன்னர் அந்த நாணயத்தை எடுத்துக் கையிலே பார்த்தார். புலிச்சின்னம் அதிலே பொறிக்கப் பட்டிருந்தது.

''இது யாருடைய நாணயம் என்று உனக்குத் தெரிகிறதா?'' என்று அமரபுஜங்கனை நோக்கிச் சேர மன்னர் கேட்டார். நாணயத்தின் இருபுறமும் திருப்பிப் பார்த்துவிட்டு ''இது சோழநாட்டு நாணயம்'' என்றான் அமரபுஜங்கன்.

''நமக்கு எப்படிக் கிடைத்தது?'' என்று மீண்டும் தன் வியப்பைத் தெரிவித்தவாறு கேட்டான்.

சேர அரசர் கூறிய வார்த்தைகளைக் கேட்டவுடன் அமரபுஜங்கனுக்கு ஒருபுறம் வியப்பும், மறுபுறம் ஒருவித அச்சமும் தோன்றின எனலாம். நடுக்கடலிலே சென்று கொண்டிருந்த சோழநாட்டு வணிகர்களின் கலங்களைச் சேர நாட்டுக் கலங்கள் மறித்து, அந்தக் கலங்களில் இருந்த பண்டங்களை எல்லாம் கைப்பற்றித் தமது கலங்களில் ஏற்றித் திரும்பி வந்திருக்கின்றன என்ற செய்தி அமரபுஜங்கனுக்கு வியப்பை அளித்தது.

''அவ்வளவு எளிதில் அந்தக் கலங்களை முறியடிக்க முடிந்ததா? அவற்றில் சோழவீரர்கள் இல்லையா?'' என்று அமரபுஜங்கன் கேட்டான்.

''சோழ வீரர்கள் யாருமில்லை; காவலுக்குச் சில வீரர்கள் இருந்தனர். ஆனால் அவர்களால் எங்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை'' என்று சேரமன்னனை நோக்கிக் கலபதி கூறினான்.

சேர மன்னனும் அமரபுஜங்கனும் கீழ்த்தளத்தில் இருந்து திரும்பி வந்து இளைப்பாற அமர்ந்த போது சேரமன்னர் சொன்னார்: ''அமரபுஜங்கா, பார்த்தாயா? இந்தக்கலத்தில் உள்ள பண்டங்கள் எல்லாம் நமது கருவூலத்தில் சேர்கின்றன. இவ்வளவு கலங்களைக் கட்டினோமே, கருவூலத்தில் நிதி குறைந்து விட்டதே என்று நான் கவலைப்பட்டது உனக்கு நினைவிருக்கலாம். இப்பொழுது அதை நிறைக்க சோழநாட்டுக் கலங்களிலிருந்து கொண்டு வந்த நான்கு மடங்கு பொருட்கள் பயன்படும். ஆனால்.....'' என்று சொல்லிச் சேரச் சக்கரவர்த்தி நிறுத்தினார்.

''என்ன? சொல்வதைப் பாதியிலேயே நிறுத்தி விட்டீர்களே?'' என்று அமரபுஜங்கன் கேட்டான்.

''இந்தப் பண்டங்களில் பாதி கலபதிக்கும், அவர்களுடைய ஆட்களுக்கும் சேரவேண்டும். அதுதான் எங்களுடைய ஒப்பந்தம்'' என்று கூறியவுடன் அமரபுஜங்கனுக்குச் சிறிது கோபம் வந்தது.

''அது எப்படி'' தாங்கள் பாதி கொடுக்கலாம் அவர்களுக்கு? கலம் தங்களுடையது. தங்களுடைய பக்கபலத்தால் தானே அவர்கள் நடுக்கடலில் கொள்ளை அடிக்க முடிந்தது. அப்படி இருக்கும் போது நீங்கள் இதுபோன்ற ஒப்பந்தத்தை மேற்கொண்டது சரியில்லை என்று நினைக்கிறேன்'' என்றான்.



சேரமன்னர் மெல்லிய குரலில் சொன்னார்: ''அமரபுஜங்கா, முதலில் நாம் இப்படித்தான் விட்டுப் பிடிக்கவேண்டும். பாதி தருகிறேன் என்று சொன்னால் தான் அவர்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவார்கள். மாதக்கணக்கிலே அவர்கள் நடுக்கடலில் சுற்றி அலைந்து கொண்டிருக்கும் போது நம்பிக்கையுடன் இருந்தால் தான் நமக்குப் பாதியாவது கிடைக்கும். கொள்ளையடித்த பண்டங்களை நம்மிடம் கொடுக்காமல் அவர்கள் வேறு எங்காவது திசை திருப்பிக் கொண்டு சென்று விட்டால், கலத்தையும் இழந்து விடுவோம், பண்டங்களையும் இழந்து விடுவோம்'' என்றார்.

''அப்படி என்றால் கொள்ளையடிப்பதற்கென்றே சேர நாட்டுக் கலங்களைப் பழக்கப்படுத்தி விடப்போகிறீர்களா?'' என்று அமரபுஜங்கன் கேட்டான்.

''இல்லை, இல்லை; சிறிது காலத்திற்கு இதுபோல் சோழக் கலங்களை வழி மறித்துப் பறிப்பதாக எண்ணம். சோழ வாணிபத்தை முறியடித்து வணிகர்களைத் திகைக்கச் செய்வது முதல்நோக்கம். பிறகு நமது படைவீரர்களைத் திரட்டிக் கொண்டு சோழநாட்டுக் கடற்கரையிலேயே திடீரெனச் சென்று இறங்கிக் கடற்கரை வழியாக உள்நாட்டில் படையெடுத்துச் செல்லும் ஓர் அருமையான திட்டத்தை நமது படைத்தளபதி தீட்டியிருக்கிறார்; அதுபோல உன்னுடைய படைகளும் தரைமார்க்கமாக வந்தால் இருவருமாகச் சேர்ந்து சோழ அரசை நிலைகுலையச் செய்து விடலாம். அதற்கு முன்னோடியாகத் தான் இப்படிச் சோழக் கலங்களை வழிமறித்து நிறுத்துவது என்று திட்டமிட்டேன். முதல் திட்டமே வெற்றி அடைந்துவிட்டது; கண்ணெதிரே பார்க்கிறாய்; பண்டமும், பொருளும் நமது கருவூலத்திற்குச் சென்று சேர்கின்றன.''

அமரபுஜங்கன் சிறிது நேரம் ஏதும் பேசவில்லை. அதே சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அவன் மனத்திலே பெரும்திட்டம் உருவாகியது. 'சேரமன்னர் சொல்வதும் ஒருவிதத்தில் சரியானது தான். இருவரும் இடுக்கிப்போல் தாக்கினால் ராஜராஜன் நிலைகுலைந்து விடுவான். நாம் அதற்குள் நம் படைகளை இன்னும் பெருக்கிக் கொண்டு, தக்க தருணம் பார்த்து மதுரையையும் கைப்பற்ற வேண்டும்' என்று முடிவு செய்தான்.

அமரபுஜங்கன் சேரமன்னரிடம் விடைபெற்றுச் செல்வதற்காக மாளிகைக்கு வந்தான். சேரமன்னர் பெரும் தட்டுகளில் பொன்னும், ஆடைகளும் மற்றும் விதவிதமான அணிவகைகளும் எடுத்து வைத்திருந்தார். மூன்று யானைகளை அவர் ஆயத்தப்படுத்தி வெளியே நிறுத்தியிருந்தார். வெகுமதியாகத் தரும் பண்டங்களை ஏற்றிச் செல்வதற்குப் பல

குதிரைகளையும், குதிரைகள் இழுக்கும் வண்டிகளையும் ஏற்பாடு செய்திருந்தார். அவற்றைப் பார்த்த அமரபுஜங்கனுடைய மெய் சிலிர்த்தது. சேரமன்னருடைய அன்பும், தன்மீது அவர் கொண்டுள்ள அக்கறையும் அவனுக்குப் புரிந்தன.

"அரசே வெகுவிரைவில் நமது திட்டங்களை நிறை வேற்ற வேண்டும். நான் ஆனைமலைக் காடுகளுக்குச் சென்றவுடன் முதலிலே செய்யப்போவது, மதுரையை நோக்கி எனது படைகளைச் செலுத்தி, மதுரை அரியணையில் சென்று அமர்வது தான். இதை அறிந்தவுடன் சோழமன்னனுக்குக் கோபம் வரும்; அவன் ஒருவேளை தன் படைகளை மதுரையை நோக்கி அனுப்பினாலும் அனுப்பலாம்; அதுசமயம் என்ன செய்ய வேண்டும் என்பதை இப்பொழுதே நாம் முடிவு செய்யவேண்டும். படைகள் வந்தால் நான் எனது படைகளைக் கொண்டு சோழர் படைகளை முறியடிக்க முயல்வேன். அந்தச் சமயத்தில் சேரநாட்டிலிருந்தும் எனக்கு வீரர்கள் வேண்டும். முடிந்தால் அப்பொழுது சேரக்கலங்கள் சோழநாட்டுத் துறைமுகப் பட்டினங்களில் இறங்கி உள்நாட்டுப் போரைத் தொடங்கலாம். அதற்கு நீங்கள் வேண்டிய திட்டங்களை முடிவெடுத்து எனக்குச் செய்தி சொல்லி அனுப்புங்கள்; ஒவ்வொரு நாளையும் எந்தவிதச் செயலுமின்றி வீணே கடத்திக் கொண்டு போனால் நமக்குத்தான் பலம் குறைந்து வரும். சோழ மன்னனது பலம் பெருகும்" என்றான்.

"அன்புள்ள மகனே! உன்னுடைய வெற்றிதான் என்னுடைய வெற்றியும். பாண்டியர்கள் வளம் பொருந்தி நிமிர்ந்து நிற்கும் நாளை நான் எதிர்பார்க்கிறேன். எனது மகள் பாண்டிய நாட்டின் அரசியாக மதுரையிலே வீற்றிருக்கும் கோலாகல வைபவத்தைக் காணவே நான் துடித்துக் கொண்டிருக்கிறேன். நம் திட்டங்கள் சரிவர நிறைவேறும். உன்னிடமிருந்து செய்தி வந்தவுடனே சேர நாட்டுக் கலங்கள் சோழநாட்டுக் கடற்கரை ஓரத் துறைமுகங்களைத் தாக்கும் அது உறுதி" என்றான்.

## 7

விழிஞம் துறைமுகப் பகுதியிலிருந்து பண்டங்கள் அனைத்தையும் இறக்கியபிறகு, மரக்கலங்களிலே பணியாற்றியவர்கட்கு வேறு பணிகள் ஏதும் இல்லாததால் ஒய்வு எடுப்பதற்காக அவர்கள் நகரத்திற்குள் வந்தனர். வெவ்வேறு நாட்டைச் சேர்ந்தவர்களாதலால் சேர நாட்டு இயற்கை எழில் அவர்களைக் கவர்ந்தது. சிலர் அருகில் உள்ள கிராமங்களுக்குச் செல்ல முற்பட்டனர். அந்தக் கலத்தில் வந்த ஊமையன் மட்டும் என்ன செய்வது



என்று புரியாமல் துறைமுகத்திலிருந்து இறங்கித் தயங்கித் தயங்கி வெளியே நடந்து வந்தான். கலபதி அவனருகே வந்து, சைகை காட்டி எங்கே செல்கிறாய் என்று அவனைக் கேட்டார்.

"பொழுது போவதற்காக மலை வளங்களையெல்லாம் பார்த்து வரலாம் என்று புறப்பட்டேன்" என்று அவன் கூறினான்.

"எங்கு வேண்டுமானாலும் சுற்றித் திரும்பி வா. ஆனால் வரும் அமாவாசை நாளன்று இங்கே முக்கியமான ஒரு கூட்டம் இருக்கிறது. அடுத்து நமது பயணத்தை எந்தப் பகுதியில் தொடங்க வேண்டும் என்பதை அப்பொழுது முடிவு செய்வோம். அன்று நீ அவசியம் கூட்டத்திறகு வரவேண்டும்" என்று கூறி ஒரு முத்துமாலையை அவனிடம் கொடுத்தார்.

"இதை நீ இப்போது உன் இஷ்டம்போல் செலவு செய்ய வைத்துக் கொள். யாருக்காவது பரிசாகவும் கொடுக்கலாம்" என்று கண்களைச் சிமிட்டியவாறு கூறினார்.

ஊமையன் அந்த மாலையை வாங்கி ஆவல் நிறைந்த கண்களுடன் அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்து, மீண்டும் அதைத் தலைவரிடமே கொடுத்துச் சைகை மூலம் அவன் தெரிவித்தது, "எனக்கு எதற்கு இந்த முத்துமாலை? இதை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன். முன்பே நான் தங்களைக் கேட்டுக் கொண்டபடிச் சிறிது நாட்கள் நான் ஓய்வெடுத்து என் சகோதரியைக் காண ஊருக்குச் செல்லும்போது அவளுக்குச் சில புடவைகளும், சில ஆபரணங்களும் மட்டும் கொடுங்கள். இந்த மாலையை வைத்துக் கொண்டு நான் ஒன்றும் செய்யப்போவதில்லை" என்றான்.

கலபதி அவனை வியப்புடன், பார்த்து "முத்துமாலையை வேண்டாம் என்று சொல்வோரும் இருக்கிறார்களா? அதன் மதிப்பு உனக்குத் தெரியாது. ஆயிரம் பொன்னுக்கு மேல் அதன் மதிப்பு, என்றும் இது உனக்கு உதவும். இப்படிப்பட்ட மாலை பிறகு கிடைக்கவே கிடைக்காது. வைத்துக் கொள்" என்றான்.

ஊமையன் அந்த மாலையை வாங்கித் தன் கழுத்திலே அணிந்து கொண்டான். சூரிய ஒளியில் அந்த முத்துமாலை பளபளத்தது. ஓர் அரச குமாரன் அணிந்திருக்கும் ஆபரணம் போல் அது காட்சியளித்தது.

பலநாட்களாக முகமெல்லாம் வளர்ந்திருந்த ரோமத்தை மழித்துக் கொள்வதற்காக ஊமையன் அருகே இருந்த சாவடிக்குச் சென்றான். பிறகு நீராடி புதிய உடையை அணிந்து கொண்டு தன் கால்போன போக்கில் நடந்து சென்று கொண்டிருந்தான்.

விழிஞம் நகரின் எல்லையில் ஓர் அருவி சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. அருவிக் கரையிலே பத்துப் பன்னிரண்டு பேர் திறந்த வெளியில் பாறைகளில் முட்டுக் கொடுத்து பெரும் அண்டாக்களில் சோறாக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மிகவும் குதூகலமாக இருந்தார்கள். ஒவ்வொருவரும் திண்தோள்கள் படைத்தவர்களாக இருந்தார்கள். அவர்களுள் சில பெண்களும் இருந்தார்கள். சோறு கொதிக்கும் நேரத்தில் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். அதனால் எழும் சிரிப்பொலி அந்தப் பகுதியில் எதிரொலித்தது. ஊமையன் சிறிது நின்று அவர்களின் குதூகலப் பேச்சைக் கேட்டான். அந்தச் சொற்கள் ஊமையன் காதில் விழுந்தவுடன் அவனுக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அவன் பரபரப்புடன் அங்கே சென்றான். உடனே அந்தக் கூட்டத்திற்குள் சென்று விட்டால் அவர்கள் ஏதாவது தவறாக நினைக்கப் போகிறார்கள் என்ற எண்ணத்தில் ஓர் பாறையின் மறைவில் நின்று கொண்டு அங்கே நடக்கும் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

குதூகலமாகப் பேசிக் கொண்டிருக்கும் அந்தக் கூட்டத்தின் நடுவே ஒரு பெண் ஆடிக் கொண்டிருந்தாள். அவன் அருகே கீழே அமர்ந்திருந்த இளைஞன் ஒருவன் யாழ் எடுத்துப் பாடிக் கொண்டிருந்தான். பாட்டுக்கு ஏற்ப அவள் ஆடும் அழகை வட்டமாக இருந்து மற்றவர்கள் ரசித்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு முறையும் அவள் ஆடி முடிக்கும் பொழுது, பலமாகக் கரஒலி எழுப்பி, இன்னொரு ஆட்டம் என்று அவர்கள் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் பெண்ணும் சளைக்கவில்லை. பருவ எழில் பூத்து நிற்கும் பதினெட்டு வயது இளமங்கை அவள். நடனமாடுவதற்கு என்று சிறப்பாக உடை அணிந்திருக்க வில்லை. அவள் கச்சை அணியவில்லை. மார்பை மறைக்க ஓராடையும், இடையில் பாவாடை போன்ற ஆடையும் உடுத்திக் கொண்டு கிராமத் தாமரைபோல் காட்சியளித்தாள். கூந்தலை எடுத்து முடிந்திருந்தாள். அதில் காட்டுமலர் ஒன்றைச் சொருகியிருந்தாள். கையிலே ஒரு தந்தத்தாலான வளையலை அணிந்திருந்தாள். காலில் சதங்கை கட்டியிருந்தாள். முதல்நாள் தான் செம்பஞ்சுக் குழம்பு எடுத்துப் பாதங்களில் தீட்டியிருக்கவேண்டும். அது செக்கச் சிவந்து புத்தம் புதிய நிறத்தில் காட்சி அளித்தது. பச்சை நிறமேல் ஆடை மாந்தளிர் மேனிக்கு எடுப்பாக இருந்தது. நெற்றியிலே திலகமிட்டிருந்தாள். அவள் ஆடும் பொழுது, குலுங்கி அசையும் அவள் தனங்களும், துவளும் இடைகளும் ஊமையனை வெறிபிடிக்கச் செய்தன.



எவ்வளவு நாட்கள் நாம் இப்படியே கிராமங்களிலும், கடலிலும், கடல் பிராந்தியங்களிலும் சுற்றிக் கொண்டிருப்போம் என்று அவன் உள்ளம் குமுறியது. அவனுக்காக கிராமத்தில் அவன் சகோதரியின் மகள் பருவமடைந்து காத்துக் கொண்டிருப்பாள். ஊமையனைக் கிராமத்தை விட்டு எங்கும் செல்லவேண்டாம் என்று தான் அவன் சகோதரி கூறியிருந்தாள். ஆனால் சகோதரியின் கணவன் பொருளீட்ட வெளிநாடு செல்வதாகக் கூறி சென்றவன் பல ஆண்டுகளாகத் திரும்பி வரவில்லை. அவன் சகோதரி நிலத்தில் உழைத்து ஊமையனை ஆளாக்கினாள். மகளும் இப்போது வயதடைந்து விட்டாள். இனியும் தன் சகோதரியை வெளியே வேலைக்கு அனுப்ப அவன் விரும்பவில்லை. அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றப் பொருளீட்ட அந்தக் கிராமத்தில் உள்ள ஓர் வணிகரிடம் வேலைக்குச் சென்றான்.

வணிகர் தான் அவனைக் கடல் கடந்த நாடுகளுக்கு அழைத்துச் செல்வதாக வாக்களித்திருந்தார். அதற்காக ஓர் குறிப்பிட்ட தொகையையும் அவனுக்கு ஊதியமாகப் பேசியிருந்தார். குறிப்பிட்ட நாளில் கலத்திலேறி வணிகருடன் புறப்பட்டான். நடுக்கடலிலே தான் அத்தகைய விபத்து ஏற்பட்டது. ஊமையன் கொள்ளையருடன் சேர்ந்தான். அந்த வணிகர் என்ன ஆனார் என்று தெரியவில்லை. கிராமத்தில் அவனுடைய சகோதரியும், சகோதரியின் மகளும் காத்திருப்பார்கள். அந்த நினைவெல்லாம் வந்தபிறகு உடனே சோழநாட்டிற்கு விரைந்து ஓடிவிட வேண்டும் என்று தோன்றியது. அவன் உடல் சிலிர்த்தது.

மீண்டும் அந்தப்பெண் யாழுக்கேற்ப ஆடத் தொடங்கினாள். ஆனால் அவள் மிகவும் களைத்திருந்த படியால் சிறிது ஆடிவிட்டு அமர்ந்து விட்டாள். அவளருகே நெருங்கி வந்த வாலிபன் ஒருவன், "நீ இன்னும் ஒரு கூத்து ஆடி நான் பார்த்துத் தான் ஆகவேண்டும். நீ எழுந்து ஆடத்தான் வேண்டும்" என்றான்.

மார்பு அழுந்திப் பிதுங்க அவள் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். "என்னால் முடியாது" என்று அவள் கூறிவிட்டாள்.

"இதற்கே நீ சோர்ந்துவிட்டால், சேரமன்னர் முன்னால் நீ பல நாழிகை நேரம் ஆடி அவர் மனத்தைக் கவரவேண்டிய நிலைமை வந்தால் நீ இப்படித்தான் சோர்ந்து விடுவாயோ" என்று கேட்டான் அவன்.

மிகவும் அலட்சியமாக அந்த நாட்டியப்பெண் "சேரமன்னர் எதிரே ஆடும்போது அதைப் பார்த்துக் கொள்ளலாம். இப்போது என் கால்கள் துவள்கின்றன. என் இடைகள் கெஞ்சுகின்றன. என்னால் ஆடமுடியாது.

சோறு கொதித்து முடிந்திருந்தால் எடுத்து இலையில் போடு'' என்று மிகவும் கண்டிப்பாகப் பேசவும், அருகிலிருந்தவர்கள் கலகலவென்று சிரித்து, இளைஞனை நோக்கி, ''உன் பேச்சிற்கு ஒன்றும் மதிப்பேற்படவில்லை பார்த்தாயா? மிகவும் பெருமையாகச் சொல்லிக் கொள்வாய், 'நான் சொன்னால் செண்பகம் மறுவார்த்தை பேசமாட்டாள்' என்று. இப்போது உன்பேச்சு என்ன ஆச்சு?'' என்று வேடிக்கையாய்ச் சொல்லவும், அவனுக்குச் சீற்றம் மிகுந்தது. தன்னை அவள் அவமானப்படுத்தி விட்டது போல் அவன் உணர்ந்தான். அந்தக் கூட்டத்திற்கே தலைவன்போல் அவனிருந்தபடியால் மறுகணம் அவன் அவளை நோக்கிப் பாய்ந்து அவள் கரத்தை இழுத்து அவளைத் தூக்கி நிறுத்தி, ''நீ இப்பொழுது ஆடப் போகிறாயா இல்லையா' என்று கண்டிப்பாகக் கேட்டான். அவள் மிக எளிதில் அவன் கையை உதறி, அவன் முகத்தை நோக்கிப் பாராமல் மீண்டும் தரையிலே அமர்ந்து, ''உன்னுடைய வீரத்தையெல்லாம் உன் ஊரிலே வைத்துக்கொள். இங்கே நான் என் இஷ்டப்படித்தான் எதுவும் நடப்பேன். பிரியமில்லை என்றால் இப்போதே நான் திரும்பிப் போய்விடுகிறேன். எனக்கென்ன? என் ஆட்டத்தை ரசிப்பதற்கு ஆளில்லை என்றா நினைத்தாய்?'' என்று மிகக் கடுமையான குரலில் கேட்டாள்.

அந்த இளைஞன் மீண்டும் அவளை நோக்கி வசைமொழிகளைப் பொழிந்து, ''நீ இப்பொழுது ஆடாவிடில் நான் உன்னை ஆடவைப்பேன்'' என்றான்.

அவள் மிகவும் கேலி நிறைந்த குரல் எழுப்பி, ''உன்னால் ஆட வைக்கவே முடியாது. உன்னால் ஒருவரையும் ஒரு சுட்டு விரல் அசைவினால் ஏதும் செய்து விடமுடியாது. பிறரை அதட்டி, மிரட்டி, உருட்டியே காலத்தை ஓட்டும் நீ உன் அதிகாரத்தை உன்னிடமே வைத்துக்கொள்'' என்று சொல்லித் தரையில் சாய்ந்து கொண்டாள்.

அந்த இளைஞன் மிகுந்த கோபத்துடன் அவளைப் பிடித்துத் தூக்கி நிறுத்துவதற்காக அவளருகே குனிந்தான். அவள் கையைத் தொட முனைந்தபொழுது யாழை மீட்டிக் கொண்டிருந்த மற்றொரு இளைஞன் யாழைக் கீழே வைத்து விட்டு அவனருகே வந்து அவனைப் பிடித்து இழுத்துத் தள்ளி ''உனக்கே இது முறையாக இருக்கிறதா? ஒரு பருவப் பெண்ணைத் தொட்டு நிறுத்திப் பேசுவதற்கு நீ என்னதான் தலைவனாக இருந்தாலும் இது முறையாகாது'' என்று சொல்லவும், ஆத்திரம் மிகுந்த அந்த இளைஞன் யாழை மீட்டிய அந்த இளைஞனின் முகத்தில் பலமாக ஒரு குத்து விடக் கையை வீசினான். அந்தத் தாக்குதலை எதிர்பார்த்தவன் போல் யாழ் மீட்டுபவன், சற்று நகர்ந்து கொள்ளவும் வாலிபன் நிலை தடுமாற யாழ் மீட்டுபவன் அவன் மீது பாய்ந்தான். மறுகணம் இருவரும் மண்ணில் புரண்டனர். மற்றவர்கள்



என்ன செய்வது என்று அறியாத நேரத்தில் யாழ் மீட்டும் இளைஞனைக் கீழே தள்ளி, அவன் மார்பின் மீது வாலிபன் அமர்ந்ததைப் பார்தத ஊமையனால் அமைதியாக இருக்க முடியவில்லை. கூடியிருந்தவர்கள் ஒன்றும் செய்வதறியாது திகைத்து நின்றனர். ஊமையன் பாய்ந்து சென்று ஒரு கணத்திலே வாலிபன் தோளைப் பிடித்துத் தூக்கி மறுபுறம் அவனைத் தள்ளினான்.

ஏதோ ஒரு சிறு செடியைப் பறித்து எறிவது போல் அது தோன்றியது. அந்த வாலிபன் தொலைவிலே போய் விழுந்தான்.

## 8

சோழ மாமன்னர் ராஜராஜன் சிந்தனையில் மூழ்கியிருந்தார். படைத்தளபதி சற்று முன்பு தான் அவருடன் கலந்தாலோசித்து விட்டுச் சென்றிருந்தார். வல்லவரையர் வந்தியத்தேவனும், ராஜராஜனுடன் அமர்ந்திருந்து, மிகுந்த சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். காரணம் ஒற்றர்கள் கொண்டு வந்து சொன்ன செய்தி மட்டுமன்று; வணிகர்கள் கூட்டமாக வந்து கண்ணீர் சொரியக் கவலையுடன் கூறிய சம்பவங்கள் அவர் வேதனையை மிகுதிப்படுத்தின. சோழநாட்டினின்று சென்றிருந்த மரக்கலங்களிலிருந்து பண்டங்கள் அனைத்தும் சில கணத்தில் கொள்ளையடிக்கப்பட்டன என்பதை அவர்கள் விவரித்ததிலிருந்து அவருக்கு உறக்கம் வரவில்லை. முதலில் அச்செயல் கொள்ளையர்களுடையது என்று அவர் நம்பவில்லை. வேற்று நாட்டு அரசரின் படைக்கலங்கள் ஏதாவது வழிமறித்துப் பண்டங்களைக் கவர்ந்து சென்றிருக்கும் என்று எண்ணினார். ஆனால், வணிகர்கள் சிலர் கூறியதிலிருந்து கொள்ளைக் கூட்டத்தார் தான் அவ்வாறு செய்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்தார். அந்த மரக்கலங்களில் எந்தக் கொடியும் பறக்கவில்லை என்பதையும் அவர் கண்டு கொண்டார். ஆனால் ஓர் வணிகர் மட்டும் சொன்னார்: ''நான் ஓர் கொடியைக் கண்டேன். அதில் வெள்ளைத் துணியிலே கறுப்பு நிற வட்டம் ஒன்று இருந்தது. அது பார்ப்பதற்கே பயத்தையும், அருவருப்பையும் அளித்தது.''

ராஜராஜன் திருமந்திர ஓலை நாயகத்தை அழைத்து உடனே நாகைப்பட்டினத்துக்கு ஓர் உத்தரவை அனுப்பினார். அங்குள்ள அதிகாரிகள் வணிகர்களின் கலங்களை நேரில் சென்று பார்த்து அங்கே கொள்ளையர்கள் விட்டுச்சென்ற தடயங்கள் ஏதாவது தென்படுகின்றனவா என்று பார்த்துத் தகவல் சொல்லியனுப்புமாறு உத்தரவு இட்டார். பிறகு அனைவரையும்

அங்கிருந்து செல்ல அனுமதித்து விட்டு வந்தியத் தேவனுடன் அமர்ந்து ஆலோசனை புரியலானார்.

வந்தியத்தேவன் சொன்ன செய்தி அவருக்குச் சற்று ஆறுதலாயிருந்தது. புதிய ரகசியம் ஒன்றைக் கண்டுபிடித்தது போல் தோன்றியது. வந்தியத் தேவன் ஒற்றர்களின் தலைவனைச் சந்தித்து, மற்ற ஒற்றர்களையும் கலந்து பேசிய பிறகு தான் அந்தக் கருத்தை வெளியிட்டார்.

அண்டைக் காலமாக அமரபுஜங்க பாண்டியனுக்கு உறுதுணையாகக் கானகத்தில் வீரர்கள் பயிற்சி பெற்றுவரும் செய்தி ஒன்று. மற்றொன்று பாஸ்கர ரவிவர்மன் சேர நாட்டுக் கிராமப்புறங்களிலிருந்து, வில்லில் வல்ல இளைஞர்களைத் தமது புதியபடைக்குத் திரட்டிக் கொண்டிருப்பதாகவும் படைக்குப் புதுமுறையில் பயிற்சி அளிப்பதாகவும், குறிப்பாக அவர்களைக் கடலில் செல்லுமளவுக்குப் பழக்கப்படுத்துவதாகவும் கடற்படையை மிகவும் பலப்படுத்துவதாகவும் தான் கேள்விப்பட்ட மற்றொரு செய்தியையும் கூறினார்.

ராஜராஜன் வந்தியத்தேவனைப் பார்த்துக் கேட்டார்: "அப்படியென்றால் சேரமன்னர் பெரும் கடற்படையுடன் நம்மைத் தாக்குவார் என்று நினைக்கிறீர்களா?"

"சேரமன்னர் நம்மீது படையெடுத்து வருவதற்குக் காரணம் எதுவும் இல்லை. ஆனால் அருகே உள்ள கொங்கு மண்டலத்திலிருந்து சில பகுதிகளை நம்மிடமிருந்து மீட்க முனையலாம். அதற்குக் கடற்படைத் தேவை இல்லை. எதற்காகக் கலங்களை அவர் கட்டுகிறார் என்பது தான் எனக்குப் புரியவில்லை. ஒருவேளை நம்மைப் போன்று அயல்நாட்டுடன் வாணிபஞ் செய்து செல்வம் சேர்க்கப் பண்டங்களை ஏற்றிச் செல்வதற்காகக் கலங்களைக் கட்டலாம்" என்றார் வந்தியத்தேவன்.

"பண்டங்களை ஏற்றிச் செல்லும் கலத்திற்கும் படையெடுத்து வரும் கலத்திற்கும் அதிகவேற்றுமை உண்டு. அதை நாம் அறிய முயலவேண்டும். அதை அறியத் தக்க ஒற்றர்களை அனுப்பித் தெரிந்துகொண்டு வருமாறு செய்யவேண்டும்" என்று ராஜராஜன் கூறியவுடன் வந்தியத் தேவன், "நமது ஒற்றர்கள் குழுவினர் அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். சேரமன்னர் எந்த இடத்திலே மரக்கலங்களைக் கட்டுகிறார், எத்தகைய கலங்கள் அவை, அவற்றின் பலம் என்ன? என்பதை எல்லாம் கண்டறிவதற்குத் தக்கவர்களை அனுப்பியிருக்கிறார்கள்" என்றார்.

ராஜராஜன் பெருமூச்சு விட்டார். சிந்தனையிலாழ்ந்தார். பிறகு, "நாம் இன்னமும் கவனமாக இருத்தல்வேண்டும். நமது படைகளை மேலும் உறுதியாக, செம்மையாக நம்பிக்கை மிகுந்தவர்கள் நிறைந்ததாக



ஆக்கவேண்டும். இந்தப் பொழுதில் தாங்கள் சொந்த நாட்டிற்குப் போகிறேன் என்று சொல்கிறீர்கள்! சிறிது காலம் இங்கேயே இருந்து செல்லலாம். நாட்டு வளத்தைப் பற்றியும், அங்கே ஆட்சிமுறை எப்படி நடந்து வருகிறது என்பதைப் பற்றியும் தக்கவர்களை அனுப்பி அவ்வப்பொழுது தங்களுக்குச் செய்தியை அறிவிக்க ஏற்பாடு செய்யச் சொல்கிறேன்" என்றார்.

வந்தியத்தேவன் மெல்ல முறுவலித்து, "மகத நாட்டுச் சிற்றரசன் என்று என்னைச் சொல்வதை விட சோழநாட்டு இளவரசன் என்று சொல்லிவிடலாம் போலிருக்கிறது. இளையபிராட்டிக்கும் சோழநாட்டை விட்டு வர மனமில்லை. சோழநாட்டிற்கும் என்னை அனுப்ப மனம் வரவில்லை. மகதநாட்டை ஆளத்தக்கவரை அரசராக நியமித்து விடலாம் என்று தோன்றுகிறது" என்று வேடிக்கையாகச் சொன்னார்!

ராஜராஜன் அவருடைய பேச்சிலிருந்த உள் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவராக, "இளவரசர், அரசர் என்பனவெல்லாம் நம் மனத்தைப் பொறுத்தது. நாட்டு மக்களுக்கு நன்மை செய்யவேண்டும், நாட்டை வளப்படுத்த வேண்டும். அவர்களுடைய நன்மை தீமைகளில் நாம் நேரிடையே பங்கு கொள்ளவேண்டும். இவை தான் ஓர் அரசரின் முக்கிய கடமை. அதை எங்கிருந்து செய்தால் என்ன? மகத நாட்டிலிருந்து செய்தாலென்ன? சோழ நாட்டிலிருந்தே செய்தாலென்ன? இப்பொழுது நீர் என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். சோழநாட்டுச் சக்கரவர்த்தி என்று தான் என்னை எல்லாரும் கொண்டாடுகிறார்கள். தொண்டை மண்டலத்திற்கும், நடுநாட்டிற்கும் திருமுனைப்பாடி நாட்டிற்கும் நான் தான் சக்கரவர்த்தி. ஆனால் நான் அங்கே சென்று நேரிடையே ஆள்வதில்லை. அவர்களுடைய நன்மை தீமைகளைக் கேட்டறிந்து வேண்டிய வசதிகளையும் இங்கிருந்தே செய்து கொடுக்கிறேன். அதுபோன்று தாங்களும் செய்யலாமல்லவா?" என்று கூறியதற்கு வந்தியத்தேவன் ஒன்றும் மறுமொழி தரவில்லை.

ராஜராஜன் தக்க காரணம் கொண்டு தான் தன்னைத் தஞ்சையிலே இருக்குமாறு பணிக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டு, "அரசே! தாங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம். சேரமன்னனுடைய படைப் பெருக்கத்தைப் பற்றியும் அமரபுஜங்கன் மிக இரகசியமாக வீரர்களைச் சேர்த்து வருவதைப் பற்றியும் நானே நேரிடையே கவனித்து அவர்களை அடக்குவதற்கான வழிகளைச் செய்கிறேன்" என்றார், வந்தியத்தேவன்.

ராஜராஜன் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தவர், பிறகு வந்தியத்தேவன் பக்கம் திரும்பி, "வல்லவரையரே! தங்களிடம் ஒன்று தெரிவிக்க நீண்ட நாட்களாக நான் எண்ணம் கொண்டிருந்தேன். என

குமாரனும், தங்களுடைய அபிமான மகனுமான மதுராந்தகனுக்கு, இளவரசுப் பட்டம் சூட்டி அவனுக்குத் தங்களுடன் இருந்தே போர்ப் பயிற்சிகளையும், மற்றும் ஆட்சி முறைகளையும் பழக்கப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்ள நினைத்தேன். இனிமேல் என் சகோதரியின் அரவணைப்பிலேயே வளர்ந்து வரும் மதுராந்தகன், மேலும் போர்ப்பயிற்சியில் சிறந்து முன்னேற வேண்டும் என்ற ஆவல் எனக்கு இருக்கிறது. அதனால் ஒவ்வொரு போர்க்களத்திற்கும் அவனை நேரே அனுப்பி, போர்த்தந்திரங்களை, எதிரிகளின் தாக்குதலிலிருந்து எவ்வாறு தற்காத்துக் கொள்ளலாம், எப்படியெல்லாம் திருப்பித் தாக்கலாம் எனும் யுத்தமுறைகளைக் கண்கூடாக அறிய ஏற்பாடு செய்யவேண்டும். விரைவில் அதற்கேற்ற போர் ஒன்றை எதிர்பார்க்கிறேன். இளவரசன் மதுராந்தகன் பயிற்சிக்காகவே ஓர் யுத்தம் நிகழாதா என்று நான் நினைப்பதில் தவறில்லை! இப்பொழுதுள்ள சூழ்நிலையில் யுத்தம் வரத்தான் போகிறது. வல்லவரையரே! தாங்கள் மதுராந்தகனையும் தக்கவாறு பழக்கப்படுத்துங்கள்'' என்றார்.

வல்லவரையர் அவர் கூறியதை ஆமோதிப்பவர் போல், ''நானும் அதைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். மதுராந்தகனுக்கு உரிய வயது வந்து விட்டது. இளவரசுப் பட்டத்தை இப்பொழுதே நாம் சூட்டவேண்டும். கோலாகலமாக அந்த விழாவை நாம் கொண்டாட வேண்டும். அதற்குப் பிறகு நான் செல்லுமிடங்களுக்கெல்லாம் மதுராந்தகனையும் உடன் அழைத்துச் செல்கிறேன்'' என்றார்.

ராஜராஜனுக்கு அவருடைய சொல் பிடித்திருந்தது. உடனே மதுராந்தகனைக் காணவேண்டும் என்ற அவா எழுந்தது. பணியாட்களிடம் சொல்லி அனுப்பி, மதுராந்தகனை அழைத்து வருமாறு கட்டளையிட்டார்.

## 9

ராஜராஜ சோழ தேவர் வாழும் மாளிகையின் ஓர் மாடத்தின் மீது ராஜராஜ சோழனின் மகன் மதுராந்தகனுடன் இளைய பிராட்டியார் குந்தவை தேவியும் நின்றிருந்தார். இளைய பிராட்டியார் மதுராந்தகனுக்குத் தஞ்சை மாநகர எழிலைச் சுற்றிக் காட்டிக் கொண்டிருந்தார். தஞ்சை நகரத்தை விரிவுபடுத்திப் பலப்படுத்திய சோழ மன்னர்களின் பெருமையை அவள் மதுராந்தகனுக்கு எடுத்துக் கூறிக் கொண்டிருந்தாள்.

வாலிபப் பருவத்தின் நுழைவாசலில் நின்று கொண்டிருந்த மதுராந்தகன் பலமுறை தஞ்சை மாளிகையின் மேல்மாடத்தில் நின்று தனது



அத்தையாரின் ஆலோசனைகளைக் கேட்டுத் தனக்குத் தெரியாதவற்றைத் தெரிந்து கொண்டிருக்கிறான். ஆனால், அன்று இளைய பிராட்டியார் அவனை அழைத்து மீண்டும் ஒருமுறை தஞ்சையின் வனப்பைச் சுற்றிக் காட்டிய பொழுது அதில் ஏதோ ஒரு சிறப்பு இருக்கவேண்டும் என்று எண்ணிய அவன் இளைய பிராட்டியை நோக்கிக் கேட்டான்: ''அத்தை, இவ்வளவு பெரிய நகரத்தை நிர்மாணித்துச் சுற்றிலும் மதிலை எழுப்பியுள்ள தந்தையின் பெருமையை நினைக்கும் பொழுது எனக்கு மெய்சிலிர்க்கிறது. நானும் தந்தையைப் போல் பெரும் புகழ் எய்தவேண்டும் அதற்கு எனக்கு வழி காட்டுங்கள்'' என்றான்.

அவனை மெல்ல அணைத்து அவன் உச்சியை முகர்ந்து, ''மகனே மதுரா! உன்னை மிகப் பெருமையுடை யவனாக ஆக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தான் உன்னை என்னருகிலேயே வைத்துக் கொண்டிருக்கிறேன். தாயற்ற உனக்குத் தாயில்லை என்ற உணர்வு வரக்கூடாது என்ற எண்ணத்தில் உன்னை வளர்த்து வந்திருக்கிறேன். உனக்கு இளவரசுப் பட்டம் சூட்டவேண்டும் என்ற முடிவை உனது தந்தையார் எடுத்திருக்கிறார். நீ இனி என்னிடமே தங்கியிருக்க முடியாது. உனக்குத் திருமணம் நிச்சயிக்கப்படும். நீ பல தேசாந்திரங்களுக்குச் சென்று சுற்றிப் பார்த்து உலக அறிவை வளர்த்துக் கொள்ளும்படியாக நேரிடும். அதனால் தான் நான் இன்று உன்னை அழைத்து வந்து பல முக்கிய செய்திகளைத் தெரிவித்து, உன்னைச் சிறந்த வீர இளவரசனாக ஆக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பழைய கதைகளை எல்லாம் மீண்டும் ஒருமுறை சொன்னேன்'' என்றாள்.

மதுரன் கண்களில் நீர் துளிர்த்தது. ''அத்தை நான் இளவரசன் ஆனால் தங்கள் மாளிகையில் நான் வசிக்கக் கூடாதா? அது என்ன கட்டுப்பாடு? அதுபோன்ற கட்டுப்பாட்டையெல்லாம் நாம் மாற்றவேண்டும். விபரந்தெரிந்து எனக்குத் தந்தை, தாய் எல்லாம் தாங்கள் தான். வல்லவரையர் எனக்கு வாள்வீசக் கற்றுக் கொடுத்து யுத்தத் தந்திரங்களை எல்லாம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கியதில் இருந்து அவரைப் போல் மாவீரனாக ஆகவேண்டும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றியிருக்கிறது. நான் தந்தையைப் போல் புகழ் வாய்ந்தவனாகவும், வல்லவரையரைப் போல் வீரனாகவும் ஆகவேண்டும். தங்களை விட்டு என்றும் பிரியாமலும் இருக்க வேண்டும். அதற்கு எனக்கு நீங்கள் உறுதி கொடுக்கவேண்டும்'' என்றான்.

இளையபிராட்டி மெல்ல அவன் விழிநீரைத் துடைத்து, ''நீ உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிறாய் மதுரா! எல்லோரும் எப்போதும் சிறுகுழந்தையாக இருக்க முடியாது. என்றாவது ஒருநாள் நீ மாமன்னனாகத் தஞ்சை அரியணையில் அமரப்போகிறாய். அப்பொழுது உனக்கு ஏற்படும்

புகழுக்கெல்லாம் சிறு அளவாவது நான் காரணமாக இருந்தேன் என்று நீ நினைத்துக் கொண்டால் போதும். அதுவே நீ என் அருகிலிருப்பது போன்ற எண்ணத்தை உனக்குக் கொடுத்தால் போதும்'' என்றாள்.

மதுரான் இளைய பிராட்டியை நோக்கி, ''அத்தை, எனக்கு இளவரசர் பட்டம் சூட்டிய பிறகு என்னை வல்லவரையர் எங்கோ அழைத்துச் செல்லப் போகிறாராம். தந்தையிடம் பேசிக் கொண்டிருந்த பொழுது தந்தையுடைய அறிவுரைகள் என்னைப் பெரிதும் சிந்திக்க வைத்தன. அத்தை, நான் வல்லவரையருடன், பாண்டிய நாட்டை நோக்கிச் செல்லலாம் என்றிருக்கிறேன். போர்க்களத்தைப் பற்றிப் பலர் சொல்லக் கேட்டால் போதாது. களத்தை உடனே நான் காணவேண்டும் என்ற ஆவல் எனக்கு உண்டாகிறது. வாளெடுத்துச் சுழற்றி, எதிரிகளுடைய தலையைக் கொய்யவேண்டும் என்ற அவா உண்டாகிறது. நான் எப்படியெல்லாம் நடந்து கொள்ளவேண்டும் என்று அறிவுரை கூறுங்கள்'' என்றான் மதுரன்.

இளையபிராட்டி அவன் முதுகைத் தடவிக் கொடுத்தவாறு, ''மதுரா நீ போர்க்களங்களுக்கெல்லாம் செல்லத்தான் போகிறாய். பெரும் வெற்றி பெற்று, சோழநாட்டின் புலிக்கொடியை அங்கெல்லாம் நாட்டித் திரும்பப் போகிறாய். அதுவரையில் நீ பொறுமையுடனிருக்க வேண்டும். உனக்கு இளவரசுப் பட்டம் சூட்டிய பிறகு நீ புறப்படலாம். இப்பொழுது வல்லவரையர் மட்டும் தான் செல்கிறார்'' என்றாள்.

மதுரன் முகம் சிறுத்தது, கறுத்தது. ''அத்தை ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? ''சென்று வா'' ''வென்று வா'' என்று எனக்கு வெற்றி ஏற்படவேண்டும் என்று வழி கூட்டி அனுப்பாமல் 'இளவரசு பட்டம் பெற்ற பிறகு தான்' என்று தடை விதிக்கிறீர்களே நியாயமா?' இந்த ஒரு விஷயத்தில் நான் தங்கள் சொல்லை மீறப்போகிறேன்'' என்றான்.

''கூடாது, கூடாது அத்தையின் சொல்லை மீறக்கூடாது; அறிவுரைகளை ஏற்றுக் கொள்'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டு மதுரன் திரும்பினான். இளைய பிராட்டியும் திரும்பிப் பார்த்தாள்.

ராஜராஜன் நின்று கொண்டிருந்தான். ''மகனே! நிதானம்; தந்திரம்; திட்டமிடுதல் இவை தான் போர்வீரன் முதலில் கற்றுக்கொள்ள வேண்டியவை'' என்றார்.

''அதெப்படி ஓர் வீரன் நிதானத்தைக் கடைப்பிடிக்க முடியும். மிகவும் மெதுவாகச் செயல்பட்டால் அவனை வீழ்த்தி விட மாட்டார்களா, தந்தையே?'' என்று மதுரன் கேட்டான்.

''நிதானம் என்றால் மெதுவாகச் செயல்படுவது என்று பொருளன்று. சரியான தருணம் பார்த்துப் புலி பாய்வது போல்... எதிரியின் தாக்குதலைக்



கணித்துச் செயலாற்றல என்று பொருள். மதுரா, உன்னை என்னுடனே மரக்கலத்தில் கடல் கடந்த நாட்டிற்கு அழைத்துச் செல்ல முடிவு செய்திருக்கிறேன். பல அனுபவங்களை நீ கற்றுத் தேற வேண்டும்'' என்றார்.

இளையபிராட்டி புன்முறுவலுடன், ''மதுரனுக்கு அடித்தது யோகம். எடுத்த எடுப்பிலேயே கடலில் பயணம்!'' என்று கூறிவிட்டு, தன் சகோதரனை நோக்கி, ''இளவரசுப் பட்டம் சூட்டும்போது மதுரனுக்கு அபிஷேகப் பெயர் இட வேண்டுமல்லவா? பெயரை முடிவு செய்து விட்டாயா?'' என்று கேட்டாள்.

''தாங்கள்தான் நல்லதொரு பெயரைக் கூறவேண்டும். பாட்டனார் பெயரான சுந்தரன் என்று சூட்டலாமா? முப்பாட்டனாரான பராந்தகன் என்று சூட்டலாமா?'' என்று ராஜராஜன் கேட்டார்.

''அந்தப் பெயர்களெல்லாம் வேண்டாம். நான் முன்பே முடிவு செய்து வைத்திருக்கிறேன்'' என்றாள் இளையபிராட்டி.

''என்ன பெயர்ச் சொல்லுங்கள் பிராட்டி'' என்று ராஜராஜன் ஆவலுடன் கேட்டார்.

இளையபிராட்டி பெயரைக் கூறினாள் :

''இராஜேந்திரன்.''

அந்தப் பெயர் உலகெங்கும் ஒலிக்கும் பெயராகப் பிற்காலத்தில் மாறப்போகிறது என்ற உண்மை, இளைய பிராட்டிக்கு அப்பொழுது தெரியுமா!

## 10

சேரமன்னரின் சபை மண்டபத்தில் விறலியரும் அந்த யாழ் மீட்டும் இளைஞனும் வந்து நின்றார்கள். விறலிப் பெண் தலையைக் குனிந்து கொண்டிருந்தாள். சிறிதுநேரத்திற்கு முன்பு சோலையில் நடந்த கைகலப்பு மன்னனுக்குத் தெரிந்திருக்கிறது என்பதை அறிந்தவுடன் அவள் மிகவும் நாணமுற்றாள். ஊமையன், கூட்டத் தலைவனை ஒரு கணத்தில் தூக்கி எறிந்ததும், அவன் கீழே விழுந்து, எழுந்திருக்க முடியாமல் கால் எலும்பு முறிந்து படுத்திருப்பதும், சேர நாட்டுக் காவல் வீரர்கள் அங்கே வந்து கூட்டத்தவர் அனைவரையும் அரசர் முன்பு அழைத்து வந்ததையும் அவள் அறிவாள். ஆனால் அங்கே ஊமையனைக் காணவில்லை. அவன் வாய்பேச முடியாதவன் என்று அவளுக்குத் தெரியாது. அவன் தக்க சமயத்தில் வந்து காப்பாற்றி யிராவிடில் கூட்டத் தலைவன் தன்னை மானபங்கம் செய்திருப்பான். தன் பசிக்கு இரையாக்கியிருப்பான். பலநாட்களாகவே அவனுக்கு அவள் மீது ஒரு கண் உண்டு.

செண்பகம் கரூர் அருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்தவள். சேரமன்னர் எதிரே ஆடிப் பரிசு பெற வேண்டும் என்று விறலியர் ஆன செண்பகமும், அவளைச் சேர்ந்த கூட்டதாரும் முன்பே திட்டம் வகுத்திருந்தனர்.

சோழநாட்டின் ஒரு பகுதியான கொங்கு நாட்டிலிருந்து எல்லையைத் தாண்டிச் சேர நாடு செல்ல எல்லை வீரர்கள் எளிதில் அனுமதிப்பதில்லை.

விறலியர் கூட்டத்தார் தம்முன் ஆடிப் பாடி மகிழ்விக்க வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்த சேரமன்னன் அவர்களை அழைத்து வருமாறு கட்டளையிட்டிருந்தான். விறலியைப் பார்த்த உடனேயே சேரமன்னனுக்கு அவளுடைய அழகும், பருவ எழிலும் மனத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்தின. அவளுடைய ஆட்டத்திறமையை அறிந்து கொள்ளுமுன்பே, அவளுடைய அழகை ரசித்த மன்னன், அன்றே அவளுடைய நடனத்தைக் காண வேண்டுமென்ற ஆவல் கொண்டான். சேரநாட்டில் இல்லாத ஆடல் மங்கையரா? இருந்தாலும் புதுவித ஆட்டக் கலைகளைக் கற்றிருக்கும் அந்த மங்கையின் கலைத் திறமையைப் போற்றி ஆதரிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டான். மறுநாளே அரண்மனையில் அவள் ஆடுவதற்கு உத்தரவிட்டான்.

தன்னைப்பற்றி தான் எங்கிருந்து வந்திருக்கிறோம் என்பதைப்பற்றிச் சிறு சச்சரவு நேர்ந்தது. குழுத்தலைவன் கால் முறிந்து படுத்திருப்பதைப் பற்றியெல்லாம் மன்னர் வினவுவார் என்ற அச்சத்துடன் வந்த செண்பகத்திற்கு மன்னர் எதும் கேட்காதது வியப்பாய் இருந்தது. ஆனால், அவள் வந்த நோக்கமே, மாளிகையில் ஆடி மகிழ்விக்கவேண்டும், பிறகு சேரநாட்டின் முக்கிய இடங்களையெல்லாம் சுற்றிப் பார்க்கவேண்டும் என்ற நோக்கந்தான். அவள் பலவிதக் கூத்துக்களை அறிவாள். சேரநாட்டினின்று கூத்தர்கள் பலர் அவளுடைய கிராமத்திற்கு வந்து பலவகைக் கூத்துக்களின் இலட்சணங்களை அறிந்து செல்வர். அவற்றையெல்லாம் அரசர் முன் ஆடிக்காட்ட வேண்டும் என்ற அவா, சிறு வயதிலிருந்தே அவளுக்கு இருந்தது. இப்போது அவளுக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. சேரமன்னர் முன்னிலையில் சென்று ஆடிவரவேண்டும் என்று அவள் கிராமத்திலிருந்த பெரியவர் ஒருவர் கூறவும், சேரமன்னரின் அழைப்பில்லாமலேயே நடனக்குழு சோழநாட்டு எல்லையைத் தாண்டிப் புறப்பட்டு விட்டது.

சேரநாட்டில் தந்தங்கள் கிடைக்கும்; பலவித நறுமணப்பொருட்கள் கிடைக்கும்; அவற்றையெல்லாம் கொண்டுவந்து சோழநாட்டு வணிகர்களிடம் விற்றால் நிறையப் பணம் கிடைக்கும் என்ற எண்ணம் கூட்டத் தலைவனுக்கு இருந்தது. அவையெல்லாவற்றையும் விட இந்தக் கலைப் பயணத்தின் போது விறலிப்பெண் செண்பகத்தை அடைந்து விடவேண்டுமென்ற திட்டமும் அவனுக்கு இருந்தது. ஆனால் அது நிறைவேறாமல் அவன் இப்பொழுது கால் முறிந்து கிடக்கிறான்.



அவனுக்கு ஏற்பட்ட கால் முறிவு செண்பகத்திற்கு மகிழ்ச்சியை அளித்தது. 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டாள். அவனிடமுள்ள 'தானே' பெரியவன் என்ற ஆணவம், ஆரம்பமுதலே அவளுக்குப் பிடிக்காமல இருந்தது. இன்னும் போகப்போக தன்னிடம் எப்படியெல்லாம் தவறாக நடந்து கொள்வானோ என்ற பயமும் அவளிடம் இருந்தது. இப்பொழுது அந்தப் பயம் போய்விட்டது. அவன் காலை முறித்துப் போட்ட ஊமையனைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவல் அந்த விறலிப் பெண்ணுக்கு இருந்தது; ஊமையனைக் காணவில்லை; எப்படியும் அவனைச் சந்திக்க முடியுமென்ற எண்ணத்தில் அவள் மாளிகையை விட்டுப் புறப்பட்டாள்.

அவள் தங்குவதற்கு ஒரு சிறிய வீடு ஆற்றங்கரை ஓரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சேர நாட்டு இயற்கை வளங்களைக் கண்டு மகிழ்ந்த வண்ணம் அவள் நேரம் போவது தெரியாமல் ஆற்றங்கரை ஓரமாக அமர்ந்திருந்தாள். ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு சிறு படுகை. ஆற அமரக் குளிப்பதற்கு ஏற்ற இடம். சேர நாட்டு இளம் மங்கையர்கள், நீராடுவதில் எவ்வளவு ஆனந்தம் அடைந்தார்கள் என்பதை அவள் கண்டறிந்தாள்.

அப்பொழுது யாழ் மீட்டுபவனும் ஊமையனும் அங்கே வந்தார்கள். யாழ் மீட்டுபவன் செண்பகத்தை மாளிகைக்கு வருமாறு அழைத்தான்.

''நான் வரவில்லை; ஊமையனுடன் பேச வேண்டும்'' என்றாள் செண்பகம்.

அவளைச் சற்று நேரம் உற்று நோக்கிய யாழ் மீட்டுபவன், ''உனக்கென்ன திடீரென்று அவன் மீது அவ்வளவு அக்கறை?'' என்றான்.

''அவன் என்னைக் காப்பாற்றவில்லையா? என்னை மட்டுமென்ன, உன்னையும் தான்! உன் மார்பு மீது அவன் ஏறி உட்கார்ந்து கொண்டு, உன கழுத்தை நெறிக்கும் சமயத்தில் அவர் வந்து காப்பாற்றியிராவிடில் உன் உயிர் போயிருக்கும். அதற்காகவாவது நீ அவருக்கு நன்றி சொல்ல வேண்டாமா?'' என்றாள். அவன் உடனே மறுமொழி சொல்லவில்லை.

''அப்படி ஒன்றும் அவன் என் கழுத்தை நெறித்து இருக்க முடியாது. ஒரு கணத்தில் நான் எழுந்து அவனைக் கொன்றிருப்பேன்'' என்று வீராப்புடன் பேசினான். விறலி புரிந்து கொண்டுவிட்டாள். அவரை அழைப்பதற்கு அவனுக்கு விருப்பம் இல்லை. அதனால் ஏதோ சொல்லுகிறான் என்று தெரிந்து கொண்ட விறலி ஒன்றும் பேசாமல் தானே கையைத் தட்டினாள். ஊமையன் திரும்பிப் பார்த்தான். தன்னை யார் இப்படி அழைப்பது என்று முதலில்

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. விறலிப் பெண்தான் தன்னை அழைத்திருப்பாளென்று புரிந்துகொண்டு அவள் அருகே வந்தான். ஏதும் பேசாமல் மௌனமாய் நின்றான். அவன் விழிகள் அவளை உற்று நோக்கின. அவள் தான் பேசினாள்.

"நேற்றே தங்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்பினேன். அதற்குள் சேர நாட்டு வீரர்கள் எங்களை அழைத்துச் சென்று விட்டார்கள்; நீங்களும் எங்கோ சென்று விட்டீர்கள். புதிய ஊரில் எங்களைக் காப்பாற்றியதற்கு மிகவும் நன்றி" என்று கூறினாள்.

யாழ் மீட்டுபவனுக்கு அவள் பேசியது பிடிக்கவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டான். ஊமையன் பேசவில்லை. அவன் ஊமையன் என்று அவளுக்குத் தெரியாது. 'ஏனோ பேசாமல் கற்சிலை போல் நிற்கிறானே' என்று விறலி எண்ணினாள்.

"நாங்கள் இப்போது மாளிகைக்குச் செல்கிறோம். சேரமன்னர் முன்பு ஆடப்போகிறோம். நீங்களும் வருகிறீர்களா?" என்று அவள் கேட்டாள். உடனே, யாழ் மீட்டுபவன், அவளை நோக்கி, "அவனை எதற்கு அழைக்கிறாய்? நாம் தான் ஆடப்போகிறோம். அவனும் அங்கு வந்து ஆடப் போகிறானா?" என்றான். அவன் குரலில் எரிச்சல் இருந்தது.

விறலி சிரித்தாள். "நாம்தான் ஆடப்போகிறோம் என்று நீ சொல்கிறாய், நான்தான் ஆடப்போகிறேன்; நீ ஆடப்போகிறாயா? உன்னை எதற்கு என்னுடன் அழைத்துச் செல்கிறேன் தெரியுமா?" என்று கேட்டாள்.

"நான் யாழ் மீட்டுகிறேன்."

"யாழில்லாமலேயே நான் ஆடமுடியும். ஆனால் யாழ் மீட்டிக் கொண்டும் உன்னால் ஆடமுடியாது. யாழ் இல்லாமலும் ஆடமுடியாது" என்று அவள் கோபத்துடன் கூறினாள். அவன் ஒன்றும் பேசவில்லை.

மாளிகையில் மன்னரும், மற்றும் முக்கியமானவர்கள் சிலரும் கூடியிருந்தனர். அவர்கள் எதிரே விறலி செண்பகம் ஆடினாள். சோழநாட்டு அருங்கலைகள் அனைத்தும் அவள் அறிந்திருந்த படியால் அவளுடைய நடனம் புதுமையாக இருந்தது. மன்னர் மகிழ்ச்சியால் துள்ளினார். அவள் ஆடும்போது அவள் ஆட்டத்தை ரசித்தார். அவளுடைய அழகை ரசித்தார். கணத்திற்குக் கணம் அவள் முகத்தில் ஏற்பட்ட பாவத்தைக் கண்டு அவர் உள்ளத்திலே பெரும் கிளர்ச்சியெழுந்தது. அவளை அரசவை ஆடலணங்காக நியமிக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் எழுந்தது. ஆனால் சோழநாட்டிலிருந்து அவள் வந்திருக்கிறாளென்று சிறிது நேரத்திற்கு முன்பு ஒற்றர் தலைவர் தெரிவித்தது அவர் நினைவுக்கு வந்தது. ஒருவேளை அவள்



சேரநாட்டின் இரகசியங்களை அறிந்து கொள்ள சோழநாட்டிலிருந்து வந்திருப்பாளோ என்ற சந்தேகமும் அவருக்கு ஏற்பட்டது. "விறலி என்ன ரகசியத்தை அறிந்து விட முடியும்!" என்ற முடிவுக்கு வந்தது எல்லாரையும் சந்தேகக் கண்களுடன் பார்க்கக் கூடாது என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டார். எப்படியும் சில நாட்களாவது அவளை மாளிகையில் விருந்தினராக வைத்துக் கொண்டு அவள் ஆட்டத்தை ரசித்து, அத்துடன் அவளையும் ரசிக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. கலை அழகும், உடலழகும் சேரப்பெற்ற அவளுக்கு, முத்துமாலை ஒன்றைப் பரிசளித்தார். அவளுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து தருமாறு கட்டளையிட்டு, இரண்டு நாள்கள் கழித்து மீண்டும் மாளிகைக்கு வருமாறு கூறினார்.

அன்று இரவு விறலி உறங்கவில்லை. அவளுக்கு மீண்டும் ஊமையனைச் சந்திக்க வேண்டும், அவனுடன் பேசவேண்டுமென்ற ஆவல் துள்ளிக்கொண்டேயிருந்தது. அவன் பேசாமல் விழிகளால் பேசும் அழகை நினைத்து அவள் ஏங்கினாள். அவன் உடல் வலிமையையும், திரண்ட தோள்களையும் பார்க்கும்போதெல்லாம், அவனுடன் பேசிக்கொண்டேயிருக்க மாட்டோமா என்ற எண்ணம் ஏற்பட்டது.

மங்கிய நிலவொளியில் ஆற்றில் நீர் மெல்ல ஓடிக்கொண்டிருந்தது. அடுத்த துறையில் அந்த நேரத்திலும் சிலர் நீராடிக் கொண்டிருந்தார்கள். ஒரு துறைக்கும், மற்றொரு துறைக்கும் மறைப்பு இருந்ததால், யார் நீராடிக் கொண்டிருக்கிறார்களென்று தெரியவில்லை. தானும் குளிக்கலாமா என்ற எண்ணத்துடன் இருந்தவளுக்கு அவளருகே யாரோ வந்து நிற்கும் அரவம் கேட்டது. திரும்பிப் பார்த்துத் திடுக்கிட்டாள். காலையில் அரசர் முன் ஆடியபோது அங்கு இருந்த அதிகாரி ஒருவன் நின்றுகொண்டிருந்தான்.

அவன் அவளைப் பார்த்து மெல்ல நகைத்தான். "பெண்ணே! இந்தநேரத்தில் இங்கே ஏன் தனியே அமர்ந்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டவாறு அவள் அருகே வந்தான். விறலி திடுக்கிட்டு எழுந்து சற்று விலகி நின்று, "நீங்கள் யார்? நான் இங்கு இருப்பதைப் பற்றிக் கேட்க உங்களுக்கென்ன ஆவல்?" என்று சற்றுக் கோபமாகக் கேட்டாள்.

"என்னை யாரென்று உனக்குத் தெரியவில்லையா? உனக்கு முத்துமாலை பரிசாக அளிக்க அரசருக்கு யோசனை கூறியது யார் தெரியுமா? நான்தான். காலையில் என்னைப் பார்க்கவில்லையா? அப்பொழுதே, உன்னை அணைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆவலால் துடித்தேன். மன்னர் எதிரே அப்படிச் செய்தால் நன்றாக இருக்குமா?" என்று மோகத்தின் உச்சநிலையில் பிதற்றினான்.

விறலி சிரித்து, "ஓஹோ! மன்னர் எதிரே அப்படிச் செய்யக்கூட உனக்குத் துணிவு வருமா? அதுபோன்ற எண்ணம் தோன்றுவதே தவறு. அதை இப்போது சொல்வதற்கு உனக்கு வெட்கமாக இல்லையா?" என்றாள்.

அவன் கோபப்படாமல் சிரித்து, "உன் எதிரே எனக்கென்ன வெட்கம்? உன்மீது ஆசை கொண்டால் உடனே தெரிவிக்க வேண்டியது தான் நியாயம். நேரம் விரைந்து கொண்டேயிருக்கிறது. இன்றிரவு உன்னைச் சந்திக்க முடிவு செய்துவிட்டேன்" என்றான்.

செண்பகம் உறுதியான உள்ளம் உடையவள். வீரமுடையவள். சேர நாட்டு அதிகாரி ஒருவர் தன் எதிரே வந்து முறை தவறி அசட்டுத்தனமாகப் பேசுவதைக் கேட்டு அவளுக்குச் சிறிது வருத்தம் ஏற்பட்டது. செண்பகத்தின் மௌனத்தை அவன் சாதகமாக எடுத்துக் கொண்டான். இரவுவரைக் காத்திருக்க வேண்டாம் என்ற எண்ணத்தில் அவள் கரத்தைப் பிடித்து, இழுத்துத் தன்னுடன் இறுகச் சேர்த்து அணைத்துக் கொள்ள முயன்ற போது அவன் பின் தலையில் யாரோ கட்டையால் அடித்த அதிர்ச்சி ஏற்பட்டது. அவன் நிலைகுலைந்து விறலியை விட்டுவிட்டுத் திரும்பினான். ஊமையன் அங்கே நின்று கொண்டிருந்தான்.

## 11

தப்பினோம் பிழைத்தோம் என்று அங்கிருந்து ஓடிய அந்த அதிகாரி மறுநாள் சேர மன்னர் பாஸ்கர ரவிவர்மன் எதிரே சென்று, தனக்கு ஊமையனிடம் மிகுந்த சந்தேகம் இருப்பதாகவும், சோழநாட்டிற்கு அனுப்பி வைத்த ஒற்றர்கள் சில செய்திகளை அனுப்பியுள்ளனர் என்றும் கூறினார்.

ரவிவர்மன் மெல்ல நகைத்தார். "உனக்கு எல்லோர் மீதும் சந்தேகம் ஏற்படும். நீ ஏதாவது தவறு செய்திருப்பாய்; அதை மறைக்க உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்காமல் வீணே நல்லவர்களைச் சிக்கவைத்து விடுவாய். இதுதான் உன்னுடையப் பழைய சரித்திரம்" என்றார்.

"இல்லை, அரசே! நான் நடந்தவற்றைச் சொல்கிறேன். நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்" என்று தான் நடனமங்கையின் வீட்டருகே அமர்ந்திருந்த செய்தியைச் சிறிது மாற்றத்துடன் சொல்லத் தொடங்கினான்.

ரவிவர்மன் கோபத்துடன், "உன்னை யார் அங்கு செல்லச் சொன்னது?" என்று கேட்டார்.

"யாரும் சொல்லவில்லை. ஊமையனைத் தொடர்ந்து நான் சில செய்திகளை அறிய வேண்டி, அவன் எங்கு செல்கிறானோ, அங்கெல்லாம்



பின் தொடரலானேன். ஊமையன் விறலியர் வீட்டிற்குச் செல்வது தெரிந்தது. நான் அவனைப் பின்தொடர்ந்தேன். ஊமையன், அவள் வீட்டிற்குள் நுழையும் போதே அவள் மிகவும் குதூகலமாகக் குதித்துக் கொண்டு வந்து, அவனுடைய இரு கைகளையும் பற்றி, குடிலுக்குள் அழைத்துச் சென்றதைக் கண்டேன்" என்று சொல்லியவுடன், ரவிவர்மன் முகம் மாறியது. அதை ஓர் அதிகாரி கவனித்தார்.

"நானும் மறைந்திருந்து, குடிலின் வெளிப்புறத்தே நின்று, உள்ளே என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதை அறிய முயன்றேன்" என்று கூறிச் சற்று நிறுத்தினான்.

"அவர்கள் பிறர் அறியப் பகிரங்கமாகப் பேசிக் கொள்வார்களா? முட்டாளே நீ வீட்டின் வெளியிலிருந்து என்ன கேட்டு அறிந்திருக்க முடியும்" என்று மன்னர் சீறினார்.

"அரசே! நான் அதுபோன்ற காரியங்களை சரிவரச் செய்யாமல் இருப்பேனா? நான் குடிலுக்குள் நுழைந்து மறைந்து கொண்டேன். சொல்லவும் எனக்கு வெட்கமாக இருக்கிறது. சிறிதுநேரம் அவர்கள் பேசாமல இருந்ததன் காரணம் எனக்குப் புரிந்தது. தாங்கள் மனது வைத்து, பரிசு கொடுத்து அழைத்து வந்த விறலியை இந்த ஊமையன் தன் வசப்படுத்தி வருகிறான் என்று தெரிந்தவுடன் நான் அவன் மீது பாய்ந்தேன். இருவருக்கும் கைகலப்பு ஏற்பட்டது. ஆனால்....." என்று கூறி அவன் நிறுத்தி, தனது கன்னத்தில் ஒரு பகுதியைத் தடவிக் கொண்டவுடன், மன்னருக்குப் புரிந்து விட்டது.

"ஊமையன் உன்னை நன்றாகப் புடைத்து விட்டான், அல்லவா?" என்று கேட்டார்.

அதிகாரி தலையசைத்தார்.

"ஓர் அங்கம் சரியாக இல்லாவிடில் - ஆண்டவன் முழுபலத்தையும் அளிப்பார் என்று சொல்வார்கள். ஊமையன் வலுவான கரங்களைப் பெற்றிருக்கிறான். அவனுடைய ஒரு குத்து என்னை நிலை குலைய வைத்துவிட்டது. நான் அங்கிருந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து ஒத்தடம் கொடுத்துச் சற்று பேசும் நிலைக்கு வந்தவுடன் தங்களிடம் வந்தேன். தாங்கள், விறலியிடமும் ஊமையனிடமும் கவனத்துடன் இருக்க வேண்டும்" என்று கூறினான்.

ரவிவர்மன் மௌனமாக இருந்தார். அவருக்கு ஊமையனைப் பற்றிக் கவலையில்லை. அந்த நடனப்பெண் தன் மீது அன்பாக இருக்கிறாளா? என்ற சந்தேகம் வந்தது. அந்த அதிகாரியைப் போகச் சொல்லிவிட்டு, வேறு ஒரு காவல்காரனைக் கூப்பிட்டு, "அந்த விறலியை உடனே அழைத்து வா" என்றார்.

பாண்டியனோடு சேர்ந்து, சோழநாட்டின் மீது படையெடுத்துச் செல்லவேண்டிய பெரிய பொறுப்பு சேரமன்னனுக்கு இருக்கும் போது நாட்டிய பெண்ணோடு சல்லாபம் செய்ய அவருக்கு நேரமில்லை என்றாலும், சற்று மனம் மாறுவதற்கு அவர் இப்படிப்பட்ட களியாட்டங்களில் ஈடுபடுவது வழக்கம். அதனால் படையெடுக்கும் நாளைத் தளபதி சொல்வதற்கு முன்பு நாட்டிய மகளோடு சற்று மகிழ்ச்சியுடன் இருக்கலாமே என்று எண்ணியதன் விளைவு தான் இது.

அதிகாரி சென்ற சிறிது நேரம் கழித்து ஊமையன் அங்கே வந்தான்,

''இவன் ஏன் இங்கு வருகிறான்?'' என்று அவர் சற்று யோசித்தார், செய்கை மூலம், ''எதற்காக வந்தாய்?'' என்று கேட்டவுடன், அவன் செய்த சைகைகள், மன்னருக்குப் புரியவில்லை. அதனால் கலபதியை அழைத்து வருமாறு ஒரு வீரனை அவர் அனுப்பினார். அதுவரையில் ஊமையனை வெளியே இருக்குமாறு பணித்தார். விறலியை அழைத்து வருமாறு சொன்னால், ஊமையன் வந்து நிற்கிறான். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. 'உண்மையிலேயே விறலியர் மகளுக்கும், ஊமையனுக்கும் தொடர்பு இருக்கவேண்டும்' என்று நினைத்தார். ''ஏன் இந்தப் பிரச்சினையெல்லாம்? சேரநாட்டில் இல்லாத ஆடும் அழகிகளா? இவளை எதற்காக இங்கு வரவழைத்தோம்? உடனே நாட்டை விட்டுப் போகுமாறு உத்தரவிட வேண்டியது தான்'' என்று எண்ணினார். ஊமையனிடம் சில தகவல்களைக் கேட்பதற்குக் கலபதியை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

கலபதி வந்து சேர்ந்தார். உடனடியாக ஊமையனைப் பற்றி அவரிடம் விசாரிக்காமல் மீண்டும் கலங்கள் எப்போது புறப்படுகின்றன என்ற கேட்டறிய முற்பட்டார். அவர் வகுத்துள்ள திட்டத்தைக் கலபதியும் அறிவார். இரண்டு விதங்களில் இயங்கப்போகும் அந்தத் திட்டத்தை எண்ணி அவரே பெருமிதமடைந்தார். சோழர்கள் தொலைந்தார்கள் என்று முடிவு செய்தார். கடற்கொள்ளைக்காரர்கள் சோழநாட்டுக் கலங்களையெல்லாம் ஆங்காங்கே தடுத்து நிறுத்துவதும், சேரனுடைய கடற்படை சோழநாட்டுக் கடற்கரை ஓரத்திலுள்ள துறைமுகங்களில் படைகளை இறக்கிவிட்டு, நாட்டுக்குள்ளேயே முன்னேறிச் செல்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதும் அவரது திட்டமாகும். சேரர் படை அவ்வாறு இயங்கும் போது, அமரபுஜங்க பாண்டியன் தனது படைவீரர்களுடன் உறையூரை நோக்கித் தனது படைகளைச் செலுத்திப் பிறகு தஞ்சையை அடைவதென்று திட்டமிட்டான். அதற்கான யானைகளும், வேல் எறிவதில் வல்லவர்களான வீரர்களும், சேர நாட்டு வீரர்படைகளும், தருணத்தை எதிர்பார்த்து ஆனைமலைக் காட்டின் எல்லை ஓரமாகக்



காத்திருந்தனர். அமரபுஜங்க பாண்டியனும், சேரர்களிடமிருந்து செய்தியை எதிர்பார்த்து அங்கு சென்று விட்டான். இப்போது கடற்படை புறப்படுவது ஒன்று தான் பாக்கி. கடற்படையின் பலத்தை அறிவதற்காகச் சேரமன்னர், கலபதியை வரவழைக்க எண்ணிய போது ஊமையனைப்பற்றி அறியும் பிரச்சினையும் சேர்ந்தது.

கலபதி, படைகளின் போக்கை விவரித்தார் ''கடற்படைகள் இன்னும் நான்கு நாள்களில் புறப்படுவதற்கு ஆயத்தமாகிவிடும்'' என்று கலபதி சொன்னார். ஆனால், கடற்படை வீரர்கள் சோர்வுற்றிருப்பதாகவும், நீண்ட நாள்களாக அவர்கள் தாய்நாட்டிற்குச் சொந்த ஊர்களுக்கு திரும்பாமல் கப்பலிலேயே இருந்ததால், அவர்கள் உற்சாகம் குறைந்திருப்ப தாகவும், ஒருவாரம் அவர்கள் சேரநாட்டின் பற்பல பகுதிகளுக்கு சென்று சுற்றிப் பார்த்துத் திரும்பினால், மீண்டும் உறுதியுடன் பல நாள்களுக்கு கடலிலேயே இருக்கும் அளவிற்குச் சக்தி பெற்று விடுவார்களென்றும் தெரிவித்தார்.

அரசர் கேட்டார் : ''படையெடுத்துச் செல்ல நாம் திட்டம் வகுத்திருக்கையில், வீரர்களை உள்நாட்டிற்குச் சென்று ஓய்வெடுத்து வருமாறு அனுப்பினால் தக்க தருணத்தில் அவர்கள் வருவார்களா?''

''நிச்சயம் வருவார்கள். அவர்களுக்கு உண்டான பொன்னும், பொருளும், அவர்கள் திரும்பி வந்தவுடன் கொடுக்கப்படும் என்று அறிவித்தால் அவர்கள் வந்துவிடுவது உறுதி. அத்துடன் எனக்கு ஒரு யோசனையும் தோன்றியது. அன்று தங்கள் சபையில் ஆடிய விறலியின் நாட்டியத்திற்கும் நீங்கள் ஏற்பாடு செய்தால் அல்லது கடலில் செல்லும் கலத்தோடு விறலியும் வருகிறாளென்று அறிவித்து விட்டால் போதும். இரண்டு நாள்களுக்கொரு முறை அவளுடைய நாட்டியத்தைக் கண்டுகளிக்கும் வாய்ப்பிருக்கிறது என்று தெரிவித்தால் போதும் நிச்சயமாகக் கடற்படை வீரர்கள், பன்மடங்கு உற்சாகத்துடன் உழைப்பார்கள்'' என்று கலபதி தெரிவித்தார்.

ரவிவர்மனுக்கு அவர் சொல்வது வியப்பாக இருந்தது. ''அவ்வளவு உறுதியாகக் கலபதி கூறுகிறாரே அதில் உண்மை இருக்குமோ?'' என்று ஐயமுற்றார். கலபதி கூறிக் கொண்டிருக்கும் போதே, அவரை வரவழைத்ததன் நோக்கம், ஊமையனைப் பற்றி அறிவதற்குத் தான் என்பதை நினைவு படுத்திக் கொண்ட அரசர், வெளியே நிற்கும் ஊமையனை உள்ளே அழைக்குமாறு பணித்தார். கலபதியும், அரசரும் பேசிக் கொண்டிருந்ததை ஊமையன் மிக அருகில் நின்று கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அது அவர்களுக்குத் தெரியாது. ஊமையனும் காவலன் அழைக்க மன்னர் எதிரே வந்து நின்றான்.

ஊமையனைப் பார்த்த கலபதி, புன்முறுவல் பூத்தார். ஊமையனுடைய பலத்தில் அவருக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது.

அரசர் கேட்டார்: ''ஊமையன் மீது எனக்குச் சிறிது சந்தேகம் ஏற்படுகிறது. அவனைப் பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன?''

''ஊமையனைப் பற்றி என்ன அபிப்பிராயம் கூறுவது? அவன் ஓர் அனாதை. சிறந்த பலவான். ஒரே ஆள் பலவீரர்களை எதிர்த்துத் தாக்கும் அளவு பலமும், புத்தியும் அவனிடம இருக்கின்றன. அதனால் தான் அவனை நம் கலத்தில் முக்கியமானவனாகக் கருதி வைத்திருக்கிறோம்'' என்றார்.

''அவனுக்கும் அந்த நாட்டிய பெண்ணுக்கும் என்ன தொடர்பு?'' என்று அரசர் கேட்டார்.

அப்போது கலபதி சற்று தலையைக் குனிந்து கொண்டு, ''ஒரு பெண்ணுடன் ஆணுக்கு என்ன தொடர்பு என்று நாம் ஒவ்வொருவரைப் பற்றியும் அறிந்து கொள்ள முடியுமா? கடற்படையில் இருக்கும் வீரர்களுக்கு பெண் என்றால் சற்று சபலம்தான். மாதக்கணக்காக அவர்கள் பெண் சுகத்தையே நாடாமல் இருக்கிறார்கள் என்பது தங்களுக்குத் தெரியாதா? தங்கள் உடலை, உயிரைத் துரும்பாக எண்ணி அவர்கள் கலத்தில் ஏறியவுடன் கடமை ஒன்றையே கருதி உழைக்கிறார்களே, அவர்களுடைய சொந்த ஆசாபாசங்களைப் பற்றியெல்லாம் நாம் விசாரணை செய்து கொண்டு சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தால் தக்க தருணத்தில் அவர்கள் நமக்கு விரோதிகளாக மாறி விடுவார்கள். அதனால் நான் அதிலெல்லாம் தலையிடுவதில்லை. அவர்களுடைய சுகபோகங்களை நிறைவேற்றி வைப்பதில் நம்மால் ஏதாவது செய்யமுடியுமானால், அதற்கு ஒத்துழைப்பேன்'' என்றார்.

கலபதியின இந்தப் பிரசங்கம் அரசருக்குப் பிடிக்கவில்லை. இத்துடன் அந்த விஷயத்தை விட்டு விடலாம் என்று எண்ணி, ''எதற்கும் ஊமையன் விஷயத்தில் எச்சரிக்கையாக இருங்கள்'' என்று சொன்னார். கலபதி தலையசைத்தார்.

ஊமையனுக்கு இவையெல்லாம் காதில் விழாது என்பது கலபதிக்கும் மன்னருக்கும் எண்ணம். ஆனால் ஊமையன் அனைத்தையும் அறிந்து கொண்டான்.

மீண்டும் துறைமுகத்திலிருந்து கலம் புறப்படும் நாளைப் பற்றி அவர்கள் விவாதித்து முடிவு செய்தார்கள். கலபதி புறப்படும் சமயத்தில், விறலி மகள் செண்பகம் அங்கே அழைத்து வரப்பட்டாள். விறலியின் முகம் வாடியிருந்தது. அவள் சாதாரண ஆடையுடுத்தியிருந்தாள். நாட்டிய



மாருவதற்கேற்ற உடையுடன் திகழவில்லை. அலங்காரம் எதும் இல்லை. மன்னர் எதிரே தலைகுனிந்து, பணிந்து நின்றாள்.

''செண்பகம் உன் முகத்தில் என்ன சோகம்?'' என்று மன்னர் அவள் பெயர் சொல்லி அழைத்துக் கேட்டார். அவள் விழிகளில் நீர தளும்பியது.

''நான் என்னுடைய ஊருக்குத் திரும்புவதற்கு அனுமதி கொடுங்கள், அரசே!'' என்று அவள் விம்மினாள்.

மன்னர் திடுக்கிட்டார். ''என்ன நடந்தது?''

''சேரநாட்டில் பெண்கள் மிக உயர்வாக மதிக்கப்படுவர்; கண்ணகிக்குக் கோயில் கட்டிய நாடு என்று எண்ணியிருந்தேன் மன்னா! ஆனால் இந்த நாட்டில் பெண்களுக்கு மதிப்பே இல்லை. ஒன்று உங்கள் ஊர் ஆண்களுக்கு பெண்களைப் பார்த்தே பழக்கமில்லாமல் இருக்கவேண்டும். அல்லது பெண்களுடன் பழகுவதற்குப் பண்பு தெரியாமல் இருக்கவேண்டும். என்னைப் பார்க்கும் ஒவ்வொரு ஆணுக்கும் காமவேகம் தான் முன் நிற்கிறதேயொழிய, கலையுணர்வே இல்லை. என் நாட்டியத்தை ரசிக்கத் தெரியவில்லை. நான் ஒரு நாட்டியப்பெண். கலைக்காகவே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனக்கும் மற்றவர்களைப் போல் இதயம் உண்டு. மற்ற பெண்களுக்கிருக்கும் உணர்வு உண்டு. எனக்கென்று தனி எண்ணம் உண்டு என்பதை அவர்கள் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். ஒவ்வொரு ஆடவனும், என்னைப் பார்க்கும்போதெல்லாம் தன்னுடைய சொந்த ஆசை நாயகிபோல் நினைத்துக் கொள்கிறான். அரசே! என்னை மறந்துவிடுங்கள். இந்த நாட்டை விட்டு நல்ல பாதுகாப்புடன் அனுப்பி வையுங்கள்'' என்றாள்.

மன்னரால் ஒன்றும் பேசமுடியவில்லை. அவள் ஏதோ தன்னையே குத்திக் காட்டுவது போல் அவருக்குக் குற்ற உணர்ச்சி ஏற்பட்டது.

''கடலிலே படை வீரர்களுக்கு அவள் மகிழ்வூட்டும் வகையில் நாட்டியமாட ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கலபதி கேட்கிறார். இவளோ, நாட்டை விட்டே வெளியேறுகிறேன் என்கிறாள். ஒருவேளை, தன்னுடைய அதிகாரிகள், வீரர்கள் அவளிடம் தவறாக நடந்து கொண்டிருப்பார்களோ என்று அவர் சந்தேகம் கொண்டார். விறலிப் பெண் இந்த நாட்டைவிட்டு வெளியேறினால், சேரநாட்டைப் பற்றிச் சோழநாட்டில் தவறான எண்ணம் பரவும் வகையில் கவிஞர்களைக் கொண்டு மதிப்புக் குறைவான பாடல்களைப் பாடிவிட்டால் அழியாத அவமானம் அல்லவா சேரநாட்டிற்கு ஏற்படும்? வருத்தத்துடன் இவளைப் பேசவிடக்கூடாது' என்ற எண்ணத்தில், மிகவும் இதமான குரலில், ''விறலி மகளே! உன் வேதனை எனக்குப் புரிகிறது. அதைப் பற்றி விசாரித்து அறிவதற்காகத் தான் உன்னை இங்கு வரவழைத்தேன். உனக்கும் ஊமையனுக்கும் உள்ள தொடர்பு பற்றி

இரண்டுவிதமான கருத்துகள் வந்தன. அதைப்பற்றிக் கேட்கத்தான் உன்னை இங்கு வரவழைத்தேன்'' என்றார்.

செண்பகம் அவரை நிமிர்ந்து நோக்கினாள். அந்தப் பார்வையில் சுட்டெரிக்கும் கனல் துள்ளி நின்றது. சேரமன்னர் என்ற அச்சம் அவளிடமில்லை.

''என் சொந்த விஷயம் அதைப்பற்றித் தாங்கள் கேட்பது நியாயமில்லை'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள் செண்பகம்.

இதுபோன்று அவர் எதிரே மறுத்துப் பேசியவர்கள், எதிர்த்துப் பேசியவர்கள் ஒருவரும் இல்லை. அவர் அவளை நோக்கிச் சற்று கடுமையான குரலில், ''எனக்குத் தெரிந்து கொள்ள உரிமை இல்லாவிடில் வேறு எவருக்கு உண்டு. உன் சோழநாட்டிலும் இப்படித்தானோ?'' என்று கேட்டார்.

செண்பகம் உடனே மறுமொழி கூறாமல் சற்று சிந்தித்து, ''மாமன்னரே! என்னைப் போன்ற நாட்டிய மங்கைக்கு எல்லா நாடுகளும் ஒரே சமம்தான். தவறு எந்தநாட்டில் நடந்தாலும் நான் சீறியெழுவேன்'' என்றாள்.

சோழநாட்டைப் பற்றிப் பெரிதாகப் பேசப்போகிறாள் என்று எதிர்பார்த்த சக்கரவர்த்தி அவளுடைய மறுமொழியால் ஏமாற்றமடைந்து, ''தவறு நடந்ததா? எங்கே நடந்தது? எப்படி நடந்தது?'' என்று பரபரப்புடன் கேட்டார்.

செண்பகம் நடந்தவற்றை விவரித்து, ''மாமன்னரே! என்னை என் சொந்த ஊர் செல்ல அனுமதியுங்கள். என் பாதங்கள் நடனமாடத் தயங்குகின்றன. என் விழிகள் அச்சத்தால் மருள்கின்றன. கடவுள் அருள் இருந்தால் நான் மீண்டும் வருகிறேன். என் திறமை முழுவதையும் செலுத்தி ஆடித் தருந்த மகிழ்ச்சியை அளிக்கிறேன். எனக்கு இப்பொழுது விடை கொடுங்கள்'' என்றாள். அவள் துணிவுடன் இருந்தாலும் கண்கள் கலங்கியிருந்தன.

சேரமன்னர் பாஸ்கர ரவிவர்மன் அவள் முகத்தை நோக்கியவாறிருந்தார். செண்பகம் ஒரு நெருப்பு என்பதைப் புரிந்து கொண்டார். தனது அதிகாரிகளின் தவறான செயல் அவரை ஏதும் பேசாமல் செய்துவிட்டது.

## 12

அவளுடைய விருப்பப்படி விறலியைத் தன் சொந்த ஊருக்குத் திரும்புமாறு சேரமன்னர் உத்தரவிட்டுவிட்டார். விறலி வணக்கம் தெரிவித்து அந்த இடத்தை விட்டு அகன்றாள். விறலி சென்றவுடன் கலபதி அரசரை நோக்கிக் கேட்டார்: ''அரசே! விறலியை ஏன் திரும்பிப் போக அனுமதித்து விட்டீர்கள்?''



மன்னர் மெல்ல முறுவல் பூத்து, ''விருப்பம் இல்லாதவர்களை இங்கே நிறுத்திவைத்துக் கொள்வதால் யாருக்கும் பலனில்லை. அதனால் அவளைப் போகுமாறு அனுமதித்து விட்டேன்.''

விறலி தன்னுடைய உடைமைகளைச் சிறு மூட்டையாகக் கட்டித் தலையிலே வைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினாள். விழிஞ்ஞத்தின் எல்லையைத் தாண்டிச் சிறிது தொலைவு சென்றிருப்பாள். ஊமையன் ஓர் இடத்தில் மறைந்திருந்தவன், திடீரென அவள் முன் தோன்றினான். ஊமையனைப் பார்த்த விறலி முதலில் திகைத்தாள்; பிறகு மெல்ல நகைத்தாள், கை சாடை மூலம் பேச முயன்றாள்.

ஊமையனும் தன்னுடைய சைகை மூலம் இந்த நாட்டை விட்டு அவள் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டான். ஆனால் செண்பகம் அதற்குச் சம்மதிக்கவில்லை.

''நான் உடனே சென்றாக வேண்டும்; என் வழியை விடு'' என்று வற்புறுத்திச் சொன்னாள்.

ஊமையன் அவள் கூறியதை ஏற்கவில்லை. விழிஞ்ஞத்திற்கே வருமாறும், எதற்கும் கவலைப்படாமல் இருக்குமாறும் வற்புறுத்தினான். இருவருக்கும் சிறிது நேரம் வாக்குவாதம் நடந்தது. ஊமையன் சைகை மூலமும், விறலி உரத்த குரலிலும் உரையாடிக் கொண்டிருந்தபோது, குதிரை மீது இரண்டு வீரர்கள் வந்தனர். அவர்கள் மிகவும் பலம் பொருந்தியவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்கள் இருவரும் ஊமையனைப் பிடித்துக் கொண்டு, குதிரை மீது பலவந்தமாக ஏற்ற முற்பட்டார்கள். விறலி செய்வதறியாது அங்கு ஏற்பட்ட குழப்பத்தை எண்ணித் திகைத்துக் கொண்டிருக்கையில் மற்றொரு குதிரை மீது, கலபதி வந்தார். அவருடன் நான்கு வீரர்கள் வந்தார்கள். சிவிகை ஒன்று பின்னால் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. சிவிகை சுமப்பவர்கள் மிக விரைவாக வந்து கொண்டிருந்தனர். சிவிகைக்குள்ளே யாரோ இருப்பதாக விறலி எண்ணினாள். ஆனால் அவள் அருகே வந்த பிறகு சிவிகையில் யாரும் இல்லையென்பதை அறிந்தாள். சிவிகை அவள் அருகில் வந்து நிறுத்தப்பட்டது. கலபதி அவளை நோக்கி, ''சிவிகையில் ஏறு'' என்று உத்தரவிட்டார். விறலிக்கு ஒன்றும் புரியவில்லை.

''எனக்குச் சிவிகை வேண்டாம். நான் நடந்துபோவதாக முடிவு செய்துவிட்டேன்.''

''நீ இப்போது எங்கே செல்லப் போகிறாய்?''

''என்னுடைய ஊருக்கு.''

''உன் ஊர் எங்கே இருக்கிறது?''

"இந்த எல்லையைத் தாண்டி இரவும் பகலும் காததூரம் நடந்தால் அமராவதி ஆறுவரும். அந்த ஆற்றின் கரையில் எனது கிராமம் இருக்கிறது. அங்கே போகிறேன்."

"ஏன் இந்த நாடு உனக்குப் பிடிக்கவில்லையா?"

"ஹா! இந்த நாட்டைப் பிடிக்காமல் என்ன? இந்த மனிதர்களைத் தான் பிடிக்கவில்லை."

"ஏன் இந்த மனிதர்கள் உன்னை என்ன செய்துவிட்டார்கள்."

விறலி பேச்சை வளர்த்த விரும்பவில்லை.

"வழிவிடுங்கள்; உங்களுடைய கேள்விகளுக்கு மறுமொழியை சேரமன்னரிடம் நான் கூறிவிட்டேன். அவரைக் கேட்டுக் கொள்ளுங்கள். ஏன் ஊமையனை இப்படிப் பலவந்தமாகப் பிடித்துக் குதிரை மீது ஏற்றிச் செல்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"ஊமையன் மீது எங்களுக்குச் சந்தேகம். அதனால் அவனைச் சிறையில் அடைப்பதற்கு அழைத்துச் செல்கிறார்கள்" என்றார் கலபதி.

"ஊமையன் மீது சந்தேகமா? ஊமையனைப் போலத் தக்க சமயத்தில் உதவக் கூடியவரும், நேர்மையானவருமான ஓர் உத்தமரை நான் இதுவரையில் பார்த்ததில்லை. என்னைக்கூட இந்த நாட்டை விட்டுப் போகவேண்டாமென்று தடுத்துத் திரும்புமாறு இப்பொழுது தான் அவர் வற்புறுத்திக் கொண்டிருந்தார். அப்படிப்பட்ட எண்ணம் உடையவரை நீங்கள் சந்தேகப்படுகிறீகளென்றால் எனக்கு வியப்பாக இருக்கிறது" என்றாள் விறலி செண்பகம்.

"ஏன்? வியப்பாக இருந்தால் அவனுக்காக நீ ஆதரவாக அரசரிடம் வழக்காடலாமே வருகிறாயா?" என்று கேட்டார் கலபதி.

விறலியால் ஏதும் உடனே மறுமொழி சொல்ல முடியவில்லை. மேலும் அவருடன் விவாதித்துக் கொண்டிருப்பதற்கும் நேரம் இல்லை. 'ஊமையன் யார்? நான் யார்? அவனுக்குப் பரிந்து எதற்காகப் பேசவேண்டும்?' என்ற எண்ணத்தில், அவள் நடக்கத் தொடங்கினாள்.

"ஏ, பெண்ணே! நான் கேட்கிறேன் நீ மறுமொழி பேசாமல் போய்க் கொண்டிருக்கிறாயே..." என்று கலபதி அதட்டினார்.

"நான் ஏ பெண்ணே! இல்லை, என் பெயர்ச் செண்பகம். அப்படியே அழைக்கலாம். எனக்கு இனி சேரநாட்டில் என்னவேலை? ஓர், உத்தமரைச் சிறையிலடைக்கும் நாட்டில் ஒரு கணங்கூடத் தங்கமாட்டேன்" என்று கூறியவாறு நடந்தாள்.

கலபதி அவளைத் தொடர்ந்து சென்று அவள் முன்னே நின்று, "செண்பகம், உனக்கு ஏராளமான பரிசுகள் தரப்போகிறேன்; மிகப் பாதுகாப்பான



இடத்தில் உன்னை இருக்க வைக்கிறேன். உன் நடனத்தை ரசித்து மகிழ நூற்றுக்கணக்கானவர்கள் காத்திருக்கிறார்கள். உன்னை அழைத்து வருவதாக வாக்களித்து விட்டேன்" என்று கெஞ்சும் குரலில் கேட்டார்.

செண்பகம் கலபதியை ஏற இறங்கப் பார்த்து, "மிகப் பாதுகாப்பான இடமா? சிறைச்சாலையைச் சொல்கிறீர்களா?" என்றாள், இதழில் குறும்புச் சிரிப்பு மிளிர.

"இல்லை; இல்லை சேர நாட்டுக் கலம் அயல்நாடுகளுக்கு புறப்படுகிறது. கலத்திலே நீ நாட்டியமாடி மகிழ்விக்க வேண்டும். அங்கு உனக்கு எந்தவித ஆபத்தும் நேராது. நான் உறுதி தருகிறேன்" என்றார்.

"எவ்வளவு பணம் தருவீர்கள்?" என்று செண்பகம் கேட்டாள்.

"நீ கேட்பதை!"

"நான் கேட்பதைத் தருவீர்களா?"

"ஓ! நிச்சயம் தருகிறேன்!"

"அப்படியென்றால், ஊமையனையும் கலத்தில் அழைத்து வாருங்கள்" என்றாள்.

கலபதி திகைப்புடன் அவளை உற்று நோக்கினார்.

## 13

**ரா**ஜராஜ சோழ மாமன்னரின் சபை மண்டபத்தில் மந்திராலோசனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அமைச்சர்களும், படைத்தளபதிகளும் கூடியிருந்தனர். ராஜராஜன் தன்னுடைய ஒற்றர்களையும் மற்ற அதிகாரிகளையும் மந்திராலோசனை சபைக்கு வருமாறு அழைத்திருந்தா. வல்லவரையர் வந்தியத்தேவனும் அங்கே மன்னரின் அழைப்பின் பேரில் வந்திருந்தார். சோழநாட்டையே கலங்கச் செய்து கொண்டிருந்த கடற்கொள்ளைச் சம்பவங்களைப் பற்றிய விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒவ்வொருவர் முகத்திலும் கவலை குடி கொண்டிருந்தது. சோழநாட்டிற்கு வரும் கலங்கள் யாவும் வழியிலேயே மறிக்கப்பட்டு, அதிலுள்ள பண்டங்கள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றன என்ற செய்தியை அவ்வப்போது வணிகர்கள் வந்து தெரிவித்த வண்ணமிருந்தனர். வணிகர்களிடையே பெரும் பீதி ஏற்பட்டிருந்தது. ஏற்றுமதி செய்ய நாகைத் துறைமுகத்திற்குப் பண்டங்கள் செல்வதில்லை. நெசவுத் தொழில் கூடங்கள் செயலற்றுக் கிடந்தன. கொள்ளையர்களை அடக்க இன்னும் வழிவகை

செய்யப்படவில்லை. வணிகர்களுடைய கோரிக்கைகள், கிளர்ச்சியாக மாறும்போல் தோன்றியது. இவை தாம் அன்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள்.

தஞ்சை மாளிகையின் வாயிலில் சீன நாட்டு வணிகர்கள் சிலர் மன்னரைக் காண்பதற்காகக் காத்திருந்தனர். மந்திராலோசனை மண்டபத்திற்கே அவர்களை அழைத்து மன்னர் பேசினார். சோழநாட்டினின்று செல்லும் சோழர் கலங்களன்றி, சோழநாட்டுத் துறைமுகத்தை விட்டுப் புறப்படும் கலங்கள் யாவும் வழி மறிக்கப்பட்டு, அதிலுள்ள பொருள்கள் அனைத்தையும் பறிக்கும் ஒரு கூட்டத்தாரைப் பற்றித் தகவல்களை அவர்கள் விவரித்தனர்.

ஒவ்வொருவரும் சபையில் தத்தம் கருத்துகளைத் தெரிவித்தனர். ''சோழகலங்கள், கடற்கொள்ளையரை பிடிப்பதற்குக் கடலிலே எப்பொழுதும் திரிந்து கொண்டிருக்க வேண்டும்'' என்பது ஒருவர் யோசனை.

ராஜராஜன் கேட்டார்: ''ஒன்றும் குறிக்கோள் இன்றி நமது கலங்கள் கடலிலேயே சென்று கொண்டிருந்தால் அதனால் கொள்ளையர்களைப் பிடித்து விட முடியுமா?''

''கொள்ளையர் கலங்களுக்கு அச்சம் ஏற்படுமல்லவா?'' என்று யோசனை கூறியவர் கருத்துத் தெரிவித்தார்.

சோழநாட்டினின்று சென்ற கலங்கள் திரும்பி வராததால் போதுமான கலங்கள் சோழநாட்டில் இல்லை என்பதையும் அமைச்சர் மண்டலத்தைச் சேர்ந்தவர் ஒருவர் தெரிவித்தார்.

''நம்மிடம் போதுமான கலங்களில்லாமல் கொள்ளையர்களை எப்படி எதிர்த்து நிற்கப் போகிறோம்? மன்னரின் கேள்வி.

அந்தப் போதில் முப்படைத் தலைவரில் ஒருவர் சிறு குறிப்பு ஒன்றை ஓலையில் எழுதி அரசரிடம் நீட்டினார். அதைப் பார்த்த மன்னரின் முகம் மலர்ந்தது. எப்படியும் நம்மால் கொள்ளையர்களை ஒடுக்கவிட முடியும் என்பதற்கான துணிவு அவர் உள்ளத்தில் பிறந்தது. நேருக்கு நேர் போரிடும் முறையென்றால், எதிரிகளைத் துவம்சப்படுத்தி விடமுடியும். இப்படி, மறைமுகமாக, கடல் நடுவே ஒன்றுமறியாத வணிகர்களைக் கொள்ளையடித்துச் செல்வதைத் தடுப்பதற்கு நாம் வேறுவிதமான திட்டங்களைக் கையாள வேண்டும் என்று அரசர் முடிவு செய்தார்.

அவர் சொன்னார்: ''மரக்கலக் கோரையாற்றின் கழிமுகத்தில் நம்முடையக் கலங்கள் கட்டி முடிக்கும் தறுவாயில் இருக்கின்றன. கலங்களைக் கட்டும் பணியை மிகவும் துரிதமாகச் செய்வதற்கான யோசனையைத் தனாதிபதி கூறியிருக்கிறார்'' என்று சக்கரவர்த்தி தெரிவித்தார்.



அந்தக் கலங்கள் கட்டி முடிவடைவதற்குள், கடற்கொள்ளையர்கள் மிகவும் விழிப்புடன் நமது கலங்களை நடுவழியில் தாக்கி, தடுத்து நிறுத்திப் பண்டங்களைக் கொள்ளையடித்துச் செல்வதற்குத் துணிவு எவ்வாறு ஏற்பட்டது? அவர்களுக்குப் பக்கபலமாக யாரோ இயங்க வேண்டும். பாண்டியர்களோ அல்லது வடபுலத்து நாட்டைச் சேர்ந்தவர்களோ இதில் ஏன் தலையிட்டிருக்கக் கூடாது?'' என்று வல்லவரையர் கேட்டார்.

ராஜராஜன் மௌனமாக இருந்தார். பிறகு, கூறினார்: ''இதுவும் நல்ல கேள்வி தான். கொள்ளையர்கள் என்பவர்கள் ஏதோ ஒருமுறை இருமுறை கலங்களை வழிமறித்துச் செல்வார்கள். நமக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து தொடர்ந்து நம் கலங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. கொள்ளையர் கலங்களில் பயிற்சி பெற்ற வீரர்கள் இருப்பதாகத் தெரிகிறது.''

''கலங்களில் என்ன கொடி பறக்கிறது என்று யாராவது கண்டு சொன்னார்களா?'' என்று வல்லவரையர் கேட்டார்.

''எந்தக் கொடியையும் கண்டதாகச் சொல்லவில்லை. ஆனால் ஒரு புதுவிதமான கருப்புத் துணியாலான கொடியொன்று பறந்து கொண்டிருப்பதை நமது வணிகர்கள் கண்டார்களாம். ஆனால் சமயத்தில் புலிக்கொடி கூட அந்தக் கலத்தில் பறந்ததாகத் தெரிவித்தார்கள். இதையெல்லாம் நோக்கும்போது, கொள்ளையர்கள் மிகவும் புத்திசாலித்தனமாகக் காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்றும் தெரிகிறது. நம்முடையக் கொடியையே பறக்க விட்டவாறு, நமது கலங்களை அவர்கள் கொள்ளையடிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதை அறியும் போது கொள்ளையருள் தந்திரசாலிகளும் இருக்கிறார்கள் எனத் தெரிகிறது'' என்று அரசர் சொன்னார்.

இதுவரை மௌனமாக இருந்த சோழநாட்டின் முதன்மைப் படைத்தளபதி கிருஷ்ணன் ராமன் இப்போது தனது எண்ணமொன்றைத் தெரிவித்தார். ''கடற்கொள்ளைத் திட்டமிட்டு நடப்பதற்கும், பாண்டிய நாட்டில் அமரபுஜங்கன் படைகளையெல்லாம் திரட்டி, ஆயத்தமான நிலையில் வைத்திருப்பதற்கும் ஏதாவது தொடர்பு இருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது. நேற்றுப் புதிதாகக் கிடைத்த தகவல்களின்படி ஆனைமலைக் காட்டிலிருந்து புறப்பட்டு சோழநாட்டு எல்லைப்பக்கமாக ஒரு பகுதிப்படைகளும், மதுரையை நோக்கி ஒரு பெரும் படையும் புறப்பட ஆயத்தமாக இருக்கின்றனவாம். அவர்கள் கட்டளை ஒன்றை எதிபார்த்துக் காத்திருப்பதாகத் தெரிகிறது'' என்று சொன்னார்.

ராஜராஜனுக்கு இந்தச் செய்தி வியப்பை அளித்தது. ''கடற் கொள்ளையர்களுக்கும், பாண்டியர் படையெடுப்பதற்கும் ஏதோ தொடர்பு

இருக்க வேண்டும்" என்று கூறினார். சிறிது யோசித்துப் பிறகு கிருஷ்ணன் ராமனை நோக்கி, "நீங்கள் பாண்டியர் படையெடுப்பை முறியடிப்பதற்கு என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"நமது படைகள் ஆயத்தமாக இருக்கின்றன. நீங்கள் கட்டளை யிட்டவுடன் புறப்பட்டுச் செல்ல வேண்டியது தான். ஆனால் நாம் எந்த இடத்தை நோக்கி அவர்களைத் தாக்குவது? அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் இருப்பதாகத் தெரியவில்லை" என்றார் கிருஷ்ணன் ராமன்.

சபை நடந்து கொண்டிருக்கும் போதே ஒற்றர் ஒருவர் வந்து கிருஷ்ணன் ராமனிடம் செய்தி ஒன்றைச் சொன்னார். கிருஷ்ணன் ராமன் மெல்ல எழுந்து ராஜராஜன் அருகே சென்று மிகவும் மெல்லிய குரலில் சில செய்திகளைத் தெரிவித்தார். அவை கேட்டு ராஜராஜனின் முகம் சிவந்தது. அவருடைய கை உடைவாளை நோக்கி சென்றது. அவர் துள்ளி எழுந்தார்.

"ஆஹா! இப்படியொரு சதித்திட்டம் நடக்கிறதா? நான் சந்தேகப்பட்டது உண்மையாகிவிட்டது. சரி, இதற்குண்டான வழியை ஆலோசிப்போம்" என்று கூறி நிறுத்தியவுடன் சபையிலுள்ளோர் அந்த முக்கியமான செய்தி என்ன என்றறிவதற்கான பரபரப்பைக் காட்டினர். ராஜராஜன் சொன்னார்: "சேரநாட்டில் விழிஞம் துறை முகத்திலிருந்து தான் ஏராளமான கடற்படைகள் பல திக்குகளிலும் செல்கின்றனவாம். நமது ஒற்றர் படையைச் சேர்ந்த ஒருவர் கட்டுமரத்தில் வந்து கொண்டிருக்கும் போது, துறைமுகத்தில் ஏராளமான மரக்கலங்கள் நிற்பதைக் கண்டதாகத் தெரிவித்தார்."

சோழமன்னர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். சபையை உடனே கலைந்து போகுமாறு சொல்லி, படைத்தளபதியையும் வந்தியத்தேவரையும் மட்டும் இருக்குமாறு சொல்லிவிட்டு, "நாம் கேள்விப்படும் செய்தி உண்மை தானா? சேரமன்னர் நம்மை எதிர்க்கிறாரா? என்பதைக் கண்டறியாமல் ஒரு முடிவுக்கு வரக்கூடாது. நாம் உடனடியாக சேரமன்னருக்குத் தூதுவர் ஒருவரை அனுப்புவோம். அதற்கான திட்டங்கள் வகுத்து என்னிடம் உடனே தெரிவியுங்கள்" என்றார்.

வந்தியத்தேவன் கேட்டார்: "சேரமன்னன் கடற்கொள்ளையருக்கு அபயம் அளித்தோ, ஆதரவு அளித்தோ நமக்கு விரோதமான செயல்களைப் புரியும் போது நாம் சேரமன்னனிடம் தூதுவனை அனுப்புவானேன்? நேரே நாம் படைகளை ஆயத்தப்படுத்தி, தாமதமின்றிச் சேரநாட்டின் மீது படையெடுத்துச் செல்ல வேண்டியது தானே?"



ராஜராஜன் தலையசைத்தார். "ஒற்றர்கள் சொன்ன செய்தியை மட்டும் வைத்துக் கொண்டு நாம் படையெடுத்து விடக்கூடாது. நமக்கு நேர்ந்துள்ள சங்கடங்களைச் சேர நாட்டு அரசரிடம் தெரிவிப்போம். கடற் கொள்ளையருடைய அட்டகாசத்திற்கு அவர் உடந்தையாக இருப்பதாகக் கூறாமல், மேற்குத் திசையிலிருந்து வரும் கடற் கொள்ளையரை நடுக்கடலிலேயே தடுத்து நிறுத்துவதற்கு அவருடைய உதவியை நாடுவதாகக் கேட்டுத் தூதுவரை அனுப்புவோம். அதற்கு அவர் மறுமொழி அனுப்பி உதவிபுரிய முன்வந்தால் அவர் நமது நண்பர். தக்க மறுமொழி கூறாவிட்டால் அவர் நமக்கு எதிரி என்று முடிவு செய்து மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்போம்."

வந்தியத்தேவனும் அரசர் முடிவை ஆமோதித்தார்.

## 14

**ஊ**மையனைக் குதிரை மீது ஏற்றிக் கொண்டு, குதிரைவீரர்கள் புடை சூழ, நேரே சிறைக் கூடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள் சேர நாட்டு வீரர்கள். ஊமையன் அவர்களை எதிர்க்கவில்லை. அவர்களிடமிருந்து விடுபடவும் முயலவில்லை. 'என்னதான் நடக்கிறது பார்ப்போம்' என்று எண்ணியவாறு அவன் மௌனமாக உட்கார்ந்திருந்தான். அவன் முயன்றிருந்தால் ஒரே நொடியில் அவர்களைத் தன் உடல் சிலிர்ப்பாலேயே கீழே தள்ளி மிதித்து இருப்பான். 'எங்கு செல்கிறோம்; என்பதை அமைதியாகப் பொறுத்திருந்து பார்ப்போம்' என்ற எண்ணத்துடன் அவன் நல்ல பிள்ளையைப் போல அவர்களுடன் சென்று கொண்டிருந்தான்.

நகரத்திற்கு வெளியே கடற்கரையை ஒட்டிய சிறைக்கோட்டத்தின் கதவுகள் திறக்கப்பட்டன. ஊமையனைச் சிறைக்கோட்டத்திற்குள் அழைத்துச் சென்றார்கள். சிறைக்கோட்டத்திலிருந்த தனியறை ஒன்றில் அவனைத் தள்ளித் தாளிட்டுவிட்டு அவர்கள் சென்று விட்டார்கள். அந்தச் சிறைக்கோட்டம் அமைதி நிறைந்து ஆரவாரமில்லாமல் இருந்தது. அருகே கடற்கரை இருக்கவேண்டும். அலை ஓசையைத் தவிர, வேறுவிதமான ஒலி எதுவும் கேட்கவில்லை. ஊமையனுக்கும் எதும் புரியவில்லை. இந்தச் சிறைகூடத்தில் எதற்காகத் தன்னை அடைத்திருக்கிறார்களென்று அவன் சிறிது யோசனை செய்து பார்த்தான்.

இரவு நெருங்கிக் கொண்டிருந்தது. இருளும், சமுத்திரக் கோஷமும் அவனுக்கு அச்சத்தை அளிக்கவில்லையென்றாலும், தனிமையுணர்

வொன்றை ஏற்படுத்தி. அந்த இடத்தில் இனியும் அமைதியாக இருந்தால் பயனில்லையென்று எண்ணியவனாய்த் தப்புவதற்கு வழி ஏதாவது இருக்கிறதா என்று சுற்றும் முற்றும் பார்த்தான். அங்கிருந்து தப்பிச் செல்வதைத் தவிர வேறுவழி அவனுக்குத் தோன்றவில்லை. கதவை நோக்கினான். பலமான மரக்கதவுகள், மேலே அண்ணாந்துப் பார்த்தால் உச்சியில் ஒரு சிறு சாளரமிருந்தது. சாளரத்திலே ஏறுவதற்கு ஏதும் வழி தெரியவில்லை. ஆனால் அவன் அங்கிருந்து எப்படி தப்பிச் செல்வது என்ற யோசனையில் இருந்தான். பசி அவன் வயிற்றைக் கிள்ளியது. அந்தக் கரடுமுரடான தரையில் சிறிது சாய்ந்து உட்கார்ந்த போது, கதவு தட்டப்படும் ஓசையும் பிறகு தாள் திறக்கப்படும் ஓசையும் கேட்டன. தீவர்த்தி வெளிச்சத்துடன் சிலர் கதவைத் திறந்தனர். ஒருவன் கரத்தில், சிறுபாத்திரத்தில் சோறு இருந்தது. இன்னொருவனுடைய கரத்தில், ஒரு கலையத்தில் தண்ணீர் இருந்தது. ஊமையனை நோக்கிச் சைகை மூலம் "சோற்றைத் தின்று விட்டு உடனே பாத்திரத்தைக் கொடுக்குமாறு" வந்த இருவரும் கூறினர்.

பிறகு அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கிண்டலாகச் சிரித்துக் கொண்டனர். ஊமையன் அவர்களைப் பார்த்து ஏதோ சைகை செய்தான். அந்தச் சைகை அவர்களுக்குப் புரியவில்லை.

"என்ன வேண்டுமென்று கேட்கிறாய் ஊமையா?" என்று கேட்டு அவர்கள் சிரித்தனர்.

கீழே படுப்பதற்குப் படுக்கை ஒன்று வேண்டுமென்று ஊமையன் சைகை மூலம் கேட்டான். ஆனால் அதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் சொன்ன ஒருதரக் குறைவான வார்த்தை ஊமையன் காதில் விழுந்து. அவனைக் கோபங்கொள்ளச் செய்தது.

"ஊமையன் தனக்குத் துணையாக ஒரு பெண்ணைக் கேட்கிறான்" என்றான் ஒரு காவலன். அதைக் கேட்டு மற்றொருவன் சிரித்தான்.

அவர்கள் கைகளில் தீவர்த்தியை வைத்துக் கொண்டு சிரித்தபோது அந்த தீவர்த்தி அங்குமிங்குமாக அலையும் போது அந்த ஒளியின் நிழலில் அவர்கள் உருவம் சிறைக்கொட்டடியில், நீண்டு வளர்ந்து மிகப்பயங்கரமாகக் காட்சியளித்தது. ஊமையன் அவர்களை மிகக் கோபமாகப் பார்த்தான். அவனது பார்வை அவர்களை நடுங்கச் செய்தது.

"சீக்கிரமாக இந்தச் சோற்றைத் தின்றுவிட்டுப் பாத்திரத்தைக் கொடு. நாங்கள் அப்படி உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம்" என்று அவர்கள் சொல்லிவிட்டு, தீவர்த்தியை அருகேயிருந்த ஒருவளைவில் சொருகிவிட்டு, தொலைவில் சென்று அமர்ந்து கொண்டனர். ஊமையன் அந்தக் களிச்சோற்றைத் தின்று தண்ணீரைக் குடித்துவிட்டு, மீதித்தண்ணீரை அப்படியே வைத்து, அதிலேயே கழுவிக் கொண்டான். சோறு தின்ற பாத்திரத்தைத் தடதடவென்று தட்டிவிட்டுச் சற்று ஓரமாக மறைந்து கொண்டான். காவலர்கள் இருவரும் ஊமையன் சோறு தின்று முடித்துவிட்டான் என்ற எண்ணத்தில் அங்கே நுழைந்து, ஊமையா, ஊமையா" என்று கூச்சல் போட்டனர். 'ஊமையன் ஓசைப்படாமல் சற்று மறைந்து நின்று கொண்டிருந்தான்.



"எங்கே உள்ளே யாரையும் காணவில்லை? ஒருவேளை ஊமையன் சோற்றைத் தின்றுவிட்டு இந்தப் பக்கமாக எங்காவது வெளியே சென்று விட்டானோ?" என்று ஒரு காவலன் கேட்டான்.

"ஊமையா, ஊமையா" என்று மற்றொருவன் குரல் கொடுத்தான்.

"ஒரு பாத்திரம் தானே இருக்கிறது? மற்றொரு பாத்திரத்தைக் காணவில்லையே?" என்று சொல்லி மற்றொருவன் உள்ளே நுழைந்தான். அவன் அந்த அறையின் நான்கு பக்கமும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, கையிலிருந்த தண்ணீரை அவன் முகத்தில் வீசிவிட்டு, எரிந்து கொண்டிருந்த தீவட்டியை எடுத்து ஒருகண நேரத்தில் இருவர் முகத்திலும் தேய்த்துவிட்டு, அவர்கள் "ஐயோ" வென்று அலறுவதற்குள் அங்கிருந்து வேகமாக ஓடினான். எந்தப்பக்கமாக ஓடுவது என்று வழி தெரியாமல் அவன் ஓடுவதற்கும், காவலர்கள் ஓவென்று கத்தியதால் வெளிவாசலிலிருந்து வீரர்கள் சப்தம் வந்த திக்கை நோக்கி ஓடி வருவதற்கும் சரியாக இருந்தது. வீரர்கள் வரும் பக்கம் தான் வெளியே செல்லும் வழியென்று அறிந்த ஊமையன் மறைந்திருந்த இடத்திலிருந்து அவ்வழியே வெளியேறினான். அவன் தன் முழுச்சக்தியையும் உபயோகித்து விரைந்து ஓடினான். உயரமான மதில்சுவரைத் தாண்டி, வேலிபோல் வளர்ந்திருந்த குட்டையான மரங்களையும், ஓரமாக இருந்த பாறைகளையும் தாண்டி, கடல்நீரில் 'பக்கெ'ன்று குதித்துவிட்டான். பெரும் அலைகளில் மிகவும் பழக்கப்பட்டவன் போல் அவன் நீந்திக் கொண்டே, அலைகள் குறைவான இடத்திற்கு வந்து சேர்ந்தபோது. அவன் கை சற்று துவண்டது; களைப்பு மேலிட்டது. தொலைவிலே ஒரு கலம் மெல்லச் சென்று கொண்டிருப்பது போல் தோன்றியது. சிறிது முயன்றால் நீந்தி, அந்தக் கலத்தை அடைந்துவிடலாம் என்று எண்ணியவாறு அவன் மெல்ல அந்தக் கலத்தை நோக்கி நீந்தினான். கலம் சென்று கொண்டிருந்தது.

கலத்திலேயிருந்து மெல்லிய குரலொலி கேட்பதும் தெரிந்தது. அந்தக் கலம் விழிஞத்தை விட்டுச் சென்று கொண்டிருப்பதை அறிந்தான், சிறிது

நேரத்திற்கெல்லாம் அவன் கலத்தின் அருகே நெருங்கி விட்டான். கலத்தின் மேல்தளத்தில் யாரும் இல்லை. காற்றின் துணையில் பாய்மரம் படபடத்துக் கொண்டிருந்தது. ஒருநூல் ஏணி கலத்திலிருந்து கடலில் தொங்கிக் கொண்டிருந்தது. தனக்காகவே அது அங்கிருப்பதாக அவன் உணர்ந்தான். நூல் ஏணியைப் பிடித்துக் கொண்டு மெல்ல மெல்ல ஏறிக் கலத்தின் தளத்திற்குச் சென்றுவிட்டான். கலத்தின் மேல்தளத்தில் ஒருவரும் இல்லை. ஒரு மூலையில் திசையைத் தெரிவிப்பதற்கான சுக்கானைப் பிடித்துக் கொண்டு ஒருவரும், மாலுமி ஒருவரும் பாய்மரக் கயிறுகளை ஒழுங்குப்படுத்தும் பணியாளர் ஒருவரும் அமர்ந்திருந்தனர். கீழ்த்தளத்தில் ஏதோ பாட்டும் கூத்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றுணர்ந்தான். அவன் மெல்லச் சந்தடி தெரியாமல் கீழ்த்தளத்தை எட்டிப் பார்த்தான்.

அது சரக்குகளை ஏற்றிச் செல்லும் கப்பலாகத் தோன்றவில்லை, ஒருபுறம் ஏராளமான வீரர்கள் அமர்ந்திருந்தனர். தீவர்த்தி ஆங்காங்கே இருந்து அங்கே ஒளியளித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொருவர் கரத்திலும் மது நிறைந்த மட்குடுவை இருந்தது. நடுவே ஒரு பெண் ஆடிக் கொண்டிருந்தாள். ஊமையன் பரபரப்புடன் ஆடிக் கொண்டிருப்பவள் யாரென்பதைத் தெரிந்துகொள்ள முயன்றான். பின்புறமிருந்து தான் அவள் உருவம் தெரிந்தது. அங்கே இருப்பவர்களுடைய கைத் தாளத்திற்கேற்ப அவள் ஆடினாள். பக்கவாத்தியங்கள் எதுவும் இல்லை. யாரும் பாடவில்லை. அவள் ஏதோ பலவந்தமாக ஆடுவது போல் தான் தோன்றியது. அவள் கால்களில் சதங்கை இல்லை. ஆடையும் புதிதாக இல்லை. தலையும் ஒழுங்காக வாரப்படவில்லை. காமவெறியின் உச்சநிலையில் அங்கே யிருப்பவர்கள் ஒலி எழுப்பிக் கொண்டிருந்தனர். அதற்கேற்றவாறு அவள் ஆடுவதும், ஆட்டத்தைச் சற்று நிறுத்தும் போது அங்கிருப்பவர்கள் கூக்குரலிடுவதுமாக, அந்த நிலையைக் கண்டு ஊமையன் அவள் யாராக இருக்கமுடியும் என்று அறிந்து கொள்வதற்காக அருகே தேடிப்பார்த்தான். ஒரு மட்கலயம் இருந்தது. அந்தக் கலயத்தை எடுத்து, கீழே இருப்பவர்கள் பக்கம் குறிபார்த்து வீசினான். மட்பாண்டம் தரையில் பட்டுச் சிதறித் தெறித்தது. ஏதோ மேலேயிருந்து விழுந்து சிதறியது கண்டு அனைவரும் திடுக்கிட்டு அங்குமிங்கும் பார்த்தனர். ஆடிக் கொண்டிருந்த பெண்ணும் மறுபுறம் திரும்பினாள். ஊமையன் திகைத்தான். ஆடிக் கொண்டிருந்தவள் விழிஞ்ஞத்தில் தான் பார்த்த அதே விறலிப்பெண்!



## 15

சேர மன்னனிடம் யாரைத் தூது அனுப்புவதென்று ராஜராஜன் அவையில் அனைவரும் யோசித்தனர். "இப்படித் தூது அனுப்புவது சரியன்று" என்றும் சிலர் பேசிக் கொண்டிருந்தனர்.

ஆனால், ராஜராஜனோ, "சேரமன்னர் நமக்கு எந்தவிதத்திலும் தீங்கு இழைக்கவில்லை. கடற்கொள்ளைக்காரர்கள் விஷயமாக சேரமன்னருக்கு முழுவிபரமும் அறியாமல் நாம் ஏன் சேரரைப் பகைத்துக் கொள்ளவேண்டும்" என்று சொல்லும்போது வல்லவரையர் குறுக்கிட்டு "அதெப்படிச் சொல்ல முடியும்? அமரபுஜங்கனுக்குத் தன்னுடைய மகளை அவர் மணம்புரிந்து கொடுத்திருக்கிறார் என்பது தங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

ராஜராஜன் மெல்ல நகைத்தார். "அமரபுஜங்கனுக்குத் தன் மகளை மணம் புரிந்து கொடுத்ததால் சேரமன்னர் நமக்கு விரோதியாகி விடமுடியுமா? சொல்லப்போனால் அமரபுஜங்கனே நமக்கு விரோதியல்லனே! அவன் ஏதோ காட்டில் வாழ்கிறான். அவன் விரும்பினால் மதுரை மணிமகுடத்தை நானே அவனுக்குச் சூட்டிவிடுவேன், எனக்கு அவன் அடங்கி நடக்கச் சம்மதித்தால், அவனுக்குச் சோழர் குலத்திலிருந்து அழகான பெண்ணையும் மணம்புரிந்து கொடுப்பேன். அப்படியிருக்கும்போது நம்முடைய விரோதியென்று சேரர்களை நாம் கொள்ளக்கூடாது" என்றார். அதைக்கேட்டு ராஜராஜனின் பரந்த மனப்பான்மையை அனைவரும் போற்றினர். சிறிதுநேரம் அங்கு அமைதி நிலவியது. ராஜராஜசோழ தேவரே மௌனத்தை நீக்கினார்.

"சேரமன்னருக்கு நாம் தூது அனுப்புவதன் நோக்கமே, அவர் அதை எப்படி ஏற்கிறார், எப்படி மறுமொழி கூறுகிறார் என்பதை அறியவே. ஒற்றர்கள் தெரிவித்ததிலிருந்து, சேரமன்னர் புதிதாக மரக்கலங்களைக் கட்டுகிறார் என்பதை அறிகிறோம். மரக்கலங்களைக் கட்டுவதால் மட்டும் அவர் நமக்கு விரோதியாகிவிட முடியாது. ஆனால், திடீரென்று ஏராளமான கலங்கள் கட்டுவதிலுள்ள நோக்கம் என்னவென்பதை இந்தத் தூது மூலம் நாம் அறிந்து கொள்ளமுடியும்" என்றார்.

அரசருடைய இந்த யோசனையை அனைவரும் ஏற்றனர். தூதுவராக யார் செல்வது என்ற கேள்வியெழுந்தது. வந்தியத்தேவன் தான் எழுந்து நின்று, "நான் சேரநாட்டிற்குத் தூது செல்கிறேன். தங்களுடைய நல்ல எண்ணத்தை எடுத்துச் செல்கிறேன். சேரமன்னருடைய இதயத்தின் பிரதிபலிப்பை அறிந்து கொண்டு வருகிறேன்" என்றார். ஆனால் சக்கரவர்த்தி அதற்கு உடன்படவில்லை.

''வல்லவரையரே! தாங்கள் மகதநாட்டுக் குறுநிலமன்னர். ஒரு குறுநில மன்னரென்றாலும் தாங்கள் அந்த நாட்டின் முழுச் சுதந்திரம் பெற்றவர் என்பதைத் தாங்கள் மறந்துவிடக்கூடாது. சோழநாட்டின் நன்மையைக் கருதி நீங்கள் தூது போவதாகச் சொல்லலாம். ஆனால், குறுநில மன்னர் ஒருவர் மற்றொரு மன்னருக்காகத் தூது சென்றதாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆகையால் தாங்கள் தூதுசெல்ல வேண்டாம். செல்பவர் பலசாலியாகவும், புத்தி கூர்மையுள்ளவராகவும் இருக்கவேண்டும். அந்தத் தகுதி தங்களுக்கு உண்டு என்றாலும் பல காரணங்களால் தங்களை அனுப்ப விரும்பவில்லை'' என்றார் மன்னர். வந்தியத்தேவனும் அரசர் கருத்தை ஆமோதித்தார்.

சிறிதுநேரம் சிந்தனையில் சபையோர் ஆழ்ந்திருந்தனர். சிலருடைய பெயர்களைத் தெரிவித்தனர். ராஜராஜன் அவர்கள் கருத்தை ஏற்கவில்லை.

தந்தையின் அருகே அமர்ந்திருந்த இளவரசன் மதுரன்,* ''சக்கரவர்த்தி அவர்களே! தூது செல்லும் பொறுப்பு எனக்குக் கிடைக்குமா?'' என்று இனிய குரலில் கேட்கவும் சபையோர் ஒரு கணம் திகைத்தனர். 'ஹா ஹா' என்ற குரல்கள் எழுந்தன. ராஜராஜ சோழதேவரின் மகனா கேட்கிறான்? புலிக்குப் பிறந்தது பூனையாகாது'' என்று பாராட்டைத் தெரிவித்தனர். எப்படியும் தன் திறமையை மதுரன் நிலைநாட்டி விடுவான் என்ற உறுதி சிலருக்கு இருந்தது. மன்னர் என்ன கூறப்போகிறாரோ என்று அனைவரும் அவரையே நோக்கினர்.

மன்னர் மெல்ல நகைத்து, ''அருமைக் குமரா! நீ தூது செல்வதற்கு இன்னும் சிறிது காலம் செல்லவேண்டும். நீ இன்னும் சோழநாட்டின் எல்லையையே தாண்டாதவன். சொல்லப்போனால், தஞ்சை எல்லையையே தாண்டாதவன். அதற்குள் நீ அவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்கவேண்டாம்'' என்று சொன்னவுடன் ஒரு கணத்தில் மதுரன் முகத்தில் சற்று ஏமாற்றக் குறிகள் தோன்றின.

ஏதோவொரு முடிவுக்கு வந்தவர்போல் வல்லவரையர் வந்தியத்தேவன், ''நான் ஒரு பெயரைச் சொல்கிறேன், அந்தப் பிள்ளை மிகவும் நல்லவன்; திறமைசாலி; புத்திசாலி. சோழநாட்டின் மீது மிக்க மதிப்புக் கொண்டவன். அவனை நாம் தூதராக அனுப்பலாம்'' என்று கூறினார்.

ராஜராஜன் சிறிது மௌனமாயிருந்தவர் வல்லவரையர் தெரிவிக்கும் தகுதி படைத்தவர் தனக்குத் தெரியாமல் யார் இருக்கக்கூடும் என்ற எண்ணத்துடன் வல்லவரையரைப் பொருள் பொதிந்த புன்னகையுடன் நோக்கி, ''வல்லவரையரே! யார் அந்த அருமையான பிள்ளை? இதுவரை எனக்குத் தெரியாதவன் - சொல்லுங்கள்'' என்றார்.

* பிற்காலத்தில் இளவரசர் பட்டம் ஏற்றபோது ராஜேந்திரன் என்று பெயா சூட்டப்பட்டது



''தங்களுக்குத் தெரிந்த பிள்ளை தான் - சங்கரத்தேவன்'' என்றார்.

உடனே ராஜராஜன் மிகவும் உற்சாகம் கொண்டவராக ''ஆமாம், ஆமாம் நானும் மறந்து விட்டேன். சங்கரத்தேவன் இந்த நாட்டிற்குச் சிறந்த தொண்டாற்றியவன். இப்போது சுமதியை மணந்து கொண்டு சுகமாக வாழ்கிறான் அல்லவா? அவனது அமைதியைச் சிறிது நாம் குலைப்போம்!'' என்று பொதுவாக வாய்விட்டுச் சிரித்துக் கொண்டே, ''சங்கரத்தேவனை உடனே வந்து என்னைச் சந்திக்கச் சொல்லுங்கள். இன்னும் இரண்டொரு நாள்களில் அவனுடைய பயணம் தொடங்கட்டும்'' என்று தெரிவித்தார்.

வல்லவரையர் இதை இளையபிராட்டியிடம் தெரிவித்த போது அவள், ''தாங்களே சென்றிருக்கலாம். சேரநாட்டையும் சுற்றி பார்த்தது போல இருக்கும். சோழநாட்டிற்கும் ஏற்ற செய்தியை அறிந்து வந்தது போலிருக்கும். பாவம், சங்கரத்தேவனை ஏன் அனுப்புகிறீர்கள்? இப்பொழுதுதான் அவன் சுமதியுடன் சோழநாட்டின் திருக்கோயில்களையெல்லாம் கண்டு வரவேண்டுமென்ற எண்ணத்தில் ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறான்'' என்றாள்.

''நீ சொல்வது போல் எனக்கும் தான் ஆசை. சேரநாட்டிற்குச் சென்று, மலைவளம் கண்டு அங்குள்ள திருத்தலங்களையெல்லாம் பார்த்து வரவேண்டுமென்று ஆசைதான். தந்தத்தாலான ஒரு வளையலை வாங்கிவந்து உனக்கு அணிவிக்க வேண்டுமென்ற பேராவா, எனக்கு நீண்ட நாட்களாக உண்டு. ஒரு புலியைக் கொன்று அதன் நகத்தைக் கொண்டு வந்து உன் கழுத்திலே மாங்கல்யத்துடன் சேர்த்துக் கட்டவேண்டுமென்ற எண்ணம் எனக்கு உண்டு. அந்த வீரதீரச் செயல்களைச் செய்வதற்கு ஏற்ற வயது இப்போது இல்லை. யானைத் தந்தத்தையாவது சேர மன்னரிடமிருந்து பரிசாகப் பெற்றுக் கொண்டு வரலாமென்று எண்ணினேன். அதற்கும் வழியில்லாமல் போய்விட்டது. நீ தான் உன் சகோதரரிடம் பரிந்துரை கூறி என்னைச் சேரநாட்டிற்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்'' என்றார்.

''நிஜமாகத்தான் நீங்கள் சேர நாடு செல்ல விரும்புகிறீர்களா? நான் சொன்னபிறகு என்னைச் சமாதானப்படுத்த இவ்வாறு கூறுகிறீர்களா?'' என்று இளையபிராட்டி கேட்டாள். வல்லவரையர் என்ன சொல்லப் போகிறார் என்ற எதிர்பார்ப்புடன்

''உண்மையாகத்தான் சபையோர் சாட்சியாக நான் தூதராகச் செல்ல முன்வந்தேன்'' என்றார் வந்தியத்தேவன்.

இதைக்கேட்டவாறு அங்கே ராஜராஜன் வந்துவிட்டார்.

செல்லவேண்டாமென்று ''நான்தான் வல்லவரையரைத் தடுத்தேன்! தாங்கள் இன்னும் பழைய இளைய பிராட்டியாராகவும் அவர் வந்தியத்

தேவராகவும் இளம் வயதினர் என நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். வந்தியத்தேவன் மகதநாட்டை ஆளும் குறுநில மன்னர். தாங்கள் குறுநில மன்னருடைய பட்டத்தரசி. ஒரு சிற்றரசர் சேரநாட்டுக்குத் தூது செல்லலாமா? போர்க்காலத்தில் வேண்டுமானால், படையெடுத்துத் தலைமை வகித்து, தங்களது வீரசாகசங்களைக் காட்டி, பகைவரை வென்று, சோழ பேரரசைக் காப்பாற்றலாம். வேற்று நாட்டிற்குத் தூது செல்வது சரியன்று'' என்றார். தன் இளவல் ராஜராஜன் கூறியது கேட்டு இளையபிராட்டி மௌனமாக இருந்தார்.

''சங்கரத்தேவனை அனுப்புவதற்கும் வல்லவரையர் தான் யோசனை கூறினார். மிகவும் தகுதி வாய்ந்த பிள்ளை. அவனை நாம் அனுப்பலாம். சங்கரத்தேவனின் புகழ் ஓங்கட்டும்'' என்று ராஜராஜன் தனது கருத்தைத் தெரிவித்தார்.

சங்கரத்தேவன், சேரமன்னருக்குச் சோழ மன்னரிடமிருந்து செய்தியொன்றையும் சேரமன்னருக்குப் பரிசாகக் கொடுப்பதற்காகச் சோழநாட்டிலிருந்து ஆடை அணிவகைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

''நாம் நல்லெண்ணப்பரிசு கொடுக்கிறோமே தவிர கப்பம் கட்டவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள் சங்கரத்தேவா! சேரமன்னர் நமது உயர்நண்பர். சேரநாட்டைச் சேர்ந்த பழுவேட்டரையர் நமது படைத்தளபதியாகவும், தனாதிபதியாகவும் இருந்திருக்கிறார்கள். சோழர் குலப்பேரரசர் 'என் முப்பாட்டனார்' பராந்தகச் சோழரின் தேவியருள் பழுவேட்டரையரின் மகள் ஒருத்தி என்பது உனக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். சேரமன்னரிடம் பெண் கொடுத்துப் பெண் வாங்கி இன்னும் நெருங்கிய தொடர்பு கொள்ளவேண்டும் என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். நீ சென்றவுடன் முதலில் கடற்கொள்ளையரைப் பற்றிய நமது கருத்தைத் தெரிவித்து, சோழநாட்டிற்கு ஏற்படும் இந்த ஆபத்து, சேர நாட்டிற்கும் வரக்கூடுமென்பதை மறைமுகமாகத் தெரிவித்து விடு'' என்றார்.

சங்கரத்தேவன் வணங்கி, செய்தி நிறைந்த முத்திரையிடப்பட்ட ஓலைச் சுருளை இடுப்பிலே மிகவும் பத்திரமாகச் செருகிக் கொண்டு, குதிரை மீது ஏறிப் புறப்பட்டான்.

குதிரையின் ஒருபுறம் பயணத்திற்கு வேண்டிய உணவும், மற்றும் ஆடைகளும் இருந்தன. அவ்வப்போது தேவையான போது மாற்றுக் குதிரைகளைப் பெறத் தக்க இடங்களையும் அதிகாரிகள் தெரிவித்தனர். காவிரி நதியைக் கடந்து சேரநாட்டின் எல்லையை மிக எளிதில் அடையக்கூடிய கிளை வழியாகப் போய்க் கொண்டிருந்தான் சங்கரத்தேவன்.



## 16

கலத்தின் மேல் தளத்திலிருந்து யாரோ ஒருவர் சிறு கலயத்தை வீசி எறிந்திருக்கிறாரென்று புரிந்ததும், விளையாட்டாகப் பாய்மர பாதுகாப்பாளன் வீசியிருப்பான் என்ற எண்ணத்தில் சிலர்மேல் தளத்திற்கு வந்தனர். ஊமையன் அங்கே கம்பீரமாக நின்று கொண்டிருந்தான். இருளில் யாரென்று தெரியாமல் அவன்மீது இருவர் பாய்ந்தவுடன் மிகவும் எளிதாக அவர்களை அவன் ஒதுக்கித் தள்ளினான். தாக்க வந்த இருவரும் கலத்தின் ஒரு மூலையில் போய் விழுந்தனர். மேல்தளத்திற்கு ஒளியைக் கொண்டுவரச் சிலர் ஓடினர். ஊமையன் உள்ளுணர்வு விறலியைப் பார்க்க வேண்டுமென்று கூறியது. அவன் கீழ்த்தளத்திற்கு இறங்கிச் சென்றான். ஓர் ஓரமாக விறலிப் பெண் நடுங்கியவாறு நின்று கொண்டிருந்தாள். ஊமையன் அவளை நோக்கிச் சைகை காட்டி, ''இங்கு அவள் வந்தது எப்படி?'' என்று கேட்டான்.

அவள் மிகவும் சோர்வுடன், ''என்னை இந்தத் துன்பம் விடாது போலிருக்கிறது. என் சொந்த ஊருக்குச் செல்லவேண்டும் என்று அரசரிடம் அனுமதி கேட்டேன். அவரும் சரியென்று சொன்னார். நான் சோநாட்டை விட்டுப் புறப்பட்டு வரும்போது தங்களைச் சிலர் பிடித்துக் குதிரை மீது ஏற்றிச் சென்று கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் என்னையும் அவர்கள் அழைத்துச் சென்றார்கள். எங்கே அழைத்துச் செல்கிறார்களென்று எனக்குத் தெரியவில்லை. மீண்டும் அவர்கள் என்னை மாளிகையின் ஓர் அறையில் தங்க வைத்தனர். எனக்கு உணவு கொடுத்தனர். இரவு நெருங்கும்போது, அவர்கள் என்னை அழைத்து ஒரு சிவிகையில் ஏற்றி எங்கோ கொண்டு சென்றனர். எனக்கு எதும் புரியவில்லை. இப்படி ஒரு பெண்ணுக்குத் தகுந்த பாதுகாப்பு இல்லாதவொரு நாடும் நாடா என்று கவலையுடன், என்னுடன் வந்த கலைஞர்கள் எங்காவது கண்களில் படுகிறார்களா என்று இங்குமங்கும் பார்த்தவாறு சென்று கொண்டிருந்தேன். சிவிகையும் சென்று கொண்டிருந்தது. கடைசியில் கடற்கரைக்கருகே சிவிகையை இறக்கி, என்னையும் இறங்குமாறு கூறினார்கள். என்னை ஒரு கிடங்குக்குள்ளே அழைத்துச் சென்றார்கள். அந்தக் கிடங்கினுள்ளே நான்கைந்து பேர், மிகவும் கோலாகலமாகச் சிரித்துக் கொண்டு, கையிலே மதுக்கலயத்துடன் வெறி பிடித்தவர்கள் போல் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுள் தலைவன் போல் தோற்றமளித்தவர் ஒருவர் இருந்தார். என்னை அங்கே அழைத்து வந்தவர் அவரை நோக்கி, ''கலபதி பயணத்தின்போது உங்கள் களைப்பைத் தீர்க்க இதோ ஒரு நல்ல பரிசு'' என்று என்னைச் சுட்டிக் காட்டிக் கூறினார்.

கலபதி என்னை ஏற, இறங்கப் பார்த்தார். ஏதோ சைகை காட்டினார். என்னை இரண்டு மூன்று வீரர்கள் தரதரவென்று இழுத்துக் கொண்டு கடற்கரையை நோக்கிச் சென்றார்கள். கடைசியில் என்னை இந்த மரக்கலத்தில் ஏற்றி ஒரு சிறு அறையில் உட்கார வைத்தனர். எனக்கு மிகவும் சோர்வாக இருந்தது. என்ன நேருமோ என்று கவலையுடன் நான் அப்படியே கடலில் குதித்து உயிரை மாய்த்துக் கொள்ளலாமென்று நினைத்தேன். இதன் நடுவே மிக விலை உயர்ந்த பழங்களும், சுடச்சுடச் சுவையான உணவு வகைகளும் கனிகளும் நிறைந்த தட்டு என்முன் வைக்கப்பட்டது. எனக்கிருந்த பசியில் நான் அவற்றை உண்டவுடன் களைப்புற்று, கண்ணயர்ந்து விட்டேன். எவ்வளவு நேரம் தூங்கினேனோ தெரியாது. பிறகு கண் விழித்தபோது, மரக்கலம் ஆடி அசைந்து சென்று கொண்டிருப்பது தெரிந்தது. நான் மெல்ல எழுந்து, சோம்பல் முறித்து, அந்தக் கலம் எங்கே செல்கிறதென்று அறிவதற்காக அறையின் வெளியே வந்தேன்.

''உனக்காகத் தான் நாங்கள் காத்திருக்கிறோம். நன்றாகத் தூங்கினாயா? உன் களைப்பெல்லாம் போய்விட்டதா? முகத்தைக் கழுவிச் சீவிச் சிங்காரித்து வேறு உடையணிந்து கொண்டு நீ உடனே வரவேண்டும். உனக்கு வேண்டிய உடை அலங்காரப் பொருள்கள் எல்லாம் இந்த அறையில் இருக்கின்றன. நாங்களெல்லோரும் உனக்காகத் தான் காத்திருக்கிறோம்'' என்றார் ஒருவர்.

''எனக்காகக் காத்திருக்கிறீர்களா? எதற்காக?'' என்று நான் எனக்குள் கேட்டுக் கொண்டேன். ஆனால் அதை அவர்கள் தவறாக என்னைப் பயன்படுத்த இப்படிப் பேசுகிறார்களோ என்ற எண்ணம் ஏற்பட்டவுடன் நான் நடுங்கினேன். நான் மீண்டும் அறைக்குள்ளே சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டேன். அவர்கள் கதவைப் பலமாகத் தட்டினார்கள். நான் கதவைத் திறந்தேன்.

''ஆடும் பெண்ணே! இன்று நீ எங்களுக்காக உன் நடனத் திறமையைக் காட்டவேண்டும். உன்னை இங்கு அழைத்து வந்ததே உனக்குத் தெரிந்த நடனங்களையெல்லாம் நீ ஆடிக் காட்டவேண்டும், என்பதற்காகவே. அதற்காகத் தான் உன்னைக் கலபதி தேடிக் கொண்டிருந்தார். நீ அகப்பட்டதும் ஏதோ பொக்கிஷம் கிடைத்ததுபோல் அழைத்து வந்தார்'' என்றார். நான் சற்று மௌனமாக அவர்களையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்தேன்.

''அவர்களுடைய பார்வையிலிருந்து என்னுடைய நடனத்தை மட்டும் தான் அவர்கள் ரசிக்க விரும்புகிறார்களென்பதை நான் புரிந்துகொண்டேன். அவர்களை எதிர்த்துப் பயன்இல்லை என்பதையும் வேறுவிதத் தவறான எண்ணமும் அவர்களுக்கு இல்லை என்பதையும் புரிந்து கொண்டேன்.



அவர்கள் தோற்றத்தைப் பார்த்துத் தவறான முடிவுக்கு வந்ததற்காக நான வருத்தப்பட்டேன். அவர்களுடைய விருப்பப்படியே நடக்க முடிவு செய்தேன். கலம் கரையை விட்டு வெகு தொலைவிற்கு வந்திருக்கும் எனத் தோன்றியது. என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை. எல்லாரும் சூழ்ந்து கொண்டு என்னை ஆடச் சொன்னார்கள். ஆடாவிட்டால் அவர்கள் என்னைச் சும்மா விடமாட்டார்கள் என்பது தெரிந்தது. என் மனத்துயரத்தைப் போக்குவதற்காகவேனும் நான் ஆட எண்ணினேன். என் ஆத்திரத்தைப் புலப்படுத்த ஆடினேன். இதயத்திலிருந்து பொங்கிவரும் சீற்றத்தை வெளிப்படுத்த ஆடினேன். ஆடினேன், ஆடினேன் ஆடிக்கொண்டே இருந்தேன். ''அங்கிருந்து எப்படி தப்பிப்போவது என்று எனக்கு வழி தெரியாமலிருந்தது. அப்பொழுது உங்களை நினைத்தேன். நீங்கள் வரமாட்டீர்களா என்று எனக்கு ஒரே ஆவலாக இருந்தது. கடவுளை எல்லாம் வேண்டினேன்; என் ஊர்க் கிராமத் தேவதையை வேண்டினேன். என் தாயை வேண்டினேன். அவள் தான் என் கண்கண்ட தெய்வம். நான் தெய்வத்தைத் துதித்தபடியே கண்ணை மூடிக்கொண்டு ஆடினேன். ஏதோ ஆடினேன். சோகம் சொட்டச் சொட்ட ஆடினேன். வெறுப்பு மிக ஆடினேன். நான் ஆடியதை அவர்கள் மிகவும் ரசித்தார்கள்.

''ஆண்டவனுக்கு என் குரல் கேட்டதோ, என்னவோ? திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. அவர்கள் பரபரவென்று மேல்தளத்திற்கு ஓடினார்கள். பிறகு இதோ நீங்கள் வந்திருக்கிறீர்கள். இதுதான் நடந்த செய்தி. இனி என்ன நடக்கப்போகிறது என்று தெரியவில்லையே! ஐயோ! எனக்கு ஒன்றும் புரியவில்லையே! நான் என் மானத்தையும், மரியாதையையும் இந்தக் கலத்தில் காப்பாற்றிக் கொள்ள முடியுமா? என் மானத்தைக் காப்பதற்காக இனி நான் அவர்கள் சொல்வது போல் தினமும் ஆடித்தானாக வேண்டுமா? நீங்கள் சொல்லுங்கள். என்னை எப்படியாவது காப்பாற்றுங்கள். இல்லாவிட்டால் இந்த நடுக்கடலில் குதித்துத் திமிங்கலத்திற்கும் பெரும் பெரும் சுறா மீன்களுக்கும் இரையாகி, இந்த உலகத்தை விட்டே போய்விடுகிறேன்'' என்று கூறி உரத்த குரலில் விம்மி அழுதாள்.

அவளுடைய விம்மும் குரல்கேட்டு, கலத்தில் இருந்தவர்களில் சிலர் அங்கே வந்தார்கள். ஊமையனை நோக்கிச் சாடை மூலமாக, ''அவள் ஏன் அழுகிறாள்? ஏன் விம்முகிறாள்? நீ ஏன் அவள் எதிரே நின்று கொண்டு ஒன்றும் கூறாமல் அவளையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று அவர்கள் சற்று உரத்த குரலில் கேட்டார்கள். ஊமையன் அவர்களை உற்றுப் பார்த்த பார்வையில், அனல் கக்கியது. அவர்களை அப்படியே தூக்கித்

கடலில் எறிந்து விடவேண்டும் போல் அவனுக்குத் தோன்றியது. சைகை மூலம் அவர்களை அங்கிருந்து போகச் சொல்லிவிட்டு விறலியை நோக்கி விழிநீரைத் துடைத்துக் கொள்ளுமாறும், மீண்டும் அறைக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொள்ளுமாறும் சைகை செய்து கீழ்த்தளத்திற்கு வந்தான். கலத்திலுள்ள எல்லாப் பணியாளர்களும், அவனைச் சூழ்ந்து கொண்டனர். அவர்களில் சிலர் அவன் செவியில் விழாதவாறு மெல்லக் கிசுகிசுப்பதும் அவனுக்குத் தெரிந்தது.

''ஊமையனுக்கும், அந்த விறலிப் பெண்ணுக்கும் ஏதோ தொடர்பு இருக்கவேண்டும். அவர்கள் இருவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்களாகக் கூட இருக்கலாம்'' என்று சிலர் பேசினர்.

''ஊமையனுக்கு ஏற்பட்ட அதிர்ஷ்டத்தைப் பாருங்கள். அவனிடம் அவள் மனம்விட்டுப் பேசுகிறாள். அவளுக்கு நம்மைக் கண்டாலே வெறுப்பு ஏற்படுகிறது. இந்தக் கலத்தில் இருப்பதற்கே அவளுக்கு விருப்பம் இல்லையாம்'' என்று சிலர் ஏமாற்றத்தால் ஏற்பட்ட வேதனையுடன் கூறிக்கொண்டனர்.

''நாம் ஊமையனிடம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அவன் நமக்கு உதவுவதுபோல் நடித்து, நமக்கு விரோதமாக ஏதாவது செய்துவிடலாம்'' என்று சிலர் முணுமுணுத்துக் கொண்டனர். ஊமையன் காதில் இவை எல்லாம் விழுந்தது. இருந்தும் அவன் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. அவர்களை எல்லாம் ஒருமுறை சற்று உற்றுப் பார்த்து என்னவேண்டும் என்று கை சாடை காட்டினான். அவர்களில் ஒருவன் கேட்டான்: ''விறலிப் பெண்ணை உனக்கு முன்பே தெரியுமா?'' என்று.

ஊமையன் தெரியாது என்று கையை அசைத்தான்.

''பிறகு நீ எப்படி அவளிடம் நெருங்கிப் பேசிக் கொண்டிருந்தாய்?''

ஊமையன் எப்படி அதற்கு மறுமொழி கூறுவான்? அவன் சாடை மூலமாக, சேரநாட்டிற்கு வந்த பின்தான் அவளைத் தெரியும் என்றும், அவளைத் தொந்தரவு செய்யாமல் அவளுடைய ஊருக்குப் போவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் கூறினான்.

அவர்களுக்கு ஊமையன் சொல்வது புரியவில்லை. அவன் என்ன சொல்கிறானென்று அவர்கள் மிகவும் பிரயாசைப்பட்டு அறிந்துகொள்ள முயன்றனர். ஆனால், அன்றிரவு நாட்டியம் ஆடாமல் அவளைச் செய்து விட்டானே என்ற கோபம் அவர்களுக்கு எழுந்தது. கலபதியை அணுகி, ஊமையனைப் பற்றித் தங்கள் மனத்தில் உள்ளவற்றைத் தெரிவித்துவிட வேண்டுமென்று அவர்கள் கலபதி இருந்த அறையை நோக்கி விரைந்தனர்.



## 17

கலபதி நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார். அவர் நடுநிசிக்குப் பிறகுதான் எப்போதும் விழித்துக் கொள்வது வழக்கம். மற்றவர்களெல்லாம் உறங்க ஆரம்பித்த பின், கலபதி எழுந்து மேல்தளத்திற்குச் சென்று கடல் அலைகளையும், வானமும் கடலும் வேறுவேறாகத் தெரியாமல் ஒன்றாக இருப்பதையும் அவர் கண்டு ரசித்துக் கொண்டிருப்பார். அப்பொழுது தான் அவருக்குச் சிந்தனைகள் பிறக்கும். தொலைவிலே வரும் கலங்களின் சிறுஉருவம் அந்த இருளில் கூட அவர் கண்ணுக்குத் தெரியும். ஆகவே அவர் இரவில், முன் ஜாமத்தில் உறங்கிவிடுவார். மற்றவர்கள் உறங்கும்பொழுது அவர் எழுந்து மேல்தளத்திலே உலாவுவதற்காக மேல்தளத்திற்கு வருவார். கலபதி உறங்கும் இடத்திற்குச் சென்ற அவர்கள், கதவைப் பலமாகத் தட்டினார்கள். கலபதி எழுந்திருக்கவில்லை. சிறு சலனம் ஏற்பட்டாலும் விழித்து விடும் கலபதி ஏன் எழுந்திருக்கவில்லையென்று அவர்களுக்குப் புரியவில்லை. பலமாகத் தட்டிய பிறகு கலபதி மெல்ல எழுந்து வந்தார். அந்த வேளையில் அனைவரும் அங்கு கூடி நின்றிருப்பதைப் பார்த்து அவருக்கு ஒன்றும் புரியவில்லை. தூக்கக் கலக்கம் வேறு. தூக்கத்தைக் கலைத்து விட்டார்களே என்ற கோபம் வேறு. ''ஏன் எல்லாரும் இப்படிக் கதவை உடைப்பது போல் இடிக்கிறீர்கள்? என்ன நேர்ந்து விட்டது?'' என்று உரத்த குரலில் கேட்டார்.

''இப்போது ஏதும் நேரவில்லை. இனியும் ஏதாவது நேராமல் இருக்கத்தான் உங்களிடம் வந்திருக்கிறோம்'' என்று கலத்தில் வேலை செய்பவர்கள் கூறினார்கள். கலபதிக்கு ஒன்றும் புரியவில்லை. உறக்கக் கலக்கமும், இரவு சாப்பிட்ட மதுவும் சேர்ந்து அவர் தலையைச் சுழற்றியது. கண்கள் சிவக்க, அருகே இருந்த பணியாள் ஒருவரின் தோளைப் பிடித்துக் குலுக்கி, ''என்ன நடந்தது சொல். சுற்றி வளைக்காதே; என் தூக்கத்தைக் கெடுக்காதே. கொன்று போட்டு விடுவேன்'' என்று உரக்கக் கேட்டார்.

''எங்களுக்கு ஊமையன் மீது நம்பிக்கை இல்லை'' என்றான் ஒருவன்.

''எந்த ஊமையன்?'' என்று கலபதி வாய் குழறக் கேட்டார்.

''எந்த ஊமையனா? உலகத்தில் ஒரே ஒரு ஊமையன் தான் இருக்கிறான். அதுவும் நம் கலத்திற்கென்றே பிறந்திருக்கிறான். நல்லவேளை, இரண்டு மூன்று ஊமையன்கள் இங்கு இல்லை'' என்று ஒருவன் கோபமாகக் கூறினான். கலபதி, அருகிலிருந்த பாத்திரத்திலிருந்து தண்ணீரை ஒரு மடக்கு

எடுத்துக் குடித்து விட்டு, "நம் ஊமையனா! அவனைக் காணவில்லையென்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேனே! வந்து விட்டானா?" எப்படி வந்தான்? என்று கேட்டார். அவர் குரலில் வியப்பு இருந்தது.

"வந்துவிட்டான். ஆனால் எப்படி வந்தான் என்பது தான் எங்களுக்குப் புரியவில்லை. அவன் மந்திரம் தெரிந்தவனாக இருப்பானோ?" அந்த விறலிப் பெண் அவனிடம் மட்டுந்தான் பேசுகிறாள். நம்மைக் கண்டால் அவளுக்குப் பிடிக்கவில்லை.

"விறலிப் பெண்ணுடன் அவன் பேசிக் கொண்டிருந்தானா?"

"ஆமாம், அவள் கண்கலங்கி அவனிடம் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தாள்."

"ஏன் அவள் கண் கலங்கினாள்? நீங்கள் ஏதாவது அவள் மனம் வருந்துமாறு அவளிடம் நடந்து கொண்டீர்களா?"

"நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. அவள் ஆடிக் கொண்டிருந்தாள். ஆட்டத்தின் நடுவே ஏதோ சப்தம் கேட்டது. நாங்கள் மேல்தளத்திற்குச் சென்று பார்த்தோம். ஊமையன் நின்று கொண்டிருந்தான். ஊமையன் அந்த விறலியிடம் சென்று பேசினான். அவள் ஏதேதோ அவனிடம் கூறிக் கொண்டிருந்தாள். இந்தக் கலத்திலிருந்து தப்பித் தன் ஊருக்குச் சென்று விடவேண்டும் என்றும் சொன்னாள்."

"அவளை ஏன் ஆடச் சொன்னீர்கள்?" என்று கேட்டார் கலபதி.

மற்றவர்கள் சற்று கோபமாகவே சிரித்தார்கள்.

"அவளை ஆடுவதற்கல்லாமல் வேறு எதற்காக இங்கு வரவழைத்திருக்கிறோம்" என்று கேட்டனர்.

கலபதிக்கும் இப்பொழுது கோபம் பொங்கியது. கடுமையான குரலில் கேட்டார்: "ஆடுவதற்காகத்தான். ஆனால் அதற்கு வேளை காலம் என்பது இல்லையா?"

இப்பொழுது கலத்திலுள்ள வீரர்களில் ஒருவனுக்குத் துணிவு வந்தது. "எந்தவேளை? இரவில் ஆடாமல் பகலிலா ஆடுவாள்?" என்று அவன் கேட்டான்.

கலபதி அவன் முகத்தில் ஓங்கி ஒரு குத்துவிட்டார். "இரவில் தான் ஆடுவாள். ஆனால் உங்களிஷ்டப்படி எல்லா இரவுகளிலும் ஆடச் சொல்வதற்காகவா அழைத்து வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு யாரும் மறுமொழி பேசவில்லை. வாயடைத்து நின்றார்கள்.



"இங்கிருந்து உடனே எல்லாரும் போய்விடுங்கள். இரவில் உறங்காமல் விழித்திருந்து காலை வேளையிலே உறங்கத் தொடங்கி, பகலெல்லாம் உறங்கியிருப்பதற்காகவா இங்கு வந்திருக்கிறீர்கள்? நாளை அல்லது மறுநாள் நாம் ஒரு பெரிய பொக்கிஷத்தை அடைவதற்காகப் போராடப் போகிறோம். நான்கைந்து பெரிய மரக்கலங்கள் கடலில் வரப்போகின்றனவாம். அவற்றைச் சுற்றி வளைக்கவேண்டாமா? நம்முடைய இலட்சியம் ஆட்டத்திலும் பாடலிலும் மட்டும் தானா? நாம் சோர்வாக இருக்கும் போது மட்டும் அவளை ஆடச் சொல்லுங்கள். நினைத்த போதெல்லாம் அவளை ஆடச் சொல்லாதீர்கள். அப்படி நீங்கள் எண்ணம் கொண்டிருந்தால் அவளை நான் இப்பொழுதே திருப்பியனுப்பி விடுகிறேன்" என்று கலபதி கர்ஜித்தார்.

அனைவரும் மௌனமாக இருந்தார்கள். ஒருவன் கேட்டான்: "எப்படித் திருப்பியனுப்புவீர்கள்?"

கலபதிக்குக் கோபம் வந்தது. "கடலிலே தூக்கி எறிந்து தள்ளி விடுகிறேன் என்று நினைத்துக் கொள், அதிகப்பிரசங்கி!" என்று அவன் உதட்டைப் பார்த்து ஓங்கி ஒரு குத்து விட்டார். அனைவரும் நடுநடுங்கினர். கலபதிக்கு இப்படியொரு கோபம் வருமென்று அவர்கள் கண்டதில்லை. கண்டிப்பானவர், தவறு செய்தால் தண்டிப்பார். ஆனால் இப்படியொரு பெண்ணுக்காக அவர் மற்றவர்களை இரத்தக் களறியாக்கி அவர்கள் பார்க்கவில்லை. அனைவரும் கலைந்து சென்றார்கள். கலபதி மட்டும் மெல்லப் படியேறி மேல்தளத்திற்கு வந்தார். அங்கே ஊமையன் நின்று கொண்டிருந்தான்.

அவர் ஊமையன் அருகே வந்து அவன் தோளைத் தட்டி "ஊமையா பசியாறிவிட்டாயா? என்று கேட்டார். அவன் இல்லையென்று தலையசைத்தான்.

"இன்னுமா நீ உணவருந்தவில்லை?"

"ஆமாம்" என்பதற்கு அறிகுறியாக அவன் தலையை அசைத்தான்.

"அப்படியா! நீ சென்று வேண்டிய மட்டும் உணவருந்தி விட்டு வா. நான் உன்னுடன் சில விஷயங்கள் பேசவேண்டும்" என்று அவனை அனுப்பினார். ஆனால் ஊமையன் அங்கிருந்து நகரவில்லை. அவன் சாடையிலிருந்து, "அந்த விறலிப் பெண்ணுக்குத் தகுந்த பாதுகாப்பு வேண்டும். அதை உறுதிப்படுத்திய பிறகே செல்வேன்" என்று கூறுவது போல் தோன்றியது.

## 18

கொங்குநாட்டை சங்கரதேவன் அடைந்தபோது, தன்னை யாரோ சிலர் பின் தொடர்ந்து வருவது போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. குதிரையின் குளம்படி ஓசை கேட்கும். திரும்பிப் பார்ப்பான். வெகுதூரத்திற்கு ஒருவரும் வருவது தெரியாது. ஆனால், சிறிது தொலைவு சென்ற பிறகு மீண்டும் யாரோ பின் தொடரும் அந்த ஓசை கேட்கும். சங்கரத்தேவன் ஒருமுறை மரத்தின் மறைவில் நின்றுகொண்டு யாராவது வருகிறார்களா, என்று பார்த்தான். வெகுநேரம் மரத்தினடியில் தங்கியிருந்தான். யாரையும் காணோம். அன்றைய பொழுது சாய்வதற்குள் ஒரு சிற்றூரை அடைந்து, அங்கு தங்கிவிட வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது. இரண்டுமுறை அவன் குதிரைகளை மாற்றி வேறு குதிரைகளைத் தேர்ந்தெடுத்து அதன் மீது பயணம் செய்தான். இப்போது அவன் மற்றொரு குதிரையைப் பெற்றாக வேண்டும். இப்போது சவாரி செய்யும் குதிரை களைத்து விட்டதென்பது புலப்பட்டது. அந்தச் சிற்றூர் ஒன்றில் இரவு தங்கி, காலையில் வேறு குதிரையைப் பெற்றுப் பயணம் செய்ய வேண்டுமென்று எண்ணினான். அப்பொழுதே களைப்பும் அவனைச் சூழ்ந்து கொண்டது.

'மாலை நேரத்துக் கதிரவனின் மெல்லிய கதிர்கள் பொன்மயமானதாக எங்கும் பரவிப் பரவசப்படுத்தியது. கதிரவன் மலைவாயில் வீழ்ந்தான்' என்று வர்ணிப்பதை அவன் கேட்டிருந்தான். அந்த வர்ணனைக்கு ஏற்ற ஓவியம் வானத்திரையில் தீட்டப்பட்டிருப்பதைக் கண்டான். வட்டத்திகிரி போல் செங்கோளம் வெகு தூரத்திற்கப்பால், மலைகளின் கீழே வேகமாக இறங்கிக் கொண்டிருந்தது. அவன் அதைக் கண்டவாறு பாதை வழியே சென்று கொண்டிருக்கும் போது, திடீரெனத் தொலைவிலே சிறிய கிராமம் ஒன்று தென்பட்டதும் அவனுக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது. இதுவரை மேட்டுப்பாங்கான பகுதியில் பயணம் சென்று பள்ளத்தாக்கில் இறங்கியதை உணர்ந்தான். குதிரையும் மிகவும் களைத்துப் போய் மெல்லச் சென்று கொண்டிருந்தது. கிராமத்தை அடைவதற்குள், கதிரவன் மறைந்து விடுவானென்று எண்ணியதனால், குதிரையைச் சற்று விரைவாகவே செலுத்தினான்.

கிராமத்தின் எல்லையை அடைந்தபோது அங்கே ஓர் திருவிழாவிற்கான கோலங்கள் காணப்பட்டன. மக்கள் புத்தாடை அணிந்து அங்குள்ள சிவன் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தனர். சங்கரத்தேவனும் குதிரையை விட்டு இறங்கி மெல்லக் குதிரையை நடத்திக் கொண்டே கிராமத்துச்



சாவடிக்குச் சென்றான். அங்கு ஒரு பெரியவர் அமர்ந்திருந்தார். இவனைப் பார்த்தவுடனேயே ஒரு வழிப்போக்கன் என்பதையும், ஊருக்குப் புதியவன் என்பதையும் தெரிந்து கொண்ட அவர், இன்முகம் கூறி வரவேற்றார். சங்கரத்தேவன் தன்னை இன்னாரென்று தெரிவித்துக் கொள்வதற்காகத் தன் கையிலிருந்த அடையாள மோதிரத்தைக் காட்டினான். பெரியவர் முகம் சற்று கருத்தது. எனினும் அவர் அதைப் புலப்படுத்திக் கொள்ளாமல் அவனை முகமலர்ச்சியுடன் வரவேற்றார்.

''நான் ஊரில் இரவு தங்கி, காலையில் செல்லலாம் என்று நினைத்திருக்கிறேன். எனக்குப் பயணத்திற்கு ஒரு குதிரை வேண்டும். இன்று இரவு ஆகாரமும், காலையில் கையிலே எடுத்துச் செல்வதற்குக் கட்டுச் சோறும் வேண்டும்'' என்று மிகவும் பணிவுடன் கேட்டுக் கொண்டான்.

பெரியவர் சொன்னார். ''குதிரை நாளை காலையில் தான் கிடைக்கும். ஆனால், நீ எதிர்பார்ப்பது போல், இரவு உனக்கு உணவு கிடைக்குமா என்பது தான் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால் இந்தக் கிராமத்திலுள்ள பெண்டு பிள்ளைகளும், பெரியவர்களும், சிறியவர்களும் இக்கிராமத்தின் எல்லையிலுள்ள திருமூர்த்தி கோயிலுக்குச் சாமி கும்பிடச் செல்கிறார்கள். அங்கே பெரும் திருவிழா இன்று நடக்கிறது. இன்றிரவு கோயிலிலேயே கூத்து நடைபெறும். அலங்கரிக்கப் பட்ட ரிஷப வாகனத்தில் சிவபெருமான் எழுந்தருளி மக்களுக்குக் காட்சி தருவார். பிறகு தான் அவர்கள் திரும்பி வந்து, ஆகாரத்தை உண்பார்கள். அதுவரையில் நீ பசியைப் பொறுத்துக் கொண்டிருந்தால், உனக்கு உணவு கிடைக்கும்'' என்றார்.

சங்கரத்தேவனுக்கு என்ன சொல்வது என்றும் என்ன செய்வது என்றும் தெரியவில்லை. அவனைத் தாண்டி, மக்கள் சென்று கொண்டிருந்தனர். பொழுதும், மெல்ல மெல்லச் சாய்ந்து கொண்டிருந்தது. அவன் மௌனமாக இருப்பதைப் பார்த்த பெரியவர், ''குதிரை கேட்கிறாயே தம்பி! குதிரையில் எவ்வளவு தூரம் செல்ல முடியும்? இனி, மலைச்சாரத்தைத் தாண்டியவுடன் நீ நடந்து தான் செல்ல வேண்டியிருக்கும். குதிரை செல்லாது. கரடுமுரடான பாதையில், மலையில் குதிரை ஏறி இறங்காது'' என்றார்.

சங்கரத்தேவனுக்கு மேலும் பயம் பிறந்தது. குதிரை செல்லாதென்றால், நடந்து எவ்வளவு தூரம் செல்லமுடியும் என்று அவன் கவலைப்பட்டான். அதற்குமேல் பெரியவரைக் கேட்டால் மறுமொழி கூறமாட்டார் என்பதை அவர் முகத்தைப் பார்த்தவுடன் தெரிந்து கொண்டான். சோழநாட்டிலிருந்து வரும் தனக்கு அவ்வளவு தான் இங்கு வரவேற்பா என்று கேட்க அவன் எண்ணினான். ஒருவேளை சோழநாட்டைப் பிடிக்காதவராக இருக்கலாமோ?

என்று எண்ணி, ''ஐயா, நான் மிகவும் முக்கியமான காரியத்திற்காகச் சேர நாடு செல்கிறேன், என்பது தங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

பெரியவர் இப்பொழுது தான் தன்னுடைய உள்ளத்தில் இருக்கும் உணர்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டார். ''சோழநாட்டவர்க்கு வேறு என்ன வேலை? தங்களிடம் பலமிருக்கிறதென்ற எண்ணத்தில் அவர்கள் எவரையும் இலட்சியம் செய்வதில்லை. சிறிது ஆண்டுகளுக்கு முன்பாக சோழநாட்டுப் படைவீரர்கள் இங்கெல்லாம் வந்து சூறையாடி, வீடுகளையெல்லாம் எரித்துச் சென்றதை நாங்கள் மறக்கவில்லை. ஆனால், தம்பி! இப்பொழுது தான் எங்களுக்குச் சோழநாட்டின் மீதுள்ள கோபம் சற்றுத் தணிந்திருக்கிறது. சோழநாட்டிலிருந்து வரும் முக்கியமான மனிதன் நீ என்று சொன்னால், இந்தக் கிராம மக்கள் உன்னை வெறுப்பார்கள். இளைஞர்களுக்கு கோபம் வரும். பெண்டு, பிள்ளையைத் துன்பப்படுத்திய சோழநாட்டு மனிதன் நீயென்று தெரிந்தால் உனக்குப் பெரும் துன்பத்தைக் கொடுப்பார்கள். ஆனால், நான் அதை அவர்களுக்குச் சொல்லப்போவது இல்லை. என்ன இருந்தாலும் நீ வெகுதூரத்திலிருந்து வருகிறாய். விருந்தினரை உபசரிக்கும் பண்பு எங்கள் இரத்தத்தில் ஓடுகிறது. நீ எந்த வேலைக்குப் போகிறாயென்று எனக்கென்ன கவலை?'' அண்டை அயல் நாட்டவன்; எங்கள் விருந்தினன் என்ற முறையில் உன்னை உபசரிப்போம்'' என்று சொன்னார்.

சங்கரத்தேவன் ஒன்றும் உடனே மறுமொழி கூறவில்லை. சோழ வீரர்கள் இங்கு வந்து ஏன் இப்படி அட்டகாசம் செய்திருக்கிறார்களென்பது அவனுக்குப் புரியவில்லை. அந்த வேதனைத் தரும் துர்பாக்கிய நிகழ்ச்சி எப்போது நடைபெற்றது என்றும் அவனுக்குத் தெரியவில்லை. படைவீரர்கள் போர்க்களத்தில் தான் எதிரிகளைத் தாக்குகிறார்கள். சரி; ஊர்மக்களுக்கு ஏன் துன்பத்தைச் செய்கிறார்கள்? அவன் கலந்து கொண்டிருந்த எந்தப் போர்க்களத்திலும், மன்னரும் மன்னரும் சண்டை செய்யும் போது ஏழை மக்கள் என்ன பாவம் செய்தார்கள் என்று எண்ணுவதுண்டு. ஆனால், இந்தக் கிராம மக்களுக்கு சோழநாட்டு வீரர்கள் அப்படி என்ன துன்பம் செய்திருப்பார்கள். அவனுக்குப் புரியவில்லை. அதனால் பெரியவரிடம் பேச்சுக் கொடுக்க விரும்பினான். ஆனால், பெரியவர் அவனிடம் பேசாமல் எழுந்து நின்று, ''தம்பி! நீ விரைவாகச் சென்று, இந்த ஊரின் மையத்திலிருக்கும் பெரிய தனக்காரர் வீட்டு எதிரே போய் நின்று, குதிரையை அங்கே கட்டி அங்கு இருப்பவரிடம் சற்றுப் பேசிப்பார். ஏதாவது உதவி கிடைக்கும்'' என்று சொல்லிவிட்டு அவர் அவனைத் திரும்பிப் பார்க்காமலே வேறுபக்கம் விரைந்து நடந்து சென்றார்.



சங்கரத்தேவன் குதிரை மீது ஏறாமல், குதிரையை மெல்லத்தட்டி, நடந்து சென்றான். திரும்பிப் பார்த்தபோது, தொலைவிலே அவனைப் பின் தொடர்ந்து இரண்டு குதிரைகளில் இருவர் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. இவன் நின்றவுடன் அவர்களும் அங்கேயே நிற்பதும் தெரிந்தது. இவன் நடந்தான். நடந்து விட்டுச் சிறிது தொலைவு சென்று, திரும்பிப் பார்த்தான். அவர்களும் தொடர்ந்து வந்தார்கள். இவன் நின்றதைப் பார்த்துவிட்டு அவர்களும் நின்று விட்டார்கள். சங்கரத்தேவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒருவேளை அவனைத் தொடர்ந்து வந்த காலடிஓசை இவர்களுடையதாய்த் தான் இருக்குமோ? ஆதலால் அவர்களை நெருங்கி, யார் என்று அறிவதற்காக மீண்டும் நின்றான். அவர்களும் நின்றனர். சிறிது தொலைவு சென்றவுடன் அவன் ஒரு சிறு வீதியின் ஓரத்திலேயுள்ள ஒரு பாழடைந்த வீட்டின் ஓரமாகச் செல்ல வேண்டியிருந்தது. சங்கரத்தேவன் திரும்பிப் பார்த்தான். குதிரைகள் கண்களுக்கு தெரியவில்லை. சட்டென்று பாழடைந்த வீட்டினுள்ளே குதிரையைச் செலுத்தித் தூணின் மறைவிலே நின்று மெல்ல வீதியை நோக்கிக் கொண்டிருந்தான்.

சிறிதுநேரம் சென்றவுடன் அந்த இரு குதிரைகளும் அங்கே வந்தன. அதன் மேலிருந்த வீரர்கள் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே நடந்தார்கள். அந்தப்பாழடைந்த வீட்டின் அருகே சற்றுத் தள்ளி நின்று, 'இப்படித் தானே அவன் சென்றான்? அதற்குள் எங்கே சென்றிருப்பான்?' என்று அவர்கள் பேசிக் கொண்டது மட்டும் அவனுக்குக் காதிலே விழுந்தது. தன்னைத்தான் தொடர்ந்து வருகிறார்கள் என்பது சங்கரத்தேவனுக்குப் புரிந்தது. எதற்காக அவர்கள் தன்னைத் தொடர்ந்து வருகிறார்களென்பது அவனுக்குந் தெரியவில்லை. எப்படியாவது அவர்கள் உள்நோக்கத்தை அறிவதற்காகக் குதிரையை அங்கே கட்டிவிட்டு அவன் மட்டும் அவர்கள் பின்னால் சென்றான். அவர்கள் பேசிக்கொண்டே சென்றனர். அவர்களுடைய பேச்சிலிருந்து சங்கரத்தேவனை அவர்கள் வெகுதொலைவிலிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. தன்னை எப்படியாவது அவர்கள் சந்தித்துப் பேசிவிட வேண்டுமென்று நினைத்திருப்பதை அவன் அறிந்து கொண்டான். அதனால் தானே அவர்களிடம் வலியச்சென்று அவர்களிடம் பேச்சுக் கொடுப்பதற்காகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். அவர்கள் திடுக்கிட்டுத் திரும்பினர். சங்கரத்தேவன் புன்முறுவல் பூத்தான்.

''என்னைத் தானே தேடுகிறீர்கள்?'' என்று அவர்கள் எதிர்பாராத விதத்தில் சங்கரத்தேவன் கேட்டவுடன், அவர்கள் திகைத்தனர். உடனடியாக மறுமொழி கூறமுடியாமல் அவர்கள் திகைக்கிறார்களென்பது முகத்தோற்றத்திலிருந்து அவனுக்குத் தெரிந்தது.

## 19

நடுக்கடலில் அந்தக் கலம் சென்று கொண்டிருந்தது. அந்தக் கலத்தைத் தொடர்ந்து மட்டும் ஏழெட்டுக் கலங்கள் வந்து கொண்டிருந்தன. கலபதி கலத்தின் மேல்தளத்திலே உலாவிக் கொண்டிருந்தான். கலத்திலுள்ள மற்றவர்களை உறங்கச் சொல்லிக் கட்டளையிட்டதனால், அவர்கள் உறங்கச் சென்றனர். ஆனால் அவர்களுக்கு உறக்கம் வரவில்லை. விறலியின் நாட்டியத்தைக் காணாமல், பாதியிலேயே நிறுத்திவிட்டது அவர்களுக்கு மனக்குறையாக இருந்தது. அத்துடன் கலபதி வழக்கத்திற்கு விரோதமாகத் தங்கள் சகாக்களில் இருவரைத் தாக்கியது, ஒருவித அச்சத்தை அளித்தது. அவர்கள் படுத்துக் கொண்டே மெல்லப் பேசிக்கொண்டிருந்தனர். கலபதிக்குத் திடீரென்று கோபம் வருவதற்கு என்ன காரணம்? என்று அவர்களுக்குப் புரியவில்லை. பலவாறாக அவர்கள் பேசிக் கொண்டார்கள். கடைசியில் அவர்கள் ஒரு மனநிறைவோடு தங்கள் பேச்சை முடித்துக் கொள்ளும்படியான நிலை ஏற்பட்டது. 'ஏதோ பெரும் பொக்கிஷம் நிறைந்த கப்பலொன்று வருவதாகச் சொன்னாரே! அது என்னவாக இருக்கும்?' என்று அவர்களில் ஒருவன் கேட்டான்.

"நம்மையெல்லாம் படுக்கப்போகுமாறு சொல்லி விட்டாரே, கலம் எப்போது வருகிறதோ? நல்ல உறக்கத்தின் நடுவே நம்மை எழுப்பி, அந்தக் கலத்தைத் தாக்குமாறு சொன்னால் நமக்குத் தூக்கமும் கெட்டு விடுகிறது; தாக்குவதற்குச் சக்தியும் இருப்பதில்லை" என்று ஒருவன் கூறினான். தான் கூறியதில் பெரும் நகைச்சுவை கலந்திருக்கிறதென்று தானே சிரித்துக் கொண்டான்.

அவர்கள் எதிர்பார்த்தது போல் அன்று விடியும்வரை எந்தவிதக் கலமும் வரவில்லை. கலம் சென்று கொண்டிருந்தது. தகுந்த சாதகமான காற்று வீசியதால் கலம் வேகமாகவும் சென்றது.

பொழுது விடிந்து, கதிரவனின் கிரணங்கள் கலத்தின் மீது படரத் தொடங்கியவுடன் ஒவ்வொருவராக விழித்து எழுந்தனர். மேல்தளத்தில் கலபதியைக் காணவில்லை. கலபதி விடியற்காலையில் உறங்கச் சென்று விட்டது தெரிந்தது. ஆனால் கலத்தின் மேல்தளத்தின் ஓர் ஓரமாக அந்த விறலிப் பெண்ணும் ஊமையனும் அந்தக் கடலையே உற்று நோக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவர்களுக்கு வியப்புத் தாங்கவில்லை. அந்தப் பெண் இரவெல்லாம் தூங்காமல் நின்று கொண்டிருந்திருப்பாளா? ஊமையனை அவள் மிகவும் நெருங்கி நின்றிருப்பதால், ஊமையனிடம்



அவளுக்கு உள்ள உரிமையை அவர்கள் உணர்ந்தனர். தங்களுக்குள் மிகவும் அழகானவர்கள் இல்லையா? பலம் பொருந்தியவர்கள் இல்லையா? கவர்ச்சியாகப் பாடுபவர்கள் இல்லையா? அப்படி இந்த ஊமையனிடம் என்ன கவர்ச்சியை அவள் கண்டாளோ, அவனிடமே நெருங்கி நிற்கிறாள்?" என்று அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர்.

அந்த இளம் காலைவேளையில் அவளுடைய கூந்தல் கற்றைகள் காற்றில் மெல்ல அசைவதையும் ஆடுவதையும், கதிரவனின் பொன் கிரணங்கள் அவள் கருங்கூந்தலின் இழைகளினூடே நுழைந்து பொன்னிற மாக்க முயல்வதையும் காணும் போது ஏதோவொரு தேவதை கலத்தின் மேல் தளத்தில் நின்று கொண்டிருப்பது போல் அவர்களுக்குத் தோன்றியது. ஆனால் அவள் அருகே நிற்கும் ஊமையன் ஓர் அரக்கன்போல் அவர்களுக்குக் காட்சியளித்தான்.

அவள் ஒருமுறை திரும்பிப் பார்க்க மாட்டாளா? என்று அவர்கள் நினைத்தனர். அவள் அருகே சென்று அவளிடம் பேசவேண்டுமென்று அவர்களுக்குத் தோன்றியது. ஆனால் கலபதியின் எச்சரிக்கை அவர்களுக்குப் பயத்தை அளித்தது.

அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவள் மெல்லத் திரும்பினாள். அவள் முகத்தில் கொடூரம் இல்லை. ஏமாற்றம் இல்லை. தூங்காத துயரம் இல்லை. சோர்வு இல்லை. அவள் மெல்ல அவர்களை நோக்கி நடந்து வந்தாள்.

"இரவெல்லாம் நன்றாக உறங்கினீர்களா?" என்று மதுரமான மொழியிலே கேட்டாள், குழலோசையின் இனிமையைப் போல் அந்தக் குரல் ஒலித்தது. அவர்களுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவர்கள் தலை குனிந்து நின்றார்கள். அவளுடன் என்னென்னவோ பேச வேண்டுமென்று இருந்தவர்களுக்கு ஒரு வார்த்தையும் நெஞ்சிலிருந்து வரவில்லை. பேசாமல் திரும்பிப் போய் விடுவோமா என்று சிலர் எண்ணினர். சிலருக்குக் காலைவேளையில் தோன்றும் அகோரப்பசி வயிற்றைப் பிடித்து உலுக்கியது. அவர்கள் அவளிடம் பேசாமல் மெல்லத் திரும்பினார்கள். ஆனால் அவள் கைதட்டி அவர்களை அழைத்தாள்.

'எனது அன்பான உடன் பிறப்புகளே!' என்று அவள் அழைத்தது அவர்களுக்கு ரசிக்கவில்லை. சகோதரர்களாக அவள் அவர்களை நினைத்து விட்டால் அவர்கள் உள் மனத்திலே கொண்டிருக்கும் கறுப்புக் கனவுகளெல்லாம் என்னவாவது? ஆனால் அவள் சொல்லின் மென்மை அவர்களை மயங்கவைத்தது.

"என் நடனத்தை நீங்கள் கண்டு ரசிக்க விரும்பினீர்கள் இல்லையா?" என்று கேட்டாள். அவர்கள் பதில் பேசவில்லை. பிரமை பிடித்தவர்கள் போல

நின்று கொண்டிருந்தனர். ஊமையன் இன்னும் கலத்தின் ஓர் மூலையில் நின்று கொண்டிருந்தான். அவன் அவர்களைத் திரும்பிப் பார்க்கவில்லை. அவன் எல்லையில்லாத அந்தக் கடலை, எல்லை காண முயல்வது போல் வெகு தூரத்திற்கு வெகுதூரம் பார்வையை வீசிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் அவர்களைப் பார்த்து மீண்டும், "என் அன்பான சகோதரர்களே! இன்றைய தினம் நான் உங்களுக்குப் புதிய நடனம் ஒன்று ஆடப்போகிறேன். இந்தக் கலத்தில் மத்தளம் இருக்கிறதா? யாழ் இருக்கிறதா? வீணை இருக்கிறதா? குழல் இருக்கிறதா?" என்று கேட்டாள். இல்லை என்பதற்கு அறிகுறியாக அவர்கள் தலையை அசைத்தார்கள்.

"வேண்டாம். மத்தளமும், வீணையும் வேண்டாம், யாழும் வேண்டாம், குழலும் வேண்டாம். உங்களில் பாடத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டாள்.

ஒருவன் சொன்னான்: "ஊமையனுக்குத் தான் பாடத் தெரியுமே! அவனைப் பாடச் சொல்லுங்கள்!"

எல்லோரும் 'கொல்'லென்று சிரித்தார்கள். இப்போது ஊமையன் அவர்கள் குரல் கேட்டு அங்கே மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தான். அவனுடைய வருகையும், முகமும் பார்ப்பதற்கு அச்சத்தை அளித்தன. அவர்கள் ஓரடி பின் வாங்கினார்கள். ஊமையன் ஓரடி நடந்து வந்தான். அவர்கள் மேலும் பின் வாங்கினார்கள். விறலிக்கு அவர்கள் ஏன் பின்னோக்கிச் செல்கிறார்கள் என்பது புரியவில்லை.

"ஏன் செல்கிறீர்கள்? நில்லுங்கள். எனக்கு உங்கள் மீதும் கோபம் இல்லை. மெய்யாகவே கேட்கிறேன். உங்களில் யாருக்காவது பாடத்தெரியுமா? ஊமையனுக்குப் பாடத் தெரிந்தால் நான் ஏன் இவ்வளவு நேரம் சும்மா இருக்கிறேன். அவரைப் பாடச் சொல்லி, காலை இளம்காற்றில் அவர் பாடினால் என்னுடைய ஆட்டம் அதைவிடச் சிறப்பாக இருக்கும். ஆனால் ஏனோ கடவுள் அவருக்கு இதுவரை பேசுவதற்கு வாய்ப்பை அளிக்கவில்லை" என்று கூறினாள். ஆனால், கலத்துப் பணியாளர்கள் அச்சத்துடன் இருப்பதைக் கண்டபிறகு தான் அவள் திரும்பிப் பார்த்தாள். ஊமையன் அவள் அருகே நின்று கொண்டிருந்தான். அவன் சைகையிலிருந்து அங்கே என்ன நடந்தது என்பதை அவன் கேட்பது நன்றாகப் புரிந்தது.

விறலி கலகலவென்று சிரித்தாள். "ஒன்றுமில்லை. என் நடனத்தைக் காண ஏங்கி நிற்கும் அவர்களுக்காக நான் ஆடப் போவதாகச் சொன்னேன். 'பாடுவதற்கு யாராவது இருக்கிறார்களா?' என்று கேட்டேன். அவர்கள் உன்னைக் கைகாட்டினார்கள்" என்று சொல்லிச் சிரித்தவுடன் ஊமையனும்



தன்னுடையப் புரிந்து கொள்ளமுடியாத ஒருவித உடைந்த குரலில் ஏதோ பேசுவது போல் பேசிச் சிரித்தான். அவன் சிரித்த பிறகுதான், விறலியும் சிரித்த பிறகுதான் அங்குள்ளவர்களுக்கு உண்மையிலேயே பயம் சிறிது தெளிந்தது. சுறுசுறுப்புப் பிறந்தது. அவர்கள் விறலியின் முகத்தை நோக்கினார்கள்.

விறலி கேட்டாள்: "எனது அன்பான சகோதரர்களே! இப்போது நான் ஏதாவது ஆடட்டுமா? இதைக் கண்டு நீங்கள் ரசிக்கிறீர்களா?" அவர்கள் தலையசைத்தார்கள்.

"காலை வேளையில் நாங்கள் கலையை ரசித்ததே கிடையாது. எங்களுக்கு ஏராளமான பணிகளிருக்கின்றன. நாங்கள் இந்தக் கலத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று எல்லாம் சரியாக விருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். கூம்பின் பாயை இறக்கிக் காற்று வீசும் திக்கைச் சரிபார்த்து மீண்டும் ஏற்றவேண்டும்; அடித்தளத்திற்குச் சென்று அதில் ஏதாவது பழுது ஏற்பட்டிருக்கிறதாவென்று பார்க்கவேண்டும். சோறாக்கச் சிலர் செல்லவேண்டும்; கழுவி விடுவதற்காகச் சிலர் செல்லவேண்டும்; அதனால் நடனத்தை ரசிப்பதற்கு ஏற்ற நேரம் இப்போதில்லை" என்று அவர்களில் ஒருவன் சொன்னான். ஆனால் விறலியோ, "முடியாது இப்போது எனது நடனத்தை நீங்கள் ரசித்துத்தானாக வேண்டும். என்னுடைய உடல் துடிக்கிறது. என் கரங்களெல்லாம் நெளிக்கின்றன. என் இடை அசைந்தசைந்து ஆடுவதற்கு ஆயத்தமான நிலையிலிருக்கிறது. என் விழிகள் சுழன்றசைந்து கடைசியாகச் சோர்வடைவதற்குத் தகுதியான நிலையில் இருக்கின்றன. உட்காருங்கள். நீங்கள் அப்படியே உட்காருங்கள். ஆடுகிறேன், நான் ஆடுகிறேன்!" எனக்கூறினாள்.

விறலியின் பேச்சிலிருந்த கவர்ச்சி அவர்களை மயக்கியது. ஆனால், ஒருவிதப் பயம் மனத்திலே தெறிந்தது. கலத்தின் தலைவர் எழுந்து வந்துவிடப் போகிறாரே என்று அவர்கள் பயந்தார்கள்.

"விறலி, வேண்டாம்; இப்போது ஆடவேண்டாம். ஆடுவதற்கு வேளை இப்போது இல்லை. நீ ஓய்வு எடுத்துக்கொள். நீ இரவெல்லாம் உறங்காது, விழித்துக் கொண்டிருந்தது உன்னைப் பார்த்ததும் தெரிகிறது. நீ நன்றாக உறங்கு. நாங்கள் வேண்டிய உணவெல்லாம் சமைத்து, உன்னை எழுப்புகிறோம். இன்று இரவு ஆடினால் போதும்" என்றனர்.

விறலி சிரித்தாள். "உங்களுக்கு வேண்டும் போது எனக்கு ஆடத் தோன்றாது; எனக்கு ஆடத் தோன்றும் போது உங்களுக்கு நேரமில்லை. உங்கள் பணியைப் பார்க்கச் செல்லுங்கள். என்னுடைய உடல் துடிக்கிறது. இப்போது நான் இந்தக் கலத்தின் மேலிருந்து ஆடப்போகிறேன். உங்களுக்காக

இல்லாவிட்டாலும் எனக்காக ஆடப்போகிறேன். வானத்தைக் கூரையாக்கி இதோ எதிரே தோன்றும் கதிரவனை எனது ரசிகனாக்கிக் காலைக் கூத்து ஆடப்போகிறேன். காண்பவர்கள், காணட்டும். காணாதவர்கள் பணியைச் செய்யச் செல்லட்டும்'' என்று கூறி ஆடத் தொடங்கினாள்.

அவள் இடை அசைந்தது. சின்னஞ்சிறு அடிகள் மெல்ல மெல்ல மேல்தளத்தில் தாளமிட்டன. அவள் கரங்கள் குலுங்கின. அவளுடைய மார்பகங்கள் குலுங்கின. அவள் ஆடினாள். ஆடினாள், ஆடிக் கொண்டே இருந்தாள்.

ஊமையன் அவள் ஆட்டத்தைப் பார்த்து என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்தவாறு நின்று கொண்டிருந்தான். அவளுடைய ஆட்டத்தின் இன்பத்தைக் கண்டு ரசித்து அவளை அப்படியே ஆரத் தழுவிக் கொள்ள வேண்டும் போல் அவன் துடித்தான். ஆனால் தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ளும் திறன் அவனிடம் இருந்ததால், தொலைவிலே நின்று ஆட்டத்தை ரசித்தபடியே அவன் கையைத் தட்டி அவளுக்குப் பாராட்டுதலைத் தெரிவிப்பது போல் தன்னுடைய குரலில் மெல்லிய சப்தத்தை எழுப்பியவாறிருந்தான். அதே சமயத்தில் இரு கரங்கொட்டிச் சபாஷ், சபாஷ்' என்ற வேற்றுமொழியிலும் ''நன்றாக ஆடுகிறாய், இன்னும் ஆடு: ஆடு'' என்று சொல்லிக் கொண்டே கலத்தின் தலைவன் படிக்கட்டில் ஏறி, மேல்தளத்திற்கு வந்து கொண்டிருந்தான்.

## 20

தஞ்சை மாளிகையில் பரபரப்பு மிகுந்து காணப்பட்டது. ராஜராஜ சோழர் மிகவும் கவலையுடன் மேல்தளத்திலிருந்து கீழே இறங்கிச் சபை மண்டபத்தில் கூடியிருப்பவர்களைக் கண்டு பேச வந்தார். சோழநாட்டுப் படைத் தலைவர் கிருஷ்ணன் ராமனும், வல்லவரையர் வந்தியத்தேவனும் அங்குக்கூடியிருந்தார்கள். சபை மண்டபத்தில் மிகவும் படுகாயமுற்று, காயங்களுக்கு கட்டுப்போட்ட நிலையில் சிவந்த கண்களுடனும், அழுத கண்ணீருடனும் பலர் நின்று கொண்டிருந்தனர். அவர்களில் சிலர் சோழநாட்டுப் பெரும் வணிகர்கள். அவர்களுக்குத் துன்பம், துயரம் என்றால் என்னவென்றே தெரியாது. அவர்கள் இதுவரையில் சோழநாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று பண்டங்களை விற்றுப் பொருளீட்டிச் சோழநாட்டிற்குத் திரும்பி வந்து அந்தப் பொருட்களைக் கொண்டு பல நல்ல காரியங்களைச் செய்து வந்தார்கள். சோழநாட்டின் செல்வம் செழிக்கவும் காரணமாயிருந்தார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு துன்ப நிலைமை ஏற்பட்டுள்ளதை அறிந்தவுடன் சோழமன்னருக்குக் கவலை மிகவும் சேர்ந்தது. வணிகர்களின் துயரத்தை உடனடியாக மாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் மன்னர் அந்த நேரத்தில் சபை மண்டபத்திற்கு வந்தார். அங்கு கூடியிருந்த வணிகர்களுடைய கலங்கள் சோழநாட்டிலிருந்து ஏராளமான அரிசியையும், நவதானியங்களையும் ஏற்றிக் கொண்டு, சாவகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தன.



இரண்டு இரவு இரண்டு பகல்கள் சென்றவுடன் அந்தக் கலங்கள் திடீரென நடுக்கடலில் மறிக்கப்பட்டன. கலங்களிலிருந்து பண்டங்களை மட்டும் தான் முன்பு கொள்ளையடித்துச் சென்றனர். இப்போது கலங்களையும் தங்கள் வசப்படுத்தி, கலத்தைத் திருப்பி, வேறு திசைக்கு ஓட்டிச் செல்ல முயன்றனர். அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றார்கள். எதிர்த்துப் போராடாது கலத்திலிருந்த சோழ வணிகர்களை ஒரு படகிலே ஏற்றி, அவர்களை நடுக்கடலிலே விட்டு விட்டார்கள். எதிர்த்தவர்களைக் கடலில் தூக்கி எறிந்தார்கள். அவர்கள் கதி அதோகதிதான். சுறா மீன்களும் திமிங்கலங்களும் அப்படித் தூக்கி எறிந்தவர்களை உண்டு களித்தன. படகில் விடப்பட்டவர்கள் தத்தளித்துச் சோழநாட்டின் ஏதாவதொரு கரையை அடைந்தார்கள். வரும்வழியில் சிலர் களைப்பாலும், படுகாயமுற்றதாலும் இறந்தார்கள். உறுதியுடன், உடல் வலிமையுடன் இருந்தவர்கள் மட்டும் உயிரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சோழ நாட்டின் கடற்கரையை அடைந்து அங்கிருந்து நடந்தும், வண்டிகளில் ஏறியும் தஞ்சையை வந்தடைந்தார்கள். அவர்கள் சொன்ன இந்தச் சோக செய்தி ராஜராஜனைத் திடுக்கிடச் செய்தது. அவர் உடல் துடித்தது.

''இனியும் பொறுக்கக் கூடாது வந்தியத்தேவரே! சோழநாட்டிற்கே பெரும் அவமானம்'' என்றார் அரசர்.

வந்தியத்தேவன் உடனே மறுமொழி கூறவில்லை. கிருஷ்ணன் ராமன் தான் பேசினார்: ''கட்டளையிடுங்கள் சக்கரவர்த்தி! நம் படைகள் சேரநாட்டைத் தாக்கட்டும்.''

ராஜராஜன் கேட்டார்; நடுக்கடலில் வழிமறித்துச் செல்லும் கொள்ளையர்கள் சேரநாட்டைச் சேர்ந்தவர்களென்று எப்படி சொல்லமுடியும்? அடாத பழியைச் சுமத்தி சேரநாட்டின் மீது நாம் படையெடுத்துச் சென்றால் நமக்குக் காலகாலத்திற்கும் கெட்டபெயர் ஏற்பட்டு விடாதா? தூதரை அனுப்பியிருக்கிறோம், விரைவில் ஐயம் யாவும் தீர்ந்துவிடும்'' என்று கூறிச் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார்.

"அதுவரையில் நம் கடல் வாணிபம் தடைப்பட்டு விடுமே; அதனால் இனிக் கப்பல்களுடன், போர்வீரர்களையும் நாம் ஏன் அனுப்பக்கூடாது?" என்று வந்தியத்தேவன் கேட்டார். மன்னர் ராஜராஜன் மெல்ல நகைத்தார்.

"கலங்களுடன் படைவீரர்களை அனுப்புவது பாதுகாப்பு முறை தான். ஆனால், எத்தனைக் கலங்களுக்குப் படைவீரர்களை அனுப்ப முடியும்? மேலும், கலங்களின் கொள் அளவிற்கேற்பப் பண்டங்களை ஏற்றி அனுப்புகிறோம். மேலும் வீரர்களையும் கலத்தில் ஏற்றினால் கலத்தின் கொள்ளளவு குறைந்து, அந்த அளவுப் பண்டங்களை ஏற்றிச் செல்வதும் குறைந்து விடாதா?" என்று கேட்டார்.

"பண்டங்களை ஏற்றிச் செல்லும் கலங்களுக்குப் பின்னால் தொடர்ந்து நாம் வீரர்களை அனுப்பினால்?" என்று தளபதி கிருஷ்ணன் ராமன் கேட்டார்.

"அனுப்பலாம். நல்ல யோசனை தான். ஆனால் கொள்ளையர்கள் மிகவும் சாமர்த்தியசாலிகள். பண்டங்களை ஏற்றிச் செல்லும் கலங்கள் புறப்பட்டவுடனே அவர்களுக்கு அந்தச் செய்தி எப்படியோ தெரிந்து விடுகிறது. பாதுகாப்பின்றிச் செல்லும் கலங்களைத் தான் அவர்கள் வழிமறித்துக் கொள்ளை யடித்துச் செல்கிறார்கள். சோழ வீரர்கள் பின்தொடர்ந்து செல்கிறார்கள் என்றவுடன் அவர்கள் தங்கள் நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்வார்கள். அதனால், பண்டங்கள் மிகவும் பத்திரமாகப் போய் சேருமேயன்றி, கொள்ளையர்கள் கொட்டத்தை அடக்கவோ, அவர்களைச் சிறைப்பிடிக்கவோ முடியாது" என்றார் ராஜராஜன்.

"அப்படியென்றால் எவ்வாறு கொள்ளையர்கள் கொட்டத்தை அடக்க முடியும்?" என்று கேட்டார் வந்தியத் தேவன். சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது.

சபை மண்டபத்தில் போர்க்களத்தில் விழுப்புண்களுடன் வந்தவர்கள் போல் காட்சியளித்த வணிகர்களையும் அவர்களுடைய பணியாட்களையும் பார்த்துக் கண்கலங்கினார் மாமன்னர். தனாதிகாரியை அழைத்து, அவர்களுக்கு எவ்வளவு இழப்பேற்பட்டதோ, அந்த இழப்பு முழுவதையும் ஈடுசெய்ய நம் கருவூலத்திலிருந்து எடுத்துத் தந்து விடுங்கள்" என்று கட்டளையிட்டார்.

வணிகர்களில் ஒருவர் கூறினார்: "பேரரசே! நாங்கள் இழப்பைச் சரிசெய்து கொடுங்கள் என்று கேட்பதற்காகச் சமூகத்திடம் வரவில்லை. எங்கள் பண்டம் நஷ்டமானால் என்ன, பொக்கிஷத்திலிருந்து பணம் குறைந்தால் என்ன? இரண்டும் ஒன்று தான். சோழநாட்டின் வலிமையை அறியாது இப்படிக் கொள்ளையர்கள் கடலில் அட்டூழியம் செய்கிறார்களே என்பதை நினைக்கும் போது எங்களுக்கு வருத்தமாயிருக்கிறது. நாட்டில்



எல்லையோரமாக எந்த விதமான ஊடுருவலும் செய்யாமல் நடுக்கடலில் தொல்லை கொடுக்கவேண்டுமென்பதை ஒரு குறிக்கோளாக அவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியைத் தெரிவிக்கவே வந்தோம். இன்னும் சிறிது நாட்களுக்கு நமது நாட்டிலிருந்து எந்தக் கலங்களும் புறப்படா. நமது அமைதி குறைந்தால், நமது பொருளாதாரம் பாதிக்கப்படும் என்பதை எடுத்துச் சொல்வதற்காகத் தான் தங்களுடைய சமூகத்திற்கு வந்தோம்" என்று கூறினார்.

ஏற்றுமதி வாணிபம் குறைந்தால் சோழநாட்டின் செல்வவளம் சீர்குலையும். அதன் பின்னணியில் ஏதோவொரு சக்தி வேலை செய்கிறதென்பதையும் உணர்ந்து கொண்ட ராஜராஜன், "சேர நாட்டு அரசனைச் சந்திப்பதற்கு நமது தூதனாக சங்கரத்தேவன் சென்றிருக்கிறான். சங்கரத்தேவன் திரும்பி வந்தவுடனே நமக்குப் பல உண்மைகள் புலப்படும். அவன் சேரனிடம் நம் வேண்டுகோளை விவரிப்பான். சேரமன்னர் அறியாமல் அயல்நாடுகளிலிருந்து கொள்ளையர்கள் கடலில் வரமாட்டார்கள். பாண்டிய நாட்டின் எல்லை ஓரமாக ஆங்காங்கு இருந்து நமது ஒற்றர் படைகள் கண்காணிக்கின்றன. ஆதலால் கொள்ளையர்கள் முகாம் பாண்டிய நாட்டுக் கடற்கரையிலும், கோடிக்கரையிலும் இருக்காது. சங்காத்தேவன் திரும்பி வந்தவுடன் உண்மை புலப்படும். நான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கமுடியும்" என்று கூறி மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார்.

வந்தியத்தேவன் இப்பொழுது சொன்னார்: "சங்கரத்தேவன், சேரநாட்டைச் சென்றடைந்து திரும்பி வருவதற்குப் பல நாட்களாகுமே. இடையே நாம் வேறு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும். நாம் ஒரு திட்டம் வகுப்போம். நான்கு படைக் கப்பல்களை உருவாக்குவோம். நமது போர் வீரர்களை வணிகர்கள் போல் வேடம் பூணச் சொல்வோம். கலங்களைக் கடலிலே செலுத்தி நாம் ஓர் குறிக்கோளின்றிச் சென்று கொண்டிருப்போம். கொள்ளையர்களை வழியிலே நாம் எங்காவது சந்திப்போம். அவர்கள் வணிகர்களுடைய கலங்களென்று எண்ணி, நமது கலங்களைத் தாக்க வருவார்கள். அப்போது நம் திறமையால் அவர்களை முறியடித்து அவர்களனைவரையும், சிறைப்படுத்தி கூண்டோடு இங்கு கொண்டு வருவோம்" என்றார்.

ராஜராஜன் தன்னை மறந்து, "ஆகா; ஆகா" என்று கூறினார். அந்த யோசனை அவருக்குச் சரியாகப்பட்டது. வணிகர்கள் அனைவருக்கும் ஆறுதல் கூறி வழியனுப்பிவிட்டுப் படைத்தலைவர் கிருஷ்ணன் ராமனை அழைத்து, "தளபதியாரே! நமது வீரர்களைத் தேர்ந்தெடுத்து மூன்று பேரை ஆயத்தப்படுத்துங்கள். கலங்களிலே நிறைய பருத்தி மூட்டைகளை ஏற்றுங்கள்" என்றார்.

வந்தியத்தேவன் அவரைக் கேள்விக் குறியுடன் பார்த்தார். "பருத்தி மூட்டைகளை ஏற்றினால், கடலில் செல்லும் கலத்திற்கு இன்னும் பளு அதிகமாகத் தேவைப்படும். நாம் போதுமான அளவுக்கு வீரர்களை அடித்தளத்திலே சேர்த்து வைத்துக் கொள்வோம். நீங்கள் சொல்லும் யோசனைக்கு ஏற்ப நாம் கடற்கொள்ளையர்களைக் கண்டு பிடிப்பதற்கு வசதியாக இருக்கும்" என்று அரசர் கூறினார்.

சக்கரவர்த்தி கூறியது போல் தகுந்த வீரர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் படைத்தலைவர் கிருஷ்ணன் ராமன் விரைந்தார்.

## 21

பாழடைந்த வீட்டின் ஓர் ஓரமாக சங்கரத்தேவன், தன்னைத் தொடர்ந்து வந்தவர்களைச் சந்தித்து, அவர்களுடன் பேச முற்பட்டான். முதலில், அவர்கள் உள்ளத்திலிருப்பதை மறைக்காமல் பேசமுடியாமல் திகைத்தார்கள். தங்களைச் சந்தேகிக்காமல் சங்கரத்தேவன் பழகவேண்டும் என்பதற்காக அவர்கள் என்னென்னவோ நடித்துப் பார்க்க முயன்றார்கள். சங்கரத் தேவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் தனது சந்தேகத்தை அவன் அவர்கள் முன் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. அவனே பேச்சைத் தொடர்ந்தான். "நான் சேரநாட்டிற்குச் செல்கிறேன். இங்கு மாற்றுக் குதிரைகள் பயணத்துக்குக் கிடைக்குமா?" என்று பேச்சைத் தொடங்கினான்.

அவர்கள் உடனடியாக மறுமொழி கூறவில்லை. ஆனால், ஏதாவது பேசியாக வேண்டுமே! அதற்காக அவர்களுள் ஒருவன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "குதிரையா! குதிரை எதற்கு?" என்று கேட்டான்.

"நான் நெடுந்தொலைவிலிருந்து பயணம் செய்து வருகிறேன். என்னுடைய இந்தக் குதிரை மிகவும் களைத்துவிட்டது. வேறு குதிரையை இந்த ஊரில் மாற்றிக் கொண்டால் தான் நான் இந்த மலையைத் தாண்டிச் செல்ல முடியும். ஆனால், இங்குள்ள பெரியவர்களோ, "வேறு குதிரையும் கிடைக்காது; இனி, குதிரையும், இந்த மலையில் செல்ல முடியாது என்று சொன்னார்கள். உங்களுக்குத் தெரியுமா அதைப்பற்றி?" என்று சங்கரத் தேவன் அவர்களைக் கேட்டான். அவனுடைய கேள்வியில் இருந்தே மறுமொழியைப் புரிந்து கொண்டு அவர்களில் ஒருவன், "ஆமாம், ஆமாம்; நாங்களும் குதிரையை இங்கே விட்டு விட்டு, வேறு குதிரையில் தான் செல்லப் போகிறோம். உங்களிடம் சொன்னது போலவே குதிரை இங்குக் கிடைக்காது என்று எங்களிடமும் அவர் சொன்னார். நாங்கள் மிகவும் களைத்துப்போய்



இருக்கிறோம். இன்றிரவு இங்கு தங்கிவிட்டு நாளை காலையில் பயணம் செய்யலாம் என வந்திருக்கிறோம்" என்றான்.

சங்கரத்தேவன் அவர்கள் கூறியதை அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. அவனால் நம்பவும் முடியவில்லை. இருந்தாலும், நம்பாமல் அவர்கள் முகத்தை முறித்து, அவர்களிடமிருந்து திரும்பி விடவும் அவனுக்கு அப்போது முடியவில்லை. எப்படியாவது அவர்களிடமிருந்து உண்மையைக் கறக்க வேண்டும் என்ற எண்ணத்தில், "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

அவர்கள், ஒரே குரலில், "இன்றிரவு நாங்கள் இங்கே தங்கப் போகிறோம்; நீங்கள்?" என்று அவர்கள் திருப்பிக் கேட்டார்கள்.

"நான் தான் சொன்னேனே! நான் இன்றிரவு இங்கே தங்கி நாளை காலையிலே எப்படியாவது குதிரையைப் பெற்றுப் புறப்பட எண்ணியிருக்கிறேன். நீங்கள் எங்கு செல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"நாங்களும் சேரநாட்டிற்குத் தான் செல்கிறோம். திருவஞ்சைக் களத்திற்குச் செல்கிறோம்" என்றான் அவர்களுள் ஒருவன்.

சங்கரத்தேவன் மகிழ்ச்சி நிறைந்த குரலில், "மிகவும் நல்லதாய்ப் போயிற்று. நீங்கள் சேரநாட்டிற்குத் தான் செல்கிறீர்களா? நானும் அங்கு தான் செல்கிறேன். நாம் மூவரும் சேர்ந்து செல்லலாமா?" என்று ஆவலுடன் கேட்டான்.

"நம் மூவருக்கும் குதிரை கிடைக்கவேண்டுமே!" என்று அவர்களுள் ஒருவன் சந்தேகத்தைக் கிளப்பினான்.

"இங்கு தான் குதிரை கிடைக்காது என்று இங்குள்ள மக்கள் சொல்கிறார்களே! நடந்து தான் செல்லவேண்டுமாம். நடந்து செல்வதென்றால் வழித்துணைக்கும், பேச்சுக்கும் ஆள் கிடைத்தீர்கள் என்று நான் மகிழ்ச்சியடைவேன் என்றான் சங்கரத்தேவன்.

அவர்களுள் ஒருவன், "ஆமாம் மிகவும் நல்லதாய்ப் போயிற்று. மலைப்பாதை வழியாக நடந்து செல்வதென்றால் துணைக்கு ஆள் வேண்டும். என்னதான் நம்மிடம் வாள் இருந்தாலும் கொடிய விலங்குகளிடமிருந்து தப்ப வேண்டுமென்றால் கூட்டமாகச் செல்வது தான் நல்லது" என்றான் மற்றொருவன்.

"அப்படியென்றால் நாம் ஊருக்குள் சென்று எங்காவது தங்குவதற்கு இடம் பார்த்து வருவோமா?" என்று கேட்டான், சங்கரத்தேவன். "அப்படியே செய்வோம்" என்று அவர்களும் கூறினார்கள்.

மூவரும் குதிரையை நடத்திக் கொண்டு ஊருக்குள் சென்றார்கள். ஊரிலே மக்கள் நடமாட்டம் குறைவாக இருந்தது.

''ஊர்மக்கள் ஊர் எல்லையிலுள்ள திருமூர்த்தி கோயிலுக்கு விழா எடுக்கச் சென்றிருக்கிறார்கள்'' என்று சங்கரத்தேவன் கூறி, ''நாமும் அந்த விழா நடக்குமிடத்திற்குச் செல்வோமா? அங்கு ஏதாவது உணவு கிடைக்குமா என்று பார்ப்போம்'' என்று சொல்லி அவர்களுடன் புறப்பட்டான்.

அவர்கள் அவ்வளவு கலகலப்பாகப் பேசாமல், சங்கரத்தேவன் கேட்ட கேள்விக்கு மட்டும் மறுமொழி கூறி நழுவுவதிலிருந்து சங்கரத் தேவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

அவர்களிடமிருந்து எப்படி ஒதுங்குவதென்ற எண்ணத்திலேயே அவன் அந்த விழா நடக்கும் இடத்திற்குச் சென்றான்.

கிராமத்தின் எல்லையிலே உள்ள மலை அடிவாரதகில் திருமூர்த்தி கோயில் இருந்தது. மலையடிவாரத்தில் ஓர் அருவி, 'ஓ'வென ஓசைப் படுத்தியவாறு விழுந்து கொண்டிருந்தது. கிராம மக்கள் அங்கே புத்தாடை அணிந்து கூடியிருந்தார்கள். கும்பல் கும்பலாக அவர்கள் ஆங்காங்கே சோறு பொங்கிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகள் அருவிக்கரை மணலில் விளையாடிக் கொண்டிருந்தனர். புத்தாடை அலங்காரத்துடன் கறுப்புமில்லாமல் சிவப்புமில்லாமல் மாந்தளிர் மேனியாய் அவர்கள் இருந்தனர். அவர்களில் பலர் கச்சை அணியாமல் மாராப்பை இழுத்து மூடியிருந்தனர். பெண்கள் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தனர். ஆண்கள் தனித்தனியாகவும் கும்பல் கும்பலாகவும் அமர்ந்து ஊர்க்கதைகளை எல்லாம் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இல்லாமல் பேசிக் கொண்டிருந்தனர். இறைவனுக்கு அலங்காரம் செய்து, தீபாராதனை காட்டும் வரையில் அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள். தீபாராதனை காட்டியபின் எல்லோரும் சாமி கும்பிட்டு விட்டுப் புறப்படுவார்கள். அதுவரையில் சங்கரத்தேவனும், மற்றவர்களும் என்ன செய்யலாம் என்று தெரியாமல் சிறிது யோசித்துப்பின் அருவியில் குளிக்கலாமென்று முடிவுக்கு வந்து அருவியை நோக்கிப் புறப்பட்டனர். சங்கரத்தேவன் தனது ஆடையைக் கரையின் ஓரத்திலே களைந்து வைத்து, தான் கொண்டு வந்திருந்த ஓலையை மிகவும் கவனமாக ஆடையின் இடையே வைத்துவிட்டு, அருவியில் குளிக்கச் சென்றான்.

அருவி நீர் மிகவும் இதமாக இருந்தது. மற்றவர்களும் அவனுடன் சேர்ந்து குளித்தார்கள். குளித்து முடித்து, இருள்சூழும் சமயத்தில் மீண்டும் ஆடையை அணிந்து கொள்வதற்காகச் சங்கரத் தேவன் கரையேறி வந்தான். ஆடையணிந்து கொள்ளும் போது உடைகளின் நடுவில் மறைவாக



வைக்கப்பட்டிருந்த அந்த ஓலையைக் காணவில்லை. அவன் திடுக்கிட்டான். என்ன செய்வதென்று புரியாமல் அங்கு இருந்தவர்களுள் ஒருவரைப் பார்த்து, ''நீங்கள் என்னுடைய ஆடையிலிருந்த ஓலையைக் கண்டீர்களா?'' என்று கேட்டான். அவர்கள் அவனைப் பார்த்துச் சிரித்தார்கள்.

''நாங்களும் உன்னைப் போல்தான் அருவியில் குளிக்க வந்தோம். உன்னுடைய ஆடையில் வைத்திருந்த ஓலையை நாங்கள் எப்படி எடுக்க முடியும்? ஓலை தானே! அந்த ஓலை அப்படி என்ன மதிப்பு வாய்ந்தது? அதை நாங்கள் எடுத்துக் கொண்டு என்ன செய்யப்போகிறோம். ஓலையைக் கொளுத்தினால், இரண்டு அகப்பை நீர் கூடச் சூடாகாதே!'' என்று நகைச்சுவையாகக் கூறினான் ஒருவன்.

சங்கரத்தேவனுக்கு கோபம் ஏற்பட்டது.

'ராஜராஜ சோழதேவர் எச்சரிக்கையுடன் சொல்லியனுப்பியிருந்தும் இவ்வளவு எளிதில் நாம் இழந்து விட்டோமே! அருவியில் குளிக்கும் நேரத்தில் நான் கரையைத் தானே பார்த்துக் கொண்டிருந்தேன்! அதற்குள் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு யார் எடுத்திருப்பார்கள்?' என்று அவன் கவலையுடன் எண்ணிப் பார்த்தான். அவனுக்குப் புரியவில்லை. இருந்தாலும் தன்னுடைய வேதனையைக் காட்டிக் கொள்ளாமல் கிராம மககளோடு மக்களாகக் கடவுளைத் தரிசனம் செய்து உணவு கிடைக்குமா என்று காத்திருந்தான். மற்றவர்கள் அவனுடன் கலகலப்பாகப் பேச வந்தார்கள்.

''நாம் கிராமத்திற்குச் செல்வோம், அங்கே உணவுக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்று ஒருவன் கூறினான். இரவு இங்கேயே தங்கிவிட்டுக் காலையில் பொழுது விடியும் சமயத்தில் நாம் புறப்பட்டு விடுவோம்'' என்று மற்றொருவன் கூறினான். ஒருவராவது அவன் ஓலையை இழந்தது பற்றி ஏதும் வேதனைப் பட்டதாகத் தெரியவில்லை. இருந்தாலும் சங்கரத்தேவன் அவர்களிடம் ஏதும் கேட்காமல் கிராமத்தின் எல்லையில், உணவைப் பெற்றுக் கொள்வதற்காகப் புறப்பட்டான்.

சோறு சமைத்துக் கொண்டிருந்தவர்களிடம் சென்று தன்னுடைய களைப்பைச் சொல்வதற்காக நின்று கொண்டிருந்தான். பெரும் அண்டாக்களில் கூட்டாஞ்சோறு கொதித்துக் கொண்டிருந்தது. அதன் மணம் நாசியைத் துளைத்துக் கொண்டிருந்தது. அப்பொழுதே அந்த அண்டாவிலிருக்கும் சோறு அனைத்தையும் உண்டு விடுவோமா என்ற அவா தோன்றினாலும், ஓலையைத் தொலைத்து விட்டோமே என்ற கவலை அவனைப் பெரிதும் வாட்டியது. பொறுப்பில்லாமல் இப்படி நடந்து கொண்டோமே என்ற வருத்தத்தினால் அந்தவேளை உணவைக் கூடத் தள்ளி

விடுவோமா என்று அவன் நினைத்தான். ஆனால் பசியும், களைப்பும் ஒன்று சேர அவன் ஒரு மரத்தடியில் அப்படியே உட்கார்ந்தான். அவ்வளவு தான்; அவனறிய மாட்டான்; கண் விழித்தபோது அவன் எதிரே ஒரு மூதாட்டியும், அவள் பேத்தி என்று சொல்லலாம், இளம் வயதுடைய ஒரு பெண்ணும் நின்று கொண்டிருந்தார்கள்.

அவர்கள் 'ஐயா! ஐயா!' என்று வெகுநேரம் அவனை அழைத்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். அவனுடைய சொந்தஊரில் அவன் தாய் அவனை அழைப்பது போல் அந்தக் குரல் ஒலித்தது. அவனுடைய அருமை மனைவி சுமதி, உணவு கலயத்துடன் நின்று கொண்டு எழுப்புவது போல் தோன்றியது. திடுக்கிட்டுக் கண் விழித்தான். அவன் தாயைப்போன்று, அவன் மனைவியைப் போன்று வேறொரு பெண்ணை உருவகப்படுத்துவது சரியில்லை. அவன் மனைவியைப் போன்று இளம் வயது அழகி என்பதற்காக அப்படிச் சொல்லலாம். இருவர் நின்று கொண்டிருப்பது கண்டு அவன் மெய்சிலிர்த்தது. 'சுமதி, சுமதி, அம்மா, அம்மா!' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன. அவன் எழுந்திருக்க முயன்றான், முடியவில்லை.

''ஐயா! மிகவும் களைப்பாய் இருக்கிறார்கள் போலிருக்கிறது'' என்று அந்த மூதாட்டி பேசினாள். ஏதோ சொல்ல வேண்டுமென்ற துடிப்பு இருப்பது மங்கையின் முகத்தில் தெரிந்தது. அவள் கையில் மூடப்பட்டிருந்த ஒரு தட்டு இருந்தது. சங்கரத்தேவன் மெல்லச் சிரிக்க முயன்றான். ''ஆமாம்'' என்பதற்கு அடையாளமாகத் தலையாட்டினான். களைப்பாய் இருக்கிறதென்று ஒரு வீரன் சொல்லலாமா என்று கூட அவனுக்குத் தோன்றியது.

''நான் சற்றுக் கண் அயர்ந்தேன். ஆனால், அப்படியே வெகுநேரம் உறங்கிவிட்டேன் போலிருக்கிறது'' என்று அவன் மெல்லப் பேச முயன்றான். களைப்பு என்பதை உறுதிப்படுத்த வேண்டாம் என்று நினைத்திருக்கலாம். குரல் வெளிவரவில்லை. மூதாட்டி மெல்ல எதிரே உட்கார்ந்து கொண்டாள். தன் பெயர்த்தியை நோக்கி, ''முல்லை! அந்த உணவுத் தட்டைக் கொடு'' என்று அவளிடமிருந்து வாங்கி, அவன் எதிரே வைத்தான். மேலே மூடப்பட்டிருந்த துணியை எடுத்தவுடன் அங்கே இன்னும் ஆவி வந்து கொண்டிருக்கும் வெண் பொங்கலும் சர்க்கரைப் பொங்கலும் இருந்தன. ஒரு கலயத்தில் தண்ணீர் கொண்டு வருவதற்குத் தன் பேத்தியை அனுப்பினாள். சங்கரத்தேவன், மூதாட்டியை உற்று நோக்கினான்.

''வெகு தூரத்திலிருந்து வருகிறாயா தம்பி?'' என்று கேட்டாள் மூதாட்டி. சங்கரத்தேவன் தலையசைத்தான். ''ரொம்பவும் களைத்திருக்கிறாய் போலிருக்கிறது'' என்று பரிவுடன் பேசினாள்.



''சோர்வில்லை! வழிநடைப் பயணத்தால் களைப்பு ஏற்பட்டது உண்மைதான். ஆனால் அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியும். இந்தக் கிராமத்திற்கு வந்தவுடன் எனக்கு ஓர் இழப்பு ஏற்பட்டு விட்டது. அதைத் தாங்க முடியாது போல் தோன்றுகிறது'' என்றான்.

மூதாட்டியின் புருவங்கள் சுருங்கின. ''என்ன சொல்கிறாய்? என்ன இழந்து விட்டாய்?'' என்று கேட்டாள். சங்கரத்தேவன் சொல்லலாமா வேண்டாமா என்று சிந்தித்தான். பிறகு, ''விலை மதிக்க முடியாத ஒரு பொருளை நான் இழந்து விட்டேன். நான் சோழநாட்டிலிருந்து வருகிறேன். சேரநாட்டிற்குச் செல்கிறேன். சேரமன்னரைச் சந்திப்பதற்குச் சக்கரவர்த்தி என்னை அனுப்பினார்'' என்று கூறி மெல்ல நிறுத்தினான். ''ராஜராஜ சோழச் சக்கரவர்த்தியா உன்னை அனுப்பினார்? அவர் நலமாக இருக்கிறாரா?'' என்று அந்த மூதாட்டி கேட்டாள்.

''இந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் எல்லாரும் சோழ நாடென்று சொன்னால் சீறியெழுவார்கள்'' என்று சற்று நேரம் முன்பு ஒரு முதியவர் சொன்னதற்கு மாறாக இங்கே பரிவும், பாசமும், நிறைந்த குரலில் குசலம் விசாரிக்கிறாரே இந்த மூதாட்டி என்று சங்கரத்தேவன் வியப்புடன், ''சக்கரவர்த்தி நலமாகத்தான் இருக்கிறார். ஆனால், அவர் மனது தான் சரியாக இல்லை'' என்றான்.

''தம்பி நாட்டு வளப்பத்தைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம். முதலில் இதை உண்டு, சற்று களைப்பாறு'' என்று மூதாட்டி பரிவுடன் சொன்னாள். அப்போது அந்த இளம் மங்கை கலயத்தில் நீருடன் அங்கு வந்தாள்.

## 22

தொலைவில் கிராமத்திற்குத் திரும்பிச் செல்லும் மக்கள் பேசிக் கொண்டே செல்வது கேட்டது.

'நன்றாக இருள் சூழ்வதற்கு முன்பு இங்கிருந்து புறப்பட்டு விட வேண்டும். மூதாட்டி தனக்காகத்தான் நின்று கொண்டிருக்கிறாள்; அவள் வீட்டிற்குப் போக வேண்டாமா?' என்ற எண்ணத்தில் சங்கரத்தேவன் மிக்க ஆவலுடன் மூதாட்டியளித்த அந்த வெண் பொங்கலை உண்டான். ''மிகவும் சுவையாக இருக்கிறது'' என்றான். மூதாட்டி மெல்லத் தன் பொக்கை வாய் தெரியச் சிரித்தாள்.

"இப்படித்தான் பல வருடங்களுக்கு முன்பு சோழச் சக்கரவர்த்தி ராஜராஜ சோழர் இந்தக் கிராமத்திற்கு வந்திருந்தார்" என்று மூதாட்டி சொல்லிச் சற்று நிறுத்தினாள்.

சங்கரத் தேவன் மூதாட்டியை வியப்புடன் பார்த்து, "எங்கே மற்றொரு தடவை சொல்லுங்கள்! ராஜராஜ சோழதேவர் இங்கு வந்திருந்தாரா?" என்று ஆவலுடன் கேட்டான்.

அந்தப் பெண் முல்லை எப்பொழுதும் பாட்டி சொல்லும் பழைய கதைகளைக் கேட்பதிலே மிகவும் ஆவலுடையவளாக இருப்பாள். அவளும், "இதுவரையில் அந்தச் செய்தியைச் சொல்லவில்லையே பாட்டி?" என்று கதை கேட்க நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். அவளுடைய விழிகள் மெல்லத் தன்னைப் பலதடவை நோக்குவதை சங்கரத்தேவன் தெரிந்து கொண்டான். பாவம்! தனக்குக் கல்யாணம் ஆகி, ஊரில் சுமதி தனக்காகக் காத்திருப்பது தெரியாமல் தவறாக எண்ணி விடப் போகிறாளென்ற எண்ணத்தில் அவன் மூதாட்டியை நோக்கி, "பாட்டி! நீங்கள் ராஜராஜ சோழர் இங்கு வந்திருந்த செய்தியைச் சுருங்கச் சொல்லுங்கள். நாம் பேசிக் கொண்டே கிராமத்திற்குச் சொல்வோம். அங்கு சென்றவுடன் எனக்கு நீங்கள் ஓர் உதவி செய்யவேண்டும்" என்றான்.

"தம்பி! இன்றிரவு எங்கள் வீட்டிலே தங்கிவிட்டுக் காலையில் புறப்பட்டுச் செல்லலாம். குதிரை கிடைக்குமா கிடைக்காதா என்பதை என்னுடைய மகனைக் கேட்டுத்தான் சொல்லமுடியும்" என்று கூறினாள். பிறகு அங்கிருந்து மூவரும் புறப்பட்டனர்.

"சில ஆண்டுகளுக்கு முன்பு இங்கே சேரர்களுக்கும், சோழர்களுக்கும் போர் ஒன்று நடந்தது" என்று மூதாட்டி சொல்லி நிறுத்தினாள்.

"சேரர்களுடனா?" என்று சங்கரத்தேவன் ஆவலுடன் கேட்டான்.

"ஆமாம் தம்பி! இந்தக் கிராமம் சோழநாட்டைச் சேர்ந்ததா? சேரநாட்டிற்குச் சொந்தமானதா என்ற சந்தேகம் ஏற்படும். எல்லையிலுள்ள இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் நலன்களைச் சில சமயங்களில் இரண்டு அரசர்களும் மிகவும் பரிவுடன் கவனிப்பார்கள். சிலசமயம் ஒருவருமே கவனிக்காமல் விட்டு விடுவார்கள். தங்களுக்குத் தேவையென்றால் ஓடோடி வருவார்கள். ஒருமுறை சோழர்களுடைய படைகள் இங்கு வந்தன. அவர்கள் வந்த காரணத்தை அறியாமல் நாங்கள் படைகளுக்கு வேண்டிய விருந்து வைத்து அவர்களைத் தங்கச் செய்திருந்தோம். அப்புறம் தான் தெரிந்தது. ராஜராஜனும் படையுடன் வந்திருக்கிறார் என்று. எங்கள் அனைவருக்கும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ராஜராஜ சோழரைக் காண வேண்டுமென்று



கிராமத்திலிருந்த பெண்டு பிள்ளைகள், அவர் முகாமிட்டிருந்த இடம் நோக்கிச் சென்றார்கள். இப்போதும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அவருடைய, கம்பீரமான தோற்றம்! ஆகா! கம்பீரமான அந்த அழகிய வடிவில் நாங்கள் மெய்மறந்து நின்றோம். நாங்கள் என்னென்னவோ பேசவேண்டுமென்று நினைத்திருந்ததையெல்லாம் விட்டு, அவரையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் தோன்றியது. அவருடைய முகத்தில் அரும்பிய இளம் புன்னகை எங்களுக்கு ஆசி வழங்குவது போலிருந்தது. அவர் எங்கள் நலம் விசாரித்தார். இங்கு விளையும் பொருள்களைப் பற்றி விசாரித்தார். அப்போது அவர் கேட்டார்: "நீங்கள் சோழநாட்டுடன் இருக்க விரும்புகிறீர்களா? அல்லது சேரநாட்டுடன் இருக்க விரும்புகிறீர்களா?" என்று.

நாங்கள் சொன்னோம்: "நாங்கள் சோழநாட்டுடன் தான் இருக்க விரும்புகிறோம். இந்தக் கிராமத்தைத் தாண்டியவுடன் தான் மலைப்பகுதியே தொடங்குகிறது. மலையின் அடிவாரத்திலிருக்கும் நாங்கள் சோழநாட்டுடன் இருப்பதையே விரும்புகிறோம்" என்றோம். அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. ஆனால், அன்று மாலையே சில நூறு சேரவீரர்கள் சோழர் படைகளைத் தாக்குவதாகக் கேள்விப்பட்டோம். திடீரென்று சேர நாட்டுப் படைகள் முகாமிட்டிருந்த சோழர்படையைத் தாக்கியதும், அதே இடத்தில் பெரும் போர் நிகழ்ந்ததும் நாங்கள் மறுநாள் தான் கேள்விப்பட்டோம். சோழர் படைகளைச் சேரர் படைகளால் வெல்ல முடியவில்லை. பலர் உயிரிழந்தார்கள். மறுநாளே சிறைப் பிடித்தவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு ராஜராஜன் கிராமத்தை விட்டுப் புறப்பட்டு விட்டார்" என்று மூதாட்டி பழைய சம்பவத்தை மனக்கண் முன்னே நிறுத்துவது போலப் பேசினாள்.

"இந்தச் சம்பவத்தைப் பற்றித்தான் சோழர்களுடைய படைகள் வந்து மிகவும் அட்டகாசம் செய்து விட்டதாகச் சொல்கிறார்களா?" என்று சங்கரத் தேவன் கேட்டான்.

"யார் சொன்னது? நீங்கள் கிராமத்தின் வழியே வரும்போது அந்தப் பெரியவரைச் சந்தித்தீர்களா?" என்று மூதாட்டி கேட்டாள்.

"ஆமாம்" என்றான் சங்கரத்தேவன்!

"அவருக்கு இதுதான் வேலை. அவர் இங்கு வசிப்பவர்களை அதிகாரம் செய்து, தானியங்களைப் பெற்று உண்டு உடுத்திச் சுகமாக வாழ்ந்து வருகிறார். ஆண்டுக்கு ஒருமுறை அருகேயுள்ள நகரத்திலிருந்து சோழ அரசருக்கு அனுப்புவதற்கான திறைப்பணத்தைப் பெறுவதற்கு அதிகாரிகள் வந்தால் முணுமுணுப்பார். தாமே முழுவதையும் அனுபவிக்க வேண்டுமென்ற ஆசை. அவருக்கு. அதனால் தான் அவருக்குச் சோழர்களைக் கண்டால் பிடிப்பதில்லை."

இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டே வீட்டையடைந்தார்கள். சங்கரத் தேவனுடைய எண்ணமெல்லாம் குதிரை மீதே இருந்தது மூதாட்டி தன் வீட்டுத் திண்ணையிலே அவன் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்தாள். அவனைப் பற்றி விசாரித்தாள். சங்கரத் தேவன் சொன்னான்: ''நானும் என் மனைவி சுமதியும் சோழநாட்டில் மிக அமைதியாக வாழ்ந்து வந்தோம். என் மனைவி சுமதி, நான் வெளியூர் செல்வதை விரும்பவில்லை....'' என்று சங்கரத்தேவன் பேச்சை ஆரம்பித்து இளம்பெண் முல்லையை மெல்ல நோக்கித் தன் பார்வையை வீசினான். முல்லையின் முகம் சற்று மாறியதைக் கண்டான்.

''ஓஹோ! தம்பிக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா!'' என்று கேட்டாள் மூதாட்டி. ''இளம் வயதில் இவ்வளவு தொலைவு தனியே நீ கடந்து வந்திருக்கிறாயே? என்ன அப்படியொரு முக்கியமான விஷயமோ?'' என்று மூதாட்டி செய்தியைக் கேட்டறிய விரும்பினாள்.

சங்கரத் தேவன், தான் சேரமன்னரைச் சந்திக்கச் செல்வதையும், அரசர் ஓர் ஓலையைக் கொடுத்திருப்பதையும் சற்று முன்பு அருவிக்கரையில் ஓலையைத் தொலைத்து விட்டதையும், இப்போது எந்த முகத்துடன் சேரமன்னரைக் காணச் செல்வதென்று புரியாமல் திகைப்பதையும் மனம்விட்டுப் பேசினான். சங்கரத்தேவன் முகம் வாடியிருப்பதைக் கண்ட மூதாட்டி, ''தம்பி கவலைப்படாதே! சேரநாட்டிற்கு ஆதரவாளர்களாக இருப்பவர் எவராவது அந்த ஓலையை எடுத்து ஒளித்து வைத்திருப்பார்கள். அவர்கள் எப்படியும் உன்னிடம் மீண்டும் கொண்டு வந்து கொடுத்து விடுவார்கள்'' என்றாள்.

தன்னை உற்சாகமூட்டவே மூதாட்டி அவ்வாறு பேசுகிறாள் என்றாலும் ஓலை கிடைக்கும் என்பதில் அவனுக்கு நம்பிக்கையில்லை. 'ஓலையைத் திருடிச் சென்றவர்கள் அதை ஏன் திரும்பவும் நம்மிடம் சேர்க்கப் போகிறார்கள்?' என்று எண்ணியவனாக, ''அதெப்படி அவ்வளவு நிச்சயமாக நீங்கள் சொல்லிவிட்டீர்கள்? என்னைத் தொடர்ந்து இரண்டு பேர் வந்து கொண்டிருந்தார்கள். அருவிக்கரையில் நான் குளிக்கும் போது என்னுடனே சேர்ந்து குளித்தார்கள். எப்படியோ நான் அறியாமல் அவர்கள் தான் அதை அபகரித்திருக்க வேண்டும்! மிகக் கண்ணும் கருத்துமாக நானிருந்தேன். எப்படி அவர்கள் அபகரித்திருப்பார்கள் என்பது வியப்பாக இருக்கிறது. புரியவில்லை'' என்றான்.

மூதாட்டி சொன்னாள்: ''என் மகன் சிறிது நேரத்தில் வந்துவிடுவான். அவனிடம், அந்த ஓலை மீண்டும் கிடைக்குமா என்று, நான் விசாரித்துப்



பிறகு சொல்கிறேன். நீ சற்று இங்கே இளைப்பாறு'' என்று கூறிக் கதவைத் தாளிட்டு உள்ளே சென்றாள்.

சங்கரத்தேவனும் அந்தக் கிராமத்தின் அமைதியான வீதியிலுள்ள அந்த வீட்டுத் திண்ணையில் கண்ணை மூடிக் கொண்டவாறு சிந்தித்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் உறக்கம் அவனை ஆட்கொண்டது. அவன் நன்றாகத் தூங்கி விட்டான். விடியும் நேரத்தில் அவனுக்குத் திடீரென்று விழிப்பு ஏற்பட்டது. கிராமம் இன்னும் விழித்து எழவில்லை. பனிப்போர்வை கிராமத்தை மூடியிருந்தது. அந்தவேளையிலும் வீட்டின் உள்ளே யாரோ பேசிக் கொண்டிருப்பது அவன் செவியில் விழுந்தது. மூதாட்டியின் குரலும், மற்றொரு ஆண்மகன் குரலும் மாறி மாறிக் கேட்டன.

''அந்தப் பிள்ளைக்கு எப்படியாவது ஒரு குதிரையை நீ சம்பாதித்துத் தரவேண்டும்'' என்றாள் மூதாட்டி.

''குதிரை கிடைக்காது பாட்டி! நாங்களெல்லோரும் மலைமீது கொடிப்பாதை வழியாக ஏறித்தான் மறுபகுதிக்குப் போகிறோம். அதனால் யார் கேட்டாலும் குதிரை தரமாட்டார்கள்'' என்ற ஆண்குரல் கேட்டது.

''பாவம்; அவன் சோழச் சக்கரவர்த்தியிடமிருந்து முக்கியமான செய்தியுடன் சேரநாட்டிற்குச் செல்கிறான். செல்லும் வழியில் இந்த ஊரில் அந்த ஓலையை இழந்து விட்டானாம்'' இது மூதாட்டியின் குரல்.

மூதாட்டிக்கு மறுமொழி கூறிய அவன் குரல் பேசியதைக் கேட்டு, சங்கரத்தேவன் திடுக்கிட்டான்.

## 23

சங்கரத் தேவன் திருவஞ்சைக் களம் சென்று அங்கு சேரமன்னரைக் காணாததால் விழிஞ்ஞம் நகரையடைந்து அங்கே சேர நாட்டுச் சக்கரவர்த்தி பாஸ்கர ரவிவர்மன் தங்கியிருக்கும் இடத்தைக் கேட்டறிந்து கொண்டான். அவன் வழியைக் கேட்டவுடனே அவன் இந்த நாட்டைச் சேர்ந்தவன் அல்லன் என்பதை அந்த ஊர் மக்கள் புரிந்து கொண்டனர்.

அவன் எங்கிருந்து வருகிறான் என்பதை அறிவதற்காக அவனைச் சுற்றி நின்று பல கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்கள்.

வேற்று நாட்டு மனிதன் ஒருவன் வந்தவுடன் அவனைப் பார்த்து, ''நன்றாக, சௌக்யமாகப் பயணம் செய்தாயா? ஏதாவது காலை ஆகாரம் எடுத்துக் கொண்டாயா? ஓய்வெடுத்துக் கொள்வதற்கு உனக்கு இங்கு ஏதாவது

இடமிருக்கிறதா?" என்று ஏதும் கேட்காமல் எடுத்தவுடனே சந்தேகக் கண்கொண்டு "எங்கிருந்து வருகிறாய்? எதற்காக வருகிறாய்?" என்று அவர்கள் கேட்கத் தொடங்கியதிலிருந்து சங்கரத் தேவனுக்கு அங்குள்ளவர்கள் மீது மனக்கசப்பு ஏற்பட்டது.

தன்னைச் சூழ்ந்து கொண்டிருந்தவர்களை ஓர் உறுமலுடன் பார்த்து, "விலகியிருங்கள்" என்று அதட்டி, "நான் உங்களுடைய பேரரசரைக் காண வந்திருக்கிறேன். சோழ நாட்டிலிருந்து வருகிறேன் என்று சொன்னவுடன் அங்கிருந்தவர்கள் சற்று திடுக்கிட்டனர்.

"வடக்கே வெகுதொலைவிலிருந்து வருகிறீர்களா?" என்று கேட்டனர்.

"வடக்கே இல்லையப்பா. நான் இந்த நாட்டின் கிழக்கேயிருந்து வருகிறேன்" என்றான், சங்கரத்தேவன்.

"ஓஹோ! திசையெல்லாம் உமக்கு நன்றாகத் தெரியும் போலிருக்கிறது!" என்று அங்கிருந்தவர்களில் ஒருவர் கேட்டார்.

"திசை தெரிவதற்குப் பெரிய அறிவு ஒன்றும் தேவையில்லை. சூரியன் உங்கள் நாட்டை மலை வாயிலிலிருந்து எட்டிப் பார்க்கிறானே எப்பக்கம் உதித்திருக்கிறான் பாருங்கள். அந்தப் பக்கத்திலிருந்து வருகிறேன். அதனால் தான் கிழக்கே என்று சொல்கிறேன். உங்களுடைய நாட்டில் சூரியன் மிகவும் தாமதமாகத்தான் உதிக்கிறான், இல்லையா?" என்று சங்கரத்தேவன் கேட்டவுடன் அங்குள்ளவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. இவன் பேசும் மொழியும் அவர்களுக்கு உடனே புரிந்து கொள்ளச் சற்று கடினமாக இருந்தது. இருந்தாலும் தங்களுடைய மன்னரைக் காண வந்திருக்கிறான் என்றவுடன் அவனுக்குச் சற்று மரியாதை தெரிவித்தனர்.

"மன்னர் இங்கேயிருக்கிறாரென்று உனக்கு எப்படி தெரியும். அவர் தலைநகரில் இருப்பார். அங்கு செல்லாமல் இங்கே உன்னை வரச் சொன்னது யார்?" என்று கேட்டனர்.

"நான் கேள்விப்பட்டவரையில் மன்னர் இந்தத் துறைமுகப் பட்டணத்தில் தான் தங்கியிருப்பாரென்று அறிகிறேன். அதனால் தான் நான் இங்கு வந்தேன். தாங்கள் சொல்லுங்கள் அவர் எங்கேயிருக்கிறாரென்று" என்று சங்கரத் தேவன் மிகவும் அமைதியாகவும், அடக்கமாகவும், ஆனால் கண்டிப்பாகவும் கேட்டதால் அவர்கள் சங்கரத் தேவனின் நிலைமையைப் புரிந்து கொண்டனர். அவன் பெரும் வீரனென்பதையும், முக்கியமான காரியத்திற்காக அவன் சோழநாட்டிலிருந்து வந்திருக்கிறானென்பதையும் அவர்கள் தெரிந்து கொண்டார்கள். அதனால் விழிஞ்ஞம் மாளிகை இருக்கும் இடத்தை அவர்களிலொருவன் சுட்டிக் காட்டினான்.



கடற்கரையோரமாக அமைந்திருந்த மாளிகைக்குச் சங்கரதேவன் சென்றான். வாயிற்காவலனிடம் தான் வந்திருக்கும் செய்தியைத் தெரிவித்தான். சிறிதுநேரம் ஏதும் மறுமொழி வரவில்லை. அவனுக்கு நடந்து வந்த களைப்பும் பசியும் சேர்ந்து கொண்டன. ஒவ்வொரு அதிகாரியாக மாளிகைக்குள்ளிருந்து வருவதும், அவனைப் பார்த்து, எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்பதும், அவனைப் பொறுமையிழக்க வைத்தன. அவன் கொண்டு வந்திருந்த ஓலையோ காணாமற் போய்விட்டது. அவன் இப்போது என்ன சொல்லப்போகிறான்? ஓலை காணாமல் போய்விட்டதென்று சொல்லப்போகிறானா அல்லது சோழநாட்டின் அரசர் ராஜராஜ சோழர் அறிவித்த செய்தியை அவன் தெரிவிக்கப் போகிறானா? அம்மாதிரி செய்வதொரு தூய வீரனுக்கு முறை தானா என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். நல்ல வேளையாக அந்த ஓலையிலிருந்த செய்தியை ராஜராஜன் முன்னமே அவனுக்குத் தெரிவித்திருந்தார். ஓலையில் இல்லாமலிருந்த சில செய்திகளையும் சொல்லுமாறு அவனுக்கு அரசர் கூறியிருந்தார். அதனால், ஓலையை அபகரித்து சென்றவர்களால் தன் இதயத்தில் பொதிந்திருக்கும் செய்தியை அபகரித்துச் செல்ல முடியவில்லையென்று தனக்குள் நகைத்துக் கொண்டான்.

அவனுக்குக் களைப்பாக இருந்தது. 'அப்படியென்ன சேரநாட்டில் உபசாரத்திற்குப் பஞ்சமோ' என்று கூட அவன் எண்ணிக் கொண்டான்.

"சோழச் சக்கரவர்த்தி அனுப்பிய தூதனை அவர்கள் உபசரிக்கும் முறை இதுதானோ?" என்று அவனுக்கு வருத்தமேற்பட்டது. அப்போது மாளிகையிலிருந்து வாயிற்காப்போன் வந்தான். அவன் சங்கரத் தேவனைப் பார்த்து, "தாங்கள் நெடுந்தூரம் பயணஞ்செய்து களைத்துப் போயிருக்கிறீர்கள். தங்களுக்குத் தங்க இடமும், உண்ண உணவும் கொடுத்து உபசரிக்குமாறு மாளிகை அதிகாரி அன்பாகச் சொல்லியிருக்கிறார். தாங்கள் வந்து, நீராடி, வேற்றாடை அணிந்து, களைப்பாறி, பிறகு சேரமன்னரைச் சந்திக்கலாம்" என்று சொன்னவுடன் தான் அவனுக்குச் சற்று தெம்பு வந்தது.

சத்திரம் ஒன்றிற்கு அவன் அழைத்துச் செல்லப்பட்டான். அவனுக்கு நீராடுவதற்கான இடத்தைக் காட்டினார்கள். அந்த விடுதி முன், சற்று மறைக்கப்பட்டிருந்த ஓர் அறையை அவன் சுட்டிக்காட்டி, "இங்கு யாரும் வரமாட்டார்கள். தாங்கள் இங்கு உடையை வைத்து விட்டு வாருங்கள் என்றார்கள். சங்கரத்தேவன் தான் அணிந்திருந்த உடையை அவிழ்த்து வைத்துவிட்டு நீர் நிலையிலிறங்கி மிக ஆனந்தமாக மனம் குளிருமட்டும் குளித்தான். அவன் களைப்பெல்லாம் நீங்கியது போலிருந்தது. காலைவேளையில், சில்லென்ற நீரில் முக்கி முக்கி நீராடுவது உடலுக்குப்

புதுத் தெம்பை அளித்தது. தன்னுடைய பயணக் களைப்பு, ஏமாற்றங்கள் யாவும் மறைந்தன போல் தோன்றியது. மூதாட்டியின் வீட்டிலே அவள் செய்த உதவிகளை நினைத்துக் கொண்டான். மூதாட்டியின் பெயர்த்தி திறமையுடன் பேசியதையும், அவள் அழகிய விழியைச் சுழல விட்டுத் தன்னை விழுங்கி விடுபவள் போல் நோக்கியதையும் நினைத்துக் கொண்டான். 'அயல்நாட்டில் நான் எப்படி கஷ்டப்படுகிறேனோ என்ன சங்கடப்படுகிறேனோ என்றெல்லாம் நினைத்து சுமதி வேதனைப்படுவாளே' என்றும் நினைத்துக் கொண்டான்.

நேரம் பறந்தது. அவன் நீராடி விட்டு வராததைக் கண்ட வீரர்கள் கைதட்டி அழைத்த பின்தான் தான் இன்னும் நீராடி முடிக்கவில்லையென்பதை உணர்ந்து கொண்டான். ஈரத்தைத் துடைத்துக் கொண்டு உடை மாற்றிக் கொண்டு வந்தவனுக்கு, இலைபோட்டு உணவு பரிமாறப்பட்டிருந்தது. அவன் குளித்து, அணிந்து கொள்ள வேறு புத்தாடை எடுத்து வைத்திருந்தார்கள். இடைக்கு ஓர் ஆடையும் புத்தம் புது மேலாடையும் வைத்திருந்தது கண்டு வியந்தான். அந்த நாட்டின் பழக்கம் அதுதான். தன்னைப் போன்று நான்கு உடைகளையெல்லாம் அவர்கள் அணிவதில்லையென்று கண்டு கொண்டான். அவனுக்கு இப்போது அதுபோன்று ஒரு மெல்லிய ஆடையிருந்தால் தேவலாம் போலிருந்தது. அதை எடுத்து உடுத்திக் கொண்டு உணவு உண்டான். உண்டவுடன் அவனுக்குக் களைப்பு மேலிட்டது. அப்படியே சற்று சாய்ந்து உறங்கலாம் போல் தோன்றியது. இப்போது அவனுக்குக் கவலையில்லை. அவனிடமிருந்து பறித்துச் செல்ல ஒன்றுமில்லை. அதனால் சற்று கவலையின்றி உறங்கலாமென்று எண்ணியவனாக அவர்களை நோக்கி, "ஐயா! சக்கரவர்த்தியை நான் எப்போது சந்திக்கலாம் என்று எனக்குச் சொல்லுங்கள்" என்று கேட்டான்.

"நீங்கள் இங்கேயே இருங்கள். நாங்கள் சென்று கேட்டு வருகிறோம்" என்று சொல்லிச் சென்றார்கள்.

அவன் படுத்துறங்கினான். விழித்தபோது இவ்வளவு நேரம் தூங்கிவிட்டோமே என்று வெட்கமாகக் கூட இருந்தது.

## 24

கலத்தின் மேல்தளத்தில் நின்றிருந்த கலபதி விறலியை நோக்கி, "இன்றிரவு ஆட முடியுமோ, முடியாதோ தெரியவில்லை. இன்று யாரும் உறங்கப் போவதில்லை. நான் எதிர்பார்த்த கலம் இன்னும் வரவில்லை. அந்தக் கலம் இன்று மாலைப்பொழுதில் வந்து விடலாம். இன்றிரவுப் பொழுது மிகப் பெரியதொரு குழப்பமான பொழுதாக இருக்கப் போகிறது. என்னுடைய



வீரர்களெல்லாம் விழித்துக் கொண்டு அந்தக் கலத்தை எதிர்பார்த்துத் துடித்துக் கொண்டிருக்கும் பொழுதாக அது இருக்கப் போகிறது. ஆதலால் விறலிப் பெண்ணே! இப்பொழுதே ஆடிவிடு. உன்னுடைய ஆட்டத்தை இப்போதே நான் ரசித்து விடுகிறேன். என்ன நேருமோ என்று எனக்கு ஓர் அச்சம்; இதுவரை தோன்றாத அச்சம் இப்போது தோன்றிக் கொண்டிருக்கிறது. எதிர்பார்த்திருக்கும் அந்தக் கலத்தில் முக்கியமான பொக்கிஷம் இருக்கிறதாம். சோழநாட்டிற்குத் தங்கப் பாளங்களை ஏற்றிக் கொண்டு அந்தக் கலம் வந்து கொண்டிருக்கிறதாம். பெண்ணே! உடனே உன் நாட்டிய திறமையை நாங்கள் ரசிக்கச்செய். இன்றைய கொள்ளையில் நாங்கள் வெற்றி கண்டால், உன் மேனியெல்லாம் தங்கமாக இழைத்து விடுகிறோம். இன்னும் பல மாதங்களுக்குக் கடலில் சென்று இப்படி ஒவ்வொரு கலத்தையும், எதிர்த்துத் தாக்கி உயிரைப் பணையம் வைத்துப் போராடி, வளமான எதிர்காலத்தை எண்ணிக் கனவு கண்டு கொண்டிருக்கும் நிலை ஏற்படாது. இன்று ஏற்படும் அந்தப் பெரும் வெற்றியில் என்னைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் பெருஞ்செல்வந்தர்களாகி விடுவார்கள். சேரமன்னனுக்குப் பாதியும், எனக்குப் பாதியுமாக எடுத்துக் கொண்டு, நாங்கள் வாழும் தீவிற்குப் போய்விடுகிறோம். விறலி! அழகிய பெண்ணே! நீயும் என்னுடன் எங்கள் தீவிற்கு வருகிறாயா?" என்று ஏதோ ஆவேசம் வந்தவர் போல் பேசிக்கொண்டே விறலியை நெருங்கினார்.

விறலி நிலைமையைப் புரிந்து கொண்டாள். அவள் ஆடுவதை நிறுத்தவில்லை. அவள் வேகமாக ஆடத் தொடங்கினாள். அவள் ஆட்டத்திலே கிறக்கமும் இருந்தது. காளிமாதா நடனம் ஆடுவது போன்ற வெறித்தன்மை வெளிப்பட்டது. பராசக்தியைப் பலவடிவங்களிலும் தோற்றமளிப்பது போன்று பலவித நடன முத்திரைகளைப் புலப்படுத்தி ஆடினாள். அவள் தன் பாதங்கள் நொந்து போவதையறியாமல் ஆடினாள். அவள் கால்களிலே சதங்கையில்லை. ஆனால், அவள் பாதங்கள் அந்தக் கலத்தின் மரப்பலகையிலே பதியும் போது எழுந்த ஓசை பேரிடி போல் எதிரொலித்தது. ஊமையன் திகைத்தான். கலபதியும் அவள் ஆட்டத்தின் முடிவிலே என்ன நேருமோ என்று புரியாமல் அவள் ஆடுவதையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் கண்கள் தீப்பொறி பறப்பது போல் சிவந்திருந்தன. அவள் ஆடிக் கொண்டிருந்தாள். சுழன்று சுழன்று ஆடினாள். அவள் ஆட்டத்தை எப்படி நிறுத்தச் சொல்வதென்று புரியாமல் கலபதி திகைத்து நின்று கொண்டிருந்தபோது, எதிர்பாராத ஒரு கணத்தில் அவள் துவண்டு விழுந்தாள். அவளைத் தாங்கத் கலபதி ஓடி வந்தான். அதே சமயத்தில் ஊமையன், தன் இடது கையால் அவனை ஒதுக்கித் தள்ளிவிட்டு, விறலியைத் தாங்கிக் கொண்டான்.

ஊமையன் அவளைத் தூக்கி, மேல்தளத்திலே படுக்க வைத்ததைப் பார்த்து ஆத்திரம் தாங்காமல், அவன்மீது பாய்ந்து, ''அவளைத் தொடுவதற்கு உனக்கென்ன உரிமை இருக்கிறது ஊமையே?'' என்று கலபதி கேட்டான்.

ஊமையன் மெல்லச் சிரித்தான். ஆனால், அவன் சிரிப்பிலே நாகத்தின் சீறல் இருந்தது. ஒரு கையால் கலபதியின் இருகரங்களையும் பிடித்துக் குலுக்கி, தன் மற்றொரு கையால் அவனுக்கு எச்சரிக்கை செய்வது போல், ''கீழே போ'' என்று சைகை செய்தான். மறுகணம் கலபதி அவனிடமிருந்து திமிறி, அவன் மார்பை நோக்கிக் குத்து விட்டான். எதிர்பாராத அந்தத் தாக்குதலைத் தாங்காமல், ஊமையன் தடுமாறிக் கலத்தின் ஓர் ஓரத்திற்குப் போய் விழுந்தான். கலபதி அவன் மீது மிக வேகமாகப் பாய்ந்து, அவன் கழுத்தைப் பிடித்து, அழுத்தி, ''இந்தக் கணத்துடன் நீ செத்து மடிந்து போவாய், ஊமையா! உன் உடலைத் தூக்கி இந்தக் கடலிலே போட்டு விடுவேன். கடலில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் சுறாமீன்கள் உன் உடலை ருசிபார்த்து உண்டு மகிழும், ஊமையா! என் வழியின் குறுக்கே நிற்கவா உன்னை நான் அழைத்து வந்தேன்? உன் பலத்தை, உன்னுடைய முரட்டுத் தனத்தை, போக்கை எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் உனக்குத் தனிஉரிமை அளித்தேன். என் சொந்த விவகாரத்தில் குறுக்கிட நீ யார்?'' என்று கூறிக்கொண்டே, ஊமையனுடைய குரல் எழாமல் அழுத்திக் கொண்டிருந்தபோது, ஊமையனுக்கு எங்கிருந்து அவ்வளவு பலம் வந்ததோ, அவன் தனது ஒரு காலை அவன் வயிற்றில் அழுத்தித் தள்ளவும் கலபதியின் வாயிலிருந்து 'ஓ'வென்று ஒலி எழுந்தது. அவன் தள்ளிப்போய்த் தொலைவில் கீழே விழுந்தான். ஊமையனும் எழ முயன்றான் முடியவில்லை. விறலி இதைப் பார்த்துச் செய்வதறியாது திகைத்து, ஊமையன் அருகே ஓடிவந்து, அவனுடைய நெஞ்சைத் தடவி, அவனைத் தூக்கித் தன்மடியிலே கிடத்திக் கொண்டிருந்ததைக் கலபதியின் ஏவலாளிகளும் மற்ற பணியாளர்களும், சூழ்ந்துகொண்டு வேடிக்கைப் பார்த்தனர்.

## 25

பழையாறை நகரில் வழக்கம்போலவே பொழுது விடிந்தது. பனிப் படலத்தின் மெல்லிய போர்வையை உதறித் தள்ளி கதிரவனின் கரங்கள் கிராமத்தின் மீது பரவத் தொடங்கின.

சுமதி, கவலையே உருவாக வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தாள். வீட்டு வாசலில் சாணம் தெளிக்கப் பட்டிருந்தது. ஆனால் கோலம் போடப்படவில்லை. கோலத்தட்டு அவள் அருகே இருந்தது அவள் விரல்கள் கோலமாவை அளைந்து கொண்டிருந்தன.



செங்கமலத்தாச்சியின் வருகையை அவள் விழிகள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தன. சங்கரத்தேவனின் சகோதரி செங்கமலத்தாச்சி. அவள் சுமதியுடன் வசித்து வந்தாள்.

சோழஅரசரின் சிறப்புத் தூதனாக, சங்கரத் தேவன் சோநாட்டிற்குச் செல்கிறான், என்றவுடன் செங்கமலத்தாச்சிக்கு வருத்தமாக இருந்தது. சுமதியிடம் தன் கருத்தைச் சொல்லிப் பார்த்தாள்.

''சுமதி, நீயாவது அவனுக்கு எடுத்துச் சொல்லியிருக்கக் கூடாதா? பலகாத தொலைவு அவன் செல்கிறான். அவன் வர எவ்வளவு நாள்களாகுமோ? காடும் மலையும் கடந்து அவன் செல்லவேண்டும்'' என்று தன் கவலையைச் சொன்னாள்.

சுமதிக்கும் வருத்தம் தான். பிரிவை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. திருமணமாகி அவளும் அவனும் சேர்ந்து வாழ்ந்த அந்த ஓராண்டிற்குள்ளே இப்படியொரு நெடுந்தொலைவுப் பயணமா? பிரிவா? தன் துயரத்தை, மனவேதனையை வெளியே புலப்படுத்திக் கொள்ளாமல், ''நம் சக்கரவர்த்தி இடும் கட்டளையை நிறைவேற்றுவது அவர் கடமையல்லவா, அத்தை?'' என்று கூறி புன்முறுவல் புரிய முயன்றாள் சுமதி.

''கடமை தான்; ஆனால் தன் நிலையை விளக்கிச் சொல்ல வேண்டியதும் கடமை தான். தன் இனிய மனைவியைப் பற்றி இவன் எடுத்துச் சொல்லாவிட்டால் சோழ அரசருக்கு வேறு எவ்விதம் தெரியும்'' செங்கமலத்தாச்சி அவளை விடவில்லை.

சுமதியின் முகம் நாணத்தால் மெல்லச் சிவந்தது.

''அதெப்படி முடியும் அத்தை? இப்பொழுது தான் கல்யாணம் செய்து கொண்டேன், என்னால் பிரிந்திருக்க முடியாது'' என்று அவர் சொல்ல முடியுமா? அரச கட்டளையை மீறுவது சரியாகுமா?'' என்று அத்தைக்குச் சமாதானம் சொன்னாள்.

செங்கமலத்தாச்சியால் மறுமொழி கூறமுடியவில்லை என்றாலும், சும்தியின் மனவேதனையைத் தீர்க்கப் பலவாறாக யோசித்தாள்.

சங்கரத்தேவன் பழையாறையிலிருந்துப் புறப்பட்டுச் சென்று ஒரு திங்கள் கழிந்து விட்டது.

சுமதியின் அருகேயே எப்போதும் இருந்து பிரிவாற்றாமை நோய் அவளைப் பிடித்துத் துன்பப்படுத்தாமல் இருக்கப் பழைய செய்திகளை

அவளுக்குச் சொல்லுவாள் செங்கமலத்தாச்சி. கடந்த காலச் சம்பவங்கள் எவற்றைச் சொன்னாலும், தனக்கு அவை முன்பே தெரியும் என்று சுமதி சொல்லிவிடுவாள். சோழநாட்டில் நடைபெற்ற முக்கிய செய்திகளைச் சங்கரத்தேவன் அவளுக்குச் சொல்லியிருந்தான்.

சங்கரத்தேவனும், சுமதியும் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருப்பார்கள். அப்படி என்னதான் பேசுவார்கள், என்று காண்பவர்கள் வியப்பார்கள்.

தஞ்சை மாநகர் தோன்றிய கதையை அவன் சொல்லியிருக்கிறான். விஜயாலய சோழரும் அவருக்குப் பிறகு திருக்குமாரன் ஆதித்தனும், அவர் திருமகன் பராந்தக சோழரும் எதிரிகளை வென்று தஞ்சைபுரிக் கோட்டையைக் கட்டி, சோழநாட்டின் தலைநகராக அதை அமைத்த வரலாற்றை அவன் விவரித்திருக்கிறான்.

கடந்தகால வீரவரலாற்றைக் கேட்கக் கேட்க, சுமதிக்கு சோழநாட்டின் மீது மதிப்பும் மரியாதையும் பெருகும். சங்கரத்தேவனும் வீரதீரச் செயல்கள் செய்து பெயரும் புகழும் அடையவேண்டும் என்று அவள் பெரிதும் விரும்புவாள். சோழர்குலத்துக்கு ஆயுள் உள்ளவரை நன்றியுடன் இருக்கவேண்டும் என்று அவ்வப்போது சங்கரத்தேவனிடம் கூறுவாள். இளையபிராட்டியைச் சந்திக்கும்போது உணர்ச்சி மிகுதியால் விழிகளில் நீர் மல்க, ''கடைசிக் காலம் வரை உங்களுக்குப் பணிசெய்து கிடக்க அனுமதியுங்கள் தேவி'' என்று வேண்டிக்கொள்வாள். சுமதியின் உள்ளத்தை இளைய பிராட்டி நன்கு அறிவாள்.

சேரநாட்டிற்குத் தூது செல்ல யாரை அனுப்பலாம் என்ற யோசனை ஏற்பட்டபோது சோழச் சக்கரவர்த்தியிடம் சங்கரத்தேவன் பெயரை வல்லவரையர் குறிப்பிட்டார்.

அதற்கு முன்பே, இளையபிராட்டி குந்தவை தேவிக்கும் வந்தியத்தேவனுக்கும் சிறு விவாதம் நடைபெற்றது. இளவயதிலேயே பிரிவுத் துன்பத்தைப் பெரிதும் அனுபவித்தவர் இளையபிராட்டி. வந்தியத் தேவனுக்கும் அந்த ஏக்க நிகழ்ச்சி நினைவிற்கு வராதா? இளவயதினரான சுமதியையும் சங்கரத்தேவனையும் பிரிக்கக்கூடாது என்று இளையபிராட்டி வற்புறுத்தினாள். நாட்டு நன்மைக்குக் காதலையும் தியாகம் செய்யலாம் என்று வல்லவரையர் கூறினார். விவாதம் கடுமையாக இருப்பதுபோல் தோன்றினாலும், சேரநாட்டிற்குத் தூது செல்ல சங்கரத் தேவனைத் தவிர தகுந்தவர் வேறு ஒருவரும் இலர் என்பதை இருவரும் இறுதியில் ஒப்புக் கொண்டனர்.



சங்கரத்தேவன் சேரநாடு சென்ற சிலநாள்களுக்குப் பிறகு பழையாறைக்கு, ஒருமுறை இளையபிராட்டி வந்திருந்தாள். அவளைச் சந்தித்தாள் சுமதி.

''சுமதி, நலமாக இருக்கிறாயா?'' என்று கேட்டாள் இளையபிராட்டி.

நாணத்துடன் தலைகுனிந்து கொண்டாள் சுமதி.

''ஏதாவது செய்தி வந்ததா?'' என்று இளையபிராட்டி கேட்டாள்.

சுமதி திடுக்கிட்டாள். செய்தியா! எனக்கு மட்டும் அவர் தனியாக எப்படி எழுதி அனுப்புவார்? இளையபிராட்டி இப்படிக் கேட்பதில் ஏதோ உட்பொருள் இருக்கிறது. சுமதி இளையபிராட்டியை வியப்புடன் நோக்கினாள்.

''செய்தியா? எனக்கு எப்படிக் கிடைக்கும் தேவி? யார் கொண்டு வருவார்கள்? செய்தி கொண்டு சென்றவரிடமிருந்து யார் செய்தி கொண்டு வருவார்கள்?'' சுமதி திகைப்புடன் கேட்டாள்.

இளையபிராட்டியார் உடனே மறுமொழி கூறவில்லை. சிறிதுநேரம் மௌனமாக இருந்து, பிறகு, ''சுமதி, சோழநாட்டு ஒற்றர்கள் பலதிசைகளிலும் பரவலாயிருக்கிறார்கள். சங்கரத்தேவனை அனுப்பியதுடன் நம்பிக்கையுடைய ஒற்றர்கள் சிலரையும் படைத்தலைவர் கிருஷ்ணன் ராமன் அனுப்பியுள்ளார். சங்கரத்தேவனுக்கு எந்த இடர் நேரிட்டாலும் அந்தச் செய்தி உடனுக்குடன் தஞ்சைபுரிக்குத் தெரிந்துவிடும். இந்தநேரம் செய்தி வந்திருக்கவேண்டும்; அதனால் கேட்டேன்'' என்றாள். இளையபிராட்டியின் முகத்தில் கவலை தெரிந்தது. சுமதி அதைக் கவனிக்கவில்லை.

சுமதி சிந்தித்தாள். தஞ்சை மாளிகைக்குச் செய்தியை ஒற்றர்கள் கொண்டு வராமல் என்னிடமா தெரிவிக்கப் போகிறார்கள்? இளைய பிராட்டியார் ஏன் இவ்வாறு கேட்டார்கள்? சுமதி சிந்தித்தாள். அவளுக்குக் கவலையாயிருந்தது.

இளையபிராட்டியாரைச் சந்தித்த பிறகு சில நாட்கள் கழித்து சுமதியின் வீட்டுக் கதவை அதிகாலை வேளையில் ஓர் உருவம் மெல்லத் தட்டியது.

கமலத்தாச்சி அன்று வீட்டிலில்லை. அருகிலுள்ள திருக்குடந்தைக்குச் சென்றிருந்தாள். சோழ ஆட்சியில் அச்சப்படும் படியான சூழ்நிலை ஏதுமில்லை. ஆதலால், கமலத்தாச்சி ஓரிரு நாட்கள் அயலூர் செல்வது வழக்கம்.

சுமதி கதவைத் திறந்தாள். முக்காடிட்டிருந்த அந்த உருவம் வாயிற்படியருகே நின்று, ''நீங்கதான் சுமதியா?'' என்று கேட்டது.

மாடத்திலிருந்த விளக்கைத் தூண்டி ''யாரது?'' என்று மீண்டும் கேட்டாள் சுமதி.

காலைக் குளிர் என்பதால் அந்த உருவம் முக்காடு இட்டிருப்பதாக அவள் நினைத்தாள்.

வந்த உருவம் முகத்தைத் தெளிவாகப் புலப்படுத்த வில்லை. குரலைக் கூடத் தெளிவாகத் தெரிவிக்காமல் பொய்க்குரலில் பேசியது அந்த உருவம்.

''யார் நீங்கள்?'' மீண்டும் சுமதி கேட்டாள்.

''நீங்கள் தானே சுமதி. நான் மேற்கே பல காத தொலைவிலிருந்து வருகிறேன்'' என்று குரல் வந்தது.

மேற்கே - பல காத தொலைவு - சுமதிக்குச் சங்கரத்தேவன் நினைவு வந்தது.

''வெளியே பனியில் நிற்கிறீர்களே! உள்ளே வாருங்கள்'' என்று அழைத்தாள் சுமதி.

''இல்லை இல்லை எனக்குப் பல வேலைகள் உள்ளன. இந்த ஓலையைக் கொடுத்துச் செல்லவே வந்தேன். உரியவரிடம் கொடுக்க வேண்டும் என்பது கட்டளை. அதனால் தான், ஒன்றுக்கு இரண்டு தடவை உறுதிப்படுத்திக் கொண்டேன்'' என்றது அந்த உருவம்.

'ஓலைச் செய்தி' என்ற சொல்லைக் கேட்டவுடன் சுமதி பரபரப்படைந்தாள். அத்தானிடமிருந்து வந்திருக்கலாம்...

''ஐயா, யாரிடமிருந்துச் செய்தி - ஓலையைக் கொடுங்கள்'' என்று அவள் ஆவலுடன் கையை நீட்டினாள்.

''அவர் எழுதியிருக்கிறாரா'' என்றாள் ஆவல் உந்த.

''சங்கரத்தேவனைப் பற்றிய செய்தி'' என்றது அந்த உருவம்.

சங்கரத் தேவன் - அவள் ஒருமுறை அந்த ஆசைப்பெயரை உச்சரித்தாள்.

''ஆமாம், அம்மா! அவரைப்பற்றிய செய்தி இந்த ஓலைச் சுருளில் உள்ளது. படித்துப் பாருங்கள். தாங்கள் ஏதாவது தெரிவிக்க வேண்டுமென்றால் நந்திபுர விண்ணகரத்தருகே உள்ள மண்டபத்திற்கு நாளை, இரவு நடுநிசிக்கு முன்பு வாருங்கள். நான் மீண்டும் நாளை இரவு நடுநிசிக்குப் பிறகு சேரநாடு புறப்படுகிறேன்'' என்றது அந்த உருவம்.

ஓர் சுருள் பேழையில் அடைக்கப்பட்டிருந்த அந்த ஓலையைப் பரபரப்புடன் எடுத்துப் படித்தாள், சுமதி.

''சங்கரத்தேவன் திருவஞ்சைக் களத்தில் உள்ள நடனமங்கை ஒருத்தியின் மையலில் சிக்கி அவள் மாளிகையில் இருக்கிறான்.



சோழநாட்டினின்று மாறுவேடத்தில் எவரேனும் அங்கு வந்தால் தான் அவனை மீட்க முடியும்.''

அந்த ஓலையிலுள்ள செய்தியை நடுங்கும் கரங்களுடன் மற்றொரு தடவை படித்தாள். விழிகளை நன்றாக கசக்கிக் கொண்டு மீண்டும் ஒரு தடவை படித்தாள்.

''ஐயோ'' என்று வாய்விட்டுக் கூவினாள். அந்த ஓலையைக் கொண்டு வந்தவரிடம் மேலும் விபரங்களைக் கேட்டறிய முயலாது, அவரைப் போகச் சொல்லி விட்டோமே என்று வேதனைப்பட்டாள்.

பொழுது விடிந்தது. வாயிலில் கோலமிடாது திண்ணையில் கவலையுடன் உட்கார்ந்திருந்தாள் சுமதி. இந்தச் சமயம் பார்த்துச் செங்கமலத்தாச்சி வீட்டில் இல்லாமல் திருக்குடந்தைக்குச் சென்று விட்டாளே என்று வேதனையுடன் வீதிவழியே செங்கமலத்தாச்சியின் வருகையை நோக்கியவாறு இருந்தாள். எவ்வளவு நேரம் அவ்வாறு உட்கார்ந்திருந்தாளோ தெரியாது. செங்கமலத்தாச்சி அவளைத் தட்டி எழுப்பி, ''சுமதி, வாயில் திண்ணையில் உட்கார்ந்து ஏன் உறங்கிக் கொண்டிருக்கிறாய்? வீட்டு வாசலில் கோலத்தைக் காணோம். உனக்கு என்ன நேர்ந்தது?'' என்று கவலையுடன் கேட்டாள்.

அவள் கரத்திலிருந்த ஓலையைப் பார்த்து, ''அது என்ன ஓலை? யாரிடமிருந்து வந்தது?'' என்று கேட்டவாறு அந்த ஓலையை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்.

அவள் படிப்பதற்கு முன்பே சுமதி செங்மலத்தாச்சியின் தோளில் முகம் புதைத்து, ''அத்தை! நான் மோசம் போய்விட்டேன்'' என்று விம்மினாள்.

முழுவிபரமும் அறியாத செங்கமலத்தாச்சி பரபரப்படைந்து அவளை அணைத்துக் கொண்டு ஓலையிலுள்ள செய்தியைப் படித்தறிந்தாள். ஒருகணம் அவளுக்குக் கவலையாக இருந்தது. பிறகு தன்னைத் தேற்றிக் கொண்டு, சுமதியின் கூந்தலை வருடி, ''சுமதி, கவலைப்படாதே! நாளை மாலை நந்திபுரத்துக்குச் சென்று மேலும் செய்தியைக் கேட்டறிவோம்'' என்றாள்.

மறுநாள், சுமதியும் செங்கமலத்தாச்சியும் நந்திபுரத்துக்குச் செல்வதற்குள் தஞ்சைபுரி அரண்மனையிலிருந்து இரண்டு வீரர்கள் சுமதியை அழைத்துச் செல்ல வந்திருந்தனர். உடனே அழைத்து வருமாறு இளையபிராட்டி சிவிகையை அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள் அந்த வீரர்கள்.

''தெய்வமே பார்த்து நமக்கு உதவி செய்திருக்கிறது. இளைய பிராட்டியாரிடம் தெரிவிப்போம்'' என்றாள் செங்கமலத்தாச்சி.

சேரநாட்டினின்று தஞ்சை மாளிகைக்குப் பல செய்திகள் கிடைத்திருந்தன. சங்கரத்தேவன் சேரநாட்டில் சிறைபடுத்தப் பட்டிருக்கிறான் என்ற செய்தியும் அவற்றுள் ஒன்று.

வீரர்கள் இருவர் குதிரையினின்று இறங்கினர். அவர்கள் 'இளைய பிராட்டியார் குந்தவை தேவியார் அழைப்பதாக' கூறினர். சிவிகையும் ஆயத்தமாக உடன் வந்தது.

செங்கமலத்தாச்சி திகைப்புடன், சுமதியை நோக்கினாள். இளைய பிராட்டியார் அழைக்கிறார்கள் என்றால் ஏதோ மிக முக்கியமான செய்தி இருக்க வேண்டும். அங்கு போய்த்தானாக வேண்டும். ஆனால், இன்று இரவு நந்திபுர விண்ணகரம் அருகேயுள்ள மண்டபத்திற்குச் சென்று, சங்கரத் தேவனுக்குச் செய்தி சொல்லியனுப்ப வேண்டுமே?.

செங்கமலத்தாச்சியின் மனத்தில் ஏற்பட்ட குழப்பத்தைச் சுமதி புரிந்து கொண்டாள்.

"அத்தை, இளையபிராட்டி அழைக்கும்போது உடனே செல்வது தான் நல்லது" என்றாள் சுமதி.

"உனக்குக் கிடைத்த செய்தி உன்னிடம் பரபரப்பை ஏற்படுத்தவில்லையே. சங்கரத் தேவனுக்கு என்ன நேர்ந்து விட்டதோ? எனக்குக் குழப்பமாயிருக்கிறது சுமதி. மனசை என்னவோ செய்கிறது..." செங்கமலத்தாச்சியின் குரல் தழுதழுத்தது.

"அத்தை, தைர்யம் சொல்லவேண்டிய தாங்களே அச்சப்படலாமா? இளையபிராட்டியார் என்னை அழைத்திருப்பதும் ஒருவித நன்மைக்குத் தான் என்று நினைக்கிறேன். சேரநாட்டிலிருந்து வந்த செய்தியை இளைய பிராட்டியாரிடம் உடனே தெரிவிக்கிறேன்" என்று அவள் சமாதானம் சொன்னாலும் செங்கமலத்தாச்சி சம்மதமடையவில்லை.

## 26

சிவிகை மறையும் வரை செங்கமலத்தாச்சி வீட்டின் வெளியே நின்று கொண்டிருந்தாள். குதிரை வீரர்கள் சிவிகையின் இருபுறமும் மெதுவாகச் சென்று கொண்டிருந்தனர். செங்கமலத்தாச்சியின் விழிகளில் நீர்த் தளும்பி நின்றது. சங்கரத்தேவனை அவள் நினைத்துக் கொண்டாள். ஒருநாளும் அவன் தவறான வழியில் செல்லமாட்டான் என்று தனக்குத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள். வீட்டுக்குள் உட்காரப்பிடிக்கவில்லை.



இலையில் போட்ட சோறு அப்படியே இருந்தது. அவள் அடிவயிற்றைக் கலக்கியது. இதயம் படபடத்தது. 'இளையபிராட்டியிடம், இந்தப் பெண் முழுச்செய்தியையும் சொல்வாளா' என்ற கவலை ஏற்பட்டது. நாம் பெரிய தவறு செய்துவிட்டோம். சுமதியுடன் நாமும் சென்றிருக்க வேண்டும். மறந்தோமே என்று வருந்தினாள்.

நடுநிசி நெருங்கிக் கொண்டிருந்தது. கிருஷ்ணபட்சத்து சதுர்தசி இரவு. இரவு இருளோடு வானத்து இருளும் ஒன்றுசேர்ந்து செங்கமலத்தாச்சியைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது. 'பொழுது சாயும்போதே சுமதி இளையபிராட்டியைச் சந்தித்திருப்பாள். இளையபிராட்டி உத்திர விட்டிருப்பாள். அல்லது சோழமன்னர் கட்டளையிட்டிருப்பார். அதை ஏற்று இந்த நேரம் சேரநாட்டை நோக்கிச் சோழ வீரர்கள் சென்றிருப்பார்கள்' என்ற முடிவுக்கு வந்தாள், செங்கமலத்தாச்சி.

ஆனால், சுமதி இளையபிராட்டியின் இருப்பிடம் செல்லவில்லை. சிவிகை சென்று கொண்டிருந்த ஆட்டத்தில் மெல்லக் கண்ணயர்ந்தாள் சுமதி. வெயில் குறைந்து, பொன் மாலைப்பொழுது நெருங்கிக் கொண்டிருந்தபோது சிவிகையை மாந்தோப்புக்கருகே இறக்கினார்கள்.

சுமதிக்கு பயணக்களைப்பு மிகுந்திருந்தது. சிவிகையைச் சுமப்பவர்கள் ஒரு சீராகச் சுமந்து செல்லவில்லை. பழக்கப்படாதவர்கள் சுமந்து செல்வது போல் தோன்றியது. சுமப்பவர்களின் உயரத்தில் ஏற்றத்தாழ்வு இருந்ததும் காரணமாயிருக்கலாம். சிவிகைக்குள் உட்காருமிடத்தில் அரச குடும்பத்திற்கேற்ற அலங்கரிப்பு இல்லை. பஞ்சாலான மெத்தை இல்லை. பழைய அலங்காரத் துணிகள் அழுக்கடைந்து காணப்பட்டன.

குதிரை வீரர்கள் குதிரையை மரக்கிளைகளில் கட்டிவிட்டு எங்கோ சென்றனர். சிவிகை சுமப்போர் பேசிய மொழி அவளுக்குப் புரியவில்லை. சிறிது ஓய்வெடுப்பதற்குச் சிவிகையை இறக்கியிருக்கிறார்கள் என்று நினைத்தாள்.

சுமதிக்கு தாகமாயிருந்தது. குடிக்க நீர் கேட்டாள். அவர்கள் செவியில் அது வீழ்ந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பார்வை பயத்தை அளித்தது. குடிக்க நீர் வரவில்லை. மாந்தோப்பில் இருள் பரவத் தொடங்கியது. கூட்டையடையும் பறவைகளின் ஓசை பயங்கர ஒலியாகச் சுமதியின் செவிகளில் வீழ்ந்தது.

சிவிகையைச் சுமந்து வந்தவர்கள் அங்கிருந்து புறப்பட்டு விட்டனர். சிவிகை அங்கே அனாதையாகக் கிடந்தது. சுமதியைப் பயம் பிடித்தது.

"எங்கே போகிறீர்கள். அருகே கிணறு அல்லது ஓடை இருக்கிறதா? நா வறண்டு போகிறது. குடிக்கத் தண்ணீர் வேண்டும்" என்று அவர்களை நோக்கிச் சுமதி கேட்டாள்.

அவர்கள் மறுமொழி கூறாமல் சென்று மறைந்தனர். சருகுகளின் மீது அணில் ஓடுவது கூட பெரும் ஒலியை ஏற்படுத்துவதுபோல் தோன்றியது. அந்தத் தோப்பு எந்த ஊருக்கு அருகே இருக்கிறது என்று அறியவும் அவளால் முடியவில்லை.

குதிரை வீரர்கள் திரும்பி வந்தனர். அவர்களைப் பார்த்தவுடன் 'கோ' வென்று கதறி அழவேண்டும் போல் தோன்றியது.

சிவிகை சுமப்பவர்கள் மறுமொழி கூறாமல் சென்று விட்டதை அவர்களிடம் சொன்னாள். அவர்கள் கேட்டுக் கொண்டனர். ஆனால் அவர்களிடம் அனுதாபமில்லை.

''தஞ்சைக்கு எப்போது புறப்படுகிறோம்?'' என்று அவள் கேட்டாள்.

குதிரை வீரருள் ஒருவன் நகைத்தான். சிரிப்பும் பார்வையும் பயங்கரமாயிருந்தன.

''பெண்ணே! தஞ்சைக்கு நாம் போகப்போவதில்லை!'' என்றான் அவன்.

சுமதிக்கு அவன் பேசியதிலுள்ள பொருள் முதலில் புரியவில்லை. பிறகு உணர்ந்தவுடன் நடுநடுங்கினாள். ''தஞ்சைக்குப் போகாமல் நாம் எங்கே போகிறோம்?'' சுமதி கேட்டாள். அவர்கள் பேசவில்லை. அவர்களுள் ஒருவன் சைகை மூலம் தெரிவித்தான். அவன் சுட்டிக் காட்டிய இடத்தில் அவளுக்கு ஒன்றும் தென்படவில்லை.

அவர்கள் அவளை அங்கே அழைத்துச் சென்றனர். அடர்ந்த மரங்களுக்குப் பின்னால் ஒரு வீடு இருந்தது. பாழடைந்த நிலையிலிருந்த அந்த வீடும், அதன் சுற்றுப்புறமும் ஒரு காலத்தில் செழிப்பாக இருந்திருக்க வேண்டும். மிக முக்கியமானவர் ஒருவர் அங்கு வசித்திருக்க வேண்டும். அவர் யாராயிருக்கலாம் என்று சுமதி யோசித்தாள்.

வீட்டிற்குச் வெள்ளையடித்துப் பல ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும். சுவரின் பல இடங்களில் செங்கற்கள் பல்லிளிப்பது போல் சிரித்தன. தவறி விழுந்த அரசமரவிதை பெரிதாக வளர்ந்து வீட்டின் ஒரு பகுதியைப் பிளந்தது போல் வேர்விட்டிருந்தது. வீட்டின் அமைப்பைப் பார்த்தால் சிறு மாளிகையைப் போலிருந்தது. அந்தப் பாழடைந்த வீட்டைச் சுற்றி மரஞ்செடி கொடிகள் அடர்ந்து வளர்ந்து அங்கே ஒரு வீடு இருக்கிறது என்பதை மறைத்து விட்டிருந்தன.

சுமதி தயங்கித் தயங்கி நின்றாள். ''இங்கே எதற்கு அழைத்து வந்தீர்கள். தாகமாயிருக்கிறது என்று தண்ணீர் கேட்டேன்.'' என்றாள் பயத்துடன். வீரனின்



மனைவியாயிருந்ததால் அவளுக்கு இயற்கையாகவே உள்ளத்தில் உறுதியிருந்தது; என்றாலும் அந்தச் சூழ்நிலை அவளுக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றது என்பது அவள் குரல் நடுக்கத்தில் புரிந்தது.

''தாகம் தீர்க்கவே இங்கு வந்துள்ளோம்'' என்றான் குதிரை வீரருள் ஒருவன்.

அவன் பேச்சில் ஒலித்த உட்பொருள் அவளைத் திடுக்கிட வைத்தது.

''என்ன சொல்கிறீர்கள்?'' குரலில் அவள் கடுமையை வரவழைத்துக் கொண்டாள்.

அவன் பெரிதாக சிரித்தான். ''குடிக்கத் தண்ணீர், உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் எல்லாம் தருவதற்குத் தான் இங்கு அழைத்து வந்துள்ளோம்'' என்று அவன் கூறிக் கண்ணைச் சிமிட்டினான். மற்றவனைக் காணவில்லை.

சுமதிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அந்திச் சூரியன் மறைந்து இருள் எங்கும் சூழ்ந்துவிட்டது. அந்த வீரனின் பேச்சும், சூழ்நிலையும் அவளுள்ளத்தே பெரும் அச்சத்தை விளைவித்தன.

அங்கிருந்து ஓடிவிடலாமா என்று ஒரு கணம் நினைத்தாள்.

''சுமதி'' என்று அந்த வீரன் உரிமையுடன் பெயர் சொல்லி அழைத்து அவள் கரத்தைப் பற்றி, ''இங்கிருந்து அவ்வளவு எளிதில் தப்பிச் சென்று விடமுடியாது. உன்னை எளிதில் விட்டுவிடவா இவ்வளவு சிரமப்பட்டு அழைத்து வந்தோம்'' என்று கூறி அவளை அந்த மாளிகைக்குள் அழைத்துச் சென்றான். இழுத்துச் செல்லாத குறை தான்.

சுவர்க் கோழிகளின் சுருதி மாறாத ஒலியும், அங்கும் இங்கும் பறந்து செல்லும் வௌவால்களின் ஒலியும் அவள் மேனியில் பயச்சிலிர்ப்பை அளித்தன. தன் கரத்தை அவன் பிடித்தவுடன் தணல் பட்டது போன்ற எரிச்சல் ஏற்பட்டது.

அவன் பிடியை உதறித் தள்ளினாள். எந்தப்பக்கம் ஓடி, அவனிடமிருந்துத் தப்புவதென்று அவளுக்குப் புரியவில்லை. மீண்டும் அவள் கரத்தை அவன் பலமாகப் பிடித்துக் கொண்டான். சாதாரண குதிரை வீரனைப் போல் அவன் தோன்றவில்லை. பலம் நிறைந்த முரட்டுத் தனமுடையவனாக அவன் திகழ்ந்தான்.

சுமதியின் பயம் அதிகரித்தது. பெண்மைக்குரிய அச்சம், நாணம் மிகுந்தது. தன் கற்புக்குக் களங்கம் வந்துவிடுமோ என்று அஞ்சினாள். ''ஐயோ என்னை விட்டுவிடுங்கள்... இளையபிராட்டி அழைப்பதாகக் கூறி மோசம் செய்து அழைத்து வந்த உங்கள் நோக்கம் என்ன?'' என்று கூச்சலிட்டாள்.

"என்னைக் கொன்று விடுங்கள், ஆனால் உங்கள் பசிக்கு என்னை இரையாக்கிக் குற்றுயிராய் அவமானச் சின்னமாய் என்னை ஆக்கிவிட்டுச் சென்றுவிடாதீர்கள்" என்று அழுது விம்மினாள்.

"நீங்கள் தவறாக என்னை அழைத்து வந்துவிட்டீர்கள். உங்களைப் பார்த்தால் காமுகர்களாகவும் தெரியவில்லை. உங்கள் பசிக்கு என்னை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்!" என்று கூறி அழுதாள்.

அந்த வீரன் சிரித்தான். அந்தச் சிரிப்பில் இப்போது குரூரமில்லை. பரிதாபமிருந்தது.

"சுமதி நீ நினைப்பது போல் நாங்கள் காமவெறியர்களல்லர். உன்னை ருசிக்க அழைத்து வரவில்லை. மனத்திலுள்ள பீதியை, அச்சத்தை அகற்றிவிடு. உண்மையிலேயே உன் தாகத்தைத் தணித்துக் கொள். இந்த இடம் இருள் நிறைந்திருப்பதாக நினைக்காதே. இதோ, அடுத்துள்ள கூடத்திற்கு வந்து பார். வேண்டிய அளவு நீர் குடிக்கலாம் - தண்ணீர் மட்டுமன்று; மதுவும் குடங்களில் உள்ளன. உனக்குப் பசிக்குமே! காலையிலிருந்து நீ உணவருந்தவில்லை அல்லவா! அங்கே கனிகள் இருக்கின்றன. சுடச்சுட சோறும் இருக்கும்... வேறு என்ன வேண்டும் சுமதி?" என்று அவன் கூறினான். இருளில் அவன் முகம் தெரியவில்லை. குரல் மட்டுமே கேட்டது. அவன் நினைத்திருந்தால் அந்தத் தனியிடத்தில் இருளில் முறை தவறி நடந்திருக்கலாம். ஆனால் அவன் அவ்வாறு செய்யாததிலிருந்து அவனுடைய நோக்கம் அதுவன்று - வேறு ஏதோ உள் நோக்கமிருக்கிறது. ஒரு கூட்டமே அதில் ஈடுபட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டாள். தன்னை எதற்காக அவர்கள் இவ்வாறு பாழடைந்த மாளிகைக்குக் கொண்டுவர வேண்டும்?

சிறிதுநேரம் மௌனம் நிலவியது.

"சுமதி என்ன யோசிக்கிறாய்? வா உள்ளே" என்று கூறி இருள் கூடத்தைத் தாண்டி, ஒரு கதவைத் திறந்து உள்ளே சென்றான்.

அங்கே ஓர் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சுமதிக்கு அந்த இடத்தை பார்க்க வியப்பாயிருந்தது.

## 27

அந்தக் கூடத்தில் விளக்கு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது வெளியே இருள் காத்திருககிறது என்று சத்தியம் செய்து கூறினாலும் நம்பமுடியாது.



அந்த வீடு பாழடைந்திருக்கிறது என்று சொன்னாலும் யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். உள்ளே நுழைந்தவுடன் அந்த மாளிகையின் தோற்றமே வேறுதான். அந்தக் கூடம் புதுச் சுண்ணம் அடிக்கப்பட்டு, மேல்விதானத்தில் பட்டுச் சீலைகளால் ஆன தோரணங்கள் அசைய சுவரில் வண்ணச் சித்திரங்கள் விளங்க அலங்காரமாய்க் காட்சியளித்தது.

மஞ்சங்களில் இலவம் பஞ்சினாலான திண்டுகள், தலையணைகள், மெத்தைகள் விளங்கின. நடுக்கூடத்திலுள்ள சிறுபீடத்தில் பழங்கள், தட்டங்களில் வைக்கப்பட்டிருந்தன. மண்சட்டியில் பூங்கொத்துகள் வைக்கப்பட்டிருந்தன. காலையில் பறித்து வைக்கப்பட்டிருந்ததால் சற்று வாடியிருந்தன.

சுமதி பிரமை பிடித்தவள் போல் சுற்றிலும் பார்த்தாள்.

"என்ன பார்க்கிறாய் சுமதி? பழங்களை எடுத்துக்கொள். பால் கொண்டு வருகிறேன்" என்று, கனிவுடன் கூறினான் குதிரை வீரன்.

விளக்கு வெளிச்சத்தில் அவனை ஒருமுறை இதயத்திரையில் உருவகப்படுத்திக் கொண்டாள்; இதற்கு முன்பு அவனை எங்கோ பார்த்திருக்கிறாள்; நினைவுபடுத்திக் கொள்ள முயன்றாள். படையின் ஒரு பிரிவுக்குத் தலைவரான தன் கணவரைச் சந்திக்க பலர் வருவார்கள். அவர்களுள் ஒருவராக இவன் இருந்திருக்கலாம்.

அதெப்படி இருக்க முடியும்? இவனைப் போன்ற துரோகிகள், என் கணவரைச் சந்திக்க வந்திருக்க முடியாது. என் கணவரை நெருங்கவே முடியாது. வேற்றுநாட்டு ஒற்றனைப் போல் தோன்றும் இவன் நிழல் கூட சோழர் படை வளையத்திற்குள் நுழைந்திருக்காது.

"சுமதி, ஏன் திகைத்து நின்று விட்டாய்?" என்று அவன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அந்தக் கூடத்தின் ஓர் ஓரத்திலுள்ள திரைச் சீலை மெல்ல அசைந்தது. ஓர் உருவம் அங்கே வந்தது. அந்த உருவம் மெல்லிய துயிலால் முகத்தை மூடியிருந்தது.

முகத்திரையை நீக்கியவுடன் சுமதி திடுக்கிட்டாள். 'ஆ' என்று கூவவும் நா எழவில்லை. ஒரு கணம் பின்னோக்கி நடந்தாள்.

அந்த உருவத்திற்குரியவள் பெண். சாதாரண பெண்ணல்லள், மகத்தானவள். பல ஆண்டுகளுக்கு முன்பு சுமதி அவளைப் பார்த்திருக்கிறாள். சுமதிக்கு அவளைத் தெரியும். ஆனால் அவள் சுமதியை நினைவில் கொண்டிருப்பாள் என்று உறுதியில்லை. ஆனால்,

"சுமதி" - அவள் குரல் கொடுத்தாள். "வா, இப்படி உட்கார்..." என்றாள் அவள், சுமதி உட்காரவில்லை. சுமதியை வைத்த கண்ணை எடுக்காமல்

அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். தன் பெயரை நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறாள்.

ஐம்பது அகவை அவளுக்கு இருக்கலாம். முகத்தில் முதுமையின் எதிரொலி பளிச்சிட்டது. ஆனால், குரலில் மாறுதலில்லை. தடுமாற்றமில்லை. இனிமை கலந்த கண்டிப்பு இருந்தது.

''சுமதி என்னை உனக்கு நினைவில்லையா?'' என்று அவள் கேட்டாள்.

நினைவில்லாமல் என்ன? சோழநாட்டையே கலக்கிய பெண் புலியை யாரால் மறக்க முடியும்? நந்தினி! சுமதியின் உதடுகள் அந்தப் பெயரை ஒருமுறை முணுமுணுத்தது. பெயரைச் சொன்னால் கூட சோழநாட்டு அரச குடும்பத்தினர் சுமதியை விரோதக் கண் கொண்டு பார்க்கக்கூடும்.

இவள் இப்போது இங்கே எங்கு வந்தாள்? பழையாறையினின்று தஞ்சை செல்லும் சாலையில் உள்ள இந்த இடத்திற்கு இப்போது தான் வந்திருக்கிறாளா? எப்போதும் வசிக்கிறாளா?

''சுமதி, என்ன யோசிக்கிறாய்? என்னை இங்கே காண்பதில் அதிர்ச்சியா?'' என்று கேட்டாள்.

ஆமாம் என்று சொல்லவும் இயலவில்லை. இல்லை என்று சொல்லவும் அவளுக்கு விருப்பமில்லை. அசையாமல் கற்சிலை போல் நின்று கொண்டிருந்தாள்.

நந்தினி குதிரை வீரனைப் பார்த்து, ''இவளை நீ பயமுறுத்தினாயா? ஏதும் மறுமொழி கூறாமல் நிற்கிறாளே? விபரமெல்லாம் சொல்லித்தானே இவளை அழைத்து வந்தாய்?'' என்று கேட்டாள்.

சுமதிக்கு எரிச்சலாக வந்தது. இவன் நமக்குக் கூறிய விபரம் தான் என்ன? செய்திதான் என்ன? பொய் சொல்லி நம்மை அழைத்து வந்து விட்டான். குடிக்க நீர் கேட்டோம்; இங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறான்.

சுமதி அவனைச் சுட்டெரிப்பதுபோல் திரும்பிப் பார்த்தாள். வீரனின் மனைவி அல்லவா? அவளிடமிருந்து அச்சம் சிறிது சிறிதாக விலகிக் கொண்டிருந்தது. சோழநாட்டின் பயங்கர விரோதி, தஞ்சைபுரிக்கருகிலேயே இயங்கும் செய்தியைச் சோழ ஒற்றர்கள் ஏன் அறியவில்லை என்ற எண்ணம் தோன்றியபோது உடனே தஞ்சைக்குச் சென்று இளையபிராட்டியிடம் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் பொங்கியதால், பயம் விலகத் தொடங்கியது.

''என்னை ஏன் இவன் இங்கு அழைத்து வந்தான் என்று கேளுங்கள்: பொய் சொல்லி ஏமாற்றி என்னை அழைத்து வந்துவிட்டு, மரம்போல் நிற்கிறான்'' என்று சீறினாள். அவளுக்கு அந்தச் சமயம் ஆத்திரம் எவ்வாறு பொங்கியதோ!



நந்தினியின் இதழில் மெல்லிய புன்னகை ஒளிவிட்டது. சுமதியின் சீற்றத்திலும் ஓர் அழகு இருப்பது போல் தோன்றியது. சங்காத் தேவனுக்கு ஏற்ற மனைவிதான் இவள் என்று முடிவு செய்த நந்தினி, சுமதியை நோக்கி, ''கோபப்படாதே சுமதி! பசியும் களைப்பும் உன் விழிகளில் தெரிகின்றன. பழங்களை முதலில் எடுத்துக்கொள். பிறகு நாமிருவரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்துவோம். அப்போது விவரமாக - மனம் விட்டுப்பேசுவோம்'' என்று அமைதியாகச் சொன்னாள்.

சுமதி அவளையே கூர்ந்து நோக்கினாள். நீண்ட நாட்கள் பழகியவளைப் போல் பேசுகிறாளே. உறவுமுறை உடையவள் போல் பேசுகிறாளே. இவ்வளவு அன்பு பாராட்டுபவள், நம்மை ஏன் பழையாறையிலிருந்து ஏமாற்றி அழைத்து வரச் செய்திருக்க வேண்டும்? சுமதிக்கு அங்கே ஒரு கணம் கூட இருக்க விருப்பமில்லை.

''என்னை எதற்காக இங்கே அழைத்து வந்தீர்கள்? அதை முதலில் சொல்லுங்கள்'' என்று கேட்டவள் குரலில் ஆத்திரம் மிகுந்திருந்தது.

அவளுக்குத் தாகமாகவுமிருந்தது. இனிமேல் பேசக்கூட முடியாது மயக்கம் வருவது போல் தோன்றிது.

குதிரை வீரன் ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வந்தான். அதைக் குடிக்கக் கூடாது என்று தோன்றினாலும் அந்த நிலையில் செம்பை அவன் கையிலிருந்து வேகமாகப் பறித்தாள். தண்ணீர் தரையில் சிந்தியது. அவள் புடவையிலும் தெளித்து ஈரமாக்கியது. செம்புடனேயே தூக்கிக் குடித்து தன் ஆத்திரத்தைப் புலப்படுத்த அதைக் கீழே தொப்பெனறு போட்டாள். வெண்கலத்தால் ஆன அந்தச் செம்பு 'ணங்' என்ற ஒலியுடன் விழுந்து உருண்டது. நந்தியினின் புருவம் இலேசாகச் சுருங்கியது.

''சுமதிக்கு மிகவும் கோபம், பசியால் ஏற்பட்டதா?'' என்றாள் நந்தினி மெல்லிய குரலில் அவளைக் கூர்ந்து நோக்கியவாறு.

''என்னை எதற்காக இங்கே அழைத்து வந்தீர்கள். அதைச் சொல்லுங்கள்'' சுமதி கூச்சலிட்டாள்.

''உன்னால் எனக்கு ஒரு காரியமாக வேண்டும்'' என்றாள் நந்தினி.

சுமதிக்கு அந்தவேளையில் ஏற்பட்ட ஆத்திரத்திலும் சற்று வியப்பு ஏற்பட்டது.

சோழநாட்டின் பரமவிரோதியும், சோழர் குலத்தையே பூண்டோடு அழித்து விடவேண்டும் என்று சபதம் பூண்டவர்களுக்குத் தலைவியாகத் திகழும் நந்தினி - என்னைப் பார்த்து ஓர் உதவி கேட்கிறாள், ஹ¨ம்!

சோழநாட்டில் பாண்டிய விரோதிகளா? சுமதியால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"என்ன மவுனமாயிருக்கிறாய்? ஏதோ சிந்திக்கிறாய்! மிகவும் துரிதமாக இயங்கவேண்டும். இவ்வளவு நேரத்தை வீணாக்கியதே தவறு" என்றாள் நந்தினி. இப்போது குரலில் கனிவு இல்லை. மெல்ல மெல்லக் கட்டளை உருவாகியது.

"நான் வீணாக்கவில்லை. நீங்கள் தான் பூர்வ பீடிகையாக ஏதேதோ கூறி நேரத்தை வீணாக்கி வருகிறீர்கள். உங்களை விட எனக்கு நேரம் பொன்னானது. என் உயிர்ப்பிரச்சினை ஒவ்வொரு கணமும் ஊசலாடுகிறது. நந்திபுர விண்ணகரத்திற்கருகே சேரநாட்டு ஒற்றன் ஒருவன் என்னைச் சந்திக்குமாறு சொல்லியிருக்கிறான். என் கணவரிடமிருந்து ஓலையொன்று கொண்டு வந்தான் அவன். என் கணவர் ஆபத்தில் சிக்கியிருக்கிறார். அவருக்கு நான் மறுமொழி எழுதவேண்டும். அந்த ஒற்றனையும் சந்திக்காமல் இளையபிராட்டி அழைக்கிறார் என்றவுடன் குதிரை வீரர்களுடன் சிவிகையில் வந்தேன். எல்லாம் பொய். நம்பிக்கைத் துரோகம். சோழநாட்டில் இதுபோன்று எப்போதும் நடைபெறாது. ஒன்று என்னை நந்திபுரம் செல்ல விடுங்கள்; அல்லது தஞ்சைபுரிக்குச் சென்று இளையபிராட்டியைச் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள். என்னால் காரியமொன்று ஆகவேண்டும் என்று கூறுகிறீர்கள்! எனக்கு ஒன்றுமே புரியவில்லை. குழப்பமாயிருக்கிறது" என்று மளமளவென்று பேசினாள் சுமதி.

"சுமதி, உனக்கு ஏற்பட்டுள்ள ஆத்திரம், ஏமாற்றம், திகில், பரபரப்பு எல்லாம் புரிகிறது. வா, உள்ளே சென்று உணவருந்தியவாறு பேசுவோம். எனக்குப் பசிக்கிறது. நான் சோற்றைக் கண்டு இரண்டு நாட்களாகின்றது. இரண்டு நாட்களாக உறக்கமில்லை. இன்றும் உறக்கம் இருக்காது. எவ்வளவு விரைவில் நான் புறப்படுகிறேனோ அவ்வளவு விரைவில் நான் சோழநாட்டு எல்லையைத் தாண்டிச் சென்று விட முடியும். வா, போகலாம்" என்று எழுந்து அந்தக்கூடத்தை ஒட்டியிருந்த அறைக்குள் சென்றாள்.

அங்கே இலை போடப்பட்டுப் பரிமாறப்பட்டிருந்தது. இலையின் நடுவே முல்லை விரித்தாற்போன்று சுடச்சுட சோறு - ஆவி பறந்து கொண்டிருந்தது.

என்னதான் நடக்கிறது பார்ப்போம் என்று சுமதி இலையொன்றின் முன் அமர்ந்தாள். பேசிக் கொண்டே நந்தினி வேகமாக உண்ணத் தொடங்கினாள்.

"சுமதி என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் என்பதை நானறிவேன். சோழநாட்டின் விரோதி, பாண்டிய நாட்டினின்று இங்கே வந்தது எப்படி, சோழ ஒற்றர்கள் விழிகளில் தென்படவில்லையா என



நினைப்பாய். சுமதி, சோழநாட்டிற்குப் பெரிய ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. கடல் வழியே அந்த ஆபத்து வருகிறது. நிலத்தின் வழியே வருகிறது. படைவீரர்களின் தாக்குதலுடன் மறைந்திருந்து தாக்குபவர்களின் எதிர்பாராத தாக்குதலும் நடைபெறவிருக்கிறது. இந்தச் சமயத்தில் நீ ஓர் உதவி செய்யவேண்டும். உன் கணவர் சங்கரத்தேவன் மிகத் திறமைசாலி. வீரத்தில் சிறந்தவன். அதனால் தான் அவனைச் சேரநாட்டிற்கு அனுப்பினார் சோழவேந்தர். அதற்கு முக்கிய காரணம் வல்லவரையர். உன் கணவர் வல்லவரையரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். சேரநாட்டிற்குத் தான் செல்லாமல் உன் கணவரை ஏன் அனுப்பினார் என்று யோசித்தாயா?" என்று நந்தினி பேசிவரும் போது சுமதி குறுக்கிட்டு, "வல்லவரையர் என்ன கட்டளையிடுகிறாரோ அதைச் சந்தேகித்துக் கேள்வி கேட்கும் வழக்கம் எங்களுக்கில்லை. எங்கள் நாட்டின் பாதுகாப்பிற்காக எடுக்கப்படும் நடவடிக்கையைப் பற்றி கேட்க நீங்கள் யார்? என் கணவரும், நானும் சோழநாட்டின் நன்மைக்காகவே வாழ்பவர்கள். என்னிடமே நீங்கள் வல்லவரையரைப் பற்றியும் சோழநாட்டைப் பற்றியும் குறைவாகப் பேசுவதை நான் கண்டிக்கிறேன்" என்றாள்.

நந்தினி மெல்லச் சிரித்தவாறு, "சுமதி, அவசரப்பட்டு விட்டாய். உன் நன்மைக்காகவே நான் சொல்கிறேன். உனக்கு ஏற்படும் நன்மை எனக்கு ஒருவித உதவியாக அமைகிறது. சுமதி நீ நன்றாகச் சிந்தித்துப்பார். உனக்குச் சோழநாடு முக்கியமா? சங்கரத்தேவனின் நல்வாழ்வு முக்கியமா?" என்று கேட்டாள்.

"சோழநாட்டின் நல்வாழ்விற்காக, என் கணவரின் நலத்தையும் நான் புறக்கணிக்கச் சித்தமாயிருக்கிறேன். என் கணவரும் நானும் சோழ நாட்டிற்காகவே வாழ்கிறோம்" என்று அழுத்தந் திருத்தமாக சுமதி கூறினாள்.

நந்தினி திகைத்தாள். சுமதியின் நாட்டுப்பற்றைக் கண்டு அவள் வியப்படைந்தாள், அவளைக் கொண்டு தான் நிறைவேற்ற நினைத்ததை எப்படியும் முடித்துவிட வேண்டும் என்று உறுதி பூண்டாள்.

"சுமதி, உன் கணவர் திருவஞ்சைக் களத்தில் ஒரு பெண்ணின் மையலில் சிக்கிக் கொண்டிருக்கிறார் என்று செய்தி வந்ததாகக் கூறினாய். நீ அவரிருக்குமிடம் செல்ல நான் ஏற்பாடு செய்தால் அங்கே செல்வாயா?" என்று கேட்டாள்.

சுமதி தலையை அசைத்தாள். "போக மாட்டேன்" என்றாள்.

"பிறகு நந்திரபுரத்து விண்ணகரக் கோயில் அருகே உள்ள மண்டபத்தில் சேரநாட்டு ஒற்றர்களைச் சந்திப்பதாக ஒப்புக் கொண்டது ஏன்?" என்று நந்தினி கேட்டாள்.

"நான் ஒரு செய்தியை அவ்விடம் கொடுக்க எண்ணினேன். சேரநாட்டிடிற்குத் தூதராகச் சென்ற என் கணவர் தன் பணியை முடித்ததும் உடனே சோழநாடு திரும்ப வேண்டியதன் அவசியத்தை அவருக்கு நினைவுப்படுத்தி, அங்கே அழகியின் மையலில் சிக்கியிருப்பது உண்மையென்றால் அந்த அழகியின் தொடர்பை உதறி உடனே சோழநாடு திரும்பவேண்டும் என்றும், அப்படி வராவிட்டால் நான் உயிர்த்தியாகம் செய்து கொண்டு விடுவேன் என்றும் செய்தி அனுப்ப முடிவு செய்தேன்" என்றாள்.

நந்தினி அவளையே உற்றுப் பார்த்தவாறிருந்து "சுமதி, நான் கேட்கும் உதவியில் உன்னுடைய முடிவும் அடங்கியிருக்கிறது" என்றாள்.

நந்தினி கூறியதைச் சுமதியால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" சுமதி கேட்டாள்.

நந்தினி சொன்னாள். "தஞ்சைபுரிக்குச் சென்று நீ இளையபிராட்டியை உடனே சந்திக்க வேண்டும்."

"அதைச் செய்யத்தானே நான் புறப்பட்டேன். என்னை உங்கள் ஆட்க்ள் ஏமாற்றி விட்டார்கள்."

"ஏமாற்றவில்லை, இளையபிராட்டியிடம் செல்லும் போது உனக்கும் எனக்கும் பயன்படும் படியான ஒரு காரியத்தைச் செய்யவேண்டும். அந்தச் செய்தியை நான் உன்னிடம் சொல்லவேண்டும் என்பதற்காகவே உன்னை இங்கே அழைத்து வந்தார்கள். நேரமாகிறது; நான் சொல்வதைக் கேட்கிறாயா?" என்று நந்தினி கேட்டாள்.

சுமதி சிறிது யோசித்தாள். பிறகு, "சரி, சொல்லுங்கள்" என்றாள்.

## 28

நந்தினி கூறியதைக் கேட்டு சுமதி திடுக்கிட்டாள். அந்தச் செயலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடிவு செய்தாள்.

சோழகுலத்தின் மீது பழி வாங்கும் உணர்ச்சியை இன்னும் கைவிடாது இருக்கும் பாண்டியர் தலைவி சொன்ன அந்தத் திட்டத்தால் ஏற்பட்ட நடுக்கத்தை விட தஞ்சைக்கு மிக அருகே நந்தினி தங்கியிருந்து மிகவும் துணிவுடன் சதித்திட்டத்தைத் தீட்டுவதைப் பார்க்கும்பொழுது கவலை, பயம் இரண்டும் சுமதிக்கு அதிகரித்தன.

தஞ்சை மாளிகைக்குச் செல்வதாம், அங்கே இளையபிராட்டி குந்தவையைச் சந்திப்பதாம்! மிக எளிதாகச் சொல்கிறார். ஆம்; நான் தஞ்சை



மாளிகைக்குச் செல்லப் போகிறேன். இளையபிராட்டியைச் சந்திக்கப் போகிறேன். இதைத் தெரிந்து வைத்துக் கொண்டிருநத நந்தினி சொன்ன திட்டம் அவளை மிகப்பெரும் கவலைக்கு உள்ளாக்கியது. 'எப்படியாவது தஞ்சை மாளிகைக்குள் இளையபிராட்டி தங்கும் இடத்தில பாண்டிய ஆபத்துதவியாளர் ஒருவரை அனுமதித்து விட வேண்டுமாம். அதைச் செய்தால் போதும்" என்று நந்தினி கூறினாள்.

சுமதிக்கு இப்பொழுது பயத்துடன் சிரிப்பும் வந்தது. என்ன துணிவிருந்தால் நந்தினி என்னிடமே இதைக் கூறுகிறாளோ! ஓ என் கணவர் சேரநாட்டில் வகையாகச் சிக்கிக் கொண்டிருப்பதிலிருந்து அவரை மீட்டுத் தருகிறேன் என்ற பசப்பு வார்த்தையைச் சொல்லியிருக்கிறாள் அல்லவா? அதனால் அவர்கள் என்ன சொன்னாலும் நான் செய்வேன் என்பதை உறுதியாக நம்பித் தன் திட்டத்தைக் கூறியிருக்கிறாள் போலும்! இளையபிராட்டியை மயக்க மூலிகைகள் கொண்டு மயங்கவைத்து, அந்த மாளிகையிலிருந்து அவளை அபகரித்துச் சென்று யாரும் அறியா இடத்தில் சிறைவைப்பது அவன் நோக்கம். பிறகு இளையபிராட்டியைக் காணவில்லை என்ற பரபரப்பு சோழ அரண்மனையில் ஏற்படும். ஒரு மாய ஓலை வல்லவரையர் வந்தியத் தேவனிடம் கொடுக்கப்படும். அந்த ஓலையில் குறிப்பிட்ட இடத்திற்கு வந்தியத்தேவன் வந்தால் இளையபிராட்டியைப் பார்க்கலாம். அதற்கு ஈடாக வல்லவரையர் செய்யவேண்டியது என்னவென்று அவர்கள் தெரிவித்ததைக் கேட்க சுமதிக்குக் கவலை ஏற்பட்டது. அவர்கள் ஒரு கல்லில் பல மாங்காய்களை அடிக்க விரும்புகிறார்கள். தன்னைக் கொண்டு சோழகுலத்திற்குப் பெரிய தீங்கு ஒன்றை ஏற்படுத்த நினைக்கிறார்கள். அவர்கள் திட்டப்படி நான் செய்ய ஒப்புக் கொண்டால் திருவஞ்சைக்களம் என்ற இடத்தில் அழகியின் மையலில் சிக்குண்டு அதனால் சேரமன்னருடைய கடும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் சங்கரத்தேவனை மிக எளிதாக விடுவித்துத் திரும்பவும் சோழநாட்டிற்கு அழைத்து வந்து சேர்ப்பதாக வாக்குறுதி அளிக்கிறாள். இருந்த இடத்திலிருந்தே நந்தினியால் எவ்வாறு இவற்றைச் செய்ய முடியும்? நந்தினி சோழநாட்டில் நடக்கும் ஒவ்வொரு சிறுசெய்தியையும் தெரிந்து கொண்டிருக்கிறாளா? இங்கிருந்து யாரோ அவர்களுக்கு அவ்வப்பொழுது நடப்பனவற்றை எல்லாம் சொல்கிறார்கள். அதை வைத்துக் கொண்டுத் தான் திட்டம் தீட்டுகிறாள் நந்தினி.

சுமதி மௌனமாக நந்தினியைப் பார்த்தவாறு நிற்கும் பொழுது நந்தினி அவளைத் துரிதப்படுத்தினாள்.

"சுமதி! எதைப்பற்றியும் யோசிக்காதே. சிந்திப்பதற்கு இப்போது நேரமில்லை" என்று கூறிச் சற்று நிறுத்தி மெல்லச் சிரித்தவாறு, "நீ சிந்திக்கத்

தொடங்கினால் உறுதியாக நான் சொல்வதை ஏற்றுக் கொள்ளமாட்டாய் என்பது எனக்குத் தெரியும். இளையபிராட்டியை நீ அணுகும் பொழுது அவர்களுக்குத் தீங்கு செய்யும் நோக்கத்துடன் அணுகுவது உனக்கு ஒவ்வாமல் இருக்கலாம். ஆனால் நீ உன் மனச்சாட்சியையும் நன்றி உணர்வையும் எடுத்து வேறுஇடத்தில் வைத்துவிடு. வேறுவழியில்லை என்ற மனப்பாங்கு கொள்ளவேண்டும். அது எப்படி முடியும் என்று நீ கேட்கலாம். முடிவு செய்யவேண்டியது உன் விருப்பம். உன்னால் இதைச் செய்ய இயலாவிடில் உனக்கு இரண்டுவிதத் தொல்லைகள் காத்திருக்கின்றன. உன் அன்புக்குரிய சங்கரத்தேவன் திருவஞ்சைக் களத்திலிருந்து உயிருடன் திரும்ப மாட்டான். அதுமட்டுமா! நீ உன் உற்றார் உறவினர்களை ஒருபோதும் சந்திக்க முடியாத ஓர் இடத்திற்குச் சென்று விடுவாய். விரைவில் ஒரு முடிவுக்கு வா'' என்று கூறி முடித்துச் சுமதியை உற்றுநோக்கினாள்.

சுமதி எரிச்சலுடன் சொன்னாள்: ''இதைச் சொல்வதற்காகவா என்னை இங்கே அழைத்து வந்து விருந்தளித்து அன்பாகப் பேசுகிறீர்கள். என் கையாலேயே என் கண்ணைக் குத்திக் கொள்ளும் திட்டத்தைச் சொல்கிறீர்கள். நான் உங்கள் பேச்சைக் கேட்கமாட்டேன் என்று உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் சொல்வதை நான் நிறைவேற்றவே முடியாது. எனக்கு என் கணவரைவிட உற்றார் உறவினர்களை விட இந்த நாடு தான் முக்கியம். நான் பிறந்த சோழ மண்ணை நான் மிகவும் நேசிக்கிறேன். சோழகுலத்துத் தலைவர்கள் தான் முக்கியம் என்பதை முதலிலேயே சொல்லிவிட்டேன். நந்தினி! உங்களைப் பற்றி நான் நன்றாக அறிவேன். என் கணவர் ஒன்று விடாமல் சொல்லியிருக்கிறார்.''

நந்தினியின் விழிகளில் சீற்றம் தெரிந்தது. உள்ளத்திலே எழும் கோபஉணர்ச்சியையும், எரிச்சலையும் முகத்திலே காட்டிக் கொள்ளாமல், ''உன் கணவர் என்ன சொல்லியிருக்கிறார்? உன் எதிரிலேயே மரியாதையாக 'அவர்' என்று அழைக்கிறேன். அவன் சிறிய பையன். மீசை அரும்பாததற்கு முன்பே நான் அவனைச் சோழர் படையில் பார்த்திருக்கிறேன். அவனுடைய கண்கள் துறுதுறுவென்று சுழலும். அவன் பார்வையிலேயே அறிவும் ஆற்றலும் சுடர்விடுவதை அறிந்திருக்கிறேன். ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் அவன் இந்தச் சோழநாட்டின் தளபதியாக வருவான் என்ற நம்பிக்கை எனக்குண்டு. வீரமும், அறிவும் ஒன்று சேர்ந்த அவனைச் சோழநாட்டிலிருந்து பிரித்துவிட வேண்டும் என்பது தான் எங்களுடைய திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாங்கள் எவ்வளவோ திட்டங்களைத் தீட்டினோம். எங்களுக்கு வந்தியத்தேவனே உதவி செய்து விட்டார். அவர் கருத்தைக் கேட்டு சோழநாட்டினின்று சங்கரத்தேவனைப் பிரித்துச் சென்று விட்டனர்.



வல்லவரையருக்குத் தெரியும். தன்னையும் சங்கரத்தேவன் மிஞ்சிவிடுவான் என்று. வல்லவரையருக்கு ஓர் இளையபிராட்டி என்றால் சங்கரத்தேவனுக்கு ஓர் சுமதி!'' என்று கூறிப் பெரியதாகச் சிரித்த நந்தினி தொடர்ந்தாள்: ''வல்லவரையரின் உள்ளத்தில் எப்பொழுதுமே பொறாமை தான் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும். வல்லவரையருக்கு வீரம் முக்கால் பங்கு என்றால் தந்திரம் கால் பங்கு. தந்திரத்தோடு எரிச்சலும், பொறாமையும் அதில் கலந்திருக்கும். சோழநாட்டிற்குள் வல்லவரையர் எந்தவிதத்தில் நுழைந்தார் என்பது உனக்குத் தெரிந்திருக்காது. இன்று சோழ குலத்தவரை ஆட்டிப்படைக்கும் திறன் படைத்தவராக அவர் விளங்குகிறார். அவருக்கு என்ன நேர்ந்தது என்பது உனக்குத் தெரியுமா? ஆதித்த கரிகாலனைக் கொலை செய்ததற்காகச் சிறையில் அடைக்கப் பட்டார். அவருடைய கரம் பிடித்த இளைய பிராட்டியின் செல்வாக்கைக் கொண்டு இந்தச் சோழநாட்டையே தன் கைவசம் வைத்திருக்க வேண்டும் என்ற திட்டம் அவரிடம் உறுதியாக இருக்கிறது. புதியநாட்டைப் பெற்று அதற்கு அரசராகி விட்டார், மகதநாடாம்! அவருடைய நாட்டிற்கு ஒரு புதுப்பெயர் தந்திரங்கள் நிறைந்த அந்தக் கூட்டத்திடையே உண்மை ஊழியராய், உன் கணவர் இருப்பதை நினைக்க எனக்கு வியப்பாக இருக்கிறது. உனக்கு ஒன்றும் ஆதாயம் பெரிதாகக் கிடைத்து விடப் போவதில்லை, வல்லவரையர் இருக்கிற வரையில் சங்கரத்தேவன் ஒரு சாதாரண வீரனாகத்தான் இருக்கமுடியும். சங்கரத்தேவன் இருந்தால் என்றும் தனக்கு இடர் தான் என்பதற்காகத்தான் சங்கரத்தேவனைத் தந்திரமாகச் சேரநாட்டிற்கு அனுப்பிவிட்டார் என்பது உனக்குத் தெரியுமா? சுமதி யோசிக்காதே! சிந்தனை செய்வதற்கே இப்பொழுது நேரமுமில்லை. இடமுமில்லை. உன்னைத் தஞ்சைக் கோட்டைக்கு அருகே கொண்டு விட்டு விடுவோம். ஓய்வு எடுத்துக் கொள்ள ஒருநாள் அவகாசமளிப்பேன். பிறகு மறுநாள் உன்னைத் தேடிக் கொண்டு வளையல் வணிகராக ஒருவர் வருவார். அவர் எப்படி உள்ளே நுழைவார் என்பதையெல்லாம் இப்பொழுது கேட்காதே! அதெல்லாம் எங்கள் கவலை, பொறுப்பு. அவர் மாளிகைக்குள் வந்துவிடுவார். அவரிடம் சோழமாளிகை அந்தப்புரத்தில் உள்ள பெண்கள் எல்லோரும் வளையல்களை வாங்கி அணிந்து கொள்வார்கள். அந்த வளையல் வியாபாரி சீனநாட்டவரைப் போன்று வேடம் அணிந்திருப்பார். சீன மொழியில் பேசுவார். சீனரேதான்! சீனநாட்டவர் போல் வேடம் பூண்டு மற்றவரால் நடிக்க முடியாது!'' என்று கூறிச் சற்று நிறுத்தி, சுமதியை உற்றுநோக்கினாள் நந்தினி. அந்த வயதிலும் அவளுடைய கூர்மை நிறைந்த விழிகளில் காணப்பட்ட வேகத்தைத் தாங்க சுமதியால் முடியவில்லை. தன் இதய உணர்ச்சி முகத்தில் பிரதிபலிக்கிறதா என்று நந்தினி சோதிக்கிறாள் என்றறிந்த சுமதி சலனம்

ஏதுமின்றி நின்றாள். சீன வளையல்காரரைப் பற்றி மேலும் அவள் என்ன சொல்கிறாள் என்பதைக் கேட்டறிய ஆவலுடன் அமைதியாக நின்றாள்.

''ஐயோ!'' என்று குரல் கொடுத்த சுமதி ''என்னுடைய துரோகச் செயல் வெளிப்பட்டு விட்டால் தலைமுறை தலைமுறைக்கு அவப்பெயர் சூழ்ந்துவிடும். ஆதித்த கரிகாலனைக் கொன்ற ரவிதாசன் குடும்பச் சொத்தைப் பறிமுதல் செய்ததை நானறிவேன். வீர நாராயணபுரத்தில் அவர்கள் பரம்பரைக்கு மாறாத அவப்பெயர் ஏற்பட்டு விட்டதைத் தாங்கள் அறியவில்லையா! நந்தினி, உங்கள் தூண்டுதலால் ஆதித்த கரிகாலனை ரவிதாசன் கொலை செய்து, அதற்கு ஏற்ற தண்டனையைப் பெற்றான். இப்போது என்னைப் பயன்படுத்த முடிவு செய்து விட்டீர்கள். என்னால் சம்மதிக்க முடியாது. என் வயிற்றை என்னவோ செய்கிறது'' என்று கூறி வயிற்றைப் பிடித்து, 'அம்மா அப்பா' என்று முணுமுணுத்தாள். நந்தினி கலவரத்துடன் குதிரைக் காரனை நோக்கி, ''சுமதிக்கு மறைவிடம் செல்ல வழிகாட்டு. அந்தத் தீவர்த்தியை எடுத்துக் கொண்டு கொல்லைப்புறம் அழைத்துப் போ, நீ சற்றுத் தள்ளியே நின்று பிறகு அவளை அழைத்து வா'' என்றாள்.

சுமதி அந்த மாளிகையின் பின்புறம் சென்றாள். குதிரைக்காரன் கையில் தீவர்த்தியுடன் அவளைத் தொடர்ந்து சென்றான். சிறிது நேரத்தில் 'ஐயோ ஐயோ' என்று அலறல் சப்தம் குதிரைக்காரனிடமிருந்து எழுந்தது.

## 29

சுமதி கண்விழித்துப் பார்த்தபோது, தான் சோழமாளிகையில் மஞ்சத்தில் படுத்திருப்பதை உணர்ந்தாள். தன்னைச் சுற்றிலும் பணிப்பெண்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் தான் தஞ்சை மாளிகையின் அந்தப்புரத்தில் இருப்பதைப் புரிந்து கொண்டாள். இங்கு எப்படி வந்தோம் என்று யோசித்தாள்.

முதல்நாள் நிகழ்ச்சிகள் சிறிது சிறிதாக அவள் விழிகளின் முன் நர்த்தனமாட ஆரம்பித்தன. பாண்டியர்த் தலைவி நந்தினியின் எதிரே தான் கொண்டு செல்லப்பட்ட நிகழ்ச்சியை இப்போது நினைத்தாலும் அவள் மெய்சிலிர்த்தது.

சோழநாட்டிற்குத் துரோகம் செய்யுமாறு அவள் என்னைக் கேட்டாள். அவளுக்கு என்ன துணிவு? என்னைக் கேட்டதிலுள்ள துணிவு இருக்கட்டும், சோழநாட்டின் இதயம் என்று கூறப்படும் பழையாறை அருகிலேயே நந்தினி



வந்துத் தங்கி, சோழநாட்டிற்கு விரோதமான நடவடிக்கையில் ஈடுபட்டுச் சதித்திட்டம் தீட்டியிருக்கும் அவள் துணிவைப் பாராட்டுவதா, வியப்பதா என்று அவளுக்குப் புரியவில்லை.

இளையபிராட்டியைக் கவர்ந்து செல்லத் திட்டம் தீட்டி அதற்கு உடந்தையாக நானிருக்கவேண்டும் என்று அவள் கூறினாள். அதற்கு மாறாக என் கணவரை ஆபத்தினின்று காப்பாற்றுகிறாளாம்! என்ன துணிவு? - சுமதி சிலிர்த்துக் கொண்டாள்.

சுமதி விழித்துச் சுற்றும்முற்றும் பார்ப்பதைக் கண்டு பணிப்பெண்கள் முகத்தில் மகிழ்ச்சிக் குறி பளிச்சிட்டது. இளையபிராட்டியிடம் ஓடோடிச் சென்று சுமதி மயக்கம் நீங்கிக் கண்விழித்து விட்டதைத் தெரிவித்தார்கள்.

காலைப்பொழுது புலர்வதற்கு முன்பு இளையபிராட்டியார் குந்தவை தேவிக்கு அந்தச் செய்தி கிடைத்தது. பழையாறை நகரிலிருந்து சுமதியைக் காணவில்லை, என்ற செய்தி கிடைத்த சிறிது நேரத்திற்கெல்லாம், மயங்கிய நிலையில் சுமதியைக் காவலர்கள் தஞ்சை மாளிகைக்குக் கொண்டு சேர்த்த செய்தியும் இளையபிராட்டியாருக்குக் கிடைத்தது. இளையபிராட்டி திடுக்கிட்டாள். சுமதி படுத்திருந்த இடத்திற்கு மாளிகை மருத்துவர் உடனே அழைத்து வரப்பட்டார்.

நாடித்துடிப்புச் சீராக இருப்பதையும் பயத்தினால் ஏற்பட்ட மயக்கம் என்று கூறிய மருத்துவர் அவள் உடலில் ஏற்பட்டிருந்த சிறு காயங்களால் காய்ச்சல் வராமலிருப்பதற்கு மருந்து கொடுத்தார். விழித்தெழுந்த பிறகு கழுவி வெந்நீர் ஒத்தடம் கொடுக்குமாறும் சொல்லிச் சென்றார்.

பணிப்பெண்கள் சுமதியின் படுக்கை அருகே கவலையுடன் காத்திருந்தனர்.

இளையபிராட்டி செய்தி அறிந்து அந்தப்புரத்திற்கு விரைந்து வந்தாள். இளையபிராட்டியைப் பார்த்தவுடன் எழமுயன்ற சுமதியை அப்படியே இருக்குமாறு சைகை செய்த இளையபிராட்டி அவளுக்கு உணவு வகைகளைக் கொடுக்கச் செய்து குளிப்பதற்கு ஏற்பாடு செய்து பிறகு வருவதாகக் கூறிச் சென்றாள்.

சிறிதுநேரம் கழித்து இளையபிராட்டி வந்தியத்தேவனை அழைத்துக் கொண்டு அங்கு வந்தாள். ஆரம்பத்தில் இளைய பிராட்டி அழைத்தபோது வந்தியத்தேவன் அந்தப்புரத்திற்கு வரச் சம்மதிக்கவில்லை.

''சங்கரத்தேவன் நமக்கு வேண்டிய பிள்ளை தான். சுமதி நமக்கு வேண்டிய பெண் தான். அவள் மயக்கமடைந்து விட்டாள் என்பதற்காக அந்தப்புரத்திற்கு வந்து அவளைக் காண ஏன் அழைக்கிறாய் தேவி? உன்னைப்

பார்ப்பதற்குக் கூட தஞ்சை மாளிகை அந்தப்புரத்திற்கு அந்த நாளில் நான் வந்தேனில்லை. இப்போது....'' என்று வல்லவரையர் தயக்கம் தெரிவித்தார்.

''சுமதியிடமிருந்து நாம் பல செய்திகளை அறிய வேண்டும். அவளைப் பாண்டிய ஒற்றர்கள் பழையாறையினின்று கவர்ந்து வந்திருக்கிறார்கள். நந்தினியைச் சுமதி சந்தித்திருக் கிறாள். பிறகு மயக்கமுற்ற நிலையில் சுமதியைத் தஞ்சைக்கு வரும் பாட்டையில் கண்டிருக்கிறார்கள்'' என்று கூறவும் வந்தியத்தேவன் கவலையும், அதிர்ச்சியும் மேலிட்டவராய் இளையபிராட்டி மேலும் தொடர்ந்து சொல்வதை எதிர்பார்த்தார்.

''நான் அழைத்ததாகக் கூறி சுமதியை ஏமாற்றியிருக்கிறார்கள்'' என்றாள் குந்தவை.

''நீ அவளை அழைக்கவேண்டும் என்ற யோசனையை யாரிடமாவது தெரிவித்தாயா?'' என்ற வல்லவரையர் கேட்டார்.

''இந்தக் கேள்வியை நான் ஏன் கேட்கிறேன் என்றால், பாண்டிய நாட்டு ஒற்றர்கள் நம் நாட்டில் ஊடுருவ முயல்கிறார்கள். நமது திட்டங்கள் மெல்ல மெல்ல அவர்களுக்குத் தெரிகின்றன'' என்று தொடர்ந்தார் வல்லவரையர்.

''நான் தான் பழையாறைக்குச் செல்ல விரும்பினேன். சுமதியை இங்கு அழைத்துவர எண்ணவில்லை. சேரமன்னரிடம் தூது சென்ற சங்கரத்தேவன் அங்கு சிறையிடப்பட்டிருக்கிறான் என்ற செய்தி வந்தது. அதனால் சுமதி கவலையடைந்திருப்பாள்; அவளுக்குச் சமாதானம் கூறுவோம் என்ற எண்ணத்தில் நான் பழையாறை செல்லத் திட்டமிட்டேன். தஞ்சை மாளிகையில் ஒற்றர்கள் இருக்கிறார்களா? எப்படியோ, சுமதியைப் பாண்டிய ஒற்றர்கள் சிவிகையில் கொண்டு வந்து காட்டுப்பாதையில் உள்ள ஒரு மாளிகைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். இதெல்லாம் எனது யூகம். இன்னும் சுமதியை நான் சந்திக்கவில்லை. அவள் வாய்மொழியின் மூலம் பலவற்றை அறியவேண்டும். அதற்குத் தான் உங்களையும் அழைக்கிறேன்'' என்றாள்.

வல்லவரையரும் இளையபிராட்டியும் சுமதியின் படுக்கை அருகே வந்தமர்ந்தனர். சுமதி நாணத்தால் குறுகிப் போனாள்.

''உங்கள் எதிரே நான் படுத்திருப்பதா?'' என்று வார்த்தை தடுமாறி சுமதி கூறி மீண்டும் எழ முயன்றாள். இப்போது இளையபிராட்டி அருகே வல்லவரையர் வந்தியத்தேவன் நிற்பதைக் கண்டவுடன் அவர் எதிரே இதுபோல் படுத்திருப்பது சரியன்று என எழுந்து உட்கார்ந்தாள். களைப்பும் அதிர்ச்சியும் அவளைச் சற்று நிலைத்தடுமாறச் செய்தன. ஆனால் அவள் உள்ளத்தில் அப்போது ஏற்பட்ட உற்சாகம், நம்பிக்கை இவை சேர்ந்து அவள் உடல்தளர்ச்சியை மெல்லக் குறைத்தன.



வல்லவரையரின் விழிகளை ஒரு கணம் சந்தித்த சுமதியின் முகத்தில் நாணரேகைகள் படர்ந்தன.

அவள் கணவன் சங்கரத்தேவனைச் சந்திக்க வல்லவரையர் ஓரிரு தடவை வந்திருக்கிறார். நகைச்சுவை ததும்ப அவர் பேசியதைக் கேட்டு அவள் குலுங்கக் குலுங்கச் சிரிக்கும்போது அவர் கூறுவார்: ''சங்கரத் தேவா! உன்னை விட உன் மனைவிக்கு நகைச்சுவை உணர்ச்சி அதிகம் எனத் தோன்றுகிறது! நகைச்சுவை உணர்ச்சி உடைய பெண்கள் கடமை உணர்ச்சிமிக்கவர்கள். கணவரிடம் மிக்க அன்பு பாராட்டுபவர்கள்.''

அது கேட்ட சங்கரத்தேவன் கோபங்கொண்டவன் போல் நடித்து, ''அப்படியென்றால் எனக்கு நகைச்சுவை உணர்ச்சி இல்லை என்கிறீர்கள். அப்படித்தானே! நகைச்சுவை உணர்ச்சி உள்ள ஆண்களுக்கு வீரம் அதிகமாக இருக்கும்; அதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?'' என்று கூற முற்பட்டபோது வல்லவரையர், ''ஐயோ, உங்களிடையே சண்டை மூட்ட நான் விரும்பவில்லை. அமைதியாக ஒற்றுமையாக, திகழும் உங்கள் வாழ்க்கையைக் கண்டு நான் பொறாமைப்படுகிறேன். இல்லை இல்லை பெருமைப்படுகிறேன். பொறாமை என்று சொன்னால் இளையபிராட்டி சண்டைக்கு வந்து விடுவார்கள்'' என்று கூறி மெல்ல நகைத்தார்.

அந்தச் சிரிப்பிலே ஒரு குழந்தையின் கபடமற்ற தன்மை இருந்தது இன்றும் அந்த முகமும் அந்தச் சிரிப்பொலியும் மறையாது நிற்கின்றன.

''என்ன சுமதி, குனிந்த தலை நிமிராமல் இருக்கிறாய் - நடந்தவை என்னவென்று கேட்கவே வந்துள்ளேன். வல்லவரையரையும் நான் அழைத்து வந்த காரணமும் அதுவே'' என்றார் இளைய பிராட்டியார்.

''திருக்குடந்தை, தஞ்சை பாட்டையில் ஓர் மதகு ஒன்றின் ஓரமாக மயக்கமுற்ற நிலையில் கிடந்ததைக் கண்ட நமது வீரர்கள் உன்னை இங்குக் கொண்டு சேர்த்தனர். அதற்கு முன் நடந்ததைச் சொல். விவரமாகச் சொல் விரைவாகச் சொல். சோழநாட்டில் விரோதிகள் நிறைந்திருக்கின்றனர். சதிகாரர்கள் மறைந்திருக்கின்றனர். சோழர் குலத் தலைப்பிள்ளை ஆதித்த கரிகாலனுக்கு நேர்ந்ததுபோல் மீண்டும் இங்கே பயங்கரச் சதியை நிறைவேற்ற முயல்கிறார்கள். அவர்கள் திட்டத்தை முளையிலேயே முறியடிக்க வேண்டும். சொல் சுமதி, நடந்ததைச் சொல்'' என்று குந்தவை கேட்டாள். அவள் குரலில் இப்பொழுது கவலை நிறைந்திருந்தது.

சுமதி மெல்லப் பேசத் தொடங்கினாள். அவள் உடலில் இலேசான நடுக்கமிருந்தது.

''சேரநாடு சென்றிருக்கும் சங்கரத்தேவன் சேரநாட்டில் பெரும் ஆபத்தில் சிக்கியிருப்பதைத் தெரிவிக்க ஓர் ஓலையுடன் வந்தவர் - அவரும் சோழநாட்டவர் தான், தன்னை இரவு நடுநிசிக்கு மேல் நந்திபுரக் கோயில் அருகே சந்திக்கச் சொன்னதையும், பிறகு இளையபிராட்டியார் அழைப்பதாக குதிரைவீரர்கள் சிவிகையுடன் வந்ததையும் அவள் கூறினாள்.

''சுமதி, புத்தி சாதூர்யம் மிகுந்தவள் என்று உன்னை எண்ணியிருந்தேன். முன்பின் தெரியாதவர், அழைத்தவுடன் நீ செல்லலாமா?'' என்று குந்தவை கேட்டாள்.

''நீங்கள் அழைப்பதாக அவன் வந்து கூறியபோது எனக்குச் சந்தேகம் ஏற்படவில்லை தேவி'' என்று சுமதி கூறியபோது குரலில் பயம் நிறைந்திருந்தது.

''சரி, சரி மேலே சொல்'' என்றாள் இளையபிராட்டி.

சிவிகை நடுவழியில் இறக்கப்பட்டதையும் தனக்குத் தாகமாக இருந்ததையும் சுமதி சொன்னாள். பிறகு பாழடைந்த மாளிகைக்குத் தான் அழைத்துச் செல்லப்பட்டதை எடுத்துக் கூறினாள். ''வெளித்தோற்றத்தில் அது பாழடைந்த மாளிகை தான். ஆனால் உள்ளே சகல வசதிகளுடன் அரச குடும்பத்தவர் தங்குவதற்கு ஏற்றவகையில் இருக்கிறது'' என்று சுமதி கூறியபோது இளையபிராட்டி குறுக்கிட்டு, ''இப்படி ஒரு மாளிகை தஞ்சைபுரிக்கு அருகே இருப்பது நம் ஒற்றர்களுக்கு இதுவரை தெரியாமல் இருந்தது வியப்பாக இருக்கிறது'' என்று கவலையும் கண்டிப்பும் நிறைந்த குரலில் கூறி வல்லவரையரைத் திரும்பிப் பார்த்தாள்.

அவர் தலையசைத்தது உடனே கவனித்துத் தக்க நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்வதுபோல் இருந்தது.

நந்தினியைச் சந்தித்ததையும் நந்தினி தேனொழுகப் பேசியதையும் தன்னுடன் அமர்ந்து உணவருந்தியதையும் பிறகு தன்னிடம் அவள் தெரிவித்த பயங்கர யோசனையையும் கூறினாள் சுமதி. குந்தவை மௌனமாக, முகத்தில் எந்தவிதச் சலனமுமில்லாமல் கேட்டுக் கொண்டிருந்தாள். இடையே ''நந்தினிதான் அவள் என்று உன்னால் உறுதியாகச் சொல்ல முடியுமா?'' என்று கேட்டாள்.

''நந்தினியை நான் மறக்கவில்லை தேவி! எப்படி அவளை மறக்க முடியும்? அதே விழிகள், அதே சிரிப்பு! ஆனால் முதுமையின் ஆட்சி அவள் உடலிலும் கூந்தலிலும் முகத்திலும் தெரிந்தது. சோழகுடும்பத்தவரைப் பழிக்குப் பழி வாங்கும் ஆத்திரம் இன்னும் குறையவில்லை. சோழநாட்டின் மீது படையெடுத்துத் தஞ்சைபுரியில் கயல்கொடியைப் பறக்க வைக்கும்



பெரிய திட்டம் அவர்களிடமிருந்தது. சோழநாடெங்கும் பாண்டிய ஒற்றர்கள் நிறைந்திருக்கின்றனர் என்பது அவர்கள் பேச்சிலிருந்து தெரிகிறது. ஆனால் நந்தினி என்னிடம் மிக நயமாகவும், பயமுறுத்தியும் கேட்டுக் கொண்ட உதவியை நினைக்கும்போது என் உடல் நடுங்குகிறது. தேவி, தங்களைக் கவர்ந்து சென்று யாரும் அணுகமுடியா, அறிய முடியா இடத்தில் சிறை வைத்துவிடப் போகிறார்களாம்'' என்று கூறி, வளையல் வியாபாரியாகச் சீனநாட்டு வணிகரை மாளிகைக்கு அனுப்பப் போவதையும் அந்த வியாபாரி மூலம் இளைய பிராட்டியைக் கவர்ந்து செல்லப்போகும் திட்டத்தையும் தெரிவித்தாள்.

''தேவி, வளையல் வியாபாரியாகச் சீனர் எவராவது தஞ்சைபுரியில் தென்பட்டால் உடனே சிறைப்படுத்தி விடுங்கள்'' என்று சுமதி கூறும்போது அவள் உடல் பயத்தால் நடுங்கியது.

இளையபிராட்டியின் இதழ்களில் கீற்றுப் புன்னகையைக் கண்ட சுமதி, ''தேவி எனக்குப் பயமாக இருக்கிறது. சோழ சக்ரவர்த்தியிடம் உடனே தெரிவித்து விடுங்கள். ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது'' என்று படபடப்புடன் கூறினாள்.

இளையபிராட்டி அவள் கூறுவதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், ''அது இருக்கட்டும் சுமதி, நந்தினியிடமிருந்து நீ எப்படித் தப்பி வந்தாய்?'' என்று கேட்டாள்.

தான் தப்பிய விதத்தை சுமதி விவரித்தாள். அப்போது கணநேரத்தில் தான் எடுத்த முடிவை இப்போது நினைக்கும் போது சுமதியின் உடல் மெல்ல நடுங்கியது.

## 30

நந்தினி விரித்த வலையினின்று, சுமதி தப்பிய முறைகேட்டு இளையபிராட்டி குந்தவை தேவியாரின் விழிகள் வியப்பால் விரிந்தன.

''சுமதி உனக்கு இவ்வளவு துணிவு எங்கிருந்து வந்தது? எப்படி வந்தது?'' இளையபிராட்டியார் வியப்புடன் வினவினாள்.

இப்போது நினைத்தாலும் சுமதிக்குத் தெரியவில்லை. அந்தத் துணிவு எப்படி முடிந்தது. அன்று சற்று ஒதுக்குப்புறமாகச் செல்லவேண்டும் என்று கேட்டவுடன் நந்தினி தலையசைத்தாள். அவளும் ஒரு பெண்தானே! தனியே தன்னைப் போக விடுவாள் என்று நினைத்தாள். ஆனால் குதிரைக்காரன்

உடன் வந்தான். என்னதான் சோழநாட்டிற்கு விரோதமாக இயங்கக் கூடியவனாயிருந்தாலும் அவன் ஒரு பெண்ணுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையை அளித்தான்.

சுமதியைத் தனியே செல்லவிட்டு, ஓர் ஓரமாக மரத்தினடியில் அமர்ந்தான். தீவர்த்தியைக் கையில் சுமந்திருக்காமல் மரப்பொந்தில் சொருகினான்.

சில கணங்களில் அவனிடமிருந்து 'ஐயோ' என்ற அலறல். சுமதி மரத்தின் பின்பக்கமாகச் சந்தடியின்றி வந்து கணநேரத்தில், தீவர்த்தியை அவன் முகத்தில் அழுத்தமாகத் தேய்த்தாள்.

மறுகணம் அந்தத் தீவர்த்தியை எடுத்துக் கொண்டு அதன் வெளிச்சத்தில் ஓடினாள். வந்தபாதை தெரிந்தது. தீவர்த்தி ஒளி வழிகாட்டியது. தீவர்த்தியுடன் ஓடுவது ஆபத்து என்றறிந்த சுமதி, அதை வீசி எறிந்துவிட்டு ஓடினாள், ஓடினாள், ஒரு குறிப்பிட்ட திக்கை அடையாளமாகக் கொண்டு ஓடினாள். மரக்கிளைகள் தடுத்தன. வேர்கள் இடறின. காய்ந்த முட்படல்கள் கீறின. கொடிகள் கால்களில் சிக்கியதால் தடுமாறி வீழ்ந்தாள். எவ்வளவு நேரம் ஓடினாளோ, அவள் கால்கள் தடுமாறின. ஓர் பள்ளத்தில் தடுக்கி வீழ்ந்து உருண்டாள்.

பாழடைந்த மாளிகையினுள்ளே அமர்ந்திருந்த நந்தினியின் செவிகளில் குதிரைக்காரனின் ஓலம் கேட்டது. ஏதோ பயங்கரம் நடந்திருக்கிறது என்றளவில் புரிந்து கொண்டாள். பாண்டியக் குதிரை வீரனை யாரோ தாக்கியிருக்க வேண்டும். குதிரை வீரனைத் தாக்கி விட்டு, சுமதியையும் கவர்ந்து சென்றிருக்க வேண்டும். யாராக இருக்கலாம். சோழவீரர்கள் வந்திருக்கலாமோ? அப்படியென்றால் தனக்கும் ஆபத்து தான். நந்தினி உடனே விரைந்து இயங்கினாள். அந்த மாளிகையின் மறைவிடத்திற்கு விரைந்தாள். இரவெல்லாம் அங்கேயே தங்கியிருந்தாள்.

தான் போட்ட திட்டத்தில் எங்கோ தவறு நேர்ந்திருக்கிறது. இந்தத் தவறு சங்கிலிபோல் தொடர்ந்தால் என்னாவது? தஞ்சை மாளிகைக்குச் சீன வளையல் வணிகன் செல்வான். இளையபிராட்டியைக் கவர்ந்து செல்லும் திட்டத்தின் ஒரு பகுதியாகத் தஞ்சைக் கோட்டைக்கு வெளியே பாண்டிய வீரர்கள் மாறுவேடத்திலிருப்பார்கள். அவர்கள் எதிர்பார்த்து ஏமாந்து நிற்பார்கள். அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் திகைப்பார்கள். அவர்களுடைய ஏமாற்றமே அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடும். ஒருவேளை அவர்கள் சோழவீரர்களிடம் அகப்பட்டுக் கொண்டால்......

அவர்கள் இளையபிராட்டியைத் தூக்கிச் சென்று மறைத்து வைக்கவிருந்த இடத்தைச் சொல்லிவிடுவார்கள். சீன வணிகன் பல



உண்மைகளைக் கூறிவிடுவான். வரும் அமாவாசை அன்று ஆனைமலைக் காடுகளிலிருந்துப் புறப்படத் திட்டமிட்டிருந்த பாண்டியன் தலைமையில் இயங்கும் படைகளைச் சோழர் படைகள் முற்றுகையிட்டு, எதிர்பாராத விதமாகத் தாக்கி நிர்மூலமாக்கி விடக்கூடும்.

நந்தினி, 'ஐயோ' என்று வாய்விட்டுக் கூவினாள். வாழ்க்கையில் இதுவரை கலங்கி அறியா, அஞ்சியறியா நந்தினி என்ன செய்வது என்று திகைத்தாள்.

அதே போது தஞ்சையில் இளையபிராட்டியிடம் நடந்த கதையை விவரித்த சுமதி பரபரப்புடன், ''தேவி அந்தச் சீன வளையல் வியாபாரி எங்கிருந்தாலும் கண்டுபிடியுங்கள்'' என்றாள்.

இளையபிராட்டி மிக அமைதியாக, ''சுமதி அதைப்பற்றி நீ கவலைப் படாதே, சோழநாட்டு ஒற்றர்கள் ஏமாறமாட்டார்கள்'' என்றாள்.

சுமதி ஏதோ சொல்ல எ -யெடுத்தாள். இளையபிராட்டி உடனே குறுக்கிட்டு, ''சோழநாட்டின் மைய இடத்தில் நந்தினி வந்து தங்கியிருக்கும் செய்தியை அறிந்து கொள்ளாத சோழநாட்டு ஒற்றர்கள் சீன வணிகரை எப்படி அறிவார்கள் என்று தானே கேட்க விரும்புகிறாய்; இந்த நேரம் நந்தினி சிறைப்படுத்தப்பட்டிருப்பாள்; அவள் போட்ட திட்டங்கள் நிறைவேறா'' என்றாள்.

சுமதி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். ஆனால் நந்தினியைச் சோழ வீரர்களால் அவ்வளவு எளிதில் பிடிக்க முடியவில்லை. பாழடைந்த மாளிகையைச் சோழ வீரர்கள் சென்றடையவே பொழுது சாய்ந்து விட்டது.

***

நந்தினி நினைத்தபடியே தஞ்சைக் கோட்டைக்கு வெளியே, இளையபிராட்டியைக் கவர்ந்து செல்ல பாண்டிய வீரர்கள் மாறுவேடத்தில் காத்திருந்தனர். நேரமாக ஆக அவர்கள் நம்பிக்கையை இழந்தனர். அவர்களை நோக்கி இருவர் வருவதைக் கண்ட அவர்களுக்கு அச்சம் ஏற்பட்டது.

அந்தப் பகுதியில் மக்கள் நடமாட்டமே இராது. பயிர் செய்யத் தகுதியற்ற வகையில் அடர்ந்த முட்செடிகள் அடர்ந்துள்ள அந்தப்பகுதியில் பலா மரங்களிலிருந்து பழங்களைப் பறிக்க எப்போதாவது வருபவர்களைத் தவிர வேறு எவரும் அந்தப் பகுதியில் நுழையவே அச்சப்படுவார்கள். அந்த நிலையில் இருவர் புதர்களை விலக்கிக் கொண்டு வருவதைப் பார்க்க அவர்களுக்கு அச்சம் ஏற்படாமலா இருக்கும்?

வருபவர்கள் சோழநாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்தால்? ஒன்று அவர்களிடம் சிக்காமல் தப்பி ஓடிவிடவேண்டும், அல்லது எதிர்த்துப் போரிட

வேண்டும். அவர்களில் ஒருவன் சொன்னான்: "எதிர்த்துப் போரிட முற்பட்டால் அவர்களும் ஆயத்தமாக வந்திருக்க மாட்டார்களா? மறைவாக அவர்களுடன் போர்வீரர்கள் வந்திருக்கலாமல்லவா?"

"இருக்கலாம், நம்மால் எதிர்த்து நிற்க முடியாது. அதனால் ஓடிவிடுவதே சரி" என்றான்.

"நாம் எந்தப்பக்கம் ஓடுவது? ஓட ஒரே வழி; அவர்கள் வரும் வழி தான். தப்பிச் செல்ல முற்பட்டு அவர்களிடம் சிக்குவதை விட இங்குத் துணிவுடன் நிற்பதே சரி" என்றான் மற்றவன்.

வந்த புதியவர்கள் சோழ வீரர்களாத் தோன்றவில்லை. களைப்புடன் வருவதுபோல் தோன்றியது.

நெருங்கி வந்தவுடன், "ஐயாமார்களே, இந்தப் பக்கம் வழி இருக்கிறதா?" என்று கேட்டான், அவர்களுள் ஒருவன்.

"நீங்கள் எங்கே செல்லவேண்டும்?" என்று கேட்டான் பாண்டிய வீரன்.

"நீங்களும் வழிதெரியாமல் தடுமாறுகிறீர்களா? நீங்கள் எங்கு செல்ல வேண்டும்?"

"நாங்கள் தஞ்சைபுரிக்குச் செல்லவேண்டும்" என்றான் பாண்டிய வீரருள் ஒருவன். அவன் பேச்சில் பாண்டியநாட்டு மொழி ஒலி இருந்தது. அதை மறைக்க முடியவில்லை.

"எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டான் புதிதாக வந்தவன்.

"மதுரையினின்று"

"மதுரையினின்றா? அங்கே மழை பெய்திருக்கிறதா?"

"கடுமையான மழை."

"சோழராஜா மகன் தானே இப்போது மதுரை மண்டல ஆட்சிப் பொறுப்பைக் கவனித்துக் கொள்கிறார்."

"அதெல்லாம் அரசாங்க விஷயமுங்க; எங்களுக்குத் தெரியாது."

"ஏனுங்க, நம்ம அரசர் யாரென்று தெரிந்து கொள்வது நம்ம கடமையில்லையா? ஏதோ விட்டேத்தியா பேசுகிறீர்களே!"

பாண்டிய வீரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களுள் வயதில் இளையவனான ஒருவன் முந்திக் கொண்டான்.

"எங்களுக்கு ராஜராஜ சோழ அரசரைத் தான் தெரியும். மற்றபடி அவர் சார்பில் மதுரையில் ஆட்சி நடத்துபவர்களைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை" என்றான்.



வந்த இருவருள் ஒருவன் பலமாகச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று பாண்டிய வீரன் கேட்டான்.

"மதுரை ஆட்சியைப் பற்றிக் கவலையில்லை என்று சொல்கிறீர்களே, எவ்வளவு அப்பட்டமான பொய் என்று நினைத்தவுடன் சிரிப்பு வந்தது."

"பொய் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"மதுரையிலிருந்து சோழநாட்டிற்கு ஓடிவருபவர்கள் மதுரையில் கொடுங்கோல் ஆட்சி நடைபெறுவதாகவும், சோழநாட்டை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்துவதாகவும் சொல்கிறார்கள்; நீங்கள் என்னடாவென்றால்..." இவ்வாறு புதிதாக வந்த இருவர் கூறவும் பாண்டிய வீரர்கள் திடுக்கிட்டனர். என்ன சொல்வது என்று தெரியாமல் ஒருகணம் திகைத்தனர்.

அவர்களுள் சற்று வயதில் முதிர்ந்தவர் கேட்டார்: "இவ்வளவு பேசுகிறீர்களே நீங்கள் எந்த ஊர், பாண்டிய நாட்டவரா, சோழநாட்டவரா? புரியவில்லையே. நாட்டு நடப்பைப் பற்றி நிறைய பேசுகிறீர்களே?"

"எங்களுக்கும் பாண்டிய நாடுதான். ஆனால் தென்பாண்டி நாடு. பல ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் சோழநாட்டில் குடியேறி விட்டோம்" என்றார்.

"சோழநாட்டில் குடியேறிவிட்டீர்களா? அப்படியென்றால் நம் இனத்தவர் தான் நீங்கள் சோழநாட்டில் என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டார் பாண்டிய வீரருள் ஒருவன்.

வந்த இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்தனர்.

"ஏன் எங்களிடம் சொல்லக்கூடாதா?" என்று கேட்டார். பாண்டிய வீரன்.

"சொல்லக் கூடாது தான், ஆனால் நீங்களும் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதால் சொல்வதில் தவறில்லை. ஒருவேளை எங்களுக்கும் நீங்கள் உதவக்கூடும்" என்று தயங்கியபடியே கூறினார்கள் புதிதாக வந்தவர்கள்.

"சொல்லுங்கள், சொல்லுங்கள் நிச்சயமாக நாங்கள் உதவுவோம். ஆனால் சோழநாட்டில் தங்கி இருந்து உதவும் நிலையில் நாங்கள் இல்லை" என்றனர் பாண்டிய வீரர்கள்.

"ஏன்? இந்த நாட்டிற்குப் புதியவர்களா? இந்தக் காட்டில் வந்து சிக்கிக் கொண்டீர்களா? நாங்களும் வழி தெரியாமல் இங்கே நுழைந்து விட்டோம்" என்றனர் புதியவர்கள்.

பிறகு, "அண்ணன்மார்களே! நாங்கள் சோழநாட்டில் தங்கியிருந்து நமது அமரபுஜங்க பாண்டியருக்கு உளவு சொல்லிக் கொண்டிருக்கிறோம்" என்றனர்.

ஏதோ நல்ல செய்தியைக் கேட்டது போல் துள்ளிக் குதித்த பாண்டிய வீரர்கள், "தம்பிகளே! நாங்களும் அதற்காகத் தான் வந்தோம். ஆனால் எதிர்பார்த்தபடி நடக்கவில்லையே!" என்றனர்.

"ஓ! நீங்களும் சோழநாட்டிற்கு ஒற்றர்களாக வந்திருக்கிறீர்களா? நல்லதாய்ப் போச்சு! எதிர்பார்த்தபடி நடக்கவில்லை என்று ஏன் வருத்தப்படுகிறீர்கள், யாரை எதிர்பார்த்தீர்கள்?" என்று ஆவலுடன் கேட்டார்கள்.

"நேரமாக ஆக எங்களுக்குப் பயமாக இருக்கிறது. இளையபிராட்டியை இங்கே அழைத்து வருவதாகத் திட்டம். அந்தச் சீன வளையல்காரன் ஏதோ தவறு செய்துவிட்டான் என்று நினைக்கிறேன்" என்று சோகமாகக் கூறினான் பாண்டிய வீரன்.

"சீன வளையல்காரனா!" என்று வியப்புடன் கேட்ட புதியவர்கள்,

"சீன வளையல்காரனைத் தேடித்தான் நாங்களும் செல்கிறோம், இங்கு வருவதாகச் சொன்னான். ஆனால் இளையபிராட்டியை அழைத்து வருவதாகச் சொல்லவில்லையே!" என்று வியப்புடன் கேட்டார்கள்.

"நான் அப்போதே சொன்னேன், சீன வணிகனை நம்பவேண்டாம் என்று. கேட்கவில்லை. இப்போது என்ன செய்வது என்று தெரியவில்லை. இங்கிருந்து தப்பி ஓடினால் உயிர் பிழைத்துக் கொள்ளலாம். நீங்கள் சீன வணிகரைத் தேடி எங்கே செல்கிறீர்கள்? இங்கு வருவதாகச் சொல்லியிருக்கிறாரே" என்றார் பாண்டிய வீரருள் வயதானவர்.

"எங்களுக்கும் குழப்பமாயிருக்கிறது. நாம் எல்லோரும் சேர்ந்து சீன வணிகரைத் தேடிச் செல்வோம். சீன வணிகனின் அடையாளம் நமக்குத் தெரியாதா. தொங்குமீசை, மஞ்சள் முகம், ஹூம்" என்று கூறி அவர்களை அழைத்துக் கொண்டு வந்த வழியே செல்லத் தொடங்கினார்கள்.

செல்லும்போது பாண்டிய வீரர்கள் சொன்னார்கள்: "தஞ்சை கோட்டைக்குள் எக்காரணம் கொண்டும் நாங்கள் வரமாட்டோம். எங்களுக்குக் கடுமையான கட்டளை."

புதியவர்கள் சிரித்தார்கள். அவர்கள் சிரிப்பில் ஏதோ பயங்கரம் புதைந்திருப்பதாகத் தோன்றியது. காட்டுவழியைத் தாண்டி வந்தவுடனேயே, பாண்டிய வீரர்களுக்கு ஆபத்து காத்திருந்தது.



## 31

பொழுது புலரும்வரை நந்தினி மாளிகையின் மறைவிடத்தில் தங்கியிருந்தாள். குதிரை வீரனையும் அங்கேயே மறைந்திருக்கச் செய்தாள். பாவம், முகத்தில் ஏற்பட்ட தீக்காயத்தின் கடுமையால் அவன் துடித்துக் கொண்டிருப்பதைப் பார்க்க அவள் மனம் மிக வேதனையடைந்தது. பாண்டிய நாட்டின் விடுதலைக்காக எவ்வளவு பேர் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தியாகம் செய்கிறார்கள் என்பதை நினைக்கும் போது அவள் மெய் சிலிர்த்தது. என்னை நம்பிப் போர்க்களத்தில் குதித்துள்ள நூற்றுக்கணக்கானவர்களின் நம்பிக்கை அரும்பைக் கருகாது மலரச் செய்யவேண்டும். அடிமைப்பட்டுள்ள பாண்டிய நாட்டை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும். அமரபுஜங்கனை அரியணையில் அமரவைக்க வேண்டும். பாண்டியர்களுக்குச் சோழகுலத்தவர் இழைத்த கொடுமை களுக்குப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் இதுவே நந்தினியின் இலட்சியம்.

சோழநாட்டினின்று ஆனைமலைக் காடுகளுக்கு வந்தநாளிலிருந்து அவளைத் தலைவி என்ற அன்பு மரியாதை கலந்து எப்போதும் அழைக்கிறார்கள். அமரபுஜங்கன் அவளைத் தாயாகவே மதித்து அவள் சொற்படி கேட்டு, அவள் திட்டங்களை ஏற்று, அவள் கட்டளைகளைத் தலைமேற்கொண்டு செயலாற்றி வருகிறான். தன் தந்தை வீரபாண்டியனைப் படுகொலை செய்த சோழ அரசகுமாரனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்ற உறுதி தன் தாய்-தலைவி என்றழைக்கப்படும் நந்தினிக்கு இருப்பதை அறிந்ததிலிருந்து அவள் மீது அமரபுஜங்கன் மிக மரியாதையும், நம்பிக்கையும் கொண்டிருந்தான். நந்தினி தீட்டும் திட்டங்களை அவன் மறுபேச்சில்லாமல் ஏற்றுக் கொண்டபின் பல முனை தாக்குதல்களை நடத்த வேண்டும் என்று தலைவி சொன்னபோது எந்தவித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் அவன் ஏற்றுக் கொண்டபின் சேரநட்டு அரசரின் ஒத்துழைப்புத் தனக்குக் கிடைக்கப்போகிறது என்று கூறியவுடன் நந்தினியும் அதை ஒப்புக் கொண்டாள். கடல் மூலமாகத் தாக்குதல், தரை மூலமாக வீரபாண்டியன் படைகளை எல்லாம் சேர்த்துக் கொண்டு தஞ்சையைத் தாக்குவது, அதேபோல் சோழநாட்டின் பல்வேறு பகுதிகளில் பாண்டிய ஒற்றர்கள் தங்களுடைய திறமையால் கலகம் விளைவிப்பது என்றெல்லாம் முடிவு செய்திருந்தார்கள். தஞ்சை அருகே மிக அடர்ந்த காட்டின் நடுவே இருந்த பாழடைந்த மாளிகை பல சமயங்களில் கலந்து பேசுவதற்கு வசதியாக இருந்தது. சோழநாட்டவர்கள் அறியா வண்ணம்

பாண்டிய ஒற்றர் படையினர் அங்கே கூடித் திட்டங்களை வகுத்து வந்தனர். மிகவும் திறமை மிக்க சோழ ஒற்றர்களின் கண்ணிலே மண்ணைத் தூவி விட்டு அவர்கள் செய்த அந்த சாகசத்தின் அடிப்படைத் திட்டம் நந்தினியால் வகுத்துக் கொடுக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் சோழநாட்டைக் கைப்பற்றி விட வேண்டும் என்ற முடிவுக்கு வீரபாண்டியன் மகன் அமரபுஜங்கனும் நந்தினியும் வந்திருந்தனர். மதுரையை நோக்கிப் படையின் ஒரு பிரிவும், தஞ்சையை நோக்கிப் படையின் மற்றொரு பிரிவும் செல்வது என்பது அவர்களுடைய திட்டம். அதற்குப் போதுமான இளைஞர்களை அவர்கள் தென்பாண்டிய நாட்டிலிருந்தும் மதுரைக்கு மிக அருகிலிருந்தும் சேகரித்திருந்தார்கள்.

பாண்டிய அரசு சீர்குலைந்த பிறகு வீரபாண்டியனின் தாயாதிகள் ஆங்காங்கே கன்யாகுமரி வரையில் பரவியிருந்து அந்தந்தப் பகுதியில் தங்களுடைய செல்வாக்கை நிலைநாட்டியிருப்பதும் அமரபுஜங்கனுக்குத் தெரியும். அவர்களுள் ஒருவருக்காவது மதுரை அரியணையில் அமர்ந்து பாண்டிய நாட்டை ஆள வேண்டும் என்ற ஆர்வமில்லை என்றாலும், வீரபாண்டியன் மகன் அமரபுஜங்கனுக்கு உதவ அவர்கள் முன்வந்தனர். தேவைப்படும் பொழுது அவர்களுடைய உதவி கிட்டும் என்ற நம்பிக்கையும் அமரபுஜங்கனுக்கு இருந்தது. அதனால் அவர்களுக்கு அவன் இப்பொழுது தூது அனுப்பி இளைஞர்களை ஆனைமலைக் காட்டிற்கு வருமாறு செய்திருந்தான். அவர்களிடம் தன் திட்டத்தை விவரித்திருந்தான். பாண்டிய நாடு மீண்டும் செழிப்படைய வேண்டும். சோழர்களின் பிடியிலிருந்து விடுபடவேண்டும் என்ற எண்ணம் இளைஞர்களிடம் இளைய சமுதாயத்தினிடம் பொங்கி இருந்ததனால் அவர்கள் எந்தவித மறுபலனையும் எதிர்பாராமல் நாடு ஒன்றுதான் தங்களுக்கு முக்கியம் என்று கருத்தில் கொண்டு இயங்கி வந்தார்கள். அந்த முறையில் தான் தஞ்சை மாளிகையிலிருந்து இளைய பிராட்டியை மிக சாதுரியமாக கடத்திச் சென்று மறைத்து வைத்து விடவேண்டும், நிலைமை தலைக்கு மீறிப்போனால் இளைய பிராட்டியை இந்த உலகத்திலிருந்தே அனுப்பிவிடவேண்டும் என்னும் திட்டம். இது அமரபுஜங்கனுக்குத் தெரியாது என்றாலும் நந்தினிக்கு அவ்வப்போது ஆலோசனை கூறி சோர்வடையாமல் உற்சாகமூட்டி வரும் புலிப்பாண்டியன் இதை வகுத்துக் கொடுத்திருந்தார்.

அவருடைய உறவினரான ரவிதாச கிரமவித்தன் சோழ இளவரசரைக் கொலை செய்த குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட பிறகு புலிப்பாண்டியனுக்குச் சோழநாட்டின் மீது மேலும் ஆத்திரம் பொங்கியது. எப்படியாவது அந்த வம்சத்தைக் கூண்டோடு, பூண்டோடு கிள்ளி எறிந்து விடவேண்டும் என்ற ஆத்திரம் அவனிடமிருந்தது.



ஆனால் நந்தினிக்கு அவன் வகுத்துக் கொடுத்த திட்டம் ஒரு சிறு கணத்தில் தவிடு பொடியாகி விட்டது.

சுமதி அங்கிருந்து தப்பி ஓடிவிட்டாள். சுமதி ஓடும்போது மிகவும் சாமர்த்தியம் உடையவனும், பலமுடையவனும் ஆன பாண்டிய குதிரை வீரன் முகத்தில் எரிதழலால் தீய்த்து விட்டுச் சென்ற கொடுமையை எண்ணும்போது நந்தினிக்கு ஒருபுறம் ஆத்திரமாகவும் மறுபுறம் வேதனையுமாக இருந்தது. தன்னருகே குதிரை வீரன் வலிதாளாமல் துடித்துக் கொண்டிருந்தான். எத்தகைய இடர்பாட்டையும் தாங்கிக் கொள்ள சகித்துக் கொள்ள அவன் பழக்கப்படுத்தப் பட்டிருந்தான். திறமையும், பலமும் நிறைந்த அவனைக் குதிரை வீரனாக நந்தினி நியமித்தது மிக்க நம்பிக்கையுடைய திறமைசாலி பலசாலி என்பதனால். ஆனால் தன் எதிரே முகத்திலே கண்களிலே தீய்க்கப்பட்டு அவன் அலறி பிறகு அலறல் வெளியே தெரியாமல் பல்லைக் கடித்து வலியைத் தாங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் பொழுது அவளுக்கு அடுத்து என்ன செய்வதென்று ஒரு கணம் தோன்றவில்லை. எதற்காக இந்தப் பணியை மேற்கொண்டு இருக்கிறோம். பலம் மிகுந்த சோழர்களோடு மோதுவதால் ஏற்படும் பலன் என்ன? தான் எடுத்துக் கொண்ட இந்தப் புனிதமான திட்டம் எந்தக் காலத்தில் முடிவடையும்? அமரபுஜங்கன் மதுரை அரியணையில் என்று அமர்வான்? சோழர்பிடியிலிருந்து பாண்டியர்கள் என்று விடுதலை பெறுவர்! என்றெல்லாம் அவளுக்குத் தோன்றிச் சோர்வை ஏற்படுத்தின. உறக்கம் அவள் கண்களைத் தழுவவில்லை. விடிகாலைப் பொழுது பறவையினங்களின் கூச்சல் அவள் செவிகளில் விழுந்தது.

சுமதி தப்பிச் சென்ற பிறகு சுமதியைக் காப்பாற்ற அந்தப் பகுதிக்கு சோழவீரர்கள் வரவில்லை என்பதை உறுதி செய்து கொண்டாள், சுமதியுடன் சோழ வீரர்கள் வரவில்லை என்பதும் அவளுக்குத் தெரிந்தது. தன் துணிவினாலும் சமயத்தில் உதித்த புத்தியாலுமே அவள் குதிரைவீரன் மீது பந்தத்தை வீசித் தீய்த்து இருக்கிறாளே தவிர அவளுக்கு வேறு எந்தவிதப் பக்க பலமுமில்லை என்பதனையும் புரிந்து கொண்டாள். துணிவுடன் கையிலே வாளை ஏந்தித் திடீரென்று அவள் அந்த மாளிகைக்கு வெளியே வந்தாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒருவரும் இல்லை. அவள் உடனே குதிரை வீரனுக்குக் குரல் கொடுத்து அவனை அழைத்துக் கொண்டு விரைவாக யாரும் அறியாத வழியின் மூலமாக அங்கிருந்து தப்பினாள்.

தஞ்சை சபை மண்டபத்தில் ராஜராஜ சோழ தேவரும் படைத்தளபதி கிருஷ்ணன் ராமனும் கூடிப் பேசத்தொடங்கினர். மற்றும் வல்லவரையருக்கும் செய்தி அனுப்பப்பட்டிருந்தது. கிருஷ்ணன் ராமனை நோக்கி ராஜராஜசோழர்

மிகக் கடுமையான குரலில், "நம் ஒற்றர் படைகள் சரியான முறையில் இயங்கவில்லையோ என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. சோழநாடு முழுமையும் பாண்டிய ஆபத்துதவிப் படைகளில் சிலர் ஆங்காங்கே மாறுவேடத்தில் தங்கியிருப்பதாக நான் அறிந்தேன். இன்று மாளிகை அருகே வளையல் வணிகர் ஒருவனை நமது வீரர்கள் சிறைபிடித்து இருக்கின்றனர். சீனநாட்டு வணிகர்கள் தஞ்சையிலே எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுத்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

கிருஷ்ணன் ராமன் சிறிது நேரம், யோசித்து "நாம் அயல்நாட்டவர்களுக்கு எவ்விதத் தடையும் விதிப்பதில்லை. குறிப்பாகக் குதிரை வணிகம் செய்யும் சோனகர்களையும், பட்டுத் துணிகளைக் கொண்டு வந்து இங்கே விற்கும் சீனர்களையும், பொன் மணி மாலைகளை எல்லாம் விற்கும் காந்தார நாட்டு வணிகர்களையும் நாம் கண்காணிப்பதில்லை. ஏனெனில் அவர்கள் எப்பொழுதும் தாங்கள் உண்டு தங்கள் வேலை உண்டு என்று இருப்பது வழக்கம். அதனால் எவ்வளவு அயல் நாட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் கணக்கெடுக்கவில்லை" என்றார்.

ராஜராஜன் சொன்னார், "கிருஷ்ணன் ராமன்! அவர்கள் நம்பிக்கை மிக்கவர்களாக இருக்கலாம். நம்பிக்கை உடையவர்களாக அவர்கள் இருப்பதால் தான் அதைப் பயன்படுத்திக் கொண்டு வேறு சிலர் தவறான செயல்களைப் புரியலாம் அல்லவா? யார் செய்தார்கள் என்று நாம் கண்டுபிடிக்க முடியாது. இன்று பாருங்கள், வளையல் வியாபாரியான அந்தச் சீன வணிகனிடம் பெரிய சதி திட்டம் இருந்திருக்கிறது" என்றார்.

கிருஷ்ணன் ராமன் திடுக்கிட்டு, "சீன வளையல் வியாபாரியா? எனக்குத் தெரியாது. நான்கைந்து சீன வியாபாரிகள் தஞ்சையில் எப்பொழுதுமே சுற்றிக் கொண்டு இருப்பார்கள். நம்முடைய அங்காடிகளில் அவர்களுடைய வாணிபம் மிக நேர்மையாக நடப்பதாக அறிகிறேன். அவர்கள் புதுமாதிரி வளையல்களைக் கொண்டு வந்திருப்பதாக எனக்கு அண்மையில் தெரியவந்தது. ஆனால் அவர்கள் இப்படி அயல்நாட்டிற்கு உதவியாகச் சதி செய்திருப்பார்கள் என்பதை நான் அறியவில்லை. என்ன நேர்ந்தது? நான் இன்னும் ஒற்றர் படைத் தலைவரைச் சந்திக்கவில்லை. காலையில் ஆடல் வல்லானுக்குப் பூஜையை முடித்தவுடன், என்னுடைய சொந்தக் கிராமத்தில் ஒரு கோயில் கட்டுவதற்கான திட்டங்களைத் தீட்டச் சிற்பிகளோடு பேசிக் கொண்டிருந்தேன். தங்களுடைய அழைப்பு கிடைத்தது, ஓடோடி வந்தேன்" என்றார்.



"இவ்வளவு நாள்களாகச் சோழநாட்டில் மிக அமைதியாக எல்லாம் நடைபெற்று வருவதாக நாம் நினைத்துக் கொண்டிருந்தோம். அமைதியான இந்தக் காலகட்டத்தில் நானும் தஞ்சையில் மகத்தான கோயில் ஒன்றைக் கட்டவேண்டும் என்று திட்டமிட்டிருந்தேன். அதற்கான பாறைகளைத் தேர்ந்தெடுத்து வருமாறு சொல்லியிருந்தேன். வரையப்பட்ட சூத்திரங்களைக் கொண்டு வருமாறு கட்டளையிட்டிருந்தேன். ஆனால், இப்பொழுது உள்ள நிலையைப் பார்த்தால் நாடு எங்கும் புல்லுருவிகள், மறைந்திருந்து தாக்கும் பாம்புகள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ தெரியவில்லை. நம்முடைய அமைதியைப் பார்த்து, நாம் அடக்கமாக இருப்பதைப் பார்த்து நம் நாட்டில் குழப்பம் விளைவிக்கச் சிலர் முயன்று வருவதாக இப்பொழுது எனக்குத் தெரிகிறது. அதனுடைய முதல் கட்டமாகத் தான் இன்று அந்தச் சீன வணிகரைப் பற்றிய செய்தியை அறிந்தேன். கடல்பகுதியிலே சேரனுடைய திட்டப்படி கொள்ளைக்காரர்கள் நடமாடுவதால் அவர்களை அடக்க வழிமுறைகளை எல்லாம் நான் கண்டறிந்திருக்கிறேன். அதற்காக தூதுவர் ஒருவரைச் சேரநாட்டிற்கு அனுப்பினேன். அங்கிருந்து வந்த செய்தியும் உற்சாகம் கொள்வதாக இல்லை. இன்று கிடைத்திருக்கும் இந்தச் செய்தியும் தஞ்சைக்கு அருகிலே சதிகாரர்கள் நடமாடுவதாகத் தெரிவிக்கிறது. நாம் அதைப் பற்றி உடனடியாக கலந்து ஆலோசிக்க வேண்டும். வல்லவரையனை வரச் சொல்லி இருக்கிறேன். இன்னும் சோழநாட்டின் நலனை மூச்சாகக் கொண்ட மூவேந்தர் வேளாரையும் வரச்சொல்லியிருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே வல்லவரையரும், இளையபிராட்டியும் சபை மண்டபத்திற்குள் நுழைந்தனர். அவர்கள் இருவரும் மிகவும் பரபரப்புடன் காணப்பட்டனர்.

"மாளிகைக்கு அருகே சீன வணிகர் ஒருவர் சிறைப்படுத்தப்பட்டார் என்ற செய்தி உங்களுக்குத் தெரியுமா?" என்று ராஜராஜன் இளைய பிராட்டியை நோக்கிக் கேட்டார். அவள் மறுமொழி சொல்வதற்கு முன்பாகவே வல்லவரையர் சீன வணிகர் சிறைப்படுத்தப்பட்டார் என்பதையும், இளைய பிராட்டியைக் கவர்ந்து செல்வதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த பாண்டிய நாட்டு வீரர்கள் இருவர் சிறைப்படுத்தப்பட்டனர் என்பதையும் தெரிவித்தார்.

ராஜராஜன் திடுக்கிட்டு, "என்ன சொல்கிறீர்கள். இளைய பிராட்டியை இங்கிருந்து கவர்ந்து செல்வதா? சோழநாட்டிலிருந்தா?" என்று பரபரப்புடன் கேட்டார்.

"ஆமாம்! பாண்டியர்களுடைய திட்டம் மிகப் பயங்கரமாகவும் பலமானதாகவும் இருக்கிறது. சோழநாட்டிலேயே அவர்கள் கைவரிசை

காட்டப்படுகிறது. தங்கள் வரையில் செய்தி எட்டியதா என்பது தெரியவில்லை. தஞ்சைக்கு மிக அருகே உள்ள காட்டின் நடுவில் உள்ள மாளிகைக்கு நந்தினி வந்து சென்றிருக்கிறாள். நேற்று முன்தினம் அவள் இங்கு வந்து தங்கி சில திட்டங்களைத் வகுத்திருக்கிறாள்'' என்றார் வல்லவரையர். அவர் சொன்னதைக் கேட்டவுடன் ராஜராஜன் உடல் லேசாக நடுங்கியது.

அது அச்சத்தால் அன்று. மாபெரும் பலம் மிக்க சோழர்நாட்டில் விரோதிகளுடைய நடமாட்டம் மிக அதிகமாக இருக்கிறது என்ற செய்திகள் சிறிது சிறிதாக வரும்பொழுது சோழநாட்டின் இதே பகுதியிலே பகைவர் முகாமிட்டு திட்டங்களைத் தீட்டுகிறார்கள் என்ற செய்தி அவருக்கு மிகுந்த சீற்றத்தை விளைவித்தது. சோழநாட்டில் உள்ள படைப்பிரிவினரும், ஒற்றர் பிரிவுகளும் சரியான முறையில் இயங்குகின்றனவா என்ற சந்தேகம் அவருக்கு எழுந்தது.

''நான் இப்போது தான் கிருஷ்ணராமனிடம் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். சோழநாட்டில் நமது ஒற்றர்ப்படை திறமை குறைந்து விட்டதா?'' அதற்கு வல்லவரையர் சொன்னார்: ''நமது ஒற்றர் படையினருடைய திறமை குறையவில்லை. ஆனால் எதிரிகளுடைய திறமை அதிகரித்துள்ளது. நம் நாட்டிற்குள் பகைவர்கள் நுழைய மாட்டார்கள் என்ற மெத்தனம் நமக்கு வந்துவிட்டது. நம்முடைய படைத் தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய ஊரிலே திருப்பணி செய்வதற்கான திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். மூவேந்த வேளார் தன்னுடைய கிராமத்தில் ஓர் அழகிய சிவன் கோவிலை கட்டுவதற்காக செம்பியன் மாதேவியாருடன் பேசிக் கொண்டிருக்கிறார். இதோ அமர்ந்திருக்கும் கிருஷ்ணன் ராமனும் நல்லதொரு கோவிலைக் கட்ட வேண்டும் என்ற முடிவிலிருக்கிறார். நாமோ இங்கே தஞ்சையில் தளிக்குளத்திற்கு அருகே மாபெரும் கோயிலைக் கட்டவேண்டும் என்று அதற்குக் கற்களைத் தேர்ந்தெடுக்கவும், சிற்பிகளை அழைத்து வரவும், புதுமாதிரியான அமைப்பிற்கான வரைபடங்களைத் தயாரிக்கவும் நாலா திக்குகளிலும் அனுப்பியிருக்கிறோம். இந்த நிலையில் நாம் அறியாவண்ணம் அவர்கள் சதித் திட்டம் தீட்டியிருக்கின்றனர். சற்று நாம் சோர்ந்திருந்தால் இளையபிராட்டியை இப்போது நாம் நம்மிடமிருந்து இழந்திருப்போம்'' என்றார்.

ராஜராஜ சோழன் சீற்றத்துடன் எழுந்தார். ''என்ன சொல்கிறீர்கள் வல்லவரையரே! இளையபிராட்டி மீது காற்று கூட தவறான முறையில் வீசுவதற்கு அச்சப்படும் இந்த வேளையில், அவரைக் கவர்ந்து செல்வதற்கான திட்டமா? யார் தீட்டியது? அந்தச் சதிகாரர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்து விட்டீர்களா? அவர்கள் தப்பிப் போகாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுத்து



விட்டீர்களா? நமது கோட்டைப் பாதுகாவலர் எங்கே? பழுவேட்டரையருடைய திருமகனார் தானே இப்பொழுது அந்தப் பொறுப்பில் இருக்கிறார்?'' என்று கேள்வி மேல் கேள்வி கேட்கவும் வல்லவரையர் அந்தப்புரத்தில நடந்த செய்தியை விவரித்தார்.

## 32

ராஜராஜ சோழருக்கு ஏற்பட்ட கோபத்திற்கு எல்லை இல்லை. அவர் முகத்தோற்றத்தைக் கண்டு அனைவரும் நடுங்கினர். சுமதி கூறியவற்றை ஏன் அரசரிடம் சொன்னோம் என்று வல்லவரையரும் கவலையடைந்தார்.

கிருஷ்ணன் ராமன் குனிந்த தலையுடன் யோசிக்கலானார். தஞ்சை நகரத்தில் இதுவரை நடமாடி வந்த வேறு நாட்டினரைக் கண்காணிக்காமல் போனோமே என்று எண்ணும் போது, இப்போது காவலில் சீன வணிகரைச் சந்தித்து மேலும் அவரிடமிருந்துச் செய்திகள் பெற வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

இளையபிராட்டியும் மௌனமாக இருந்தாள். தன் இளவல் ராஜராஜனுக்குக் கோபம் வந்தால் அதன் விளைவு பயங்கரமாயிருக்கும் என்பதை அறிவாள். எப்போதும் புன்முறுவல் தவழும் முகம் மாறினால் பூகம்பமே வந்துவிடும் என்பது அவளுக்குத் தெரியும். தன்னைக் கவர்ந்துச் செல்வதால் சோழநாட்டையே அடிபணிய வைத்து விட முடியும் என்று நந்தினி நினைக்கிறாள்; அவளுக்கு அந்தத் துணிவு எப்படி வந்தது என்றும் யோசிக்கலானாள். பழிக்குப் பழி வாங்கும் மனப்பான்மை அவளுக்கு இன்னும் மாறவில்லை. அவள் தலைமையில் பாண்டியர்கள் மீண்டும் கிளர்ந்து எழுமாறு விட்டது ராஜதந்திரத் தோல்வியோ என்றும் நினைத்தாள்.

ராஜராஜன் இளையபிராட்டியை நோக்கி, ''அக்கையாருக்கு அதிர்ச்சி ஏற்படும்படி செய்ததே எமது ஆட்சியிலுள்ள குறைபாடு. எட்டுத் திக்கிலும் நமக்கு விரோதிகள் இல்லை என்று தவறாக எண்ணி விட்டோம். நமது ஒற்றர் படையின் மதியூகத்தைச் சந்தேகப்படத் தோன்றுகிறது. கொள்ளைக்காரர் களுக்குச் சேரர் உதவி வருவதும் ஆனைமலைக் காட்டில் அமரபுஜங்கன் மதுரையை எதிர்த்துப் போரிட படைவீரர்களை ஆயத்தப்படுத்துவதும் சோழநாட்டில் பாண்டிய ஒற்றர்கள் நிறைந்திருப்பதும், தஞ்சைக் கோட்டைக்கு அருகே பாண்டிய ஒற்றர்கள், இளையபிராட்டியைக் கவர்ந்து செல்லக்

காத்திருந்ததும், சீன வணிகர் மாளிகைக்குள் துணிவுடன் நுழைந்ததும் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போல் நந்தினி தஞ்சைக்கு வரும் வழியில் உள்ள பாழடைந்த மாளிகையில் தங்கியிருந்தும், முன்பே தகவல் அறியாதிருந்ததும் என் ஆட்சித் திறமைக்குக் குறை ஏற்பட்டது போல் அமைந்திருக்கிறது. இன்னும் என்னென்ன பயங்கரத் திட்டங்கள் உள்ளனவோ? நாம் மிகக் கவனமாக இருக்கவேண்டும்; நாம் என்பதை விட நான் என்று தான் சொல்ல வேண்டும்'' என்று கூறும்போது அங்கிருந்தவர் ஒவ்வொருவருடைய முதுகிலும் சாட்டையால் அடிப்பது போல் தோன்றியது.

மூவேந்த வேளார் உடல் மெல்ல நடுங்கியது. தஞ்சையில் நிகழ்ந்த சம்பவங்களுக்கு அவரும் பொறுப்பு தான். ஒற்றர் படைகளுக்கு வேண்டிய உத்தரவிடுவதும் அவர் தான்.

அவர் பரபரப்புடன் எழுந்தார், ''சக்கரவர்த்தி அவர்களே! சோழநாட்டு ஒற்றர்கள் தக்க தருணத்தில் செய்திகளைக் கண்டறிந்து தரவில்லை என்ற குற்றச்சாட்டிற்கு நான் பொறுப்பேற்கிறேன். அதற்குப் பரிகாரமாக ஏன் தண்டனையாக என்று கூடச் சொல்லலாம்; எதிரிகளைப் பூண்டோடு கிள்ளி எறியும் பணியை நான் ஏற்கிறேன். நான் இப்போதே அமரபுஜங்கன் ஒளிந்து கொண்டிருக்கும் ஆனைமலைக் காட்டிற்குத் தேர்ந்தெடுத்த படைகளுடன் புறப்படுகிறேன். உத்தரவிடுங்கள்'' என்று வீராவேசமாய்ப் பேசினார்.

கிருஷ்ணன் ராமன் மெல்லத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''படைத்தலைவர் என்ற முறையில் ஒரே சமயத்தில் சேரநாட்டின் மீதும், பாண்டியர்கள் மறைந்து இருக்கும் இடம் நோக்கியும் படை எடுத்துச் செல்லும் பொறுப்பை நான் ஏற்கிறேன் கட்டளையிடுங்கள் சக்கரவர்த்தி'' என்றார்.

வல்லவரையர் வந்தியத்தேவன் அங்குக் கூடியிருந்தவர்களை ஒருமுறை சுற்றிலும் பார்த்தார். ''நான் ஒருவன் இருக்கிறேன் என்பதையே மறந்து விட்டீர்கள்'' என்று கூறி மேலும் பேச முற்பட்ட போது குந்தவை தேவி குறுக்கிட்டு, ''மகத நாட்டு அரசராகிவிட்ட தங்களைப் போர்க்களம் செல்ல எப்படி அழைப்பது என்ற தயக்கம் காரணமாயிருக்கலாம்'' என்று கூறும்போது வல்லவரையர் இளையபிராட்டியின் பக்கம் திரும்பி ''மகதநாட்டின் அரசர் என்றாலும் சோழநாட்டின் ஆட்சிக்குட்பட்டவன் தானே. மேலும் மகத நாட்டு அரசிக்கு ஆபத்து நேர்கிறது என்றால் அந்த நாட்டு அரசராகிய நான் கையைக் கட்டிக் கொண்டு இருக்கலாமா? எனக்கு இப்போது இரட்டிப்புக் கடமை. சோழநாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற கடமை; என் சொந்தமான உணர்வு மற்றொன்று - மகத நாடு குறுநிலமாக இருக்கலாம்; அந்த நாட்டு அரசிக்கு ஆபத்து என்றால் அந்த நாட்டரசர் கையைக் கட்டிக் கொண்டிருக்கலாமா? உடனே நான் போருக்குப் புறப்படத் திட்டம் வகுக்க முற்படுகிறேன். என் வாளுக்கு இரத்தப் பசி ஏற்பட்டு விட்டது. உறைக்குள்ளே எவ்வளவு காலம் குடிபுகுந்து உறங்குவது என்று என் வாள் குரல் எழுப்புகிறது. மகத நாட்டுத் தலைநகர் பிரம்மதேயத்துக்கும் தஞ்சைக்கும் சென்று வந்து, அரண்மனை விருந்துண்டு, பேரரசின் அன்பு உபசரிப்பில் திக்குமுக்காடி ஓய்வெடுத்திருந்தது போதும். சோழச் சக்கரவர்த்திகள் எனக்கு விடை கொடுத்து வாழ்த்துக் கூறி அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று முழங்கினார்.



ஒருவரை ஒருவர் பொருள் நிறைந்த விழிகளுடன் நோக்கினர்.

ராஜராஜன் கோபம் சற்றுத் தணிந்தது. அவர் பேசினார்:

''ஒற்றர் படைகளின் தவறுக்குத் தான் பொறுப்பேற்பதாக வேளார் கூறினார். நமது ஒற்றர் படையின் திறமையை நான் குறைவாக மதிப்பிடவில்லை. ஆனைமலைக் காட்டில் அமரபுஜங்கன் இளைஞர் படையைத் திரட்டிப் பயிற்சி அளித்து வரும் செய்தியை நமது ஒற்றர் படைத்தலைவர் அவ்வப்போது என்னிடம் தெரிவித்து வருகிறார். மதுரை அரியணையில் அமர்வதற்கான நேரத்தை அமரபுஜங்கன் எதிர்பார்த்திருக்கிறான் என்பதும் தெரியும். அவன் திட்டத்தை முறியடிக்கும் தருணத்தை நானும் எதிர்நோக்கியுள்ளேன். ஆனால் கடல் பகுதிகளில் நம் வணிகர்களுக்கு ஏற்பட்ட துன்ப துயரங்கள் நமக்குத் தக்க சமயத்தில் தெரிவிக்கப் படவில்லை. இப்போது கூட ஓரிடத்தில் சங்கரத்தேவன் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் செய்தியை நமது ஒற்றர்கள் அறிந்து வந்துள்ளனர். நாம் இப்போது சேரர்கள் மீது போர் தொடுத்தாக வேண்டும் என்ற கட்டாயத்திற்கு வந்திருக்கிறோம்...'' என்ற போது சபையின் ஆஹா என்ற குரலும் 'வீர வேல் வெற்றி வேல்' என்ற முழக்கமும் எழுந்து அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்தன.

* * *

ஆனைமலைக் காட்டில், நந்தினி கவலையே உருவாக அமர்ந்திருந்தாள். நடந்தவற்றை அறிந்த அமரபுஜங்கன் தலைவியைச் சமாதானப்படுத்த முயன்றான்.

''அவ்வளவு துணிவுடன் நான் தஞ்சைக்கு அருகேயே தங்கியிருக்கக் கூடாது. சோழ வீரர்கள் என்னை அடையாளம் கண்டு சிறைப்படுத்தியிருந்தால் நம் இயக்கமே கலகலத்துப் போயிருக்கும். என் அசட்டுத் துணிவை நினைக்க எனக்கே வருத்தமாயிருக்கிறது. வேதனையாயிருக்கிறது. கோபமாகவும்

வருகிறது. எனக்கு நானே தண்டனை கொடுத்துக் கொள்ள வேண்டியது தான்'' என்று வருத்தம் நிறைந்த குரலில் பேசினாள்.

எத்தகைய சோதனை சூழ்ந்த காலத்திலும் தலைவி வருத்தப் படவில்லை. தாம் பிழை செய்து விட்டோம் என்று கூறியதில்லை. இப்போது ஏன் இப்படி?

தலைவி சோர்வுற்றால், விடுதலை இயக்கம் என்ன ஆவது? வெண்ணெய் திரண்டுவரும் சமயம் தாழி உடையலாமா? அதுவாக உடைந்தால் சரி, நாமே உடைக்கலாமா?

''அம்மா நீங்கள் கலங்கினால் என்நிலை என்னாவது? என் தோள்வலியும், தங்களுடைய மனவலியும் சேர்ந்துதான் எனக்கு நம்பிக்கையை அளித்துப் பெரும் இயக்கமாக உருவாகி இன்று சோழர்களைப் பலமுனைகளில் எதிர்த்துத் தாக்கத் துணிந்து நிற்கிறது. இந்தப் போதில் தாங்கள் மனம் தளரலாமா?'' அமரபுஜங்கன் குரல் தழுதழுக்கக் கேட்டான்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது அங்கே ஒருவருமில்லை. அமரபுஜங்கனின் ஆபத்துதவிப் படையைச் சேர்ந்தவர்களும் அங்கில்லை. அதனால் மனம் விட்டுப் பேசினாள்.

''அமரபுஜங்கா! உனக்குச் சோர்வு ஏற்படும்படி ஏதும் நான் செய்யமாட்டேன். என் உள்ளத்தில் எத்தனையோ சலனங்கள் ஏற்பட்டாலும் கூட நான் அதை வெளியே புலப்படுத்தியதில்லை. என் இலட்சியம் குறிக்கோள் யாத்திரை நிறைவேறும் காலத்தை எதிர்பார்த்து என்னை நான் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறேன். நான் செய்வது எல்லாமே சரியாக நடக்கவேண்டும் என்ற கவலை எனக்குண்டு. சோழர்களைப் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்ற ஒரே நோக்கம் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இருந்தது. இப்போது, பாண்டிய நாட்டைச் சோழர்களிடமிருந்து விடுதலை செய்ய வேண்டும். சோழ இளவரசர் மதுரையில் ஆட்சி நடத்தும் நிலையை மாற்றி பாண்டியர்களின் உண்மை வாரிசான உன்னை அரியணையில் அமர்த்த வேண்டும் என்பதில் தான் கண்ணும் கருத்துமாக இருக்கிறேன். அந்த இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் தான் சோழ மாளிகையில் இளையபிராட்டியைக் கவர்ந்து வந்து அதிர்ச்சி சிகிச்சை அளிக்க எண்ணினேன். என் திட்டத்தில் எங்கோ பிழை நேர்ந்து விட்டதால் திட்டம் தோல்வியடைந்து விட்டது. திட்டம் தோல்வியடைந்ததோடு, சீன வணிகன் சிறைப்படுத்தப்பட்டான். நமது வீரர்கள் சிறைப்படுத்தப்பட்டனர். அதற்கும் மேலாக மிகத் திறமைசாலியான குதிரை வீரனாக உதவியவன் முகம் தீயால் கருகிவிட்டது. நான் அவ்வப்போது சென்று தங்கும் மாளிகைக்கு இனி நான் செல்ல முடியாது.



மாளிகையின் ஓரிடத்தில் தங்க ஆபரணங்களும், நகைகளும் புதைத்து வைத்திருக்கிறேன். நமது திட்டங்களுக்கு உதவுவதற்காகச் சேமித்து வைத்திருக்கிறேன். இனி அங்கு சென்று அவற்றை எடுக்க முடியாது போய்விட்டதே என்று நினைக்கும் போது தான் என் பிழையை நான் உணர்ந்தேன். அதனால் தான் என்னையே நான் தண்டித்துக் கொள்ள முடிவு செய்தேன். அதனால் நீ சோர்வடைய வேண்டாம். உன் முயற்சி தொடரட்டும்'' என்றாள் நந்தினி.

அமரபுஜங்கன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். ''தாயே! பாண்டிய நாட்டின் உண்மை வாரிசு என்று என்னை நீங்கள் அங்கீகரித்திருக்கிறீகள் அப்படித்தானே'' என்று கேட்டான்.

நந்தினி வியப்புடன் அவனை நோக்கி ''அதில் என்ன சந்தேகம்?'' என்று கேட்டாள்.

''தாயே! மதுரை அரியணையில் என்னை அமர வைக்கப் போகிறீகள் அல்லவா?''

''ஆமாம் உண்மை வாரிசான நீதான் அரசராக வேண்டும். இப்போதும் நீதான் பாண்டிய மன்னர். உன் உத்தரவுப்படி தான் எல்லோரும் நடக்கிறார்கள்.''

''அப்படியா! நான் சொன்னால் நீங்களும் கேட்பீர்கள் அல்லவா?''

''ஆகா! அரசர் கட்டளையை மீறுவது ராஜதுரோகம். என்ன கட்டளையிடப் போகிறாய், சொல்லு நிறைவேற்றுகிறேன். தஞ்சைக்கு அடிக்கடி தனியே சென்று அந்த மாளிகையில் தங்குவது தவறு என்று கூறப்போகிறாய் அப்படித்தானே!''

''இல்லை, இல்லை. தங்களுடைய திட்டம் - ராஜதந்திரம் சரியாகவே இருக்கும். நான் அதில் தலையிடுவதோ, கருத்து உரைப்பதோ சரியன்று. நான் இப்போது கூறப்போவது கட்டளையல்ல, வேண்டுகோள்.''

''சொல் அமரபுஜங்கா, சொல் என்ன கருத்தோ கட்டளையோ - வேண்டுகோளோ எது வேண்டுமானாலும் சொல்லலாம்.''

''தாயே! தாங்கள் வகுத்த திட்டம் ஏதும் தோல்வியடைந்தது என்று நினைக்காதீர்கள். சோர்வடைந்து போகாதீர்கள் என்ற வேண்டுகோளை மட்டும் கேட்டுக் கொள்கிறேன். சேரர்கள் கடற்படை புறப்பட்டு விட்டது. தரைவழியே செல்ல யானைகளை நிறைய அளிப்பதாக உறுதி கூறியுள்ளார்கள். ஆனால் எனக்கும் சேர மன்னருக்கும் கருத்து வேற்றுமை; யானைப்படைகளை வேண்டாம் என்று நான் சொல்லி விடப்போகிறேன்.''

''அமரபுஜங்கா, ஏன் இப்படி. ஒரு முடிவு?''

''சேர அரசமகள் என்னுடன் ஆனைமலைக் காட்டிற்கு வருவதாகப் பிடிவாதம் பிடிக்கிறாள். தங்களுக்கும் அவள் வருவதில் விருப்பமில்லை. சேரமன்னரோ அவளை அழைத்துச் சென்றுதானாக வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறார். தன் கட்டளை என்றும் கூறுகிறார். சேரமன்னருக்கு நான் ஏன் அடிபணிய வேண்டும்? அதனால் நான் கூறிவிட்டேன் உங்கள் மகளை நான் மணக்க விரும்பவில்லை, உங்கள் படைகளும் வேண்டாம் என்று கூறிவிட்டேன்'' என்றான்.

நந்தினிக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. ''அமரபுஜங்கா சேரன்மகளை ஆனைமலைக் காட்டிற்கு அழைத்து வரவேண்டாம் என்று நான் சொன்னது உன் நன்மைக்குத் தான், ஆனால் சேர உதவியை மறுத்துவிடுமாறு நான் சொல்லவில்லையே'' என்று பரபரப்புடன் கேட்டாள்.

''தாயே! சேரர்கள் படை பலமில்லாமலேயே நாம் சோழ நாட்டின் மீது படையெடுக்கலாமே. அந்தத் துணிவு இருக்கிறது. தஞ்சையை நோக்கி நமது படைகள் புறப்படும் நாளை உடனே குறித்துக் கொடுங்கள்'' என்றான் அமரபுஜங்கன்.

அமரபுஜங்கனின் துணிவையும், வீரத்தையும் நந்தினி கண்டு அவனைப் பாராட்டிப் பேசி அவனை நோக்கிக் கூறிய வார்த்தைகள் அமரபுஜங்கனைத் திடுக்கிட வைத்தன.

## 33

நந்தினி கூறிய யோசனையைக் கேட்ட, அமரபுஜங்கன் சிறிதுநேரம் மௌனமாயிந்தான். நந்தினியின் திட்டத்தில் பாண்டிய நாட்டிற்குப் பலன் உறுதியாக இருக்கும். சோழநாட்டில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியும், மாளிகையில் தீட்டப்படும் திட்டம் ஒவ்வொன்றும் நந்தினிக்கு எவ்வாறு தெரிகிறது? அமரபுஜங்கனுக்கு வியப்பாக இருந்தது.

நந்தினி கூறியதை நினைக்கும் போது ஒரு பக்கம் அச்சமாக இருந்தது. மற்றொரு பக்கம், தலைவியின் துணிவை எண்ணும்போது பெருமிதமாக இருந்தது.

சேரநாட்டினரின் உதவியை மறுத்து விடுமாறு தலைவி கூறுகிறாள். மதுரைக் கோட்டையைத் தாக்கி மற்றொரு அரியணையில் அமர்ந்திருக்கும் ராஜராஜனின் மற்றொரு மகனைச் சிறைப்பிடித்து பாதாளச் சிறையில் தள்ளுமாறு கூறுகிறாள். வீர இளைஞர்களை இரு பிரிவினராகப் பிரித்து ஒரு



பிரிவினரை மதுரைக்கும் மற்றொரு பிரிவினரை ராஜராஜனின் படைகளைத் தாக்குவதற்காக இங்கேயே நிறுத்தி வைக்குமாறு கூறுகிறாள்.

அமரபுஜங்கன் தனக்கு ஏற்பட்ட ஐயத்தைத் தெரிந்து கொள்ள தயங்கித் தயங்கிக் கேட்டான். தலைவி தவறாக எடுத்துக் கொள்ளப் போகிறாள் என்ற அச்சமும் இருந்தது.

நந்தினி பெரிதாகச் சிரித்தாள். அதில் அமரபுஜங்களின் அறியாமையைக் குறித்து ஏளனமும் இருந்தது.

''மதுரையைத் தாக்குவதில் உனக்கு என்ன தயக்கம்?'' என்று நந்தினி கேட்டாள்.

''எனக்குத் தயக்கமோ அச்சமோ இல்லை, தாயே! படைகளைப் பிரிக்கச் சொல்கிறீர்கள். படை பலத்திலும் பிளவு பட்டுவிட்டால் என்ற சந்தேகம் எழுந்தது கேட்டேன்'' என்றான் அமரபுஜங்கன்.

''அமரபுஜங்கா, படைகளைப் பிரிப்பதில் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. பல முனைகளில் தாக்க வருபவர்களைப் பல முனைகளில் பிரிந்து இருந்து தாக்குவது ஒருமுறை. பல முனைகளில் தாக்க வருபவர்களை ஒரே இடத்தில் இருந்து அவர்கள் முன்னேறி வரும்வரைக் காத்திருந்துத் தாக்குவது மற்றொரு முறை. தாக்க வருபவர்களின் நோக்கம் அறிந்து அவர்கள் இயங்குவதற்கு முன்பே திடீரெனத் தாக்குவதும் யுத்த தந்திரம் தான்'' என்றாள் நந்தினி.

போர்க்கலையை மிகத் துல்லியமாக எவ்வாறு அறிந்திருக்கிறாள் தலைவி என்று அமரபுஜங்கன் வியந்தான்.

''படைகளின் எண்ணிக்கை முக்கியமன்று. அவர்களை வளைத்துத் தாக்குபவர்களின் துணிவு, வலிமை, தியாக உணர்வு இவையே முக்கியமாகும். பத்து வீரர்களை வைத்துக் கொண்டு ஆயிரம் வீரர்களை முறியடிக்கலாம். ஒவ்வொரு வீரனும் நூறுபேருக்குச் சமமான புத்தி நுட்பமும், துணிவு, வீரமும் உடையவர்களாயிருக்க வேண்டும். எதிரிகள் அயர்ந்து இருக்கும் சமயத்திலும் நாம் விழித்திருக்க வேண்டும்.

அமரபுஜங்கன் தலைவி சொல்வதைக் கேட்டவாறிருந்தான்.

''அவர்கள் என்ன சொல்கிறார்கள்? சேரர்கள் உதவி வேண்டாம். இப்போது தஞ்சையின் மீது படையெடுத்துச் செல்லாமல் மதுரையைத் தாக்கவேண்டும். சோழர்கள் சார்பில் மதுரையில் பிரதிநிதியாகவுள்ள இளவரசனைச் சிறைப்படுத்த வேண்டும். பெரும்பகுதிப் படையை ஆனைமலைக் காட்டிலேயே நிறுத்திவைக்க வேண்டும்.

இந்தத் திட்டம் முழுமையாக அமரபுஜங்கனுக்கு விளங்கவில்லை.

அமரபுஜங்கன் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் புலப்படுத்திக் கொள்ளாமல், இமை கொட்டாமல் தான் பேசுவதையே கேட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்த நந்தினி கேட்டாள்.

"அமரபுஜங்கா நான் சொல்வது உனக்கு ஏற்கவில்லை - அப்படித்தானே?"

"இல்லை, தாயே! நீங்கள் கூறுவதிலுள்ள உள்ளர்த்தம் எனக்கு விளங்கவில்லை. நிச்சயமாக பாண்டிய நாட்டிற்கு நல்லது ஏற்படவேண்டும் என்றே யோசனை சொல்வீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் மும்முனைத் தாக்குதலைப் பற்றி நீங்களே திட்டம் வகுத்துவிட்டு, இப்போது வேறுவிதமாக மாற்றுகிறீர்களே அதுதான் எனக்குப் புரியவில்லை. அதனால் தான் மௌனமாக இருக்கிறேன்."

"அமரபுஜங்கா! மனத்திலிருப்பதை உடனே கேட்கும் உன் குணத்தை நான் பாராட்டுகிறேன். மும்முனைத் தாக்குதலைக் கைவிடுமாறு நான் இப்பொழுதும் சொல்லவில்லை. கடல் மூலம் தாக்குவதைச் சேர மன்னர் கவனித்துக் கொள்வார். மதுரைத் தாக்குதலை நமது இளைஞர்படை நடத்தட்டும். தஞ்சைபுரியின் மீது உடனே தாக்குதல் நடத்துவதை மட்டும் பொறுத்திருக்கச் செய்யலாம், என்று தான் சொல்கிறேன்."

"தஞ்சைபுரியின் மீது ஏன் இப்போதே தாக்குதல் வேண்டாம் என்கிறீர்கள்? நம் படை சோழர்படைகளை வெல்லப்போதுமானதாக இராது என்பதாலா? அல்லது சோழர்களின் திறமைக்கு ஈடுகொடுக்கும் சக்தி நமக்கில்லை என்பதாலா?"

"இரண்டும் இல்லை, இப்போது சூழ்நிலை மாறிவிட்டது. நான் செய்த சிறு பிழையால் இராஜராஜன் எச்சரிக்கையுடன் இருக்கிறான். சோழ ஒற்றர்கள் சுறுசுறுப்புடன் இயங்குகிறார்கள். சந்தேகப்படுபவர்களைச் சிறையிலடைத்துச் சித்திரவதை செய்து உண்மையை அறிய முயல்கிறார்கள். படை திரட்டுமாறு தளபதிக்குக் கட்டளையிட்டுள்ளான் ராஜராஜன். குறுநில மன்னர்களுக்குச் செய்திகள் சென்றுள்ளன.

ராஜராஜனின் இந்த நடவடிக்கைகளைப் பார்க்கும் போது மாபெரும் படையெடுப்பிற்கு ஆயுத்தம் செய்வதாகத் தோன்றுகிறது. இந்த நிலையில் நாமே வலியச் சென்று தஞ்சைக்கருகே சிக்கிக் கொள்ள வேண்டாமே என்பதால் தான் ஆனைமலைக் காட்டிலேயே ஒரு பகுதிப் படைகளை இருக்குமாறு சொன்னேன்."



தலைவியின் புத்திக் கூர்மையையும், போர் தந்திரத்தையும் அறிய அறிய அமரபுஜங்கனுக்கு வியப்பு மேலிட்டது. அவன் விழிகள் ஜ்வலித்தன. முகத்தில் நம்பிக்கையும் நன்றியும் கலந்து ஒளி வீசின.

"தாயே! வெறும் வீரம் இருந்தால் மட்டும் போதாது. புத்தியைப் பயன்படுத்த வேண்டும்; சூழ்நிலையையும் உணரவேண்டும் என்பதைப் புரிந்துகொண்டேன். அடிக்கடி சொல்கிறீர்கள், தாங்கள் பிழை செய்துவிட்டதாக, தாங்கள் பிழையே செய்யமாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். பாண்டிய நாட்டு இளம் வீரர்கள் தங்களையே நம்பியிருக்கிறார்கள். சோழநாட்டிற்குள் புகுந்து வீரவிளையாட்டைப் புலப்படுத்த அவர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சையை நோக்கி வீறுகொண்டு செல்ல வேண்டும் என்று நான் கூறியபோது அவர்களிடமிருந்து எழுந்த குதூகல ஒலி வனவனாந்திரங்களையும் தாண்டி எதிரொலித்தது. காட்டின் எல்லையில் மறைந்திருந்து காவல் காத்து எதிரிகளின் நடமாட்டத்தை வேவு பார்க்கும் அவர்கள் செவிகளிலும் வீரர்களின் கோஷம் வீழ்ந்து அவர்கள் ஓடோடி வந்திருக்கிறார்கள். உயரமான மரங்களின் மீது அமர்ந்திருக்கும் புள்ளினங்கள் பெரும் ஒலி கேட்டு நாலாபக்கமும் பறந்தோடின. தாயே! இப்போது அவர்களிடம் சென்று தஞ்சைபுரிக்குச் செல்லப்போவதில்லை என்று சொன்னால் அவர்கள் உற்சாகம் குறைந்து விடாதா?" அமரபுஜங்கன், குரல் தழுதழுக்கக் கேட்டான்.

நந்தினி நகைத்தாள். "அமரபுஜங்கா! நான் செய்த பிழையை, பிழை என்று ஒப்புக் கொள்வதில் தவறில்லை. தஞ்சை அருகே சர்வ சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்தேன், ஒருவரும் அறியாத வண்ணம். ஆனால் இப்போது தெரிந்து விட்டதால் தஞ்சை புரியில் காவல் பலமாக இருக்கிறது. படைகள் தஞ்சையை நோக்கி வருகின்றன என்று தெரிந்தவுடனேயே நம்மை நிர்மூலமாக்க ஆவேசத்துடன் சோழர் படைகள் வரும். நாம் தஞ்சையை நோக்கி வரப்போவதாகவே அவர்களுக்குச் செய்தி எட்டியிருக்கிறது. நம்மை அவர்கள் எதிர்நோக்கியிருப்பர். அந்த வேளையில் நாம் அமைதியாக இருந்து, மதுரையை நோக்கி ஒரு பகுதிப்படைகளை அனுப்புவோம். நாம் மதுரையைத் தாக்குவதை அவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். மதுரை வீழ்ச்சியடையும். அந்தச் செய்தி கேட்டு அவர்கள் பொங்கி வரும் போது நாம் அவர்களைத் தாக்குவோம். அதே சமயம் நாகைப்பட்டினம், தொண்டி, காயல்பட்டினம் துறைகளில் சேரர்கள் கலங்களை நம் வீரர்களைக் கொண்டு தாக்குதல் நடத்துவர். அத்துடன் கடற்கொள்ளைக்காரர்களாக கடலில் அட்டகாசம் புரியும் சோணகர்களின் பயங்கரத் தாண்டவமும் சேரும்" என்று தலைவி சொல்லும் போது அமரபுஜங்கனுடைய சந்தேகங்கள் விலகின.

அமரபுஜங்கன் தாயின் காலடியில் வீழ்ந்து வணங்கினான். பரபரப்புடன் குனிந்து அவனைத் தூக்கி நிறுத்திய நந்தினி, "அமரபுஜங்கா! சேரமகள் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறாள். உன்னுடன் வரவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள் என்பதால் தானே அவளை இங்கு அழைத்து வருவதைத் தவிர்த்தாய்? மனதுக்குள் கோபம் இருக்குமல்லவா? புதிய தம்பதிகளைப் பிரிக்கும் பாவத்திற்கு நான் ஆளாகிறேன். என்ன செய்ய? என் உள்ளத்திலிருந்து பாண்டிய மண் மீதுள்ள ஆசை குறையவில்லையே. சோழர்கள் மீது வெஞ்சினம் மறையவில்லையே" என்று குறைபட்டுக் கொண்டாள்.

"இல்லை தாயே, இல்லை. அப்படியெல்லாம் இல்லை. இழந்த பெருமையை மீண்டும் அடைவது ஒன்றே என் இலட்சியம். ஆனால் சேர மகளின் தூய அன்பு என்னைச் சற்றுச் சபலப்படுத்தி விட்டது. சேரர்களின் உதவிவேண்டும் என்ற எண்ணமும் உடன் சேர்ந்தது. அதனால் சேரர் தலைநகரத்தில் சற்று அதிக நாட்கள் தங்கிவிட்டேன். சேரமகள் மாதங்கியின் அன்பெனும் பிடியுள் சிக்கினேன்" என்று கூறும் போது உணர்ச்சி மிகுதியால் அமரபுஜங்கன் குரல் தழுதழுத்தது.

தலைவி அவனை அன்புடன் அணைத்துக் கொண்டு, "அமரபுஜங்கா இளமை வேகத்துடன் காதல் போதையும் சேர்ந்து விட்டால் இலட்சியப் பாதையினின்று மாறிவிடத் தோன்றும். ஆனால் நீ வீரத்திருவை மணப்பதை இலட்சியமாகக் கொண்டவன். விரைவில் வெற்றி மாலையை அணிந்து சேரர் குலக்கொடியுடன் மதுரை அரியணையில் அமர ஆசி வழங்குகிறேன். உடனே மதுரையை நோக்கிப் படைகளுடன் செல்லத் தக்கவர்களை ஆயத்தப்படுத்து. நம்பிக்கையுடைய வீரர்கள் மதுரையை நோக்கி நாளைக்குப் பாயட்டும்" என்றாள்.

நந்தினி வகுத்த திட்டங்கள் பாண்டியர் வெற்றிக்கு உதவக் கூடியனவாய்த்தானிருந்தன. ஆனால் நடந்ததே வேறு.

சேரநாட்டு மன்னரிடம் தூதுவனாகச் சென்ற சங்கரத் தேவனைப் பற்றிய செய்திகள் தெளிவாக ராஜராஜனுக்குக் கிடைக்கவில்லை. சேர மன்னரைச் சந்தித்த செய்தி கிடைத்தது. ஆனால் தூதுவருக்கு உரிய மரியாதையைச் சேரமன்னர் கொடுக்கவில்லை. சங்கரத் தேவனைச் சிறையிலிட்டு விட்டார்கள் என்ற செய்தி மட்டுமே கிடைத்தது.

செய்தி காட்டுத் தீ போல் தஞ்சைபுரியில் பரவியது. உடனே சேரநாட்டின் மீது படையெடுக்க வேண்டும் என்ற குரல் எங்கும் ஒலித்தது.

மூவேந்த வேளார் முன் வந்தார். வல்லவரையர் வந்தியத்தேவன் துடிப்புடன் எழுந்தார். படைத்தலைவர் கிருஷ்ணன் ராமன் தானே முன் நிற்பதாகக் கூறினார்.



குமரவேள் போன்ற அழகிய தோற்றத்தினை திகழ்ந்த இராஜராஜனின் திருக்குமாரன் மதுராந்தகன் தன் அத்தை இளையபிராட்டி குந்தவை தேவியாரை அணுகி மெல்லக் கேட்டான் :

"அத்தை, உங்களை ஒன்று கேட்கப்போகிறேன் தாங்கள் அனுமதிப்பீர்களா?" என்றான்.

இளையபிராட்டி அவனை முகமலர்ச்சியுடன் நோக்கி, அருகே அமர்த்தி அணைத்து மெல்ல முத்தமிட்டு, "மதுரா நீ கேட்டுக் கொடுக்க நான் மறுத்தது ஏதாவது உண்டா?" என்று கேட்டுக் கொஞ்சினாள். கன்னங்களில் இடைவிடாமல் முத்தமிட்டாள்.

மதுராந்தகன் முகம் சிவக்க, "அத்தை நான் என்ன இன்னும் சிறு குழந்தையா? அந்தப்புரத்துச் சேடிகள், பாங்கிகள், பணிப்பெண்கள், இளவரசிகள் எதிரே எனக்கு இப்படி முத்தம் கொடுத்தால் எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்று சிணுங்கி அத்தையிடமிருந்து விடுபட்டு, "அத்தை நான் கேட்க வந்ததையே மறந்து விடுமாறு செய்து விடுவீர்கள் போலிருக்கிறதே! மிக முக்கியமாக ஒன்றைக் கேட்க வந்தேன்" என்றான்.

"கண்ணே, மதுரா! பிள்ளைப் பிராயம் தாண்டி வாலிபப் பருவத்தின் தலைவாசலில் நிற்கும் நீ எனக்கு என்றுமே குழந்தை தான். நான் உன்னைச் சீராட்டுவதைக் கண்டு மற்றவர்கள் பொறாமைப்படுவார்கள். தங்களுக்கு என்னைக் கொஞ்சுவதற்கு வாய்ப்பு ஏற்படுவதில்லையே என்று ஏங்குவார்கள். உன்னை நெருங்க அவர்களால் முடியுமா? நீ இந்த நாட்டின் இளவரசன், வருங்கால சோழநாட்டுச் சக்கவர்த்தி என்றாலும் என் அருமை மகன் தான். உன்னைக் கொஞ்சிக் குலவ எனக்குக் கிடைத்த பெரும் பேறு முற்பிறவிப் புண்ணியம். விரோதி நாட்டிற்குச் சென்று வீர சாகசம் செய்யும் தீரன் என்றாலும் நீ என் செல்லப் பிள்ளை தான். உம்; அது போகட்டும். ஏதோ சொல்ல வந்தாயே அதைச் சொல்லு. நீ கேட்பது என்னவென்றாலும் நிறைவேற்றுகிறேன் சொல்லு" என்றாள் இளையபிராட்டி அவனது உச்சந்தலையில் முகர்ந்து முத்தமிட்டவாறு.

"அத்தை, சேரநாட்டின் மீது படையெடுத்துச் செல்லப் போகிறார்களாம்; அந்தப் படைக்கு யார் தளபதி என்று மதுரன் கேட்டான்.

குந்தவை அவனைப் பார்த்து மெல்லச் சிரித்து, "மதுரா! உனக்குத் தெரியாத செய்தியா எனக்குத் தெரியப்போகிறது" என்றாள்.

"இல்லை, அத்தை எனக்குத் தெரியாது. நீங்கள் சொல்வதைத் தான் சக்கரவர்த்திகள் கேட்டு அதன்படி நடக்கிறார். அத்தான் வல்லவரையர் தலைமை தாங்கி சேரநாட்டின் மீது படையெடுத்துச் செல்லப் போகிறாராம்."

என்று சொல்லும்போது குந்தவ்வை, "அந்த விபரம் எனக்குத் தெரியாது. வல்லவரையர் தலைமை தாங்கிச் செல்வதென்றால் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. இன்னும் சிறிது காலம் சென்றால் அவருக்கு வாள் இருக்குமிடம் கூட மறந்து விடும். புறப்பட்டுச் செல்லட்டும். உடனே புறப்பட்டுச் செல்லட்டும்" என்றாள்.

"அத்தை, இதென்ன நியாயம்? நாங்களெல்லாம் இளவயதினர். போர்க்களத்தில் பெரும் வித்தைகள் காட்டத் துடித்துக் கொண்டிருக்கும் போது வயதானவர்கள் எங்கள் வாய்ப்பைக் கெடுக்கலாமா? வல்லவரையரைச் சற்று அமைதியாக இருக்கச் சொல்லுங்கள். நான் தான் படைகளை நடத்திச் செல்லப்போகிறேன்" என்றான்.

இளையபிராட்டிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. மீண்டும் அவனை அணைத்து, "மதுரா! உன் வீரப்பிரதாபங்களைப் புலப்படுத்துவதில் எனக்குப் பெருமகிழ்ச்சி தான். நான் சக்கரவர்த்திகளிடம் சிபாரிசு செய்கிறேன்" என்றாள்.

இளையபிராட்டி குந்தவை தேவியார் தன் இளவல் சக்கரவர்த்தி ராஜராஜ சோழதேவரிடம் மதுராந்தங்கனை அழைத்துச் சென்று மதுராந்தகனின் விருப்பத்தைத் தெரிவித்த போது ராஜராஜர் கூறிய வார்த்தைகள் அங்குள்ள அனைவரையும் திகைக்கச் செய்தன.

சேரநாட்டின் மீது படையெடுத்துச் செல்லும் நாளையும், தலைமை வகித்துச் செல்பவர் யார் என்பதையும் அவர் முடிவு செய்து அறிவித்தார்.

சேரநாட்டுப் படையெடுப்பிற்குத் தானே தலைமை வகித்துப் படைகளை நடத்திச் செல்வது என்ற தன் முடிவை அவர் அறிவித்தபோது சபையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## 34

"வெள்ளி வீதியாரை உடனே கட்டி இங்கே இழுத்து வாருங்கள். கொண்டு வந்து இந்த மரத்தில் கட்டுங்கள்" என்று தலைவி உத்திரவிட்டாள்.

குடிலுக்கு எதிரே இருந்த திறந்தவெளியில் அணிவகுத்து நின்ற பாண்டியர் விடுதலைப் படை வீரர்கள் தலைவியின் கட்டளை கேட்டு அதிர்ச்சியடைந்தார்கள். அமரபுஜங்கன் எந்தவிதச் சலனமுமின்றி அமைதியாக நிமிர்ந்த நெஞ்சுடன் நின்று கொண்டிருந்தான்.

தலைவி அறிவித்த தண்டனை அவனுக்குத் தெரியும். சற்று முன்பு இருவரும் விவாதித்து அந்த முடிவுக்கு வந்திருந்தனர்.



"கானக எல்லையில் காவல் காத்திருந்த வீரர்களின் சடலத்தை எடுத்து வருமாறு வெள்ளி வீதியாருக்குக் கட்டளையிட்டபோதே, அவர் முகமாற்றத்தைக் கவனித்தாயா அமரபுஜங்கா?" என்று கேட்டாள் தலைவி.

"என்னை எழுப்பி விபரம் அறிவித்தபோது அவர் குரலில் பதட்டமிருந்ததைக் கண்டேன். காவல் வீரர்களின் சடலத்தைக் கொண்டு வருமாறு கட்டளையிட்டவுடனேயே அவர் முகமாற்றத்தைக் கண்டேன். அதற்கு ஏற்பவே நடந்திருக்கிறது. அவருடன் செல்ல முயன்ற முத்தெழிலனை அவர் தடுத்திருக்கிறார். அப்படியும் அவன் அவரைத் தொடர்ந்து சென்றிருக்கிறான். சடலங்களுக்கருகே முத்தெழிலனைக் கண்ட வெள்ளிவீதியார் அவனைக் கடிந்திருக்கிறார். அந்தச சமயம் பார்த்து முத்தெழிலன் மீது அம்பொன்று பாய்ந்து வந்து தாக்கியிருக்கிறது. வெள்ளி வீதியார் மீது தாக்காத அம்பு முத்தெழிலனைத் தாக்குவானேன்", அமரபுஜங்கன் கேட்டான்.

"உனக்குப் புரியவில்லையா?" தலைவி கேட்டாள்.

"புரிகிறது தாயே! அந்த இடத்தில் எதிரிகள் மறைந்திருக்கிறார்கள். மார்புக் கவசம் அணிந்திருந்த வெள்ளிவீதியார் மீது அம்பு பாயவில்லை. வெள்ளிவீதியார் இதுவரையில் உளவு சொல்லி வந்தார் என்பது தெளிவாகத் தெரிந்து விட்டது. வெள்ளி வீதியாருடன் சென்ற நான்கு வீரர்களையும் சிறைப்படுத்த ஏற்பாடு செய்து விட்டேன்" என்று கூறியபோது தலைவி அவனைப் பாராட்டி, "விரைந்து முடிவெடுக்கும் உன் திறமையை நான் பாராட்டுகிறேன். வெள்ளி வீதியாருக்கும் மற்றும் அவருக்கு உதவிய நான்கு துரோகிகளுக்கும் தக்க தண்டனை வழங்கி விடு" என்று கட்டளையிட்டாள்.

திறந்த வெளியில் பாண்டிய நாட்டு விடுதலை வீரர்கள் அணிவகுத்து நின்றிருந்தனர். வெள்ளி வீதியார் இழுத்து வரப்பட்டு, மரத்தில் கட்டப்பட்டார். மற்ற நான்கு வீரர்களும் அருகே கம்பத்தில் கட்டப்பட்டனர்.

அணிவகுத்து நின்ற வீரர்களை நோக்கிச் சிம்மமெனக் கர்ஜித்தான் அமரபுஜங்கன்.

"என் அருமை வீர இளைஞர்களே! நம் உயிரையும் பொருட்படுத்தாது புரட்சித்தீயில் குதித்து நம் விடுதலை வேட்கையைப் புலப்படுத்திக் கொண்டு தேசபக்தி எனும் நெய்யை ஆகுதியாக்கிக் கொண்டிருக்கும் வேளையில் இந்த நரிகள் வேள்வித் தீயில் அர்ப்பணிக்க வைத்திருந்த புனிதப் பொருளைத் தின்ன முயன்றுள்ளன. இதற்குத் தண்டனை என்ன தெரியுமா?" என்று அமரபுஜங்கன் கேட்டுச் சற்று அமைதியானான்.

"நாடு கடத்தல்" என்ற குரல் கேட்டது.

''இல்லை, இல்லை இந்தத் துரோகிகளை நாடு கடத்துவதால் இந்த நரிகளுக்குத் தான் நன்மை. உடனே சோழநாட்டிற்குப் போய் இன்பமாக வாழ்க்கையை நடத்துவர். இங்கே நாம் முடிவெடுக்கும் ஒவ்வொரு திட்டமும் சோழர்களுக்கு எப்படித் தெரிந்துவந்தன. உளவு சொல்லும் துரோகியர் என்று இதுவரை அறியாமல் தவித்தோம். உடன்பிறந்தே கொல்லும் வியாதியைப் போல் எங்கள் அருகே இருந்துச் செய்திகளை அவ்வப்போது சொல்லி வந்த வெள்ளி வீதியாருக்கும் அவரது நண்பர்களுக்கும் கடுந்தண்டனை அளிக்கிறேன்...'' என்று கூறி மீண்டும் நிறுத்தினான்.

நூறு கசை அடிகள் கிடைக்கும் என்று கூடியிருந்தவர்கள் நினைத்தனர். ஆனால் மறுகணம் ஐந்து ஆபத்துதவி வீரர்கள் வெள்ளி வீதியார் மற்றும் நான்கு துரோகிகள் எதிரே அணிவகுத்து நின்றனர்.

''என் அருமை இளஞ்சிங்கங்களே! நீங்கள் இன்று காலையில் இங்கு அணிவகுத்து நிற்கக் காரணம் என்ன?'' என்று அமரபுஜங்கன் கர்ஜித்தான்.

''மதுரையைத் தாக்கப் புறப்படுகிறோம். மூன்று பிரிவுகளாகப் பிரிந்து செல்கிறோம்'' என்ற குரல் எழுந்தது.

''இல்லை; இந்தத் துரோகிகள் மதுரைப் படையெடுப்புச் செய்தியைச் சோழர்களுக்கு அறிவித்து விட்டார்கள். சோழர்படைகள் வந்து கொண்டிருக்கின்றன. மதுரையைக் காப்பாற்ற மதுரைக் கோட்டைக்கருகே சோழர்படைகள் குவிந்துள்ளன. ஆனால் நாம் இப்போது படை நடத்திச் செல்லப்போவதில்லை. இந்தத் துரோகிகள் சொல் கேட்ட சோழர்கள் ஏமாந்தார்கள். பாவம் வெள்ளி வீதியார்! இன்று இவர்களை ஒன்றும் செய்யாதிருந்தால் மீண்டும் செய்தி பறந்து சென்று விடும். அதனால் இவர்களை நாடு கடத்துவதை விட இந்த உலகை விட்டுக் கடத்துவது தான் சிறந்தது'' என்று கூறி முடிக்கு முன்பு 'சர்சர்' என்று அம்புகள் பறந்தன. இமைப்பதற்குள் வெள்ளி வீதியார் அவரது உதவியாளர்களான மற்ற நான்கு வீரர்களின் மார்புகளில் அம்புகள் பாய்ந்தன.

'ஆஹா' என்ற கோஷம் அங்கு எழுந்து அடங்கியது.

'துரோகிக்கு ஏற்ற தண்டனைதான்' என்று வீரர்கள் முழங்கினர்.

''என் அருமை வீரர்களே! மதுரைக்குச் செல்லவில்லையே என்று கவலைப்பட வேண்டாம். உங்கள் வாள்களை உறையில் இடவேண்டாம். மதுரையை நோக்கி விரைந்து வரும் சோழர்படைகளின் தலைகளை அவை வெட்டிச் சாய்க்கட்டும். நாம் எதிர்பார்த்த தருணம் மிக விரைவில் வந்துவிட்டது. தஞ்சையை நோக்கிச் செல்லவேண்டும்; எனினும் நம்மை நோக்கித் தஞ்சைப் படைகள் வருகின்றன. சோழர்படைகளுக்குத் தஞ்சைபுரிக்



காவலர் ராஜராஜன் தலைமை வகித்து நடத்தி வருகிறார். என் தந்தை வீரபாண்டியன் தலையை வெட்டிப் போர்க்களத்தில் பந்தாடிய ஆதித்த கரிகாலனின் அருமைத் தம்பி வருகிறார். நல்ல தருணமிது. தம்பிகளே நழுவ விடுவீர்களா?'' என்று அமரபுஜங்கன் வீர கர்ஜனை புரிந்தான்.

''விடமாட்டோம், விடமாட்டோம், ராஜராஜனின் செங்குருதியில் குளித்து நர்த்தன மாடுவோம். போர்ப்பரணி பாடிப் புறப்பட்டு எழுவோம். எங்கள் வாள்களின் ஓசை கேட்டு சோழர்படைகள் அஞ்சி ஓடட்டும். வீரவேல், வெற்றிவேல், பாண்டிய நாட்டரசர் அமரபுஜங்க தேவர் வாழ்க! வாழ்க!'' என்று வீரமுழக்கம் செய்தார்கள்.

மதுரையை நோக்கிச் செல்லப்போவதில்லை. ஆனைமலைக் காட்டிலேயே தங்கி, வரவிருக்கும் சோழர் படைகளை எதிர்த்துப் போரிடப் போகிறோம் என்ற உற்சாகத்துடன் பாண்டிய புரட்சிப்படைகள் அங்கிருந்து அகன்றன.

தஞ்சைக் கோட்டையினின்று சோழர்படைகள் புறப்பட்டன. கோட்டை வாயில் வழியே படைகள் அணிவகுத்துச் சென்றபோது, வீதியில் இருபுறமும் மக்கள் குழுமியிருந்து வாழ்த்தொலி எழுப்பினர்.

சிறு சிறு குழுவினராகப் படைகள் பிரிக்கப்பட்டனர். அந்தந்தப் பகுதிகளுக்குத் தலைவர்கள் குதிரை மீது கம்பீரமாகச் சென்றனர்.

படைத்தலைவர் கிருஷ்ணன்ராமன் குதிரை மீது அமர்ந்து செல்லும் போது மக்களின் ஆரவாரம் வாழ்த்தொலி அதிகமாகியது. அடுத்து மூவேந்த வேளார் வந்தார்.

மாளிகை ஒன்றின் மாடத்தின் மீது கூடியிருந்தவர்கள் பேசிக் கொண்டனர். திடீரென்று சோழர்படைகள் போருக்குப் புறப்படுவதன் காரணத்தைப் பேசிக் கொண்டனர்.

''சாளுக்கியர்களை எதிர்த்துப் புறப்படுகிறாரா நம் அரசர்?'' என்று ஒருவர் கேட்டார்.

''உனக்குத் தெரியாதா? சேரநாட்டின் மீது படையெடுத்துச் செல்கிறார்கள்'' என்றார் மற்றொருவர்.

''மதுரை நகரத்தில் கலகம் ஏற்பட்டுள்ளதால் அங்கு தான் செல்கிறார்கள் என்று நினைத்தேன்'' என்று கூறினார் ஒருவர்.

''மதுரைக் கலகத்தை அடக்கக் கடல் போன்ற படைகள் ஏன்? மூவேந்த வேளார் கம்பன் மணியனும், கிருஷ்ணன் ராமனும் செல்வானேன்? சேர நாட்டரசன் பாஸ்கர ரவிவர்மன் கொட்டம் ஒடுக்கத்தான் இவ்வளவு வீரர்களும்-'' என்று தனக்குத் தெரிந்ததைக் கூறினார் மற்றொருவர்.

"சேரநாட்டின் மீது படையெடுக்க இவ்வளவு பெரிய தலைவர்களா? வல்லவரையரும் செல்கிறார் என்பதால் வேறு ஏதோ இரகசியம் இருக்கிறது" என்று ஒருவர் கூறினார்.

"வல்லவரையரும், மதுராந்தகனும் செல்கிறார்கள் என்றால், நீங்கள் கூறுவது போல், எதிரிகளின் பலம் அதிகமாயிருக்கிறது என்று தான் அர்த்தம். நமக்கு இதுவரையில் தெரியவில்லையே" என்று தனக்குத் தெரியாது போனதற்காகக் கவலைப்பட்டார் ஒருவர்.

ஆக, அந்த மாடத்திலிருந்து படைகளின் அணிவகுப்பைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் தங்கள் கருத்தைக் கூறி பேசி விவாதித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே வந்த இளைஞனொருவன், "பெரியவர்களே தெரியுமா செய்தி, நமது தூதுவரைச் சேரமன்னர் சிறையிலிட்டு விட்டாராம். அதனால் சீற்றம் மிகக் கொண்ட நமது பேரரசர் சேர அரசரை அடியோடு அழிக்கும் வேகத்தில் புறப்பட்டிருக்கிறார்" என்றான்.

அவன் சொல்வதை ஆவலுடன் அங்கிருந்தவர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"அது தான் பார்த்தேன், மிக முக்கியமானவர்களெல்லாம் புறப்படுகிறார்களே என்று."

"சேர அரசருக்குத் திடீரென நம் நாட்டின் மீது ஏன் கோபம்?" என்றெல்லாம் கேட்டனர்.

இளைஞன் மறுமொழி கூறினான். "பெரியவர்களே! சேரமன்னர் நமக்குப் பெருந்தீங்கு விளைவித்திருக்கிறார். நம் நாட்டு வணிகர்கள் சென்ற கலங்களையெல்லாம் கொள்ளையடித்திருக்கிறார்."

பெரியவர் ஒருவர் சிரித்தார். "இருக்காது தம்பி! கொள்ளைக்காரர்கள் தாம் நமது பண்டக் கப்பல்களைக் கொள்ளையடித்திருக்கிறார்கள்; வீணாக சேரர்கள் மீது பழியைப் போடுகிறாயே! சேரர்களிடம் கப்பல்கள் ஏது?" என்று தன் சந்தேகத்தைத் தெரிவித்தார்.

"இல்லை, ஐயா! நமது மாமன்னரும் அப்படித்தான் நினைத்திருந்தார். நமது உளவுப் படையினரிடமிருந்து அறிந்த பிறகும் மன்னர் நம்பவில்லை. சங்கரத்தேவனைத் தூதுவனாக மதிக்காமல் சேரமன்னர் சிறையிலிட்டு விட்டார். நமது மாமன்னருக்கு ஏற்பட்ட கோபத்திற்கு எல்லையில்லை. அதனால் தான் சோழநாட்டின் பலம் முழுமையையும் சேரருக்குப் புலப்படுத்தப் புறப்பட்டு விட்டார்" என்று விவரித்தான் இளைஞன்.



"நான் கேள்விப்பட்டது வேறு, தம்பி. பாண்டிய அரசின் வாரிசாக அமரபுஜங்கன் இவ்வளவு காலம் காட்டில் ஒளிந்து கொண்டிருந்தான். அவன் சும்மா இருக்கவில்லை. பெரும்படைகளைத் திரட்டி அவர்களுக்குப் பயிற்சி அளித்து வந்தான். அவனுக்குப் பலவிதங்களில் உதவி வந்தவள் நந்தினி. அவளை உங்களுக்குத் தெரிந்திருக்கும். தம்பிக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அவள் துணிவைக் கேளுங்கள். நம் நாட்டிலேயே உளவாளிகளை ஏற்படுத்தி இங்கு நடப்பவற்றை அமரபுஜங்கனுக்குத் தெரிவித்தவாறிருந்திருக்கிறாள். இளையபிராட்டியைக் கொல்லவும் திட்டமிட்டிருக்கிறாள். எப்படி? நல்லவேளையாக ஒரு பெண் இந்தச் சதியைக் கண்டுபிடித்துத் தெரிவித்திருக்காவிடில் முதலுக்கே மோசம் வந்திருக்கும். நம் சக்கரவர்த்தி இவற்றை அறிந்து காட்டில் மறைந்திருக்கும் பாண்டியனை அழித்து விடப்படைகளுடன் புறப்படுகிறார் என்று தான் கேள்விப்பட்டேன்" என்று பெரியவரொருவர் கூறினார்.

இளைஞன் சிரித்தான், "எலியைப் பிடிக்க யானைப் பட்டாளம் எதற்கு? அமரபுஜங்களை நம் இளவரசர் ஒருவரே நசுக்கி விடுவார். சேரர் படைவலிமை மிக்கது. யானைப் படைகளை வைத்துக் கொண்டு பயமுறுத்துகிறார். இப்போது கப்பல்களைக் கட்டி கடற்படையைப் பலப்படுத்தியுள்ளார். மூலபலத்தையே அழித்துவிடத் தான் இவ்வளவு படைகள்" என்றான்.

இளைஞன் பல செய்திகளை அறிந்து கூறுவதைத் திறந்தவாய் மூடாமல் அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் சந்தேகமொன்றை எழுப்பினார்.

"தஞ்சைபுரியிலிருக்கும் படை வீரர்கள், தலைவர்கள், மன்னர், இளவரசர் அனைவரும் போர்க்களத்திற்கு புறப்பட்டு விட்டார்களே. தஞ்சைப்புரிக் கோட்டையைப் பாதுகாக்க வீரர்கள் இல்லையே. ஒருவேளை சேரரின் கடற்படை வந்துத் தாக்கினால் என்ன ஆவது?" என்று அவர் கூறியதும் நியாயமாகப்பட்டது.

"ஆமாம் இவர் கூறுவதும் உண்மை தான்" என்று அனைவரும் ஒருமித்துக் கூறினர்.

அவர்கள் சந்தேகப்பட்டது போன்றே நடந்தது. நாகப்பட்டினத் துறையை நோக்கி சேரர் படைகளின் உதவியுடன் கொள்ளைக்காரர்கள் கப்பல்கள் வந்து கொண்டிருந்தன.

## 35

சங்கரத் தேவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. நெடுநேரம் அவன் இதுபோல் உறங்கியதில்லை. ஒருவித மயக்க உணர்வு அவனை வாட்டியது. இரவு நடுநிசிக்குப் பிறகு மட்டுமே உறங்கும் குணம் கொண்ட அவன், நெடுநேரம் உறங்கக் களைப்பைத் தவிர வேறு ஒரு காரணம் இருக்க வேண்டும். அதை அவன் சிந்தித்தான்.

உணவில் ஏதாவது மயக்கம் தரும் பொருள் கலந்திருக்கலாம். அவ்வாறு மயக்கம் தருவதற்கு என்ன காரணம்! தன்னை அதிக நேரம் மயங்க வைப்பதால் அவர்களுக்கு என்ன ஆதாயம்?

அந்த அறையில் இருள் சூழ்ந்திருந்தது. வெளியே சென்று வானக் கருமையை ரசிக்கலாம்; வானத்தில் முளைத்திருக்கும் அம்புலியின் அளவு கொண்டு அன்றைய நாள் என்ன என்று கண்டுபிடிக்கலாம். ஊரில் சுமதியை விட்டுப் பிரிந்து எவ்வளவு நாள்கள் ஆகியுள்ளன என்று கணக்கிட முயன்றான்.

இனியும் படுக்கையில் படுத்திருக்க அவனால் இயலவில்லை. எழுந்து சென்று கதவைத் திறக்க முயன்றான். கதவு வெளியே தாளிட்டிருந்தது. தட்டினான். தட்டினான். பலங்கொண்ட மட்டும் தட்டினான்.

அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. குடிக்கத் தண்ணீர் தேவைப்பட்டது.

'ஐயா, ஐயா' என்று குரல் கொடுத்தான். சலிப்படைத்தான். கோபங் கோபமாக வந்தது.

சேரநாட்டில் வேற்று நாட்டுத் தூதுவர்களுக்கு அளிக்கும் மரியாதை இது தானா என்று மிகச் சீற்றங்கொண்டான்.

அரசரைச் சந்திக்க வாய்ப்பளிக்காமல் தன்னை ஏன் இவ்வாறு தடுக்கிறார்கள் என்பது தான் அவனுக்குப் புரியவில்லை.

அந்த அறையிலிருந்து வெளியேற வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்று சுவரின் ஒவ்வொரு பகுதியாக ஆராய்ந்தான். கையால் தட்டிப் பார்த்தான். கால்களால் உதைத்துப் பார்த்தான்.

ஓரிடத்தில் சற்று வித்தியாசமான ஒலி எழுந்தது. அங்கு ஓர் வழி இருக்கவேண்டும் என்று உறுதிப்படுத்திக் கொண்டான்.

அந்த இடத்தைப் பலங்கொண்ட மட்டும் காலால் உதைத்தான். முஷ்டியால் குத்தினான். சுண்ணம் உதிர்ந்து விழுந்தது. மரப்பலகையால் ஆன



தடுப்புத் தெரிந்தது. மளமளவென்று காரைப் பூச்சைப் பெயர்த்து எடுக்கவும் அங்கே கதவு இருப்பது புலப்பட்டது.

நீண்ட காலமாக அந்தக் கதவு திறக்கப்படாமலும், பயன்படுத்தப் படாமலுமிருந்திருக்க வேண்டும். கையால் அழுத்தமாகத் தட்டப்பட்டவுடன் கதவு பிளந்து விழுந்தது.

கதவுதான் பல நாட்களாக மூடப்பட்டிருந்ததே தவிர, அங்குள்ள வழி அடிக்கடிப் பயன்படுத்தப்பட்டது போல் தோன்றியது.

இருள் நிறைந்த அறையில் வழி தெரியாது இருப்பதை விட அந்தப் புதுப்பாதையில் செல்வது தான் சரியென்று அவனுக்குத் தோன்றியது.

மெல்ல அந்த வழியே நடந்தான். அது ஒன்றும் சுரங்கப்பாதை அன்று. பெரிய கூடம் ஒன்றிற்குச் செல்லும் வழி. சிறிது நடந்தவுடனேயே சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட கூடம் தென்பட்டது. சாளரங்களை வண்ணத்திரைச் சீலைகள் அலங்கரித்திருந்தன.

நடுக்கூடத்தில் விசித்திரமான விளக்கு ஒன்று தொங்கியது. அந்த விளக்கின் ஒளி அந்தக் கூடத்தின் அழகை மேலும் அதிகரிக்கச் செய்தது.

மெல்லிய காற்று அவன் உடலை உராய்ந்தது. அவனுக்குப் புதுத்தெம்பு எழுந்தது. நடுவே உள்ள மஞ்சத்தில் பலாக்கனியும், செவ்வாழைப் பழமும் ஒரு தட்டில் வைக்கப்பட்டிருந்தன.

அந்தக் கூடத்திலிருந்து வெளியே செல்ல வழி இருக்கிறதா என்று சுற்றும்முற்றும் பார்த்தவாறிருந்த சங்கரத்தேவனை குரல் ஒன்று சற்றுத் திடுக்கிட வைத்தது.

கடுமையான குரல் அன்று, பயமுறுத்தும் குரல் அன்று; இனிய குரல்.

''சங்கரத்தேவரே, வருக, வருக.''

குரல் இனிமைக்காக மட்டும் திகைக்காமல், தன் பெயரை அறிந்து அழைக்கும் அந்தக் குரலுக்குடையவள் ஒரு பெண் என்றறிந்தவுடன் அவன் திகைப்பு மேலும் அதிகமாகியது.

''வாருங்கள் சங்கரத்தேவரே! தங்கள் வருகை நன்மையைப் பயப்பதாகுக'' என்று கரங்களை மார்பருகே கூப்பியவாறு, ஒயிலாக ஓர் மங்கை திரைச்சீலையை விலக்கிக் கொண்டு வந்தாள்.

நல்ல தமிழில், ஒவ்வொரு வார்த்தையாக உச்சரித்து பவழவாயில் வெண் முத்துப் பற்களைக் காட்டி சிறு நகையுடன், பொன்னிற மேனியில் கருங்கூந்தல் புரண்டோட அவள் வந்தாள்.

இடையில் ஓர் பட்டாடை, மேலே ஓர் பட்டுத்துகில் தனங்களை - மறைக்க தந்தமணிகளால் ஆன மாலை ஒன்று கழுத்தில் உறவாடியது.

சங்கரத் தேவன் திகைத்து நின்றான். தேவதையோ என ஒரு கணம் ஐயமுற்றான். மெல்லிய மேலாடைக்குள்ளிருந்து ஒளிவீசும் தங்கக் கலசங்களைப் பார்க்காமலும் அவனால் இருக்க முடியவில்லை. நீண்ட நாசியையும், கருவண்டமர்ந்தன போன்ற விழிகளையும் கொவ்வைக் கனி உதடுகளையும், வளைந்த புருவத்தையும், சங்குக் கழுத்தையும், மூங்கில் தோள்களையும் அவனால் பார்த்து ரசிக்காமல் இருக்க முடியவில்லை. "மிகவும் பசிபோல் இருக்கிறது" என்று கூறி அவள் நகைத்தாள்.

ஓர் இளமங்கையை இவ்வாறு வெறித்து நோக்குவது எவ்வளவு தவறு என்று அவன் தனக்குள்ளே நாணமுற்றான். ஆனால், வெளிக்குப் புலப்படுத்திக் கொள்ளாமல் "ஆமாம் இல்லை" என்று குழறினான்.

தன் வயம் இழுப்பது போல ஓர் உணர்வு தோன்றவே அதனின்று மீள விரும்பியவனாய், "பகல் உணவுக்குப் பிறகு ஏதும் கொள்ளாவில்லை. பசிக்கிறது" என்று கூறி மெல்ல முறுவலித்தான்.

அவளும் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

"இதோ கனிகள் உள்ளன; வேண்டிய அளவு உண்ணலாம்" என்றாள்.

பேச்சைத் திசை திருப்ப விரும்பிய சங்கரத்தேவன் "பசியும் உறக்கமும் நாள்தோறும் நடைபெறுகின்றன. நான் வந்த வேலை முடியவில்லை. அதை முதலில் முடிக்க வேண்டும்" என்றான்.

அழகிய நங்கை தனக்கு ஏதும் தெரியாதவள் போல் "என்ன வேலை?" என்றாள்.

"என் பெயரை அறிந்திருக்கும் பெண்ணே, அதுவும் தெரிந்திருக்கும் என நினைக்கிறேன்" என்றான் மீண்டும் மெல்ல நகைத்தவாறு.

"உங்கள் பெயர் எனக்குத் தெரியும். ஆனால்..." என்று முடிக்கு முன்பாக "இனிய பெண்ணே! உனக்குத் தெரியாது என்பதை என்னால் நம்ப முடியவில்லை. நான் இந்த நாட்டிற்குப் புதியவன் என்பது உனக்குத் தெரியாதா? சேர மன்னரிடம் ஓர் செய்தியைத் தெரிவிக்க சோழ மன்னரால் அனுப்பப்பட்டவன் என்பது தெரியாதா? சேரநாட்டின் தலைநகருக்கு வந்த என்னைச் சிறைச்சாலையில் அடைப்பது போல் இருட்டறையில் அடைத்து விட்டார்கள் மன்னரின் ஆட்கள் என்பதும் உனக்குத் தெரியாதா? சொல்லி வைத்தவள் போல் இங்கு வந்து என்னை வரவேற்ற உனக்கு ஒன்றும் தெரியாது என்றால் உன்னை நம்ப முடியவில்லை" என்றான், மூச்சுவிடாதவாறு



மிக வேகமாகப் பேசிய அவன் முகத்தோற்றத்தையே உற்றுப் பார்த்திருந்த இளங்கிளி, தன் முகத்தோற்றத்தில் அறியாமை ரேகைகளைப் படரவிட்டு "சோழநாட்டு வீரரே, மெய்யாகவே எனக்குத் தெரியாது. இந்த இடத்திற்கு நீங்கள் எப்படி வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

சங்கரத்தேவனுக்குக் கோபம் பொங்கியது. 'இவள் நடிக்கிறாளா? இவள் யார்? தன் வனப்பைக் காட்டி என் மதி மயக்க வந்தவளோ? இன்ப மயமான ஓர் சங்கடத்தில் சிக்கிக் கொண்டு விட்டோமோ? அங்கே அந்தக் காரிருள் அறையிலேயே இருந்திருக்கலாம். மிஞ்சினால் மேலும் சில நாழிகைகள் கழித்துச் சேர மன்னரின் ஆட்கள் அங்கே வந்து நம்மை அழைத்துச் சென்றிருப்பார்கள். இவள் நல்லவள் எனத் தோன்றவில்லை. இவளிடமிருந்து எப்படித் தப்புவது' என்று கவலை கொண்டவனாய்,

"பெண்ணே!" என்று அழைத்துப் பேசத் தொடங்கிய போது அவள் குறுக்கிட்டு, "சங்கரத்தேவரே! இனிய இளம் வீரரே! என்னைப் பெண்ணே என்று அழைக்காமல் நங்கையே, மங்கையே என்று கூப்பிடக் கூடாதா? சோழநாட்டுத் தமிழில் வார்த்தைகள் இல்லையா?" என்று கேட்டாள்.

அவள் விழிகள் சுழன்றன. இமைகள் பட்டாம்பூச்சியைப் போல் படபடவென்று அடித்துக் கொண்டன. உடல் நெளிந்தது.

"நாங்கள் மரியாதை தெரிந்தவர்கள், பொதுவாகப் பெண்ணே என்று அழைக்கும்போது இருக்கும் உரிமை மங்கையே, நங்கையே, பாவையே, பெண்ணே எனும் போது இருப்பதில்லை. என் பெயரைத் தெரிந்து அழைத்த நீங்கள் உங்கள் பெயரை முதலிலேயே தெரிவித்திருக்கலாம்" என்றான்.

"பார்த்தீர்களா, நீங்கள் - உங்கள் என்று அழைக்கிறீர்கள். ஓர் உரிமையுடன் அழைக்கலாமே! என் பெயர் வஞ்சிகுமரி" என்று கூறி அவள் அருகே ஓர் அடி எடுத்து வைத்து நெருங்கினாள்.

"ஆகா! மிக அழகிய பெயர் - வஞ்சிக்குமரி! என் மனைவி சமதியையும் தஞ்சைமகள் என்று அழைக்கவே எனக்கு மிக ஆவல். ஆனால், அவள் அதற்குச் சம்மதித்தாளில்லை."

"ஓ! உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா? அவள் பாக்கியசாலி" என்று கூறிய வஞ்சிக்குமரி மற்றொரு அடி எடுத்து வைத்தாள். சங்கரத் தேவன் கவனிக்கவில்லை.

"பாவம்! இளம் மனைவியை விட்டுவிட்டுப் பல காததூரம் வந்து விட்டீர்கள், கடந்து வந்த களைப்பு ஓலை களவாடப்பட்ட கவலை, சேரமன்னரை இன்னும் சந்திக்க வில்லையே என்ற சோகம் இவற்றுடன்

இளம் மனைவியை விட்டுப் பிரிந்த தாபம் எல்லாம் ஒன்று சேர்ந்துள்ளன. அவற்றைப் போக்கவே இங்கு வந்துள்ளேன்'' என்று கூறிமேலும் ஓர் அடி எடுத்து வைத்தாள். இயற்கையாகவே ஏற்பட்ட உணர்வால் சங்கரத்தேவன் மெல்லப் பின் நகர்ந்தான்.

''தெரியாது என்று பொய் கூறிய வஞ்சிக்குமரியே! உன் பேச்சிலிருந்து, எனக்கு உதவ வந்துள்ளதாகத் தெரிகிறது. சேரமன்னரை எப்போது சந்திக்க முடியும் என்பதைச் சொல்லவில்லையே?'' என்றான்.

வஞ்சிக்குமரி சிரித்தாள். முத்துப்பற்கள் ஒளிவீசச் சிரித்தாள்.

''சங்கரத்தேவரே! உமக்கு உதவவே இங்கு வந்துள்ளேன். நீங்கள் மிகத் திறமைசாலி. ஆனால் நீங்கள் தங்கியுள்ள அறையிலிருந்து தப்பிச் செல்ல முயன்றது பெருங்குற்றம் தேவரே!'' என்றாள்.

சங்கரத்தேவனுக்குக் கோபம் பிறந்தது.

''நான் என்ன குற்றம் செய்தேன் என்று என்னை இருட்டறையில் அடைத்தீர்கள்? நான் சோழநாட்டுத் தூதுவன் ஓர் தூதுவனுக்கு அளிக்க வேண்டிய மரியாதையை நீங்கள் அளிக்கவில்லை.''

''சேர அரசரைச் சந்திக்க வேண்டி வந்த என் கடமையை நான் நிறைவேற்ற வேண்டும். கடமையை நிறைவேற்றுவது குற்றமாகாது. கடமையை நிறைவேற்ற நான் வழி தேடவேண்டும். இடங்கிடைத்தது; வழி கிடைத்தது; அது குற்றமா?'' என்று வார்த்தைகளில் அழுத்தம் பொங்கக் கேட்டான்.

''ஆம் குற்றம் தான். அந்தக் குற்றத்தினின்று தங்களை விடுவிக்கவே நான் வந்துள்ளேன், சங்கரத்தேவரே. காலையில் தங்களை நீராடும் துறையில் பார்த்தேன். அழகன் வீரன் என்று கண்டுகொண்டேன் தங்களுடைய விரிந்த மார்பும் தோற்றமும் என்னைக் கவர்ந்தன.

''தங்களைப் பற்றிக் கேட்டறிந்தேன். ஒருமுறை வந்து பார்த்தேன். தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்தீர்கள். அப்போதும் மிக ரசித்தேன்.''

இப்படி அவள் சொல்லி வரும்போது, சங்கரத்தேவன் 'சீ - ஓர் பெண் செய்யும் செய்கையா?' என்று நினைத்தான்.

''பிறகு இரவு இரண்டாம் ஜாமத்தில் தங்களைச் சந்திக்க வர எண்ணினேன். நீங்களே வந்து விட்டீர்கள். இது என் மாளிகையின் ஒரு பகுதி'' என்றாள்.

சங்கரத்தேவனுக்கு ஒன்றும் புரியவில்லை. நீராடும் போது கண்டு ரசித்ததாகக் கூறுகிறாள், பிறகு நான் உறங்கும் போது வந்திருக்கிறாள், 



மாளிகையின் ஒரு பகுதி என்கிறாள், வஞ்சிக்குமரி அரச குடும்பத்தைச் சேர்ந்தவளோ? செல்வாக்கு மிக்கவளான இவள் உதவி நமக்குத் தேவைப்படும் என்று எண்ணியபோது, வஞ்சிக்குமரி அவன் அருகே மிக நெருங்கினாள்.

## 36

சங்கரத்தேவன் ஓர் அடி பின் வாங்கினான். அவள் ஏன் நெருங்குகிறாள் என்பது அவனுக்குப் புரிந்து விட்டது.

அருகே இருந்த செவ்வாழைக் கனி ஒன்றை எடுப்பது போல் மறுபக்கம் நகர்ந்தான்.

''சங்கரத்தேவரே. இந்த இடம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டாள். பிறகு ''இந்த மாளிகை எனக்கே சொந்தமானது. நான் சேரமன்னரின் சகோதரியின் மகள். நான் மகனாகப் பிறந்திருந்தால் அரசருடைய சொத்து எல்லாம் எனக்கே வந்திருக்கும் ஆனால், நான் அரச குமாரியாகவே வாழ்கிறேன். உங்களுக்கு உதவ என்னால் முடியும். இதோ பாருங்கள் இந்தச் சாளரத்தின் வழியே பாருங்கள்'' என்று கூறி அவன் கரத்தைப் பற்றி சாளரத்தின் அருகே அழைத்துச் சென்றாள்.

சங்கரத்தேவனால் அவள் பிடியைத் தவிர்க்க முடியவில்லை கரங்கள் செவ்வாழைத் தண்டைப் போல் மென்மையாக இருந்தன. ஆனால், அதில் உஷ்ணமும் இருந்தது.

''உங்கள் கரத்தின் வலிமையை உணர்கிறேன்'' என்று கூறி மேலும் அழுத்தினாள்.

சாளரத்தின் வழியே சங்கரத்தேவன் வெளியே நோக்கினான். வஞ்சி மாநகரின் முக்கிய வீதி காட்சியளித்தது. சரவிளக்குகள் ஒளி வீசிக் கொண்டிருந்தன. யானைகள் கம்பீரமாக நடந்தன. அம்பாரியில் அழகிய பெண்கள் அமர்ந்து வந்தார்கள்.

குதிரைகள் அணிவகுத்துச் சென்றன. சேரநாட்டின் சிறப்பான வாத்தியங்கள் முழங்கின. ஆடணங்குகள் அபிநயித்துச் சென்றார்கள். வீரர்கள் அணிவகுத்துச் சென்றனர்.

சாளரத்தின் வழியே கோலாகலமான காட்சியைக் கண்ட சங்கரத் தேவனுக்கு உள்ளத்தில் மகிழ்ச்சி நிறைந்தது.

''இன்று நகரம் விழாக்கோலம் பூண்டிருக்கிறது... சிறப்புத் திருநாளா?'' என்று வஞ்சிக்குமரியை நோக்கிக் கேட்டான். அவள் இப்போது அவனுடைய தோளோடு இணைந்து நின்றாள்.

அவள் கூந்தலினின்று நறுமணம் வீசியதா, மேனியினின்று வீசியதா என்று இனம் காண முடியாத அளவுக்கு சுகந்தம் அவனைச் சிறை பிடித்தது.

''இன்று மன்னரின் பிறந்த நாள்....'' என்றாள் குமரி. இப்போது அவளுடைய மெல்லிய மூச்சு அவன் தோள்களைச் சுகம் பார்த்தது. அவனால் அங்கு நிற்கவும் முடியவில்லை. நகரவும் முடியவில்லை.

''அரசர் அமர்ந்து வரும் யானை இதோ வரப்போகிறது'' என்றாள் வஞ்சிக்குமரி.

சேரமன்னர் யானை மீது ஆரோகணித்து வரும் காட்சியைக் காண ஆவல் கொண்ட அவன் வைத்த விழியை எடுக்காமல் சாளரத்தின் வழியை நோக்கியவாறிருந்தான்.

''அரசரின் பவனியைத் தொடர்ந்தும் வீரர்கள் வருவார்கள். வீரர்கள் அணிவகுப்பு மன்னர் வரும் யானைக்கு முன்பும் பின்பும் உண்டு. ஊர்வலத்தைக் கடைசிவரையில் பார்த்து கொண்டிருப்பது என்றால் நடுச்சாமமாகிவிடும் அதுவரையில் நான் காத்திருக்க வேண்டுமா?'' அவள் விழிகள் சுழன்றன.

''உனக்கு வேறு பணிகள் இருந்தால் நீ பார்க்கச் செல்லலாம்.''

''உங்களை விட்டு விட்டா?''

''நான் ஊர்வலத்தைப் பிறகு பார்த்துக் கொள்கிறேன்.''

''பிறகா? இதுபோன்ற மிகப்பிரம்மாண்டமாக ஊர்வலம் இன்னும் பல திங்கள் கழிந்தே.''

''அப்போது ஏதாவது திருநாளா திருவிழாவா?''

''ஆமாம், சோழ மன்னரை வென்று நடத்தும் வெற்றி விழா!'' அவள் மிக இயல்பாகக் கூறினாள். ஆனால், சங்கரத்தேவன் உடல் மெல்லச் சிலிர்த்தது. வஞ்சி பிடித்திருந்த மெல்லிய பிடியினின்று மெல்லக் கழன்று கொள்ள முயன்றான். அவள் பிடியின் அழுத்தம் அதிகரித்தது. அவனுடைய முதுகின் மீது பெரிய பூச்செண்டு ஒன்று அழுந்தியது போன்ற உணர்வு. அந்த மென்மை சிலிர்க்க வைத்தது.

''சோழமன்னரை வென்று நடத்தும் வெற்றி விழா'' என்று அவன் உதடுகள் ஆத்திரத்துடன் சொல்லிக் கொண்டன. அவளிடமிருந்து விடுபடவேண்டும் என்பதற்காக, ''ஏதோ பணி இருப்பதாகச் சொன்னாயே?'' என்று கேட்டான்.

''உங்கள் அருகே இருப்பதை விடவா? உங்களுடன் பேசுவதை விடவா? உங்களுடன் துயிலுவதை விடவா? உங்கள் சுகத்தைப் பெறுவதை விடவா?'' என்று கூறி வஞ்சி அவனை சேர்த்து அணைத்துக் கொண்டாள்.



மெல்லியலாளின் பிடி இரும்புப் பிடியாக இருந்தது. சங்கரதேவன் பிடியினின்று விடுபட தன் பலத்தின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி உதறினான்.

வேகம் தாங்காமல் தடுமாறினாள். அவள் தாபம் அதிகமாகியது. மோகத்தீ அவள் உடலில் பரவுவதை சங்கரத்தேவன் உணரவில்லை. அவள் அடிபட்ட புலி என மீண்டும் பாய்ந்தாள். அவனைத் தழுவினாள். தன் கனி இதழை இழைத்து அவன் கன்னங்களில் உறவாட முயன்றாள். இருகரங்களையும் அவன் திண் தோள்களைச் சுற்றி வளைத்து காற்றும் நுழையாத இடைவெளியை அமைக்க முயன்றாள்.

வீரன் சங்கரத்தேவன், பகைவர்களின் தாக்குதலை முறியடித்தவனால், மோக அரக்கனை, வெற்றி அடையவா இயலாது? வலையில் சிக்கிய சிங்கம் வலையை அறுக்கத் தன் முழுபலத்தையும் பயன்படுத்துவதுபோல் சீறினான். மென்கொடியாள் வஞ்சியின் அணைப்பிலிருந்து விடுபட அவளைத் தன் பலங்கொண்டமட்டும் உதறித் தள்ளினான்.

வஞ்சிக்குமரி தடுமாறித் தத்தளித்துத் தரையில் தவழ்ந்தாள். மஞ்சத்தின் கூர்முனை அவள் காலைப் பதம் பார்த்தது.

'ஐயோ' என்று அலறினாள்.

அந்தச் சமயம் கதவு தட்டப்பட்டது பலமாக. பிறகு திறக்கப்படும் ஓசையைத் தொடர்ந்து முதிர்ச்சியின் தொடக்கத்தைத் தொட்டுப் பார்க்கும் வயதுடைய ஒருவன் கோபத்தணல் விழிகளில் சிந்த வந்து நின்றான்.

அவன் பயங்கரமாகச் சிரித்தான். தரையில் கனிகள் சிதறிக் கிடந்தன. கன்னி வஞ்சிக்குமரி தரையில் கிடந்தாள். சோகமே உருவாக.

அடர்ந்த மீசையுடன் உயர்ந்த தோற்றமும் வளைந்த நாசியும், தடித்த உதடும் வெற்றிலைக் காவி ஏறிய பற்களும் கொழுத்த மேனியும் உடைய அவன் கர்ஜித்தான்.

''வஞ்சி, எவ்வளவு நாளாக இந்தநாடகம்?'' என்று இடியென முழங்கினான்.

வஞ்சி நடுநடுங்கினாள். சங்கரத் தேவன் எதும் புரியாமல் ஓர் ஓரமாக நின்றான்.

''உன்னை எதிர்பார்த்து மாளிகையில் காத்திருந்தேன். நீ வருவாய் என்று, மன்னரின் பிறந்தநாள் ஊர்வலத்திற்கும் செல்லவில்லை. உன்னுடைய கள்ளமனம் எனக்குத் தெரியும். வேறு ஒருவருடன் சரசமாடவே என்னைக் காக்க வைத்தாய். வஞ்சி, உன் வஞ்சனையை நான் அறிவேன்'' என்று அவன் கூவினான். பேச்சுக்கேற்றவாறு முகம் பயங்கர உணர்ச்சியை பிரதிபலித்தது.

வஞ்சி விம்மினாள். ''ஐயோ, சொற்களால் கொல்லாதீர்கள். உங்களிடம் ஓடோடி வர, நான் அணிகலன்களை அணிந்து கொள்ள வந்தேன். இவன் - இவன்'' என்று கூறுவதற்குள் அந்த உருவம், சங்கரத்தேவனை உற்றுப் பார்த்தது. அவனை எரித்துவிடும் வீச்சு இருந்தது.

''யாரடா நீ'' என்று இடியென முழங்கியது. வஞ்சியே பேசினாள்.

''மாளிகைக் காவல் அதிகாரி மாவலிவாணரே! யாரென்று எனக்குத் தெரியவில்லை. மாளிகைக் காவல் அதிகாரியாக நீங்கள் நிர்வாகம் செய்யும் அழகு இப்போது தெரிந்து விட்டது. சோழநாட்டு உளவாளி இவன்'' என்று தொண்டை அடைக்கச் சொற்கள் தடுமாற வஞ்சி பேச முயன்றாள்.

''சோழநாட்டு உளவாளி என்று நீ எப்படி அறிவாய்?''

''நான் பட்டாடை அணிந்து நிற்கும் போது அதோ அந்தச் சுவர்ப்புறம் ஓசை கேட்டது. அதன் வழியே இவன் வந்தான். கை எடுத்துக் கும்பிட்டான். 'பெண்ணே என்னைக் காப்பாற்று' என்று கெஞ்சினான். தன்னைப் பற்றிச் சுருக்கமாக விவரித்து, தன்னை அவர் அடைத்திருந்த அறையின் இரகசிய வழியின் வழியே வந்ததாகச் சொன்னான்...''

மாளிகைக் காவல் அதிகாரி மாவலிவாணன் இரகசிய வழியைக் காண திரும்பினான். அப்போது வஞ்சிக்குமரி, ஓர் ஓரமாக, என்ன நடக்கிறது என்ன செய்வது என்று புரியாமல் திகைத்து நிற்கும் சங்கரதேவனை நோக்கி மெல்லிய குரலில், ''சங்கரதேவா, என்னை ஒரு கணத்தில் வெறுத்தாய். என்னை அடையத் துடிக்கும் ஆடவர்களை நான் அலட்சியப் படுத்தியிருக்க, உன்னை விரும்பி மனம்விட்டுக் கேட்டணைத்த என்னை ஒதுக்கித் தள்ளினாய். ஒரு வார்த்தை 'உம்' என்று சொல்லு. அதற்கடையாளமாக உன் கரத்தால் உன் உதட்டில் முத்தமிட்டுச் சைகை செய். மாவலிவாணனை இங்கிருந்து ஓட்டிவிடுவோம். கிழவன், என்மேல் உயிரை வைத்திருக்கிறான். என்னை அடைய பல நாட்களாகத் தவமிருக்கிறான். இந்த இளமையை உன்போன்ற அழகிய வீரனுக்களிக்காமல் சாவை எதிர்நோக்கும் கிழவனுக்கா அளிப்பது? அதோ வருகிறான் மாவலிவாணன். அதற்குள் உன் இசைவைத் தெரிவித்துவிடு. ஒரு முத்தம் ஓராயிரம் வெற்றி உனக்கு. சங்கரத்தேவா விரைவில் முடிவெடு. அதோ வருகிறான் ம..வலிவாணன் உம்... உம்...'' வஞ்சி கெஞ்சினாள்.

சங்கரத்தேவன் பார்வை கடுமையாகியது.

மாவலிவாணன் ஆங்காரத்துடன் வந்தான். ''இரகசிய வழியை இந்த ஒற்றன் எப்படிக் கண்டுபிடித்தான். உன்னை அவமானப்படுத்த முயன்றானா? இரண்டு குற்றங்கள். இல்லை, இல்லை மூன்று குற்றங்கள். சோழநாட்டிலிருந்து



ஒற்றனாக வந்தது; இரகசிய வழியின் மூலம் தப்ப முயன்றது. உன்னை பலவந்தப்படுத்தியது. வஞ்சி, உன்னைக் கட்டித் தழுவினானா? முத்தமிட்டானா? தொடாத இடமெல்லாம் தொட்டு அலங்கோலப் படுத்தினானா? சொல்... சொல் இப்போதே இவன் கரத்தை வெட்டி, அந்தக் கரத்தோடு அரசர் முன் நிறுத்துகிறேன்.'' வார்த்தைகள் இடியென அதிர்ந்தன. தன் ஆசைக்கினிய வஞ்சியை வேறு ஆடவர் அடைவதா எனும் எரிச்சல் சேர அவன் உடல் முழுவதும் பழிவாங்கும் உணர்ச்சி பரவியது.

வஞ்சி, கடைசி முறையாக சங்கரத்தேவனை நோக்கினாள். விழிகளால் சம்மதம் கேட்டாள்.

சங்கரத்தேவன் 'சீ' என்ற குரல் கொடுத்தான். ''காமப்பேயே'' என்று கூவினான். ''என்னைப் பலவந்தம் செய்துவிட்டு ஓர் பெண்ணுக்குரிய நாணம் சிறிதுமில்லாமல், முன்பின் அறியாத என்னைப் பலவந்தமாக அணைத்ததற்கு மாறாக என்மீது அபாண்டம் சுமத்துகிறாயா?'' என்று சீறினான்.

மீண்டும் வஞ்சியின் விழிகளில் கெஞ்சுதல் இருந்தது. கடைசி முறையாக வேண்டுகோள் விடுக்கும் பார்வை இருந்தது.

சங்கரத்தேவன், மேலும் மேலும் குற்றஞ்சாட்டிக் கொண்டு போனான்.

வஞ்சி இப்போது ஓவென அழுதாள். ''மாவலிவாணரே!'' என்று பெயர் சொல்லி அழைத்தாள். ''இந்தக் கொடியவன் செய்த மூன்று குற்றங்களுக்கும் அவன் கரத்தை வெட்டினால் போதாது. என்னை அணைத்து முத்தமிட்ட உதடுகளை வெட்டுங்கள்'' என்றாள்.

மாவலிவாணன் ''ஹா! ஹ்ம் அப்படியா?'' என்று வாளைச் சுழற்றியவாறு சங்கரத்தேவன் மீது பாய்ந்தார்.

## 37

**மா**வலிவாணனின் பலம் சேரநாடு முழுவதும் அறிந்த ஒன்று. வாளை எடுத்தார் என்றால் அந்த வாளுக்கு இரையாகாமல் யாரும் தப்பமுடியாது. வாள் வீசும்போது அவர் எந்தக் கடுமையான எதிர்த் தாக்குதலையும் மிக எளிதில் வென்று விடுவார். அவருடைய உறையினின்று வாள் வெளியே வந்ததென்றால் அது இரத்தத்தை ருசி பார்க்காது திரும்பி உறைக்குள்ளே நுழையாது.

சங்கரத் தேவன் மீது வஞ்சி சுமத்திய குற்றச்சாட்டுக்களைக் கேட்டதனால் மிகவும் கோபமடைந்த மாவலிவாணர், தன்னுடைய ஆசைக்கு

இணங்காமல் இவ்வளவு நாட்கள் தள்ளிக்கொண்டே வந்திருக்கும் வஞ்சியைத் திடீரென்று வேற்று நாட்டினின்று வந்த ஒரு வீரன் மிக எளிதில் அடையப் பார்க்கிறான் என்றால் அவருக்கு ஆத்திரம் பொங்காமல் என்ன செய்யும்.

அவர் வாள் 'வீர்வீர்' என்று சுழன்றது. சங்கரத்தேவன் நிராயுதபாணியாக அப்போது இருந்ததால் அவன் உடைவாளை எடுக்கும் கண் இமைக்கும் நேரங்கூட முடியாத அளவிற்கு அவன் எதிரே அந்த வாள் வளைய வந்தது. வண்டைப்போல் முகத்தருகே வட்டமிட்டது. மாவலிவாணர் அவனைத் திடீரென்று தாக்க விரும்பவில்லை. எதிரியின் கையிலே வாள் இல்லை என்று அவருக்குத் தெரியும். ஆயுத மற்றவனை வீழ்த்தும் கோழையல்லர் அவர். வாட் போர் ஒன்றை நடத்தவும் அவர் அங்கு வரவில்லை.

அவன் வாளோடு வாள் மோதி அவனைக் காயப்படுத்தியோ, கொன்று விடவோ அவருக்கு எண்ணம் இல்லை. வாள் முனையிலே அவனை அச்சப்படுத்தி மிக எளிதாக அவனைப் பணிய வைத்து மன்னர் முன்பு கொண்டு நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர் வாளைச் சுழற்றிப் பயமுறுத்தவே விரும்பினார்.

சங்கரத்தேவன் தன் உறையினின்று வாளை எடுக்க முடியாமல் வாள் வீச்சிலிருந்துத் தப்புவதற்காக இங்கும் அங்கும் ஓடுவது அவருக்கு வேடிக்கையாக இருந்தது. அவன் மீது ஓர் ஏளனமும், தோன்றியது. 'சிறுபயலே! பயந்து விட்டாயா? வஞ்சி மகளிடம் தவறாக நடக்க முயன்றாயா?' என்று சொல்லியவாறு கேலிச் சிரிப்புடன் தன்னை விட மிகப்பலம் குன்றியவன் என்ற எண்ணமும் ஏற்படவே அவர் மேலும் வேகமாகத் தன் வாளை இடது வலமாகச் சுழற்றிக் கொண்டு அவன் மீது வாளைப் பாய வைப்பது போல் பாசாங்கு செய்தார்.

கூடத்தின் ஓர் மூலையில் வஞ்சி நின்றுகொண்டு இந்த நிகழ்ச்சியைக் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு இப்பொழுது அச்சம் மிக அதிகமாகியது. சங்கரத்தேவன் மீது அவளுக்கு மோகம் ஏற்பட்டது உண்மை தான். தன் கண் வீச்சிற்கும், முல்லைச்சிரிப்பிற்கும் மயங்கி காலடியில் விழக் காத்துக் கொண்டிருக்கும் சேரநாட்டு இளைஞர் பலரைப் போல் சங்கரத்தேவனையும் மதிப்பிட்டு விட்டாள். ஆனால் இந்தச் சோழநாட்டு இளைஞன் துளியும் தன்னைச் சட்டை செய்யாமல், தன் பேச்சுக்கு மயங்காமல் அலட்சியப்படுத்தியது அவளுக்கு வேதனையாக இருந்தது. அதனால் தான் அவனைப் பயமுறுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் மாவலிவாணர் எதிரே அப்படி ஒரு பொய்யைச் சொல்லி நடித்தாள்.



மாவலிவாணர் அந்த இடத்தை விட்டுப் போனால் போதும் என்று முதலில் அவளுக்குத் தோன்றியது. இப்பொழுது நிலைமை மிக மோசமாகி விட்டது. சங்கரத்தேவனை ரணகாயப்படுத்தி அவனைச் சிறைப்படுத்தாமல் அங்கிருந்து அவர் போகமாட்டார் என்று அவளுக்குத் தோன்றிவிட்டது. சிறுகாயம் ஏதாவது ஏற்பட்டால் மருந்திட்டுக் குணப்படுத்தி விடலாம். அவர் வாளைச் சுழற்றும் வேகத்தையும், விதத்தையும் பார்த்தால் அது பயங்கரமாக சங்கரத்தேவனைத் தாக்கிக் கொன்றுவிடும் முறையில் தான் இருந்தது.

அந்த மாளிகையில் சங்கரத்தேவன் இறப்பதை அவள் விரும்பவில்லை. பிறகு ஏற்படும் விளைவுகளை எண்ணி அவள் நடுங்கினாள். என்ன செய்வதென்று அவளுக்குத் தோன்றவில்லை.

சங்கரத்தேவனும் மாவலிவாணரும் அந்த அறையில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். மாவலிவாணரின் வாள் வீச்சினின்று மிக எளிதாகச் சங்கரத் தேவன் தப்பி வந்தான். ஆனால் ஒரு கோழையை போல் அவர் வாள் வீச்சினின்று தப்பி ஓடுவது அவனுக்குப் பிடிக்கவில்லை. மாவலிவாணர் மீது பாய்ந்து அவர் மீது ஏறி அமர்ந்து கழுத்தை நெறித்து விடவேண்டும் என்ற வெறி அவனுக்கு உண்டாகியது.

எண்ணெய் குறைந்ததால் அந்த அறையின் வெளிச்சம் சிறிது சிறிதாக மங்கி வந்தது, விளக்குக்கு எண்ணெய் இடுபவர் அன்று வரவில்லை போலும். மங்கிய வெளிச்சத்தில் அவ்விருவர் நிழலும் மிகப்பயங்கரமகச் சுவரின் மீது ஓவியம் வரைந்தது. வஞ்சி நடுங்கினாள்.

அந்த அறையினின்று ஓடிவிடலாமா என்றும் அவளுக்குத் தோன்றியது. வாய்விட்டு அலறி மற்ற வீரர்களை அழைக்கலாமா? என்று கூட அவள் எண்ணினாள். அப்படிப்பட்ட நிலை இருந்தால் வீரர்கள் வந்தால் நொடியில் சங்கரத்தேவனை சிறைப்பிடித்து விடுவார்கள். அவன் அந்த அறைக்குள்ளே வந்தது எப்படி என்ற விசாரணை எழும். சேரஅரசர் முன்பு அவனைக் கொண்டு நிறுத்துவார்கள். தன்னால் ஓர் உயிர் வீணே பறிபோவதற்கு அவள் சம்மதிக்கவில்லை. அதனால் நிச்சயமாக அவன் அவளுக்குக் கிடைக்கமாட்டான்.

தனக்கு அவன் கிடைக்கவில்லையே என்ற ஏமாற்றமும் ஆத்திரமும் ஒருபுறம் இருந்தாலும், அதற்காக அவன் உயிரைப் பறிக்க அவள் பிரியப்படவில்லை. அவனைக் காப்பாற்றவேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள். அவனை விட்டு விடுங்கள் என்று மாவலிவாணரிடம் கேட்க முடியுமா? அவள் திடீரென்று அருகே அழகுக்காக வைத்திருந்த வெண்கலக் கிண்ணத்தைக் கீழே தள்ளினாள். அது கீழே உருண்டு 'தணால்' என்ற பெரும்

ஒலியை எழுப்பியது. அந்தக் கணத்தில் மாவலிவாணன் ஏதோ நேர்ந்து விட்டது என்று ஓசை வந்த பக்கம் திடுக்கிட்டுத் திரும்பினார். அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய சங்கரத்தேவன் தன் உறையினின்று 'சரேலென' வாளை உருவிக் கணநேரத்தில் மாவலிவாணன் மீது பாய்ந்து அவர் தோளின் ஒரு புறத்தே வாளைப் பாய்ச்சினான். கண்மூடித் திறக்கும் நேரத்தில் நேர்ந்துவிட்ட இந்தச் சம்பவத்தைப் பார்த்த மாவலிவாணருக்கு அதிர்ச்சியும் ஆத்திரமும் ஏற்பட்டன. ஓர் இளைஞன் கணநேரத்தில் தன் தோளில் ரத்தக்காயம் ஏற்படுத்தி விட்டானே என்ற வெறி. ஹுங்காரமிட்டு அவனை நோக்கிப் பாய்ந்தார். ரத்தத் துளிகள் கீழே ரத்தினக் கம்பளத்திலே சிதறின.

வஞ்சி, 'ஐயோ' என்று அலறி அவர் அருகே ஓடிவந்து காயத்திற்குத் தன் மேலாடையைக் கிழித்துக் கட்டுப்போட முயன்றாள். சங்கரத்தேவன் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஒரே எட்டில் அந்த இடத்தை விட்டுத் தாவி வெளியே ஓடினான். எந்தப்பக்கம் செல்வது என்று அவனுக்குத் தெரிவியல்லை. தான் இருக்குமிடம் ஓர் மாளிகையின் வாயிற்புறம் அருகே தான் இருக்கும் என்பதையும் அவன் அறிந்திருந்தான். சாலையில் மன்னருடைய ஊர்வலம் செல்வதை அவன் சற்று முன்பு பலகணியின் வழியே பார்த்திருந்தான். படிக்கட்டின் வழியே இறங்கி இங்குமங்கும் சுற்றித் தோட்டத்திற்கு வந்தான். அங்கே பெரிய மதில் இருந்தது. அதை எப்படித் தாண்டுவது என்று ஒரு கணம் திகைத்தான். அதைத் தாண்டி வெளியே குதிக்க வேண்டும். அந்தத் தோட்டத்தின் கதவு எந்தப்புறம் இருக்கிறது என்று அவனுக்குத் தெரியவில்லை. இங்குமங்கும் ஓடினான். காலில் மிதியடியில்லை. முட்கள் குத்தின. அந்தப்பொழுது எங்கோ பெரும் கூக்குரலும் யாரோ ஓடிவரும் ஓசையும் அவன் செவிகளிலே விழுந்தன. எப்படியும் அவர்கள் தன்னைப் பிடிப்பதற்கு அந்தப் பக்கம் வருவார்கள்; மேலும் பல வீரர்களும் சேர்ந்து கொள்வார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும். சுற்றும்முற்றும் பார்த்தான். மதிலை ஒட்டி வளர்ந்திருக்கும் ஒரு மரத்தின் மீது ஏறிவிட்டால் மறுபுறம் குதித்து விடமுடியும். அந்த மரத்திலே அழகான கொடி ஒன்று வளர்ந்திருந்தது. அது அவனைத் தாங்குமா தாங்காதா என்று அவன் ஆராயவில்லை.

மரத்தின் மீது அந்தக் கொடி படர்ந்திருந்தது. பலகாலமாக அது வளர்ந்திருக்க வேண்டும். அதன் அடிப்பாகம் பலமாகப் பருத்து இருந்தது. அதனால் அது எளிதில் அறுந்து விடாது என்று கணித்துக் கொண்ட பின் தப்பிச் செல்லும் பரபரப்பில் அதைப் பிடித்துக் கொண்டு மரத்தின் மீது சரசரவென்று மதிலின் மீது தாவி மறுபுறம் குதித்து விட்டான்.



மதில் மிக உயரமாக இருந்தாலும் அவன் சாமர்த்தியமாகக் குதித்ததால் எந்தவிதச் சிறு சிராய்ப்புக் கூட அவனுக்கு ஏற்படவில்லை. மதிலை ஒட்டியே ஓடினான்.

சற்று முன்பு சென்ற சேரமன்னர் பவனிவரும் ஊர்வலம் தொலை தூரத்திலே சென்று கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. மிக விரைந்து ஓடி ஊர்வலத்தில் ஒருவனாக அவன் சேர்ந்து கொண்டான். விரைந்து ஓடிவந்ததையும், ஊர்வலத்தில் சேர்ந்து கொண்டதையும் ஊர்வலத்தில் இருந்த சிலர் கவனித்து அவனை ஏற இறங்கப் பார்த்தனர். ஆனால் அவன் ஒன்றும் தெரியாதவன் போல் ஊர்வலத்தோடு நடந்து கொண்டே 'வஞ்சி மன்னர் வாழ்க' என்று கோஷமிடுபவர்களோடு சேர்ந்து கொண்டு அவனும் வாழ்த்தொலி எழுப்பினான்.

சங்கரத்தேவன் சிறிது சிறிதாக முன்னேறி ஊர்வலக் கூட்டத்தின் நடுவே வந்தான். அப்போது தான் தன்னை அடையாளம் கண்டு கொள்ள மாட்டார்கள் என்று எண்ணினான். நெருக்கியடித்துக் கொண்டு வருவதைப் பார்த்து எரிச்சல் அடைந்த ஒருவர் அவனைத் தடுத்து, "எங்கே போகிறாய்?" என்று கேட்டார்.

"நீங்கள் எங்கே போகிறீர்களோ அங்கு தான் நானும் போகிறேன்" என்று கூறி அந்த இடத்தை விட்டு முன்னேற எத்தனித்தான்.

அவன் தோளைப்பிடித்து நிறுத்திய அவர், "சொல்லி விட்டுப் போ" என்றார்.

"எதற்குத் தங்களிடம் சொல்ல வேண்டும்?"

"இடித்து முட்டி முன்னே செல்கிறாயே அதனால் தான், எங்கே செல்கிறாய் என்று சொல்லிப்போ என்றேன்."

"நானும் சொன்னேன், நீங்கள் எங்கே போகிறீர்களோ அங்கு தான் என்று, காதில் விழவில்லையா?"

"காதில் விழுகிறது. ஆனால் உன் பேச்சுதான் புதுமையாக இருக்கிறது."

"நானும் அதையே கேட்க நினைத்தேன். நீங்கள் பேசுவதும் தமிழ் தானே?" சங்கரத்தேவன் துணிவுடன் அவரைப் பார்த்துக் கேட்டவுடன் அவருக்குக் கோபம் வந்தது. அவன் செவியில் மட்டும் விழும்படி அழுத்தந்திருத்தமாகக் கேட்டார்:

"என்ன சொன்னாய்? நான் பேசுவது தமிழா என்றா கேட்டாய்! என்ன துணிவு உனக்கு? சேரநாட்டில் தான் தமிழ் வாழ்கிறது. நீ இந்த நாட்டவனில்லை போலிருக்கிறது. அதைத் தெரிந்து கொள்ளத் தான் கேட்டேன். உன் உச்சரிப்பில் வேற்று நாட்டு மணம் வீசுகிறது."

"உங்கள் பேச்சுதான் புரியவில்லை. நீங்களா தமிழை வளர்க்கிறீர்கள். கொள்ளையர்களைத் தான் வளர்க்கிறீர்கள்" என்று சங்கரத்தேவன் கூறிச் சட்டென்று உதட்டை மடக்கி, அடடா, இவருடன் ஏன் விவாதத்தில் இறங்கினோம் என்று தன்னைத் தான் நொந்து கொண்டான்.

அவர், சங்கரத்தேவனை 'ஏய்' என்று அழைத்தார். அந்தக் குரலில் மரியாதைக் குறைவு புலப்பட்டதுடன் அதட்டலும் இருந்தது.

"நான் ஐயமுற்றது மெய்யாயிற்று - வா இங்கே" என்று அவனைக் கூட்டத்தினின்று பிரித்து சாலை ஓரத்திற்கு அழைத்துச் சென்றார். அவர் இழுத்துச் செல்கிறார் என்ற உணர்வு தான் சங்கரத்தேவனுக்கு ஏற்பட்டது.

சங்கரத்தேவனுக்குத் தெரிந்து விட்டது, அவர் தன்னைச் சந்தேகப்படுகிறார் என்று. ஒரு நொடியில் அவரிடமிருந்து விடுபட்டு ஓடிவிட முடியும். மாவலிவாணனின் வீரர்கள் நிச்சயம் தன்னைத் துரத்தி வருவார்கள். கூட்டத்தோடு கூட்டமாக இருந்தால் அவர்கள் கண்டுபிடிக்க மாட்டார்கள், இப்படிச் சாலை ஓரமாக ஒதுங்கி நின்றால் பிடிக்க வரும் வீரர்கள் கண்களில் பட்டு விடுவோம்.

"ஐயா, என்னை எதற்கு இங்கே இழுத்து வந்தீர்கள்? உங்களை எனக்கு முன்பின் அறிமுகமில்லையே" என்று சங்கரத்தேவன் அவர் கரத்தை உதறிக் கொண்டு கேட்டான்.

"என்னை நீ தெரிந்து கொள்வது இருக்கட்டும், உன்னை நான் தெரிந்து கொள்ள வேண்டும். நீ யார்? எங்கிருந்து வருகிறாய். உன் பேச்சிலிருந்து நீ இந்த நாட்டைச் சேர்ந்தவன் என்று தெரியவில்லை. தப்பி ஓடிவந்த மான்போல் திகைக்கிறாய். ஹூம்?" என்று அவனை ஏற இறங்கப் பார்த்துக் கேட்டார்.

"உங்கள் முடிவு சரிதான். நான் இந்த நாட்டவனல்லன். சோழநாட்டவன். ஏதோ சாதாரண சோழநாட்டுப் பிரஜை என்று நினைத்து விடவேண்டாம். சோழ மாமன்னர் ராஜராஜசோழ தேவரால் தூதராக அனுப்பப்பட்டவன். உங்கள் நாட்டிற்குள் நுழைந்தவுடனேயே உங்கள் நாட்டின் வரவேற்பு இலட்சணம் தெரிந்தது. அரசருக்கு எனக் கொண்டு வந்திருந்த ஓலையை யாரோ கவர்ந்து விட்டார்கள். என் உடைமைகளைக் களவாடிக் கொண்டார்கள். பிறகு என்னை ஏமாற்றித் தனி அறையில் அடைத்தார்கள். அந்தப்புரத்தைச் சேர்ந்த ஒரு மங்கை என்னிடம் தவறாக நடக்க முயன்றாள். அவளிடமிருந்து விடுபட எண்ணியபோது, மாவலிவாணர் என்னை வம்புச் சண்டைக்கு அழைத்தார். நான் அவரிடமிருந்து தப்பி ஓடிவந்தேன். வரும்போது அவருக்கு ரத்த காயம் ஏற்படுத்தி வந்தேன். என்னைப் பிடிக்க அவரது வீரர்கள் வருவார்கள். அதனால் இந்த ஊர்வலத்தோடு சேர்ந்தேன். பிறகு நடந்தவற்றை நீங்கள் அறிவீர்கள். ஐயா, கருணை கூர்ந்து என்னைச் செல்லவிடுங்கள். நான் சேர அரசரைச் சந்திக்க வேண்டும்" என்று மூச்சுவிடாமல் பேசினான்.



"ஓ! என்று விசித்திர ஒலி எழுப்பிய அவர், "நீ எதிரிநாட்டு ஒற்றன், ஹூம்" என்றார்.

"ஒற்றனுக்கும் தூதுவனுக்கும் வேற்றுமை தெரியாதா உங்களுக்கு?" என்று சங்கரதேவன் கேட்டான்.

"இப்போது சோழநாட்டவர்கள் எங்கள் விரோதிகள்."

"ஏன்?"

"தெரியாது. சோழநாட்டின் மீது படையெடுத்துச் செல்ல நல்ல நாளைக் குறிப்பிட்டு விட்டார் எங்கள் அரசர்."

"அதைப்பற்றி உங்கள் அரசரிடம் நான் தெரிந்து கொள்கிறேன். செல்லவிடுங்கள்."

"சேரமன்னரைச் சந்திக்க முடியாது. நீ இப்போது ஒற்றன் மட்டுமல்லன். குற்றவாளி."

"அதைப்பற்றி நான் உங்கள் அரசரிடம் பேசிக் கொள்கிறேன்" என்று கூறி அவர் பிடியினின்று நழுவ முற்பட்ட சங்கரத் தேவனின் கரத்தை அவர் அழுத்தமாகப் பிடித்துக் கொண்டார்.

"நான் விடமாட்டேன். உன்னை அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும். மாவீரர் மாவலிவாணருக்கு இப்போது என்ன நேரிட்டிருக்கிறதோ?" என்று படபடப்புடன் பேசினார்.

சங்கரத்தேவன் அவர் பிடியை உலுக்கி விடுபட்டு ஓட முற்பட்டபோது அவர் அவனைத் தாவிப் பிடித்தார்.

சங்கரத்தேவன் அவரைத் தாக்கினான். வயதானவர், என்றாலும் திருப்பி அவர் தாக்கினார். வலுவான முஷ்டியின் தாக்குதலுக்குச் சங்கரத்தேவனால் ஈடுகொடுக்க முடியவில்லை.

## 38

**ச**ங்கரத்தேவனும் ஊர்வலத்திலிருந்து அவனை வம்புக்கிழுத்த பெரியவரும் துவந்த யுத்தம் செய்துகொண்டிருந்த போது மாவலிவாணருடைய வீரர்கள் அவனை அடையாளம் கண்டு, தாவிப் பிடித்துக் கொண்டனர். சங்கரத்தேவன் பெரியவரிடமிருந்து விடுபட்டு அங்கிருந்து ஓடியிருக்கலாம்,

ஆனால், தன் பலத்தின் மீது அவனுக்கு அபார நம்பிக்கை. தன்னை விட வயதானவர் பலம் குன்றியிருப்பார் என்ற தவறான கணிப்பு. அவனால் அவருடைய பிடியிலிருந்து விடுபட முடியவில்லை.

"இவன் தான், இவன்தான்" என்று வீரர்களில் ஒருவன் சங்கரத்தேவனை அடையாளம் காட்டினான். "பொல்லாதவன் இவனைப் பிடித்துக் கட்டுங்கள்" என்றான் மற்றவன். நான்கு பேர் சங்கரத் தேவனை மடக்கிக் கயிறு கொண்டு கட்டினார்கள்.

"தவறான அடையாளங்கொண்டு என்னைப் பிணைத்துக் கட்டுகிறீர்கள்" என்று சங்கரத்தேவன் கூவினான். ஒன்று மறியாதவன் போல் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருக்கும் போதே தப்பிச் சென்று விடலாம் என்பது அவன் திட்டம்.

"உன்னை ஏன் நாங்கள் கட்டுகிறோம் என்பதற்கான காரணத்தை நாங்கள் சொல்வதை விட மன்னர் உன்னிடம் தெரிவிப்பதே முறை. இப்பொழுது நீ தப்பிப் போக முயன்றால் உன் உடலைத் தான் அரசரிடம் சேர்ப்பிப்போம்" என்றனர் வீரர்கள்.

ஆமாம் என்பது போல் முதியவர் தலையசைத்தார். "தம்பி சேரநாட்டிலே அவ்வளவு எளிதில் ஒருவரையும் நீ ஏமாற்ற முடியாது" என்றார்.

"நான் யாரை ஏமாற்றினேன்? ஏன் என் மீது வீணாகப் பழி சுமத்துகிறீர்கள்? சேரநாட்டில் உள்ளவர்கள் பொய் சொல்வதில் சிறந்தவர்களோ?" என்று ஆத்திரத்துடன் பேசினான்.

"தம்பி நாவை அடக்கிப்பேசு. நீ தூதுவன் என்று சொல்கிறாய். ஆனால் சோழநாட்டு அரசருடைய ஓலையைக் காணவில்லை. யாரோ கவர்ந்து சென்று விட்டதாகக் கூறுகிறாய், நம்புகிறோம். ஆனால் மாவலிவாணரை ஏன் நீ தாக்கினாய்? அவர் சற்று அயர்ந்த சமயத்தில் நீ தாக்கியிருக்க வேண்டும். இல்லாவிடில் உன் வாளால் தாக்குண்டு இரத்த காயம் படுவதற்கு அவர் ஒன்றும் கோழையல்லர்" என்று பெரியவர் அவனைக் கோபமாகப் பார்த்துக் கேட்டார்.

வீரர்களுள் ஒருவன் சொன்னான்: "ஐயா, இவன் ஏமாற்றுக்காரனாக இருப்பான் போலிருக்கிறது. வஞ்சியின் வீட்டில் எப்படியோ நுழைந்து அவளிடம் தவறாக நடந்து கொள்ள முயன்றிருக்கிறான். உங்களுக்குத் தெரியும், வஞ்சி நெருப்புப் போன்றவள் என்பது. அவளை ஒருவரும் நெருங்க முடியாது என்றும் உங்களுக்குத் தெரியும். மாவலிவாணரே வஞ்சியின் மீது மையல் கொண்டு தன் ஆசை நாயகியாக வைத்துக் கொள்வதற்கு எவ்வளவோ முயன்று கொண்டிருக்கிறார். அது தெரியாமல் இவன் அவள் அழகில் மயங்கி



அவளிடம் தகாத முறையில் நடந்து கொண்டான். அவன் கூக்குரல் கேட்டு தக்க சமயத்தில் மாவலிவாணர் அங்கு வந்து சேர்ந்தார். இருவருக்கும் துவந்த யுத்தம் நடைபெற்றது. அவர் சற்று அயர்ந்த சமயம் பார்த்து இவன் அவரைத் தாக்கி ஓடிவந்து உங்களிடம் சிக்கிக் கொண்டான். இதைத்தான் விதி என்பது. தன்னைச் சோழத் தூதுவன் என்று அழைத்துக் கொள்கிறான். சேரநாட்டவர்கள் பொய் பேசுகிறார்கள் என்று அபாண்டம் கூறுகிறான். இங்கே இவனை நாம் விசாரிக்கக் கூடாது. ஏதும் பேசக்கூடாது. நம் மன்னரிடம் அழைத்துச் சொல்வோம்."

சங்கரத்தேவனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவன் அஞ்சவில்லை. உள்ளுக்குள் ஒருவித துள்ளல். சேர அரசரைப் பார்ப்பதற்கு எவ்வளவோ முயன்றும் முடியாமல் இருந்தது; இப்படியொரு வாய்ப்பு நமக்குக் கிடைக்கிறது என்று மகிழ்ச்சியும் அவனிடம் இருந்தது.

திடீரென்று துணிவு பெற்றவனாக, "உங்கள் மன்னரிடம் தானே என்னை அழைத்துச் செல்லப் போகிறீர்கள்? அழைத்துச் செல்லுங்கள். இரட்டிப்பு மகிழ்ச்சி. அவரைத் தான் நான் பார்க்கவேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தேன். இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்ததற்காக நான் இந்தப் பெரியவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். அவர் என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளாமல் இருந்திருந்தால் நான் உங்களிடம் சிக்கியிருக்க முடியாது. உங்களிடம் அகப்பட்டுக் கொள்ளாவிடில் அரசரை பார்த்திருக்கவும் முடியாது" இதைக் கூறிவிட்டு அவன் நகைத்தான். அவனுடைய பேச்சில் இருந்த துடுக்குத் தனத்தையும், நையாண்டியையும் கேட்ட வீரர்களுக்கு அவனை அந்த இடத்திலேயே இரண்டு துண்டாக வெட்டிப்போட்டு விடலாமா என்று ஆத்திரம் ஏற்பட்டது. அப்படிச் செய்வது தர்ம நியாயமில்லை என்பதை, அவர்கள் புரிந்து கொண்டு, தூதுவன் என்று சொல்கிறான். ஒருவேளை மன்னர் இவனை உண்மைத் தூதுவன் என்று புரிந்த பிறகு, இவனிடம் நாம் தவறாக நடந்து கொண்டிருந்தால் நம்மீது நடவடிக்கை எடுக்கக்கூடும் என்ற எண்ணத்தில் அங்கிருந்து அவனை அழைத்துக் கொண்டு சேரமன்னர் பாஸ்கர ரவிவர்மன் இருக்கும் இடத்திற்குச் சென்றனர். மன்னரைச் சந்திக்கும் முன்பு அவனை ஓரிடத்தில் அடைத்தனர்.

சங்கரத்தேவனை அடைத்து இருந்த இடம் ஒரு பாழடைந்த சிறுவீடு. அதை வீடு என்று சொல்லமுடியாது. கடலிலிருந்து பிரிந்து வந்த கழியின் நடுவே இருந்த சிறுதிட்டில் அந்தக் குடில் இருந்தது. ஒரு காலத்தில் அது அழகாக இருந்திருக்க வேண்டும். இரண்டு உயரமான பலகணிகளும், ஒரு கதவும், கொண்ட ஒருவட்ட வடிவமான இடமாக அது இருந்தது. அதிகமாக

மக்கள் நடமாட்டம் இல்லாததால், தரை எங்கும் தூசு படிந்திருந்தது. சங்கரதேவனை உள்ளே போகச் சொல்லிவிட்டு கதவைத் தாளிட்டு காவலர்கள் வெளியே நின்றிருந்தார்கள். இரவு நடுசாமம் கடந்தது. மிகக் களைப்புடன் அவர்கள் கீழே சாய்ந்துவிட்டனர். அவர்கள் பேசுவது சங்கரதேவனுக்கு நன்றாக கேட்டது. சங்கரதேவனைப் பற்றி அவர்கள் பேசவில்லை. பொதுவான நாட்டு நடப்புகளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு பேச்சு மாவலிவாணரைப் பற்றித் திரும்பியது. அவரைக் காயப்படுத்தியது பற்றி அவர்களுக்குச் சந்தோஷமாக இருந்தது. அவர்களுள் ஒருவன் சொன்னான்: சோழநாட்டில் இருந்து வந்திருக்கும் இந்த இளைஞன் மிக துணிவுடையவனாக இருக்க வேண்டும். இவன் மிக நல்ல காரியத்தைச் செய்தான்'' என்று கூறிச் சிரித்தான்.

''என்ன சொல்கிறாய்?'' என்று விளக்கமாகக் கூறுமாறு மற்றொருவன் கேட்டான். ''என்ன சொல்கிறேனா? மாவலிவாணர் வஞ்சி மகள் எதிரே மிக அவமானப்பட்டுப் போயிருப்பார். தான் வீர தீரபுருஷர் என்று அவள் எதிரே அவர் பெருமையடித்துக் கொண்டிருந்தார். அரச குடும்பத்து உறவுமுறை கொண்டவளான வஞ்சியைத் தான் எப்படியும் அடையவேண்டும் என்று அவர் திட்டமிட்டிருந்தார். அதற்காக அவளிடம் அவர் கெஞ்சியும், கொஞ்சியும் அவளுக்குப் பரிசுப் பொருள் பல கொடுத்தும் அவள் கடைக்கண் தன்மேல் படாதா என்று பலநாட்களாக முயன்று கொண்டிருந்தார். அரசருக்கு மிகவும் அபிமான மிக்க படைத்தலைவர் என்ற பெருமையையும் அவர் அடிக்கடி சொல்வது வழக்கம். அப்படிப் பெருமை கொண்டவரை சங்கரத்தேவன் என்ற பெயருடைய இந்த வாலிபன் மிக எளிதில் ரத்தம் சிந்தும்படியாக செய்து விட்டான் என்றால் அது அவமானமில்லையா!'' என்று விவரித்தான்.

''சரியான காரியத்தைச் செய்தான்'' என்று அவர்களில் ஒருவன் பேசிச் சிரித்தான். ''நாம் ஏன் இவனை இங்கு அடைத்து வைத்திருக்க வேண்டும்? அரசரிடம் ஏன் அழைத்துச் செல்லவேண்டும்? இவன் எதற்காக வந்திருக்கிறான்? என்று இவனிடம் பேச்சுக் கொடுத்துப் பார்ப்போமா?'' என்று கேட்டான் ஒரு வீரன்.

முதல் வீரன் சொன்னான். ''தூக்கம் கண்ணைச் சுழற்றுகிறது. இவனிடம் பேச்சுக் கொடுத்து கதவைத் திறந்து வைத்தால் கணநேரம் அயர்ந்து விட்டால் இவன் ஓடி விட்டால் என்ன செய்வது?'' என்று கேட்டான்.

''ஓ! அவ்வளவு பெரிய மாயாவாதியா இவன்? நாமென்ன ஏமாளிகளா?'' இரண்டாமவன் ஏளனமாக நகைத்தான்.



''உனக்குத் தெரியாது. சோழநாட்டு அரசர் தூதனாக ஒருவனைத் தேர்ந்தெடுத்தார் என்றால் அவன் மிகவும் சாமர்த்தியமுள்ளவனாக இருக்க வேண்டும். பெரும்வீரனாக இருக்க வேண்டும்'' என்றான் முதல் வீரன்.

''சரி, சோழநாட்டிலிருந்து வந்த தூதனை நம் அரசர் ஏன் இன்னும் சந்திக்கவில்லை?'' என்றான் இரண்டாவது வீரன்.

''தூதனைச் சந்திக்க நம் அரசர் விரும்பவில்லை என்று தான் எனக்குத் தோன்றுகிறது.''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''நம் நாட்டு எல்லையை இவன் மிதித்தவுடனேயே இவனைக் கண்காணிக்குமாறு நம் ஒற்றர் படைத் தலைவர் கட்டளையிட்டு விட்டார். பூநாகனிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார். பூநாகன் பல இடையூறுகளைச் செய்தான். சோழ அரசர் அனுப்பிய ஓலையைப் பறித்துக் கொண்டான். குதிரை கிடைக்காமல் செய்தான். உடமைகளைப் பறித்துக் கொண்டான். என்றாலும் பூநாகன் விழிகளில் சோழ தூதன் மண்ணைத் தூவி விட்டான்!''

''மண்ணையா?''

''உனக்கு மர மண்டையப்பா!''

''என்னப்பா சொல்கிறாய்?''

''மண்ணைத் தூவி என்றால், மண் என்று தான் அர்த்தமா? பூநாகன் விரித்த வலைகளிலெல்லாம் சோழ தூதுவன் சிக்கவில்லை.''

''ஓ! கடைசியில் வஞ்சி விரித்த வலையில் சிக்கி விட்டான்!'' என்று கூறிப் பெரிதாகச் சிரித்தான்.

அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த சங்கரத்தேவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. காவல் வீரர்களுடன் பேசிச் சில உண்மையை அறிய வேண்டும் எனும் ஆவல் ஏற்பட்டது.

''அண்ணன்மார்களே!'' என்று குடிலுக்குள்ளே இருந்து சங்கரத்தேவன் அழைத்தான்.

பேச்சுச் சுவாரஸ்யத்தில் அவர்கள் அவன் அழைப்பதைக் கவனிக்கவில்லை.

''அண்ணன்மார்களே!'' - சங்கரத்தேவன் அழைத்தான். குரலைச் சற்று உயர்த்தியே கூப்பிட்டான்.

வெளியே பேசிக் கொண்டிருந்தவர்கள் பேச்சை நிறுத்தினர்.

''உள்ளேயிருந்து அவன் கூப்பிடுகிறான்'' என்றான் ஒருவன். மீண்டும் காது கொடுத்துக் கேட்டனர்.

சங்கரத்தேவன் அழைத்த குரல் தெளிவாகக் கேட்டது.

''ஆமாம், அவன் தான் கூப்பிடுகிறான்.''

''என்னப்பா என்ன வேண்டும்? பசிக்கிறதா?'' என்று இங்கிருந்து குரல் கொடுத்தனர்.

''பசி இருக்கட்டும், உங்களிடம் மிக முக்கியமான செய்தி ஒன்று சொல்ல வேண்டும்'' என்றான் சங்கரத்தேவன்.

வீரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ''நான் சொன்னேனே பார்த்தாயா? தப்பிச் செல்வதற்கு அவன் ஆயத்தம் செய்கிறான்'' என்று மெல்லிய குரலில் கூறினான்.

வெளியேயிருந்து மறுமொழி வராததை அறிந்த சங்கரதேவன், அண்ணன்மார்களே! நீங்கள் என்மீது சந்தேகப்படுகிறீர்கள் என்பது தெரிகிறது. என்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினால் கூட நான் தப்பி ஓடிவிட மாட்டேன். உங்களிடம் முக்கிய தகவல் கூறவேண்டும். அந்தச் செய்தியை அறைக்குள்ளேயிருந்து கூறமுடியுமா? சற்றுக் கதவைத் திறந்து நான் சொல்வதைக் கேளுங்கள்'' என்று குழைந்தான்.

''அண்ணன்மார்களே! ஏன் பேச்சை நிறுத்தி விட்டீர்கள்? சோழ சக்கரவர்த்தி உங்கள் அரசருக்கு மிக முக்கிய செய்தியைத் தெரிவித்திருக்கிறார். அதை நீங்கள் அறியவேண்டாமா? கதவைத் திறந்து என்னைக் கட்டிப்போடுங்கள். பிறகு பேசவிடுங்கள். நான் சொல்லப்போகும் செய்தியை நீங்கள் அறியாமல் போனால் பிறகு வருந்துவீர்கள்'' என்று மிகவும் பணிவான குரலில் கூறினான்.

மீண்டும் வீரர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து வினாக்குறி எழுப்பிக் கொண்டனர். ''நாம் பிறகு வருந்துவோம் என்று சொல்கிறானே? இவனை விட்டு விட்டாலும் பிறகு நாம் வருந்துவோம்'' என்று மெல்லப் பேசி, பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''தம்பி அதுமட்டும் முடியாது. நீ அங்கிருந்தே சொல்லலாம்'' என்று கண்டிப்பாகக் கூறினார்கள்.

''அண்ணன்மார்களே! சேரமன்னரிடம் நான் அந்தரங்கமாகத் தெரிவிக்கவேண்டிய மிக முக்கியமான செய்தி ஒன்று இருக்கிறது. அந்தச் செய்தி ஓலையில் எழுதப்படவில்லை. மன்னரைச் சந்திக்கும் போது நேரே சொல்லுமாறு எங்கள் சோழமன்னர் தெரிவித்திருக்கிறார். அந்தச் செய்தி தெரிந்தால் சேரமன்னருக்குள்ள கோபம், மாறிவிடும். பாண்டியர்களுக்காக



சோழர்கள் மீது அவர் கோபம் கொண்டதை உடனே மாற்றிக் கொண்டு விடுவார்'' என்று கூறி நிறுத்தி மௌனமானான்.

''ஏன் தம்பி நிறுத்தி விட்டாய்... முக்கிய செய்தியைச் சொல்லப் போகிறேன் என்றாயே...'' என்று வீரன் ஒருவன் கேட்டான்.

சங்கரத்தேவன் பெரிதாகச் சிரித்தான். ''ஓ! என்னை ஏமாளி என்று நினைத்தீர்களா? அவ்வளவு எளிதில் சொல்லி விடுவேனா? என்னை நம்பி வெளியே அழைக்க விரும்பாத உங்களிடம் ஏன் சொல்லவேண்டும்?'' என்று கூறினான். பிறகு தொடர்ந்து, ''அண்ணன்மார்களே! சேரநாட்டிற்கும் சோழநாட்டிற்கும் போர் ஏற்படாமல் செய்ய நல்லதொரு யோசனை சோழமன்னரே தெரிவித்துள்ளார். அதை அவரிடம் தெரிவித்தால் சேரமன்னர் மனமகிழ்வார்...'' என்றான்.

''மிகத் தாமதமாகச் சொல்கிறாய் தம்பி! பாண்டிய நாட்டிற்கு உதவ சேரர் படைகள் புறப்பட்டு விட்டன. பாவம், ராஜராஜன் நாட்டை இழந்துத் தவிக்கும் நிகழ்ச்சி கண்முன்னே நிற்கிறது. சேரமன்னரைச் சந்திக்கும்போது சோழ அரசர் சொல்லி அனுப்பியிருக்கும் செய்தியைச் சொல்லிவிடாதே. உன் நாக்கை அறுத்துவிடக்கூடும்'' என்று கூறி வீரர்கள் நகைத்தனர்.

''சேரர் படைகள் புறப்பட்டு விட்டனவா!'' என்று பரபரப்புடன் கேட்டான் சங்கரத்தேவன்.

''ஆமாம், நீ கலந்து கொண்டாயே ஊர்வலம், அந்த ஊர்வலம் சேரமன்னரை வாழ்த்தி வழியனுப்பிய பிரமுகர்கள் நடத்திய ஊர்வலம். நாளை மறுநாள் சேரநாட்டின் எல்லையை எங்கள் படைகள் கடந்து விடும்'' என்றனர் வீரர்கள்.

''சேரமன்னனிடம் என்னை அழைத்துச் செல்வதாகச் சொன்னீர்களே?'' சங்கரத்தேவன் கேட்டான்.

''ஆமாம், போர்க்களத்திற்குப் புறப்படுவதற்குள் உன்னை மன்னர் எதிரே கொண்டு நிறுத்தி விடுவோம். நாளை காலையிலோ, உச்சி வேளையிலோ கூட இருக்கலாம்'' என்றான் ஒரு வீரன்.

## 39

தான் அடைப்பட்டிருந்த அந்தக் குடிலிலிருந்து தப்பிச் செல்லவேண்டும் என்ற எண்ணம் சங்கரத்தேவனுக்கு எள்ளளவும் இல்லை. தன்னை அழைத்துக் கொண்டு சேரஅரசர் முன்னிலையில் நிறுத்தினால்

தன்னால் அவரிடம் சோழ அரசர் அனுப்பிய செய்திகளைச் சொல்ல முடியும் என்ற உறுதி அவனுக்கு இருந்தது. படைகளை ஆயத்தப்படுத்தி சோழநாட்டின் மீது படையெடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சேரமன்னரைத் தடுத்து நிறுத்தி விடமுடியும் என்ற நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது.

அவன் மேலும் எண்ணினான். சோழநாட்டின்மீது படையெடுத்துச் செல்வதைக் கண்டு அவனோ சோழ அரசரோ ஒரு போதும் அஞ்சமாட்டார்கள். அச்சம் காரணமாக படையெடுப்பை அவன் தடுக்க நினைக்கவில்லை. வீணாக ஒரு காரணமுமின்றி இரண்டு நாடுகளும் போர் புரிவதால் வீரர்களும், மக்களும் பலியாவார்களே என்ற கவலை தான். பாண்டியர்களுக்காக சேரர்களும் சோழர்களும் யுத்தம் புரிவானேன் என்ற எண்ணம் தான். அவன் சேரமன்னரை நேரே சந்திக்க வேண்டும் என்ற அவாவுடனிருந்தான்.

சிறிதுநேரம் கழித்து அவனுக்கும் உறக்கம் கண்களைச் சுழற்றியது. வெளியே இருந்த வீரர்களிடம் இருந்தும் எந்தவிதமான பேச்சுக் குரலும் கேட்கவில்லை. அவர்களும் களைத்துப்போய் அப்படியே தரையில் சாய்ந்து விட்டார்கள் என்று எண்ணினான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. அந்த இடத்திலிருந்து தப்பிச் செல்வது ஒன்றும் கடினமாக அவனுக்குத் தோன்றவில்லை. பல கணியின் மீது தாவினால் மறுபக்கம் குதித்து விடலாம். சூழ்ந்திருக்கும் கடல்கழியில் நீந்திச் சென்று ஏதேனும் ஒரு கரையை அடையலாம். ஆனால் அங்கு சென்ற பிறகு என்ன செய்வது? திக்குத் தெரியாத இடத்தில் மீண்டும் மீண்டும் சேரமன்னரின் வீரர்களிடம் சிக்கிக் கொள்வதில் எந்தப்பலனும் இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. உயிருக்கு அபாயமின்றி இதுவரையில் அவன் தப்பி வந்து விட்டான். ஒருவேளை அவன் உயிருக்கே மோசம் வந்துவிட்டால்? ஒரு பெரிய பொறுப்பை ஏற்று வந்திருக்கும் தன்னுடைய புத்திக்குறைவினால் உயிரை மாய்த்துக் கொள்வது எந்தவிதத்திலும் நியாயமில்லை. அதனால், சங்கரதேவன் மிக அமைதியாகச் சிந்தித்தான், சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுதே உறக்கம் வந்து அவனை ஆட்கொண்டது.

விடிந்து எவ்வளவு நேரம் ஆகியிருக்குமோ தெரியாது. திடீரென்று யாரோ பலர் பேசும் குரலும் அவன் எதிரே நான்கைந்து பேர் நின்று உரத்த குரலில் ஏதோ கேட்பதும் அவன் கண்டான். அவர்களுடைய பாதங்களைத் தான் அவனால் காண முடிந்தது. இரவு வெகுநேரம் விழித்திருந்ததால் விழிகள் திறக்க மறுத்தன. களைப்பும், சோர்வும் அடுத்து என்ன நேரப்போகிறதோ என்று உள்ளே எழும் கவலையும், அவனை அடித்துப் போட்டது போல் கீழே படுத்திருக்கச் செய்தன. எழ முயன்றான். முடியவில்லை. ஆனால் அவன் அருகே நின்றிருந்த வீரர்கள் காலால் அலட்சியமாகத் தன் கால் மீது அழுத்தி



எழுப்பியது எரிச்சலை ஊட்டியது. குனிந்து அவனைத் தட்டி எழுப்பியிருக்கலாம். அவன் துள்ளி எழுந்தான். உடைவாளில் கையை வைத்து அவர்கள் மீது பாய எத்தனித்தபோது அருகே இருந்த வீரன், "அமைதியாக இரு தம்பி! என்ன நேர்ந்து விட்டது என்று துள்ளி எழுகிறாய்? இவ்வளவு நேரம் ஒன்றும் தெரியாதவன் போல் கண்களை மூடியிருந்தாய். கனவு கண்டாயா?" என்று ஏளனக் குரலில் பேசியது அவன் ஆத்திரத்தை அதிகப்படுத்தியது.

"சேரநாட்டில் உள்ளவர்களுக்கு மரியாதை என்பது தெரியாதா?" என்று சங்கரத்தேவன் கேட்டான்.

"மரியாதை? உனக்கு ஏதும் மரியாதை நாங்கள் குறைவாகக் கொடுக்கவில்லையே. உன்னை வசதியான இடத்தில் தான் அடைத்து வைத்திருக்கிறோம். இப்பொழுது மிக மரியாதையுடன் உன்னை அரசரிடம் அழைத்துச் செல்லப் போகிறோம். அரசர் மிக மரியாதையாக உனக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்கப் போகிறார். இந்த இடத்தைவிட மிக வசதியான இடம்!" என்று சொல்லி ஒரு நகைச்சுவையைக் கூறியது போன்று பெரிதாகச் சிரித்தான்.

சங்கரத்தேவன் சுற்றும் முற்றும் பார்த்தான். அங்கே பல வீரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். இரவு தன்னை அழைத்து வந்த வீரர்கள் சற்றுத் தொலைவில் நின்றார்கள். இவர்கள் புதியவர்கள். அதிகாரம் மிகக் கொண்டவர்களாகக் காட்சியளித்தார்கள். "உம் பேசிக் கொண்டிருப்பதற்கு நேரமில்லை. வா, வா! மன்னர் நகரத்தை விட்டுப் புறப்பட்டு விடப் போகிறார். இப்பொழுது அவரைச் சந்திக்க முடியாவிட்டால் இனி எப்பொழுது சந்திப்போம் என்பது தெரியாது. அதுவரை நீ கடும் சிறையில் தான் வாடவேண்டி இருக்கும். விசாரிக்காமல் ஒருவரையும் சிறையில் தள்ளுவது எங்கள் நாட்டு வழக்கமன்று. அதிலும் தாங்கள் மேன்மை பொருந்திய சோழமன்னரின் தூதுவர். உங்களைப் பற்றி தீர விசாரித்து அறியாமல் ஏதும் செய்வதற்கு நாங்கள் விரும்பவில்லை" என்று, மரியாதை குரலில் ஒலிக்கக் கூறி அவன் தோளின் மீது கையை வைத்து, "தம்பி, நீ இடையில் தப்பித்துச் செல்ல முயலமாட்டாய் என்று நினைக்கிறேன். அத்தகைய எண்ணம் இருந்தால் அதை மறந்து விடு; தப்ப முயன்றால் தண்ணீரில் தான் குதிக்க வேண்டும். தண்ணீரில் குதித்து நீந்தி எந்தப்பக்கம் போக முடியும் என்பதும் உனக்கு நான் சொல்ல விரும்புகிறேன். உன்னைக் கட்டி இழுத்துச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் இல்லாமல் நடந்து கொள்" என்று சொன்னான்.

சங்கரத்தேவன் ஒன்றும் பேசவில்லை. இப்பொழுது மிகவும் களைப்பாக இருந்தது. முதல்நாள் இரவு ஏதும் உண்ணவில்லை. இப்பொழுதும்

ஏதும் அருந்தவில்லை. காலையில் எழுந்து முகத்தையும் கழுவிக் கொள்ளவில்லை. அவனால் காலையில் குளிக்காமல் இருக்க முடியாது.

அருகே இருந்த வீரர்களைப் பார்த்து, "ஐயன்மீர் தப்பிச் செல்வதற்காக நான் இங்கு வரவில்லை. ஒவ்வொரு முறையும் உங்கள் மன்னரை நான் சந்திக்க வேண்டும் என்று முயலும் பொழுது தவறாக என்னை நடத்தியதால் நான் தப்பிச் செல்வது போன்று நடித்தேன். நான் எதற்காகத் தப்பிச்செல்ல வேண்டும்? உங்கள் அரசரிடம் நான் சில முக்கிய செய்திகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் சோழ சக்கரவர்த்தி ராஜராஜரின் சிறப்பு மிகு தூதுவன். தூதுவனுக்கு உங்கள் நாட்டில் கொடுக்கப்படும் மரியாதையை நான் நன்றாக அறிந்தேன். ராமாயணம் நினைவிருக்கிறதா?" என்று சங்கரத்தேவன் கேட்டுச் சற்று நிறுத்தினான்.

அப்பொழுதுதான் அவர்களுக்கு நினைவு வந்தது. சங்கரத்தேவனைக் காலைக் கடன்களை எல்லாம் முடிக்கவும் விடாமல் அவனை அழைத்துச் செல்ல வந்திருப்பது உணர்ந்தனர். அதனால் ஒருவர் மற்றொருவரை விழிகளாலேயே பார்த்துப் பேசிக் கொண்டு உம் என்று தலையை அசைத்தார்கள். சங்கரத்தேவன் சற்று மறைவான இடத்திற்குச் சென்றான். அப்பொழுது அவர்கள் சொன்னார்கள், "தம்பி இப்பொழுது கூட உனக்குச் சிறந்த வாய்ப்பு இருக்கிறது. இங்கிருந்து ஓடிவிட. அப்படி நீ செய்யமாட்டாய் என்று நினைக்கிறேன்" என்றான்.

சங்கரத்தேவன் ஏளனமாகச் சிரித்தான். "திரும்பத் திரும்ப ஒரே செய்தியை நான் சொல்கிறேன். அதை ஏன் நீங்கள் உங்களுடைய சிந்தையில் பதிய வைத்துக் கொள்ளமாட்டேன் என்கிறீர்கள்? எனக்குப் புரியவில்லை. சேர நாட்டவர்கள் மிக புத்திசாலிகள் என்று கேள்விபட்டிருக்கிறேன். நீங்கள் அதற்கு விதி விலக்காக ஏன் இருக்கிறீர்கள்?" என்று எரிச்சலுடன் கேட்டான்.

சங்கரத்தேவன் சற்று மறைவான இடத்திற்குச் சென்று ஆடைகளைக் களைந்து வைத்து விட்டு நீரிலே குதித்தான். அந்தக் குளிர்ந்த நீர் உடலில் பட்டவுடன் அவனுக்குக் களைப்பு எல்லாம் மறைந்தது. சிறிது நேரம் நீரில் திளைத்து மீண்டும் அவன் கரைக்கு வந்து ஆடைகளை எடுத்து அணிந்து கொண்டு புத்துணர்வு பெற்றவன்போல் அங்கு வந்தான்.

"குளிப்பதற்கு ஏற்பாடு செய்தீர்கள். குடிப்பதற்கு ஏதாவது கொடுத்தால் நன்றி உடையவனாக நான் இருப்பேன். எங்கள் ஊரில் விருந்தாளிகளே கேட்டுப் பெறும்படியாக நாங்கள் வைக்கமாட்டோம்" என்றான்.

இப்பொழுது வீரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அவனைச் சிறிது தூரம் அழைத்துச் சென்று ஓர் இடத்தில் உட்காரவைத்து,



ஒரு கலயம் நிறைய கஞ்சியைக் கொடுத்தார்கள். அவனுக்கு அது தேவர்களுடைய அமுதம் போல் இருந்தது. பசி பெருமளவிற்குத் தணிந்தது. இனி அவன் இரண்டு நாட்களுக்குக் கூட உணவு வேண்டும், ஆகாரம் வேண்டும் என்று கேட்க மாட்டான். அவனை அழைத்துக் கொண்டு படகுத் துறைக்குச் சென்றார்கள். படகில், வீரர்களுடன் ஏறினான்.

படகு சென்று கொண்டிருந்தது. எங்கே செல்கிறோம் என்று அவனுக்குத் தெரியவில்லை. சிறிது தூரம் சென்றவுடனே கரை மறைந்தது. எங்கு நோக்கினும் கடல், கடல், கடல் தான். அப்பொழுது தான் அவன் கேட்டான்: "நாம் எங்கே செல்கிறோம்?" என்று.

அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள்: "சேர மன்னரைச் சந்திக்கச் செல்கிறோம். சேரமன்னர் கோடைத் தீவிலே இருக்கிறாரா இல்லையா என்று தெரியவில்லை. இங்கு எதைப் பார்த்தாலும் தீவு போன்று தான் தோன்றும். ஆனால் அவர் இப்பொழுது தலைநகரை விட்டுச் சற்றுத் தொலைவில் உள்ள கோடை மாளிகையில் அமர்ந்திருக்கிறார். முக்கிய ஆலோசனையைச் செய்து கொண்டிருக்கிறார். அந்த இடத்திற்கு உன்னை நாங்கள் அழைத்துச் செல்கிறோம்" என்று மிக அமைதியாகவும், குரலில் பணிவு தெரியும்படியாகவும், பேசினார்கள்.

நான்குபுறமும் கடல்நீர் சூழ்ந்திருக்கும் இயற்கைக் காட்சியை ரசித்துக் கொண்டு வந்தான் சங்கரத்தேவன். சிறிதுநேரம் சென்றவுடனே தென்னந்தோப்புடன் கூடிய கரைப்பகுதி தென்பட்டது. படகு கரை ஓரமாக வந்து நின்றது. மற்றவர்களைத் தொடர்ந்து சங்கரத்தேவனும் இறங்கினான். அவன் இதயத்தில் புரிய முடியாத ஒரு வேதனை தென்பட்டது. சில சமயங்களில் பிறகு நேரிட இருக்கும் சம்பவங்கள் அவனுக்கு முன்பாகவே தெரிந்து விடும். நல்லது விளையப் போகிறது என்றால் அவன் உடம்பிலே ஒரு குதூகலம் எதிரொலிக்கும். ஏதாவது தீய சம்பவங்கள் என்றால் அவனுடைய மார்பு இதயப்பகுதி மேலே எழும்புவது போன்ற நிலை தோன்றும்.

சேர அரசர் தங்கியிருக்கும் இடம் என்று சொல்லி அவனை அழைத்துச் சென்றனர். அடர்ந்த தென்னந்தோப்பின் நடுவே சிறிய மாளிகை ஒன்று வெள்ளைச் சுண்ணம் அடிக்கப்பட்டுக் காட்சியளித்தது. சங்கரத் தேவனை அழைத்துச் சென்றவர்கள் அந்த மாளிகையின் ஒருபுறமாக அவனை உட்கார வைத்து விட்டு உள்ளே சென்றார்கள். அவன் அருகே இரண்டு வீரர்கள் மட்டும் இருந்தார்கள். சற்றுநேரம் அங்கே அமைதி குடிகொண்டிருந்தது. வீரர்கள் சற்றுத் தொலைவிலே சென்று உட்கார்ந்து கொண்டார்கள். சங்கரத்தேவன் மட்டும் தனியே விடப்பட்டான். அப்பொழுது அருகே இருந்த

ஓர் அறையிலே யாரோ பேசும் குரல் கேட்டது. அது ஒரு பெண்ணினுடைய குரலாக இருந்தது. சங்கரத்தேவன் மிக கவனத்துடன் அதைக் கேட்கலுற்றான்.

சேரநாட்டு இளவரசி மாதங்கியும் அவள் தோழியும் பேசிக் கொண்டிருந்தனர். நெடுநேரமாக அவர்கள் உரையாடிக் கொண்டிருந்திருக்க வேண்டும். சங்கரத்தேவனுக்கு மாதங்கியைப் பற்றியோ, அவள் மனத்தில் குடிகொண்டிருக்கும் வேதனை மற்றும் மகிழ்ச்சியைப் பற்றியோ தெரியாது. சேரநாட்டிற்குப் புறப்படுவதற்கு முன்பு ஓரளவிற்குச் சேர நாட்டுத் தட்பவெப்ப நிலை, எல்லைகள், வரலாறு, இப்போது ஆண்டு கொண்டிருப்பவரின் குணநலன்கள் இவற்றைத் தெரிந்து கொண்டே புறப்பட்டான்.

சேரமன்னர் பாஸ்கர ரவிவர்மனுக்கு இரு பெண்களும் ஒரு மகனும் உண்டென்றும் அறிந்திருந்தான். அவனிடம் ராஜராஜன் தனியே செய்தி ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார். மற்றவர்கள் எதிரே அந்தச் செய்தியை அவர் கூறவில்லை.

ராஜராஜ சோழதேவரின் திருக்குமரன் விரைவில் இளவரசர் பட்டம் அணிய இருக்கும் மதுராந்தகனுக்குச் சேரர் மகளைத் திருமணம் செய்து வைக்கலாம் என்பதே அவர் கருத்து. அதன் மூலம் சேரநாட்டிற்கும் சோழநாட்டிற்கும் உறவுமுறை பலப்படும் எனும் ராஜராஜரின் கருத்து சங்கரத்தேவனுக்கும் ஏற்புடையதாயிருந்தது. சோழ அரசரின் கருத்தைச் சேர மன்னருக்குத் தெரிவிப்பதால் பலன் ஏற்படும் என்று உறுதி அவனுக்கு இருந்தது.

ஆனால் அடுத்த அறையினின்று கேட்ட குரல் சேரநாட்டு இளவரசியுடன் அவள் தோழி மனம் விட்டுப் பேசுகிறாள் என்று அறிந்தான். அவர்கள் பேச்சின் உள்ளடக்கம் அவனைத் திடுக்கிடச் செய்தது.

''இளவரசி, கடந்த இரண்டு நாட்களாக நீங்கள் உற்சாகம் குறைந்து காணப்படுகிறீர்கள். குறும்பும், குதூகலமும் உங்களிடமிருந்து மறைந்து விட்டன'' என்று மாதங்கியின் தோழி கேட்டாள்.

மாதங்கி பேசியது அவன் காதில் சரியாக விழவில்லை. தோழியின் குரல் மட்டும் கணீரென்று இருந்தது.

''பாண்டிய இளவரசரிடம் தாங்கள் உடன் வருவேன் என்று நீங்கள் பிடிவாதம் பிடித்திருக்க வேண்டும்'' என்று தோழி சொன்னாள்.

''நம் அரசரின் வேண்டுகோளைக் கூட பாண்டிய இளவரசர் அமரபுஜங்கன் ஏற்கவில்லை என்பது வியப்பாக இருக்கிறது.''

''நம் சக்கரவர்த்தி படைகளை அனுப்பாமல் இருக்க முடியாது. சோழர்களின் கொற்றம் ஒடுக்கப்பட்டால் தான் அமரபுஜங்கன் மதுரை



அரியணையில் அமரலாம் என்பது தலைவியின் உறுதியான நம்பிக்கை - நீங்கள் பாண்டிய அரசி ஆகப்போகிறீர்கள் என்பதில் எனக்குத் தனிப்பெருமை. ஆனால் தாங்களோ கவலையுடன், சோர்வுடன் இருக்கிறீர்களே'' என்று கேட்டதும், சங்கரத்தேவன் செவிகளில் வீழ்ந்தன. தோழி பேசியதிலிருந்தே மாதங்கியின் பேச்சை அவன் யூகித்து அறிந்தான்.

சேர இளவரசி மாதங்கி என்ன கூறினாள் என்பது தெரியவில்லை. சங்கரத்தேவன் துடியாய்த் துடித்தான், மேலே சொல்லப்பட்ட செய்தி என்ன என்று அறிய.

மாதங்கி கூறியது கேட்கவில்லை. அந்த அறையில் அதற்கு மேல் பேச்சுக் குரல் கேட்கவில்லை.

சேரமன்னரின் அருமைப் புதல்வி மாதங்கிக்குத் திருமணம் நடைபெற்று விட்டது என்பதை அறியும்போது சங்கரத்தேவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. சேரமன்னரைச் சந்திக்கும்போது திருமணம் தொடர்பாக ஏதும் பேசவேண்டாமா? பிறகு வேறு என்ன பேசுவது?

''சோழநாட்டுத் தூதனே! உன் அரசர் கொடுத்த ஓலை எங்கே? என்று சேர மன்னர் கேட்டால் என்ன மறுமொழி கூறுவது? அது மட்டுமா! கொண்டு வந்த பரிசுப்பொருள்கள், தன் உடைகளையெல்லாம் பறிகொடுத்து விட்டானே! அதைச் சொல்வதற்கே வெட்கமாக இருக்காதா? சங்கரத்தேவன் கவலையுடன் சிந்தித்தபோது சேரமன்னரிடம் அழைத்துச் செல்ல வீரர்கள் வந்தனர். ஒரு வீரன் மிகப்பணிவுடன், ''சோழநாட்டினின்று வந்திருக்கும் இளைஞரே, தங்களை சேரமன்னர் அழைக்கிறார்'' என்று கூறினான்.

''சோழநாட்டினின்று வந்திருக்கும் தூதுவர் என்று சொல்லுங்கள்'' என்று சங்கரத்தேவன் கடுமையான குரலில் அவர்களைத் திருத்தினான்.

சேரமன்னர் எதிரே சங்கரத்தேவன் நின்றான். அவனைக் கவனிக்காதவர் போல் சேர அரசர் பாஸ்கர ரவிவர்மன் தன் மகள் மாதங்கியுடன் பேசிக் கொண்டிருந்தது அவனுக்கு எரிச்சலை அளித்தது.

## 40

சேரமன்னர் பாஸ்கர ரவிவர்மன், அந்தக் கூடத்தின் நடுவே ஓர் இருக்கையில் அமர்ந்திருந்தார். அவர் அருகே அவர் மகள் மாதங்கி அமர்ந்திருந்தாள். அவள் முகத்தில் கவலை படர்ந்திருந்தது. தந்தையும் மகளும் ஏதோ விவாதித்துக் கொண்டிருந்ததை இடையே நிறுத்தியிருப்

பதற்கான அறிகுறியை அவர்கள் முகம் வெளிப்படுத்தியது. சங்கரத்தேவன் அந்த இடத்திற்கு அழைத்து வரப்பட்டபோது மாதங்கி பேசிக் கொண்டிருந்தாள். பேச்சு இடையே அறுபட்டது.

"உங்களுடன் நானும் வருகிறேன். அவர் இருக்குமிடத்தில் தான் அவருடன் தான் நான் இருக்கவேண்டும்" என்று அழுத்தமான குரலில் அவள் பேசியதை சங்கரத்தேவன் கேட்டான். அது சமயம் அவனை வாயிற்புறத்திலேயே காவலர்கள் நிறுத்தி வைத்திருந்தனர்.

"நான் போர்க்களத்திற்குப் புறப்படுகிறேன். அங்கே பாசம் - பரிவு ஏதுமில்லை. என் மகள் என்று உன்னை அழைத்துச் செல்ல இயலாது. தந்தை மகள் உணர்வுக்கு, உறவுக்கு அங்கு இடமில்லை. மிக முக்கியமானதொரு யுத்த யாத்திரை மேற்கொண்டுள்ளோம். உன் கணவர் அமரபுஜங்கனுக்கு உதவியாகத்தான் செல்கிறோம். அவன் மனம் இப்போது சிறிது மாறியிருக்கிறது. என் உதவி தேவையில்லை என்றும் தெரிவித்து விட்டான். என்றாலும் இரண்டு காரணங்களிருக்கின்றன. நான் உதவியாக வேண்டும். ஒன்று சோழர்களின் கடுமையான தாக்குதலைத் தாங்க அவனால் முடியாது, என்பது எனக்குத் தெரியும். அவன் விரும்பாவிட்டாலும் மற்றொரு முனையில் சோழர்களைத் தாக்கினால் தான் அவன் பிழைப்பான்" என்று கூறியபோது மாதங்கி குறுக்கிட்டாள்.

"அவர் சுத்த வீரரப்பா... அவர் தானே பிழைத்துக் கொள்வாரப்பா. அவர் ஒருவர் உதவியையும் எதிர்பார்த்துச் சோழ அரசருடன் பகை தேடிக் கொள்ளவில்லை தந்தையே!"

பாஸ்கர ரவிவர்மன் மெல்ல நகைத்தார். "தந்தையை விடக் கணவர் மீது உனக்குப் பாசம் அதிகம் ஏற்பட்டதில் வியப்பில்லை. ஆனால் மாற்றான் வலிமையைத் தவறாக மதிப்பிடக் கூடாது. பாண்டிய இளவரசன் சோழர்களின் வலிமையைத் தவறாக மதிப்பிட்டிருக்கிறான்" என்று கூறும் போது மாதங்கி குறுக்கிட்டு, "பாண்டிய அரசர் என்று கூறுங்கள் தந்தையே" என்றாள்.

பாஸ்கர ரவிவர்மன் இப்போது பெரிதாக நகைத்தான். "கரம் பிடித்த கணவர் மீது உள்ள பாசத்தை, பக்தியை நான் மெச்சுகிறேன். மதுரை அரியணையில் அமர்ந்த பிறகு தான் மாமன்னர், பட்டம், பதவி. அதுவரை சாதாரண குடிமகன் தான், நமக்கு மட்டும், பாண்டிய இளவரசர் பாண்டிய மன்னராக அமரபுஜங்கனை ஆக்கவே இவ்வளவு போராட்டம். சேரநாட்டு வில்லவர்களை ஏராளமாகச் சேர்த்துள்ளேன். அமரபுஜங்கன் திட்டமிடத் தெரியாதவன். நமது யானைப்படைகளை வேண்டாம் என்று கூறிவிட்டான். இப்போது நமது படைகளுடன் வேழங்கள் ஏராளமாக வருகின்றன. நன்றாகப் பழக்கப்பட்ட யானைகள், கூர்மையான தந்தமுடைய யானைகள், மதம் பிடிக்கும் நிலையிலுள்ளவையும் சில உள்ளன. அமரபுஜங்கனுடைய வேலும் வாளும், சோழர்ப்படைகளை ஒன்றும் செய்யா. யானைப்படைகள் எதிரே



சோழர்கள் நிற்கமுடியாது. தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடுவர். அப்போது தான் அமரபுஜங்கனுக்கு நிலைமை விளங்கும்; என்ன புரிந்ததா?" என்று கேட்டு பாஸ்கர ரவிவர்மன் நகைத்தார்.

மாதங்கிக்கு எரிச்சலாக இருந்தது. அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"கோபப்படாதே, மாதங்கி! எல்லாம் உன் நன்மைக்காகத்தான்" என்றார் சேரமன்னர்.

"என் நன்மைக்காக மட்டுமா? உங்களுக்குப் பலகாலமாக சோழநாட்டின் மீது ஒரு கண். அமராவதிக்கரை வரை நம் நாட்டு எல்லையை விரிவுபடுத்தி அங்கு ஓர் நகரை நிறுவி வஞ்சி என்று பெயரிட்டு அங்கிருந்துச் சோழ நாட்டவரைத் தாக்கவேண்டும் என்று பேரவா! அதனால் இப்போது படையெடுத்துப் புறப்படுகிறீர்கள்..." என்று கோபமாகக் கூறினாள்.

அவள் கூறியதைக் கேட்காதவர் போல் சேர அரசர், "ஒரு முனைத் தாக்குதல் மட்டுமன்று. மாதங்கி, கடல் மூலமாகவும், நமது படைகள் புறப்பட்டு விட்டன. நம் கடற்படையில் கொள்ளையர் கூட்டத் தலைவனும் உடன் சேர்ந்துள்ளான். சோழன் ஒழிந்தான்!" என்று கூறி பெரிதாக நகைத்தான்.

சேரமன்னர், தன் மகளுடன் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்கக் கேட்க சங்கரத் தேவன் உடல் துடித்தது. உள்ளம் கொதித்தது. அந்தக் கணமே துள்ளிப் பாய்ந்து சேரமன்னர் மார்பில் தன் வாளைப் பாய்ச்சிவிட வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது.

உள்ளேயிருந்து மேலும் குரல் கேட்டது. மாதங்கி பேசினாள்: "என் நன்மைக்காக என்று கூறுகிறீர்கள், என் வாழ்வு இதனால் ஒளிமயமாகுமா?"

சேரமன்னர் நகைக்கிறார். "மகளே, மாதங்கி! உனக்கு என்ன குறை? உன் வாழ்க்கை இருட்டிலா இருக்கிறது? வீணே கவலைப்படுகிறாய் மாதங்கி" என்று மகளை அருகழைத்துக் கூந்தலை வருடினார்.

மாதங்கியின் விழிகளில் நீர் தளும்பியது. தந்தையின் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள். தன் இதயத்தில் இருப்பதைப் புரிந்து கொள்ள அவரால் முடியவில்லையே என்று அவள் தந்தையைக் கேட்பதுபோல் அந்தப் பார்வை விளங்கியது.

விம்மும் ஒலி மெல்ல எழுந்தது.

"மகளே!" மன்னர் குரலில் பரிவு இருந்தது.

"தந்தையே!" என்று கூறி இதயம் வெடித்துச் சிதறுவது போல் மாதங்கி அழுதாள்.

"இந்த அரச வாழ்வும் சுகபோகங்களும் மட்டும் தானா ஏன் ஒளிமயமான வாழ்க்கை?" என்று கேட்பதற்குள் அவள் விம்மல் ஒலி தான் மேலோங்கி நின்றது.

அவள் அமைதியடையட்டும் என்று சிறிது நேரம் அவள் முதுகை மன்னர் பாசத்துடன் தடவியவாறிருந்தார். விழிநீரைத் துடைத்துக் கொண்டு அவள் தந்தையை நோக்கினாள்.

"புரிகிறது மகளே" என்று கூறினார், சேர மன்னர்.

"என் மகளாக இருந்தாலும் நீயும் ஒரு பெண்தானே. பெண் என்றாவது ஒருநாள் தாய் தந்தையின் பாசப்பிடியிலிருந்து விடுபட்டுச் சென்று தானாக வேண்டும். கூட்டிற்குள் அடைபட்டிருக்கும் பறவை போன்ற நிலை தான். என் அருகேயே உன்னை வைத்திருக்க வேண்டும் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தேன். உன்னை மணப்பவருக்கு இந்த நாட்டைப் பிரித்துத் தந்து உன்னை என் அருகேயே வைத்திருக்கலாம் என்று எண்ணினேன். சேரப்பேரரசர் என்று எல்லோரும் என்னைப் புகழ்ந்தாலும் எனக்குச் சாதாரண குடிமகனின் உள்ளம் தான். அமரபுஜங்கனை உனக்கு மணம் புரிவிக்க நான் எண்ணினேன். அவன் பாண்டிய நாட்டின் உரிமையை அடையப் போராடுபவன் என்பதை மறந்தேன். உன் காதல் உள்ளத்தையும் நான் அறிந்தேனல்லன். ஒரு பெண்ணுக்குத் தேவை என்னவென்பதை இயற்கையாகவே உணர்ந்திருக்கும் சொந்த மகளிடம் அதை நிறைவேற்றா நிலையில் இருந்து விட்டேனே! பாண்டிய இளவரசன் இருக்குமிடத்தில் தான் நீ இருக்க வேண்டும். ஆனால் அமரபுஜங்கன் அதை அறியவில்லை. நான் இப்போது என்ன செய்யவேண்டும். விரைவில் சொல்லு, நான் உடனே நிறைவேற்றிவிட்டுப் புறப்படுகிறேன்" என்று உருக்கமாகப் பேசினார்.

"அதை நான் சொல்லித்தான் ஆகவேண்டுமா? அவரிருக்குமிடம் அடைய வேண்டும்" - நாணத்தால் அவள் முகம் சிவந்தது.

"ஆனைமலைக் காட்டிற்கா?"

"ஆமாம்; அந்த இடத்திற்குத் தானே நீங்கள் படையுடன் செல்கிறீர்கள்?"

"இல்லை. நான் செல்லுமிடம் மிகவும் இரகசியம். நமது படைகள் சோழநாட்டின் எல்லையை நோக்கிச் செல்கின்றன. நீ கூறியதுபோல் அமராவதி ஆற்றங்கரையில் உள்ள நமது பழம் பெருமை வாய்ந்த நகரைப் புதுப்பித்துக் கோட்டை ஒன்று கட்டப்போகிறேன். சோழர்கள் தம் ஒற்றர்கள் மூலம் அறிந்து உடன் படைகளுடன் என்னை எதிர்க்க வருவர். ஆனைமலைக் காட்டினின்று அமரபுஜங்கன் தன் படைகளுடன் புறப்படுவான். இருமுனைப்போர்!" என்று கூறிப் பெரிதாக நகைத்தார்.

"உம் சொல்லுங்கள் அப்பா! நான் செல்வதற்கு வழி வகைகள் கூறுங்கள்" என்று மாதங்கி பரபரத்தாள்.

"போருக்குப் புறப்படும் பணியில் ஈடுபட்டிருக்கும் அமரபுஜங்கனுக்கு உன் வருகை இடையூறாக இருக்கலாம்."



"இருக்காது. அவருக்கு உதவியாகக் கவசம், கேடயம் பூண்டு வில் ஏந்தி நானும் போர்க்களம் புகுவேன்."

மகள் குரலிலிருந்த அழுத்தத்தையும், வீரத்தையும், உறுதியையும் உணர்ந்த சேரமன்னர் இனி தன் மகளைத் தடுத்து நிறுத்த முடியாது என்ற முடிவுக்கு வந்து "ஏற்பாடு செய்கிறேன்" என்று ஒரே சொல்லில் கூறினார்.

தன் உடன் கூட்டத்து அதிகாரிகளை அழைத்து ஆனைமலைக் காட்டிற்கு மாதங்கி புறப்பட்டுச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னார்.

"மகளே! மீண்டும் உன்னை நான் சந்திக்கப் பல நாட்கள், மாதங்கள் கூட ஆகலாம். மதுரை அரியணையில் அமரபுஜங்கன் அமரும் மகுட விழாவிற்கு எங்கிருந்தாலும் நான் வந்து சேர்வேன். உன் இனிய கணவருடன் நீ அமர்ந்திருக்கும் கோலாகலக் காட்சியைக் கண்டு மகிழ வருவேன். சென்று வா மகளே! புகழும், பெருமையும் எல்லா நலன்களுடன் வாழச் சென்றுவா" என்று கூறி தன் பாதத்தில் வணங்கி நிற்கும் மகளை எடுத்து நிறுத்தி வாழ்த்தினார். அவர் கண்கள் கலங்கின. அவர் உள்ளத்தில் சொல்ல முடியா, புரியமுடியாத வேதனை ஏற்பட்டது.

அப்போது வெளியே நின்ற வீரர்கள் உள்ளே நுழைந்து மன்னரைப் பணிந்து சங்கரத் தேவனைக் குறித்துத் தெரிவித்தார்கள். மன்னர் மிகுந்த கோபத்துடன்.

"உம், ஏன் இவ்வளவு நேரம் அவனை வெளியே நிறுத்தி வைத்தீர்கள். இங்கே உடனே கொணர்க" என்று கூறினார்.

சங்கரத்தேவனை ஒருமுறை தலை முதல் பாதம் வரை விழுங்கி விடுவது போல் பார்த்தார் சேரமன்னர்.

அவர் பார்வையின் கூர்மை தாங்காது விழிகளைத் தாழ்த்தினான் சங்கரத்தேவன்.

## 41

சேரமன்னர் பாஸ்கர ரவிவர்மன், சோழநாட்டு சங்கரத்தேவனைப் பார்த்த பார்வையில் 'நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?' என்று வினவும் கேள்விகள் நிறைந்திருந்தன. அவனைப் பார்த்துக் கேட்காமல் அவனை அழைத்து வந்த வீரர்களை வினவுவது போல் பார்வை தோன்றியது.

தன்னை அழைத்து வந்த சேரநாட்டு வீரர்கள் எந்தவிதத்தில் தன்னை அறிமுகப்படுத்தப் போகிறார்கள் என்று சங்கரதேவன் எதிர்பார்த்தான்.

சோழநாட்டினின்று சோழமன்னர் ராஜராஜனால் அனுப்பப்பட்ட தூதன் என்பது சேரமன்னருக்குத் தெரியாதா? தெரிந்திருந்தால் இவ்விதம் தன்னை

நடத்த அனுமதித்திருப்பாரா? என்று சங்கரத்தேவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

''இவர் சோழநாட்டினின்று வருவதாகக் கூறிக் கொள்கிறார். மதிப்புமிகு மாவலிவாணரை வாளால் காயப்படுத்திவிட்டுத் தப்பி ஓடிவந்து விட்டார். ஊர்வலத்தில் மறைந்திருந்த போது முதியவர் ஒருவரை வீண் வம்பிற்கு அழைத்து அவரைத் தாக்கிவிட்டார்'' என்று வீரருள் ஒருவர் சங்கரத்தேவன் மீது குற்றம் சாட்டினார்.

'தன்னை நடத்துவதில் மரியாதை குறைந்திருந்தாலும், அழைப்பதில் மரியாதை இருக்கிறது!' என்று சங்கரத்தேவன் நினைத்து மகிழ்ந்தான்.

மாவலிவாணரை ஏன் தாக்கினோம் என்று விளக்க, சேரமன்னர் தனக்கு அனுமதியளிப்பார் என்று சங்கரத்தேவன் எதிர்பார்த்தான்.

சேரமன்னர் அவன் பக்கமே திரும்பவில்லை. குற்றம் சாட்டிய வீரனை நோக்கி, 'மாவலிவாணரைத் தாக்கிய நிகழ்ச்சி எந்த இடத்தில் நடந்தது. அவர் வீட்டிற்குச் சென்று தாக்கினானா என்று அவர் கேட்டதில் மரியாதைக் குறைவு, அலட்சியம் இருந்தது.

''மரியாதைக்குரிய வஞ்சிதேவி வீட்டிற்குச் சென்றிருக்கிறார் இந்தச் சோழநாட்டவர். அங்கு தான் மாவலிவாணரைத் தாக்கியிருக்கிறார்'' என்று வீரன் கூறினான்.

சேரமன்னர் புருவம் உயர்த்தி, ''ஓ! வஞ்சியின் வீட்டிற்கா! அங்கு ஏன் இவன் சென்றான்?'' என்று கேட்டார்.

''தெரியவில்லை.''

''இவனைக் கேட்கவில்லையா?''

''விசாரிக்கவே இங்கு அழைத்து வந்தோம்!''

''வஞ்சி வீட்டிற்குள் இவன் நுழைந்தது தீய எண்ணத்துடன் தான் இருக்கவேண்டும். ஆனால் மாவலிவாணர் வஞ்சி வீட்டிற்கு எப்படி வந்தார், ஏன் வந்தார்?''

இந்தக் கேள்விக்கு வீரர்களால் மறுமொழி கூற முடியவில்லை. திகைத்து நின்ற போது சேர மன்னரே பேசினார் :

''மாவலிவாணர் ஏன் அங்கு சென்றார் என்பதைப் பற்றி பிறகு கேட்டறிவோம். சோழநாட்டவன் வஞ்சியிடம் தகாத முறையில் நடக்க முற்பட்டபோது மாவலிவாணர் உதவ வந்திருக்கலாம். உம்; அதையும் பிறகு கேட்டறிவோம். வஞ்சி வீட்டிற்குள் முறை தவறி நுழைந்தது; மாவலி வாணரைக் காயப்படுத்தியது; தப்பிஓடியது; ஊர்வலத்தில் முதியவரைத் தாக்கியது - இவ்வளவு குற்றங்களா? சோழநாட்டு ஒற்றன்; உம்; இப்போது நேரமில்லை. பிறகு விசாரிப்போம். நேரமாகிறது. படைகள் அணிவகுத்து



நிற்பார்கள். என் வருகைக்குக் காத்திருப்பார்கள். போர் முடிந்து நான் திரும்பி வரும் வரையில் இந்தச் சோழ ஒற்றனை மலைக்கோட்டைச் சிறையில் அடைத்துவையுங்கள்'' என்று கூறி அங்கிருந்து புறப்பட ஆயத்தமானார்.

சங்கரத்தேவன் ஒருகணம் திகைத்தான். தன்னை ஒற்றன் என்று நினைத்துத் தண்டனை வழங்கி விட்டாரே. தண்டனை என்று சொல்லமுடியாது. தண்டனை என்றால் காலம் குறிப்பிடப்படும். இது என்ன நீதி? பிறகு முறையாக விசாரிப்போம்! அவனுக்கு ஆத்திரம் பொங்கியது.

''சேரமன்னரே! என்னிடம் ஒரு வார்த்தை கேட்காமல் எங்கோ மலைக் கோட்டையில் அடைத்து வைக்கக் கட்டளையிட்டு விட்டீர்களே; என்ன நியாயம்! மதுரை அரசன் வழங்கிய அநீதியால் தன் கணவனை இழந்த கண்ணகியைத் தெய்வமாகப் போற்றி வணங்கிய சேர மாமன்னர்கள் பரம்பரையில் வந்த அரசரான தாங்கள் என்னை ஒற்றர் என்றழைக்கலாமா? சேரநாட்டிலே முறைகேடுகள் முளைத்து இருக்கின்றன. சோழ அரசர் தங்களுக்கு அளித்த செய்தி அடங்கிய ஓலை என்னிடமிருந்து களவாடப்பட்டது. நான் தங்களுக்குப் பரிசாக அளிக்கக் கொண்டு வந்த பொருள்கள் அபகரிக்கப்பட்டன. தங்களிடம் அழைத்துச் செல்வதாகக் கூறி ஓர் இருளறையில் என்னை அடைத்தனர். அங்கிருந்து நான் வெளியேற முயன்றேன். வஞ்சி எனும் வஞ்சகி என் மீது வீண்பழி சுமத்தினாள். நான் அவளது மாயவலையில் சிக்க மறுத்ததன் விளைவாக, மாவலிவாணர் சேரநாட்டு மிக முக்கியமானவர் என்று கூறுகிறார்கள், ஒழுக்கமற்ற அவர் என்னைத் தவறாகப்புரிந்து கொண்டு வாளைச் சுழற்றி என் மீது பாய்ந்தார். என்னை நான் காத்துக் கொள்ள முயன்றேன். மாவலிவாணர் இட்ட ஓலத்தால் வீரர்கள் விரைந்து வந்தனர். தூய்மையான வீரனுக்கு அங்கு இடமில்லை. உயிர் காத்துக் கொள்ள நான் தப்பி ஓடித்தானே ஆகவேண்டும். விரைந்து ஓடி ஊர்வலத்தில் கலந்து கொண்டேன். அங்கு என்னைப் புதியவன் என்று கண்டு கொண்ட முதியவர் என்னைத் தாக்கினார். பின் தொடர்ந்து ஓடிவந்த வீரர்கள் என்னைப் பிடித்துக் கொண்டனர். இரவு என்னைத் தனி அறையில் அடைத்திருந்தனர். இப்போது என்னைத் தங்கள் முன் கொண்டு நிறுத்தியுள்ளனர். நான் சோழநாட்டினின்று வந்த தூதன். என்னைத் தீர விசாரிக்காமல் ஒற்றன் என்று முடிவு செய்து விட்டீர்களே...'' சங்கரத்தேவன் பேசிக் கொண்டே இருந்தான்.

சேரமன்னர் அவன் பேச்சைக் கேட்டாரா என்று தெரியவில்லை.

''ஏன் நிற்கிறீர்கள். இவனை அழைத்துச் செல்லுங்கள். காவல் பலமாக இருக்கட்டும்'' என்று கூறியவாறு அங்கிருந்து புறப்பட்டார். செல்வதற்கு முன்பு தன் மகளை நோக்கி ''மாதங்கி உன் முடிவு என்ன?'' என்று கேட்டார்.

மாதங்கி மறுமொழி கூறாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"உன் விருப்பப்படி செய்" என்று கூறிவிட்டு, சங்கர தேவனைத் திரும்பியும் பாராமல் அங்கிருந்துப் புறப்பட்டார்.

சங்கரத்தேவனை வீரர்கள் நெருங்கினார்கள். அவன் கரத்தைப் பிடிக்க முன் வந்தார்கள்.

"நியாயம் அறியாத மன்னரிடம் பணிபுரியம் வீரர்களே! தள்ளி நில்லுங்கள்" என்று சங்கரத்தேவன் கர்ஜித்தான்.

அவன் முகத்தில் காணப்பட்ட சீற்றமும், அவன் குரலிலிருந்த இடி முழக்கமும் அவர்களை அஞ்சச் செய்தன. நெருங்கினால் என்ன நேருமோ என்ற கவலையுடன் அவர்கள் சற்றுத் தயங்கினர்.

"தங்களுக்குச் சிறைதண்டனை அளித்திருக்கிறார் அரசர். தங்கள் காதில் விழவில்லையா" என்று வீரர்களுள் ஒருவன் கூறினான்.

"என் காதில் விழுந்தது. ஆனால் உங்கள் அரசர் தான் செவிடர் என்று நினைக்கிறேன். உங்கள் அரசர் செவிடர், குருடர், மதியற்றவர் என்று எவ்வளவு வேண்டுமானாலும் சொல்வேன்" என்று கத்தினான் சங்கரத்தேவன்.

காவல் வீரர்கள் நடுநடுங்கினார்கள். அந்தக் கணத்தில் சங்கரத்தேவன் தாக்கினால் அவர்கள் உயிர் பிழைக்க முடியாது. அவனை விட்டு விட்டு ஓடவும் இயலாது.

பயமிருந்தாலும் மேலுக்குத் தைரியத்துடன், "சோழநாட்டினின்ற வந்த ஒற்றனே! மரியாதையாகப் பேசுங்கள். அரசரை அவமதித்தால் மரண தண்டனை கூட விதிக்கப்படலாம்" என்று துணிவுள்ள வீரன் கூறினான்.

"உங்கள் அரசர் தான் போர்க்களத்திற்குப் புறப்பட்டு விட்டாரே? யார் தண்டனை விதிப்பார்கள்?" என்று சங்கரத்தேவன் எரிச்சலுடன் கேட்டான்.

"போர்க்களத்தில் வென்று வாகை சூடி வந்தபிறகு மன்னர் உமக்கு ஆயுள் தண்டனை வழங்குவார்" என்றான் வீரனொருவன்.

"ஓ! இப்போது அளித்திருப்பதும் ஆயுள் தண்டனை தான். சேர வீரர்களே! உங்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். உங்கள் அரசர் போர்க்களத்திலிருந்து திரும்பி வரப்போவதில்லை. ஆனால் என்னை எங்கே சிறை வைக்கப் போகிறீர்கள் என்று எங்கள் சோழ அரசருக்குத் தெரியாதாகையால் நான் என் வாழ்நாள் முழுமையும் கண் காணா யாருமறியாத சிறையில் கழிக்க நேரிடலாம்" என்றான்.

"சேரமன்னர் திரும்பி வரமாட்டார் என்று ஆருடம் சொல்கிறீர்களே! இங்கே என்ன பேசிக் கொள்கிறார்கள் தெரியுமா? மும்முனைத் தாக்குதலால் சோழமன்னர் தோற்றோடப்போகிறார் என்று. ஆரம்பத்திலிருந்தே உன் நடவடிக்கை சரியில்லை. ஹூம் விதி யாரை விட்டது?" என்று கூறியவர்கள்,



சற்றுக் கடுமையாக, "இதோ பாருங்கள் மரியாதையாக எங்களுடன் வருகிறீர்களா? அல்லது இன்னும் வீரர்களை அழைத்துச் சங்கிலி கொண்டு பிணைத்து உங்களை அழைத்துச் செல்லட்டுமா?" என்றனர்.

சங்கரத்தேவன் பெரிதாக நகைத்தான். "சேர வீரர்களே! நான் உண்மையான வீரன். நான் தப்பி ஓடவிரும்பவில்லை. எங்கே ஓடுவது? உங்கள் நாட்டில் எங்கு நோக்கினாலும் தண்ணீர் அல்லது மலை. இதோ நான் ஆயத்தமாக இருக்கிறேன். அழைத்துச் செல்லுங்கள்" என்று இருகரங்களையும் நீட்டினான்.

சங்கரத்தேவனை ஏழெட்டு வீரர்கள் சூழ்ந்தனர். படகொன்றில் ஏற்றினர். படகில் உணவு, தண்ணீர் யாவும் இருந்தன. படகு சென்றது. ஓரிரவு பயணமாக, பிறகு பெரும் அலைகள் வீசும் கடற்கரையருகே படகு நின்றது.

சங்கரத்தேவனைப் படகிலிருந்து இறக்கி பாய்மரத்துடன் கூடிய சிறிய கப்பல் ஒன்றில் ஏற்றினார்கள்.

அந்தக் கப்பலில் உள்ளவர்களிடம் சங்கரத்தேவனை ஒப்படைத்து, கப்பல் தலைவனிடம் சேர வீரர்கள் இரகசியமாக ஏதோ கூறினார்கள்.

கப்பல் புறப்பட்டது. படகிலிருந்த சேர வீரர்கள் கையை அசைத்து "போய்வாருங்கள் சோழநாட்டு ஒற்றரே!" என்று நகைத்தவாறு கூறினர்.

## 42

அமரபுஜங்கன் ஆழ்ந்து உறங்கத் தொடங்கிய சிறிது நேரத்திலேயே அவன் படுத்திருந்த அறைக்கதவு தட்டப்பட்டது. அந்த ஒலி விட்டு விட்டு எழுந்தது.

அந்த ஓசை வேறு எங்கோ எழுந்தது என்று முதலில் நினைத்த அமரபுஜங்கன் செவியைக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்டான். அவனுடைய அறைக்கதவு தான். கதவைத் தாளிட்டுக் கொண்டு அவன் உறங்கச் சென்றால், ஒருவரும் அவனை எழுப்ப முயலமாட்டார்கள். இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் என்று உறங்காமல் விழித்திருக்கும் அவனுக்கு உறக்கம் வந்தால் அவன் கும்பகர்ணன் தான். யாராவது உறக்கத்தைக் கெடுத்தால் அவனுக்கு எழும் சீற்றத்தை யாராலும் தடுக்க முடியாது.

அமரபுஜங்கன் சிறிதுநேரம் மௌனமாயிருந்தான். பிறகும், கதவைத் தட்டும் ஒலி தொடர்ந்ததும் "யாராது?" என்று சினத்துடன் கதவைத் திறந்தான்.

கார்மேகன் பதட்டத்துடன் நின்று கொண்டிருந்தார். மங்கிய ஒளியில் அவர் முகத்திலிருந்த பரபரப்பை அவன் அறிந்து கொள்ள இயலவில்லை. அவர் மிக நம்பிக்கை வாய்ந்த தியாகம் புரியவல்ல ஆபத்துதவிப் படையைச் சேர்ந்தவர்.

''என்ன?'' என்று அமரபுஜங்கன் கேட்பதற்கு முன்பே கார்மேகன், ''அரசே நம்முள் யாரோ ஒரு துரோகி இருக்கிறான். அவனைக் கண்டு பிடித்தாக வேண்டும்'' என்று பரபரப்புடன் கூறியபோது அமரபுஜங்கன் அவரைத் தடுத்து ''துரோகியைக் கண்டுபிடிக்க நல்லநேரம் பார்த்தீர்களா? நாளைக்குப் பல முக்கியப் பணிகள் இருக்கின்றன. அவற்றை நான் நிறைவேற்ற வேண்டுமென்றால், இரவு சிறிதாவது இமைக்கு ஓய்வு கொடுக்க வேண்டாமா? எழுப்பி இந்தச் செய்தியைச் சொல்லுமாறு யார் உங்களிடம் கூறியது?'' என்று கடுமையான குரலில் கேட்டான்.

''தலைவி'' என்ற மறுமொழி வந்தது. அமரபுஜங்கன் ஒரு கணம் திடுக்கிட்டான்.

இந்த நேரத்தில் தன்னை எழுப்பி இந்தச் செய்தியைத் தெரிவிக்குமாறு தலைவி சொல்லியிருந்தால் அதில் மிக அவசரம் இருக்க வேண்டும் என்று முடிவு செய்த அமரபுஜங்கன் துள்ளி எழுந்து, ''தலைவியா?'' என்று கேட்ட ான். உடனே உடைகளை அணிந்து கொண்டு வாள் கச்சையை இடுப்பைச் சுற்றி அணியும் அந்த நேரத்தையும் வீணாக்காமல் வாளை எடுத்துக் கொண்டு துள்ளி வெளியே சென்றான். அவனைப் பின்தொடர்ந்த கார்மேகன், ''அரசே! இப்போது தலைவி இருக்குமிடத்திற்கு நாம் செல்ல வேண்டாம். அவர்கள் சொல்லியனுப்பியதைக் கேட்ட பிறகு அவர்களைச் சந்திக்கலாம்'' என்றார்.

''தலைவி, கூறியது என்ன? சொல்லுங்கள் சீக்கிரம்'' என்று அமரபுஜங்கன் விரைவாக நடந்தவண்ணம் கேட்டான்.

''அரசே! கானகத்தின் எல்லையில் இருக்கும் நமது வீரர்கள் இருவர் மீது எங்கிருந்தோ அம்பு ஒன்று அவர்கள் மார்பு மீது பாய்ந்தது. கண் இமைக்கும் நேரத்தில் பாய்ந்த அம்பைத் தொடர்ந்து நம் காவல் வீரர்கள் எய்தவர்களைத் திருப்பித் தாக்க முடியவில்லை.''

விரைந்து நடந்து கொண்டிருந்த அமரபுஜங்கன் சற்று நின்றான்.

''பரண் அமைத்துக் காவல் காத்துவரும் நம் வீரர்கள் மீதா?'' என்று கவலையுடன் கேட்டான.

''ஆமாம் அரசே! பரண் கட்டியிருப்பது வெளியிலிருந்து பார்த்தால் புலப்படாது. சிறு குருவி பறந்தால் கூட பரணிலிருப்பவர்களுக்குத் தெரிந்து விடும்.''

''ஆமாம், அம்பெய்தவர்கள் அங்கிருந்துதான் எய்திருக்கவேண்டும். காவல் வீரர்கள் மார்பில் கவசம் அணிந்திருப்பார்களே?''

''துரதிர்ஷ்டம், அவர்கள் இன்று கவசம் ஏதும் அணியவில்லை. இதைத் தெரிந்து கொண்டே சதிகாரர்கள் தாக்கியிருக்கிறார்கள்'' என்று கார்மேகன் கவலையுடன் சொன்னார்.

அமரபுஜங்கன் மௌனமாக நடந்தான். தலைவியின் குடிலுக்குச் சென்றான். கதவு தாளிடப்படவில்லை. மங்கிய வெளிச்சத்தில் நந்தினி



அமர்ந்திருப்பது தெரிந்தது. மரப்பேழை ஒன்றிலிருந்த ஓலைச் சுருள்களை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தாள். அமரபுஜங்கனை அந்த நேரத்தில் அவள் எதிர்பார்க்கவில்லை : அமரபுஜங்கனைக் கண்டால் புன்னகையுடன் வரவேற்கும் நந்தினி சீறினாள்.

''இங்கே வரவேண்டாம் என்று கார்மேகனிடம் சொல்லியிருந்தேனே. அவர் சொல்லவில்லையா?'' கடுமை குரலில் இருந்தது.

அமரபுஜங்கனுக்கு வியப்பாக இருந்தது. யார், தலைவியா இப்படிப் பேசுகிறாள்? தனக்கேற்பட்ட அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு, ''கார்மேகன் சொன்னார். நிலைமையின் முக்கியம் கருதி வந்தேன்'' என்றான் அமைதி நிறைந்த குரலில்.

''இங்கு வந்த நேரத்தில் காட்டின் எல்லைக்குச் சென்று நிலைமையைக் கண்டு தக்க முடிவெடுத்திருக்கலாம்.'' நந்தினி கூறியதற்கு அமரபுஜங்கன் மறுமொழி கூறுவதற்குள் கார்மேகன் குறுக்கிட்டு, ''அம்மா! அரசர் இப்போது அங்குச் செல்வது சரியன்று. காட்டின் அருகே எதிரிகள் இருக்கிறார்கள். மறைந்து இருக்கிறார்கள். அவர்களைத் தவிர சதிகாரர்கள் சிலர் நம்மிடையே இருக்கிறார்கள். நமது நடமாட்டத்தை, திட்டத்தை உடனுக்குடன் சோழர்களிடம் தெரிவிக்கிறார்கள். காட்டின் எல்லைக்கு அரசர் வருவார் என்று எதிர்பார்த்து அவர்கள் இருக்கலாம். அதனால் இப்போது எல்லைக்குச் செல்லவேண்டாம்'' என்றார். அவர் குரலில் முன்பு இருந்த பரபரப்பு இப்போதும் இருந்தது.

''மறைந்திருந்து தாக்கும் கோழைகளுக்கு நான் அஞ்சமாட்டேன்'' என்றான் அமரபுஜங்கன்.

இப்போது நந்தினி மெல்லச் சிரித்தாள்.

''அமரபுஜங்கா உன் தூய வீரம் எனக்குத் தெரியும். மறைந்து தாக்கவிருக்கும் எதிரிகளுக்குத் தெரியாதல்லவா? அதனால் கார்மேகன் சொல்வதுபோல் நீ அந்த இடத்திற்குச் செல்வது சரியில்லை'' என்றாள்.

அமரபுஜங்கனுக்குச் சற்று எரிச்சலாகவும் இருந்தது. தலைவி கூறுவது முன்னுக்குப் பின் மாறுபட்டிருப்பது வியப்பாகவும் இருந்தது. கடந்த இரண்டு நாள்களாகத் தலைவி அமைதி இழந்திருந்தாள். சிறு விஷயங்களுக்கும் கோபம் வருகிறது. இருமுனைத் தாக்குதலுக்கான திட்டத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தவள் இப்போது மதுரை நகரத்தின் மீது படை எடுப்பதைப் பற்றி மட்டுமே பேசுகிறாள். தலைவியின் திடீர் மாற்றம் புரியவில்லை.

சிந்தித்தவாறு நின்றிருந்த அமரபுஜங்கனையே உற்றுப் பார்த்த நந்தினி சொன்னாள்: ''அமரபுஜங்கா! காட்டின் எல்லையில் நடைபெற்றிருக்கும் நிகழ்ச்சியைச் சாதாரணமாகக் கொள்ளக்கூடாது. இதுபோன்ற ஆபத்து நிறைந்த சமயங்களில் நீ என்ன செய்கிறாய் என்று சோதனை செய்து பார்த்தேன்.''

அமரபுஜங்கன் உதடுகளை மெல்லக் கடித்துக் கொண்டான்.

"கார்மேகன் உன்னை எழுப்பிக் கூறியவுடன் நீ எப்படி இயங்குகிறாய் என்று சோதிக்க விரும்பினேன். நமது காவல் கூடத்து வீரர்களைக் கொன்று விட்டார்களே என்ற ஆத்திரத்தில் உடனே காட்டின் எல்லைக்கே நீ சென்றிருந்தால் நீ அவசரக்காரன், திட்டமிடத் தெரியாதவன் என்று அர்த்தம். நீ என்னிடம் வந்தாய். அமரபுஜங்கா நீ அங்கு சென்றிருந்தால் கார்மேகன் சொல்வதுபோல் உனக்காகக் காத்திருப்பவர்களின் சதித்திட்டத்திற்கு இரையாகியிருப்பாய்" என்று தலைவி கூறியபோது அமரபுஜங்கன் விழிகளில் மெல்லிய நீர்ப்படலம் பரவியது.

"நன்றி" என்றான் அமரபுஜங்கன்.

"அமரபுஜங்கா! எதிரியும் தந்திரம் மிகுந்தவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது."

"நமது திட்டங்கள் சோழர்களுக்கு அவ்வப்போது தெரிகின்றன."

"அவர்கள் யார் என்று கண்டுபிடிக்க வேண்டாமா?"

"ஆம் உடனே கண்டுபிடிக்க வேண்டும். எல்லைக் காவல் வீரர்கள் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியைக் கொண்டே சதிகாரர்களைக் கண்டுபிடித்து விடலாம். முதலில் இறந்த வீரர்களின் உடல்களை அங்கிருந்து கொண்டுவரவேண்டும்." என்று தலைவி கூறி நிறுத்தினாள்.

"இப்படிப் பயந்து இன்று முழுமையும் இருப்பதா? எல்லைக்கு நான் செல்கிறேன். எல்லைக் காவல் இடத்துப் பரண் மீது அமர்ந்து கண்காணிக்கத் தக்கவர்களை ஏற்பாடு செய்துவிட்டு நான் செல்கிறேன். மறைந்துத் தாக்கும் எதிரிகளின் அம்புகளின் தாக்குதலால் நான் வீரமரணம் எய்தினாலும், நம் இயக்கம் தடைப்பட்டுவிடாது. நீங்கள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும். தாயே! என் தாயை - சிறுவயதிலேயே இழந்துவிட்டேன். இப்போது நீங்கள் தான் தாய், வழிகாட்டி, எல்லாம். நாளையே மதுரையை நோக்கி நமது படைகள் புறப்படும். கவலை வேண்டாம்" என்றான் அமரபுஜங்கன் உணர்ச்சி மிகுதியால்.

கார்மேகன் சொன்னார்: "அரசர் அங்கு செல்வதா? கூடாது, கூடாது. அரசரை இழக்க மாட்டோம்."

தலைவியும், அமரபுஜங்கனும் விழிகளால் பேசிக் கொண்டனர். "கார்மேகனை அனுப்பலாமா?" என்ற கேள்வி நயன பாஷையில் அவர்களிடையே பரிமாறிக் கொள்ளப்பட்டது.

"கார்மேகரே, உங்களுடைய நாட்டுப்பற்றை நான் பெரிதும் பாராட்டுகிறேன், போற்றுகிறேன்: வனத்தின் எல்லைப்பகுதிக்குச் சென்று இறந்த வீரர்களின் சடலங்களை எடுத்து வந்து விடுங்கள்" என்று அமரபுஜங்கன் கட்டளையிட்டான்.



கார்மேகன் ஒரு கணம் திகைத்தார்.

"நானா? என்னையா? என்றார்.

"ஆமாம், உங்களைத் தான். நீங்கள் தான் அதற்குத் தகுதியானவர் எங்களுக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது" என்று தலைவி கூறும்போது கார்மேகன், "வருத்தம் ஏன் ஏற்படுகிறது" என்று கேட்டார்.

"சடலங்களை எடுக்கும்போது அங்கே மறைந்திருக்கும் சோழவீரர்கள் உங்கள் மீது அம்பெய்தி விட்டால்? விஷந்தோய்ந்த அம்பு என்று தோன்றுகிறது..... என்ன செய்வது என்று தெரியவில்லை. உயிருக்குப் பயந்தால் சொல்லிவிடுங்கள். நான் வேறு ஒருவரை அனுப்புகிறேன்!" என்று தலைவி அவர் முகத்தை உற்று நோக்கியவாறு சொன்னாள்.

"உயிர் போய்விடும் என்ற பயமா? ஒருநாளும் இல்லை. ஆபத்துதவிகள் படையில் நான் சேரும்போது எனக்கு வயது முப்பது. இந்தப் பத்தாண்டுக்காலமாக நான் என் உயிர், உடலைப்பற்றி எண்ணியதேயில்லை. ஆபத்துதவிப் படைகள் எடுத்துக் கொண்ட குளுரையே சர்வபரித்தியாகம் தாயே! அப்படியிருக்கும்போது - " கார்மேகன் குரல் தழுதழுத்தது.

"தங்களைப் போன்ற உண்மை ஊழியரைப் பாண்டிய நாட்டின் மீது தணியாத பக்தி மிகுந்தவரை இழக்க விரும்பவில்லை. கார்மேகனாரே - நானே சென்று விடுவேன்; நீங்கள் தடுக்கிறீர்கள். தலைவியின் அனுமதியும் கிடைக்கவில்லை. தங்களை அனுப்ப நாங்கள் இருவரும் முடிவு செய்தோம். தங்களுக்குத் தயக்கமென்றால் சொல்லிவிடுங்கள்" என்று அமரபுஜங்கன் கேட்டான்.

கார்மேகன் பரபரப்புடன் சொன்னார். "அப்படியெல்லாம் இல்லை அரசே! பாண்டிய நாட்டின் விடுதலைக்காகத் தியாகம் செய்யவே உறுதிபூண்டிருக்கும் நான், எல்லைப் பகுதிக்குச் சென்று இறந்த வீரர்களின் சடலங்களைக் கொண்டு வரத் தயங்குவேனோ? எனக்கு ஒரு சந்தேகம் - யாரோ உளவாளிகள் இந்தக் காட்டில் இருக்கிறார்கள், அவர்களை உடனே கண்டுபிடிக்கவேண்டும் என்பது என் வேண்டுகோள்."

"ஆம், சதிகாரர்களைக் கண்டுபிடிப்பது நம் முதல் வேலை, காவல்கூட வீரர்களைக் கொன்றது; சோழநாட்டவர்களாக இருக்கமுடியாது என்பது என் கணிப்பு" என்று அமரபுஜங்கன் கூறினான்.

"அப்படியா?" கார்மேகன் அதிர்ச்சியுடன் கேட்டார். "நான் இப்போதே சென்று வீரர்களின் சடலங்களைக் கொண்டு வருகிறேன்" என்று புறப்பட எத்தனித்தார்.

அவரை அழைத்த தலைவி, "கார்மேகனே! மார்புக்கவசம் அணிந்து செல்லுங்கள்" என்று கூறினாள். தலைவி கூறியதன் உள்ளர்த்தம் கார்மேகனுக்குப் புரியவில்லை.

ஆனைமலைக் கானக எல்லைக்கருகே மார்பில் அம்பால் துளைக்கப் பட்டு வீழ்ந்து கிடந்த இருவீரர்களையும் எடுத்துவர மற்றும் இரண்டு வீரர்களுடன் கார்மேகன் புறப்பட்டார். புறப்படும்போது முத்தெழிலன் என்ற இளைஞன் உதவ வந்தான்.

"தம்பி, நீ வரவேண்டாம், இங்கேயே இரு" என்றார் கார்மேகன்.

"ஏன் ஐயா, தங்களுக்குத் உதவக்கூடாதா?"

"அரசரின் அனுமதி பெற்றுவா."

"தங்களுக்கு உதவ வருவதற்கும் அரசர் அனுமதி பெற வேண்டுமா?".

"ஆமாம். நான் சொல்வதைக் கேள்."

கார்மேகன் கடுமையாகப் பேசவே முத்தெழிலன் தயக்கத்துடன் நின்றான்.

பிறகு சிறிதுநேரம் கழித்து கார்மேகனாரைப் பின்தொடர்ந்தான்.

கார்மேகன் அங்குக் கிடந்த இரண்டு வீரர்களின் சடலத்தையும் எடுத்து வண்டியில் வைக்கும் போது முத்தெழிலனைக் கண்டுவிட்டார்.

"தம்பி!" என்று கூவினார். "நான் சொன்னதை மீறி நீ இங்கு வந்திருக்கிறாய். தலைவியிடம் உன் செயலைத் தெரிவித்தால் உனக்குத் தண்டனை அளிப்பார்கள்; ஏன் வந்தாய்?"

"இங்கு சில தடயங்களைக் கண்டுபிடிக்க வந்தேன்" என்றான் முத்தெழிலன்.

கார்மேகன் முகத்தில் நொடியில் மாறுதல் ஏற்பட்டது.

"என்ன சொல்கிறாய்? தடயங்களா? ஓ! உளவாளிகளைக் காண வந்திருக்கிறாயா?" என்று அவர் கூறியபோது எங்கிருந்தோ அம்பொன்று முத்தெழிலன் தோளில் பாய்ந்தது.

"அம்மா" என்று அலறி அவன் வீழ்ந்தான்.

## 43

**பா**ய் விரித்து அந்தக் குறுங்கலம் கடலில் விரைந்து கொண்டிருந்தது. கலத்திலிருந்தவகள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளவில்லை. அவர்கள் சேரநாட்டைச் சேர்ந்தவர்களல்லர். ஒருவர் முகத்திலும் கீற்றுப் புன்னகை கூடக் கிடையாது. அடர்ந்த தாடி மீசையும் பெருந்தலைப்பாகையும் கொண்டிருந்த கலப்பணியாளர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

சங்கரத்தேவனை யார் என்று கூடக் கேட்கவில்லை. மேல்தளத்திற்குச் சென்றபோது அவனை ஒருவரும் தடுக்கவில்லை. அவனுக்கு வியப்பாக



இருந்தது. தனக்குத் தண்டனையளித்த சேரமன்னர், தன்னைச் சிறையிலடைக்கக் கலத்தில் அழைத்துச் செல்லக் கட்டளை விட்டிருக்கிறார். அரச கட்டளையை நிறைவேற்ற முனைந்திருக்கும் அவர்கள் தன்னைக் கண்காணிக்காமலிருப்பார்களா? கலத்து மேல் தளத்திற்குச் சென்று வானையும் கடலையும் நோக்குமாறு விட்டிருப்பார்களா? அவனுக்கு ஐயமேற்பட்டது.

கலத்தின்மேல் தளத்திலிருந்தவர்களிடம் அவன் மெல்லப்பேச முயன்றான், புன்முறுவல் பூத்தான். அவர்களிடமிருந்து எந்த எதிரொலியும் வரவில்லை. தலையில் பெரிய முண்டாசும், காதில் பெரிய வளையும் முகத்தில் அடர்ந்த மீசை தாடியுடன் விளங்கிய அவர்கள் வேற்று நாட்டவர்கள் என்பதைப் புலப்படுத்தினர்.

சங்கரத்தேவன் இருமுறை அந்தத் தளத்தில் உலவினான். அவன் மனம் அமைதி குலைந்து தத்தளித்தது. கலத்தின் மீது மேலும் அலைகளைப் போல் இதயத்தில் எழுந்த உணர்ச்சிகள் அவனை நிலை கொள்ளாமல் தவிக்கச் செய்தன.

கலத்திலுள்ளவர்கள் தன்னை எங்கே கொண்டு செல்கிறார்கள் என்பதை அறியாமல் இருக்க அவனால் இயலவில்லை.

ஓவென்று கூவவேண்டும் போல் தோன்றியது. சில கடற்பறவைகள் பறந்து வந்து கூம்பின் மேல் அமர்ந்தன.

அவற்றில் ஓரிரு பறவைகள் தளத்தில் வந்தமர்ந்தன. பாலை விட வெண்மையான அந்த நிறத்தைப் பார்க்கப் பார்க்க இறைவனின் படைப்பின் அதிசயத்தை எண்ணி வியந்தான். கரிய நிற காகத்தையும், பச்சைக் கிளியையும், சாம்பல் நிறப் புறாவையும், நீலநிற மயிலையும், பல வண்ணக் கொண்டையுடன் கூடிய கோழியையும் அவன் மனத்தில் உருவகப்படுத்திக் கொண்டான்.

இயற்கையின் அற்புதத்தை எண்ணியவாறு சிறிது நேரத்தைப் போக்கினான். சோழநாட்டு நினைவு வந்தது. ராஜராஜ சோழர் தன்னிடமிருந்துச் செய்தியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நினைவு எழுந்தது. சுமதியின் நினைவு படர்ந்தது.

அண்மைக்காலமாக சுமதியின் மீது தனக்கு அதிகரித்து வரும் பாச உணர்வை எண்ணினான். அவள் அடிக்கடி பெருமூச்சு விடுவதும், இரவிலே விழித்துக் கொள்வதும் தானே சிரித்துக் கொண்டு பின் அமைதி அடைவதுமாக ஏற்படும் வித்தியாசமான உணர்ச்சிகளை அவன் கவனித்து அவளைக் கேட்க வேளை ஏற்படாமல் தவித்திருக்கிறான்.

ஒருநாள் அவன் கரத்தில் துவண்டு காதல் மயக்கத்தில் கட்டுண்டிருந்த அவள் மெல்ல அவன் செவிகளில் மட்டும் விழுமாறு, "உங்கள் தாய்க்கு நீங்கள் ஒரே மகனா?" என்று கேட்டாள்.

சங்கரத்தேவன் வியப்புடன் அவளை நோக்கினான். திடீரென்று இவள் புதிர்போடுகிறாளே, என்னைப்பற்றியும் என் குடும்பத்தைப் பற்றியும் இவள் நன்றாக அறிவாளே என்ற எண்ணத்தில் "திடீரென்று உனக்கு என் சந்தேகம் வந்தது?" என்று கேட்டான்.

அவள் மெல்ல முறுவலித்தபடி, "உங்கள் மீது உங்கள் அம்மாவுக்குக் கொள்ளை ஆசை. அதனால் சில வேளைகளில் அவர்கள் பங்கில் நான் பெரும் பகுதியைப் பறித்துக் கொண்டு விட்டதாகக் கோபமும் கூட; ஒருவேளை நீங்கள் அவருக்கு ஒரே மகன்தானா என்ற ஐயம் ஏற்பட்டது" என்றாள்.

சங்கரத்தேவன் அவளை விந்தையாக நோக்கினான்.

"என் தாய்க்கு என்மீது கொள்ளை ஆசை, நான் தாய்க்கு ஒரே மகன்; அது உனக்குத் தெரியாதா?" அவள் செவிகளில் மெல்லப் பேசினான். அவள் எதற்காகவோ இந்தப் பேச்சைத் தொடங்கியிருக்கிறாள் என்பதை அவன் அறிந்து கொண்டான். அவளைச் சீண்டி திகைக்க வைக்கவேண்டும் என்றும் அவனுக்கு ஆசை ஏற்பட்டது.

"சுமதி என் தாய் என்மீது வைத்திருக்கும் பாசம் அன்புக்கு இந்த உலகத்தில் இணையே கிடையாது" என்றான்.

சுமதி, தன் மழைக்கண்களால் அவனை நோக்கினாள். விரகதாபம் மேலிட்ட நிலையிலும் அவனிடம் சிறிது நேரம் பேசவேண்டும், என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டது. சற்று ஊடல் புரிந்தால் என்ன - உணர்ச்சிகளைச் சற்று நேரம் அடக்கிக் கொண்டால் என்ன என்றும் தோன்றியது.

"உங்கள் தாய் என்று இப்போது பரிந்துப் பேசுவதாக நினைக்க வேண்டாம் - நானும் அவர்களை அம்மா என்று தானே அழைக்கிறேன். உங்கள் தாயின் அன்புக்கு உலகத்தில் இணையே கிடையாது என்று இப்போது சொல்கிறீர்கள். நேற்றுவரை என்ன சொல்லிக் கொண்டிருந்தீர்கள்?"

"என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்?"

"நீதான் உயிர். உன் அன்புக்கு இணையே கிடையாது. நீதான் எல்லாம்" என்று கூறுவீர்களே? இப்போது மாறிவிட்டீர்களே."

சங்கரத்தேவன் அவள் முகத்தை இருகரங்களாலும் தூக்கித் தன் முகத்தோடு முகம் பார்க்கச் செய்து, "கள்ளி! தாயின் அன்புக்கும் துணைவியின் அன்புக்கும் வேற்றுமையில்லையா - தாய் என்னைப் பெற்றெடுக்க தவம் செய்திருக்கிறாள்; வளர்க்க என்ன பாடுபட்டிருக்கிறாள்" என்று கூறியபோது சுமதி அவன் பிடியிலிருந்து விருட்டென விடுபட்டு எதிரே அமர்ந்து, "மனைவி தன் தாயின் அன்பைத் துறந்து எல்லாமே கணவன் தான் என்று அர்ப்பணித்து வாழ்க்கைப் பயணத்தில் கடைசிவரை துன்பத்திலும்,



இன்பத்திலும் பங்கு கொள்கிறாளே அந்த அன்புக்கு நிகர் உண்டா?" என்று கேட்டபோது குரலில் இருந்த வேகத்தை சங்கரத்தேவன் உணர்ந்தான்.

இருவரும் இன்பத்தோணியில் பயணம் செய்யும் வேளையில் இப்படியொரு பிணக்கு ஏன் ஏற்படுகிறது என்று சங்கரத்தேவன் திடுக்குற்று, "சுமதி, உனக்கு என்ன வந்துவிட்டது? ஏன் திடீரென்று இப்படியெல்லாம் பேசுகிறாய்?" என்றான்.

தொடர்ந்து கோபங்கொண்டிருப்பது போல் நடித்து, "எனக்கு உங்கள் மீது ஆசை இல்லையா?" என்றாள்.

"அதில் என்ன சந்தேகம்? என் தாய்க்கு இருக்கும் அன்பு பாசத்திற்கும் உனக்கு என்மீது உள்ள காதல் கனிவுக்கும் வேற்றுமையில்லையா? பெற்றெடுத்த தாயின் அன்புக்கு நிகர் என்று நான் சொன்னதில் என்ன தவறு. உன் தாய்மீது உனக்குள்ள ஆசைக்கும் என்மீது உனக்குள்ள ஆசைக்கும் வேறுபாடில்லையா? என் தாயும், குறிப்பாகத் தவமிருந்தும் பெற்ற தாய் தன் மகன் மீது கொள்ளும் அன்பின் அளவை எடைபோட முடியாது. அதிலும் என் தாய் என்னிடம் சொல்லியிருக்கிறாள்; தனக்கு ஒரு குழந்தை பிறக்காதா என ஏங்கித் தான் தவமிருந்ததை விவரித்திருக்கிறாள். தவம் என்பது மிக உண்மை. என் தந்தை தாயைப் பிரிந்து பல ஆண்டுகள் இருந்திருக்கிறார். ஈழ நாட்டிற்குச் சென்றவரைப் பற்றித் தகவல் தெரியாமலேயே நாட்கள் கழிந்தன. ஒரு தாயின் ஏக்கம் மற்றொரு தாய்க்குத் தான் புரியும். அந்த ஏக்கத்திற்கு ஒரு விடிவு ஏற்பட்டது. தந்தை வந்தார், நான் பிறந்தேன்! புரிகிறதா என்மீது என் தாய்க்குள்ள அளவு கடந்த பாசத்தின் காரணம்?"

இப்போது சுமதி சிரித்தாள். அவனுக்கு வியப்பாக இருந்தது. இவ்வளவு நேரம் கோபத்துடன் இருந்த சுமதி மாறிவிட்டாளே, ஹூம்!

"என்ன சுமதி, நான் கூறியது உன்னைச் சமாதானப்படுத்தி விட்டது இல்லையா?" என்று அவளை மெல்ல அணைத்துக் கொண்டான். அவன் அணைப்பினால் ஏற்பட்ட சிலிர்ப்பிலிருந்து உடனே மீண்ட சுமதி, "இல்லை" என்று தலையை அசைத்தாள்.

"இன்னும் நீ சமாதானமடையவில்லையா?"

"என் வருத்தம், வேதனை பேச்சால் சமாதானமடையவில்லை."

"வருத்தமா, வேதனையா? இதுவரை ஊடல், கோபம் என்றல்லவா நினைத்திருந்தேன். இன்னும் சொல்லப்போனால் பொய்க்கோபம் கொண்டிருக்கிறாய் என்றல்லவா நினைத்திருந்தேன். உனக்கு என்ன வருத்தம்! உனக்கு ஏற்பட்டுள்ள வேதனை என்ன? என்னிடம் சொல்லு சுமதி" என்று அவன் கேட்டான். சிறிது நேரம் அவள் இதழ்களை விரித்துப் பேச முடியாமல் செய்தான்.

சுமதி சற்றுச் சிணுங்கினாள். "நீங்கள் தாயிடம் மட்டற்ற அன்பு கொண்டிருப்பது போல் நானும் என் செல்வரிடம் கொள்ளை ஆசை கொள்ள வேண்டாமா?"

சுமதி சொல்வதின் உள்ளர்த்தம் அவனுக்கு விளங்கவில்லை.

"சுமதி பிள்ளைக் கனி அமுதை நீ மட்டும் தான் கொஞ்சிக் குலவ வேண்டுமா? எனக்கும் அந்த ஆசை உண்டு. நீ தாலாட்டுப் பாடுவதை நான் கேட்டு ரசிக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. வீரத்திருமகனே கண்ணுறங்கு, கண்ணுறங்கு என்று பாடவேண்டும்" என்று கூறியபோது, சுமதி குறுக்கிட்டு, "பெண் குழந்தையாகப் பிறந்துவிட்டாலோ?" என்றாள்.

"என் அருமை சுமதியைப் போல், குணவதியே கண்வளராய்" என்று பாடவேண்டும்.

சுமதியின் முகத்தில் எந்தவிதச் சலனமும் இல்லை.

"என்ன சுமதி அமைதியாய் இருக்கிறாய்?" என்று கேட்டு அவள் கன்னத்தை மெல்லத் தட்டினான்.

"நான் என் குழந்தையை என்று கொஞ்சப் போகிறேன்? என்று தாலாட்டுப் பாடப் போகிறேன்? என்று அம்புலி காட்டிப் பால்சோறு ஊட்டப் போகிறேன்?" - சுமதி கூறிவரும் போது அவள் குரல் தழுதழுத்தது.

அவள் கண்களில் தேங்கிய கண்ணீரைக் கண்ட சங்கரத்தேவன் பதறிவிட்டான்.

"என்ன சுமதி... உனக்கு என்ன நேர்ந்து விட்டது?"

அவன மார்பிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு சுமதி விம்மினாள். வீரனுக்கு அடையாளமாகப் பரந்திருந்த மார்பு சுமதியின் ஏக்கத்தால் வழிந்த கண்ணீரால் நனைந்தது.

அவளை அமைதிப்படுத்த நீண்ட நேரமாகியது. சங்கரத்தேவன் புரிந்து கொண்டான். பிறகு அங்கே அமைதி நிலவியது. கலகலவென்ற சிரிப்பொலி எழுந்தது; வளையோசை அங்கு எதிரொலித்தது.

***

கலத்தின் மேல் தளத்தில் அந்தச் சம்பவத்தை நினைத்துச் சங்கரத்தேவன் தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்.

இப்போது பழையாறையில் சுமதி என்ன செய்து கொண்டிருப்பாள். அவள் விரும்பியபடியே அவள் வயிற்றில் வளரும் ஜீவனை நினைத்து மகிழ்ந்து கொண்டிருப்பாள். இந்த நேரத்தில் அவளருகே இல்லாமல் எங்கோ ஓரிடத்திற்குக் கடலில் சென்று கொண்டிருக்கிறோமே என்று நினைக்கும் போது அவனுக்குத் தான் செய்தது மிகப்பெரிய தவறு என்று எண்ணத்



தோன்றியது. சேரநாட்டவர்களிடம் சிக்கியிருக்கக் கூடாது என்று முணுமுணுத்தான். 'பெரிய தவறு செய்து விட்டோம்' என்று கூறி முஷ்டியை மடக்கி ஓங்கி, தளத்தைச் சுற்றியிருந்த இரும்பு வளையத்தின் மீது குத்தினான்.

அவன் தோளை வலிவான கரம் ஒன்று பிடித்து அழுத்தியது. திரும்பினான்.

அவனைக் கீழ்த்தளத்திற்கு வருமாறு சைகை செய்தான் அந்த மனிதன். தொலைவிலே கரை தெரிந்தது.

## 44

தொலைவில் தெரிந்த கரை மெல்ல மெல்ல நெருங்கியது. மரக்கலம் கடற்கரை வரை செல்லவில்லை. சற்றுத் தொலைவிலேயே நிறுத்தப்பட்டது. ஒருவேளை நீந்திச் செல்வதற்குத் தன்னை வற்புறுத்துவார்களோ என்ற கவலை சங்கரத்தேவனுக்கு ஏற்பட்டது. இவ்வாறு நீந்திச் செல்லும் நிலை ஏற்பட்டால் எப்படியாவது தப்பிச் சென்று விடுவோம் என்று நம்பிக்கை ஏற்படுத்திக் கொண்டான். ஆனால் கரையினின்று இரண்டு படகுகள் கலத்தை நோக்கி வந்து கொண்டிருந்தன.

மரக்கலத்திலிருந்து இறங்குவதற்காக நூல்ஏணி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. கலம் அருகே வந்து அவை நின்றன. கலத்திலிருந்த வீரர்கள் சமிக்ஞை காட்டினர், அவனைக் கீழே இறங்குமாறு. சங்கரத்தேவன் மெல்ல இறங்கினான். அவனைத் தொடர்ந்து கலத்திலிருந்தவர்கள் ஒருவரும் இறங்கவில்லை. படகில் துடுப்பைப் போடுபவர் தவிர வேறு சிலப்பணியாட்கள் இருந்தனர். மாமிசக் குன்றைப்போல் உயரமும், பருமனுமாக அவர்கள் இருந்தனர். அவர்களும் சைகை மூலமாகப் பேசினார்கள். படகு நகர்ந்துச் சென்றது. துடுப்புகள் மிக வேகமாக போடப்பட்டன.

படகு கரையை நெருங்கிக் கொண்டிருந்தது. கரையை ஒட்டிப் பெரும் குன்று கரைக்கு அரண் அமைத்தது போல் படுத்திருந்தது. மரம் செடி கொடிகள் அதிகம் வளராத மணற்குன்றாக அது விளங்கியது. கரைக்கும் குன்றுக்கும் இடைவெளியிலே இருந்த மணற்பரப்பில் தென்னை மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. தென்னந்தோப்பு அந்த நிலையிலும் சங்கரத்தேவன் மனத்திற்கு அமைதியை அளித்தது.

கரையை அடைந்தவுடன் அவனை இறங்குமாறு படகிலிருந்தவர்கள் மீண்டும் சைகை மூலம் சொன்னார்கள். சங்கரத்தேவன் அவர்களிடம் பேச்சுக் கொடுக்க விரும்பினான்.

"இது எந்த இடம்?" என்று கேட்டான்.

அவர்கள் சைகை மூலம் மேலே செல் என்று கட்டளையிட்டார்கள். அவனுக்கு எரிச்சலாக இருந்தது. சற்று நின்றான். ''நான் கேட்டதற்கு மறுமொழி கூறாமல் சைகை மூலமாகச் சொல்கிறீர்களே, மிக மரியாதைக் குறைவாக இருக்கிறதே'' என்றான். அவர்கள் பேசவில்லை. இருவரும் அவன் தோள்களில் கையைக் கொடுத்து அவனைப் பிடித்துத் தள்ளிச் செல்ல முயன்றனர். அவன் அதை விரும்பவில்லை. தன்மானம் அவனை எரிச்சலடையச் செய்தது. அவர்களின் கரங்களை அகற்றி மெல்ல நடக்கத் தொடங்கினான்.

அவனுக்குத் தெரிந்துவிட்டது. இது யாரும் எளிதில் அணுக முடியாத இடம் என்று. அலைகளின் பலத்த ஓசைகளுக்கிடையே காற்று தென்னங்கீற்றுகளில் புகுந்து அங்கு சலசலப்பை அளித்தது. அமைதி நிலவினாலும் அதில் பயங்கரம் வேடம் அணிந்து பயமுறுத்தியது. அவன் சிந்தித்தவாறே நடந்து சென்றான். அடுத்து என்ன நேரும் என்று அவனுக்கே புரியாத நிலை. இப்படி வந்து சிக்கிக் கொண்டோமே, அறிவைத் தக்க முறையில் பயன்படுத்தவில்லையே என்று தன்னைத்தானே நொந்து கொண்டான். இந்த நேரம் தஞ்சைபுரியில் என்ன நேர்ந்திருக்குமோ? சேரனுடைய சதித்திட்டம் மிக வேகமாக இயங்கி சேரனுடைய படைகளும், பாண்டியனுடைய படைகளும் தரைவழியும் மற்றும் கடல் மூலமாகவும் சோழநாட்டைத் தாக்கி என்ன பாடுபடுத்தியிருப்பார்களோ என்ற கவலை அவனுக்கு அதிகமாகியது. இருந்தாலும் பேரரசர் ராஜராஜ சோழதேவரின் சிறந்த படைத்திறனுக்கும் அறிவாற்றலுக்கும் எதிரே அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று தன்னைத் தானே அமைதிப்படுத்திக் கொண்டான். சங்கரத்தேவனை அவர்கள் வற்புறுத்தி வேகமாக நடக்கப் பணித்தார்கள். சிறிது தூரம் சென்று குன்றின் அடிவாரத்தை அடைந்தார்கள். அங்கு சில குடில்கள் இருந்தன. எருமை ஒன்று சுகமாய்த் தூங்கிக் கொண்டிருந்தது. சோம்பலாய்ப் படுத்திருந்த வேட்டை நாய் ஒற்றைக் கண்ணைத் திறந்துப் பார்த்து மெல்ல சுருதி கூட்டியது.

சங்கரத்தேவனை அழைத்துச் சென்று குரல் கொடுத்தவுடன் வயதான ஒருவன் குடிலுக்குள்ளிலிருந்து வெளியே வந்தான். சங்கரத்தேவனை அவன் ஏற இறங்கப் பார்த்தான். அவனுடன் ஒன்றும் பேசவில்லை. சங்கரத்தேவனிடமிருந்து உடைவாளைப் பறித்துக் கொண்டான். அவன் உடைவாளைத் தொடும்போது சங்கரத்தேவன் சுத்த வீரன் அல்லவா? தன் எதிர்ப்பைத் தெரிவித்தான். ஆனால் அவர்களுக்கு எதிராக அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. வாளைப் பறித்து எடுத்துச் சென்றவன் மீண்டும் சமிக்ஞை செய்தான். அவர்கள் அவனைக் குன்றின் மேலே உச்சிக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதை வழியாக அழைத்துச் சென்றார்கள். சரியாக செப்பனிடப்படாத பாதை. இடையே பாறைகள் குறுக்கிட்டன. முட்செடிகள் நிறைந்திருந்தன.



குன்றின் மேலே சிறிய கோட்டை ஒன்று கட்டப்பட்டு இருந்தது. வெளியே இருந்து பார்த்தால் உடனடியாகப் புலப்படாதவாறு அந்தக் கோட்டை கட்டப்பட்டிருந்தது. காற்று 'ஹோ' என்ற ஓசையுடன் வீசிக் கொண்டிருந்தது. மக்கள் நடமாட்டம் அங்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. குன்றின் மேல் ஏறும்போது சங்கரத்தேவனுக்கு மிகக் கவலையாக இருந்தது. சேரநாட்டிற்கு வரும் வழியிலே சில இடங்களில் சிறு குன்றுகள் பெருங்குன்றுகளில் ஏறி மறுபக்கம் இறங்கும் போது அவன் மிகவும் துயரப்பட்டு இருக்கிறான். தொல்லைப்பட்டு இருக்கிறான். ஆனால் இயற்கைச் சூழல் நிறைந்திருந்ததால் களைப்பு அவனுக்குத் தெரியவில்லை. இந்தக் குன்று முற்றிலும் மாறுபட்டிருந்தது.

குன்றின் உச்சியை அடைந்து கோட்டை வாயிலை நெருங்கியவுடன் உடன் வந்தவர்கள் ஒருவித குரலொலி எழுப்பினார்கள். அவர்கள் தமிழில் பேசவில்லை. அதில் தமிழ் வார்த்தைகளும் இருந்தன. ஒரு கலப்படமான மொழியில் அவர்கள் பேசினார்களா, அல்லது கூவினார்களா அல்லது மிருகங்களின் ஒலிபோல் கூச்சலிட்டார்களா என்று அவனுக்கு விளங்கவில்லை. கோட்டைக் கதவு திறந்தது. குழிவிழுந்த கண்களும் கூன் முதுகுமாகக் காட்சியளித்த வயது முதிர்ந்த ஒருவன் அவர்களைப் பார்த்து ஏதோ கேட்டான். பிறகு கோட்டையின் மேல் தளத்திற்குச் செல்லும் கதவைத் திறந்தான். படிக்கட்டுகளின் வழியாகக் கோட்டையின் மேல்மாடத்திற்கு அவனை அழைத்துச் சென்றார்கள். நிசப்தமாக இருந்தது. வௌவால்கள் அங்கும் இங்குமாகப் பறந்து கொண்டிருந்தன. வண்டுகள் விதவிதமாக ஓசையெழுப்பிக் கொண்டிருந்தன, என்ன செய்வது, என்று தெரியாமல் அவன் தவித்தான். எந்த வார்த்தையும் பேசாமல் அவனை அவர்கள் நடத்தி வந்த விதமே பெரும் தண்டனையாக இருந்தது.

அங்கேயே அவர்களுடன் மல்யுத்தம் செய்து அவர்களைத் தாக்கி வீழ்த்தி விட அவனால் முடியும். சரி. தாக்கி வீழ்த்தினோம், அடுத்து? இப்பொழுது அவன் அமைதியாக சிந்தித்தான். அவர்களைப் பின் தொடர்ந்து மேலே சென்றான். ஒரு கதவைக் காட்டினார்கள். உள்ளே போ என்று கையை அசைத்தார்கள். அது ஒரு சிறு அறை. அந்த அறைக்குள்ளே அவனைத் தள்ளி அறைக்கு வெளியே தாழ்ப்பாள் இட்டு விட்டார்கள். பூட்டப்படும் சப்தம் கேட்டது. 'கிரீச்' என்ற ஒலி கேட்டது. அவர்கள் மிதியடிகள் எழுப்பும் ஓசை நன்றாகக் கேட்டது. அந்த ஒலியும் கதவைச் சாத்தித் தாள் இட்டவுடன் மறைந்தது.

அந்த அறை அகலத்தில் குறைவாக இருந்தாலும் மேல்தளம் மிக உயரமாக இருந்தது. மேலே இருந்த சாளரத்தில் இருந்து வெளிச்சம் உள்ளே விழுந்து கொண்டிருந்தது. பெரிய சாளரத்தின் கீழே ஒரு சிறிய சாளரம். அந்தச் சாளரத்தின் வழியாக வெளி உலகைப் பார்க்க முடியும். சங்கரத்தேவனுக்கு

என்ன செய்வது என்று புரியவில்லை. அந்த அறையில் சுற்றும் முற்றும் நடந்தான். மிக வேகமாகவும் அடிமேல் அடி வைத்தும் நடந்தான். பிறகு களைப்பு மேலிட அவன் தரையில் படுத்துக் கொண்டான். தரை முழுவதும் கம்பளம் விரித்தது போல் தூசி படர்ந்திருந்தது. பல ஆண்டுகளாக அந்த அறையை யாரும் பயன்படுத்தவில்லை என்று தெரிந்தது. ஆனால் காற்று மட்டும் மிக இதமாக அந்த அறையில் தவழ்ந்தது. அது அவனுக்கு மனஅமைதியை அளித்தது. களைப்பு மேலிடத் தரையில் சரிந்தான். எவ்வளவு நேரம் அவன் உறங்கியிருப்பானோ தெரியாது. திடுக்கிட்டு கண்விழித்தபோது அவன் அருகே சிலர் நின்று கொண்டிருப்பதை உணர்ந்தான். ஒரு பாத்திரத்தில் உணவு இருந்தது. மரத்தட்டு இருந்தது. தண்ணீர் இருந்தது. அவனை அவர்கள் எழுப்புவது தெரிந்தது. அவர்கள் தங்கள் கால்களைப் பயன்படுத்தி அவனை எழுப்பியிருக்க வேண்டும். அவன் சீறி எழுந்து நின்றான். அவர்களை எங்கோ பார்த்த முகமாக அவனுக்குத் தெரிந்தது.

இப்போது அவர்களுடன் வீண் விவாதம் வைத்துக் கொள்ள அவன் விரும்பவில்லை. சிறிதுநேரம் அவர்களையே பார்த்து நின்ற அவனை நோக்கி, "உணவை விரைவில் உண்டு பாத்திரங்களைத் திருப்பித் தரவேண்டும். நாங்கள் வெளியே காத்திருக்கிறோம்" என்று பேசினார்கள். சற்று அழுத்தமான குரலில் தமிழில் பேசியதால் தமிழ் வார்த்தைகளைக் கேட்டவுடன் கடுமைச் சொற்களென்றாலும் அவனுக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது. அவன் புன்முறுவல் பூத்தான். அவர்களிடமிருந்து எந்தப் பிரதிபலிப்பும் ஏற்படவில்லை. அவர்கள் முகத்தில் எந்தவிதச் சலனமுமில்லை. பாத்திரத்தில் இருந்த குழம்புச் சோற்றையும் உண்டு, பிறகு தனி குவளையிலே இருந்த மோரையும் எடுத்து ஆவலாக பருகிவிட்டுக் கையை அந்தப் பாத்திரத்தில் கழுவிக் கொண்டான்.

அவன் சொன்னான் : "குளிக்காமல் நான் இதுவரை உண்டதில்லை."

ஒருவன் சொன்னான். "வாரம் ஒருமுறை குளிக்கலாம். உன்னை இங்கே உள்ள குளத்திற்கு நாங்கள் அழைத்துச் செல்வோம். இங்கே தனியே குளியல் அறை வசதி எல்லாம் இல்லை. நீ குற்றவாளி. சிறைப்படுத்தப் பட்டவன் என்பதை நினைவில் வைத்துக் கொள். உங்கள் ஊர் தஞ்சையிலே உனக்கு இருக்கும் வசதிகளை எல்லாம் இங்கே எதிர்பார்க்க முடியாது. சோழநாட்டரசர் செய்த பெரும் தவறுக்கு அவரது தூதரான நீ தண்டனை அனுபவிக்கிறாய். நீயும் பல தவறுகள் செய்திருக்கிறாய். எங்கள் சேரநாட்டுத் தளபதியைத் தாக்கியது பெரும் குற்றம். சோழநாட்டு ஒற்றனாக நீ வேவு பார்ப்பதற்காக இங்கே வந்தது பெருங்குற்றம். இந்தக் குற்றங்களுக்கு எல்லாம் மரணதண்டனை விதித்திருக்கவேண்டும். எங்கள் சேரமன்னர் பாஸ்கர ரவிவர்மன் கருணையுள்ளம் கொண்டவர். அன்பு அவரிடம் பொங்கி நிற்கும்.



அதனால் தம்பி, நீ இந்த அறையில் நலமுடன் என்றென்றும் இருக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய ஆசை. அணுஅணுவாகத் துன்பப்பட்டு மனசை செய்வதே எங்கள் ஆசை. வெளி உலகைப் பார்க்காவிட்டால் பைத்தியம் பிடித்துவிடும் என்பதை அறிவோம். எங்களுக்கு மனத்தில் இரக்கம் உண்டு. தேவைப்பட்டால் நீ இந்தச் சாளரம் வழியே வெளியே பார்த்துக் கொண்டு இருக்கலாம். உனக்கு ஏணி ஒன்று நாங்கள் கொண்டு தருகிறோம். ஆனால் ஓர் எச்சரிக்கை. தப்பிச் செல்லக் கனவில் கூட எண்ணாதே. ஏனெனில் இந்தச் சுவரின் அகலம் உனக்குத் தெரியவேண்டுமா? இந்தச் சாளரத்தின் வழியே பார்க்கும் போது சுவரின் குறுக்கு அகலம் எவ்வளவு என்று தெரிந்து புரிந்து கொள். அந்த முயற்சிகளெல்லாம் வீணே நீ செய்ய முயலாதே" என்று கூறி மறுமொழியை எதிர்பார்க்காமல் வந்த வழியே திரும்பி அறைக்கதவைச் சாத்தினார்கள். பெரும் ஒலியுடன் கதவு மூடப்பட்டது.

சங்கரத்தேவன் நெடுநேரம் அப்படியே நின்றுகொண்டு இருந்தான். அவன் கண்களின் வழியே கண்ணீர் மளமளவெனப் பெருகிக் கொண்டு இருந்தது. அவன் அழுகிறானா? இல்லை, இல்லை, கோழைகள் தான் அழுவார்கள். பிறகு ஏன் அவன் கண்களில் இருந்து நீர் வருகிறது. அவன் தன்னைத்தானே நொந்து கொள்கிறான். தன் தவறை எல்லாம் நொந்து கொள்கிறான். தனக்கு இராஜதந்திரம் தெரியாமல் போய்விட்டதே. தன்னைப் பெரிய ராஜதந்திரி என்று எண்ணி வல்லவரையர் வந்தியத்தேவனும் மாமன்னர் ராஜராஜ சோழதேவரும் இங்கே அனுப்பினார்களே அவர்கள் என்ன நினைப்பார்கள். ஐயோ இங்கே காலகாலத்திற்கு இருந்து தொல்லைப்பட வேண்டுமா?" என்று கவலைப்படும் நேரத்தில் மீண்டும் கதவு திறக்கப்பட்டது. பெரும் ஏணியுடன் இருவர் வந்து அந்த அறைச்சுவரின் மீது சார்த்திவிட்டு மறுமொழி பேசாமல் திரும்பிச் சென்றுவிட்டார்கள் சங்கரத்தேவன் பரபரப்பாக அந்த ஏணியின் மீது ஏறிச் சாளரத்தின் வழியாக வெளியே நோக்கினான். தொலைவில் நீலக்கடல் விரிந்துப் பரந்திருந்தது. நேரம் போவது தெரியாமல் பார்த்துக் கொண்டிருந்தான். தூக்கம் வரும் நேரம் உணவு உண்ணும் நேரம் போக மீதி நேரத்தில் சாளரத்தின் வழியே பார்த்துக் கொண்டிருந்தான். எவ்வளவு நாள்கள் கழிந்தனவோ?

ஒருநாள் கடலில் தொலைவில் கலமொன்று வருவது தெரிந்தது கலத்தை நோக்கி படகு செல்வது தெரிந்தது. யாரையோ ஏற்றிக் கொண்டு படகு கரையை நோக்கி வருவது தெரிந்தது. சிறையில் மற்றொருவரையும் அடைக்கப் போகிறார்கள். மகிழ்ச்சியோ, வருத்தமோ அடையாத மனநிலை அவனுக்கு ஏற்பட்டது. அது பழங்காலக் கோட்டை என்றும், உதயகிரி என்ற பெயர் என்றும், தெரிந்து கொண்டான்.

## 45

சங்கரத்தேவனுக்குத் துணையாக மற்றொருவனும் உதயகிரிக் கோட்டைக்கு வந்துசேர்ந்தான். கடற்கரையில் படகில் ஏற்றப்பட்டவனைக் குறித்து இரண்டு நாட்கள் சங்கரத்தேவன் கவலைப்படவில்லை.

மூன்றாவது நாள், அவனுக்குச் சோறு போட வந்தவர்கள், மற்றொருவன் கோட்டைக்கு வந்திருப்பதைத் தெரிவித்தார்கள்.

''அவனும் என்னைப் போன்று ஒற்றனா? அல்லது பயங்கர கொள்ளைக்காரனா?'' என்று கேட்ட சங்கரத்தேவன் அவர்களுடைய மறுமொழியைக் கேட்காமலேயே, ''சேரநாட்டு அரசரே கொள்ளைக்காரர் தானே. அவரை எந்தச் சிறையிலிடுவது?'' என்றான்.

''என்ன சொன்னாய்? சேரநாட்டரசர் கொள்ளைக்காரரா? கோட்டைத் தலைவருக்குத் தெரிந்தால் உன் நாக்கைத் துண்டித்து விடுவார்'' என்று காவல் வீரன் சீறினான்.

''உங்களுக்குத் தெரியாது தம்பிமார்களே, அண்ணன்மார்களே! சோழநாட்டு வணிகக் கப்பல்கள் கடலில் செல்லும்போது வழிமறித்துக் கொள்ளையடித்திருக்கிறீர்கள். உங்கள் அரசரின் ஆதரவு இருப்பதாக எங்களுக்கு ஐயம். அதைப் பற்றிப் பேசவே என்னைத் தூதுவனாக அனுப்பினார் எங்கள் அரசர்'' என்று சங்கரத்தேவன் கூறி காவல்வீரன் கோபத்தைத் தணிக்க முயன்றான்.

''நாங்கள் கொள்ளை அடிக்கவில்லை. கொள்ளையர்களுக்கு உதவினோம். எங்களுக்குத் தங்கப் பாளங்கள் கிடைத்தன'' என்று கூறிய காவல் வீரன், ''தம்பி உனக்கு ஏன் வீண் வம்பெல்லாம் வேளைக்குச் சோறு கிடைக்கிறது. அமைதியாகக் காலத்தை ஓட்டாமல், மேலும் தண்டனையைப் பெற வேண்டுமா?'' என்று சங்கர தேவனைச் சமாதானப்படுத்த முயன்றான், காவல் வீரன்.

சங்கரத்தேவன் நகைத்தான். ''எனக்குக் கிடைத்திருக்கும் இந்தத் தண்டனையைவிட வேறு என்ன இருக்கிறது?''.

''ஏன் இல்லை? உன் கையை உடைக்கலாம். காலை வெட்டலாம். கண் விழிகளைப் பறிக்கலாம்; பேச்சுக்குச் சொல்கிறேன், ஏதோ ஒரு மாய மந்திரத்தால், எதிர்பாராத நிகழ்ச்சியால் நீ இங்கிருந்து விடுதலை பெறுகிறாய் என்று வைத்துக் கொள், உன் சொந்த ஊருக்கு முடமாகவும், நொண்டியாகவும் சென்று என்ன செய்வாய்?'' என்று கேட்டான் வீரன் ஒருவன். குரலில் குழைவு இருந்தது.

''மாயமில்லை, மந்திரமில்லை நீயே பார்க்கப் போகிறாய், எங்கள் அரசர் என்னை மீட்கப் போவதை! மிக மரியாதையாகவும், அன்பாகவும் நீங்கள் நடந்துகொண்டால் உங்களைப் பற்றி எங்கள் அரசரிடம் பரிந்துரை செய்வேன். கொடுமையாக நடத்தினால், உங்களையும் எங்கள் நாட்டிற்கு அழைத்துச் சென்று கொள்ளிடத் தீவில் அடைத்து விடுவேன். கொள்ளிடத் தீவைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. முதலைகள் மனித இனத்திற்கு ஆவலாய் அங்கே காத்திருக்கும்!''



சங்கரத்தேவன் பயமுறுத்த விரும்பவில்லை. மிகவும் இயல்பாகவே கூறினான். அதைக் கேட்டு காவல் வீரன் நடுங்கினான். ஆனால் வெளியே புலப்படுத்திக் கொள்ளாமல், ''தம்பி, இதுவரை நானோ என் நண்பர்களோ ஏதாவது தொந்தரவு உனக்குத் தந்திருக்கிறோமா? கடுஞ்சொற்கள் ஏதாவது சொல்லியிருக்கிறோமா?'' என்று கூறியவன், தன் பயத்தை வெளிப்படுத்த விரும்பாமல், ''சோழ அரசராவது உதயகிரி கோட்டைக்கு வருவதாவது! வீண் கனவு காணாதே. நீ இந்தத் தீவில் இருப்பது உங்கள் அரசருக்குத் தெரிய வாய்ப்பில்லை. அமைதியாகக் காலத்தைக் கழித்துக் கொண்டு கிட நீ இங்கிருப்பதும் தெரியாது. நீ இங்கிருந்து தப்ப முடியாது'' என்று அச்சுறுத்துவது போல் கூறினான்.

சங்கரத்தேவன் ஏதும் பேசவில்லை. உணவு கொடுக்கக் காவலர்கள் வரும் போது புதிதாக அந்தச் சிறைக்கு வந்தவனைப் பற்றி வற்புறுத்திக் கேட்டான்.

''தம்பி அவனைப்பற்றி ஒன்றுமே அறிந்து கொள்ள முடியவில்லை. என்று கேட்டாலும் எப்படிக் கேட்டாலும் அவன் மறுமொழி கூறவில்லை'' என்று காவல் வீரன் கவலைப்பட்டான்.

''நான்குவித உபாயங்களைப் பயன்படுத்திப் பார்த்தீர்களா?''

''அவனிடம் பலிக்காது.''

''ஏன்?''

''அவன் ஓர் ஊமை'' என்று கூறிப் பெரிதாகச் சிரித்தார்கள்!

இதைக்கேட்ட சங்கரத்தேவன் ஒருகணம் திகைத்தான். ''ஊமையன்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

***

அன்று ஊமையனைச் சந்திக்கும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. ஊமையன் பரபரப்புடன் இருந்தான்.

சுனையில் இருவரும் ஒன்றாகக் குளிக்க அனுமதிக்கப்பட்டனர். அந்தச் சமயம் சங்கரத்தேவனும், ஊமையனும் மனம் விட்டும் பேசிக் கொண்டனர்.

சங்கரத்தேவன் நடந்தவற்றை விவரித்தான். அவன் கூறுவதை ஊமையன் புரிந்து கொண்டான். ஆனால், ஊமையன் குறிப்புகள் மூலம் சைகை மூலம் கூறியவற்றைப் புரிந்து கொள்ள சங்கரத்தேவனால் முடியவில்லை.

மணற்பரப்பில் எழுதிக்காட்டி விளக்கினான். ஊமையன் எழுதிக் கொண்டிருந்த போது காவலர்கள் அங்கு வந்து விட்டனர்.

மணலில் எழுதியவற்றை அழிப்பதற்குள் ஊமையனைக் காவல் வீரர்கள் பிடித்திழுத்துச் சென்றுவிட்டனர். எழுதியவற்றுள் அழிந்தது போக மீதியை அவன் படித்தான்.

''ஓகோ! கடலில் புயல் வீசி சேரநாட்டுக் கலம் மூழ்கியதா? கப்பல் தலைவனை ஊமையன் கொன்றுவிட்டானா? மூழ்கிய கப்பலிலிருந்து கடலில் தத்தளித்தவனைச் சேரநாட்டவர்கள் சிறைப்பிடித்தார்களா?'' இந்தச் செய்திகளை மணலில் ஊமையன் எழுதிக்காட்ட சங்கரத்தேவன் அறிந்தான்.

அவனுக்குப் பல செய்திகள் தெரியவந்தன. ஊமையனின் நாட்டுப்பற்றைப் புரிந்து கொண்டான். நடனப்பெண் ஒருத்தியும் கடலில் மூழ்கினாள் என்பதை சங்கரத்தேவன் அறிந்து அவள் கதி என்னவாகியது என்பதைத் தெரிந்து கொள்ளத் துடித்தான்.

ஊமையனோடு பேச வாய்ப்பு மீண்டும் எப்போது ஏற்படும், சுனையிலே குளிக்கும்போதா? சங்கரத்தேவன் பரபரப்படைந்தான். காவல் வீரர்களிடம் கெஞ்சியேனும் ஊமையனைச் சந்திக்கவேண்டும் என்று முடிவு செய்தான்.

தனக்கு உணவு கொண்டு வந்தவர்களிடம் நயமாகப் பேசினான். அவர்களும் சங்கரத்தேவனிடம் மிகவும் மரியாதையாகவும் அன்புடனும் பேச முயன்றார்கள். அவர்களுக்கு உள்ளூரப்பயம் ஏற்பட்டிருந்தது. சோழர்கள் படையெடுத்து வந்து உதயகிரியைக் கைப்பற்றினால் தங்கள் கதி என்ன ஆகுமோ என்ற அச்சம் அவர்களைச் சூழ்ந்தது. அதனால் சங்கரத்தேவனிடம் அன்புடன் பழகத் துடித்தாகள்.

''அண்ணன்மார்களே, தம்பிமார்களே!'' என்று சங்கரத்தேவன் பேச்சைத் தொடங்கினான்.

''என்ன தம்பி, என்ன வேண்டும் சொல்?'' என்று ஒரே குரலில் கேட்டார்கள்.

''ஓர் உதவி வேண்டும்'' சங்கரத்தேவன் குழைந்தான்.

''ஒன்றென்ன, ஒன்பது கேளு தம்பி'' என்று அவர்கள் நயமாகப் பேசியது கேட்டு சங்கரத்தேவனுக்கு வியப்பு ஏற்பட்டது.

''நான் கேட்பதைச் செய்வீர்களா?''

''ஆகா, கேள் தம்பி!''

''இங்கிருந்து தப்பிச் செல்ல வேண்டும்'' என்று சங்கரத்தேவன் குறும்புப் புன்னகையுடன் கேட்டான்.

அவர்கள் அதிர்ச்சியால் ''ஓ!'' என்று ஒரே குரலில் கூவி, ''எங்களுக்கு மரணதண்டனை வாங்கித்தா வேண்டுமென்று நினைக்கிறாயா? தம்பி



வேடிக்கையாகக் கேட்கிறாயா, நிஜமாகவா?'' என்று காவல்வீரன் ஒருவன் கேட்டான்.

''இல்லை, இல்லை. நான் தப்பிச் செல்ல என்றுமே முயலமாட்டேன். இந்த உதயகிரி கோட்டையும் நீங்கள் தரும் உணவும், உங்கள் அன்பும் என்னைப் பெரிதும் மயக்கி விட்டன...''

''அப்படியா... எங்கள் மீது உனக்குக் கோபமில்லையா?'' அவர்கள் கேட்டபோது சங்கரத்தேவன் குறும்புத்தனம் மிளிர நகைத்தான்.

''அண்ணன்மார்களே! தம்பிமார்களே! நான் ஏன் கோபங்கொள்ளப் போகிறேன், எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும், செய்வீர்களா?''

''ஆகா, சொல்லு தம்பி!''

''ஊமையனையும் என்னுடன் தங்கியிருக்குமாறு செய்யவேண்டும். எனக்குப் பொழுது போகவில்லை. இனி என் வாழ்நாள் முழுமையும் இந்தக் கோட்டையிலே கழிக்கப்போவது உறுதி. ஊமையனுக்கும் பொழுது போக வேண்டும்'' என்று சங்கரத்தேவன் கூறியபோது காவல் வீரர்கள் பெரிதாகச் சிரித்தனர்.

''தம்பி! நீ என்ன சொல்கிறாய்? ஊமையனுடன் நீ பேசுவாய், அவன் பேசுவானா? உன் வாய் தான் வலிக்கும். மேலும் அவன் பயங்கரமானவன் அவனுடன் சேர்ந்திருந்தால் கொன்று விடுவான்'' என்றான் ஒருவன்.

''அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியவன் நான்தான். ஊமையனை என்னுடன் தங்க வைத்தால் நான் என்றும் உங்களுக்குக் கடமைப்பட்டவனாயிருப்பேன். விடிவு ஒன்று வராமலாபோகும்; நல்லவிதமாக உங்களைக் கவனிப்பேன்!'' என்று சங்கரத்தேவன் உருக்கமாகப் பேசுபவன் போல் கூறினான்.

காவல் வீரர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''யோசித்துச் சொல்கிறோம்'' என்று கூறினர். பிறகு ''தம்பி, யோசித்துச் சொல்கிறோம் என்று சொல்வதற்காக வருத்தப்படாதே. கோட்டைத் தலைவரிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு, உன் கோரிக்கையை நிறைவேற்றுகிறோம்'' என்று கூறிச் சென்றனர்.

அன்று இரவு சங்கரத்தேவன் இருக்குமிடத்திற்கு ஊமையன் அழைத்து வரப்பட்டான்.

இரவு முழுமையும் அவர்கள் ஒன்றும் பேசவில்லை. இருளில் ஊமையனின் சைகை சங்கரத்தேவனுக்குப் புரியவில்லை.

பொழுது விடிந்தது. கதிரொளி அந்த அறையில் சூழத் தொடங்கியவுடன் சங்ரத்தேவனும் ஊமையனும் பேசிக் கொண்டனர்.

ஊமையன் உறுதியாகச் சொன்னான், இன்னும் இரண்டு நாட்களில் தப்பிச் செல்லப்போவதாக.

"ஐயோ! நீ தப்பிச் சென்று நான் பிடிபட்டால் என்னைக் கொன்று விடுவார்கள் என்று கவலையுடன் கூறினான் சங்கரத்தேவன்.

"வேறுவழியில்லை, நீங்கள் இங்கு இருங்கள் நீங்கள் இங்குச் சிறையிடப்பட்டிருப்பதை, தஞ்சைபுரிக்குச் சென்று தெரிவித்து, உங்கள் விடுதலைக்கு வழி செய்கிறேன்" என்றான்.

தப்பிச்செல்ல வாய்ப்பை எதிர்பார்த்திருந்தான் ஊமையன்.

சுனையில் நீராடச் சென்ற அன்று அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

## 46

நாகைப்பட்டினத்துத் துறையில் மீன் பிடிக்கும் கட்டுமரக்காரர்களும், படகோட்டிகளும் கலக்கத்துடன் காணப்பட்டார்கள். சூடாமணி விகாரத்துக் கருகே அவர்கள் ஒன்று கூடி தங்கள் தலைவரிடம் தாங்கள் அறிந்த செய்தியைத் தெரிவித்தார்கள்.

நாகைப்பட்டின நகர அதிகாரியும் அங்கிருந்தார். அவர் முகத்தில் கவலையும் அச்சமும் நிறைந்திருந்தன. மீனவர்கள் கூறியவற்றுள் உண்மை இருக்குமோ என்ற ஐயப்பாடும் அவரிடமிருந்தது.

இரண்டு காத தொலைவில் மரக்கலம் ஒன்றைக் கண்டதாகவும் அந்த மரக்கலத்தில் பனைமரச் சின்னம் கொண்ட கொடி பறந்து கொண்டிருந்தது என்று கட்டுமரம் ஓட்டுபவர் ஒருவர் தெரிவித்தார்.

"அது முதல் நாள் செய்தி. நான் கண்டபோது இரண்டு மரக்கலங்கள் காணப்பட்டன. அவற்றின் நடுவே புலிக்கொடி பறந்து கொண்டிருந்த கலமொன்று நின்று கொண்டிருந்தது" என்று மற்றொருவர் கூறினார்.

"புலிக்கொடி தாங்கிய கலம் சோழநாட்டினுடையது. ஆனால் அந்தக் கலத்தில் யாருமிருப்பதாகத் தெரியவில்லை" என்று வேறொருவர் சொன்னார்.

"அப்படியென்றால் சேரநாட்டுக் கலம் நங்கூரம் பாய்ச்சி நிற்பதாகக் கூறுங்கள்" என்று நகரத் தலைவர் கேட்டார்.

"எங்கள் வாழ்நாளில் இப்படியொரு சம்பவம் நடக்கவில்லை" என்று கவலையுடன் தெரிவித்தார் மற்றொரு படகோட்டி.

"என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் சூடாமணி விகாரத்துப் பௌத்த பிட்சு.

"சேரநாட்டுக் கலங்களில் பண்டங்களில்லை. நிறைய வீரர்கள் இருந்தார்கள்!" என்றார் கட்டுமரக்காரர் ஒருவர்.

"உனக்கு எப்படித் தெரியும்?"

"நான் கடலில் அதிகத் தொலைவு சென்று ட்டேன். நிறைய மீன்கள் கிடைத்தன. ஆசை என்னை விடவில்லை. மேலும் மேலும் மீன்பிடிக்க



அதிகத் தொலைவு சென்றேன். இரண்டு பெரும் படகுகள் என் படகுகளை மறித்தன. என் கட்டுமரத்தைக் கயிறு போட்டுப் பிணைத்து அந்தக் கப்பலுக்கு இட்டுச் சென்றனர். நூல் ஏணி மூலம் என்னைக் கலத்திற்குள் அழைத்துச் சென்றனர். கலத்திலுள்ளவர்களில் பலர் வேறு மொழி பேசினார்கள். சிலர் தமிழ் பேசினர். அவர்கள் பசியால் வாடுவது தெரிந்தது. என்னிடமுள்ள மீன்களைக் கவர்ந்து கொள்ளத் திட்டமிட்டிருந்தார்கள். நான் மறுப்புத் தெரிவித்தேன். பலனில்லை. என் கண் எதிரிலேயே என் கட்டுமரத்திலிருந்த மீன் கூடைகளைக் கவர்ந்தார்கள். எதிர்த்தால் மறுத்துப் பேசினால் நடுக்கடலில் கைகால்களைக் கட்டி வீசி விடுவதாக அச்சுறுத்தினார்கள். செத்தோம் பிழைத்தோம் என்று வந்துவிட்டேன். எனக்குத் தெரிந்தவரையில் நாளையோ, மறுநாளோ கலத்திலுள்ளவர்கள் படகுகளின் மூலம் நாகைப்பட்டினக் கரையை அடையலாம்" என்று கட்டுமரக்காரர் விவரித்தார்.

நாகை நகரத் தலைவருக்குக் கவலை ஏற்பட்டது. தஞ்சைபுரியிலிருந்து சேர நாட்டின் மீது படையெடுத்துச் சோழமன்னர் சென்றிருக்கும் இந்த வேளையில் கடல் பகுதி வழியே சோழநாட்டின் மீது படையெடுப்பா? வரலாற்றிலே எப்போதும் நிகழாத அதிசயமாக அந்தப் படையெடுப்பை அவர் கருதினார்.

"இந்தப் படையெடுப்பை எதிர்பாராமல் சோழர்ப்படைகள் அனைத்துமே சேர நாட்டை நோக்கிச் சென்றிருக்கின்றன. இப்போது என்ன செய்வது?" என்று நகரத் தலைவர் மற்ற அதிகாரிகளைப் பார்த்துக் கேட்டார்.

அமைதியாக அங்கு நடைபெறும் பேச்சுக்களைக் கேட்டவாறிருந்த சூடாமணி விகாரத்தைச் சேர்ந்த பிட்சு மெல்லத் தன் கருத்தைத் தெரிவித்தார்.

"பதற்றப்பட வேண்டாம். இளையபிராட்டியார் குந்தவை தேவியார் நேற்று இங்கு வந்திருக்கிறார், அவரைச் சந்தித்து இந்தச் செய்திகளைத் தெரிவிப்போம்" என்றார்.

தஞ்சைபுரியிலிருந்து சோழர்படை சேரநாட்டை நோக்கிச் சென்ற பிறகு இளையபிராட்டியார் தஞ்சைபுரியிலிருந்து அருகிலுள்ள சிவத்தலங்களைத் தரிசிக்கப் புறப்பட்டார். உடன் சமதியும் வந்தாள். தான் முன் நின்று எழுப்பிய நாகை புத்த விகாரத்தைக் காண விரும்பினாள். நாகப்பட்டினத்திற்கு அவர்கள் வந்தனர்.

அமைதியே உருவாய் அமர்ந்திருக்கும் புத்தபிரானின் எதிரே மண்டியிட்டு சோழநாட்டின் நலனுக்காகப் புத்தபிரானைத் துதித்தாள். சமதியும் அவ்வாறே கருணை வடிவமான புத்தரின் திருமுன் அமர்ந்து என்ன வேண்டினாள்?

அவள் நினைவுகள் சங்கரத் தேவனைச் சுற்றியே வந்தன. சென்ற சில நாள்களாக அவள் மனம் ஒரு நிலையிலில்லை. சேரநாட்டிற்குச் சென்ற தன் கணவர் என்ன ஆனார் என்பதை அறிய அவள் பல வழிகளில் முயன்றும்

இயலவில்லை. சேரநாட்டில் சிறைப்பட்டிருக்கிறார் என்பதை அறிந்த பிறகு அவள் மனம் ஒரு நிலையிலில்லை. இளையபிராட்டியைச் சந்திக்கும் போதெல்லாம் அவள், சங்கரத்தேவனைப் பற்றி வினவினாள்.

சங்கரத்தேவன் சோழநாட்டின் தூதனாகச் சென்றிருப்பதால் அவனைப் பற்றி அறிந்து கொள்வதில் சோழ அரசு பெருமுயற்சி எடுத்துக் கொண்டது என்றாலும் சங்கரத்தேவன் எங்கிருக்கிறான் என்ற தகவல் உடன் கிடைக்கவில்லை.

தஞ்சையினின்று புறப்பட்ட சோழநாட்டுப் படைகள் காவிரிக்கரையில் இரு பிரிவுகளாகப் பிரிந்த செய்தியை இளையபிராட்டி அறியவில்லை. ஒரு பிரிவு இளவல் மதுராந்தகன் தலைமையில் சேரநாட்டை நோக்கிச் சென்றது. மற்றொரு பிரிவு ராஜராஜன் தலைமையில் மதுரையை நோக்கிப் புறப்பட்டது. சில நாட்களுக்கு முன் சங்கரத்தேவனைப் பற்றிய செய்தி கிடைத்து விடும் என்ற நம்பிக்கையில் சுமதியைச் சமாதானப்படுத்தி, அவள் வேதனை மனநிலையை மாற்ற அவளையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு திருக்கோயில்களைத் தரிசிக்க இளையபிராட்டி புறப்பட்டாள்.

''சுமதி! கருணையே வடிவான புத்தர்பிரானிடம் உன்மனக் குறையைத் தெரிவித்து வேண்டிக் கொள்'' என்று கூறி, சுமதியின் முகத்தை வாஞ்சையுடன் நோக்கினாள்.

சுமதி புரிந்து கொண்டாள். வேதனை சூழ்ந்த நிலையிலும், இளையபிராட்டியின் உள்ளத்தைப் புரிந்து கொண்டதால் அவள் முகத்தில் நாணம் படர்ந்தது.

''என்ன வேண்டிக் கொண்டாய் சுமதி?'' என்று கேட்டாள் இளையபிராட்டி.

''சோழநாட்டின் நலனுக்காக வேண்டிக் கொண்டேன்.''

''அதுமட்டுமா?''

''நீங்கள் என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதை நான் அறிவேன் தேவி. சோழநாட்டின் நலன் என்றால் அவருடைய நலனும் அதில் அடக்கமில்லையா தேவி?'' - சுமதி கூறும்போது அவள் விழிகளில் நீர் தளும்பியது. அவர் என்று அவள் குறிப்பிட்டவர் சங்கரத்தேவன்.

இளையபிராட்டி இதழ்களில் கீற்றுப் புன்னகை மிளிர்ந்தாலும், சுமதியின் உள்ளத்தில் ஆழ்ந்திருக்கும் வேதனை புலப்படாமலில்லை.

''மேற்கிலிருந்து செய்தி ஏதும் வரவில்லையே. சேர அரசர் இப்படிச் செய்வார் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் சங்கரத்தேவன் மிகத் திறமைசாலி. எந்தத் தீவில் அவனைச் சிறை வைத்திருந்தாலும் அவன் தப்பி வந்து விடுவான்'' என்று இளையபிராட்டி சமாதானம் சொன்னாள். அதில் நம்பிக்கை நிறைந்திருந்தது.



சுமதியின் விழிகளிலிருந்து இரண்டு முத்துக்கள் உதிர்ந்தன. அவளை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்ட இளையபிராட்டி, ''கவலைப்படாதே சுமதி, சேரநாட்டின் மீது படை எடுத்துச் சென்றிருப்பவர்கள் சாதாரண மானவர்களல்லர். கம்பன் மணியனும், இளவரசர் மதுரனும் சென்றிருக்கிறார்கள். எனக்கு மட்டும் கவலையிராதா? இந்த நாட்டின் சக்ரவர்த்தியானாலும் ராஜராஜன் என் இளவல், சோழ சக்கரவர்த்தி, மதுரையை நோக்கிச் சென்றிருக்கிறார். அமரபுஜங்கன் தந்திரம் மிக்கவன். காடுகளில் மறைந்திருந்துத் தாக்கும் திறமை கைவரப்பெற்றவன்.''

''எந்த நொடியிலும் சோழர் படைகளுக்கு ஆபத்து ஏற்படலாம், அதுவே எனக்குக் கவலை'' என்று இளைய பிராட்டியாரும் வேதனை நிறைந்த குரலில் கூறினாள்.

இப்பொழுது சுமதி, இளையபிராட்டியாரைத் தேற்றும் படியாகிவிட்டது.

''வல்லவரையரும், அரசருடன் சென்றிருக்கிறார் அல்லவா?'' சுமதி கேட்டாள்.

''அவரைப் பற்றிக் கவலையில்லை, சுமதி! யாரைப் பற்றியும் கவலை யில்லை. இந்தச் சோழ நாட்டிற்கு ஆபத்து வந்திருக்கிறது. இந்த நாட்டு வணிகர்களைக் கடற்கொள்ளையர்கள் துன்புறுத்துகின்றனர். அயல்நாட்டு வாணிபம் நடைபெறவில்லை என்றால், உள்நாட்டில் பல தொல்லைகள் ஏற்படும். பஞ்ச காலத்தைப் போல் மக்களுக்குத் துன்பம் ஏற்படும். இளைய பிராட்டியின் குரல் தழுதழுத்தது.

''அதனால் தான் சோழநாட்டின் நலனைக் குறித்துப் புத்தபிரானிடம் வேண்டினேன்.''

சுமதியின் சொற்கள் இளையபிராட்டிக்குப் புத்துணர்வை அளித்தன. அந்தச் சூழ்நிலையை மெல்ல மாற்ற விரும்பிய இளையபிராட்டி, ''சுமதி வா காயாரோகணர் ஆலயம் சென்று நீலவிழி நாயகியையும் கண்டு வணங்குவோம் வா'' என்றழைத்தாள்.

அவர்கள் சூடாமணி விகாரத்தை விட்டு வெளியே வரும்போது, தலைமை பிட்சு சிலருடன் அங்கு வருவதைக் கண்டாள். சிறிது நின்றாள்.

பிட்சுவுக்கு வணக்கம் தெரிவித்த இளையபிராட்டி வந்தவர்கள் முகத்தில் கவலை நிறைந்திருப்பதை அறிந்தாள்.

பிட்சு அவர்களை அறிமுகப்படுத்த அவர்கள் நடந்த சம்பவங்களை விவரித்தனர். நாகைக் கடற்கரைக்கு வெகு தொலைவில் நிற்கும் சோ நாட்டுக் கலங்களைப் பற்றி அவர்கள் விவரிக்கும் போது இளையபிராட்டி அச்சமும் கவலையும் மிக அடைந்தாள். தஞ்சைபுரியில் ராஜராஜசோழ தேவர் இருந்திருந்தால் அவள் ஏன் கவலைப்படப் போகிறாள்?

நாகைப்பட்டினம் காவல் அதிகாரிகளை அழைத்து அவர்களிடம் இரகசியமாகக் கலந்தாலோசித்தாள்.

எதிர்பாராத நிலைக்கு உதவிட ஆயத்தமாயுள்ள வீரர்கள், சேரநாட்டுப் படையெடுப்பிற்கு உதவச் சென்று விட்ட செய்தி அறிந்த இளைய பிராட்டியின் கவலை பல மடங்காகியது.

"நங்கூரம் பாய்ச்சிக் கடலில் நிற்கும் சேரநாட்டுக் கலங்கள் மேலும் சில கப்பல்களை எதிர்பார்ப்பது போல் தோன்றுகிறது" என்று கட்டுமரம் ஓட்டியவன் கூறினான்.

சற்று யோசித்த இளையபிராட்டி, அவர்களை நோக்கி, "அச்சமும் கவலையும் விட்டுத் துணிவுடன் நாம் எந்தப் பிரச்சினையையும் எதிர்த்து நிற்போம். கடற்கரைப் பகுதியில் காவலிருங்கள். உங்கள் கட்டுமரமோ, படகுகளோ கடலுக்குள் செல்லவேண்டாம். அருகிலுள்ள குப்பங்களிலுள்ள இளைஞர்களையும், முதியவர்களையும் உடனே திரட்டுங்கள். முடிந்தவரை ஆயுதங்களைச் சேகரியுங்கள். நான் உங்களுடன் இருக்கிறேன். தஞ்சைபுரிக்கு நான் ஓர் செய்தி சொல்லி அனுப்புகிறேன். அதை எடுத்துச் செல்லத் தக்கவரை உடனே அனுப்புங்கள்" என்றாள்.

இளையபிராட்டியின் துணிவையும் அறிவாற்றலையும் விரைவில் முடிவெடுக்கும் ஆற்றலையும் கண்டுவியந்த சுமதி அடுத்து என்ன நடக்குமோ என்ற கவலையில் ஆழ்ந்தாள்.

## 47

மரக்கலத்திலிருந்து ஓர் உருவம் படகில் இறங்கியதையும் படகு கரையை நோக்கி வருவதையும், சங்கரத்தேவன் கண்டான். மலைக் கோட்டைக்கு மற்றொரு விருந்தினர் என்று கூறித் தனக்குத்தானே மெல்ல நகைத்துக் கொண்டான்.

இப்போது வாய்விட்டுப் பேசத் தொடங்கினான். தான் கற்ற தேவாரப் பாடல்களைப் பாடினான். ஏன் இப்படிக் கத்துகிறாய் என்று அவனை யாரும் கேட்க மாட்டார்கள். அவனைச் சிறை வைத்திருந்த மாடித்தளத்தில் அவன் என்ன தான் கூச்சலிட்டாலும் வந்து ஏன் என்று கேட்க ஆளில்லை.

கதவை இழுத்துப் பூட்டிச் சென்றால் பிறகு உணவளிக்க மட்டும் மூன்று நான்கு பேர் வருவார்கள். அவர்கள் ஒன்றும் பேசமாட்டார்கள். வாரம் ஒருமுறை அருகிலுள்ள சுனைக்குக் குளிக்க அழைத்துச் செல்வார்கள்.

அவனுக்கு அப்போது பலமான பாதுகாப்பு.



"தம்பிமார்களே, அண்ணன்மார்களே" என்று ஒருதரம் அவன் பலமுறை அவர்களை நோக்கி அழைத்தான். அவர்களுள் ஒருவன் சங்கரத்தேவனைப் பார்த்து, "எங்களுள் யார் தம்பிகள், யார் அண்ணன்கள்?" என்று கேட்டான்.

சங்கரத்தேவன் சிரித்தான். "ஏன் சிரிக்கிறாய்?" என்று மற்றொருவன் கேட்டான்.

"உங்கள் வயது எனக்குத் தெரியாது. என்னைவிடச் சிறியவர்களை நான் தம்பி என்று அழைக்கின்றேன், பெரியவர்கள் அண்ணன்மார்கள் தான். இதில் என்ன சந்தேகம்?" என்று கூறியவுடன் அவர்கள் கடுமையாக முகத்தை மாற்றிக் கொண்டனர்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது. பிறகு சங்கரத்தேவன் திடீரென ஓடத் தொடங்கினான். எதிர்பாராமல் சங்கரத்தேவன் ஓடுவதைக் கண்ட காவல் வீரர்கள் அவனைத் தொடர்ந்து ஓடி அவனைப் பிடித்துக் கொண்டனர்.

சங்கரத்தேவன் சிரித்தான். "அண்ணன் தம்பிமார்களே! இயற்கை உபாதைகளைத் தீர்மானித்துக் கொள்ளவும் விடமாட்டேன் என்கிறீர்கள், சற்று மறைவிலிருந்து வருகிறேன்" என்றான்.

அவர்களுக்கு வெட்கமாகிவிட்டது. "சரி, சரி நாங்கள் திரும்பி நின்று கொள்கிறோம். சீக்கிரம் முடித்து விட்டு வா" என்றனர்.

"இங்கிருந்துத் தப்பிச் செல்ல முயலாதீர்கள்" என்று எச்சரித்தார்கள்.

"சிறையில் அடைக்கப்பட்டவர்கள் தப்பிச் செல்ல ஆசைப்படாதவர்கள் உலகத்திலுண்டா? ஆனால் எனக்கு அந்த எண்ணமோ, ஆசையோ இல்லை" என்றான் சங்கரத்தேவன்.

"ஏன்?"

"திசை தெரியாத ஓரிடத்திலிருந்து தப்பி எங்கே ஓடுவது? பிறகு இங்கு உங்களிடம் தான் சிக்கிக் கொண்டு வந்தாக வேண்டும்." சங்கரத்தேவன் சொல்லிவிட்டுச் சற்று மௌனமாக இருந்தான்.

அவர்களுள் ஒருவன் சற்றுக் கடுமையான குரலில், "ஓ! அந்தப் பயமிருக்கிறதா? அப்படியென்றால் கவலையில்லை. இந்த உதயகிரிக் கோட்டையில் அடைபட்டவர்கள் தப்பிச் சென்ற வரலாறே இல்லை!" என்றான்.

"உயிரோடு மீண்டதுமில்லை என்றும் சொல்லி வை இந்தப் பிள்ளைக்கு" என்றான் அவர்களுள் வயதானவனொருவன்.

சங்கரத்தேவன் மெல்ல நகைத்தான்.

"அப்படியென்றால், மரணமடைந்தவர்கள் பலரைப் பார்த்திருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்" என்றான்.

"ஆமாம்."

"எமனுடைய பிரதிநிதிகளாக இங்கே வசிக்கிறீர்களே, உங்களுக்குக் குடும்பம் ஏதுமில்லையா?"

"குடும்பமா? குழந்தை குட்டி மனைவி வீடு என்ற தொல்லை இல்லாமல் நிம்மதியாக இருக்கிறோம்."

"அவர்கள் எல்லாம் சேர நாட்டிலிருக்கிறார்களா?"

"இதுவும் சேரநாடு தான் தம்பி. சேரநாட்டிற்கும், பாண்டிய நாட்டிற்கும் எல்லையாய் இந்தக் கோட்டை இருக்கிறது. இந்தக் கோட்டையைத் தங்களுக்குத் தந்துவிடுமாறு பாண்டியர்கள் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள்."

"ஏன் இப்போது கேட்பதில்லையா?"

"யார் இருக்கிறார்கள் கேட்பதற்கு? பாண்டிய வம்சமே பூண்டோடு அழிந்து விட்டதே."

"தம்பிமார்களே, அண்ணன்மார்களே, உங்களுக்கு உலகில் நடப்பவை ஏதும் தெரியாதா? சேர இளவரசியைப் பாண்டிய இளவரசன் கல்யாணம் செய்துகொண்டு விட்டான் என்பதும், பாண்டிய இளவரசனை மீண்டும் மதுரை அரியணையில் அமர்த்த உங்கள் அரசர் பெருமுயற்சி எடுத்து வருகிறார் என்பதும் உங்களுக்குத் தெரியாதா?"

"எங்களுக்கு எதற்கு அரசாங்க விவகாரம். எங்கள் அரசர் என்ன கட்டளையிடுகிறாரோ அதை நிறைவேற்றுவோம். வாரம் ஒருமுறை கப்பல் வரும். பெட்டிகளைக் கொண்டு இறக்குவார்கள். பிறகு எடுத்துச் செல்வார்கள். உன்னைப் போல யாராவது வருவார்கள். அப்போது தான் எங்களுக்கு அதிகவேலை."

சிறிது நேரம் கழித்து சங்கரத்தேவன் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். "தம்பிமார்களே, அண்ணன்மார்களே! வாரம் ஒருமுறை தான் குளிக்க அனுமதிக்கிறீர்கள்; இயற்கைக் கடனைக் கழிக்கவும் வாரம் ஒருமுறை என்றால்... சீக்கிரமாகவே நான் செத்துப் போயிடுவேன்" என்றான்.

அவர்கள் பரிதாபப்படுவார்கள் என்று நினைத்துச் சொன்னான். கல் நெஞ்சக்காரர்கள்!

"எங்களுக்கும் நல்லது; உனக்கும் நல்லது."

"எப்படி?"

"உதயகிரிக் கோட்டையில் அடைபட்டு அணுஅணுவாகச் சாவதைவிட ஒரேயடியாக மேலுலகம் போய்ச் சேர்ந்து விடலாம்.

"எனக்கு அது நல்லது. உங்களுக்கு எப்படி நல்லதாகும்?"

"அதுவா?" என்று கூறிச் சிரித்த அவன், "தம்பி, உன்னைக் கண்காணிப்பதே எங்களுக்கு இரவும் பகலுமாக வேலையாகிவிட்டது. நீ இல்லாதிருந்தால் நாங்கள் எங்கள் மனம்போன போக்குப்படி வாழ்வோம்.



கோட்டைக் கிழவனிடம் எங்களுள் ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் போது நாங்கள் அடுத்துள்ள கிராமத்திற்குச் சென்று மகிழ்ச்சியோடு இருந்து திரும்புவோம். குடும்பம் வாழ்க்கை என்று இல்லாத எங்களுக்கும் பொழுதுபோக வேண்டாமா?" என்று கூறிக் கண் சிமிட்டினார்கள். தொடர்ந்து "இப்போது பார், சில நாட்களாக நாங்கள் நரகத்தை அனுபவிக்கிறோம். எங்களைக் காணாமல் கள்ளுக்கடைக்காரன் வந்துவிட்டான். எங்களை மகிழ்விக்கும் காஞ்சனா ஓலை எழுதி அனுப்பி விட்டாள், ஏன் வரவில்லை என்று!"

"அடடா" என்று வருத்தப்படுவது போல் நடித்த சங்கரத்தேவன், "உல்லாசமாக நீங்கள் இருப்பதை நான் கெடுத்து விட்டேன். நானாக வரவில்லை, அண்ணன்மார்களே, தம்பிமார்களே, உங்கள் அரசர் ஆயுள் தண்டனை விதித்து என்னை இங்கே அனுப்பி விட்டார். நியாயமா அது நீங்களே கூறுங்கள். சோழ அரசரின் தூதனாக நான் வந்தேன். என்னை ஒற்றன் என்று முடிவு செய்து இங்கே அனுப்பிவிட்டார்கள். கால காலத்திற்கும் இங்கே இருக்கப் போகிறேனோ அல்லது, இறந்து மடியப் போகிறேனோ? ஊரில் என் அருமை மனைவியும் என்னைக் காணாது துடிதுடித்துப் போவாள்" என்றான்.

"உனக்கு எந்த ஊர்?"

"தஞ்சைபுரி."

"தஞ்சைபுரியா? மிக அழகான ஊர். மக்களும் நல்லவர்கள்."

"நீங்கள் அங்கே சென்றிருக்கிறீர்களா?"

"உம்; அதைப்பற்றி இப்போது என்ன? உன்னால் எங்களுக்குத் தொல்லை. தப்பி ஓடாமல் இரவும் பகலும் நாங்கள் பாதுகாக்க வேண்டும்.

"அண்ணன்மார்களே, தம்பிமார்களே! என்னை நம்புங்கள்; நான் தப்பி ஓடமாட்டேன். நான் எப்படித் தப்ப முடியும்? குளிக்க வரும்போது மட்டும் தானே? மற்ற வேளைகளில் உயரமாக கோட்டை மதிலின் மீதிருந்தும் குதிக்க முடியுமா?" என்றான்.

அவர்கள் சிரித்தார்கள். "தம்பி, மிகவும் கெட்டிக்காரன். சோழநாட்டைச் சேர்ந்தவனல்லவா! கோட்டை மதிலின் மீதிருந்து குதிக்கவும் வழி இருக்கிறது; ஆனால் நாங்கள் சொல்லமாட்டோம். குதிக்குமிடத்தில் கடல் மிகவும் ஆழமானது. பயங்கர மீன்கள் உண்டு. குதித்தால் மீனுக்கு இரையாக வேண்டியது தான். எலும்பைக் கரைத்துச் சடங்கு செய்ய துண்டு எலும்பு கூடக் கிடைக்காது. அது சரி, தம்பிக்குக் குழந்தைகள் உண்டா?" என்று கேட்டான்.

சங்கரத்தேவன் மெய்யாகவே கலங்கினான்.

''என் மனைவி கருவுற்றிருக்கிறாள்'' என்று சொல்லும் போது குரல் தழுதழுத்தது.

''ஐயோ'' பாவம் என்று குரல் கொடுத்தார்கள்.

''உனக்கு இருப்பதும் ஒன்று தான்; எங்களுக்கு இல்லாததும் ஒன்று தான்'' என்று கூறிச் சிரித்த அவர்கள், ''சரி சரி நேரமாகிறது குளித்து விட்டு வா'' என்றார்கள்.

இரண்டு தடவை சுனையில் குளிக்கும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. தப்பிச் செல்லும் எண்ணமே அவனுக்கு வரவில்லை. என்றாலும், எதிர்காலத்தைப் பற்றிய கவலை அவனை வந்து சூழ்ந்தது.

அறைக்குள்ளே கால் வலிக்க நடப்பதும், தனக்குத்தானே பேசிக் கொள்வதும், ஏணியின் மீது ஏறி நின்று, சாளரத்தின் வழியே கடற்கரையை நேரம் போவது தெரியாமல் நோக்கியவாறிருப்பதுமாகப் பொழுதைக் கழித்தான்.

## 48

சங்கரத் தேவனுடன் ஊமையன் நீராட வந்தபோது ஊமையன் முகத்தில் எந்தவிதச் சலனமுமில்லை. அவன் அதுபோல் அமைதியாக இருந்ததை, சங்கரத்தேவன் இதுவரையில் கண்டதில்லை.

''என்ன சிந்திக்கிறாய்?'' என்று சங்கரத்தேவன் ஊமையனைக் கேட்டான்.

ஊமையன் சங்கரத்தேவனையே சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீங்கள் எப்படியாவது தப்பியாக வேண்டும்'' என்று சைகை மூலம் ஊமையன் தெரிவித்தான்.

''எப்படி முடியும்? தப்ப முயன்றால் என் உடல் தான் மீதியாக இருக்கும்'' என்று கவலையுடன் தெரிவித்தான் சங்கரத்தேவன்.

உண்மை வீரனான தான் இவ்வாறு சொல்வது அவனுக்கே அவமானமாக இருந்தது. என்றாலும் உண்மை அதுதானே.

''என்ன கேட்கிறான் ஊமையன், சைகை மூலம்?'' என்று காவல் வீரர்கள் கேட்டனர்.

''பொழுது போகவில்லையாம். அதனால் கடலில் நீந்த விரும்புகிறான்'' என்றான் சங்கரத்தேவன்.

காவல் வீரர்கள் நகைத்தனர். ''கடலில் குளிக்க வேண்டுமா! ஓ அப்படியே தப்பிச் செல்லத் திட்டமிடுகிறான்'' என்று கூறிவிட்டு,



''சங்கரத்தேவா! ஊமையன் மிகப்பயங்கரமானவன் அவனைப் பற்றி உனக்குத் தெரியாது. கடல் கொள்ளைக்காரர்களையே ஏமாற்றியவன்'' என்று கூறினான் காவல் வீரன் ஒருவன்.

''கடல் கொள்ளைக்காரர்கள் சேரநாட்டிற்கு மிக வேண்டியவர்கள் தாமே? அவர்களை ஏமாற்றியதால் ஊமையன் மீது கோபமா? அதற்காகத் தண்டனையா?'' என்று சங்கரத்தேவன் கேட்டான்.

''கப்பல் தலைவனைக் கொலை செய்து விட்டான். சூறாவளிக் காற்றில் கப்பலும் கவிழ்ந்தது. ஊமையனின் நல்ல காலமோ பொல்லாத காலமோ, ஊமையன் கடற்கரையில் ஒதுக்கப்பட்டான், வசமாக அகப்பட்டுக் கொண்டான்.''

''இவ்வளவு செய்திகளும் உனக்கு எப்படித் தெரியும்?'' சங்கரத்தேவன் கேட்டான்.

''இந்த உதயகிரிக் கோட்டைக்கருகே கலங்கள் கட்டும் துறைமுகம் இருக்கிறது. அங்கு செய்திகள் உடனுக்குடன் வந்து சேரும்.''

''திருவஞ்சைக் களத்தருகேயும் கப்பல் கட்டும் தளம் ஒன்று இருக்கிறதே!'' சங்கரத்தேவன் கேட்டான்.

''அங்கு நீ சென்றிருக்கிறாயா?'' என்று காவல் வீரன் கேட்டான்.

''இல்லை, கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்று கூறிய சங்கரத்தேவன், ''அண்ணன்மார்களே, தம்பிமார்களே, கப்பல் கட்டுமிடத்திற்கு என்னை அழைத்துச் செல்லக்கூடாதா? எனக்கும் கப்பல் கட்டும் தொழிலில் சில நுணுக்கங்கள் தெரியும்'' என்றான்.

''ஹூம் - இந்த தீவுக் கோட்டையை விட்டு நீ எங்கும் நகரவே முடியாது. வீண் ஆசைகளை மனத்தில் வைத்துக் கொண்டு அவதிப்படாதே'' - கண்டிப்பாகக் கூறிவிட்டான்.

ஊமையனிடம், சங்கரத்தேவன் தெளிவாக சொல்லிவிட்டான், மலைக்கோட்டையினின்று தப்பிச் செல்ல முடியாது என்று. ஒருவிதமாகச் சிரித்தான் ஊமையன்.

''இங்கிருந்து சாக எனக்கு விருப்பமில்லை. அப்படியே நான் சாவதாக இருந்தாலும் உன்னைச் சாகவிடமாட்டேன்'' என்று சைகை மூலம் தெரிவித்தான்.

''உன் உயிரைவிட என் உயிர் மேலானதா?'' சங்கரத்தேவன் கேட்டான்.

''அதற்காகச் சொல்லவில்லை. சோழநாடு உன்னிடமிருந்து இன்னும் பல தொண்டுகளை எதிர்பார்க்கிறது. திக்குத் தெரியாத தீவில் வாடிச் சாவதை விட சோழநாட்டை எதிர்த்துப் போரிட வருபவர்களுடன் சமர் செய்து வெல்வது அல்லது செத்து மடிவது மேல்'' என்று ஊமையன் எழுதிக் காட்டினான்.

சங்கரத்தேவன் அவனை அணைத்துக் கொண்டான்.

"முன் பிறவியில் நாமிருவரும் சகோதரர்களாக இருந்திருப்போம்" என்றான்.

"முன்பிறவி என்ன, இந்தப் பிறவியிலும் நாம் அண்ணன், தம்பிகளே, சோழநாட்டில் பிறந்தவர்கள் சகோதரர் தாமே?" என்று எழுதும்போது இருவரும் உணர்ச்சிவசப்பட்டு ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர்.

"ஊமையா, உன்னால் எனக்கே புதுவிதச் சுறுசுறுப்பு உதித்துவிட்டது. என் மனைவி சுமதி எனக்காகக் காத்திருப்பாள்" என்றான் கண்கலங்க.

"எனக்காக என் சகோதரி காத்திருப்பாள்" என்றான் ஊமையன்.

ஊமையனின் குடும்ப விபரங்களை அதுவரை கேட்டறியாத சங்கரத்தேவன் அவன் வாழ்க்கைக் கதையை கேட்டறிய ஆசைப்பட்டான்.

ஆனால் அன்று ஊமையன் கதை சொல்லும் நிலையிலில்லை. பரபரப்பு மிகுந்து காணப்பட்டான். அவன் முடிவொன்று எடுத்து விட்டான். அதை நிறைவேற்ற வேண்டும் என்ற துடிப்புடனிருந்தான். பிறகு அதிகம் பேசவில்லை.

சுனையில் குளித்துக் கொண்டிருக்கும் போது அவன் சைகை மூலம் ஏதோ கூறினான். சங்கரத்தேவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கரையருகே வந்தவுடன் தரையில் எழுதிக் காட்டினான்.

"சங்கரத்தேவா, எந்தக் கணமும் இங்கிருந்து தப்பிச் செல்ல ஆயத்தமாக இரு. அப்படி உன்னால் முடியவில்லை என்றால் உன்னை நான் இங்கிருந்து விடுவிக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும். நீ இங்கு சிறைப்பட்டிருக்கும் செய்தியைச் சோழஅரசிடம் தெரிவிக்க வேண்டும். அதற்காகவாவது நான் தப்பிச் சென்றாக வேண்டும் என்றான்.

சங்கரத்தேவன் மெல்லச் சிரித்தான். "அதெப்படி முடியும்? நீ தப்பிச் சென்ற பிறகல்லவா, எனக்கு விடுதலை தேடித்தருவது?" என்றான்.

ஊமையன் தலையை அசைத்தான். சுனையிலிருந்து வெளியேறி, ஈரத்துணிகளைக் காய வைத்துக் கொண்டிருந்த போது, வீரர்கள் மரத்தடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். கண் இமைக்கும் நேரத்தில், ஊமையன் விரைந்து ஓடினான். அருகே பாறை ஒன்று கடலை நோக்கி நீண்டிருந்தது. அங்கே கடல் மிக ஆழமாக இருந்தது. அங்கிருந்து குதித்தவர்கள் உயிரோடு மீள முடியாது என்று காவல் வீரர்கள் முன்பே சொல்லியிருந்தது சங்கரத்தேவனுக்கு நினைவு வந்தது.

ஊமயன் தாவி ஓடினான். பாறைகளைக் கடந்தான். மரணப் பாறையின் முனைக்குச் சென்று கடலை நோக்கிப் பாய்ந்து குதித்தான்.



தன்னையறியாமலேயே சங்கரத்தேவன் 'ஓ-ஓ' வென்று கூவினான். காவல் வீரர்கள் ஓடிவந்தனர். மரணப்பாறைக்குச் சென்று எட்டிப்பார்க்க ஒருவருக்கும் துணிவு இல்லை.

சங்கரத்தேவனை வற்புறுத்திக் கேட்டனர். அன்றிலிருந்து சங்கரத்தேவனுக்குக் கட்டுப்பாடு அதிகமாகியது.

சங்கரத்தேவன் கடுமையாகச் சொன்னான். "நானும் ஒருநாள் அதுபோல் குதித்துத் தப்பி ஓடிவிடுவேன். அல்லது வேறு வழிகள் தெரியும். அந்த முறையில் நான் இங்கிருந்து தப்பி விடுவேன்"

அண்ணன்மார்கள் தம்பிமார்கள் அஞ்சி நடுங்கினர். சங்கரத்தேவன் சிறையிலிருக்கிறானா, அல்லது காவல் வீரர்கள் சிறையிலிருக்கிறார்களா என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

***

**ஊ**மையன் கடலில் குதித்த இடம் மிக ஆழமானது. குதித்த வேகத்தில் கடலுக்கு அடியில் சென்று, மீண்டும் மேலே வருவதற்குத் தத்தளித்து விட்டான். கடல் மட்டத்திற்கு வந்தபோது மயக்கநிலை தான். கடல் அலைகள் அவனை இப்படியும் அப்படியும் புரட்டிச் சென்றன.

கண்விழித்தபோது மரக்கலம் ஒன்றிலிருப்பதை உணர்ந்தான். அவனைச் சூழ்ந்திருந்தவர்கள் தமிழ் தான் பேசினார்கள். சேரநாட்டுக் கலம் என்பதை அவன் புரிந்து கொண்டான். மயக்கம் தெளிந்து, சுற்றுச்சூழலை உணரும் நிலையிலிருந்தாலும், மயக்கம் தெளியாதவன்போல் பாசாங்கு செய்தான். "இவனை எங்கோ பார்த்திருக்கிறேன்" என்று சூழ்ந்து நின்றவர்களில் ஒருவன் தெரிவித்தது ஊமையன் செவிகளில் மிகத்தெளிவாக வீழ்ந்தது.

அந்தச் சேரநாட்டுக் கலம், சோழநாட்டை நோக்கிச் செல்வதை ஊமையன் அறிந்தான். நீண்ட நேரம் அவனால் அதுபோல் படுத்திருக்க முடியவில்லை. மயக்க நிலையிலிருந்து ஊமையன் தெளிந்துவிட்டான் என்றறிந்தவுடன் அவனுக்கு உபசாரங்கள் பல நடைபெற்றன.

பேச இயலாதவன் என்பதை அறிந்தவுடன் அவர்களுள் ஒருவன் ஊமையனைப் புரிந்து கொண்டான். ஏதோ பெரிய உண்மையை அறிந்த விட்டவன் போல் குதித்தான்.

ஊமையனைப் பற்றித் தான் அறிந்தவற்றைக் கூறினான். "கடைசியாக, இவனைக் கொள்ளைக்காரர்கள் கலத்தில் ஏற்றி விட்டார்கள். இவனுடன் அழகிய நடனப்பெண்ணும் அந்த மரக்கலத்தில் இருந்தாள்" என்று அவன் விவரித்தான்.

"அழகிய பெண்ணா?" என்று அங்கிருந்தவர்கள் ஆவலுடன் கூவினார்கள்.

''ஆமாம்; கப்பல் தலைவனுக்கு அந்தப் பெண்ணின் மீது ஆசை. மேலும் இரண்டு பேர்களுக்கும் அவள் மீது கண் தான்'' என்று அவன் சொல்லும்போது மற்றவர்கள், ''இருக்காதா, இருக்காதா - இரண்டு மூன்று பேர்கள் என்று கூறுவது மிகக் குறைவு தான்'' என்றார்கள்.

ஊமையன் பல்லைக் கடித்துக் கொண்டான். ''அந்தப் பெண் எங்கே?'' என்று கேட்கத் துடித்தான்.

''ஊமையா, நீ சென்ற கலம் புயலில் சிக்கியதாமே, நீ மட்டும் தப்பினாயா? மற்றவர்கள் கதி என்ன'' என்று கேட்டனர்.

உண்மையில் அவனுக்கும் நடந்த சம்பவம் பற்றித் தெரியாது.

''அழகிய பெண் இருந்தாள் என்று சொல்கிறானே இவன். அந்தப் பெண் தப்பினாளா? அவள் எங்கே?'' என்று கேட்டான் ஒருவன்.

''அந்தப் பெண் எங்கே?'' என்று ஊமையனும் கூவினான்.

ஆம்; அவன் கூவினான். அவனிடமிருந்து பலத்த குரல் வெளிப்பட்டது.

அங்கிருந்தவர்கள் வியப்புற்றனர். இதுவரையில் பேசத்தெரியாதவன் என்று அனைவரும் நினைத்திருக்க ஊமையன் தெளிவாகப் பேசியது கண்டு அதிர்ச்சியடைந்தனர் என்றும் சொல்லலாம்.

ஊமையனுக்கு வியப்பு ஏற்பட்டது. சற்று மௌனமாகயிருந்து பிறகு பேசினான். தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

'ஓ' வென்று கூவினான்.

''அந்தப் பெண் என்ன ஆனாள்?'' என்று உரத்தக் குரலில் கேட்டான்.

கடலில் வேகமாகக் குதித்தபோது, அவன் தலையின் பின்பகுதியில் நீரின் அழுத்தத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி அவனுக்குப் பேசும் சக்தியை அளித்திருக்க வேண்டும்.

ஊமையன் திடீரென மௌனமானான். அவன் சற்றுச் சிந்தித்தான். இந்தக் கலத்திலுள்ளவர்களுடன் கடுமையாக நடந்து கொள்ளாமல், அமைதியாகப் பேசவேண்டும் சமாதானமுறையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

## 49

ஆனைமலைக் காடு முன்பு எப்போதையும் விட பரபரப்பு மிகுந்து காணப்பட்டது. நிமிர்ந்த மார்புடனும், உறுதியான கொள்கையுடனும் பாண்டிய வீரர்கள், எந்தக் கணத்திலும் தஞ்சையை நோக்கிப் புறப்பட ஆயத்தமாக



இருந்தார்கள். அவர்கள் இளைஞர்கள். நாட்டுப்பற்றைத் தவிர வேறு ஒன்றுமே அவர்கள் அறியமாட்டார்கள். தலைமை வகிப்பவர்களின் கட்டளைக்கு அடிபணிவதைத் தவிர அவர்களுக்கு வேறு ஒன்றிலும் கவனமில்லை. அவர்கள் தாயைவிடத் தங்கள் தாய்த் திருநாட்டைப் பெரிதும் மதிப்பவர்கள்.

இளம் போர் வீரர்களுக்குத் போர் பயிற்சி மிகச் சிறந்த முறையில் அளிக்கப்பட்டிருந்தது. அவர்கள் உறங்கும் நேரம் மிகக் குறைவு தான். அவர்கள் சில வேளைகளில் மனம்விட்டுப் பாடுவார்கள். அவை பிரிந்து வந்த தங்கள் காதலியைப் பற்றிய வர்ணனைகள் நிறைந்ததாயிருக்கும். உணர்ச்சி மிகுதியால் ஆடியவாறு பாடுவார்கள். அவர்களுள் ஒருவனான மதிவாணன்,

''சோமா, நீ வர்ணித்துப் பாடுவது உன் முறைப்பெண்ணையா?'' தன் நண்பனைப் பார்த்துக் கண் சிமிட்டிக் கேட்டான்.

''உனக்கு எப்படித் தெரியும் மதிவாணா?'' என்று திகைப்புடன் கேட்டான் சோமன். ''எனக்காகக் காத்திரு. இனியவளே எடுத்தது முடித்துத் திரும்பிடுவேன்'' என்று பாடுகிறாயே, முறைப் பெண் தான் அவ்வாறு காலவரையின்றிக் காத்திருப்பாள்'' என்று மதிவாணன் கேட்டு சோமன் முகத்தைக் கூர்ந்து நோக்கினான்.

அவனுக்கும் அதுபோல் காதலியை வர்ணித்துப் பாடக் குரல் வளமில்லை. கவிதை பாடவும் வராது. அதனால் கவிதை பாடுபவர்களின் காதல் அனுபவங்களை அறிவதன் மூலம் மன அமைதியை அடைவான்.

கவிதை பாடிய சோமன் மெல்லச் சிரித்தான். விழிகளை மூடிக் கொண்டான்.

''அவளிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளும்போது விரைவில் திரும்பி வருவதாகச் சொன்னேன். அதைக் கேட்டவுடன் அவள் முகம் வாடியது. போர்க்களம் செல்பவனுக்கு மகிழ்ச்சியுடன் விடை தரவேண்டாமா?' என்று அவள் கன்னங்களைத் தட்டினேன்.

''உங்களைப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு கணமும் ஒரு யுகம் போல் எனக்குத் தோன்றுகிறது. ஒரு யுகம் என்ன பல யுகங்களைக் கழிக்க வேண்டுமோ என்ற அச்சம் இப்போதே என்னைப் பிடித்து வாட்டுகிறது என்று அவள் கூறி என் தோள்மீது சாய்ந்து விம்மினாள்'' என்றான்.

''விழிகளின் வேதனையையும் மீறி நீ வந்திருக்கிறாய். உன் முறைப்பெண் என்பதால் அவள் எவ்வளவு நாட்களானாலும் காத்திருப்பாள்... ஹூம்...'' என்று பெருமூச்சு விட்டான் மதிவாணன்.

தன் நண்பன் வேதனையடைகிறான் என்றறிந்த வீர இளைஞன் அவன் தோள்களைத் தொட்டு ''உனக்கும் அப்படித்தானா?'' என்று கேட்டான் சோமன்.

மதிவாணன் தலையை ஆட்டினான். ''எங்கள் காதல் அப்பொழுது தான் அரும்பத் தொடங்கியது. அதற்குள் பிரிவு என்றால்?'' என்று வேதனையுடன் கூறினான்.

அதனாலென்ன விரைவில் நாம் ஊர் திரும்புவோம் - பிறகு கால காலத்திற்கு மகிழ்ச்சிக் கடலில் அமிழ வேண்டியது தானே!'' என்று கூறி நண்பனைத் தேற்ற முயன்றான்.

''இந்தப் போர் எவ்வளவு காலம் நடக்குமென்று தெரியவில்லை. நமக்கு நாடு தான் முக்கியம். காதல் பிறகு தான். அப்படித்தானே?'' என்று கேட்டான் மதிவாணன்.

''நம் அரசர் அமரபுஜங்கர் அருமைக் காதல் மனைவி சேர இளவரசியை விட்டுப் பிரிந்து இங்கே காட்டில் வாழ்கிறார் என்றால் நாம் எம்மாத்திரம்!'' என்று தானும் சமாதானமடைந்து நண்பனையும் சமாதானப்படுத்தி, பிறகு மெல்லிய குரலில், ''போர் இன்னும் பல மாதங்களுக்கு நீடிக்கும் என்று தோன்றுகிறது. நம் அருமைக் காதலியர்களை நாம் சந்திக்க வெகு காலமாகலாம்'' என்றான்.

சோமன் திடுக்கிட்டு, ''போர் முடிய பல மாதங்களாகும் என்று எந்தக் காரணம் கொண்டு சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''தலைவிக்கும் நமது அரசருக்கும் இப்பொழுது கருத்து வேற்றுமை மிக அதிகமாகி வருகிறது.''

''அதனால்...?''

''கடல் மூலம் சோழநாட்டைத் தாக்கும் திட்டத்தை நம் அரசர் ஏற்கவில்லை. படை வீரர்களை இருபிரிவாகப் பிரிப்பது தலைவியின் திட்டம்.''

''அதனால்...''

''இங்கே ஆனைமலைக் காட்டிலுள்ள நம்மைப் போன்ற இளைஞர்கள் தாம் இருபிரிவுகளாகப் பிரிந்தாக வேண்டும்.''

''இரு பிரிவுகளானால் படைபலம் போதுமா?''

''போதாது தான். அதற்கு எந்தவிதமான திட்டங்கள் அரசர் கொண்டிருக்கிறார் என்பது தெரியவில்லை.''

''நேருக்கு நேர் மோதப் போதுமான எண்ணிக்கையில் படை வீரர்களில்லை. அதனால் மறைந்திருந்து தாக்கத் திட்டமிட்டிருக்கலாம்.''

''அவ்வாறு மறைந்துத் தாக்குதல் நடத்தினால் குறிப்பிட்ட காலத்திற்குள் போர் முடிவடையாது என்பதைத் தான் குறிப்பிட்டேன்.''

இளைஞர்கள் இருவரும் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்கள். ''நீ என்ன நினைக்கிறாய் சோமா?'' என்றான் மதிவாணன். ''மதுரையை மீட்கப் போவது தான், நம் முயற்சியாய் இருக்கவேண்டும். தஞ்சை மீது படையெடுத்துச் சென்று வெல்வது நம் நோக்கமன்று. நம் பலத்தைச் சிதற விடுவது சரியன்று.

''அரசர் அமரபுஜங்கனிடம் நம் கருத்தை எடுத்துச் சொல்வோம். நம் தோழர்களிடமும் கருத்துக் கேட்போம்'' என்றான் மதிவாணன்.



சோமனையும், மதிவாணனையும் சுற்றி வீர இளைஞர்கள் சூழ்ந்திருந்தனர். சோமனும், மதிவாணனும் படையெடுப்பைப் பற்றி விளக்கிக் கூறினார்கள்.

மதுரையை மீட்டு, நமது அரசரை அரியணையில் அமர வைப்பது தான் நம் நோக்கமாக இருக்கவேண்டும். தஞ்சையைக் கைப்பற்ற நாம் முற்படக்கூடாது என்ற கருத்திற்கு ஆதரவாகவும் எதிர்த்தும் கருத்துகள் பேசப்பட்டன.

தஞ்சையைத் தாக்கிச் சோழர்களின் படை பலத்தை அழித்தால் தான மதுரையை நாம் மீட்க முடியும் என்ற கருத்து சிலரால் பேசப்பட்டது.

''மதுரையை நோக்கிச் சோழர்படைகள் புறப்பட்டு விட்டன என்ற செய்தி தெரியுமா?'' என்று வீர இளைஞன் கேட்டான்.

''அந்தப் படைகளைத் தடுத்து நிறுத்துவது இப்போது நம் முக்கிய கடமை.''

''இதுவரை இந்தக் கானகத்தில் தக்க பயிற்சி பெற்றது இப்போது நான் பயன் தரப்போகிறது.''

''சோழர் படைகளைத் தடுத்து நிறுத்த நாம் இங்கே பயிற்சி பெறவில்லை. மதுரையை மீட்கவே நாம் தியாகங்கள் புரிய ஆயத்தமாக இருக்கிறோம்.''

''இரண்டுக்கும் என்ன வேற்றுமை?''

''தடுத்து நிறுத்துவதால் அரியணையை அடைய முடியும்... இங்கே நமது திட்டத்தில் தொய்வு ஏற்படுகிறது.''

''இல்லை - இல்லை - தலைவியின் திட்டப்படி தஞ்சையைக் கைப்பற்றுகிறோம். தடுத்து நிறுத்த முயலும் சோழர் படைகளை வெல்கிறோம். அதே போது கடல்வழியே சேரர் படைகள் வருகின்றன. தலைவியின் திட்டத்தில் ராஜதந்திரம் இருக்கிறது.''

''கடல் வழியா?'' பல குரல்கள் வியப்புடன் கேட்டன.

''ஆம்; இடுக்கிப் பிடி!''

அங்குள்ளவர்கள் மனம்விட்டுக் காரசாரமாகக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டிருந்தபோது சோமன் அழுத்தந் திருத்தமாகக் கூறினான். ''இல்லை.... இல்லை நாம் மதுரையை நோக்கிப் படைகளுடன் உடனே புறப்படவேண்டும். மதுரையை மீட்டு அரசரை அரியணையில் அமர வைக்க வேண்டும் அதுதான் நம் குறிக்கோள்.''

அழுத்தந்திருத்தமாக சோமன் பேசியதைக் கேட்டு அனைவரும் அவன் கூறுவதைக் கூர்ந்து கவனிக்கலாயினர்.

''நாம் இரு நாட்களில் மதுரையை மீட்டு விடலாம். பிறகு நம்மை நோக்கி வரும் சோழர் படைகள் மதுரையை மீண்டும் மீட்க மதுரைக்

கோட்டையைச் சூழ்ந்து கொள்ளும். நம் சக்தி முழுமையையும் செலுத்தி சோழர்களை முறியடிப்போம். தஞ்சையை நோக்கித் தோல்வியுற்று ஓடும் சோழர் படைகளை நாம் தொடர்ந்து துரத்திச் செல்வோம். தலைவியின் திட்டப்படி கடல் வழியே படைகள் வரக்கூடுமானால் அவர்களும் தஞ்சையை நோக்கி விரைந்து வருவர். தஞ்சை நம் வசம் வந்துவிடும். அமரபுஜங்கன் தஞ்சை கொண்ட பாண்டியராகிவிடுவார். தஞ்சைக் காவலராக அரியணையில் அமர்ந்து பாண்டிய சோழ நாட்டு அரசாக ஒளி வீசித்திகழ்வார்'' என்று உணர்ச்சி மிகுதியுடன் சொல்லிக் கொண்டே போகும் போது பாண்டிய வீர இளைஞர்கள் 'பாண்டிய மன்னர் வாழ்க! அமரபுஜங்க பாண்டிய மன்னர் வாழ்க' என்று வாழ்த்தொலி எழுப்பினர்.

வாழ்த்தொலியைத் தொடர்ந்து அங்கே பரபரப்பு ஏற்பட்டது. அமரபுஜங்கன், சற்று முன்பே அங்கு வந்து நின்று வீர இளைஞர்கள் விவாதித்துக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

உணர்ச்சி வயப்பட்டுப் பேசிய சோமனை அவர் அருகழைத்து, அவனைப் பற்றிக் கேட்டறிந்தார்.

தனியே அழைத்துச் சென்று, சோமன் தெரிவித்த கருத்துக்குப் பாராட்டுத் தெரிவித்து, ''மதுரையை நோக்கிச் செல்வதா? தஞ்சையை நோக்கிச் செல்வதா என்ற கொள்கையை வகுக்க வேண்டியது தங்கள் கடமை. வீர இளைஞர்கள் நாம் எடுக்கும் முடிவை நிறைவேற்ற வேண்டும். கட்டளையை நிறைவேற்ற வேண்டும். தனிக் கருத்தை வெளிப்படையாக விவாதிப்பதால் கருத்து ஒற்றுமையைக் குலைக்கும்: எதிரிகளை வெல்ல பலம் மட்டும் போதாது. ஒற்றுமையும் வேண்டும். நீ அவசரப்பட்டு விட்டாய்'' என்று அமரபுஜங்கன் கூறுவதற்குள் சோமன் குறுக்கிட்டு, ''அரசே! உங்களுடைய கொள்கையைத் தான் நான் வற்புறுத்தினேன்'' என்றான்.

''ஓர் வீரன், போர்க்களத்திற்குச் செல்ல ஆயத்தமாக உள்ள வீரன், கடமையுடன் கட்டுப்பாடும் உடையவனாக இருக்க வேண்டும். இதுபோன்று குறுக்கிட்டுப் பேசுவது பெரும் தவறு... அதனால்.''

''அரசே...'' என்று சோமன் கூறுவதற்குள், ''யாரங்கே, இவனை மற்றவர்களிடமிருந்து பிரித்துக் காவலில் வையுங்கள்'' என்று கட்டளையிட்டான். கூடியிருந்த வீர இளைஞர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

தலைவியைச் சந்தித்தபோது, ''உன் முடிவைப் பாராட்டுகிறேன். சோமனுடைய பேச்சைப் பாராட்டி, அவனுக்குப் பரிசு ஏதாவது தந்து விடுவாயோ என நினைத்தேன். நம்மிருவரிடையே இருக்கும் கருத்து வேற்றுமையை, படை வீரர்கள் விவாதிக்கக் கூடாது. பயன்படுத்தவும் கூடாது. இந்த வேளையில் தான் ஒற்றுமை, கட்டுப்பாடு மிகவும் முக்கியம்'' என்று கூறினாள்.



அமரபுஜங்கன் ஏதும் பேசவில்லை, தலைவியை அவன் நேருக்கு நேர் பார்க்க விரும்பவில்லை.

அதுசமயம் சில வீரர்கள் விரைந்து ஓடிவந்து வணங்கி நின்றனர். அவர்கள் வெகு தொலைவிலிருந்து ஓடி வருவதால் அவர்கள் மூச்சுத் திணற சொற்கள் உடனே வராமல் தடுமாறியவாறு, ''அரசே! சோழர்படைகள் வந்து கொண்டிருக்கின்றன'' என்றனர்.

தலைவியும், அமரபுஜங்கனும் ஒருவருக்கொருவர் இப்போது விழிகளால் பேசிக் கொண்டனர்.

''உம், மேலே சொல்லுங்கள்'' என்பது போல் தலைவி அவர்களை நோக்கிச் சைகை செய்தாள்.

''புலிக்கொடி பிடித்த படைவீரர்கள் காவிரிக் கரையைத் தாண்டி மதுரைப் பாதையில் வந்து கொண்டிருக்கின்றனர்'' என்றனர்.

''வஞ்சி நகர் நோக்கி அவர்கள் செல்வதாகத் தகவல் வந்ததே'' என்று தலைவி கேட்டாள்.

''இரண்டு நாட்களுக்கு முன்பு சோழர்ப்படைகளின் ஒரு பிரிவினர் சேரநாட்டை நோக்கிச் சென்றனர்'' என்று வீரர்கள் கூறினர்.

''சேர நாட்டிற்கு அந்தச் செய்தியைத் தெரிவிக்க நம் ஒற்றர் படைகளிடம் சொல்லி விட்டீர்களா?'' தலைவியின் இந்தக் கேள்விக்கு அவர்கள் மறுமொழி கூறாது தயங்கினர்.

அமரபுஜங்கனே மறுமொழி சொன்னான். ''நாம் ஏன் தெரிவிக்க வேண்டும் அம்மா? சேரநாட்டு ஒற்றர்கள் அறிந்திருப்பார்கள்.''

''தவறு செய்துவிட்டாய். சேரநாட்டு ஒற்றர்களுக்கு இந்தச் செய்தி தெரியாது நாம் அறிவித்திருக்க வேண்டும்.''

''வஞ்சியினின்று சேரர் படைகள் நமக்கு உதவ வருகின்றன. வழியிலேயே சோழர்படைகளை அவர்கள் சந்தித்து விடுவார்கள்'' என்றான் அமரபுஜங்கன்.

''இல்லை... இல்லை அவர்கள் வரும் வழி வேறு. சோழர்படைகள் செல்லும் வழி வேறு. தவறு செய்துவிட்டாய் அமரபுஜங்கா'' என்று மீண்டும் தலைவி கூறவும், அமரபுஜங்கன் முகம் சிவந்தது. ஒற்றர்படை வீரர்கள் எதிரே தலைவி தன்னை குறை கூறியது அவனுக்கு வருத்தத்தை அளித்தது.

''சரி, இப்போது நம் படைகளுக்கு உடனே கட்டளையிடுவோமா - சோழர் படைகளைத் தடுத்து நிறுத்த?'' அமரபுஜங்கன் கேட்டான்.

''வேண்டாம். சோழர்படைகள் ஆனைமலைக் காட்டை நோக்கி வரவில்லை. அவர்களும் சேரநாட்டின் கடற்பகுதியை நோக்கிச் செல்கிறார்கள்'' என்றாள் தலைவி.

அமரபுஜங்கன், "இல்லை இல்லை நீங்கள் சொல்வது சரியல்ல" என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான்.

"சேரநாட்டை நோக்கிச் சோழர் படைகள் செல்லவில்லை. மதுரையை நோக்கித்தான் வருகின்றன. நாம் உடனே தடுத்து நிறுத்த வேண்டும். இனியும் தாமதிக்கக் கூடாது" என்று உறுதியாகச் சொன்னான் அமரபுஜங்கன்.

தலைவியின் முகத்தில் கடுமை தெரிந்தது.

"அமரபுஜங்கா, மதுரையை நோக்கிப் படையெடுத்துச் செல்வது சோழர்களின் திட்டமென்றால் படைகளுக்கு இராஜராஜன் தலைமை வகித்து வரமாட்டான்" என்றாள்.

"இராஜராஜன் தலைமை வகிக்கிறாரா?" என்று வியப்புடன் கேட்டான் அமரபுஜங்கன்.

"ஆம்" என்று அழுத்தமாகக் கூறினாள் தலைவி.

அமரபுஜங்கன் இரு கைகளையும் கொட்டி "அப்படியென்றால், நல்ல தருணம் இது. இராஜராஜனை உயிருடன் நான் சிறை பிடிக்கிறேன்." என்று கூறி தலைவியின் மறுமொழியை எதிர்பாராமல் அங்கிருந்து விரைந்தான்.

பாண்டிய வீரர்கள் வாளை உயர்த்தி அணிவகுத்துப் புறப்பட ஆயத்தமானார்கள்.

## 50

**நா**கைப்பட்டினத்தை ஒட்டிய பகுதிகளில் இரண்டு நாள்களாகக் கடுமழை பெய்தது. அதற்காக அந்த நகர மக்கள் சிறிதும் கவலைப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதத்தில் பெரும் மழையும் புயலும் இடியும் மின்னலுமாக நாகப்பட்டினம் கதிகலங்கும். நகர மக்கள் மழையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனால் புயல் என்றால் தான் அவர்களுக்கு அச்சம். மரங்கள் சாயும். வீட்டுக் கூரைகள் எல்லாம் பறக்கும். வாய் பேசமுடியாத உயிரினங்கள் புயலில் சிக்குண்டு தவிக்கும். பயிர்கள் அழிந்து போகும். கடலிலே கலம் ஓட்டி மீன் பிடிக்கச் சென்றவர்களின் கதியை எண்ணிக் கரையிலே மக்கள் துயரவிழியுடன் காத்திருப்பார்கள். குலதெய்வங்களை வேண்டுவார்கள். நல்ல செய்தி வாராதா என்று எதிர்பார்ப்புடன் இருப்பார்கள்.

கதிரவனின் உதயம் கண்ட பிறகு தான் அவர்களுக்கு உயிரே வரும். கடற்கரை ஓரமாகக் கட்டுமரங்கள் ஒதுங்குவதை எதிர்பார்த்து அவர்கள் இருப்பார்கள். உயிரற்ற, சடலங்கள் கரையில் ஒதுக்கப்படும்பொழுது எழும் ஓலம் வானை எட்டும்.



அன்று மழை மட்டுமே பெய்தது. சூடாமணி விகாரத்தின் அருகே உள்ள ராஜமாளிகையில் தங்கியிருந்த குந்தவை பிராட்டிக்கு இருப்புக் கொள்ளவில்லை. தவித்தாள். தஞ்சையிலிருந்து செய்தியை எதிர்பார்த்து அவள் காத்திருந்தாள். கடல் நடுவே பகை அரசனின் கலங்கள் வந்திருப்பதையும் சோழநாட்டுக் கலம் அந்தக் கலங்களிடையே சிக்குண்டுத் தவிப்பதையும் அறிந்த பிறகு உதவியை எதிர்பார்த்து தக்கவரைத் தஞ்சைக்கு அனுப்பியிருந்தார்கள். தஞ்சையைத் தூதுவர் அடைவதற்கு முன்பாகவே நாகைப்பகுதியில் திடீரென வானம் கருத்துப் பெரும் இடியிடித்து மழை சோவெனக் கொட்டத் தொடங்கியது. மழை உடனே நின்று விடும் என்று நாகப்பட்டினத்து மக்கள் நினைத்தது போல் தான் இளையபிராட்டியும் நினைத்தார்கள். ஆனால் ஒரு பகல், இரவு என்று மழை தொடர்ந்தவுடன் இளையபிராட்டிக்குக் கவலை ஏற்பட்டது. பெரும் பிரளயம் போல் ஏதாவது நேர்ந்து விடுமோ என்று அவள் அஞ்சினாள். ஒருவிதத்தில் மழை பெய்ததும் நன்மைக்கே என்று நாகைப்பட்டினத்து அதிகாரிகளும் மற்றவர்களும் தெரிவித்தனர். அந்தக் கடும் மழையிலும் அவர்கள் சிறிது நேரத்திற்கு ஒருமுறை இளையபிராட்டியைச் சந்தித்துச் செய்தியைத் தெரிவித்தும், மற்ற செய்திகளைக் கேட்டு அறிந்த வண்ணமும் இருந்தார்கள். மழை விட்டது.

இளையபிராட்டி தங்கியிருந்த மாளிகையின் வெளியே பரபரப்பு ஏற்பட்டது. சிலர் மயங்கிய நிலையிலிருந்த ஒருவரைச் சுமந்து வந்தனர். கடற்கரையில் அந்த உருவம் ஒதுக்கப்பட்டிருந்தது. மயங்கிய நிலையில் அது காணப்பட்டது. உடனடியாக இளையபிராட்டி மருத்துவரை அழைத்து வரச் செய்தார். மயக்கம் தெளிந்த பிறகு அந்த உருவம் மெல்ல கண்விழித்து இளையபிராட்டியை அடையாளம் தெரிந்து கொண்டு எழுந்த உட்கார முயன்றது. பேச முடியவில்லை. அந்த உருவம் வேறு யாருமன்று ஊமையன் தான்.

ஊமையனை அங்குள்ளவர்களால் அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. மீன் பிடிக்கச் சென்றவருள் ஒருவராக அவர் இருக்க முடியாது பிறகு அவர் யார்? ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தனர். அவர்கள் பேசுவது ஊமையனுக்குப் புரிந்தது. உடனடியாக அவனால் பேச முடியவில்லை. மிகவும் களைத்திருந்தான். சுவரில் சாய்ந்து கொண்டு கண்ணை மூடிக் கொண்டான். அவனுக்குச் சற்று ஓய்வளித்து விட்டு அங்கிருந்து இளையபிராட்டி வெளியில் வந்து இவரை எங்கேயோ நான் பார்த்திருக்கிறேன்" என்றாள். நாகப்பட்டினத்து வாசியாகவும் அவர் தெரியவில்லை. அவர்கள் ஆலோசித்துக் கொண்டிருந்தபொழுது குதிரை வீரர்கள் அங்கு வந்தனர். அவர்களிடையே வல்லவரையர் வந்தியதேவன் இருந்தான். இளையபிராட்டிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

"செய்தி கிடைத்து வந்துவிட்டீர்களா?" என்று ஆவலுடன் ஒரு வார்த்தை தான் கேட்டாள். வல்லவரையர் வந்தியதேவன் ஊமையனை

அடையாளம் கண்டு விட்டார். ஊமையனுக்கு இப்பொழுது களைப்பு நீங்கியது. ''நல்ல வேளையாக புயல் வந்ததோ சோழநாடு பிழைத்ததோ!'' என்று மட்டும் சொன்னான். மற்ற செய்திகளை அவனிடம் அவர்கள் கேட்டறிந்தார்கள். சேரநாட்டுக் கலத்தில் ஊமையனை ஏற்றி வந்திருக்கிறார்கள். வழியே சோழர்கலம் ஒன்றைச் சந்தித்து அதை மடக்கிச் சிறைப்படுத்தி நாகப்பட்டினத்திற்கு அருகே அழைத்து வந்திருக்கிறார்கள். சேரநாட்டுக் கலங்கள் இரண்டிலும் ஏராளமான வீரர்கள் இருக்கிறார்கள் என்பதை ஊமையன் தெரிந்து கொண்டான்.

ஊமையனால் இப்பொழுது நன்றாகப் பேச முடிந்ததைக் கண்ட வல்லவரையர் மிகவும் வியப்படைந்தார். அவனிடம் முழுச் செய்தியையும் கேட்டறிவதற்கு முன்பாக சேரநாட்டுக் கலத்திலிருந்த வீரர்கள் கடற்கரை நோக்கி வருவதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்று கேட்டார். ஊமையன் சொன்னான்: ''இரண்டு படகுகளைப் பெறுவதற்காக நாகைக் கடற்கரைக்கு அவர்கள் இரகசியமாக வீரர்களை அனுப்பி இருக்கிறார்கள் இங்கு வந்துவிட்டுத் திரும்பினார்களா என்று தெரியவில்லை. பத்துப் படகுகளாவது தங்களுக்குத் தேவை என்று கலத்தில் இருந்த கலபதி தெரிவித்தான். ஒவ்வொரு படகின் மூலம் இரவு வேளையில் போர் வீரர்களைக் கலத்திலிருந்து கரைக்கு அனுப்புவது என்பது அவனுடைய முடிவு. சோழநாட்டுக் கலத்தில் உள்ளவர்களை அவர்கள் சிறைப்பிடித்து வைத்திருக்கிறார்கள். உணவு பற்றாக்குறை தான் அவர்களை மிகவும் வாட்டியது. அதனால் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருப்பவர்களை அச்சுறுத்தி அவர்களைப் பிடித்து அவர்களின் வலையில் கிடைத்த மீன்களை எல்லாம் கலத்திற்கு எடுத்து சென்றார்கள். குடிப்பதற்கு நல்ல தண்ணீர் அவர்களிடம் இல்லை. குடிநீர் இல்லாமல் அவர்கள் தவிக்கிறார்கள்.

''அவர்கள் இரண்டு திட்டங்களைத் தங்களிடையே விவாதித்தனர். இரவுக்கிரவாக படகுகள் நாகைப்பட்டினக் கரையை அடைந்து ஏராளமான குடிநீரை முதலில் கொண்டு வருவது. பிறகு மறுநாள் இரவு படகிலிருந்து கடற்கரையில் இறங்கி நாகைப்பட்டினத்தை நோக்கி வீரர்களுடன் முன்னேறி பிறகு மிக வேகமாகத் தஞ்சையை அடைவது என்று அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.''

இந்தச் செய்தியைக் கேட்ட வந்தியத்தேவன் மெல்ல புன்முறுவல் பூத்தார். ''சேரர்கள் மிகத் திட்டமிட்டுச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு இங்கிருந்து செய்தி அவ்வப்பொழுது கிடைத்துக் கொண்டிருக்கிறது. தஞ்சையில் இருந்து ராஜராஜனும் இளவல் மதுராந்தகனும் இரண்டு அணிகளாகச் சேரநாட்டின் மீது படையெடுத்துச் சென்றிருப்பதால் தஞ்சையில் போதுமான பாதுகாவல் இல்லை என்று அவர்கள் நினைத்திருக்கின்றார்கள். அதனால் தான் துணிவுடன் கடல்மூலம் போர்வீரர்களை அழைத்துக் கொண்டு



தஞ்சையைத் தாக்கலாம் என்று வந்திருக்கிறார்கள்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்தவர்களை எல்லாம் சற்று விலகி இருந்தபோது ஊமையனிடம் சில செய்திகளைக் கேட்டறிய அவனிடம் பேச்சுக் கொடுத்தார்.

இப்போது ஊமையன் நன்றாகக களைப்பு நீங்கித் தேறிவிட்டான். தெளிவாகப் பேசினான். அவன் நடந்த கதைகளை விவரிக்கலானான்.

உதயகிரி கோட்டையில் அவனைச் சிறைப்பிடித்து வைத்திருந்ததையும், சங்கரத்தேவன் அங்குத் தங்கி இருந்ததையும் தான் கடலில் குதித்தோடித் தப்பி வந்ததையும் அவன் தெரிவித்தான். இதைக் கேட்டு வந்தியத்தேவன் மிகவும் கவலைப்பட்டார். ''சங்கரத்தேவனை உதயகிரிக் கோட்டையிலே அடைத்து வைத்து இருக்கிறார்கள். அவன் எங்கு சிறைப்பட்டு இருக்கிறான் என்று தெரியாமல் நாங்கள் திகைத்துக் கொண்டிருந்தோம். நமது ஒற்றர் படையினராலும் அறிய முடியவில்லை. திருவஞ்சைக் களத்திலோ சேரநாட்டுக் கடற்கரையைத் தாண்டி நெடுந்தூரத் தீவிலோ தான் சங்கரத்தேவன் சிறை வைக்கப்பட்டு இருக்கிறான் என்று நாங்கள் நினைத்துக் கொண்டு இருந்தோம். இப்போது நீங்கள் கூறிய செய்தி முக்கியமானது. உடனே அவனை மீட்பதற்காக நாம் புறப்பட வேண்டும்'' என்றார்.

நாகைக் கடற்கரை அருகே நங்கூரமிட்டுப் படையெடுக்க வாய்ப்பை எதிர்நோக்கி இருந்த சேரநாட்டுக் கலங்களைப் பற்றிப் பேச்சு வந்தது. அடுத்த புயலில் சேரநாட்டுக் கலங்கள் கடலிலே வெகு தூரத்திற்குத் தள்ளிச் செல்லப்பட்டு அவை கவிழ்ந்து விட்டன என்ற செய்தியை அங்கு வந்தவர்கள் சொன்னார்கள் என்றாலும் நாகைப்பட்டினத்திற்கு அருகே சிறுபடைகளை நிறுத்தி வைப்பதற்குத் தக்க ஏற்பாடு செய்துவிட்டு வந்தியத்தேவன் ஊமையனுடன் புறப்பட்டார்.

சுமதிக்குச் செய்தியை அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் மேலும் இருந்தது. அவள் தயங்கித் தயங்கி நிற்பதைப் பார்த்த வந்தியத்தேவன், ''சுமதி கவலைப்படாதே உன்னுடைய அன்பிற்குரியவன் இருப்பிடத்தை நாங்கள் அறிந்து கொண்டுவிட்டோம். மிக விரைவில் சங்கரத்தேவனை மீட்டுத் தஞ்சையை அடைவோம்'' என்று உறுதி கொடுத்தார்.

இளையபிராட்டிப் பக்கம் திரும்பி, ''தேவி! சுமதிக்கு மனக்குறையும் அதிர்ச்சியும் ஏற்படலாம். பார்த்துக் கொள்ளுங்கள். அவளுக்கு உற்சாகம் ஊட்டுங்கள். ஆறுதல் கூற வேண்டியது உன் பொறுப்பு'' என்று கூறியவுடன் இளையபிராட்டி திரும்ப அவரிடம், ''சுமதி மிகவும் தைரியம் உடையவள். தன்னுடைய கணவருக்கு எதும் நேராது என்ற உறுதி அவளிடம் இருக்கிறது. ஆனால் எனக்குத்தான் அவள் தைரியம் ஊட்ட வேண்டும். இப்போது சேரநாட்டிலே சிறை வைக்கப்பட்டு இருக்கும் சங்கரத்தேவனை தேடிச் செல்லும் நீங்கள் வெற்றியுடன் திரும்பி வரவேண்டும் என்று பிரார்த்திக்கவும்

கவலையில்லாமல் இருக்கவும் எனக்குத் தான் சுமதி ஆறுதல் சொல்ல வேண்டும்'' என்று கூறியபோது அங்கு நகைப்பொலி எழுந்தது.

வந்தியத்தேவன் ஊமையனை அழைத்துக் கொண்டு நடந்த கதைகளையெல்லாம் பேசியவாறு குதிரையில் சென்றார். உதயகிரியை அடைவதற்கான வழிமார்க்கங்களை எல்லாம் ஊமையன் விவரித்தான்.

''இடையில் நாம் எப்படியும் நமது அரசரைச் சந்திக்க நேரலாம். நாம் அந்தப் படைகளுடன் சேர்ந்து உதயகிரியை நோக்கிச் செல்லுவோம்'' என்று ஊமையனிடம் வல்லவரையர் தெரிவித்தார். நடுவழியில் ஊமையனிடம், ''பாதுகாப்பு மிகுந்த அந்தக் கோட்டையினின்று உன்னால் எப்படித் தப்ப முடிந்தது?'' என்று கேட்டார்.

அவன் விவரித்தான்.

''சங்கரத்தேவனும் நானும் சுனையில் நீராடுவதற்குச் சென்று இருந்தோம். உங்களுக்குத் தெரியும் நான் வாய்பேச முடியாத ஊமையனாக இருந்தேன் என்று. சிறுவயது முதல் என்னுடைய கருத்துகளைச் சைகை மூலம் தெரிவித்து வந்தேன். எல்லோரும் என்னை ஊமையன் என்றே அழைப்பார்கள். ஆனால் என் தாயார் சொல்லுவார்: ''பிறந்த சில ஆண்டுகள் வரை நன்றாகப் பேசிக் கொண்டு இருந்தான். பிறகு ஏற்பட்ட கடும் நோயால் அவன் பேசும் சக்தியை இழந்து விட்டான்'' என்று. உங்கள் ஆதரவால் நான் சோழநாட்டில் பணியாற்றும் நல்ல பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். பிறகு கடல் கொள்ளையரிடம் சிக்கினேன். சேரநாட்டிற்குச் சென்றேன். உதயகிரி கோட்டையில் சங்கரத்தேவனுடன் நீராடச் சென்ற போது ஒரு கடலை நோக்கி நீண்டிருக்கும் ஒரு பெரும் பாறையினின்று கீழே குதித்துச் சென்றால் யாராலும் தடுக்க முடியாது என்று கேட்டறிந்து கொண்டேன். மிகப் பயங்கரமான இடம் அது. அங்கு மேலிருந்துக் கீழே குதிப்பவர்கள் உயிர் தப்பியது இல்லை. இருந்தாலும் சோழநாட்டைக் காப்பாற்ற வேண்டும்; சங்கரத்தேவனைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் சங்கரத்தேவன் இருப்பிடத்தைச் சோழ அரசரிடம் தெரிவிக்க வேண்டும் என்ற ஒரு வேகப் பரபரப்பாலும் நான் அங்கிருந்துக் குதித்தேன். குதித்த வேகத்தில் மயக்கமடைந்தேன். கண் விழித்தபோது என்னை ஓர் கப்பலிலேயே கிடத்தியிருந்தார்கள்.

அந்தக் கலம் நாகப்பட்டினத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது என்பதைப் பிறகு நான் அறிந்தேன். பேசும் சக்தி வந்தவுடன் எனக்கு ஏற்பட்ட உற்சாகமும், உடலிலே மும்முடங்கு பலமும் எப்படியாவது சங்கரத்தேவனையும் சோழநாட்டையும் ஆபத்திலிருந்துக் காப்பாற்றி விடவேண்டும் என்ற உறுதியும் ஏற்பட்டன. எவ்வளவு நாள்கள் பயணம் செல்ல வேண்டுமோ எனக்கே தெரியாது! பல சூரிய அஸ்தமனங்களை எல்லாம் கண்டேன். நாகப்பட்டினம் அவ்வளவு தொலைவிலிருக்கிறதா என்ற ஒரு கவலையும் எனக்கு ஏற்பட்டது.



இப்படி சொல்லிக் கொண்டு இருக்கும்போது வந்தியத்தேவன் கேட்டார் ''சேரநாட்டிலிருந்து கப்பல்கள் ஈழத்தை சுற்றித்தான் வரவேண்டியிருக்கும் அதனால் தான் அவ்வளவு நாட்கள் ஆகின்றன. கடலினின்று வேற்றரசர்களும் கடல் கொள்ளைக்காரர்களும் சோழநாட்டை எளிதில் தாக்க முடியாத ஒரு அரண்போன்று நம்முடைய கடற்கரை அமைந்திருக்கிறது'' என்று கூறினார். வந்தியத்தேவனும் ஊமையனும் விரைவாகப் பயணம் செய்தார்கள். நடுநடுவே கிராமங்களிலுள்ள சத்திரங்களில் தங்கினார்கள். சோழர் படைகள் மதுரையை நோக்கிச் சென்றிருக்கின்றனவா அல்லது சேரநாட்டை நோக்கிச் சென்றிருக்கின்றனவா என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை.

வழியே கிராமம் ஒன்றிலிருந்த வயதானவர் சொன்னார்: ''நேற்று முன்தினம் சோழர்படைகள் இந்தக் கிராமம் வழியாகச் சென்றன. நான் ராஜராஜ சோழரைப் பார்த்தேன். கண்குளிர அவருடைய தோற்றத்தைக் கண்டேன். நான் அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கி அவருக்கு நல்வாழ்த்து கூறினேன்'' என்றார்.

அந்த முதியவருடைய நாட்டுப்பற்றும் இன்னும் சோழநாட்டிற்குப் பெருமளவிற்கு உதவவேண்டும் என்ற ஆர்வமும் வந்தியத்தேவனை மிகவும் கவர்ந்தன.

சோழர்களுடைய படைகள் இங்கே அண்மையில் தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்.

மறுநாள் காலைப்பொழுதைக் கடந்து ஒரு கிராமத்தை அடையும்போது சோழர்களுடைய படைகள் அங்கே தங்கியிருப்பதைக் கண்டார் வந்தியத்தேவன்.

## 51

சங்கரத்தேவனுக்கு இப்போது பாதுகாவல் கடுமையாகியது. ஊமையன் தப்பிப் போய்விட்ட பிறகு இரண்டு நாள்கள் உதயகிரிக் கோட்டையில் பயங்கர அமைதி நிலவியது. இந்தச் செய்தியைச் சேரமன்னரிடம் தெரிவிப்பதற்காக சேரநாட்டுத் தலைநகருக்கு உதயகிரி கோட்டையின் காவலாளிகள் விரைந்து சென்றனர். அங்கே சேர அரசரைச் சந்திக்க முடியாமல் அவர்கள் திரும்பிவிட்டார்கள். வீரர்கள் திரும்பி வந்த பிறகு சங்கரத்தேவனைக் காவலர்கள் துன்புறுத்தத் தொடங்கினார்கள். அவனை வெளியே அனுப்புவதில்லை. அந்த அறைக்குள்ளேயே சிறை வைத்திருந்தனர். காலைக் கடன்களைக் கழிக்க வேறு ஓர் அறைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே அவனுக்கு மட்கலயம் தரப்பட்டது. சோறு போடும் நேரத்தில் அவனுடன் காவலர்கள் முகம் கொடுத்துப் பேசவில்லை.

''உனக்குத் தெரியாமல் அந்த ஊமையன் எப்படித் தப்பிப் போயிருப்பான்'' என்று அவர்கள் அவனை அடிக்கடி கேட்டார்கள்.

ஒருநாள் கடுமையாக சங்கரத்தேவன் சொல்லிவிட்டான்; ''எனக்குத் தெரிந்திருந்தால் நானும் அவனுடன் சேர்ந்து தப்பிப் போயிருக்கமாட்டேனா?'' என்று. அதைக் கேட்டு அவர்கள் நகைத்தனர்.

''உனக்கு நீந்தத் தெரியாது! அதனால் நீ தப்பிப்போகவில்லை ஆனால் ஊமையன் பொல்லாதவன். எல்லா வித்தைகளையும் கற்று வைத்திருக்கிறான். அவனை நீ முன்பே அறிவாயா?'' என்று வற்புறுத்திப் பலமுறை கேட்டார்கள்.

ஒருநாள் சங்கரத்தேவன் மிகக் கோபமாக, ''தெரியாது! தெரியாது! அவனை யாரென்று எனக்குத் தெரியாது. அவன் ஊமையன். அவனுடன் நான் பேசுவதென்றால் எழுதித்தான் காட்டவேண்டும். எழுத இங்கே எந்த வசதியுமில்லை. மணல் தரையில் எழுதுவதென்றால் நீங்களும் உடனிருக்கிறீர்களே, எப்படி முடியும்? எனக்கு ஜாடை செய்யத் தெரியாது'' என்று கடுமையாகச் சொல்லிவிட்டான். இருந்தாலும் அவர்கள் அதை நம்பவில்லை.

ஒருநாள் அவர்கள் பரபரப்பாக அவனிடம் ஓடி வந்தார்கள்: சங்கரத்தேவனை நோக்கி ''நீ வெளியில் சென்று பல நாட்களாகின்றன அல்லவா?'' என்று கேட்டார்கள்.

சங்கரத்தேவன் மறுமொழி கூறாமல் 'ஆம்' என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தான். அவன் சோர்வுற்றிருந்தான். உடல் மெலிந்து போய் இருந்தது. இனி சோழநாடு திரும்பிச் சென்று உற்றார் உறவினரைச் சந்திக்க முடியுமா? என்ற கவலை அவனுக்கு ஏற்பட்டது. அவை எல்லாவற்றையும் விட சோழநாட்டிற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் என்ற கவலை அவனுக்கு அதிகமாயிருந்தது. தான் சரியான முறையில் தன் பணியை நிறைவேற்ற வில்லையோ என்று அவனுக்குத் தோன்றியது. சில சமயம் தேம்பித் தேம்பி அழுவான். சில சமயம் தனக்குத் தானே புலம்பிக் கொள்வான். சில சமயம் வாய்விட்டுக் கத்துவான்.

அப்படி அவன் ஒருநாள் கதறிக் கொணடு இருக்கும் சமயத்தில் தான் வீரர்கள் கதவைத் திறந்து கொண்டு உணவுப் பாத்திரங்களுடன் வந்தார்கள். அவன் புலம்பி ஓயும் வரையில் இருந்துவிட்டு அவனருகே வந்து வாஞ்சையுடன் அவன்தோள்களைப் பிடித்து உட்கார வைத்து, ''சங்கரத்தேவா! நீ அழுகிறாய் போலிருக்கிறதே!'' என்று கேட்டார்கள்.

சங்கரத்தேவனுக்கு துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. அவன் வீரன். வீரன் அழக்கூடாது. ஆனால் 'அறிவு குறைவினால் பெரிய தவறு செய்து இவர்களிடம் சிக்கிவிட்டோம்!' என்று வருத்தப்பட்டுக் கொண்டான். ஊமையன் உடனிருந்திருந்தால் அவனுக்கு எந்தவித மனக்கவலையும்



ஏற்பட்டிருக்காது. அவன் தப்பிச் சென்றுவிட்டான். தப்பிச் சென்று சோழநாட்டை அடைந்தானா? இல்லையா என்பது அவனுக்குத் தெரிய நியாயமில்லை. அவர்களிடம் கேட்டுப் பார்ப்போமா?'' என்று தன்னைச் சிறிது தேற்றிக் கொண்டு, ''நான் அழவில்லையே'' என்று புன்சிரிப்பை வரவழைத்துக் கொள்ள முயன்றான், அவர்கள் சிரித்தனர் ''இவ்வளவு நேரம் நீ புலம்பினாய்! என்னவெல்லாமோ சொல்லிச் சொல்லிப் புலம்பினாய்! 'சுமதி! உன்னை நான் எப்போது பார்ப்பேன்' என்று நீ வாய்விட்டுப் புலமபினாய்! யாரப்பா அது சுமதி? உன்னுடைய அன்பிற்குரியவளா? நாங்கள் எல்லோரும் எங்கள் வீடு வாசலைத் துறந்தும், மறந்தும் இத்தீவிலே உன்னைப் போலவே சிறைவாசம் செய்து கொண்டிருக்கும் போது உனக்கென்ன கஷ்டம்?'' என்று அவர்கள் கேட்டார்கள்.

சங்கரத்தேவன் அவர்களைக் கோபத்துடன் நோக்கினான். ''நீங்களும் நானும் ஒன்றாகிவிட முடியுமா? நீங்கள் இந்தத் தீவில் இருந்தாலும் சுதந்திரப் பறவைகள். என்னால் இந்தத் தீவை விட்டுச் செல்ல முடியுமா? கடல் அலையைக் கூட ரசிக்க முடியாது. நீங்கள் சிறிது நாட்களுக்கு முன்பு உங்கள் நாட்டுத் தலைநகருக்குப் போய் வந்தீர்கள்! என்னைப் பற்றி உங்கள் அரசரிடம் குறை சொல்வதற்காகவும் இன்னும் அதிகமான தண்டனை வாங்கித் தருவதற்காகவும் சென்று வந்தீர்கள் அப்படித்தானே?'' என்று கேட்டான்.

அவர்கள் தலையசைத்தார்கள். ''எங்கள் தலை போகாமலிருப்பதற்கு நாங்கள் தலைநகருக்குச் சென்றோம். இந்தத் தீவினின்று இதுவரை எவரும் தப்பிச் சென்றதில்லை. ஊமையனை நாங்கள் தப்பிச் செல்ல விட்டுவிட்டோ மென்றால் அதனுடைய விளைவு பெரியதாக இருக்குமே. அதற்கு முன்பே அரசரிடம் தெரிவித்து விடுவோம் என்று தான் நாங்கள் சென்றோம். ஆனால் அங்கு அரசர் இல்லை'' என்றனர்.

சங்கரத்தேவன் மேலும் அவர்களிடமிருந்து செய்திகளை அறிவதற்காக தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''ஐயா! உங்களரசர் எங்கே சென்றிருக்கிறார்? சோழநாட்டின் மீது படையெடுத்துச் சென்று விட்டாரா? அங்கிருந்து ஏதாவது செய்தி கிடைத்திருக்கிறதா?'' என்று கேட்டான்.

''சோழநாடு இத்துடன் அழிந்தது என்று வைத்துக் கொள். இனி சோழநாடு சோழநாடு என்று பேசாதே!'' என்று வீரர்களுள் ஒருவன் கடுமையாகக் கூறிவிட்டு, ''சேர அரசரின் படைகள் இந்த நேரத்தில் சோழநாட்டின் எல்லையை அடைந்திருக்கும். கடல் பகுதியினின்று புறப்பட்ட சோழ கடற்படைகள் நாகைப்பட்டினம் துறைமுகம் வந்தடைந்திருக்கும். சோழ அரசர் சிறைபட்டிருப்பார். அந்தச் செய்தியை எதிர்பார்த்திருக்கிறோம். இன்னும் சில நாள்களில் இதே தீவில் வேண்டுமானால் நீ காத்திருந்து பார். இன்னும் சில நாள்களில் இங்கே கோட்டையில் மாபெரும் சக்கரவர்த்தி ராஜராஜனை இங்கே வைக்கப்போவதை'' என்று கூறினான்.

சங்கரத்தேவன் ஒரு கணம் துணுக்குற்றான். இவர்கள் சொல்வது உண்மையாக இருக்குமா? சேருடைய படைகள் இருமுனைத் தாக்குதலுக்காகச் சென்று இருக்குமா? என்று கவலைப்பட்டான். அதைத் தொடர்ந்து அவர்கள் சொன்ன செய்தி மேலும் அவனுடைய கவலையை அதிகப்படுத்தியது. "இது மட்டுமா? சேரநாட்டு மாப்பிள்ளை பாண்டிய மன்னன் அமரபுஜங்கன் மதுரையை நோக்கித்தன் படைகளுடன் சென்று இருப்பார். மதுரை அரியணையில் அவர் மகுடாபிஷேகம் செய்து கொண்டு இருப்பார். எவ்வளவு காலம் பாண்டியனை உங்களரசர் அடக்கி வைப்பது? பாண்டியனுக்குச் செய்த கொடுமைகளுக்காக உங்களரசர் தண்டனை அனுபவிக்க வேண்டாமா?" என்று அவர்கள் சொல்லும்போது சங்கரத்தேவன் பல்லைக் கடித்துக் கொண்டான். கடுமையான வார்த்தை ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. ஆனால் அந்த நேரத்தில் அமைதியாக இருந்தால் தான் சரியான முறையில் அவர்களிடமிருந்துச் செய்திகளை அறிய முடியுமென்று அவன் மௌனமாக இருந்தான். பிறகு கேட்டான்: "நான் இதே தீவில் கடைசிக் காலம்வரை இருந்து உயிரை விடவேண்டியது தானா?" என்று. கோட்டைக் காவலர்களிடமிருந்து அறிவதற்காக கேட்ட கேள்வியானாலும் அது உண்மையிலே அவன் மிக வருத்தத்தோடு கேட்ட கேள்வியாகவும் இருந்தது.

அவர்கள் சொன்னார்கள்: "நாங்கள் அரசருடைய கட்டளையை நிறைவேற்ற வேண்டியவர்கள். நாளை என்ன நேரும் என்று எங்களுக்குத் தெரியாது. நாளைக்கே சேர அரசர் இங்கு வந்து உன்னுடன் பேசி உனக்கு விடுதலை வாங்கிக் கொடுக்கலாம். அல்லது வேறு ஏதாவது தண்டனை தரலாம்! எங்களுக்கென்னப்பா தெரியும்?" என்று மிக அலட்சியமாகச் சொன்னார்கள்.

சங்கரத்தேவன் மௌனமாக இருந்தான். "சங்கரத்தேவா! உன்னை அழைத்துச் செல்வதற்காகத்தான் வந்திருக்கிறோம்! ஏனெனில் நீ மிகவும் களைத்துப் போயிருக்கிறாய்! முன்னைவிட நீ இளைத்துவிட்டாய்! உனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் எங்கள் தலைக்கு ஆபத்து. உன்னைச் சிறையில் அடைக்குமாறு உத்தரவே தவிர உன்னைச் சித்திரவதை செய்யுமாறு எங்களுக்கு உத்தரவு கிடையாது. உன் உயிருக்கு ஆபத்து வருமாறு செய்வதும் எங்கள் வேலையல்ல. நீ மனத்திற்குள்ளே வேதனைப்பட்டு மாய்கிறாய். வெளியுலகத்தை நீ பார்க்க வேண்டும். அந்தச் சுனைக்கே மீண்டும் அழைத்துப் போகிறோம். நீ தப்பிச் செல்லமாட்டாய் என்பது எங்களுக்குத் தெரியும். அப்படி நீ தப்பிச் செல்வதாக இருந்தாலும் உன்னையறியாமல் உனக்குக் காவல் இருக்கிறது என்பதையும் நாங்கள் எச்சரிக்க விரும்புகிறோம். சங்கரத்தேவா! வா! வெளியே சற்று உலவிவரச் செல்வோம்" என்று சங்கரத்தேவனை அந்தச் சிறையினின்று அழைத்துச் சென்றார்கள்.



சங்கரத்தேவன் மௌனமாக அவர்களைப் பின்தொடர்ந்து சென்றான். பல நாட்களுக்குப் பிறகு வெளியுலகத்தைப் பார்ப்பது அவனுக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது. நாள்தோறும் பார்த்து மிகச் சாதாரணமாக நினைக்கும் சுற்றுப்புறம் இன்று அவனுக்குச் சுவர்க்கம் போல் தோன்றியது.

நடந்துகொண்டிருக்கும்போது அவன் கேட்டான்: "பலகணியின் வழியாக முன்பு கடற்கரையைப் பார்ப்பதற்கு அனுமதித்தீர்கள். அதைக் கூட இப்போது நிறுத்திவிட்டீர்களே! எனக்கு மீண்டும் அந்த எளியைக் கொடுங்கள். பலகணியின் வழியாக நான் கடற்கரையைப் பார்த்துக் கொண்டிருந்தால் என் மனத்திற்கு அது நிம்மதியைத் தரும்."

கடல் ஓலமிட்டுக் கொண்டு இருந்தது. பெரிய சிறிய பாறைகள் என்ற பாகுபாடின்றி அலைகள் மோதித்திரும்பின. இசையைப்பொழிந்து கொண்டிருந்தன. அவற்றிற்கு என்ன தெரியும் சங்கரத்தேவனின் மனநிலை? அடர்ந்த தென்னை மர நிழலில் அவன் காலாற நடந்தான். சிறிது நேரம் தென்னந்தோப்பில் அமர்ந்து கொண்டான். பிறகு திடீரென்று பித்துப் பிடித்தவன் போல் வேகமாக ஓடினான். மணலிலே அப்படியே விழுந்தான்! புரண்டான்! எழுந்து நின்றான். கடலிலே குளிக்கலாமா என்று தோன்றியது. அவர்களை நோக்கித் திரும்பி வந்து, "கடலிலே நான் குளிக்கலாமா?" என்று கேட்டான்.

அவர்கள் தலையசைத்தனர். "கூடாது! அலை உன்னை அடித்துச் சென்று விட்டால்? உனக்கு நீந்தத் தெரியாது. அலையோடு அலையாகக் கடலுக்கிரையாகி விட்டால் நாங்கள் யாருக்கு மறுமொழி கூறுவது?" என்று அவனைத் தடுத்தனர்.

## 52

சங்கரத்தேவன் உற்சாகம் குறைந்திருந்தான். இரண்டு நாட்களுக்கு ஒரு முறைதான் அவன் உணவு ஏற்றுக் கொண்டான். படுத்திருக்கவும் அவன் விரும்பவில்லை. அந்த அறையில் குறுக்கும் நெடுக்குமாகக் களைப்பு ஏற்படும் வரை நடப்பான்.

சிறைக் காவல் வீரர்கள் அறைக் கதவைத் திறந்து அவனை அழைப்பார்கள். அருகே வந்து தொட்டு எழுப்புவார்கள். மறுமொழி கூறாமல் படுத்திருப்பான்.

"தம்பி, இப்படிப் பட்டினிப் பசியுடன் இருக்கிறாயே நியாயமா?" என்று கேட்டனர் ஒருநாள். அவன் மெல்லச் சிரித்தான்.

"கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்கவில்லை. ஏன் சிரிக்கிறாய்?"

"நியாயம் பேசுகிறீர்களே அதை நினைத்தேன் சிரித்தேன்."

"நீ இப்படிப் பட்டினி கிடப்பது நியாயமா? என்று மீண்டும் உன்னைக் கேட்கிறேன்."

"ஆம், நான் பட்டினியாயிருப்பேன். ஏதோ பெரிய மனம் செய்து ஒருவேளை உணவு தருகிறீர்கள். ஒருவேளை வாரம் ஒரு தடவை மட்டுமே உணவு என்று உங்கள் அரசர் உத்தரவிட்டுவிட்டால் என்ன செய்வது? அதற்குப் பழகிக் கொள்கிறேன்!"

"உயிர் போய்விடுமே."

"போகட்டும். இந்த உயிர் இருந்து இனி யாருக்கு என்ன பலன்? என் சொந்த நாட்டிற்கு என்னால் இனி சிறு அளவு கூட உதவ முடியாது?"

"நாடு" என்று அவர்கள் சிரித்து, "சோழநாடு என்று இனி கையகல இடங்கூட இருக்கப் போவதில்லை. உன் மனைவிக்காக, உன் தாய்க்காக நீ உதவக்கூடாதா?"

சங்கரத்தேவன் மறுமொழி கூறவில்லை. அவன் மனைவியும், தாயும் அவன் கண் எதிரே ஒரு கணம் தோன்றி மறைந்து விட்டார்கள்.

சூள் கொட்டினான். பிறகு, "மனைவி, தாய், ஹூம் தாமே அழிந்த பிறகு தாயும், தாரமும் இருந்தென்ன போயென்ன?" என்று கூறும்போது அதில் துறவு மனப்பான்மை எதிரொலித்தது.

"தம்பி, வெற்றிவாகையுடன் திரும்பி வரப்போகும் சேரமன்னர், உன் மீது கோபம் கொள்ளாமல், பழியுணர்வு இல்லாமல் உன்மீது கருணை கொண்டு விடுதலை செய்யலாம். விடுதலையாகி வெளி உலகிற்கு வருவதற்காகவாவது உன் உடலில் தெம்பு இருக்க வேண்டாமா?" என்று கருணை ததும்பக் கூறினர்.

"வேண்டாம். உடல் மெலிந்து, இந்த அறையில் ஜீவ சமாதியாகி விடுகிறேன்." என்றான், சோகம் எதிரொலிக்க.

வீரர்கள் பயந்தனர். சங்கரத்தேவன் இறந்து விட்டால் அவர்களுடைய உயிருக்கும் ஆபத்து. அவர்களுள் ஒருவன் அவனருகே மண்டியிட்டு, கெஞ்சும் குரலில், "தம்பி எங்களுக்குத் தொல்லை தருவது உன் நோக்கமாயிருக்க முடியாது. உன்னைக் காப்பாற்ற வேண்டியது எங்கள் பொறுப்பு. சேரமன்னர் தலைநகரத்திற்குத் திரும்பி வரும்வரையிலாவது நீ உயிருடன் இருக்க வேண்டும். சிறிதாவது ஆகாரம் உட்கொள்ளாவிட்டால் எங்களுக்குத் தான் தண்டனை கிடைக்கும்" என்றான்.

திரும்பத் திரும்ப அவர்கள் ஒரே குரலில் பேசுவதைக் கேட்ட சங்கரத்தேவன் மனம் சற்று இளகியது.

"பலகணி வழியாகக் கடற்கரையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதையும் தடுத்து விட்டீர்கள். தினம் குளிக்க அழைத்துச் செல்வீர்கள்.



நாற்றமெடுக்கும் சட்டியைக் கூட கழுவ விடவில்லை. இப்படி என்னை துன்புறுத்தும்போது நான் மட்டும் நீங்கள் சொல்வதைக் கேட்க வேண்டுமா?" என்று கண்டிப்பாகக் கூறவும் அவர்கள் ஒரே குரலில், "பல கணிவழியாகக் கடற்கரையைப் பார்க்க வேண்டும், இவ்வளவு தானே? தினமும் குளிக்க வேண்டும் இவ்வளவு தானே? இப்போதே உன்னைச் சுனைக்கு அழைத்துச் செல்கிறோம்" என்றனர்.

சங்கரத்தேவனும் பலகணியின் வழியே மீண்டும் கடற்கரையைப் பார்த்துக் கொண்டே பொழுதைக் கழிக்கலானான். வெள்ளை நிறப் பறவைகள் வெகுதூரம் பறந்துச் செல்வதை காண நம்பிக்கை இழந்திருந்த அவன் உள்ளத்தில் நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியது.

பறவைகள் பறந்து செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான். திரும்பி அவை இங்கு தானே வரவேண்டும். அவன் குரல் எடுத்துப் பாடினான்.

*"எங்கும் போய்க் கரைகாணாது எரிகடல் வாய் மீண்டேகும் வங்கத்தின்*
*கூம்பேறும் மாப்பறவை போன்றேனே"*

குலசேகரர் சேரநாட்டவர்தானே? அவர் மரபில் வந்த இந்தச் சேரமன்னர் மட்டும் எவ்வாறு கொடுங்கோலரானார்?"

"சோழநாடு ஒருநாளும் வீழ்ந்துவிடாது. தஞ்சைபுரிக் காவலர் ராஜராஜன் ஒருபோதும் தோற்றுவிடமாட்டார்" என்ற நம்பிக்கை இப்போது அழுத்தமாக ஏற்பட்டது.

மேற்குக் கடற்கரையும், கீழ்க்கடலின் ஒரு பகுதியும் கிட்டத்தட்ட சேரும் அந்தக் கடற்பகுதியில் சந்திரோதயத்தைச் சங்கரத்தேவன் பலமுறை கண்டு களித்திருக்கிறான். சூரியோதயத்தைக் காண அவன் முயன்றும் இயலவில்லை.

வட்டமுழுமதி நீலக்கடலில் எழும் அழகை அவன் கண்டு மகிழ்ந்திருந்தான். அவனுக்கு விபரம் தெரிந்து முழுநிலா கடலிலிருந்து உதயமாகும் இனிய காட்சியைச் சோழநாட்டில் கண்டு மகிழ்ந்ததில்லை. குதிரை மீது பயணம் செய்து கொண்டிருக்கும்போதே, நள்ளிரவில் கிராமத்து வீதியோரம் மெழுகிய தரையில் சுமதியுடன் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருக்கும்போதோ காவிரி நதியில் தோணியில் செல்லும் போதே நீலவானப் பின்னணியில் களங்கமற்ற மதிவாணன் சிரித்து நிற்கும் அழகைக் கண்டு பிரமித்திருக்கிறான். சிலநாள்கள் பின்னிரவு வேளையில் வைகறை நெருங்கும்போது மேற்குவானில் வட்டமதியைக் கண்டு அழகை ரசித்திருக்கிறான். கவிஞனாக இல்லாமல் போனோமே என்ற ஏக்கம் அப்பொழுதெல்லாம் ஏற்படும்.

சிறைச்சாலையின் சாளரத்தின் வழியே தொலைவில், கடலிலிருந்து எழும் சந்தன வண்ண முழுமதியைக் கண்டு கொண்டே வருவான். பௌர்ணமி வருவதற்கு இருநாட்கள் முன்பிருந்தே சாளரம் அருகே காத்திருப்பான். உடல்

சோர்வடைந்து துவண்டு கீழே தரையில் மல்லாந்து படுத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு ஏற்படும் வரை சந்திரோதயத்தைக் காணக் காத்திருப்பான். சந்திரோதயமிராது; தெரிந்து கொள்வான், இன்னும் இரண்டொரு நாள்களில் முழுமதி உதயம் வருமென்று. எவ்வளவோ சந்திரோதயங்களை அவன் பார்த்து விட்டான். இடையில் அவனுக்குக் கட்டுப்பாடு ஏற்பட்ட நாட்களில் அவனால் முழுமதியைக் காண முடியவில்லை.

இன்று மீண்டும் கடலில் வட்டவடிவமான முழுநிலவு உதயத்தைக் கண்டபோது அவன் உள்ளம் கடலலைபோல் பொங்கியது. கடற்கரை சென்றமர்ந்து, நிலவின் நர்த்தனத்தைக் காணமாட்டோமா என்ற ஆர்வம் துள்ளியது.

ஏணியினின்று வேகமாகக் கீழே இறங்கி அறைக்கு வெளியே செல்ல ஓடினான் கதவு தாளிடப்பட்டிருந்தது. வீரர்களைக் கூவி அழைத்தான். பலங்கொண்ட மட்டும் தட்டினான். உடனே வெளியே செல்லவேண்டும் என்ற பரபரப்பு ஏற்பட்டது. அந்தக் கோட்டையை விட்டே சென்று விடவேண்டும் என்ற வேகம் பிறந்தது. சுமதியைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. கோட்டைச் சிறைக்குள்ளே இனி ஒருகணம் இருக்க முடியாது என்ற வேகம் உடலெங்கும் பரவியது. கைகளால் கதவைப் பலங்கொண்ட வரையில் தட்டினான். கால்களால் உதைத்தான். ஓடிவந்து கதவில் வேகமாக மோதிக் கொண்டான்.

நள்ளிரவில் அவன் குரல் யாருக்கும் கேட்கவில்லை. கதவைத் தட்டும் சப்தம் யாருக்கும் கேட்கவில்லை. கரங்களில் இரத்தம் கசிந்தது. உடல் சோர்ந்து கதவருகே வீழ்ந்தான்.

காலையில், உணவளிக்கக் கதவைத் திறந்தவர்கள் கதவருகே மயக்கமுற்றுக் கிடந்த சங்கரத்தேவனைக் கண்டு திடுக்கிட்டார்கள். மூச்சு வருகிறதா என்று முதலில் பார்த்தார்கள்.

"இவன் சிறையிலிருக்கிறானா அல்லது நாம் இருக்கிறோமா என்று தெரியவில்லை. இவனைக் காப்பாற்றி அரசரிடம் ஒப்படைக்கும்வரை நம் உயிர் நம்மிடமில்லை" என்று முணுமுணுத்தான், ஒருவன்.

"ஏதாவது செய்தி வந்ததா? நமது படைகள் சோழநாட்டிற்குள் நுழைந்து விட்டனவா?" என்று கேட்டான் ஒருவன்.

"செய்தி கிடைக்கவில்லை. நம் ஒற்றர்கள் ஒருவரையும் இந்தப்பக்கம் காணவில்லை. காந்தளூர் சாலையை நோக்கிக் கப்பல்கள் நிறையச் சென்றுள்ளன."

"விழிஞத்திலிருந்து கப்பல் கட்டுமிடத்தை மாற்றி விட்டார்களா?"

"அதுபற்றி எனக்குத் தெரியாது. நேற்று முன்தினம் பெரிய பெரிய மரக்கலங்கள் சென்று கொண்டிருப்பதை பார்த்தேன். பத்து, பன்னிரெண்டு வரை எண்ணினேன். காந்தளூர் சாலைக்கு அவை செல்கின்றன என்று தெரிந்து கொண்டேன்."



"காந்தளூர் சாலைக்கு இவ்வளவு கலங்கள் ஏன் செல்கின்றன. மேற்குத் திசை நாடுகளுக்குச் செல்வதாக இருந்தால் காந்தளூர் சாலையில் கலங்களை நிறுத்த மாட்டார்களே?"

"நான் நினைக்கிறேன், சோழநாட்டுடன் கடற்போர் தீவிரமடைந்திருக்க வேண்டும். சோழநாட்டைத் தாக்க முன் ஏற்பாடு செய்கிறார்கள் என்று தோன்றுகிறது."

"போர் சூடுபிடித்து வெற்றியுடன் நம் மன்னர் வந்த பிறகு தான் சங்கரத்தேவனைப் பற்றி அவர் நினைப்பார். அதுவரையில் நாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும்."

"இப்போது இவனுக்கு ஏதாவது மருந்து கொடுத்து நடமாட வைப்போம்."

இவ்வாறு பேசிக் கொண்ட கோட்டைக் காவல் வீரர்கள் சங்கரத்தேவனை மெல்லத் தூக்கிச் சென்று அறையின் நடுவே கிடத்தி, மயக்கம் தெளிவித்தார்கள். மயக்கம் தெளியும் வரை அவனருகே இருந்தார்கள். உணவளித்தார்கள்.

கண்விழித்த சங்கரத்தேவன் சுற்றும் முற்றும் பார்த்து, "சந்திரன் எங்கே? வட்ட முழுமதி எங்கே?" என்று கேட்டான்.

வீரர்கள் தங்களுக்குள் ஒருமுறை பார்த்துக் கொண்டார்கள். பிறகு பெரிதாக நகைத்தார்கள்.

"சந்திரன் மாலையில் வருவான்" என்றார்கள்.

"நான் பார்க்க வேண்டும் கடற்கரையில் அமர்ந்து பார்க்க வேண்டும்" என்று மெல்லிய குரலில் கூறினாலும் சங்கரத்தேவனிடம் பரபரப்பு இருந்தது.

"கடற்கரையிலா?"

"ஆமாம், கடற்கரையில் இரவு முழுவதும் இருந்து சந்திரோதயம் காணப் போகிறேன். நீலவானத்தில் சந்திரன் பவனியைக் கண்டு களிக்கப்போகிறேன், என் ஆசையை நிறைவேற்றுங்கள்" என்று சங்கரத்தேவன் பணிவுடன் கேட்டான்.

வீரர்கள் சிரித்தார்கள். 'சந்திரனைப் பார்த்து மகிழ நீ ஒரு குழந்தையா?' என்றார்கள்.

"ஆமாம், நான் வளர்ந்த குழந்தை. குழந்தைகளுக்குள்ள ஆசைகள் எல்லாம் என்னிடம் இப்போது வந்து சேர்ந்து விட்டன. ஊருக்குச் செல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிறேன், மனைவியைப் பார்க்க ஆவலுள்ளவனாயிருக்கிறேன்" என்று மழலை நிறைந்த குரலில் பேசினான்.

"சந்திரனைப் பார்க்கக் கடற்கரைக்கும் போகவேண்டும் என்கிறாய். பிறகு மனைவியைப் பார்க்க ஊருக்குப் போகவேண்டும் என்றாய்?" அவர்கள் குத்தலாகப் பேசினார்கள்.

''ஆமாம் நான் என் நாட்டிற்குச் செல்லவேண்டும். என்கிராமத்திற்குச் செல்ல வேண்டும்'' என்றான் சங்கரத்தேவன் ஆவேசத்துடன்.

மீண்டும் வீரர்கள் சிரித்தார்கள். ''தம்பி, மறந்துவிடு, ஊருக்குச் செல்ல அடுத்த பிறவியில் தான் முடியும். வேண்டும் என்றால் கடற்கரைக்கு அழைத்துச் செல்கிறோம். இன்று அமைதியாகத் தூங்கு. உனக்கு ஓய்வு தேவை'' என்று கண்டிப்பாகக் கூறினார்கள் வீரர்கள். சங்கரத்தேவன் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தான்.

''சிறு குழந்தைபோல் பிடிவாதம் பிடிக்காதே. ஓய்வு எடுத்துக் கொள். மாலையில் வந்து உன்னை கடற்கரைக்கு அழைத்துச் செல்கிறோம்'' என்று உறுதி கூறி வீரர்கள் சென்றார்கள்.

உண்ட மயக்கமும் களைப்பும் ஒன்று சேர சங்கரத்தேவன் மாலையில் நன்றாகத் தூங்கினான். அவன் விழித்தபொழுது இருள் சூழ்ந்து விட்டது. தன்னை கடற்கரைக்கு அழைத்துச் செல்வதாக வாக்களித்துச் சென்ற வீரர்களின் வருகையை எதிர்பார்த்தான். வீரர்கள் வரவில்லை, கதவைத் தட்டினான். ஏணியின் மீது ஏறி பலகணியின் வழியே கடற்கரையை நோக்கினான்.

கடலலைகள் தெரியவில்லை. சந்திரோதயம் தெரியவில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டான். மங்கிய நிலவொளியில் பெரிய பெரிய கலங்கள் அணிவகுத்து வரிசையாக நின்று கொண்டிருந்தன!

கடற்கரையில் கலத்திலிருந்து பலர் இறங்கி வருவது தெரிந்தது.

தடதடவென்று சிறைக் கதவு தட்டப்படும் ஓசை. சங்கரத்தேவன் கதவைத் திறந்தான்.

''சங்கரத்தேவா? எங்களுடன் வா. ஆபத்து ஆபத்து'' என்று காவல் வீரர்கள் பரபரப்புடன் கூறினார்கள்.

சங்கரத்தேவன் பேச முயன்றபோது அவர்கள் அவன் கரத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடினார்கள். கோட்டையின் இரகசியப்பாதை மூலமாகச் சென்று காட்டுப்பகுதிக்குள் நுழைந்தபோது, அங்கே நின்று கொண்டிருந்த சில வீரர்கள் ''இதோ, அதோ, பிடியுங்கள் தப்பி ஓடுகிறார்கள்'' என்று கூவினர்.

அவ்வாறு கூவியவர்கள் சோழநாட்டு வீரர்கள். சங்கரத்தேவனையும் அவன் கரத்தைக் கெட்டியாகப் பிடித்திருந்த சேரநாட்டு வீரர்களையும் அவர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

சங்கரத்தேவனைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றார்கள். சங்கரத்தேவனுக்கு ஒன்றும் புரியவில்லை. சோழவீரர்கள் என்பதை அவர்கள் பேசும் தமிழ் உச்சரிப்பிலிருந்து புரிந்து கொண்டான்.

***

**வா**னத்தே வட்டமுழுமதி உதயமாகி விட்டது. சங்கரத்தேவன் பெரிய மரக்கலம் ஒன்றில் ஏற்றப்பட்டான். அவனைத் தூக்கிச் செல்லாத குறைதான். அவனுக்குச் சிறப்பாக இடம் ஒதுக்கப்பட்டது.



''இந்தக் கலம் மட்டும் எங்கு செல்கிறது? மற்ற கலங்கள் உதயகிரிக் கோட்டைக் கடற்கரை அருகே நின்றிருக்கின்றனவே'' என்று சங்கரத்தேவன் கேட்டான்.

சோழவீரர்கள் கரங்களை உயர்த்தினர். ''வாழ்க ராஜராஜ சோழதேவர்! வெல்க அவர் புகழ்!'' என்று கூறி, ''சோழநாட்டுத் தூதரே உதயகிரிக் கோட்டையை வசப்படுத்த கடற்படைகள் திற்கிறான. தரை வழியே நமது படைகள் விரைவில் வந்து சேர்ந்துவிடும்.'' என்றான் சோழநாட்டு வீரன் ஒருவன்.

இது கனவா, நனவா என்று சங்கரத்தேவன் ஒருமுறை தன்னைத் தானே சோதித்துக் கொண்டான். மாறுதல் என்பது ஒரு கணத்தில் நிகழ்ந்து விடுமா? அதிசயம் என்பது நொடியில் ஏற்பட்டு விடுமா!

''இப்போது நாம் எங்கே செல்கிறோம்?'' என்று கேட்டான்.

''நாகைப்பட்டினத்திற்கு''

''நான் உதயகிரி கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருக்கிறேன் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எல்லாம் நம் ஊமையனின் உதவி தான்.''

''ஊமையனா? ஊமையன் உயிர் பிழைத்து விட்டானா? எங்கே இருக்கிறான்?'' சங்கரத்தேவன் ஆவலுடன் கேட்டான்.

''இதோ இங்கே தான்! இதோ வருகிறேன்'' என்று ஊமையன் பெரும் கயிறொன்றைக் கலத்தின் கூம்புடன் பிணைக்க முயன்று கொண்டிருந்தவன் அங்கிருந்து குரல் கொடுத்தான். ஊமையனைக் கண்ட சங்கரத்தேவன் இதயத்தில் பூரண சந்திரோதயம் கண்ட கடல் போன்று களிப்புக் கூத்தாடியது. அவன் பேசுகிறானே! சங்கரத்தேவன் அதிசயமடைந்தான்.

சங்கரத்தேவனைப் பேசவிடாமல் ஊமையன் நடந்தவற்றைக் கூறினான். அதைக் கேட்ட சங்கரத்தேவன் உடலிலிருந்த களைப்புப் பறந்தோடியது. சோர்வு விடைபெற்றுக் கொண்டது. புதிய பலம் பிறந்தது.

## 53

**அ**லைகடலில் அந்தக் கலம் ஆடி அசைந்து சென்று கொண்டிருந்தது. இரவு பகல் என்று மாறி மாறி வந்தன.

சங்கரத்தேவனுக்குப் பசியோ, உறக்கமோ ஏதும் ஆட்கொண்டதாகத் தெரியவில்லை. கண்கள் மிகவும் கெஞ்சி, சிறிது ஓய்வைக் கேட்டன. பசியைத் தணித்துக் கொள்ள வற்புறுத்தி, சங்கரத்தேவனை ஆகாரம் உட்கொள்ளச் செய்துத் தானும் உண்டான், ஊமையன்.

நடந்த கதையை ஊமையனிடமிருந்துக் கேட்க சங்கரத்தேவனுக்கு ஆவல் அதிகமாகியது.

ஊமையனின் சாகசங்களைக் கேட்கக் கேட்க சங்கரத்தேவன் புத்துணர்வு கொண்டான். அத்துடன் தன்னைத் தானே நொந்து கொண்டான்.

"உன்னுடன் நானும் அந்த ஆழமான கடல் மடுவில் குதித்துத் தப்பியிருக்கலாம், தயங்கிவிட்டேன்" என்று கூறி தன்னைத் தானே குறை கூறிக் கொண்டான்.

"சங்கரத்தேவா, உன்னை நீ குறைவாக மதிப்பிட்டுக் கொள்ளாதே. உனக்கு நீந்தத் தெரியாது என்பதை மறந்து விடாதே. மிகத் திறமையாக நீந்தவல்ல நானே திக்கு முக்காடி விட்டேன். குதித்தவுடனேயே அவ்வளவு தான் பரலோகம் சென்றுவிட்டேன்' என்று முடிவு செய்தேன். 'நீ சிறையிடப்பட்டிருப்பதைச் சோழமன்னரிடம் தெரிவிக்கச் செல்ல நினைத்தோமே, இப்படி ஜல சமாதியாகிவிட்டோமே' என்று கவலைப் பட்டேன். இறைவன் சோழநாட்டிற்கு உதவுவதைத் தன் கடமையாகக் கொண்டிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டேன்; எனக்கும் அருள் பாலித்து, சோழநாட்டிற்கும் பேருதவி புரிந்து உன்னையும் காப்பாற்றியிருக்கிறார், எங்கும் நிறைந்துள்ள சிவபெருமான்" என்று ஊமையன் கூறும்போது அவன் கண்கள் பனித்தன.

"ஊமையா! இப்படி அழைப்பதற்காக என்னைப் பொறுத்தருள வேண்டும். எல்லாவற்றையும் விட உனக்குப் பேச்சு வருமாறு செய்த இறைவன் அருளைப் போற்றிப் புகழ்கிறேன். உனக்குப் பேசவந்த அதிசயத்தை என்னென்பேன்! எல்லாம் அதிசயம்; ஆச்சர்யம்; ஆனந்தம்" என்று கூறும்போது சங்கரத்தேவன் குரல் தழுதழுத்தது.

நான் கடலில் மிக உயரமான இடத்திலிருந்து குதித்தேன். சிறிது தள்ளிக் குதித்திருந்தாலும் மண்டை சிதறுண்டு மாண்டிருப்பேன். குதித்த இடம் மிக மிக ஆழமுடையது. கடலின் அடித்தளம் வரை போய் மேலே வந்தேன். மூழ்கினேன், வந்தேன், மூழ்கினேன், வந்தேன், மூழ்கினேன், பிறகு நடந்தது தெரியாது. கலம் ஒன்றில் என்னைக் கிடத்தியிருந்தார்கள். அதுவும் இறைவன் செயலே. அந்தக் கலம் சேரநாட்டுப் படைவீரர்களைக் கொண்டு செல்லும் கலம். சேர வீரர்களையும், படைக்கலங்களையும் சுமந்து சென்றது.

நாகைப்பட்டினத்தில் சேர வீரர்களை இறக்கி சோழநாட்டிற்குள் நுழையத் திட்டமிட்டிருந்தனர் சேரர்கள், வழியில் சோழநாட்டு வணிகர் கலங்களைச் சிறைப்பிடித்தது, அந்தச் சேரநாட்டுக் கலம். நான் சோழநாட்டவன் என்பதை அறிந்து கொண்ட சேர நாட்டவர்கள் என்னைக் கொண்டே சோழநாட்டிற்குள் நுழையத் திட்டம் வகுத்தார்கள்.

"சோழநாட்டு வீரர்கள் அனைவரும் சேரநாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் சென்றிருந்தார்கள். நம் சக்ரவர்த்தியும் தஞ்சைபுரியில் இல்லை.



மிக எளிதாக சேரர்படைகள் நாகைப்பட்டினத்தில் நுழைந்திருக்கலாம். இங்கும் இறைவன் சோழநாட்டின் பக்கமிருந்ததால் பெரும் புயலும் மழையும் சில கணநேரத்தில் ஏற்பட்டன. சேரர் கலம் கடற்கரையிலிருந்து வெகு தொலைவிற்கு அடித்துச் செல்லப்பட்டது. நான் நாகைப்பட்டினத்திற்குள் நுழைந்தேன். இளையபிராட்டியாரைச் சந்தித்தேன்" என்று கூறிச் சிறிது நிறுத்தினான்.

சங்கரத்தேவன் பரபரப்புடன், "நாகைப்பட்டினத்தில் புயலா? இளையபிராட்டியாரைச் சந்தித்தாயா?" என்று கேட்டான்.

ஊமையன் மெல்லச் சிரித்தவாறு, "உம் சொல்கிறேன், சொல்கிறேன்... சொல்லாமல் விடுவேனா? ஒன்று விடாமல் சொல்வேன்... இளையபிராட்டியாரைச் சந்தித்தேன், நான் சொல்வதெல்லாம் அதிசயமாகவும், ஆச்சர்யமாகவும் இருக்கும். இளையபிராட்டியார் நாகைப்பட்டினத்து சூடாமணி விகாரத்திற்கு எதிர்பாராமல் வந்திராவிட்டால், தஞ்சைக்குச் செய்தி அனுப்பி வீரர்களை வரவழைத்திருக்க முடியாது. வல்லவரையர் வந்தியத்தேவனிடம் நீ சிறைப்பட்டிருக்கும் செய்தியைச் சொல்லியிருக்க முடியாது. வல்லவரையர் உன்னை மீட்க உடனே புறப்பட்டிருக்க முடியாது. இறைவனருளால் வல்லவரையருக்கு வழிகாட்ட நான் அவருடன் சென்றேன்" என்று கூறிச் சற்றுக் களைப்பாற நிறுத்தினான்.

"நாளைக்குச் சொல்கிறேன், பிறகு நடந்தவற்றை" என்று சொன்னபோது சங்கரத்தேவனுக்குச் சற்றுக் கோபம் தோன்றியது.

"ஒன்றுவிடாமல் சொல்வேன் என்று கூறியதை மறந்து விட்டாய்" என்றான் சங்கரத்தேவன்.

ஊமையன் பெரிதாகச் சிரித்தான். "ஓ! இளையபிராட்டியாரோடு இருந்த உன் துணைவியாரைப் பற்றிச் சொல்லவில்லை என்று தானே உனக்குக் கோபம்? சுமதி தானே அவள் பெயர். நலமுடன் இருக்கிறாள். ஆனால், மிகவும் மெலிந்து இருக்கிறாள்" என்றான்.

"என்னைப் பற்றி ஏதாவது கேட்டாளா?" என்று சங்கரத்தேவன் ஆவலுடன் கேட்டான். ஊமையன் தலையை அசைத்தான்.

"எனக்கு நேரமே இல்லை. மிகவும் பரபரப்பு மிகுந்த சூழ்நிலை" என்று கூறி சங்கரத்தேவனின் முகத்தை உற்று நோக்கியவன் அவன் கன்னத்தைத் தட்டி, "சுமதியின் விழிகளில் பிரிவால் ஏற்பட்ட துன்பம் தேங்கி நிற்பதைக் கண்டேன். நான் நேரே அவளிடம் உன்னைப் பற்றி ஏதும் சொல்லவில்லை. வல்லவரையரிடமும், இளையபிராட்டியிடமும் நடந்தவற்றை விவரித்தேன். உதயகிரி சிறைச்சாலையில் நீ வாடுவதைக் கூறியபோது அவள் விழிகளிலிருந்து கண்ணீர் வழிந்தது. துயரத்தை, வேதனையை, பயத்தை அடக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. இளையபிராட்டி அவளுக்கு ஆறுதல் கூறினார். வல்லவரையர் உடனே புறப்பட்ட நோக்கமே உன்னை மீட்கத்தான். 'சோழநாட்டிற்குப் பெரும் அவமானம் சங்கரத்தேவன்

சிறையிலிருப்பது' என்று வல்லவரையர் கர்ஜித்தார். நானும் வல்லவரையரும் காவிரிக் கரையைத் தாண்டி, சக்கரவர்த்தி தங்கியிருக்கும் இடம் நோக்கி விரைந்தோம். குதிரைக்கு இறக்கைகள் இருக்கக் கூடாதா? உடனே பறந்து சென்று உதயகிரியை அடையத் துடித்தார். எதிர்பாராமல் சோழ சக்கரவர்த்தி அருகே உள்ள சிற்றூரில் தங்கியிருப்பதை அறிந்தோம். வல்லவரையரும், நானும் சக்கரவர்த்தியிடம் நடந்தவற்றைத் தெரிவித்தோம்.

சோழ நாட்டுத் தூதரை சேரமன்னர் அவமானப்படுத்தியதையும் சிறையில் அடைத்ததையும் அறிந்து சக்கரவர்த்தி மிகுந்த சீற்றம் கொண்டார்.

அப்பொழுது தான் உன் மீது சோழ சக்கரவர்த்தி கொண்டிருக்கும் அன்பின் அளவை நான் அறிந்தேன்.

சக்கரவர்த்தி தன் திருக்குமரன் சேரநாட்டின் மீது படையெடுத்துச் சென்றிருக்கும் செய்தியை அவர் விவரித்து, வல்லவரையரை நோக்கி, "வல்லவரையரே! நல்ல சமயத்திற்கு வந்தீர்கள். சங்கரத்தேவனை உடனே மீட்டு வாருங்கள், உங்களுக்குத் தேவையான படைகளை அழைத்துச் செல்லுங்கள்" என்று கட்டளையிட்டார். "வந்தியத்தேவரே! சேரநாட்டவரை அடக்காமல் தஞ்சை திரும்புவதில்லை என்று சபதம் செய்திருக்கிறேன். நம் தூதரை அவமதித்தது, நம்மை அவமதித்ததுபோல் தான். சங்கரத்தேவனை மீட்காமல் நான் தஞ்சை அரியணையில் அமரமாட்டேன் என்று சூளுரைத்தார்" சோழச் சக்கரவர்த்தி.

உதயகிரிக் கோட்டையைப் பற்றி நான் அரசரிடம் விவரித்தேன். உதயகிரிக் கோட்டை நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருப்பதையும், அருகே உதயகிரியில் பலம் பொருந்திய வீரர்கள் தங்கியிருப்பதையும், நான் விவரித்தேன்.

சோழ சக்கவர்த்திகள் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு வல்லவரையரை நோக்கி, "சேரர்கள் கடற்படைகளை பலமுடன் அமைத்து விட்டார்கள். நம் ஒற்றர்கள் இந்தச் செய்தியை உள்ளது உள்ளவாறு தெரிவிக்கத் தவறிவிட்டார்கள்" என்று கவலையுடன் கூறினார்.

அப்போது நான் குறுக்கிட்டு, உதயகிரி நகரத்திற்குள்ளே கோட்டைக்குள்ளே யாரும் எளிதில் நுழைய முடியாது. "அவ்வளவு கண்டிப்பு; பாதுகாப்பு. அதனால் நமது ஒற்றர்களைக் குறைகூற முடியாது" என்று துணிவுடன் கூறினேன்.

சக்கரவர்த்தி என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். பிறகு, "விழிஞத்தில் தான் கடற்படைகளைப் பலமாக அமைத்திருக்கின்றனர் என்று கேள்விப்பட்டோம். பிறகு செய்தி கிடைத்தது, காந்தளூர் சாலை என்ற இடத்திலும் நூற்றுக்கணக்கான கலங்கள் போர் புரிவதற்கென்றே கட்டப்பட்டுள்ளன என அறிந்தேன்" என்றார்.

"காந்தளூர் சாலை என்ற இடமும் உதயகிரிக்கு அருகே தான் உள்ளது" என்று நான் சொன்னேன்.



"வாழ்க்கையில் பெரும் பேறுபெற்றேன், சங்கரத்தேவா! பெரும்பேறு பெற்றேன். சக்கரவர்த்தி என் முதுகை அன்புடன் தட்டி, "உதயகுமாரா" என்று வாஞ்சையுடன் அழைத்து "சோழநாட்டிற்கு நீ ஆற்றிய அரும்பணியை மெச்சி, தில்லை அம்பலவாணர் இழந்த குரலை உனக்கு அளித்துவிட்ட பிறகு நான் உனக்கு அதைவிட வேறு என்ன வழங்க முடியும்? நான் மேற்கொண்டுள்ள போர், சோழநாட்டின் பெருமையைக் காப்பாற்ற நடத்தும் போர். போர் முடிவடைந்தவுடன் என்னைச் சந்தித்து உனக்கு வேண்டியதைக் கேள் தருகிறேன். இப்போது உடனே முதலில் உதயகிரிக்குப் புறப்படு. வல்லவரையருக்கு வழிகாட்டு..." என்றார். சங்கரத்தேவா, இதைவிட இந்தப் பிறவியில் எனக்குப் பாராட்டும் பெரும்பேறும் வேறு வேண்டுமா?"

சங்கரத்தேவன் பிரமிப்புடன் ஊமையனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஊமையா, உன் பெயர் உதயகுமாரனா?" என்று ஆவலுடன் கேட்டான்.

"ஆமாம், அரச குடும்பத்துப் பிள்ளைகளுக்கு வைக்கும் பெயர் போல் எனக்கு வைக்கவேண்டும் என்று என் தாய் ஆசைப்பட்டாள்."

"சக்கரவர்த்திக்கு உன் பெயர் எப்படித் தெரியும்?"

சங்கரத்தேவன் கேட்டதற்கு ஊமையன் உடனே மறுமொழி கூறவில்லை. மெல்ல நகைத்தான்.

"என் சிறு பிராயத்திலிருந்து சோழ சக்கவர்த்திகளை நான் அறிவேன். அரச குடும்பத்திலுள்ளவர்களை நான் அறிவேன். அரசர் அனுப்பித் தான் சேரநாட்டிற்கு வந்தேன். சேரநாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் நான் சுற்றியிருக்கிறேன். காந்தளூர் சாலை, விழிஞம் நகரங்களின் சிறு தெருக்களைக் கூட நான் அறிவேன்."

ஊமையன் தெளிவாகப் பேசுவதைக் கண்ட சங்கரத்தேவனுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு எல்லை இல்லை. "இவ்வளவு ஆண்டுகள் வாய் பேசாத ஊமையன், எவ்வளவு உணர்ச்சிகளை வெளிப்படுத்தாது அடக்கி வைத்திருந்தானோ?" என்று எண்ணிய சங்கரத்தேவன், ஊமையன் கரங்களை அழுத்தமாகப் பிடித்து, "உதயகுமாரா, என்னைக் காப்பாற்றிய தெய்வம் நீ!" என்றான். பிறகு, "நான் ஒன்று உன்னைக் கேட்கலாமா?" என்று மிகப்பணிவுடன் கேட்டான்.

உதயகுமாரன் தனக்கே உரிய இயற்கையான பலத்த சிரிப்புடன், "நன்றாகக் கேள், சங்கரத்தேவா! எப்போது சுமதியைப் பார்க்கப் போகிறேன் என்று தானே கேட்கப் போகிறாய்?" என்றான்.

சங்கரத்தேவன் நாணத்தால் தலைகுனிந்தான். "அதுமட்டுமன்று, இந்தக் கலம் இப்போது எங்கே செல்கிறது என்று சொல்வாயா?" என்று கேட்டான்.

''இந்தக் கலம் நாகைப்பட்டினத்திற்குச் செல்கிறது'' என்றான் உதயகுமாரன்.

''நாகைப்பட்டினத்திற்குச் சாலை வழியே செல்லக் கூடாதா?''

''செல்லலாம். நாளாகும். எதிரிகளின் ஆபத்தும் ஏற்படலாம். ஆனால் இப்போது கடல் மூலம் செல்லச் சற்றுத் தாமதமாகலாம். கப்பலில் நீயும், நானும் மட்டும் செல்லவில்லை. பல முக்கியக் கருவிகளும் உள்ளன. நாகைப்பட்டினத்தில் நாம் இறங்கியவுடன் நீ தஞ்சை செல்கிறாய். நான் மரக்கலங்கள் கட்டுமிடம் செல்கிறேன். என்ன வியப்புடன் பார்க்கிறாய்? சோழநாட்டிலும் தனியே சிறு சிறு மரக்கலங்கள் கட்டுமிடமிருக்கிறது. இதுவரை வணிகக் கப்பல்களைக் கட்டி வந்தோம். இப்போது கடற்போர் புரிவதற்கேற்ற கலங்களைக் கட்டுகிறோம். அதற்கான சில நுணுக்கங்களை இந்தக் கலத்தில் எடுத்துச் செல்கிறோம். கப்பல் கட்டுவதில் தேர்ந்த யவனர்களும், சோனகர்களும் இந்தக் கலத்தில் வருகிறார்கள். உன்னைக் காப்பாற்ற என்னுடன் வந்தவர்களுள் திறமைமிகுந்த யவன நாட்டு வீரர்களும் இருந்தார்கள்'' என்று ஊமையன் கூறியதை மிகுந்த வியப்புடன் கேட்டவாறிருந்தான் சங்கரத்தேவன். பிறகு ''சோழநாட்டிலும் மரக்கலங்கள் கட்டுகிறார்களா?'' என்று கேட்டான்.

''என்ன அப்படிக் கேட்டு விட்டாய்? சோழநாட்டுக் கலங்கள் கடலில் தொலைதூரம் சென்றுவருவதை நீ அறிய மாட்டாயா? பண்டங்களை ஏற்றிச் செல்லும் கலங்களை நாமே கட்டுகிறோம். ஆனால் போர்க்கலங்களை இனி நாம் கட்டவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. நம்மை மூன்று பக்கமிருந்தும் தாக்கி அழித்துவிட நினைத்த சேரர்களின் திட்டம் சிதைந்தது'' என்று கூறும்போது ஊமையன் கண்களில் தனி ஒளி வீசியது.

பல ஆண்டுகளுக்கு முன்பே, சோழசக்கரவர்த்திகள் ராஜராஜ சோழதேவர் செய்த சபதம் உனக்குத் தெரியாதா? ''சோழர்கள் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று பெரும் புகழை அடைய வேண்டும். சோழர்களின் மரக்கலங்கள் நாட்டிற்குப் பெருஞ்செல்வம் கொண்டு சேர்க்க வேண்டும். மற்ற நாடுகளிலும் புலிக்கொடி பறக்க வேண்டும். இவற்றைச் செய்யும் வரை நான் ஓயமாட்டேன், என்ற சபதம் இப்போது நிறைவேறி விட்டது. அவரது திட்டத்தில் ஒரு பகுதி தான் என்னைச் சேர நாட்டிற்கு அனுப்பியது.''

''பாண்டிய அமரபுஜங்கன் என்ன ஆனான் செய்தி தெரியுமா?'' என்று கேட்டான் சங்கரத்தேவன்.

''சங்கரத்தேவா! பாண்டியர்களை நமது அரசர் இந்தநாட்களில் வென்று வாகை சூடியிருப்பார். செய்தி எனக்குக் கிடைக்கவில்லை. சங்கரத்தேவா - உன் சந்தேகம் எல்லாம் தீர்ந்துவிட்டது என நினைக்கிறேன். இன்னும் ஒரு பகலும் ஒரு இரவும் கழிந்தவுடன் நாம் நாகைப்பட்டினத்தை அடைந்து விடுவோம். நிம்மதியாக நீ தூங்கு. நல்ல உணவை உண்டு களைப்பு நீங்கி புது உற்சாகத்துடன் நீ இருக்க வேண்டும். கப்பல் தலைவனிடம் எனக்குச் சில பணிகள் உள்ளன. உன்னிடம் பிறகு பேசுகிறேன், நான் செல்கிறேன்'' என்று உதயகுமாரன் கீழ்த்தளத்திற்குச் சென்றான்.



சங்கரத்தேவனுக்குப் பற்பல நினைவுகள், கனவுகள், கற்பனைகள், தூக்கம் அவன் விழிகளைத் தழுவியது. அதுபோல் அயர்ந்து உறங்கிப் பல நாட்களாகி விட்டன.

நாகைப்பட்டினத்தை அடைந்து, அங்கிருந்து தஞ்சைக்குச் செல்லப் போகிறோம் என்று நினைக்கும்போதே அவனுக்குப் புதிய உற்சாகம் பிறந்தது.

## 54

நாகைப்பட்டினத்துறையில் இறங்கியவுடன் உதயகுமாரன் சங்கரத்தேவன் கரங்களைப் பற்றினான். பல ஆண்டுகள் பேச முடியாமல் இருந்த ஊமையன் என்று அழைக்கப்பட்ட உதய குமாரனைப் பிரியமுடியாமல் பிரிந்தான் சங்கரத்தேவன்.

''உன்னுடன் தஞ்சைபுரிக்கு வரவேண்டும் என்று தான் எனக்கு ஆசை. ஆனால் மரக்கலம் கட்டும் துறைக்கு நான் சென்றாகவேண்டும்'' என்று கூறி சங்கரத்தேவனின் கரங்களை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டான் உதயகுமாரன்.

பல ஆண்டுகள் பழகியவர்களைப் போல் இருவருக்கும் உணர்ச்சி மிகுந்து, அது கண்களில் பிரதிபலித்தது.

''சோழநாட்டிற்காக நீ பெரிய தியாகம் செய்திருக்கிறாய் சங்கரத்தேவா!'' என்று உதயகுமாரன் புகழ்ந்தான்.

''நான் என்ன செய்துவிட்டேன். இன்னும் கொஞ்சம் புத்தியைப் பயன்படுத்தியிருந்தால் சேரநாட்டுச் சிறையில் அடைபட்டிருக்க மாட்டேன். உனக்கு இருந்த துணிவு அறிவாற்றல் எனக்கு இல்லை என்பதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்'' என்று சங்கரத்தேவன் மனநிறைவோடு பாராட்டினான்.

உதயகுமாரன் அவன் பாராட்டை ஏற்க மறுப்பவன் போல் தலையை அசைத்து, ''சங்கரத்தேவா, உன்னை நான் பல ஆண்டுகளாக அறிவேன். உன் வீரமும், உழைப்பும், குணஉயர்வும் எனக்கு நன்றாகத் தெரியும். உன்னுடன் ஒப்பிடும் போது நான் சாமானியன். அது போகட்டும் நாம் இருவரும் இனியும் தாமதிக்கக் கூடாது. உனக்காக உன் அருமை மனைவி சுமதி காத்திருப்பாள். உன் வரவை ஆவலுடன் எதிர்நோக்கும் அந்த மக்க விழிகளுக்கு இனியும் ஏமாற்றம் தரக்கூடாது. எனக்காகவும் என் சகோதரி காத்திருக்கிறாள் என்றாலும் அதை விட சக்கரவர்த்தி இட்ட கட்டளை பெரியது. சோழ சக்கரவர்த்தி இட்ட கட்டளையை விரைவில் நிறைவேற்ற, நான் மரக்கலங்கள் கட்டும் துறைக்குச் சென்றாக வேண்டும்'' என்றான்.

ஊமையனின் கடமையுணர்வைக் கண்டு வியந்த சங்கரத்தேவன், "எவ்வளவு விரைவில் நீ செயல்களை முடித்திருக்கிறாய். புயல்வேகம் என்று தான் சொல்லவேண்டும். உதயகிரிக் கோட்டையிலிருந்து நீ தப்பிச் சேரர் கலத்தில் சிக்கி, நாகைப்பட்டினம் வந்து இளையபிராட்டியாரைச் சந்தித்து வல்லவரையருடன் தரை வழியாகப் புறப்பட்டு - உதயகிரிக் கோட்டையை அடைந்தாய்" என்று உதயகுமாரனைப் பாராட்டி வரும்போது அவன் குறுக்கிட்டு, நான் உதயகிரிக் கோட்டை அடைந்ததாய் ஒரே வார்த்தையில் கூறிவிட்டாய். நான் பட்ட இடர் சொல்லித் தீராது. வல்லவரையர் தரை வழியே உதயகிரிக் கோட்டையை நோக்கி வந்தார். நான் காந்தளூர் சாலை சென்று அங்கு நடப்பனவற்றை அறிந்தேன். உதயகிரிக் கோட்டைக்குக் கலத்துடன் வரும்போது உன்னையும் கலத்தில் ஏற்றிக் கொண்டேன். இதுநேரம் வல்லவரையர் வந்தியத்தேவன் உதயகிரிக் கோட்டையைக் கைப்பற்றிக் கோட்டையின் முக்கிய இடங்களை அழித்திருப்பார். காந்தளூர் சாலையில் தான் சேரர்களின் கடற்படைகள் தங்கியிருக்கின்றன. மூலபலத்தையே அழித்து விடவேண்டும் என்பது நம் அரசரின் திட்டம். விழிஞத்திலிருக்கும் சோழ இளவரசரிடமும் கன்யாகுமரியில் தங்கியிருக்கும் நம் சக்கவர்த்திகளிடையேயும் போதிய கலங்கள் இல்லை. ஏராளமான கலங்களை அனுப்ப ஏற்பாடு செய்யவே நான் வந்தேன்" என்று உதயகுமாரன் மிக வேகமாகப் பேசினான். அங்கிருந்து விடைபெற்று கலங்கள் கட்டுமிடத்திற்குச் செல்ல வேண்டும் என்ற பரபரப்பு அவனிடமிருந்தது.

"சங்கரத்தேவா, சென்று வருகிறேன். விரைவில் சந்திப்போம். வெற்றிவிழா தஞ்சையில் கொண்டாடும்போது நாம் மிக மகிழ்ச்சியுடன் சந்திப்போம்" என்றான்.

"உதயகுமாரா நானும் வருகிறேன், உன்னுடன் மரக்கலங்கள் கட்டுமிடத்திற்கு வருகிறேன். அந்த இடம் மிகத்தொலைவில் இருக்கிறதோ?" என்று சங்கரத்தேவன் கேட்டான்.

"நாகைப்பட்டினத்திற்கு மிக அருகேதான் இருக்கிறது கலம் கட்டும் துறை. தஞ்சை புரியைவிட அந்த இடம் மிக அருகேதான். ஆனால், சங்கரத் தேவா வல்லவரையரின் கட்டளை, உன்னை உடனே தஞ்சைக்கு அனுப்பவேண்டும் என்று. அதை நான் மீறக்கூடாது" என்ற உதயகுமாரனின் குரலில் கண்டிப்பு இருந்தது.

"ஏன்?"

"சொல்லத்தான் வேண்டுமா!" என்று கூறி மெல்லச் சிரித்தான் உதயகுமாரன்.

"சங்கரத் தேவா! மீண்டும் உன்னைக் கப்பலில் அழைத்துச் செல்ல முடியாது. கப்பலில் செல்பவர்கள் நன்றாக நீந்தத் தெரிந்திருக்க வேண்டும். நீ திருக்குடந்தைக்குச் சென்று காவிரியில் நன்றாக நீந்தக் கற்றுக்கொள். நம் சக்கரவர்த்தியோ கடல் கடந்த நாடுகளுக்குச் செல்ல திட்டமிட்டிருக்கிறார்.



உன்னையும் அப்போது அழைத்துச் செல்ல வேண்டுமானால் நீ கடலைக் கண்டு பயப்படாத நிலை ஏற்பட வேண்டும். சரி, சரி நேரமாகிறது. நான் சென்று வருகிறேன். நீயும் தஞ்சைபுரிக்குச் சென்று உன் மனைவி சுமதியுடன் சுகமாக வாழ்ந்து வா!" என்று கூறி உதயகுமாரன் புறப்பட்டான்.

சைகை மூலமே பேசியவன் இன்று எவ்வளவு அழகாகப் பேசுகிறான் என்ற வியப்புடன் சங்கரத்தேவன், தஞ்சைக்குப் புறப்பட்டான்.

நீண்ட நாட்கள் சுமதியைப் பிரிந்திருந்த வேதனையும் மீண்டும் சந்திக்கும் ஆர்வமும் அவனுள் மாறிமாறியிருந்தன.

தஞ்சையை அடையும்போது நன்றாக இருட்டிவிட்டது. கோட்டைக் கதவுகள் நன்றாகத் திறந்திருந்தன. தீவர்த்திகள் வீதிகளில் இருளைப் போக்க முயன்றன.

மக்கள் தெருமுனையில் நின்று மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தனர். சங்கரத்தேவனை யாரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

குதிரையினின்று அவன் இறங்கி ஓர் ஓரமாக நின்று கொண்டு மக்கள் பேசுவதை ஆவலுடன் கேட்கலானான், அவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து பல செய்திகளை அறிந்து கொண்டான்.

வந்தியத்தேவன் உதயகிரிக் கோட்டையை நோக்கிச் சென்ற பிறகு சோழமன்னர் ராஜராஜன் மதுரையை நோக்கிப் புறப்பட்டபோது வழியில் அமரபுஜங்கன் சோழர்படையைத் திடீரென்று தாக்கினான்.

நாட்டை மீட்க வேண்டும் என்ற இலட்சிய ஆவேசத்துடன் அமரபுஜங்கன் தலைமையில் பாண்டிய வீர இளைஞர்கள் போரிட்டனர்.

ஆனால் சோழர்ப்படைவீரர்களின் திறமையான போர் முறையின் எதிரே அவர்களுடைய வீரம் எடுபடவில்லை. பலர் சிறைபிடிக்கப் பட்டார்கள். பலர் வீரமரணம் எய்தினர்.

சேரநாட்டின் மீது படையெடுத்து இளவரசர் தலைமையில் சோழர் படைகள் சென்றிருக்கின்றன என்ற செய்தியும் உதயகிரிக் கோட்டையைப் பிடிக்க வல்லவரையர் முயல்கிறார் என்றும் கேள்விப்பட்டவுடனேயே அமரபுஜங்கனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

ராஜராஜ சோழரின் தலைமையின் கீழ் திறமையுடன் போராடிய சோழர் படைகளுக்கு எதிரே அமரபுஜங்கனால் போர் புரிய முடியவில்லை. அவனுக்கு உதவப் பாண்டிய நாட்டின் பல பகுதிகளிலிருந்து அவன் உறவினர்கள் படை திரட்டி வருகிறார்கள் என்ற செய்தியும் அவனுக்கு உற்சாக மளிக்கவில்லை!

சோழ அரசரை வெல்ல முடியாது என்று உறுதியாக நம்பினான். அடுத்து என்ன செய்யவேண்டும் என்றறிய தலைவியைச் சந்திக்க அவன்

காட்டின் நடுவேயுள்ள குடிலுக்கு விரைந்தான். ஆனால் தலைவி அங்கில்லை; எங்கோ தப்பிச் சென்றுவிட்டாள் என்ற செய்தி அவனுக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்தது.

தலைவி விட்டுச் சென்ற செய்தியைச் சிறிது நேரம் படித்துப் பார்த்து, கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான் அமரபுஜங்கன்.

''அமரபுஜங்கா - என் அருமைப் புதல்வா! இந்தச் செய்தியைப் படிக்கும் போது நீ வெற்றிவாகை சூடி வந்திருந்தால் நல்லது. ஆனால் தோல்வியால் ஏற்பட்ட அவமானத்தால், என்னைச் சந்திக்க முடியாததால் நீ தற்கொலை செய்து கொள்ள முயலாதே. கோழைத்தனமாக தற்கொலை செய்து கொள்ளாதே, சோழ வீரர்களிடமும் அகப்பட்டுக் கொள்ளாதே. ஓடி மறைந்து விடு. காலம் மீண்டும் நமக்கு அனுகூலமாகலாம். காத்திருப்போம். என்னைத் தேட முயலாதே. தேவைப்படும் போது நானே உன் எதிரே தோன்றுவேன்.''

அமரபுஜங்கன் சிறிது நேரம் செய்வதறியாமல் நின்றான். பிறகு அங்கிருந்து விரைந்து எங்கோ சென்று மறைந்தான்.

அமரபுஜங்கனை எங்குத் தேடியும் காணாத சோழவீரர்கள் ராஜராஜன் எதிரே குனிந்த தலையுடன் நின்றார்கள்.

''அமரபுஜங்கனை உயிருடன் பிடிக்கத் தேவையில்லையா? உம், மதுரையை நோக்கிச் செல்லுங்கள் நான் கன்யாகுமரி சென்று அங்கிருந்து காந்தளூர் சாலை செல்கிறேன்'' என்றார்.

****

இந்தச் செய்திகளை அங்கிருந்தவர்கள் மூலம் அறிந்து சங்கரத்தேவன் மிக மகிழ்ச்சியுடன் அரண்மனை நோக்கிச் சென்றான். குதிரையைப் பிடித்தவாறு நடந்து சென்ற போது அவன் உள்ளமும், உடலும் மகிழ்ச்சியால் துள்ளின.

அரண்மனைக்குச் செல்லும் பாட்டையில் சங்கரத்தேவனை சிலர் அடையாளம் கண்டு கொண்டனர்.

உற்சாகத்துடனும், குதூகலத்துடனும் சங்கரத்தேவனைத் தோளில் தூக்கிக் கொள்ளச் சிலர் முயன்றனர்.

அரண்மனையில் இரவு ஓய்வு எடுத்துக் கொண்ட சங்கரதேவனைக் காலையில் இளையபிராட்டி அழைப்பதாக செய்தி வந்தது.

இளையபிராட்டி சங்கரத்தேவனை இன்முகத்துடன் வரவேற்றாள். கையிலிருக்கும் மலர்களை அவன் சிரசின் மீது தூவி வாழ்த்துக் கூறினாள்.

''சங்கரத்தேவா! நடந்தவற்றையெல்லாம் கேள்விப்பட்டேன். சேரர் தலைநகரத்தையும் அவர்களது முக்கியக் கோட்டையையும் நம் வீரர்கள்



கைப்பற்றிய செய்தி அறிந்து மகிழ்ந்தேன். இன்னும் ஒரு நல்ல செய்தி வரவேண்டும்'' என்று புன்முறுவலுடன் கூறினாள்.

சங்கரத்தேவன் மிக மகிழ்ச்சியுடன், ''தேவி, சோழநாட்டிற்குத் தொல்லை கொடுத்து கொண்டிருந்த கடற்கொள்ளையர்களையும் அவர்களுக்கு உதவி வந்த சேரர்களின் கடற்படை இருக்கும் காந்தளூர் சாலையையும் நம் சக்ரவர்த்தி நிர்மூலமாக்கி வெற்றி வாகை சூடினார் என்ற நல்ல செய்தியைத் தானே சொல்கிறீர்கள்?'' என்று சங்கரத்தேவன் கேட்டான்.

இளையபிராட்டி இளநகை பூத்தாள். ''அந்த வெற்றிச் செய்தியும் விரைவில் வந்துவிடும். என் இளவல் சக்ரவர்த்தி ராஜராஜ சோழதேவர் எடுத்த சபதம் இன்று நிறைவேறி விட்டது. அதை நான் சொல்லவில்லை. சுமதி தாயாகப் போகும் செய்தியைத் தான் சொல்கிறேன்'' என்று கூறும் போது இளைய பிராட்டியின் இதழ்கள் நாணத்தால் குவிந்தன.

சங்கரத்தேவன் சொல்வதறியாமல் உணர்ச்சி மிகுதியால் விழிகளை மூடிக் கொண்டான்.

விழிகளைத் திறந்தபோது, இளையபிராட்டியார் அருகே மறைந்தவாறு சுமதி நிற்பதைக் கண்டான். இலைகளின் நடுவே அசைந்தாடும் கனியைப்போல் அவள் அழகு முகம் தோன்றியது.

பிரிவாற்றாமையால் உடல் மெலிந்திருந்தாலும் தாய்மை அடையப் போவதால் அவள் மேனியெங்கும் புதுப்பளபளப்பு ஏற்பட்டிருந்தது.

சுமதியின் விழிகளும் சங்கரத்தேவன் விழிகளும் சந்தித்தன. அங்கே மௌனமொழி பிறந்தது. இளையபிராட்டி இங்கிதமறிந்து அடுத்த அறைக்கு ஏதோ பணியிருப்பது போல் சென்றாள். இருவர் உதடுகளும் மெல்லத் துடித்தன. ஏதோ பேச முயன்றன. நான்கு விழிகளும் வார்த்தைகளுக்கு வேலை வைக்க விரும்பவில்லை.

''நலன்தானா?'' என்று இமைகள் படபடக்கக் கேட்டுக் கொண்டன.

''இவ்வளவு நாள்கள் நலமில்லை; இப்போது தான் இந்தக் கணத்தில் தான் மகிழ்ச்சி பொங்கி வழிகிறது.''

''நலமாக வந்துசேர வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டேன்.''

''இந்தப் பிறவியில் சந்திக்கப் போகிறோமா என்ற அச்சம் தான்.''

''இறைவன் அருளால் சந்தித்து விட்டோம்.''

''இனி என்றுமே பிரியக்கூடாது.''

''அதெப்படி முடியும்? நாட்டிற்காக அழைப்பு வந்தால் நகராமல் இருக்க முடியுமா!'' பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி. இளைய பிராட்டியார் அங்கு வந்து நின்று கொண்டிருந்தார்கள். மெல்லக் கனைக்கும் ஒலி கேட்டது.

கனவுலகிலிருந்து விடுபட்டனர் இனிய தம்பதியினர் இருவரும். யுகயுகமாக ஒன்றுபட்டிருந்து யுகயுகமாகப் பிரிந்திருந்து மீண்டும் சேர்ந்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சி அபிடேகம் அவர்கள் மேனியெங்கும் வழிந்தது.

''சங்கரத்தேவா நல்ல செய்தி. சோழநாட்டுக் கலங்கள் சேரநாடு நோக்கிப் புறப்பட்டு விட்டன. அரிசியும், ஆடையும், பட்டும், முத்தும் ஏற்றிச் சென்று கொண்டிருந்த சோழநாட்டுக் கலங்கள் ஏவுசரங்களையும், வாளேந்திய வீரர்களையும், தாக்குதலைத் தாங்கும் கேடயங்கள் ஏந்திய மல்லர்களையும், வேல்களையும், வாள்களையும், சூலாயுதங்களையும் சுமந்துப் புறப்பட்டு விட்டன. நாலாதேசிகளையும் சுமந்துச் சென்ற புலிக்கொடி பறக்கும் கலங்களில் இன்று வீரச்சிங்கங்கள் தங்கள் திறமையைப் புலப்படுத்த புறப்பட்டுச் செல்கிறார்கள். காந்தளூர்ச் சாலை எனும் சேரர்கள் கடற்தளத்தைத் தகர்த்து, சேரர்களின் கடல் அட்டூழியங்களை நிரந்தரமாக அழித்து தஞ்சைபுரியைக் காக்கச் செல்கிறார்கள்.

''என் வீர இளவல் ராஜராஜன் வெற்றிவாகை சூடி சபதத்தை நிறைவேற்றி வருவதை. அந்த நல்ல நாளை எதிர்பார்த்துக் காத்திருப்போம். அதுவரை சங்கரத்தேவா சுமதியை அழைத்துக் கொண்டு பழையாறைக்குச் சென்று அமைதியாகவும், இன்பமாகவும் மகிழ்வுடன் நீங்கள் வாழ வாழ்த்துகிறேன்'' என்று இளையபிராட்டி சுமதியையும், சங்கரத்தேவனையும் வாழ்த்தினாள்.

''தஞ்சைபுரிக் காவலருக்கு என்றென்றும் தொண்டு செய்யும் பெரும்பேறு எனக்குக் கிடைக்கவேண்டும் என்பது தான் என் ஆசை'' என்றான் சங்கரத்தேவன்.

''உன் இலட்சியம் மட்டுமா? சுமதியின் உள்ளக்கிடக்கையும் அதுதான்'' என்று இளையபிராட்டி கூறும்போது சுமதியின் விழிகள் நன்றியால் பனித்தன. முகம் நாணத்தால் சிவந்தது.

